



# பாரம்பரியமிக்க
# கதிர்காம பாதயாத்திரையும்
# கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்



என். கே. எஸ். திருச்செல்வம்

பழமை வாய்ந்த இந்துக் கோயில்கள் இலங்கையின் தென்பகுதியில், அதாவது வடக்கு, கிழக்கிற்கு வெளியில் பண்டு தொடக்கம் இருந்து வந்துள்ளமை பலருக்குத் தெரியாது. சிங்கள மக்களிடையே தற்காலத்தில் புதிதாகப் பரவத் தொடங்கியுள்ள "கி.பி. பதினோராம் நூற்றாண்டில் வந்திறங்கிய வந்தேறு குடிகளே தமிழ் மக்கள்" என்ற "வைரசை"க் களைவதாயின் கி.மு.வில் இருந்து இலங்கை முழுவதும் ஆதிக்கஞ் செலுத்தி வந்த இந்து பாரம் பரியங்கள், தமிழர் கலாசார விழுமியங்கள் பற்றிய அறிவு முக்கியமாக எமது தமிழ் பேசும் மக்களிடையே ஆழமாகப் பரவ வேண்டும். அதற்காகத் திரு. திருச்செல்வம் போன்ற-வர்களின் ஆராய்ச்சிகளின் வெளிப்பாடுகள் இன்றியமை-யாததாகின்றன.

திரு. திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத் துறையில் பட்டம் வாங்கியிருந்தாலும் அவர் பாரம்பரிய வரலாற்றுத் துறை ஆராய்ச்சியாளர் அல்ல. எனினும் தென்னில-ங்கையின் புராதன இந்துக் கோயில்கள் பற்றியறிய அவர் காட்டியிருக்கும் அதீத அக்கறையும், ஆராய்ச்சியும் எம்மை பிரமிக்க வைக்கின்றன. ஒவ்வொரு ஆலயத்தையும் தானா-கவே போய்ப் பார்த்து, உறுதி செய்து, குறிப்பெழுதி பின்னர் தான் சேகரித்த தகவல்களை வெளியிட்டுள்ளார். அழிந்து போயுள்ள ஆலயங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து அறிவித்துள்ளார். எமது அறிவையும் வருங்காலச் சந்ததி-யினரின் அறிவையும் மேம்படுத்தும் விதமாக அவரின் நூல் அமைந்துள்ளது.

அந்த வகையில் திரு. திருச்செல்வம் அவர்களின் பல வருட கால ஆராய்ச்சி முடிவுகள் எமக்கு எமது சமய பாரம்பரியம் பற்றிய அறிவை மேம்படுத்த, விருத்தி செய்ய வழிவகுக்கின்றன. அவரின் நூல் இலங்கை தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையட்டும் என்று வாழ்த்துகிறேன். நன்றி.

நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்

பாரம்பரியமிக்க

# கதிர்காம பாதயாத்திரையும்

## கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்

### (மட்டக்களப்பு முதல் கதிர்காமம் வரை)

என்.கே.எஸ். திருச்செல்வம்
B.A. வரலாற்றுத்துறை
சென்னை பல்கலைக்கழகம்

வெளியீடு

அகில இலங்கை இந்து கலாசார பேரவை
கொழும்பு

**பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும்**
**கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்**


| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | என்.கே.எஸ். திருச்செல்வம் |
| முதற் பதிப்பு | : | 2013 ஆகஸ்ட் - கொழும்பு |
| நூலின் அளவு | : | 8.25" x 5.5" |
| வெளியீடு | : | அகில இலங்கை இந்து கலாசார பேரவை, கொழும்பு |
| அச்சீடு | : | எஸ். பி. டிசைன்ஸ் அன்ட் பிரின்டர்ஸ் 249, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13 |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கங்கள் | : | viii + 390 |
| விலை | : | ரூபா. 450.00 |


**Parampariyamikka Kadhirgama Padayathiraiyum**
**Kandasuwami Kadavulin Punidha Boomiyum**


| | | |
|---|---|---|
| Author | : | N. K. S. Thiruchelvam |
| First Edition | : | 2013 August - Colombo |
| Book Size | : | 8.25" x 5.5" |
| Publisher | : | All Ceylon Hindu Cultural Council, Colombo |
| Press | : | SP Designs & Printers 249, Jampettah Street, Colombo 13 |
| No. of Copies | : | 1000 |
| No. of Pages | : | viii + 390 |
| Price | : | Rs. 450.00 |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | கதிர்காமம் - ஓர் அறிமுகம் | *1* |
| *2.* | கதிர்காம புனித பாதயாத்திரை - ஓர் அறிமுகம் | *5* |
| *3.* | கந்தசுவாமிக் கடவுளின் புனிதபூமி | *9* |
| *4.* | சித்தர்களும் முனிவர்களும் நடமாடிய புனித வனம் | *12* |
| *5.* | பாதயாத்திரை - மட்டக்களப்பு முதல் காரைதீவு வரை | *15* |
| *6.* | பாதயாத்திரை - காரைதீவு முதல் திருக்கோயில் வரை | *83* |
| *7.* | பாதயாத்திரை - திருக்கோயில் முதல் பானமை வரை | *136* |
| *8.* | புனித பூமியில் பாதயாத்திரை - பானமை முதல் உகந்தை வரை | *173* |
| *9.* | புனித பூமியில் பாதயாத்திரை - உகந்தை முதல் வண்ணாத்தி ஓடை வரை | *207* |
| *10.* | புனித பூமியில் பாதயாத்திரை - வண்ணாத்தி ஓடை முதல் கும்புக்கன் ஆறு வரை | *249* |
| *11.* | புனித பூமியில் பாதயாத்திரை - கும்புக்கன் ஆறு முதல் நாவலடி வரை | *295* |
| *12.* | புனித பூமியில் பாதயாத்திரை - நாவலடி முதல் மாணிக்க கங்கை வரை | *319* |
| *13.* | புனித பூமியில் பாதயாத்திரை - மாணிக்க கங்கை முதல் வீரச்சோலை வரை | *340* |
| *14.* | புனித பூமியில் பாதயாத்திரை - வீரச்சோலை முதல் கதிர்காமம் வரை | *361* |
| *15.* | கதிர்காமக் கோயில்கள் | *367* |
| *16.* | கதிர்காம பாதயாத்திரைக் குழுக்கள் | *374* |
| | யாத்திரை செல்லும் பாதை வரைபடம் | *376* |
| | உசாத்துணை நூல்கள் | *377* |

இந்து குருமார் அமைப்பு
**HINDU PRIEST'S ASSOCIATION**
(Reg No : HA / 04 / CBO / 140)
10/2, Bhathiya Mawatha, Kalubowila, Dehiwala, Sri Lanka.

# ஆசியுரை

அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து "பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்" எனும் அரிய பொக்கிஷமான இந்நூலிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் மனமகிழ்வடைகின்றோம். திரு. என். கே. எஸ். திருச்செல்வம் அவர்களினால் ஆக்கப்பட்டுள்ள இந்நூல் வெறுமனே பிறநூல்களைப் போல் மேலோட்டமாக எதுவும் குறிப்பிடாமல் அனைத்தும் ஆதாரபூர்வத்துடனும், பாதயாத்திரை செல்லும் வழியில் உள்ள ஆலயங்களைப் பற்றியும், அதன் தொன்மை முதல், தற்சமய நிலை வரையும் மிகவும் சிறப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளதை மிகவும் வரவேற்கின்றோம். உலக வரலாற்றில் மிகவும் தொன்மையானது எமது இந்து சமயம். இவ்வாறான இந்து சமயத்தில் எமது குபேரத்தீவின் தொன்மையையும், வரலாற்றினையும் எடுத்துக் கூறுவதுடன், ஓர் வரலாற்று சான்று நூலாகவும் இந்நூல் விளங்கும் என்பதில் சிறிதளவும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

எமது சமய பண்பாட்டு விழுமியங்களை அறியவும், கற்பதற்கும் ஆவலாக உள்ள எமது இளைய சமதாயத்திற்கு இது ஓர் பயனுள்ள நூல் என்பதுடன், ஒவ்வொரு இந்து சமயினுடைய இல்லத்தில் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட வேண்டிய நூலாகவே இதை நாம் பார்க்கிறோம். மேலும் முனிவர்கள், சித்தர்கள் பற்றி இதில் பேசப்பட்டுள்ளது. இவர்கள் கதிர்காமத்திற்கு யாத்திரை சென்றதாகவும் இம்மகான்களின் திருப்பாதம் பட்ட புனித புண்ணிய பூமியாகவும் இத்தீவு விளங்குவதாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நூலாசிரியரின் அயராத முயற்சி மெச்சப்பட வேண்டியதுடன், அவரை பாராட்டி மேலும் அவரது செயற்பாட்டிற்கு ஆர்வலர்கள் துணை நிற்க வேண்டும். மேலும் உகந்தை முருகன் ஆலயம் தொடக்கம் கதிர்காமம் வரையுள்ள காட்டுப்பகுதி மிகவும் புனிதத்துவம் மிக்கதாகவே காணப்படுகின்றது. ஆறுமுகக் கடவுளின் திருவருட்செயல்களையும் இங்கு காணக்கூடியதாகவே இருக்கின்றது. ஆகவே இப் புனித பிரதேச வரலாற்றினை எடுத்தியம்பும் இந்நூலை ஆக்கிய ஆசிரியருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதுடன் அவரது பணி மேலும் சிறக்க வேண்டும் எனவும் பிரார்த்தித்து பரம்பொருளின் பாதம் பணிந்து வாழ்த்தி ஆசி கூறுகின்றோம்.

**சிவஸ்ரீ கே. வி. கே. வைத்தீஸ்வரக் குருக்கள்**
**தலைவர்**
**இந்துக் குருமார் அமைப்பு**

# வாழ்த்துரை

இலங்கையின் புராதனம் மிக்கதும் வரலாற்றுப் பெருமையுடையதுமாகிய முருகன் ஆலயமாக விளங்குவது 'கதிர்காமம்' ஆகும். இவ்வாலயம் பற்றிய முழுமையான செய்திகளை உள்ளடக்கியதாக 'பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரையும் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்' என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதி வெளியிட்டுள்ள திரு.என்.கே.எஸ் திருச்செல்வம் அவர்களுக்கு எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் வாழ்கின்ற தமிழ், சிங்கள இன மக்களால் போற்றி வழிபடப்படுகின்ற இறைவனாம் முருகன் வீற்றிருந்து அருள் புரியும் ஆலயமாக கதிர்காமம் விளங்குகின்றது. இந்நூலானது அக்கதிர்காமத் தலத்தின் வரலாற்றுச் சிறப்புக்களையும், அது அமைந்துள்ள பிரதேசத்தின் சிறப்புக்களையும் விரிவாக எடுத்துரைக்கின்றது. நாட்டின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் அடியார்கள் பாதயாத்திரையாகச் சென்று தரிசனம் செய்யும் ஒரே தலமாக கதிர்காமம் விளங்குகின்றது. அடியார்கள் கதிர்காமத் தலத்திற்கு எவ்வாறு, எங்கிருந்தெல்லாம் பாதயாத்திரை மேற்கொண்டு வழிபாடு செய்கிறார்கள் என்பது தொடர்பான விடயங்களை நூலாசிரியர் விரிவாக இந்நூலில் பல தலைப்புக்களில் அமைத்துத் தெளிவுறக் கூறியுள்ளார்.

மாணிக்ககங்கையின் அருகில் ரம்மியமான சூழலில் விளங்கும் இவ் வாலயம் சித்தர்களாலும், முனிவர்களாலும் வழிபாடு செய்யப்பட்ட தலமாகும். அத்துடன் 'திருப்புகழ்' பாடல் பெற்ற தலமாகவும் இது விளங்குகின்றது. மேலும், இவ்வாலயத்தைச் சூழ விநாயகர், தெய்வானை அம்மன் ஆகியோருக்கும் தனித்தனி ஆலயங்கள் காணப்படுகின்றன. அடர்ந்த காட்டுப் பகுதியின் ஊடாக மேற்கொள்ளப்படும் இத்தலத்திற்கான பாதயாத்திரையில் சிறுவர் முதல் முதியோர் வரை பங்கு கொள்கின்றார்கள். இதற்காக பல யாத்திரை குழுக்களும் நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்றமை தொடர்பான செய்திகளும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

வரலாற்றுத்துறையில் பட்டம் பெற்றுள்ள நூலாசிரியர் திரு. என். கே. எஸ். திருச்செல்வம் அவர்கள் இந்நூலை சிறப்பாக எழுதி வெளியிட்டுள்ளமை பாராட்டிற்குரியதாகும். இந்நூலை அவர்கள் கள ஆய்வின் அடிப்படையில் அமைத்துள்ளமை சிறப்பாகும். ஆசிரியர் பாதயாத்திரை மேற்கொண்டு அதன் வாயிலாக தான் பெற்ற அனுபவங்களை இந்நூலில் அமைத்துள்ளார். கதிர்காமத் தலத்தின் சிறப்புக்களையும், பெருமைகளையும் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடியவகையில் எளிமையாக எழுதி வெளியிட்டுள்ள ஆசிரியரின் இத்தகு பணி மென் மேலும் பல்கிப் பெருக வேண்டுமென வாழ்த்துகிறேன். இந்நூலானது கதிர்காமக் கந்தனின் அடியார்களுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

**சாந்தி நாவுக்கரசன்**

**பணிப்பாளர் – இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

**புத்தசாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு**

# முன்னுரை

இலங்கையிலுள்ள பண்டைய திருத்தலங்களில் கதிர்காமத்திற்கு தனிச்சிறப்புண்டு. ஏனைய பண்டைய திருத்தலங்களெல்லாம் சிவாலயங்களாக இருக்கும் அதேவேளை, கதிர்காமம் மட்டுமே முருகப் பெருமானுக்குரியதாக இருப்பதே இதன் சிறப்பாகும். அதிவடக்கிலே திருக்கைலாச மலை அமைந்திருப்பது போல அதிதெற்கிலே கதிரமலை அமைந்துள்ளமை இதன் தனிச்சிறப்பிற்குரிய முக்கிய காரணமாகும். மேலும் இலங்கையில் உள்ள எந்த ஆலயங்களுக்கும் இல்லாத வகையில் பாரம்பரியமாக இலங்கைத் தீவின் நுனி முதல் அடி வரை மிக நீண்ட ஓர் புனித பாதயாத்திரை இத்திருத்தலத்திற்கே மேற்கொள்ளப்படுகிறது.

இத்தனை சிறப்புக்களைக் கொண்ட கதிர்காமத் திருத்தலத்திற்கு பல தடவைகள் சென்று முருகப் பெருமானை தரிசித்ததுண்டு. எனினும் மிகப் பண்டைய காலம் முதல் பாரம்பரியமாக இத்தலத்திற்கு பக்தர்கள் மேற்கொள்ளும் பாதயாத்திரையில் பங்கு கொண்டு கந்தக் கடவுளைத் தரிசித்து வரவேண்டும் என்ற ஆசை மனதில் இருந்து கொண்டிருந்தது. இப்பாதயாத்திரை நடைபெறும் மிகக் கடினமான பிரதேசமான உகந்தை முருகனாலயம் முதல் கதிர்காமம் வரையான வனப்பகுதியில் பானமை, உகந்தை, குமனை, யாள, கதிர்காமம் ஆகிய 5 இடங்களின் பெயர்களே தேசப் படங்களில் குறிக்கப்பட்டுள்ளன. புரியாத புதிராக விளங்கும் இப்பெரிய வனம் கந்தசுவாமிக் கடவுளின் அற்புதங்கள் நிறைந்த புனிதமிக்க பிரதேசம் எனக் கேள்விப்பட்டதுண்டு. இப்பிரதேசம் பற்றியும், இங்கு நிலவும் முருகப் பெருமானின் அருளாட்சி பற்றியும் பலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்ட போது பாதயாத்திரை செல்ல வேண்டும் என்ற ஆசை ஆவலாக மாறியது. இதன் காரணமாக கடந்த 5 வருடங்களாக பெரு முயற்சி எடுத்தும் முடியாமல் போனது. இது போன்ற புனித யாத்திரைகள் செல்வதற்கு அமைப்பு இருக்க வேண்டும், அழைப்பும் கிடைக்க வேண்டும் என்று பெரியவர்கள் கூறுவார்கள். அதுபோல் அமைப்பும், அழைப்பும் ஒன்று சேர்ந்து கிடைத்தது.

கடந்த வருடம் 2012ம் ஆண்டு ஆடி மாதம் அந்தப் புனித காரியம் கைகூடியது. உகந்தை முதல் கதிர்காமம் வரையான கந்தசுவாமிக் கடவுளின் புனித வனத்தில் பாதயாத்திரை சென்றேன். 74 கி.மீ தூரத்தை 6 நாட்களில் கால்கள் மூலம் கடந்து கதிர்காமத் திருத்தலத்தை அடைந்து கந்தக்கடவுளைத் தரிசித்தோம். கடினமான பாதயாத்திரை என்று சொன்னார்கள். ஆனால் நடக்கும் போது எந்தக் கஷ்டமும் தெரியவில்லை. நாம் கடந்து சென்ற வனத்திலே கல், முள், காடு, களப்பு, ஆறு, சேறு, குளம், குட்டை, மலை, மடு, பகலிலே சுட்டெரிக்கும் வெயில், இரவிலே கடும் குளிர், காரிருள், கொடிய விலங்குகள், விஷ ஜந்துக்கள் இவையெல்லாம் இருந்தன. ஆனால் எமக்கு எந்த இடையூறோ, இடைஞ்சல்களோ இவை மூலம் ஏற்படவில்லை.

காட்டில் பாதயாத்திரை வந்த 3 வயது சிறுவனைக் கண்டேன், 90 வயது மதிக்கத்தக்க முதியவர்களைக் கண்டேன். குழந்தை குட்டிகளோடு குடும்பங்களைக் கண்டேன். கொடிய விலங்குகள் வாழும் அடர்ந்த காட்டின் மத்தியில் இருக்கிறோம் என்ற அச்சம் துளி கூட யாருக்கும் இல்லை. இது தான் நான் கேள்விப்பட்ட கந்தக் கடவுளின் அருளாட்சி, வனத்தில் நடக்கும் அற்புதம். அந்த அருளாட்சியின் மகிமையை நேரில் காணக் கிடைத்தது. அனுபவ பூர்வமாக உணர முடிந்தது.

இப்பாதயாத்திரை மூலம் இவ்வனத்தில் காணப்படும் பாரம்பரியமிக்க, வரலாற்று சிறப்பு மிகுந்த பல இடங்களைக் காணக் கூடியதாகவும், காணாத இடங்கள் பற்றி அறிந்து கொள்ளக் கூடியதாகவும் இருந்தது. இலங்கை தேசப் படத்தில் ஐந்து இடங்கள் மட்டுமே குறிக்கப்பட்டிருக்கும் இப்பாரிய வனத்திலே அமைந்திருக்கும் 150க்கும் மேற்பட்ட இடங்கள் பற்றிய வரலாறு, பாரம்பரியம், அதன் சிறப்பு போன்றவற்றை ஆராய்ந்து அவை பற்றிய விபரங்களை இந்நூலில் உள்ளடக்கியுள்ளேன்.

அத்துடன் தீர்த்த யாத்திரை சென்று கதிர்காமத் திருத்தலத்தைத் தரிசித்த 45 முனிவர்கள், சித்தர்கள் பற்றிய விபரங்களையும் தேடி எடுத்து இந்நூலில் சேர்த்துள்ளேன். மிகத் தொன்மை வாய்ந்த பாரம்பரியமிக்க கதிர்காம புனித பாதயாத்திரை பற்றிய விரிவான நூல் தமிழில் இதுவரை எழுதப்படவில்லை எனத் தெரிகிறது.

எனவே இக்குறையை ஓரளவேனும் தீர்க்க வேண்டும் எனும் எண்ணத்தில் யாழ்குடா நாடு முதல் அம்பாந்தோட்டை பிரதேசம் வரை இப்பாதயாத்திரை தொடர்பான விபரங்களைத் தேடி எடுத்து, இது தொடர்பான முதிய யாத்திரீகர்களைச் சந்தித்து, அவர்களின் மூலம் பல தகவல்களைப் பெற்று, இப்பாதயாத்திரை தொட்டுச் செல்லும் இடங்கள் அனைத்திற்கும் நேரடியாகவே சென்று, கள ஆய்வுகளை செய்து, இது சம்பந்தமான கிடைத்தற்கரிய பல உசாத்துணை நூல்களிலிருந்து அரிய பல தகவல்களைத் திரட்டி, பெரு முயற்சியெடுத்து இந்நூலை உருவாக்கியுள்ளேன். பாதயாத்திரை செல்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பே கள ஆய்வுகளை செய்யத் தொடங்கினேன். இந்நூலை உருவாக்க எனக்கு இரண்டு வருடங்கள் சென்றன.

இப்பாதயாத்திரை செல்வச் சந்நிதியிலிருந்து ஆரம்பமாகின்ற போதிலும் அநேக யாத்திரீகர்களின் தேவை கருதி மட்டக்களப்பு முதல் கதிர்காமம் வரையான யாத்திரையின் போது நாம் காணும் இடங்கள், மற்றும் ஆலயங்கள் பற்றியும், அதன் அமைவிடங்களின் சிறப்பு பற்றியும் எழுதியுள்ளேன். செல்வச் சந்நிதி முதல் மட்டக்களப்பு வரையான பாதயாத்திரை பற்றி அடுத்த பாகத்தில் எழுத எண்ணியுள்ளேன். இந்நூல் பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு உதவியாக

இருக்கும் என நம்புகிறேன். அதே சமயம் பாதயாத்திரை செல்லாத பக்தர்களுக்கு ஓர் தூண்டுகோலாகவும் அமையும் எனவும் நம்புகிறேன். இந்நூலை ஓர் பயண அனுபவங்கள் கூறும் நூலாக மட்டுமல்லாது, பயண அனுபவத்துடன் கூடிய ஆய்வு நூலாகவும் உருவாக்கியுள்ளேன்.

எனது இப்புனித பாதயாத்திரை இனிதாக நிறைவடையவும், அதன் மூலம் இந்நூலை எழுதுவதற்கு அறிவுரைகள் வழங்கி, எனக்கு ஊக்கம் கொடுத்த விஜயசிங்கம் அப்பாசுவாமி அவர்களுக்கும், ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாத யாத்திரீகர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் என் மனமுவந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

> "கந்தசுவாமிக் கடவுளின் அருளாட்சியையும் அற்புதங்களையும் நேரில் காண வேண்டுமானால் வாழ்நாளில் ஒரு தடவையாவது கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்ல வேண்டும்."

**என். கே. எஸ். திருச்செல்வம்**
**பி. ஏ. வரலாற்றுத் துறை**
**சென்னை பல்கலைக்கழகம்**

# 1. கதிர்காமம் - ஓர் அறிமுகம்

## அமைவிடம்

இலங்கையின் தென் பகுதியில் மொனராகலை மாவட்டத்தின் தென் எல்லையை ஒட்டி கதிர்காமத் திருத்தலம் அமைந்துள்ளது. கொழும்பிலிருந்து மாத்தறை, அம்பாந்தோட்டை, திஸ்ஸமகாராமை வழியாக 288 கி.மீ தொலைவில் இத்திருத்தலம் காணப்படுகிறது. கதிர்காமத் திருத்தலத்தில் மொத்தமாக மூன்று இடங்களில் கோயில்கள் அமைந்துள்ளன. கதிர்காம நகரிலிருந்து தெற்குப் பக்கத்தில் சுமார் 5 கி.மீ தொலைவில் கதிரை மலைக் கோயிலும், 5 கி.மீ மேற்கில் செல்லக் கதிர்காமக் கோயிலும், வடக்குப் பக்கத்தில் 1 கி.மீ. தொலைவில் பிரதான கோயிலும், 2 கி.மீ. தொலைவில் சூரன் கோட்டையும் அமைந்துள்ளன. இவற்றில் ஏழுமலை என நாம் அழைக்கும் கதிரமலையே மிகப் புராதனமான வழிப்பாட்டுத் தலமாகும்.

## சுமார் 13,000 வருடங்களுக்கு முன்பு சிவன் குடிகொண்டிருந்த திருத்தலம்

இலங்கையில் உள்ள மிகப்பண்டைய ஆலயங்களில் கதிர்காமமும் ஒன்றாகும். இத்திருத்தலம் எப்போது தோற்றம் பெற்றது என்பதைத் தெரிவிக்கும் பழமை வாய்ந்த குறிப்புக்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. அண்மைக்கால ஆய்வுகளின் படி கதிர்காமத்தில் கி.மு 10,977ல் சிவன் ஆட்சி செய்ததாகவும், கதிரமலையிலே சிவன் குடி கொண்டிருந்ததாகவும் ஆய்வாளர் தனேஸ் கொடிப்பிலி ஆரச்சி குறிப்பிட்டுள்ளார். முருகப்பெருமான் கதிர்காமத்திற்கு வந்து கதிரமலையில் இருந்த சிவனை வழிபட்டதாகவும், பின்பு கி.மு 10,903 ல் கதிரமலையில் மகாசேனன் எனும் கந்தசுவாமிக் கடவுள் குடி கொண்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதன்படி கதிர்காமத்தில் சுமார் 13,000 வருடங்களுக்கு முன்பு சிவனே முதன் முதலாக குடிகொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

இன்று நாம் வணங்கும் ஏழுமலை எனும் கதிரமலையில் முதன் முதலாக சிவ வழிபாடே நிலவியுள்ளது. பின்பு சிவன் இங்கிருந்து சிவனொளிபாத மலைக்குச் சென்று குடி கொண்ட-

தாகவும், முருகன் கதிரமலையில் குடி கொண்டதாகவும் தெரிய வருகிறது. எனவே கதிர்காமத்தில் ஏழுமலை எனப்படும் கதிர-மலையே மிகப்பண்டைய வழிபாட்டுத்தலமாக விளங்கியுள்ளது.

### இலங்கையில் பண்டைய நூல்களில் கதிர்காமத் திருத்தலம் பற்றிய குறிப்புகள்

கதிர்காமம் பற்றிய பழைய குறிப்புகள் சில இராஜாவலிய, மகாவம்சம், கந்த உபாத்த போன்ற நூல்களில் காணப்படுகின்றன. விஜயன் இலங்கைக்கு வந்த போது, அவனைக் கொல்ல குவேனி இரகசிய சூழ்ச்சி செய்ததாகவும், அத்தருணத்தில் கதிர்காமத்தில் இருந்த கந்தகுமாரக் கடவுளும், ஏனைய தெய்வங்களுமே விஜயனைக் காப்பாற்றியதாகவும் இராஜாவலியவில் குறிப்பிடப்-பட்டுள்ளது. மகாவம்சத்தின் படி விஜயனின் காலம் கி.மு 483-445 வரையாகும். எனவே இக்காலப்பகுதியில் கதிர்காமத்தில் கந்த வழிபாடு நிலவியுள்ளமை உறுதியாகிறது.

மகாவம்சத்தில் கஜரகமவை ஆட்சி செய்த சத்திரிய மன்-னர்களை தேவநம்பிய தீசன் வெள்ளரசு மரக்கிளை நாட்டும் விழாவிற்கு அழைத்தமை பற்றியும், இவ்விழாவின் பின்பு இச்சத்திரிய மன்னர்கள் ஓர் வெள்ளரசு கிளையை கொண்டு வந்து கதிர்காமத்தில் நட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இது கி.மு 250- 210 காலப்பகுதியில் நடந்த நிகழ்வாகும். இச்சத்திரிய மன்னர்கள் பாண்டிய தமிழ் சிற்றரசர்கள் என்பது பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகிறது.

### கி.மு 2ம் நூற்றாண்டில் துட்டகாமினி புனரமைத்த ஆலயம்

எல்லாள மன்னனை வெற்றி கொள்வதற்காக மாகம இரா-ச்சியத்திலிருந்து படையெடுத்து வந்த துட்டகாமினி முதன் முதலாக கதிர்காமத்திற்கு வந்து கந்தனை வணங்கி இப்போரில் தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என நேர்த்திக்கடன் வைத்ததாகவும், எல்லாள மன்னனை வெற்றி கொண்ட பின்பு தனது நேர்த்திக்கடனை நிறைவு செய்யும் முகமாக இவ்வாலயத்தை பெருப்பித்துக் கட்டியதாகவும் “கந்த உப்பாத்த” எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாளனின் காலம் கி.மு 145-101 வரையாகும்.

எனவே பழமை வாய்ந்த இந்நூல் குறிப்புகள் மூலம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் கதிர்காமத் திருத்தலம் சிறப்புப் பெற்று விளங்கியதோடு, கதிர்காமக் கந்தக் கடவுள் இலங்கையின் சக்தி வாய்ந்த தெய்வமாகவும் விளங்கியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.



கதிர்காமம் முருகன் ஆலயத்தின் பழமை வாய்ந்த தோற்றம் (1814)

கதிர்காமம் பற்றி கந்தபுராணத்தை தழுவி எழுதப்பட்ட தக்ஷிண கைலாய மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. தக்ஷிண கைலாய மான்மியத்தைத் தழுவி யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த பேரரசன் சிங்கை சேகராச சேகரன் (கி.பி 1394- 1414) தக்ஷிண கைலாய புராணம் எனும் நூலை தமிழில் எழுதினான். இந்நூலில் கதிர்காமத்தில் கந்தன் ஆலயம் தோற்றம் பெற்றது பற்றி விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே கதிர்காமம் பற்றி கூறும் பழமை வாய்ந்த தமிழ் நூலாகும். இதில் கதிர்காம மகிமை படலம், கதிர்காமகிரி மகிமை படலம், கதிர்காம தலவிஷேச படலம் ஆகியவற்றில் கதிர்காமம் பற்றி கூறப்பட்டுள்ளது.

தக்ஷிண கைலாய புராணத்தின் படி கதிர்காமத்தில் மாணிக்க கங்கை நதியோரத்தில் தேவசிற்பியால் அமைக்கப்பட்ட ஏமகூட ஆலயத்தில் சுப்பிரமணிப் பெருமான் வீற்றிருந்ததாகவும்,

இங்கேயே பாசறை வீடு அமைத்து சூரசம்ஹாரம் செய்ததாகவும், தேவ அசுர யுத்தம் முடிந்த பின் விசுவகர்மாவை அழைத்து இங்கு ஓர் அழகிய நகரை அமைத்ததாகவும், அந்நகரின் மத்தியில் கதிர்காமகிரியில் சிந்தாமணி ஆலயத்தை அமைத்ததாகவும், கந்தசுவாமிக் கடவுள் இவ்வாலயத்தில் குடி கொண்டதாகவும் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீதையைத் தேடி இலங்கைக்கு வந்த அனுமான் கதிர்காமத்திற்குச் சென்று முருகப்பெருமானை வணங்கிச் சென்றுள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் படி இராமாயணக் காலத்திலும் இங்கு முருகப்பெருமான் குடிகொண்டிருந்தார் எனக் கூறலாம். கந்தன் படையெடுப்புக் காலம் இராமாயண காலத்திற்கு முற்பட்டது என ஆய்வுகள் கூறுகின்றன.


கதிரமலை (ஏழுமலை)

# 2. கதிர்காம புனித பாதயாத்திரை ஓர் அறிமுகம்

### பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து வந்த முனிவர்களால் ஆரம்பிக்கப்பட்ட புனிதயாத்திரை

இத்தனை பழமையும், பெருமையும், தலச்சிறப்பும், சக்தியும் மிக்க கதிர்காமத் திருத்தலத்திற்கு மிகப் பண்டைய காலம் முதல் இந்தியாவிலிருந்து முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும், சித்தர்களும் தல யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இத்தல யாத்திரை இலங்கையின் வடபகுதியிலிருந்து புனித பாதயாத்திரையாக ஆரம்பமானது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட இந்த பாதயாத்திரை இன்றும் தொடர்வதற்கு கதிர்காம கந்தசுவாமிக் கடவுளின் மீது பக்தர்கள் கொண்டுள்ள அதீத பக்தியும், கந்தனின் அருளாட்சியும், அற்புதங்களுமே காரணங்களாக இருக்கின்றன.

இன்று இலங்கையிலிருந்து பல பக்தர்கள் இந்தியாவிற்கு திருத்தல யாத்திரை செல்கின்றனர். இந்தியாவிற்கு சென்று அங்கிருந்து கைலாய மலை, பழனி மலை, சபரி மலை போன்ற தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்கின்றனர். குறிப்பாக ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கானோர் சபரி மலைக்கு புனித பாதயாத்திரை செல்கின்றனர். கேரள நாட்டிலே உள்ள எருமேலி எனும் இடத்திலிருந்து சபரி மலை வரை அடர்ந்த காட்டின் ஊடாக சுமார் 56 கி.மீ தூரம் இப்புனித பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. சில நூறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட இப்புனித பாதயாத்திரை கடந்த 30 வருடங்களாக இலங்கையிலுள்ள பக்தர்களாலும் மேற்கொள்ளப்படுகிறது.

### இலங்கையின் வடக்கு, கிழக்கு கரையோரமாக நடைபெறும் புனித யாத்திரை

சபரி மலை யாத்திரைக்கு முன்பு 41 நாட்கள் விரதமிருந்து மிக்க பயபக்தியுடன் இந்த யாத்திரையை இலங்கை மக்கள் மேற்கொள்கின்றனர். எனினும் இதற்கு முன்னோடியாக பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட கதிர்காம புனித

பாதயாத்திரை பற்றி பலர் அறிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய 6 மாவட்டங்களிலுள்ள பக்தர்களே இந்த புனித பாதயாத்திரையில் பங்கு கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்தே ஆயிரக்கணக்கானோர் இப்பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

பண்டைய காலத்தில் இலங்கையின் வட முனையிலுள்ள செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, இலங்கையின் கிழக்கு கரையோரமாக கதிர்காமம் வரை இப்பாதயாத்திரை மேற்கொள்ளப்படுவதால், இது தொட்டுச் செல்லும் இடங்களிலிருந்து மக்கள் யாத்திரையில் பங்கு கொள்கின்றனர். அதிலும் இப்பாதயாத்திரை இறுதியாக ஊடறுத்துச் செல்லும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பக்தர்களே அதிகளவில் பாதயாத்திரை செல்கின்றனர்.

**பாதயாத்திரையில் அதிகளவில் பங்குகொள்ளும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள்**

இவ்விரு மாவட்டங்களில் உள்ள அதிகளவிலான மக்கள் கதிர்காம புனித பாதயாத்திரையை வருடா வருடம் மேற்கொள்வதற்கு முக்கிய காரணங்கள் சில உள்ளன. பண்டைய காலம் முதல் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முருக வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளது. இதற்கு இங்கு அமையப்பெற்றிருந்த புராதன முருகன் ஆலயங்களே காரணமாக விளங்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெருகல், சித்தாண்டி, தாந்தாமலை, போராதீவு, மண்டூர் ஆகிய இடங்களிலும், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில், சங்கமன் கண்டி, உகந்தை ஆகிய இடங்களிலும் முருக வழிபாடு பிரசித்தி பெற்று விளங்கும் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் பல திருப்படைக் கோயில்கள் எனவும், தேசத்துக் கோயில்கள் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன.

மேலும் இம்மாவட்டங்களில் கி.மு 4ம் நூற்றாண்டில் இருந்த கஜரகாமம், சந்தனகாமம் ஆகிய ஆட்சிப் பிரிவுகளை ஆட்சி செய்த சத்திரிய மன்னர்கள் காலத்தில் இங்கு முருக வழிபாடு மேலோங்கி

காணப்பட்டமையும் கி.மு 13ம் நூற்றாண்டில் காலிங்க மாகோன் காலத்தில் இவ்விரு மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்ட வீரசைவ வழிபாட்டு முறைகளில் முருக வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியமையும், இதே காலப்பகுதியில் இப்பிரதேசத்திலிருந்த முருகனாலயங்கள் புனரமைக்கப்பட்டு, மானியங்கள் வழங்கப்பட்டு, முருக வழிபாடு சிறப்புற்று விளங்கியமையும் இப்பகுதி மக்கள் முருக வழிபாட்டின் பால் அதீத பக்தியேற்படக் காரணமாக விளங்கின. இதனால் கதிர்காம முருகனாலயத்திற்கு வருடா வருடம் பாதயாத்திரை மேற்கொண்டு முருகனை தரிசிக்கும் வழக்கம் இம்மக்களிடையே பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தது.

அடுத்ததாக மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்கள் கதிர்காமத் திருத்தலத்திற்கு மிகக்கிட்டிய தூரத்தில் அமைந்திருக்கின்றமை பாதயாத்திரை மேற்கொள்வதற்கு புவியியல் அடிப்படையில் மிக இலகுவாக காணப்படுகின்றது. எனவே மேற்சொன்ன விடயங்களே இவ்விரு மாவட்ட மக்களும் ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கில் பாதயாத்திரையில் பயபக்தியுடன் பங்குகொள்வதற்கு காரணங்களாக அமைகின்றன.

## இலங்கையின் நுனி முதல் அடி வரை கால்நடையாகக் கடக்கும் புனித பாதயாத்திரை

கதிர்காமத்திற்கான புனித பாதயாத்திரை பண்டைய காலம் முதல் கதிர்காம கொடியேற்ற தினத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே செல்வச் சந்நிதியில் ஆரம்பமாகிறது. அங்கிருந்து சாவகச்சேரி, முறிகண்டி, வற்றாப்பளை, திருகோணமலை, வெருகல், சித்தாண்டி, மாமங்கேஸ்வரம், குருக்கள் மடம், களுதாவளை, காரைதீவு, திருக்கோயில், சங்கமன்கண்டி, பொத்துவில், பானமை, உகந்தை, குமனை, யாள ஊடாக பக்தர்கள் கதிரமலையைச் சென்றடைவர். ஒவ்வொரு வருடமும் ஆடி மாதத்தில் கதிர்காமத்தில் நடைபெறும் திருவிழாவை ஒட்டி இப்பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது. இதில் செல்வச் சந்நிதியிலிருந்து சுமார் 600 கி.மீ தூரத்தை கிழக்கு கரையோரமாக கால் நடையாகக் கடப்பதற்கு 60 நாட்கள் செல்கின்றன. இப்புனித பாதயாத்திரை "கதிரமலைக் கரை யாத்திரை" என அழைக்கப்படுகிறது. இப்புனித பாதயாத்திரையில் செல்வச் சந்நிதி முதல் பானமை வரையான 510 கி.மீ

தூர பயணம் நகரங்கள், கிராமங்கள், பேரூந்துப் பாதைகள், வீடுகள் நிறைந்த பகுதியூடாக மேற்கொள்ளப்படுகின்றது. எஞ்சிய 90 கி.மீ தூரம் கிராமங்கள், வீடுகள் எதுவுமற்ற அடர்ந்த வனப்பகுதியாகும். பானமை முதல் கதிர்காமம் வரையான இவ்வனப்பகுதியில் உகந்தை, குமண, யாள, கட்டகாமம், கதிர்காமம் ஆகிய அடர்ந்த காடுகள் அமைந்துள்ளன.

## போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் தடைப்பட்ட பாதயாத்திரை

இலங்கையின் வரலாறு தொடங்குவதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பமான கதிரமலைக்கான புனித பாதயாத்திரை கி.பி 16ம், 17ம், 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோர் இலங்கையை ஆக்கிரமித்திருந்த காலத்தில் தடைப்பட்டிருந்தது. இக்காலப் பகுதியில் சில சித்தர்கள், முனிவர்கள் மட்டுமே பாதயாத்திரை மேற்கொண்டுள்ளனர். சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு பின் ஆங்கிலேயர் காலத்திலேயே மீண்டும் இப்பாதயாத்திரை ஆரம்பமானது.

பல்லாயிரம் ஆண்டுகளாக பாதயாத்திரை சென்ற சித்தர்களும், முனிவர்களும், பக்தர்களும் தாம் சென்ற வழியிலே தம்மை கொடிய விலங்குகளிடமிருந்தும், இயற்கை அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாக்கும் பொருட்டு முருகன், விநாயகர், சிவன், அம்மன் உட்பட வேறு பல காவல் தெய்வங்களுக்கும் மரத்தடியில் திறந்த வெளிக் கோயில்களை அமைத்து, அவற்றில் வேல், சூலம் மற்றும் உருவச்சிலைகளை வைத்து வணங்கிச் சென்றுள்ளனர். 300 ஆண்டுகளுக்குப் பின் யாத்திரை வந்தவர்களால் தமது மூதாதையர்கள் வழிபட்டுச் சென்ற மரத்தடி கோயில்களை அடையாளம் காண முடியவில்லை. இருப்பினும் பிற்காலத்தில் தாம் பாதயாத்திரை செல்லும் வழியில் காவல் தெய்வங்களை ஸ்தாபித்து வணங்கிச் செல்வதாக பாதயாத்திரை செல்லும் முதிய யாத்திரீகர்கள் கூறுகின்றனர்.


# 3.கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமி

***கந்தக் கடவுளின் புனித வனத்தின் அமைப்பு***

*இலங்கையின் தென் கிழக்குப்பகுதியில் குமன பறவைகள் சரணாலயம், மற்றும் யாள வன விலங்குகள் சரணாலயம் ஆகிய தேசிய பூங்காக்கள் அமைந்துள்ள மிகப்பெரிய வனப்பிரதேசங்கள் காணப்படுகின்றன. இவை அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் சில பகுதிகளை கொண்டதாக அமைந்துள்ளன.*

*மனித குடியிருப்புகள் இல்லாத இப்பகுதியில் அடர்ந்த காடுகளும், மலைக் குன்றுகளும், வில்லுக் குளங்களும், நீர்க் களப்புகளும், காட்டாறுகளும், சிற்றோடைகளும் நிறைந்து காணப்படுகின்றன. **45** வகையான மிருகங்களும், **255** வகையான பறவையினங்களும் வாழும் இப்பரந்த வனப்பகுதியே "கதிர்காமக் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமி" என அழைக்கப்படுகிறது. ஏராளமான வழிபாட்டுத் தலங்கள் காணப்படும் இவ்வனப்பகுதி முழுவதும் கந்தக் கடவுளின் சக்தி நிலவுவதாக இலங்கை மக்கள் நம்புகின்றனர். இவ்வனப்பகுதியின் ஊடாகவே பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக புனித பாதயாத்திரை மேற்கொள்ளப்படுகிறது.*

***புனித வனத்தின் பிரிவுகள்***




குமன, யாள வனத்தின் பிரிவுகள்

கந்தக் கடவுளின் இப்புனித வனங்கள் 1900ம் ஆண்டு முதல் வன ஜீவராசிகள் சரணாலயமாகவும், 1938ம் ஆண்டு முதல் தேசிய பூங்காக்களாகவும் பிரகடனப்படுத்தப்பட்டன. இவ்வனம் மொத்தமாக 10 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. உகந்தை வனம், குமனை வனம் ஆகியவை பறவைகள் தேசிய பூங்காவாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு வனங்களும் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளன. யாள தெற்கு வனம், யாள கிழக்கு வனம், யாள வடக்கு வனம், கட்டகாம வனம் ஆகிய நான்கு வனங்களும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ளன. மேலும் கல்கே வடக்கு வனம், கல்கே மேற்கு வனம், கல்கே தெற்கு வனம், கதிர்காமம் கதிரமலை வனம் ஆகிய நான்கு வனங்களும் மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ளன. இப்பத்து பிரிவுகளும் 979 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டதாகும். இவற்றில் நான்கு பிரிவுகளை தவிர்த்து ஏனைய ஆறு பிரிவுகளுக்கூடாகவே ஆண்டு தோறும் புனித பாதயாத்திரை நடைபெறகிறது. இப்பாத யாத்திரை ஆரம்பிக்கும் இடமாக யாழ்ப்பாணத்திலுள்ள செல்வச் சந்நிதியும் முடியும் இடமாக கதிரமலையும் விளங்குகின்றன.

### முருகனும், வீரபாகுத்தேவரும் நடந்து சென்ற புனித வனம்

கந்தக் கடவுளின் இப்புனித வனத்தில் முதன் முதலில் நடந்து சென்றவர்கள் முருகப்பெருமானும், வீரபாகுத்தேவருமே. சூரனை வதம் செய்வதற்காக முருகன் வீரபாகுத்தேவருடன் உகந்தைக் கடற்கரையில் தங்கத்தோணியில் வந்திறங்கி, உகந்தை மலையில் தங்கியிருந்ததாகவும், பின் அங்கிருந்து இவ்வனப்பகுதியின் ஊடாக கும்புக்கன் ஆற்றங்கரைக்கு சென்று அங்கு தங்கியதாகவும், அதன் பின் தாம் தங்குவதற்கு தக்க இடத்தை தேடி ஆற்றங்கரையில் சற்று தூரத்தில் இருந்த கபிலித்தைக் காட்டிற்குச் சென்று அங்கு தங்கியிருந்ததாகவும், சில காலத்தின் பின்பே இங்கிருந்து கதிர மலைக்குச் சென்று அங்கு பாடி வீடு அமைத்து சூரபத்மனை வதம் செய்ததாகவும் ஒரு ஐதீகம் உண்டு. இவ்வைதீகத்தின் படி முருகனும், வீரபாகுத்தேவரும் நடந்து சென்ற பாதையிலேயே முனிவர்களும், சித்தர்களும் தமது புனித பாதயாத்திரையை ஆரம்பித்ததாகக் கூறப்படுகிறது.

## சுவாமி எனும் அடைமொழியுடன் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்கள்

இன்றும் ஜனசந்தடியற்ற நிலையில் காணப்படும் "கதிர்காமக் கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமி" யானது கந்தக் கடவுளின் பல அற்புதங்கள் நிறைந்த, சித்தர்கள் வாழும் புனித பூமியாக விளங்குகிறது. கதிரமலைப் புனித யாத்திரையில் நாம் கடக்கும் கடினமான பிரதேசமும் இதுவேயாகும்.

கந்தக் கடவுளின் இப்புனித வனத்தில் ஏராளமான வழிபாட்டுத்தலங்களும், பண்டைய காலம் முதல் முனிவர்களும், சித்தர்களும், தங்கியிருந்த கற்குகைகளும், அவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட குகைகளும், பிராமிக் கல்வெட்டுக்களும், அவர்களால் வழிபடப்பட்ட கோயில்களின் எச்சங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. புனித வனம் அமைந்துள்ள அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் சுமார் 100 பிராமிக் கல்வெட்டுகளில் "சுவாமி" எனும் அடைமொழியுடன் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களுக்குரியவர்கள் அனைவரும் முனிவர்களும், சித்தர்களும், சன்னியாசிகளுமே.

# 4. சித்தர்களும், முனிவர்களும் நடமாடிய புனித பூமி

***சம்புத்துறை, மாந்தைத்துறை வழியாக வந்த முனிவர்களும், சித்தர்களும்.***

*கதிர்காம முருகனைத் தரிசிக்க வட இந்தியாவிலிருந்தும், தென்னிந்தியாவிலிருந்தும் முனிவர்களும், சித்தர்களும், யோகிகளும், ஞானிகளும் தல யாத்திரை வருவது வழக்கமாக இருந்தது. இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள சம்புத் துறையிலும், மன்னாரிலுள்ள மாந்தைத் துறையிலும் வந்திறங்கி பாதயாத்திரையை மேற்கொண்டுள்ளனர். சம்புத் துறையில் இறங்குவோர் நகுலேஸ்வரம், கதிரையாண்டவர் கோயில் ஆகியவற்றை தரிசித்த பின் செல்வச் சந்நிதிக்கு வந்து அங்கிருந்து தெற்கு நோக்கி நடந்து கதிரமலையை அடைந்துள்ளனர்.*

*மாந்தைத் துறையில் வந்திறங்குவோர் திருக்கேதீஸ்வரத்தை தரிசித்த பின், அங்கிருந்து திருக்கோணமலைக்கு வந்து, திருக்கோணேஸ்வரம், கன்னியாய் ஆகிய திருத்தலங்களைத் தரிசித்த பின், அங்கிருந்து வில்லூன்றி கந்தசுவாமி கோயிலுக்கு வந்து, அங்கிருந்து பாதயாத்திரையை மேற்கொண்டு கதிரமலையை அடைந்துள்ளனர். வடபகுதியிலுள்ள யோகிகளும், முனிவர்களும், பக்தர்களும் செல்வச் சந்நிதியிலிருந்து பாதயாத்திரை மேற்கொண்டுள்ளனர்.*

***சித்தர்கள் தொடர்பான இடங்கள்***

*கந்தக் கடவுளின் புனித பூமியாகக் கருதப்படும் இவ்வனத்தில் “சுவாமி” எனும் அடைமொழியுடன் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுகளின் மூலம் இப்புனித வனம் சித்தர்களும், முனிவர்களும் வாழ்ந்த பூமி என்பது நிரூபனமாகிறது. பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கும் வழக்கம் உருவான காலத்திற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்த முனிவர்களின் பெயர்கள் அவர்களின் சீடர்களால் கி. மு. 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ளன. பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டுமல்லாது இப்புனித வனத்தில் அமைந்துள்ள சில மலைகளின் பண்டைய பெயர்களும், இடங்களின் பெயர்களும் இது சித்தர்களும், முனிவர்களும் வாழ்ந்த பூமி என்பதை உறுதி செய்கின்றன. இவ்வனத்தில் காணப்படும் சித்தர் மலை (சித்தல பப்பத), போக சித்தர் மலை*

(போவத்தகல), போககிரி, (சாத்திரவெளி), அகஸ்த்திய மலை (ஆகாசசைத்திய), சித்தராமர் குளம் (சித்தராம வெவ), ஆண்டி வெளி (ஆண்டியாவெல) போன்ற இடங்கள் இப்புனித வனத்தில் சித்தர்கள் வாழ்ந்தமையை உறுதி செய்கின்றன.

**மிகப்பண்டைய காலத்தில் தீர்த்த யாத்திரை வந்த சித்தர்களும், முனிவர்களும்.**


அகத்திய மாமுனிவர்


அருணகிரி நாதர்

கதிர்காமத்திற்கான புனித பாதயாத்திரை மிகப்பண்டைய காலத்தில் சித்தர்களுக்கெல்லாம் மகா சித்தர் என போற்றப்படும் அகத்திய முனிவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவரைத் தொடர்ந்து தன்வந்திரி முனிவர், புலஸ்திய முனிவர், கபில முனிவர், விசுரவசு முனிவர் (விசவ முனி), சட்டைமுனி சித்தர், காசியப்ப முனிவர் (ரிஷி காஸ்யப்ப), காக்கை வண்ண சித்தர், சித்தர் போகர், பாபாஜி, பதஞ்சலி முனிவர், கோரக்க முனிவர், கோரக்கநாத் சித்தர், கருவூர்த் தேவர், ஏழுகண்ணார் சித்தர், பாம்பாட்டி சித்தர், புகழேந்திப் புலவர், அருணகிரி நாதர், சிகண்டி முனிவர், துவட்டா முனிவர், வள்ளி மலை சச்சிதானந்த சுவாமி ஆகியோர் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை சென்றுள்ளனர்.

**வடஇந்தியாவிலிருந்து வந்த தசநாமி பரம்பரையின் சந்நியாசிகள்.**

கதிர்காமத்திற்கு வட இந்தியாவிலிருந்து வந்த தசநாமி பரம்பரையின் சந்நியாசிகள் பலர் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்து கதிர்காமம் தெய்வானை அம்மன் கோயில் மடாதிபதியாக


விளங்கியதோடு, கல்யாண மடத்தையும் ஏனைய கோயில்களையும் பராமரித்து வந்தனர். இவர்கள் முதலாம் கல்யாணகிரி சுவாமி, இரண்டாம் கல்யாணகிரி சுவாமி, மூன்றாம் கல்யாணகிரி சுவாமி, பாலகிரி சுவாமி, ஜயசிங்ககிரி சுவாமி, மங்களபுரி சுவாமி, கேசோபுரி சுவாமி (பால்குடி பாபா), சுவாமி சுரராஜபுரி, நாராயணபுரி சுவாமி, சந்தோஸ்புரி சுவாமி , ரத்தன்புரி சுவாமி, சுகதேவபுரி சுவாமி, ஹரிதிவார்புரி சுவாமி, சுகிர்தபுரி சுவாமி, கணேசகிரி சுவாமி, ராம்கிரி சுவாமி, தத்தராமகிரி சுவாமி, பூர்ணானந்தகிரி சுவாமி ஆகியோராவார். இவர்களுடன் வட இந்திய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த பாலசுந்தரி சுவாமி அம்மாவும் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்து தெய்வானை அம்மன் கோயிலில் பணிபுரிந்தார்.

**கடந்த நூற்றாண்டில் பாதயாத்திரை சென்ற இலங்கை சுவாமிகள்.**

கடந்த நூற்றாண்டில் பல இலங்கைச் சித்தர்களும், முனிவர்களும் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை சென்றுள்ளனர். இவர்களில் நல்லூர் யோகர் சுவாமி, காரைதீவு சித்தானைக் குட்டி சுவாமி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். செல்வச்சந்நிதி முத்துக்குமாரவேல் சுவாமி, மட்டக்களப்பு சடையப்ப சுவாமி ஆகியோரும் வெளிநாட்டவர்களான கௌளரி பாலா சுவாமி, சந்த சுவாமி, சிவகல்கி சுவாமி, பற்றிக் ஹரிக்கன் சுவாமி ஆகியோரும் தொடர்ந்து பல ஆண்டுகள் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்றுள்ளனர்.



பால்குடி பாபா



யோகர் சுவாமி

# 5. பாதயாத்திரை
# மட்டக்களப்பு முதல் காரைதீவு வரை

### *மட்டக்களப்பு - மாமங்கேஸ்வரம்*

*கதிர்காம யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடங்களில் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள மாமங்கேஸ்வரப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இவ்வாலயத்திலிருந்தே விஜயசிங்கம் அப்பா சுவாமியின் மாமங்கேஸ்வர பாதயாத்திரைக் குழுவினர் தமது பாதயாத்திரையை ஆரம்பிக்கின்றனர். வருடந்தோறும் இந்த யாத்திரைக் குழுவினர் மாமங்கேஸ்வரரை வணங்கி பூஜைகள் செய்து நேர்த்திக்கடன் வைத்தே தமது பாதயாத்திரையை தொடங்குகின்றனர்.*



மாமங்கேஸ்வரம்

*மட்டக்களப்பு மாநகரின் வடபுறத்தில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள அமிர்தகழியில் மாமங்கேஸ்வரம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு புகையிரத நிலையத்தின் வடக்கே ஒரு கி.மீ தூரத்தில் அமிர்தகழி உள்ளது. இங்கு அமைந்திருக்கும் ஈஸ்வரம் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பு கிழக்குக் கரையோரத்தில் இருந்த இரண்டு ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கியுள்ளது. ஒன்று திருக்கோணேஸ்வரம். மற்றையதே அமிர்தகழி மாமங்கேஸ்வரமாகும்.*

### இராமபிரான் மணலில் லிங்கம் அமைத்து வழிபட்ட திருத்தலம்

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றில் பிரசித்தி பெற்று விளங்கும் இவ்வாலயம் இராமாயணக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாக ஐதீகம். இராவணனை வென்று சீதையை மீட்டு வரும்வழியில் இராமபிரான் இவ்வழியே வந்து மட்டக்களப்பு வாவியின் கரையோரத்தில் ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, கொக்கட்டி போன்ற மரங்களால் சூழப்பட்ட பஞ்சாவடி போன்ற சோலையில் தங்கினார் எனவும், அவ்விடத்திலேயே தனது சிவபூஜைக்காக மணலில் லிங்கமொன்றைப் பிடித்து அதற்கு அபிஷேகம் செய்வதற்காக தனது கோதண்டத்தை நிலத்தில் குத்திய போது வெளிப்பட்ட நீரைக் கொண்டு அபிஷேகம் செய்து சிவபூஜையை முடித்தார் எனவும், கோதண்டத்தால் குத்தியவுடன் உருவான பள்ளத்தில் நீர் நிறைந்து அதுவே அமுத தீர்த்தமாக மாறி இன்றும் மாமங்கைப் புனித தீர்த்தமாகக் காணப்படுவதாகவும், இராமரின் வழிபாட்டிற்காக விந்திய மலையிலிருந்து அனுமனால் கொண்டு வரப்பட்ட சிவலிங்கம் இப்புனித தீர்த்தக் குளத்தின் நடுவில் புதைக்கப்பட்டதெனவும், லிங்கத்தின் மகத்துவத்தினால் இத்தீர்த்தம் பாவகர்மம் போக்கவல்ல மகோன்னத மகிமை பெற்று விளங்குவதாகவும் கூறப்படுகிறது.

### ஒன்பது நதிகளின் புனித நீர் கலக்கப்பட்ட மாமங்கைத் தீர்த்தம்

பண்டைய காலத்தில் காசியிலிருந்து வந்த முனிவர் ஒருவர் தனது கமண்டலத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலிய ஒன்பது நதிகளின் தீர்த்தங்களைக் கொண்டு வந்து இத்திருக்குளத்தில் கலந்து அதில் நீராடி இராமபிரானால் பிரதிஷ்டை செய்யப்பட்ட இராமலிங்கத்தை வழிபட்டுச் சென்றதாகவும் ஒன்பது மங்கையர்களின் பெயர் கொண்ட தீர்த்தங்கள் கலக்கப்பட்டதால் இது “மாமங்கைத் தீர்த்தம்” எனப் பெயர் பெற்றதாகவும் அறியப்படுகிறது.

### ஆடகசவுந்தரி அமைத்த ஆலயம்

கி.பி. 78ல் உன்னரசுகிரியை ஆட்சிசெய்து வந்த மும்முலை அழகியான ஆடகசவுந்தரி இம் மாமங்கைத் தலத்தின் மகிமையறிந்து இங்கிருந்த புனித தீர்த்தத்தில் நீராடித் தன் மூன்றாவது

முலைத்தடம் நீங்கப் பெற்றும், பேரழகும் இளமையும் அடையப் பெற்றாள் எனக் கூறப்படுகிறது. கிழக்கிலங்கையை ஆண்ட "மும்முலை அரக்கி" எனக் குறிப்பிடப்படும் ஆடகசவுந்தரி மாமங்கத் தீர்த்தத்தின் மகிமையால் இப்பகுதியின் பேரழகியாகத் திகழ்ந்ததாகவும், இதனால் இங்கு ஆடகசவுந்தரி ஆலயம் அமைத்து வழிபட்டாள் எனவும் கூறப்படுகிறது.

ஆடகசவுந்தரியின் மூன்றாவது முலைத்தடம் நீங்கப்-பெற்றமை, மாருதப்புரவல்லி கீரிமலைத் தீர்த்தத்தில் நீராடி குதிரைமுகம் நீங்கப் பெற்றமையை ஒத்ததாகவும், இராமபிரான் மணலில் பிசைந்து எடுத்து லிங்கம் அமைத்து வழிபட்டமை, இராமேஸ்வரத்தில் மணலில் லிங்கம் பிடித்து வழிபட்டமையை ஒத்ததாகவும் இருப்பது குறிப்பிடத் தக்கது.

### ஏழு தீர்த்தங்களைக் கொண்ட மாமங்கேஸ்வரம்

இத்தனை சிறப்புப் பெற்ற மாமங்கைத் தீர்த்தக்குளம் பண்டைய காலங்களில், மாரிமழைகாலத்தில் நீர் நிரம்பப் பெற்று நதிபோன்று ஓடிச்சென்று கடலுடன் கலந்ததினால் மாமங்கை நதி எனவும் அழைக்கப்பட்டது. புராதன காலத்தில் மாமங்கேஸ்வர திருத்தலத்தில் ஏழு தீர்த்தங்கள் இருந்திருக்கின்றன. மாமங்கை நதி, அனுமார் தீர்த்தம், காக்கைத் தீர்த்தம், பழையாறு, நற்றண்ணீர்மடு, பாலமீன்மடு, மட்டிக்களியோடை ஆகிய இவ்வேழு தீர்த்தங்களில் சில காலப்போக்கில் தூர்ந்து மறைந்து போயுள்ளன. மாமங்கைத் தீர்த்தத்தின் மேற்கிலுள்ள ஒரு பகுதி அனுமார் தீர்த்தம் என இன்றும் வழங்கப்படுகின்றது. பண்டைய காலத்தில் இங்கு தீர்த்தம் ஒன்று இருந்துள்ளது. இலங்கையை தன் வாலினால் தீமூட்டி எரித்த அனுமன் தனது வாலை இத்தீர்த்தத்தில் தோய்த்ததாகவும், இதன் காரணமாகவே இது அனுமார் தீர்த்தம் என்ற பெயரைப் பெற்றதாகவும் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.

மாமங்கை தீர்த்தக் குளத்தின் சேறு உடல் வெளிப்புற நோய்களைத் தீர்க்க வல்ல மகிமையுடையதாதலால் "அமிர்தச்சேறு" என்றும் சந்தனம் போன்ற குளிர்ச்சியுடையதாதலால் "சந்தனச் சேறு" என்றும் பெயர் பெறுகிறது. இந்த "அமிர்தச்சேறு" மாமங்-கேஸ்வரத்தை அடுத்துள்ள சிறிய நீர் நிலைகளின் அடியிலும், அயலில் உள்ள ஊர்க்கிணறுகளின் அடியிலும் காணப்படுவதால் இப்பகுதி "அமிர்தகழி"என அழைக்கப்படுகிறது.

**ஆடி அமாவாசை தீர்த்தமாடுதலும், மாமங்கேஸ்வரமும்**

மாமங்கைக் குளத்தில் நீராடி இங்கிருந்த லிங்கத்தையும் பூஜித்ததன் காரணமாக தனது தோஷம் நீங்கப்பெற்ற ஆடக-சவுந்தரி மாமங்கைத் தீர்த்தத்தை எடுத்துச் சென்று திருக்கோயில் கடலில் கலந்து ஆடி அமாவாசைத் தீர்த்தமாடியதால் அன்று முதல் இந்நடைமுறை வழக்கத்திலிருந்து அண்மைக் காலத்தில் கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. ஆடி அமாவாசை தீர்த்தத்திற்கு மட்டக்களப்புத் தமிழகத்தில் பெயர் போன இடமாக மாமங்கேஸ்வரம் கருதப்படுகிறது.

**வேடர்களால் வழிபடப்பட்ட புராதன ஆலயம்**

இராமபிரானால் வழிபடப்பட்ட இத்திருத்தலம் பிற்-காலத்தில் வேடர்களாலும் பூஜிக்கப்பட்டுள்ளது. இராமாயண காலத்தின் பின்பு பல வருடங்களாக இப்பகுதி காடுகளும், பற்றைகளும் வளர்ந்து இங்கிருந்த இராமலிங்கம் மரவேர்களால் மூடப்பட்டு இருந்துள்ளது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இப்பகுதிக்கு வேட்டையாட வந்த வேடுவனொருவன் தான் அமர்ந்திருந்த முள்ளாலமரத்தின் வேர்களுக்கடியில் மூடப் பட்டிரு-ந்த லிங்கத்தை கண்டு வேர்களை வெட்டித் துப்பரவு செய்து, தனது இனத்தவர்களையும் அழைத்து வந்து அங்கே சிறிய கோயில் அமைத்து லிங்கத்தைப் பூஜித்து வந்தான். வேடர்களால் இவ்வால-யம் பராமரிக்கப்பட்டு வந்ததனால் இவர்கள் மாமங்கேஸ்வரத்தின் தென்மேற்குப்பகுதியில் உள்ள காட்டில் தமது குலதெய்வமான முருகனுக்கும் ஒரு கோயில் அமைத்து வழிபட்டனர். இக்கோயில் “குமாரத்தன்” கோயில் என அழைக்கப்படுகிறது.

**ஆடகசவுந்தரி காலத்தின் பின்பு கைவிடப்பட்ட மாமங்கேஸ்வரம்**

ஆடகசவுந்தரியின் காலத்தின் பின்பு பெரும்பாலான தமிழ் சிற்றரசர்களின் இராஜதானியாக மாமங்கத்தின் தென்பகுதிப் பிரதேசங்களே விளங்கியுள்ளன. இங்கிருந்து சுமார் 10 கி.மீ தொலைவில் இருக்கும் மண்முனைப் பகுதியே இராஜதானியாக இருந்துள்ளது. இது தவிர மேலும் தெற்கு பகுதியில் மண்டூர், பழுகாமம், சாகாமம், பாணமை போன்ற இராஜதானிகள் செல்வாக்குப் பெற்று விளங்கின. மண்முனையின் வடபகுதியில்

இருந்த மாமங்கேஸ்வரம் மக்களற்ற பகுதியாக காடு வளர்ந்த பிரதேசமாக மாறிக் கவனிப்பாரற்றுக் கிடந்துள்ளது. மண்முனை-யின் தென் பகுதிகளை வளப்படுத்துவதில் ஈடுபட்டு வந்த தமிழ்ச் சிற்றரசர்கள் வடக்கில் 10 கி.மீ தூரத்திலிருந்த மாமங்கத்தை கவனிக்கத் தவறி விட்டனர். பன்னெடுங்காலமாக காட்டுக்குள் மறைந்திருந்த இப்புராதன ஆலயம் கி.பி.15ம் நூற்றாண்டின் பின் இங்கு வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் கண்களுக்கும் புலப்படவில்லை என்பது வரலாற்று உண்மையாகும்.

### மட்டக்களப்பு திருப்படைக் கோயில்கள் வரிசையில் இடம்பெறாத புராதன ஆலயம்

பல நூற்றாண்டுகள் மறைந்து போய் கிடந்த காரணத்தால் மட்டக்களப்பிலுள்ள திருப்படைக் கோயில்கள் வரிசையில் மாமங்கேஸ்வரம் இடம்பெறவில்லை. இவ்வாலயம் சம்பந்தமான கல்வெட்டுக்களோ, பட்டயங்களோ, வேறு சாசனங்களோ கிடைக்கக்கூடியதாக இல்லை என்றாலும், புராதன லிங்கம் மட்டும் என்றும் மாறாத அழகுடன் இன்றும் காட்சி தருகிறது. பல்லாண்டு காலம் மறைந்திருந்த இவ்வாலயம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போது கி.பி. 1880ம் ஆண்டளவில் கண்டுபிடிக்கப்பட்டு, கொத்தியர்புலை, ஊரணி, கன்னங்குடா, செங்கலடி ஆகிய பகுதி மக்களின் பெரு முயற்சியில் மீண்டும் எழுப்பப்பட்டு தற்போதிருக்கும் அமைப்பைப் பெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. புனிதத் திருக்குளம் சீர் செய்யப்பட்டு படிகள் கட்டப்பட்டு அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இது ஓர் ஈஸ்வரமாயினும் "மாமங்கப்பிள்ளையார் கோயில்" எனவே அழைக்கப்படுகிறது. இங்குள்ள சிவலிங்கமானது பெரும்பாலும் பிள்ளையார் அங்கியுடன் காணப்படுவதால் விநாயகரே மூலவர் என நினைத்து மக்கள் வழிபடுகின்றனர். இதன் காரணமாகவே இப்பெயர் பெற்றுள்ளது.

### கல்லடி வேலாயுத சுவாமி கோயில்

மாமங்கேஸ்வரத்திலிருந்து புறப்படும் பாதயாத்திரீகர்கள் பிரசித்தி பெற்ற கல்லடி பாலத்தில் வரும்போது கிழக்குப் பக்கம் முகத்துவாரத்தையும், மேற்குப் பக்கம் மட்டக்களப்பு

கோட்டையையும் காண்கின்றனர். இவ்விடத்தை அடுத்து யாத்திரீகர்கள் தரிசித்துச் செல்லும் ஆலயம் கல்லடி வேலாயுத சுவாமி கோயிலாகும். கல்லடி மாமங்கேஸ்வரத்திலிருந்து இரண்டரை கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. கல்லடியில் புதிய பாதையும், பழைய பாதையும் பிரியும் இடத்தில் இரண்டு பாதைகளுக்கும் இடையில் இவ்வாலயம் அமைந்துள்ளது. கல்லடி பாலத்திலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் இவ்வாலயம் காணப்படுகிறது.



கல்லடி வேலாயுத சுவாமி கோயில்

சுமார் 110 வருட பாரம்பரியத்தைக் கொண்ட இவ்வாலயம் இப்பகுதி காடாக இருந்த காலத்தில், கல்முனைக்குச் செல்லும் பழைய வீதி மட்டும் இருந்த காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. மிகப்பழமை வாய்ந்த ஓர் தேத்தா மரத்தின் கீழ் 1901ம் ஆண்டு முருகனுக்கு ஓர் பீடம் அமைக்கப்பட்டு முருகன் சிலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்புராதன தேத்தா மரம் பட்டுப்போன நிலையில் இதன் அடிப்பாகம் மட்டும் இன்றும் காணப்படுகிறது. இவ்வாலயத்தின் அருகில் சுமார் 300 வருடம் பழமை வாய்ந்த பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.

### கல்லடி உப்போடை விபுலானந்தர் சமாதியும், இராம கிருஸ்ண மிஷனும்

கல்லடி முருகன் கோயிலிலிருந்து செல்லும் புதிய கல்முனை வீதியில் 700 மீற்றர் தெற்கில் உப்போடை என்னுமிடத்தில் இராம கிருஸ்ண மிஷன் அமைந்துள்ளது. இதை அடுத்து சிவானந்தா கல்லூரியும், அதை அடுத்து கிழக்கிலங்கை பெற்றெடுத்த அருந்தவப் புதல்வர் சுவாமி விபுலானந்தரின் சமாதியும் அமைந்துள்ளது. அதை அடுத்து சிவானந்தா விடுதி, இராமகிருஸ்ண சாரதா மிஷன் ஆகியவை அமைந்துள்ளன. இவற்றை அடுத்து சுவாமி விபுலானந்தர் அழகியற் கல்லூரி அமைக்கப்பட்டுள்ளது. ்ங்கிருந்து சுமார் ஒரு கி.மீ தூரத்தில் உள்ள நாவற்குடா என்னுமிடத்தில் மட்டக்களப்பு தமிழகம் பெற்றெடுத்த வீரப்புதல்வன் சாண்டோ சங்கரதாஸின் உருவச் சிலை காணப்படுகிறது.



சுவாமி விபுலானந்தரின் சமாதி, கல்லடி.

### ஆரையம்பதி கந்தசுவாமி கோயில்

கல்லடியை அடுத்து நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், பழைய கல்முனை வீதி வழியாகச் செல்லும் பாதயாத்திரீகர்கள் தரிசிக்கும் இன்னுமோர் ஆலயம் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலாகும். யாத்திரீகர்கள் பலர் இவ்வாலயத்தில் தங்கிச் செல்வதுண்டு. ஆரையம்பதி கல்லடியிலிருந்து 4 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.

புதிய பிரதான வீதியின் மேற்குப் பக்கத்தில் சுமார் 1 கி.மீ தூரத்தில் ஆரையம்பதி கந்தசுவாமி கோயில் அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 300 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தை இவ்வாலயம் கொண்டுள்ளது. தமிழ் மக்கள் தனிப் பெரும்பான்மையாக வாழும் இவ்வூரில் 13 ஆலயங்கள் உள்ளன. இவற்றில் முதன்முதலில் ஸ்தாபிக்கப்பட்டதே கந்தசுவாமி கோயிலாகும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பழமை வாய்ந்த ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாலயம் அமைந்திருக்கும் பகுதி மண்முனைப்பற்று என அழைக்கப்படுகிறது.

**ஆரல் எனும் கீரைவகையும், ஆரல் மீன்களும் நிறைந்து காணப்பட்ட இடம்**

ஆரையம்பதியின் பழைய பெயர் ஆரப்பற்றை என்பதாகும். இக்கிராமத்தில் ஆரைப்பற்றைகள் நிறைந்து காணப்படும் நீரோடைகள் இருப்பதால் இப்பெயர் உண்டாகியதாகக் கூறப்படுகிறது. "ஆரல்" எனப்படும் கீரைவகை இந்நீரோடைகளின் ஓரங்களில் பெருகிக் காணப்பட்டதாம்.

இவ்விடத்திற்கு ஆரப்பற்றை எனும் பெயர் வர இன்னுமோர் காரணமும் இங்கு கூறப்படுகிறது. இங்குள்ள நீரோடைகளில் "ஆரல்" எனும் மீன்கள் அதிகளவில் காணப்பட்டதால் ஆரப்பற்றை எனப் பெயர் பெற்றது எனவும் சிலர் கூறுகின்றனர். 1892ம் ஆண்டு முதலே இவ்வூர் ஆரையம்பதி எனப் பெயர் பெற்றதாகத் தெரியவருகிறது.

**கொக்கட்டிச் சோலை ஆலயத்துடன் உள்ள தொடர்பு**

கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்கும், ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலுக்கும் குளக்-கோட்டு மன்னன் காலத்திற்கு முன்பிருந்தே நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இவ்விரு ஆலயங்களின் மகோற்வசத்தின் போது ஆலய நிர்வாகிகள் பரஸ்-பரம் விசேடமாக வரவேற்கப்பட்டு ஆலய பூசைகளில் முன்னு- ரிமை கொடுக்கப்படும் நிகழ்வு இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

இதன்படி கி.பி 13ம் நூற்றாண்டில் குளக்கோட்டு மன்னன் கொக்கட்டிச் சோலை சிவாலயத் திருப்பணிகளை மேற்கொண்ட காலத்தில் ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயில் அம்மன்னனால்

ஸ்தாபிக்கப்பட்டதா என்பது மேலாய்வு செய்யப்பட வேண்டிய விடயமாகும்.

**ஆரையம்பதி பகுதியிலிருந்த காத்தான் பற்றிய ஐதீகம்**

இவ்வாலயத்திற்கும் இப்பகுதியில் பிரதானியாக இருந்த காத்தான் என்பவனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இது பற்றி பல ஐதீகக் கதைகள் கூறப்படுகின்றன. இருப்பினும் பழைய ஏட்டுக் குறிப்பில் இவ்வாலயத் தோற்றம் பற்றி சில தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.


ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயில்

காத்தான் எனும் வேடன் ஒருவன் இப்பகுதியில் வேட்டை-யாடுதலையும், மீன் பிடித்தலையும் தொழிலாகக் கொண்டிருந்தான். இவனது பரம்பரையினர் தென்னிந்தியாவிலிருந்து வந்து புத்தளம் பகுதியில் குடியமர்ந்துள்ளனர். காத்தான் வசித்த காலம் கி.பி. **1692**ம் ஆண்டு ஆகும். காத்தான்குடி கிராம-த்தின் மத்தியில் வசித்த இவன், வழக்கம் போல் மீன்பிடிக்க வரும் போது மட்டக்களப்பு வாவிக்கரையிலுள்ள பற்றைக்குள் ஓர் கல்லினால் செதுக்கப்பட்ட விக்கிரகத்தைக் கண்டெடுத்தான். அருகிலிருந்த மணல் செறிந்த இடத்தில் ஓர் பெரிய மரத்தின் கீழ் அச்சிலையை வைத்து வணங்கி வந்தான். அது பிள்ளையார் விக்கிரகமே என்பதும் அதைக் கந்த சுவாமியின் பெயரைக் கூறி வணங்கி வந்தான் என்பதும் உண்மையான வரலாறாகும். மழை வெயிலிலிருந்து இவ்விக்கிரகத்தைப் பாதுகாக்க

இலைகுலைகளால் குடிசையமைத்து வழிபட்டு வந்தான்.

இவன் இறந்தபின் மக்கள் இவ்விடத்தில் கல்லினால் சிறு கோயிலொன்றைக் கட்டி பூசைகள் செய்து வந்தனர். 1800ம் ஆண்டளவில் இவ்வாலயத்தைப் பெரிதாகக்கட்டி கும்பாபிஷேம் நடத்தினர். ஆதியில் பிள்ளையார் கோயிலாக இருந்து பின்பு கந்த-சாமி கோயிலென அழைக்கப்பட்ட இவ்வாலயத்தில் காத்தானால் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகம் இன்றும் காணப்ப-டுகிறது.

**ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலுக்கு முன்னோடியாக இருந்த விநாயகர் கோயில்**

காத்தான் பற்றியும் இவ்வாலயத்தின் மூல விக்கிரகம் பற்றியும் கூறும் இந்த ஐதீகக் கதையின் மூலம் ஓர் வரலாற்று உண்மையை இங்கே அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கி.பி 17ம் நூற்றாண்டில் இவ்வாலயம் தோற்றம் பெற்றதாகக் கூறப்பட்டாலும் இவ்வாலயத்திற்கு முன்னோடியாக ஓர் புராதன பிள்ளையார் ஆலயம் வாவிக்கரையில் அமைந்திருந்தமை தெளிவாகத் தெரிகிறது. இவ்வாலயம் காலப்போக்கில் சிதைந்து அழிந்து போயுள்ளது. இப்பிள்ளையார் ஆலயத்தின் மூல மூர்த்தியே பல நூறு ஆண்டு-களின் பின் காத்தான் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எனவே பண்டைய காலத்தில் ஆரையம்பதி வாவிக்கரையில் சிறப்புற்று விளங்கிய இப்பிள்ளையார் கோயில் ஓர் திறந்த வெளிக் கோயிலாக இருந்திருக்கலாம் எனவும், போர்த்துக்கேயர் புளியந்-தீவுப் பகுதியை கைப்பற்றிய காலப்பகுதியில் ஏனைய ஆலயங்களை அழித்தது போல் இப்பிள்ளையார் கோயிலையும் அழித்திருக்கலாம் எனவும் கூறக்கூடியதாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே காத்தானின் ஐதீகக் கதையும் உருவாகியிருக்க வேண்டும்.

வாவிக்கரையில் காத்தான் பிள்ளையார் விக்கிரகத்தைக் கண்டெடுத்ததாகக் கூறப்படும் பகுதியில் பழைய ஆலயத்தின் கட்டிட எச்சங்கள் எதுவும் காணப்படவில்லை. எனவே புராதன பிள்ளையார் ஆலயம் ஓர் திறந்தவெளி மரத்தடிக் கோயில் எனும் கூற்று மேலும் வலுவாகிறது. அதே சமயம் இவ்வாலயம் ஆரைய-ம்பதி கிராமம் தோற்றம் பெற்ற காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டி-ருக்கலாம் என நம்பப்படுகிறது. இதன்படி கந்தசுவாமி கோயிலுக்கு

முன்னோடியாக இருந்த பிள்ளையார் ஆலயம் சுமார் 1000 ஆண்டுகால பாரம்பரியத்தைக் கொண்டது எனக் கூறக்கூடியதாக உள்ளது.

இதன்படி கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரத்-திற்கும், ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலுக்கும் குளக்கோட்டன் காலத்திற்கு முன்பிருந்தே தொடர்புகள் உள்ளன எனக் கூறப்படுவது, கந்தசுவாமி கோயிலுக்கு முன்னோடியாக வாவிக்கரையில் இரு -ந்த விநாயகர் கோயிலுடனான தொடர்பு என்பதே வரலாற்று உண்மையாகும். குளக்கோட்டன் காலத்தில் கந்தசுவாமி கோயில் இருந்தது பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

**ஆரையம்பதி ஆலயங்களின் தனிச்சிறப்பு**

மட்டக்களப்புத் தமிழகத்தில் போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்ட ஏராளமான ஆலயங்கள் உள்ளன. இவை பற்றிய தகவல்கள் மிகமிக அரிதாகவே காணப்படுகின்றன. எனவே அவ்வாறான ஆலயங்கள் அமைந்திருந்த இடங்களை அடையாளம் காண்பது வரலாற்றாய்வாளர்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

அழிந்து போன புராதன ஆலயங்களின் வரலாற்றுப் பொக்கிஷங்களை அருகிலுள்ள வேறு ஆலயங்களில் வைத்துப் பாதுகாக்கும் மரபு மட்டக்களப்புத் தமிழகத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. கோயில் குளம், பெருந்துறை, வேதப்பிட்டி, கோயில் தீவு போன்ற இடங்களில் அந்நியர்களால் அழிக்கப்பட்ட ஆலயங்களின் புராதன சின்னங்கள் அருகிலுள்ள ஆலயங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இம்மரபைப் பேணுவதில் ஆரையம்பதி கிராமத்திற்கு தனிச்சிறப்பு உண்டு.

**கோயில்குளம் சிவாலயத்தின் அமைப்பைச் சொல்லும் கந்தசுவாமி கோயில்**

மண்முனையின் அரசியான உலகநாச்சியின் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பின்பு சோழர் காலத்தில் திருப்பணிகள் செய்யப்பட்டு மாகோன் காலத்தில் மிகப்பெரிய கோயிலாகக் கட்டப்பட்டு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட கோயில்குளம் சிவாலயத்தின் அரிய பல வரலாற்றுச் சின்னங்களையும், தொல்பொருட்களையும் ஆரையம்பதியில் உள்ள இரு கோயில்-

களில் காணக்கூடியதாக உள்ளது. இவற்றில் மேலும், வேறு ஏராளமான சின்னங்களும் ஆரையம்பதி கந்தசுவாமி கோயிலில் பாதுகாக்கப்பட்டுள்ளன.

ஆரையம்பதியின் தெற்கில் 2 கி.மீ தொலைவில் கோயில் குளம் அமைந்துள்ளது. இங்குள்ள புராதன குளத்தின் வடக்குப் பக்கத்தில் புராதன சிவாலய இடிபாடுகள் மண்ணுள் புதையுண்டு காணப்படுகின்றன. காலத்துக்குக் காலம் இப்பகுதியில் வெளிப்பட்ட கருங்கல் கட்டிடத்தின் பாகங்கள் ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலுக்கு எடுத்துவரப்பட்டு கோயில் அமைக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அழிக்கப்பட்ட கோயில் குளம் சிவாலயம் எப்படி இருந்தது என்பது யாருக்கும் தெரியாத நிலையில் ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலில் காணப்படும் சின்னங்கள் மூலம் சிவாலயம் இப்படித்தான் அமைந்திருந்தது என யூகிக்கக்கூடியதாக உள்ளது.

**ஆரையம்பதி**

ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலின் கிழக்கில் ஒரு கி. மீ தூரத்தில் கல்முனை புதிய வீதியும், ஆரையம்பதி நகரமும் அமைந்துள்ளன. இதன் வடக்கில் மிக நெருக்கமான குடியிருப்புகளும், கடைத்தெருக்களும் நிறைந்த இஸ்லாமிய நகரமான காத்தான்குடி அமைந்துள்ளது.


மண்முனை அரசி உலகநாச்சி

ஆரையம்பதி உலகநாச்சி எனும் அரசி ஆட்சி செய்த மண்முனை இராச்சியத்தின் ஓர் பகுதியாகும். இங்கு இவ்வரசி வாளேந்தியவண்ணம் குதிரை மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் சிலை காணப்படுகிறது. அத்துடன் நெடுஞ்சாலையின் மத்தியில் சுவாமி விவேகானந்தர், சுவாமி விபுலானந்தர், திருவள்ளுவர், பாரதியார் ஆகிய மகான்களின் உருவச் சிலைகள் காணப்படுகின்றன. ஆரையம்பதியில் கந்தசுவாமி கோயில் தவிர திருநீலகண்டப் பிள்ளையார் கோயில், வம்மிக்கேணி மாரியம்மன் கோயில் உட்பட பல ஆலயங்கள் அமைந்துள்ளன.

## கோயில்குளம் சிவன் கோயில்

ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலை அடுத்து யாத்திரீக-ர்கள் தரிசிக்கும் இடம் கோயில்குளம் விநாயகர் கோயிலாகும். இவ்விடம் ஆரையம்பதியிலிருந்து 2கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயத்திற்கு முன்னோடியாக இருந்து அழிந்து போன புராதன சிவன் கோயில் இவ்வாலயத்தின் பின்புறம் அமைந்திருந்தது.

ஆரையம்பதியின் தென்புறமாக உள்ள சிற்றூர்தான் கோயில்குளம். ஒரு காலத்தில் மிகப் பெரிய கோயிலும் அதனருகில் குளமும் கொண்ட பெரிய பட்டினமாக இவ்வூர் விளங்கியுள்ளது. கோயிலும் குளமும் அமைந்திருந்தபடியால் கோயில்குளம் என்ற பெயரைப் பெற்றது. இக்கோயில் உயரமான இராஜ கோபுரத்-துடன் அமைக்கப்பட்டிருந்ததால் இவ்விடம் “சிகரம்” என்றழைக்-கப்பட்டது.

## புத்தரின் புனித தந்தத்தை கொண்டு வந்ததால் உலக நாச்சிக்கு கிடைத்த பரிசு

மட்டக்களப்பு மான்மியத்தின் படி இவ்வாலயம் கி.பி. 303 - 331 வரை இலங்கையை ஆண்ட மேகவர்ணனின் காலத்தில் உலக நாச்சி எனும் கலிங்க தேசத்து இளவரசியால் கட்டப்பட்டதாகத் தெரிகிறது. கலிங்கத்தின் ஒரிசா தேசத்திலிருந்து ஆட்சிபுரிந்த குகசிவனின் புதல்வியான உலகநாச்சி புனித புத்த தந்தத்தை தனது கூந்தலில் மறைத்து வைத்து இலங்கைக்கு கொண்டுவரும் போது கைலங்கிரியிலிருந்து ஓர் சிவலிங்கத்தையும் எடுத்துக் கொண்டு தன் சகோதரன் உலகநாதனுடன் இங்கு வந்து சேர்ந்தாளென்றும்,

புத்தரின் புனித தந்தத்தை இலங்கை மன்னன் மேகவர்ணனிடம் கொடுத்துவிட்டு அதற்குப் பரிசாக மண்முனை பகுதியைப் பெற்றாள் என்றும், அக்காலத்தில் மட்டக்களப்பு பிரதேசத்தை ஆட்சி செய்து வந்த குணசிங்கன் எனும் மன்னன் காடு வளர்ந்திருந்த மண்ணேறு முனையை துப்பரவு செய்து அங்கு ஓர் மாளிகையையும் அமைத்து உலகநாச்சிக்கு வழங்கினான் என்றும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மண்ணேறு முனையைத் தலைநகராக்கி ஆட்சி செலுத்திய உலகநாச்சி தனது தலைநகரில் கோயிலமைத்து வழிபட்டாள். அதுவே கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலாகும். இவ்வாலயத்தில் கொக்கு நெட்டி மரத்தின் கீழ் தோன்றிய சுயம்பு லிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டதால் தான் கொண்டு வந்த காசிலிங்கத்தை தனதாட்சிப் பகுதியின் வடக்கில் ஒரு கோயில் கட்டி அங்கு பிரதிஸ்டை செய்து வழிபட்டாள்.

இது நடந்தது கி.பி 370ல். இக்காலப்பகுதியில் கோயில்-குளம் சிவன் கோயில் அமைக்கப்பட்டது. கோயில்குளம் சிவன் கோயிலும், கொக்கட்டிச் சோலை சிவன் கோயிலும் உலகநாச்சி-யால் கட்டப்பட்டதால் இவ்விரு கோயில்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. கோயில்குளம் சிவன் ஆலயத்தை கட்டுவித்த உலகநாச்சியின் வரலாற்றை இந்தியக் கல்வெட்டும், மகாவம்சமும் உறுதி செய்கின்றன.

### கோயில் குளத்தில் குளக்கோட்டனின் திருப்பணி

கி.பி 4ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட இக்கோயில் இப்பகுதியில் முக்கியமான வழிபாட்டுத் தலமாக இருந்தபடியால் காலத்துக்குக் காலம் இப்பகுதியை ஆட்சி செய்து வந்த சிற்றர-சர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. கி.பி. 13ம் நூற்றா-ண்டில் இலங்கையை ஆட்சிபுரிந்த காலிங்க மாகோன் காலத்தில் குளக்கோட்டு மன்னனால் கோயில்குளம் சிவன் கோயிலின் இரா-ஜகோபுரம் அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும், அதன் பின்பே இப்பகுதி “சிகரம்” என அழைக்கப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. குளக்கோட்டு மன்னனால் கிழக்கு மாகாணத்தில் திருப்பணிகள் செய்யப்பட்ட கோயில்களில் இதுவும் ஒன்றாகும். பல அடுக்கு இராஜகோபுரத்தைக் கொண்டு சீரும் சிறப்புடனும் விளங்கிய இக்கோயில் கி.பி. 1627ல் போர்த்துக்கேயத் தளபதி

அசவிடோ என்பவனால் இடித்தழிக்கப்பட்டது. இவனே திருக்-கோயில் முருகன் கோயிலையும் அழித்தவனாவான்.

### அருகிலுள்ள ஆலயங்களில் தொல்பொருள் சின்னங்கள்

இவ்வாலயம் அழிக்கப்பட்ட பின் இங்கிருந்த மக்கள் சற்று வடக்கு நோக்கி இடம்பெயர்ந்து காடாய்க் கிடந்த ஓரிடத்தை துப்பரவு செய்து அங்கு வாழத் தொடங்கினர். அப்பகுதியே ஆரை-ப்பற்றை எனப் பெயர் பெற்றது. அன்று ஆரைப்பற்றை காடாகவும், கோயில்குளம் பட்டினமாகவும் இருந்தது. கோயில் குளத்திலிருந்து சென்ற மக்கள், இடிக்கப்பட்ட ஆலய இடிபாடுகளிலிருந்து வேல் ஒன்றைக் கண்டெடுத்த மக்கள் அந்தவேலை தாம் புதிதாக குடியேறிய இடத்தில் ஓர் மரத்தின் கீழ் வைத்து வழிபட்டனர்.

அழிக்கப்பட்ட கோயில்குளம் சிவாலயத்தின் இடிபாடு-களில் புதைந்து கிடந்த கருங்கற்படிகளும், கருங்கல் நிலைகளும், ஆரையம்பதி முருகன் கோயிலிலும், திருநீலகண்ட பிள்ளையார் கோயிலிலும் வைத்துக் கட்டப்பட்டன.

### கோயில்குளம் ஆலயத்தின் கோயிலும், குளமும் அமைந்திருந்த பகுதி

கோயில்குளம் சிவாலயம் சுமார் 500 யார் நீளமும், 200 யார் அகலமும் கொண்ட பரந்த நிலப்பரப்பில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வளாகமே சிகரம் என்ற பெயரில் அழை-க்கப்படுகிறது. இன்று பற்றைகள் வளர்ந்து இடையிடையே பனை மரங்களுடன் காணப்படும் இக் காணியில் எங்கு அகழ்ந்தாலும் ஆலயத்தின் எச்சங்களான கற்றூண்களும், பீடங்களும், பாரிய கற்பாறைகளும் வெளிப்படுவதாக கிராமவாசிகள் கூறுகின்றனர். கோயில்குளம் சிவாலயம் அமைந்திருந்த இவ்வளாகத்தின் தெற்குப் பக்கத்தில் தூர்ந்து போன பெரிய குளம் காணப்படுகிறது. இதுவே இவ்வாலயத்தின் தீர்த்தக் குளமாக விளங்கியுள்ளது. புதிய கல்முனை வீதியின் முன்பாக கோயில்குளம் பாடசாலையும், அதன் பின்னால் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சித்திவிநாயகர் கோயி-லும் காணப்படுகின்றன. இவற்றின் பின்பக்கமே இத்தீர்த்தக் குளம் அமைந்துள்ளது.


கோயில்குளம் சித்தி விநாயகர் கோயில்

இன்று தாமரைப் பூக்கள் நிறைந்த சிறிய குளமாகக் காட்சி தரும் இக்குளம் அன்று இதைவிடப் பெரிதாக இருந்துள்ளது. அந்நியரால் இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு முன்பு இங்கிருந்த விக்கிரகங்களும், படிமங்களும், ஏனைய ஆலயச் சின்னங்களும் அந்நியர் கையில் அகப்படா வண்ணம் மண்ணுள் புதைத்தும், கிணறுகள், குளங்களில் போட்டும் காப்பாற்றப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஓர் கிடாரமொன்று இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது போன்ற ஏனைய சின்னங்களும் இவ்வாலய சுற்றுச் சூழலில் புதையுண்டிருக்கலாம் அல்லது அருகிலிருக்கும் தீர்த்தக் குளத்தில் போடப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இக்குளத்திலும் சிகரம் என்றழைக்கப்படும் இக்காணியிலும் தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படுமாயின் அழிந்து போன எமது பாரம்பரியச் சொத்துக்கள் பலவற்றை மீட்டெடுப்பதோடு அவை பற்றிய அரிய தகவல்களையும் பெறக் கூடியதாக இருக்கும். மட்டக்களப்பிலிருந்து கல்முனை செல்லும் நெடுஞ்சாலையில் கல்லடியிலிருந்து மண்முனை சந்திவரை புதிய பாதை அமைக்கப்பட்டுள்ளது. பழைய கல்முனை வீதியும் புதிய கல்முனை வீதியும் மண்முனை சந்தியில் இணைகின்றன. இவ்வாலயம் அமைந்திருந்த வளாகம் புதிய வீதியிலிருந்து பழைய வீதிவரை நீண்டு பரந்து காட்சியளிக்கிறது.

### மண்முனை

கோயில் குளம் சிவன் கோயிலை அடுத்து பாதயாத்திரீகர்கள் ஆரையம்பதி கந்தசுவாமிக் கோயிலிருந்து வரும் பழைய கல்முனை வீதியும், புதிய வீதியும் இணையும் சந்தியை அடைகின்றனர். இங்கிருந்து ஒன்றரை கி.மீ. தூரத்தில் தாழங்குடா அமைந்துள்ளது. இவ்விடத்தில் மண்முனைச் சந்தி உள்ளது. இச்சந்தியின் மேற்குப் பக்கமாக உள்ள கிராமமே மண்முனை என்றழைக்கப்படும் மிகப் பண்டைய கிராமமாகும். இங்கு பல கோயில்கள் உள்ளன. இவற்றில் கண்ணகியம்மன் கோயில், பிள்ளையார் கோயில், பெரிய தம்பிரான் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மண்முனையின் மேற்கில் மண்முனைத் துறையடி அமைந்துள்ளது. இத்துறையினூடாக வாவியைக் கடந்து கொக்கட்டிச் சோலைக்குச் செல்லலாம்.



மண்முனைத் துறை

### புதுக்குடியிருப்பு

மண்முனை சந்தியை அடுத்து புதுக்குடியிருப்பு கிரான் குளம் ஆகிய புதிய கிராமங்கள் அமைந்துள்ளன. 20 வருடங்களுக்கு முன்பு தாளங்குடாவிலிருந்து குருக்கள் மடம் வரை முந்திரிகைக் காடுகளே நிறைந்து காணப்பட்டன. இன்று இப்பகுதியில் கிராமங்கள் உருவாகியுள்ளன. புதுக்குடியிருப்பை அடுத்து பாதையின் மேற்குப் பக்கத்தில் ஓர் நன்னீர் குளமும் அதை அடுத்து கிரான் குளம்

கிராமமும், அதை அடுத்து ஏத்தாழைக் குளமும் அமைந்துள்ளன. ஏத்தாழைக் குளத்தின் வடக்கு மூலையில் பழமை வாய்ந்த சிராம்பியடிப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலும் அதனைச் சுற்றி பழைய புதுக்குடியிருப்பு கிராமமும் உலக நாச்சி காலத்தில் தோற்றம் பெற்றதாக கூறப்படுகிறது.

ஏத்தாழைக் குளம் கிரான் குளத்திற்கும், குருக்கள் மடத்திற்கும் இடையில் காணப்படும் நன்னீர் குளமாகும். இக்குளத்தின் மத்தியில் வளர்ந்துள்ள மரங்களில் வெண்கொக்கு போன்ற நீர்ப்பறவைகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன.

குளத்திற்கும் பாதைக்கும் இடையில் பாதை ஓரத்தில் குருக்கள் மடம் ஐயனார் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு புராதன காலம் முதல் காணப்பட்ட பாரிய நாவல் விருட்சத்தின் கீழ் ஓர் திறந்தவெளி மரக்கோயிலாக இருந்த இவ்வாலயம் அண்மையில் பெரிய கோயிலாகக் கட்டப்பட்டுள்ளது. இம்மரத்தின் கீழ் ஐயனார் சூலமும், நாகதம்பிரான் கோயிலும் காணப்பட்டன.

ஐயனார் கோயிலைத் தரிசித்த யாத்திரீகர்கள் அடுத்ததாக அம்பிளான்துறை சந்தியை அடைகின்றனர். இச்சந்தியின் மேற்குப் பக்கத்தில் ஒரு கி.மீ தூரத்தில் குருக்கள் மடம் துறையடி அமைந்துள்ளது. இத் துறையூடாக வாவியைக் கடந்து அம்பிளான் துறைக்குச் செல்லலாம். அம்பிளான்துறை சந்தியைக் கடந்து சிறிது தூரத்தில் யாத்திரீகர்கள் குருக்கள் மடத்தை அடைகின்றனர். பாதயாத்திரீகர்கள் இங்குள்ள செல்லக் கதிர்காமம் முருகன் கோயிலில் தங்கிச் செல்கின்றனர். பண்டைய காலத்தில் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை வந்த ஓர் முனிவரால் இவ்வாலயம் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.




படம் 1 - வேதப்பிட்டியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விஷ்ணு சிலை



படம் 2 - குருக்கள் மடம், செல்லக்கதிர்காமம்




படம் 3 - செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் கோயில்



படம் 4 - தேத்தாத் தீவு முருகன் கோயில்



படம் 5 - களுதாவளை பிள்ளையார் கோயில்



படம் 6 - களுதாவளை பிள்ளையார் கோயில் தீர்த்தக்கேணி



படம் 7 - களுதாவளை முருகன் கோயில் திருநீற்றுக்கேணி



படம் 8 - களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் கோயில்

**குருக்கள் மடம்**

கதிர்காம பாதயாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக குருக்கள் மடம் விளங்குகிறது. இது மட்டக்களப்பிலிருந்து 21 கி.மீ தூரத்திலும், தாழங்குடாவிலிருந்து 10 கி.மீ தூரத்திலும் அமைந்துள்ளது. மட்டக்களப்பு - கல்முனை வீதியில் மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் பக்கத்தில் உள்ள எழுவான் கரை எனும் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் குருக்கள் மடத்திற்கு தனிச்சிறப்புண்டு. மட்டக்களப்புக்கும், கல்முனைக்கும் மத்தியில் இக்கிராமம் அமைந்துள்ளது. அத்துடன் 70 கி.மீ நீளமான மட்டக்களப்பு வாவியின் கிழக்குப் பக்கத்தில் எழுவான்கரை எனப்படும் வாவிக்கும் கடலுக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய நிலப்பரப்பில் உள்ள கிராமங்களில் மிக அகலம் குறைந்த கிராமமாக குருக்கள் மடம் விளங்குகிறது.

குருக்கள் மடம் கிராமத்தில் உள்ள ஏத்தாலைக்குளம் ஒரு கிலோமீற்றர் நீளத்தில் செந்தாமரை மலர்கள் நிறைந்து காணப்படும் ஓர் கிராமக் குளமாகும். இக்குளத்தருகில் சுதந்திரமாக மான்கள் திரியும் அபூர்வ காட்சியைக் காணலாம்.

இங்கு வாவிக்கும் கடலுக்கும் இடையில் சுமார் ஒரு கி.மீ. தூரமே உள்ளது. மேற்குப் பக்கம் வாவியிலிருந்து வீசும் காற்றும், கிழக்குப் பக்கம் கடலிலிருந்து வீசும் காற்றும் இப்பகுதியில் சங்கமிப்பதால் வருடம் முழுவதும் குளிர்ச்சியும் பசுமையும் மிக்க இடமாக இது விளங்குகிறது. இதன் காரணமாக மட்டக்களப்பு பகுதிக்கு வருபவர்கள் இவ்விடத்தில் தங்கிச் செல்கின்றனர்.

மேலும் இவ்வழியாக வரும் முனிவர்களும், சித்தர்களும் இவ்விடத்தை தமக்கு உகந்த இடமாகத் தேர்ந்தெடுத்து இங்கு தங்கிச் சென்றுள்ளனர். மட்டக்களப்புப் பகுதியை ஆட்சி செய்த சிற்றரசர்களும் இப்பசுமையான இடத்திலேயே நந்தவனத்தை அமைத்துத் தமது கோடை வாசல் தலமாக இவ்விடத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

கி.பி 4ம் நூற்றாண்டில் மட்டக்களப்பை ஆட்சி செய்த அமரசேனன் எனும் சிற்றரசனின் காலத்தில் இராமநாதபுரத்திலிருந்து ஏழு வன்னிச்சிமார்கள் தமது கணவன்மார்களுடனும் வவனிய குலத்து குருக்கள் குடும்பங்களுடனும் மட்டக்களப்புக்கு

வந்ததாகவும், இக்குருக்கள் குடும்பங்களை மன்னன் குடியமர்த்திய இடமேகுருக்கள் மடம் எனவும் மட்டக்களப்பு மான்மியம் கூறு-கிறது. இதன்படி குருக்கள் மடம் கி.பி. 4ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதுடன் சுமார் 1600 வருட பாரம்பரியத்தைக் கொண்டுள்ள கிராமம் எனத் தெரிகிறது.

**குருக்கள் மடம் வேதப்பிட்டி சைவக்கோயில்**

செல்லக்கதிர்காமம் கோயிலுக்கு வடக்கில் சுமார் 50 யார் தூரத்தில் ஓர் மண்மேடு காணப்படுகிறது. இங்குதான் மிகப் பண்டைய காலத்தில் ஓர் இந்து ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாலயம் கி.பி 8ம் - 10ம் நூற்றாண்டு காலப்பகுதிக்குள் விஷ்ணுவுக்காகக் கட்டப்பட்டிருக்கவேண்டும் என்பது இங்கு கிடைக்கப்பெற்ற கற்சிலை ஒன்றின் மூலம் அறியப்பட்ட விடய-மாகும்.

**புராதன ஆலயம் அமைந்திருந்த வேதமேடு**

இவ்வாலயம் அமைந்திருந்த மண்மேடு "வேதமேடு" என்ற பெயரைப் பெற்றிருந்தது. சுமார் 2 ஏக்கர் பரப்புடைய இவ்விடத்தில் பண்டைய ஆலயத்தின் எச்சங்கள் காலத்துக்-குக்காலம் வெளிப்பட்டவண்ணம் இருக்கின்றன. தற்போது இப்பகுதி "வேதப்பிட்டி" என அழைக்கப்படுகிறது. பண்டைய ஆலயம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடத்தின் வடக்கிலும், கிழக்கிலும் சுமார் 300 யார் சுற்றளவுள்ள பகுதியே வேதப்பிட்டி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இம்மண் மேட்டின் வடக்கில் சுமார் 200 யார் தூரத்தில் தூர்ந்து போன நிலையில் மூன்று குளங்கள் அடுத்தடுத்து காணப்படுகின்றன. இவை தீர்த்தக்-குளங்கள் என அழைக்கப்படுகின்றன. பண்டைய காலத்தில் இவை மூன்றும் ஒரே குளமாக இருந்திருக்க வேண்டும் எனவும், புராதன ஆலயத்தின் தீர்த்தக்குளமாக இது விளங்கியிருக்க வேண்டும் எனவும் நம்பப்படுகிறது. கோயிலும், அதனையடுத்து குளமும் அமைக்கும் மரபு தமிழர்களிடையே தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். கி.பி. 8ம் - 10 ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இவ்வாலயம் அமைக்கப்பட்ட வேளை இத்தீர்த்தக்குளமும் அமைக்கப்பட்-டிருக்க வேண்டும் எனக்கூறப்படுகிறது.

### புராதன ஆலயத்தின் தொல்பொருட்சின்னங்களும் சிலையும்

வேதப்பிட்டி ஆலயம் அமைந்திருந்த மண்மேட்டில் பல்வேறு தேவைகளுக்காக நிலத்தை கிண்டும் போது பல புராதன ஆலயச்சின்னங்கள் வெளிப்பட்டுள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற கோமுகியும், அட்டதிக்கு பாலக கற்களும், விஷ்ணுவின் சிலையும் இங்கு பண்டைய காலத்தில் இந்து ஆலயம் ஒன்று அமைந்திருந்ததற்கான சான்றுகளாக உள்ளன. இங்கிருந்து கிடைக்கப்பெற்ற கோமுகி அருகிலுள்ள செல்லக் கதிர்காமம் முருகன் கோயிலின் கருவறையிலும், அட்டதிக்கு பாலகக் கற்கள் கருவறையின் பின்பக்கமும் வைக்கப்பட்டுள்ளன. இக்கற்களில் ஏழு கற்கள் மட்டுமே கிடைக்கப்பெற்றதாகவும் கூறப்படுகிறது. விஷ்ணு சிலை முருகன் ஆலயத்திற்கு வெளியே கிழக்குப்பக்கத்தில் உள்ள ஓர் மரத்தின் கீழே வைக்கப்பட்டுள்ளது. **(படம் 1)** சுமார் 5 1/2 அடி உயரமும் 2 1/2 அடி அகலமும் கொண்ட இச்சிலை ஓர் சாதாரண மனிதனின் அளவில் அமைக்கப்பட்டுள்ளது. முழங்கால்களின் கீழுள்ள பகுதி மண்ணுள் புதைக்கப்பட்டுள்ளது. தியான நிலையில் உள்ள இச்சிலையின் மகுடம் மிக உயர்ந்ததாகவும், இதன் இரு கைகளும் கீழ்நோக்கி இடுப்புடன் இணைந்த வண்ணமும் காணப்படுகின்றன. இச்சிலைக்கு மேலும் இரு கைகள் இருக்கலாம் என்பதைத் தோள் மூட்டில் காணப்படும் அடையாளங்கள் மூலம் யூகிக்கக்கூடியதாக உள்ளது.

### வேதப்பிட்டி கற்சிலை பற்றிய ஆய்வாளர்களின் கருத்துக்கள்

இச்சிலை கி.பி. 10ம் நூற்றாண்டிற்குரிய பல்லவர் கலை மரபைக் கொண்டு உருவாக்கப்பட்ட விஷ்ணு சிலை என ஆய்வாளர் கோகாட் கூறியுள்ளார். வேறு சில ஆய்வாளர்கள் இது கி.பி. 8ம் நூற்றாண்டிற்குரியது எனக் கணித்துள்ளனர். இதே சமயம் இச்சிலை பல்லவர் கால கலை மரபுக்குரியதல்ல எனவும், விஷ்ணுவுக்குரியதுமல்ல எனவும், அதற்குரிய தனித்துவமான அடையாளங்கள் எதுவும் இச்சிலையில் காணப்படவில்லை எனவும், சுதேச நாட்டார் கலைமரபை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டு முற்றுப்பெறாத நிலையில் உள்ள சிலை எனவும் வேறுசில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இச்சிலைக்கும் வேதமடுவில் அமைந்திருந்த புராதன ஆலயத்திற்கும் தொடர்புள்ளதா என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும். எப்படியிருப்பினும் இங்கு கி.பி. 8ம் நூற்றாண்டிற்கும் 10ம் நூற்றாண்டிற்கும் இடையில் அமைக்கப்பட்ட இந்து ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் என்பது மட்டும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

**வேதப்பிட்டி ஆலயத்தின் கருங்கற் தூண்கள்**

வேதப்பிட்டிக்கு பக்கத்தில் அமைந்துள்ள முருகன் கோயிலின் கிழக்கு பக்கத்தில் சுமார் 3'-4' அடி உயரமான ஒன்பது கற்தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்களும் வேதப்பிட்டி ஆலயம் அமைந்திருந்த பகுதியில் நிலத்தின் அடியிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். சில வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வீடு கட்ட நிலத்தை அகழ்ந்தபோது சுமார் 15'-20' அடி நீளமுள்ள பாரிய கற்றூண்கள் காணப்பட்டதாகவும் அசைக்கக்கூட முடியாத இப்பாரிய கற்பாளங்களை அப்படியே போட்டு மூடிவிட்டதாகவும் இப்பகுதி மக்கள் கூறினர்.

இவ்வாலயத்திற்கு வடக்கில் பாலைவனப் பசுந்தரை போன்ற நன்னீர்த் தேக்கங்கள் மூன்று காணப்படுகின்றன. இவை மூன்றும் ஒரு வகையான சேற்றை கொண்டுள்ளன. சுத்தமான விபூதி போன்ற ஒன்றும், சந்தனம் போன்ற ஒன்றும், கருமை நிறமுடைய ஒன்றுமாக மூன்று வகைகள் உள்ளன.

**எழுவான் கரைப்பகுதியில் அமைந்திருந்த ஓரிரு புராதன கோயில்களில் ஒன்று**

குருக்கள் மடத்தில் அமைந்திருக்கும் செல்லக்கதிர்காமம் முருகன் ஆலயத்திற்கும், வேதப்பிட்டி ஆலயத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு. கதிர்காமத்திற்கு ஒரு "சூரன்மலை" போல குருக்கள் மடம் செல்லக்கதிர்காமத்திற்கு இவ் "வேதமேடு" அமைந்திருந்தது. திருவிழாக்காலங்களில் செல்லக்கதிர்காமம் கோயிலிலிருந்து வேதமேடு ஆலயத்திற்கு முருகன் எழுந்தருளி இருப்பது அன்றைய வழக்கமாக இருந்தது. மேலும் இப்பகுதியின் மண்மேட்டில் பண்டைய ஆலயத்தின் பல பொக்கிஷங்கள் புதையுண்டு இருப்பதாக கூறப்படுகிறது. இப்பகுதியில் தமிழ் ஆய்வாளர்களால் உரிய முறையில்

தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுமாயின் இப்-புராதன ஆலயம் பற்றிய பல தகவல்களைப் பெற முடியும்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் பண்டைய ஆலயங்கள் எல்லாம் வாவியின் மேற்குப்பக்கமான படுவான் கரைப்பகுதியில் மட்டுமே காணப்படுகின்றன. மட்டக்களப்பு வாவியின் கிழக்குப்-பக்கமான எழுவான் கரைப்பகுதியில் வேதப்பிட்டி ஆலயமும் மண்முனை அரசின் கோயில்குளம் சிவாலயமும் மட்டுமே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கோயில்குளம் ஆலயம் கி.பி. 4ம் நூற்றாண்டில் கட்டப்பட்டு கி.பி 13ம் நூற்றாண்டில் புனரமைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. அதே சமயம் கி.பி. 8ம் - 10ம் நூற்றாண்டு காலப்பகுதிக்குள் அமைக்கப்பட்டதாக கருதப்படும் குருக்கள் மடம் வேதப்பிட்டி ஆலயம் சம்பந்தமான தகவல்கள் எதுவும் மட்டக்களப்பு தமிழகம் பற்றி எழுதப்பட்ட எந்த நூல்களிலும் இடம்பெற்றிருக்கவில்லை. மண்முனையிலிரு-ந்து சுமார் 10 கி. மீ தெற்கில் குருக்கள் மடம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருக்கள் மடத்தில் அமைந்திருந்த சிற்றரசர்களின் பூந்தோப்பு

கி.பி. 4ம் நூற்றாண்டில் மண்முனை அரசை ஆட்சி செய்த உலக நாச்சியின் காலத்தில் வேதப்பிட்டி ஆலயம் அமை-க்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் கி.பி.13ம் நூற்றாண்-டில் குளக்கோட்டு மன்னன் கொக்கட்டிச்சோலை, பழுகாமம், கோயில்போரதீவு ஆகிய இடங்களில் வன்னிமைகள் வகுத்து ஆலயங்களில் திருப்பணிகள் செய்வித்த காலத்தில் வேதப்பிட்டி ஆலயம் புனரமைக்கப்பட்டோ அல்லது அமைக்கப்பட்டோ இருக்க வேண்டும். குளக்கோட்டன் காலத்திலிருந்த பழுகாமம் வன்னிமைகளுக்கும், மட்டக்களப்பு குருக்கள் மடத்திற்கும் தொடர்பிருந்ததாக கூறப்படுகிறது. வாவியின் கிழக்கு கரையில் குருக்கள் மடத்தின் மேற்கில் ஓர் பூந்தோப்பு அமைக்கப்பட்டு இங்கு கோடைகாலங்களில் பழுகாமம் வன்னிமைகளும், சிற்றரசர்-களும் வந்து தங்கிச் செல்வதாகவும் அறியக்கூடியதாக உள்ளது. இக்காலப்பகுதியில் தான் வேதப்பிட்டி ஆலயம் பழுகாமம் வன்னி-மைகளால் கட்டப்பட்டிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இக்காலம் முதல் போர்த்துக்கேயர் காலம் வரை இவ்வாலயம் சிறப்புடன் விளங்கியதாக கூறப்படுகிறது.

கி.பி.13ம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டு வன்னிமைகளாலும், சிற்றரசர்களாலும் பயன்படுத்தப்பட்ட குருக்கள்மடம் பூந்தோப்பு கண்டி மன்னர்கள் காலம் வரை இருந்ததாக கூறப்படுகிறது. இப்பூந்தோப்பு அமைக்கப்பட்டிருந்த இடம் இன்றும் "நந்தவனம்" என அழைக்கப்பட்டு வருகிறது. இன்றுள்ள மட்டக்களப்பு பொத்துவில் வீதி அன்று இருக்கவில்லை. இப்பாதை போர்த்துக்கேயர் காலத்தின் பின்பே அமைக்கப்பட்டது. இதன் பின்பே எழுவான் கரைப்பகுதியில் அதிகமாக மக்கள் குடியேற தொடங்கினர்.

## குருக்கள் மடம் செல்லக் கதிர்காமம் முருகன் கோயில்

குருக்கள் மடம் கிராமத்தில் சுமார் 400 வருடங்களுக்கு முன்பு இம்முருகன் கோயில் ஸ்தாபிக்கப்பட்டது. **(படம் 2)** இவ்வாலயத்தில் கதிர்காம பாத யாத்திரீகர்கள் வந்து தங்கிச் செல்வதுண்டு. கி.பி 1600ம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் தொண்டமானாற்றில் உள்ள கெருடாவில் என்னும் இடத்தில் இருந்து கதிர்காமத்திற்கு கால் நடையாக வந்த முனிவர் ஒருவர் அடர்ந்த காடுகளும், நீர்ச்சுனைகளும் இருந்த இவ்விடம் தனது தவத்திற்கு சிறந்த இடம் எனக்கருதி இங்கு ஓர் சிறிய கோயிலை அமைத்து வழிபட்டதாகவும், தான் கொண்டு வந்த அரிய பல விதைகளில் ஒன்றான "தத்தாக்கு" விதையை இவ்வாலயத்தில் நட்டு, இக்கோயிலுக்கு செல்லக் கதிர்காமம் என்ற பெயரையும் இட்டதாகவும். "உலக குருநாதர்" என்றழைக்கப்பட்ட இம்முனிவரின் ஊர்க்காரர்களான ஆதிகுருமார் என்பவர்கள் கெருடாவிலிருந்து இங்கு வந்து தங்கியதாகவும், இவர்களின் பெயரால் இவ்விடம் "குருநாதர் மடம்" என்ற பெயர் பெற்றதாகவும் இதுவே மருவி "குருக்கள் மடம்" என்ற பெயரில் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. 1607ம் ஆண்டு இவ்வூர் பெரியவர்களின் உதவியுடன் செல்லக் கதிர்காமம் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இக்கோயிலின் வடக்கில் நன்னீர்ச்சுனைகள் காணப்படுகின்றன. இச்சுனைகள் ஆலயத் தீர்த்தங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தீர்த்தக் குளங்களிலிருந்து மழை காலங்களில் பெருகி வழியும் நீர் செல்லக்கதிர்காமம் ஆலயத்தினருகில் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடுவதாக கூறப்படுகிறது. இச்சுனைகளுக்கும்

கோயிலுக்கும் இடையில் உள்ள "வேதமேடு" என்ற இடத்தில் புராதன ஆலயம் ஒன்று இருந்தது. திருவிழாக்காலங்களில் இறுதி நாளன்று முருகப் பெருமான் வேதமேடு ஆலயத்திற்கு ஊர்வலமாக வந்து எழுந்தருளுவதாக கூறப்படுகிறது. இத்தீர்த்தத் குளங்களுக்கு கல்லாற்றிலிருந்து நீர் கிடைக்கப் பெறுகிறது. பண்டைய காலத்தில் ஒந்தாச்சி மடத்தில் இருந்து கால்வாய் ஒன்றின் மூலம் இத்தீர்த்தக் குளங்கள் இணைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அண்மைக்கால ஆய்வுகளின் படி குருக்கள்மடம் பகுதிக்கு வந்த முனிவரான உலக குருநாதர் என்பவர் சீக்கியரின் மதத் தலைவரான குருநானச் சுவாமிகளே என வடஇந்திய ஆய்வாளரான அசோக்குமார் காந்த் கூறியுள்ளார். இதற்கு ஆதாரமாக அவர் முன்வைப்பது இங்குள்ள தீர்த்தக்குளங்களின் அருகில் உள்ள ஓர் விருட்சமும், முருகன் கோயிலருகில் கிடைத்த குருநானக் பெயர் பொறிக்கப்பட்ட ஓர் கற்துண்டுமே. இம் மரம் சீக்கியர் நாடான பஞ்சாப்பில் மட்டுமே காணப்படுவதாகவும், இம்மரத்தின் கீழேதான் குருநானக் முனிவர் தவம் செய்ததாகவும், அருகில் இருக்கும் தீர்த்தக் குளங்களில் அவர் நீராடியுள்ளதாக அசோக்காந்த் கூறுகிறார்.

மேலும் குருக்கள் மடத்திற்கு உலககுருநாதர் எனும் முனிவர் வந்த காலமும் குருநானக் முனிவர் இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள காலமும் கிட்டத்தட்ட ஒத்துப் போகிறது. அத்துடன் குருநானக் முனிவரின் வரலாற்றுக்குறிப்புகளில் அவர் மட்டக்களப்பு வந்து அங்கிருந்து தெற்குப் பக்கம் 7 மைல் தூரத்தில் இருந்த ஓர் கிராமத்தில் தங்கிச் சென்றதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே சமயம் உலககுருநாதர் தொண்டமானாறு கெருடாவில் பகுதியிலிருந்து குருக்கள் மடத்திற்கு வந்ததாக வி.சி.கந்தையாவும், வேறு ஓர் குறிப்பில் வேதாரண்யத்திலிருந்து வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

கி.பி 13ம் நூற்றாண்டில் குளக்கோட்டன் காலத்தின் பின்பே குருக்கள் மடத்தின் வரலாற்றுத் தொடர்புகள் அறியப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் பழுகாமத்தை பரிபாலனம் செய்து வந்த வன்னிமைகள் வாவியின் கிழக்குக்கரையில் பூந்தோப்புகள் அமைத்து கோடை காலங்களில் இங்கு வந்து சென்றுள்ளனர். பூந்தோப்புகள் இருந்த இவ்விடம் இப்போதும் "நந்தவனம்" என அழைக்கப்படு-

கிறது. மட்டக்களப்பு வாவிக்கும் குருக்கள் மடம் கிராமத்திற்கும் இடைப்பட்ட இப்பகுதியில் பல நன்னீர் சுனைகள் தொடர்ச்சியாக காணப்படுகின்றன. மிக வரட்சியான காலங்களில் கூட நீர் பொங்கி எழும் இப்பகுதியிலேயே பூந்தோப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. சுமார் 4 அடிக்குள் நிலத்தினடியில் இங்கு நீரைக் காணலாம். இன்னும் இப்பகுதியில் வாழை, கமுகு, கரும்பு, தென்னை போன்ற மரங்கள் செழிப்புடன் வளர்ந்து சோலைகளாக காட்சி தருகின்றன. கண்டி மன்னர்களின் தொடர்புகளும் இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ளது. பௌத்தத்துடன் சைவத்தையும் வளர்த்து வந்த இம்மன்னர்களால் செல்லக்கதிர்காமம் முருகன் ஆலயம் புனரமைக்கப்பட்டபோது இங்கும் சந்திரவட்டக்கல் போன்ற பௌத்த கலை மரபுகள் சேர்க்கப்பட்டன.

**செட்டிபாளையம் சித்திவிநாயகர் கோயில்**

குருக்கள் மடம் கோயிலிலிருந்து வரும் பாதயாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிப்பது அங்கிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள செட்டிபாளையம் எனும் கிராமத்திலுள்ள சித்திவிநாயகர் கோயிலையே. சித்திவிநாயகர் ஆலயம், பிரதான வீதியின் மேற்கில் கிராமத்தின் வட எல்லையில் அமைந்துள்ளது. செட்டிமார்கள் பாளையமிட்டு தங்கிய இடமாகையால் செட்டிபாளையம் என்ற பெயர் இவ்வூருக்கு வரக்காரணமாயிருந்தது. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் இவ்வூரில் செட்டியார் மடு, செட்டிச்சி வளவு போன்ற பழைய பெயர்கள் உள்ள இடங்கள் இன்றும் உள்ளன.

இக்கிராமத்தின் வடக்கில் சித்தி விநாயகர் கோயிலும், தெற்கில் முருகனாலயமும், மேற்கில் கண்ணகியம்மன் ஆலயமும், கிழக்கில் சிவன் கோயிலும் அமைந்துள்ளன. இக்கிராமத்தின் மத்தியில் மட்டக்களப்பு வாவியையும், வங்கக்கடலையும் இணைக்கும் வகையில் நேர்ப்பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பாதையின் அமைப்பிற்கு இங்கிருக்கும் கண்ணகியம்மன் ஆலயத்துடன் தொடர்பிருந்ததாக கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.

செட்டிப்பாளையம் சித்திவிநாயகர் ஆலயத்திற்கு சுமார் 500 வருட பாரம்பரியமுள்ளது. ஆலயத்தின் முன்பாக பிரதான வீதியின் கிழக்குப் பக்கத்தில் பழமைவாய்ந்த ஓர் வம்மி மரம் காணப்படுகிறது. இவ்வம்மி மரத்தடியில் தான் இவ்வாலயம் திறந்த-

வெளிக் கோயிலாக ஆரம்பிக்கப்பட்டது. ஆலயத்தின் தலவிருட்சம் இம்மரமே. இக்கிராமம் உருவான காலத்திற்கு முன்பிருந்தே இம்மரம் இங்கு உள்ளதாக கிராமவாசிகள் கூறுகின்றனர். இம்மரத்தடியில் இருந்த பிள்ளையாருக்கு ஆலயம் அமைத்து அதில் பிரதிஷ்டை செய்துள்ளனர்.

ஆலயத்தின் பின்பகுதி பண் எனப்படும் நீர்த்தாவரம் வளர்ந்து காணப்படும் சதுப்பு நிலமாக உள்ளது. முன்பு வாவியாக இருந்து பின்பு சதுப்பு நிலமாக இப்பகுதி மாறியுள்ளது. இவ்வாலயத்தின் பின்புறம் சுதைக்கற்துண்டுகள் பல காணப்படுகின்றன. இவை புராதன ஆலயத்தின் பகுதிகள் எனக் கூறப்படுகிறது. மேலும் சில புராதனச் சின்னங்களும் இங்கு காணப்படுகின்றன.

இவ்வாலயத்தில் நாகதம்பிரானுக்கு பரிவாரக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோயிலின் முன்பாக சிற்பங்கள் எதுவும் செதுக்கப்படாத அரைவட்டமான புராதன கல்லொன்று உள்ளது. சந்திரவட்டக்கல் போல் இது காணப்படுகிறது. ஆலயத்தின் தெற்கில் பழைய கிணறு ஒன்றும் உள்ளது. இதுவே புராதன கோயிலின் தீர்த்தக் கிணறாக இருக்கவேண்டும் என நம்பப்படுகிறது. ஆலயத்தின் வடக்கில் சதுர வடிவமான கருங்கல்லினால் கட்டப்பட்ட கிணறு ஒன்று இருந்ததாகவும், பிற்காலத்தில் ஆலயம் புனரமைக்கப்படும் போது இக்கிணறு மூடப்பட்டு விட்டதாகவும் ஆலய நிர்வாகிகள் கூறினர். அழகிய சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய பழமை வாய்ந்த முதிரை மரத்தூண்கள் நான்கு ஆலய மண்டபத்தில் காணப்படுகின்றன.

**செட்டிப்பாளையம் சிவன் கோயில்**

செட்டிபாளையம் விநாயகர் கோயிலைத் தரிசித்த யாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிப்பது இங்கிருந்து 500 மீற்றர் தூரத்தில் உள்ள பாடசாலை சந்தியின் அருகில் உள்ள செட்டிபாளையம் சிவன் கோயிலையே. சோமநாத லிங்கேஸ்வரர் என்றழைக்கப்படும் இவ்வாலயத்தின் மூலலிங்கம் 1940ம் ஆண்டளவில் இந்தியாவிலிருந்து வந்த சோமஸ்வரானந்தகிரி எனும் சுவாமி ஒருவரால் கொண்டு வரப்பட்டு இவ்விடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இவ்வாலய வளவில் வில்வமரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

### செட்டிப்பாளையம் கண்ணகி அம்மன் கோயில்

செட்டிப்பாளையம் விநாயகர் கோயிலின் தெற்குப்பக்கம் சுமார் 500 மீற்றர் தூரத்தில் கண்ணகி அம்மன் கோயில் சந்தி காணப்படுகிறது. இச்சந்தியிலிருந்து மேற்குப்பக்கமாக வாவி-க்கரைக்குச் செல்லும் வீதியில் ஒரு கி.மீ தூரத்தில் பிரசித்தி பெற்ற செட்டிபாளையம் கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. வயல் நிலங்களும், சதுப்பு நிலமும், குளமும் சூழ்ந்துள்ள ஓர் வெட்டவெளியின் மத்தியில் உயரமான மரங்கள் நிறைந்து காணப்படும் ஓர் அழகிய சோலையின் மத்தியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. **(படம் 3)**

கி.பி. 1706-1739 வரை கண்டியை ஆட்சி செய்த வீர நரேந்திரசிங்கனின் ஆட்சிக்காலத்தில் இவ்வாலயம் சிறப்புற்று விளங்கியதாகத் தெரியவருகிறது. இக்காலகட்டத்தில் எழுதப்-பட்ட கிராமிய இலக்கிய நூல் இதனை உறுதி செய்கிறது. கி.பி 1766 முதல் 1798 வரை ஒல்லாந்தர் ஆட்சியின்போது அவர்களின் பிரதிநிதியாக இருந்த அருமைக்குட்டி போடியார் என்பரால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

### மாங்காடு, தேத்தாத்தீவு கோயில்கள்



மாங்காடு மாணிக்கப் பிள்ளையார் கோயில்

செட்டிபாளையத்திலிருந்து வரும் யாத்திரீகர்கள் அடுத்ததாக மாங்காடு எனும் கிராமத்திலுள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்தையும், மாணிக்கபிள்ளையார் ஆலயத்தையும் தரிசித்துச் செல்கின்றனர். இவற்றை அடுத்து இங்கிருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ள தேத்-தாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் கோயிலை தரிசிக்கின்றனர்.

தேத்தாத்தீவு கிராமம் கி.பி. 13ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றுள்ளது. எனவே இங்கிருக்கும் ஆலயமும் இதே காலப்-பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இங்கு ஆரம்பத்தில் கண்ணகி அம்மன் வழிபாடே நிலவியதாகவும், பின்பு இவ்விடத்தில் விநாயகரை ஸ்தாபித்து கோயில் அமைத்த-தாகவும் கூறப்படுகிறது. இவ்வாலயத்தில் பழமை வாய்ந்த தொல்பொருட்சின்னங்கள் பல காணப்படுகின்றன. இவை இவ்-வாலயத்தின் தொன்மைக்கு சான்றாக விளங்குகின்றன.

தேத்தாத்தீவு பிள்ளையார் கோயிலில் மிகப் பழமைவாய்ந்த ஓர் கோமுகி காணப்படுகிறது. சிங்கத்தின் முகம் போன்ற வடிவில் கண்களும் செதுக்கப்பட்ட கரடுமுரடான வடிவமைப்புடன் இக்கோமுகி காணப்படுகிறது. பழமை வாய்ந்த பீடக்கல், சந்தன-க்கல், புராதனக் கற்தூணின் துண்டு, மேலும் இரண்டு தூண்களின் பாகங்கள், புராதன விநாயகர் விக்கிரகம் ஆகிய புராதன சின்னங்கள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன. அண்மையில் இவ்வாலயத்தில் புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற காலத்தில் அத்திவாரம் தோண்டும் போது 10 அடி ஆழத்தில் ஓர் சதுர வடிவ தூணின் பாகம் வெளிப்பட்டுள்ளது. இது 4 அடி உயரமும் ஒன்றரை அடி அகலமும் கொண்டதாகும். மேலும் கருவறையில் கீழ் ஓர் கற்தூணின் துண்டும் கிடைத்துள்ளது. இரண்டரை அடி உயரமான இத்தூணில் சிதைந்த நிலையில் சில எழுத்துக்கள் காணப்படுகின்றன. மூன்று பக்கங்-கள் செதுக்கப்பட்டும், ஒரு பக்கம் கரடுமுரடாகவும் காணப்படும் இத்தூண் ஓர் கல்வெட்டின் துண்டு என யூகிக்க கூடியதாக உள்ளது.

இவ்வாலயத்தின் மேற்குப்பகுதியில் (பின்பக்கம்) தேத்-தாத்தீவு குளம் அமைந்துள்ளது. குளத்தின் வடக்கில் பாலமுருகன் கோயிலும், **(படம் 4)** தெற்கில் ஆதி வீரபத்திரர் கோயிலும் அமை-ந்துள்ளன.

**களுதாவளைப் பிள்ளையார் கோயில்**

தேத்தாத்தீவிலிருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள சந்தியின் மேற்குப்பக்கத்தில் 500 மீற்றர் தூரத்தில் களுதாவளைப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. **(படம் 5)** இச்சந்திக்கு முன்பாக பாத யாத்திரீகர்களை வரவேற்பது களுதாவளை கல்லடி வழிப்பிள்ளையார் கோயிலாகும். மட்டக்களப்பு பிரதான வீதியில் செல்லும் அனைத்து வாகனங்களிலும் பயணிக்கும் மக்கள் இவ்வழிப் பிள்ளையாரை வணங்கி விபூதி, சந்தனம், குங்குமம் இட்டு காணிக்கை செலுத்திச் செல்கின்றனர். இவ்வழிப் பிள்ளையாரைக் கடந்தவுடன் பாதையின் வலது பக்கத்தின் களுதாவளை பிள்ளையார் ஆலயத்தின் தோரணவாயில் காணப்படுகிறது.

இத்தோரண வாயிலில் உட்புகுந்ததும் வலதுபக்கத்தில் பெரிய மருதமரங்கள் நேர்கோடு போல் பாதைக்கு சமாந்திரமாக வளர்ந்து காணப்படுகின்றன. சுமார் 500 மீற்றர் நீளத்திற்கு ஆலயத்தின் தீர்த்தக் கேணிவரை இம்மரங்கள் காணப்படுகின்றன. பாதையின் இடதுபக்கம் களுதாவளைக் குளமும், வலது பக்கம் மருதமரங்களை அடுத்து வயல் வெளிகளும் காணப்படுகின்றன. ஆலயத்தின் முன்பாகக் காணப்படும் தீர்த்தக் கேணி சுமார் 100 மீற்றர் நீளமும் 30 மீற்றர் அகலமும் கொண்டதாகும். **(படம் 6)** சுத்தமான நீர் நிறைந்து காணப்படும் இக்குளத்தில் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் நீராடி விநாயகரை வணங்கிச் செல்கின்றனர்.

கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் இடங்களில் இதுவும் ஒன்றாகும். 300 ஆண்டுகளுக்கு மேல் பழமையான இவ்வாலயம் "சுயம்பு லிங்கப் பிள்ளையார் கோயில்" என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாலயத்தில் நாகபாம்புகள் இருப்பதாகவும் தெரியவருகிறது. ஆலய வரலாற்றையும் பெருமைகளையும் எடுத்துக்கூறும் "பட்டமம்" என்ற புராதன ஏடு ஒன்றும் இவ்வாலயத்தில் உள்ளது.

சுமார் 300 வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டதாகவும், கண்டியை ஆண்ட கடைசி சிங்கள அரச வம்சத்து மன்னனான நரேந்திரசிங்கனுடன் (கி.பி 1707-1739) இக்கோயிலுக்கு தொடர்புள்ளதாக கூறப்படுகிறது. இக்கோயில் கருவறையின் மேலே ஓர் மச்சு அமைக்கப்பட்டுள்ளது. இம்மச்சு தெய்வீகத்

தன்மை கொண்ட நாகங்களின் உறைவிடமாக உள்ளதாகவும், இங்கு வரும் பக்தர்களுக்கு இவை எந்தவித தீங்கும் விளைவிப்பதில்லை எனவும் கூறப்படுகிறது.

இந்தியாவிலிருந்து கதிர்காம யாத்திரை செல்ல வந்த ஓர் பக்தர் தான் கொண்டுவந்த வேலை இவ்விடத்தில் புதைத்து விட்டு சென்றதாகவும், சில காலத்தின் பின்பு இவ்வூரிலிருந்த ஒருவருக்கு இது கனவில் தோன்றியதாகவும், பின்பு இவ்விடத்தை தோண்டிப் பார்த்த போது லிங்கம் ஒன்று யானை முகத்துடன் தென்பட்டதாகவும் அதுவே இன்றும் "சுயம்பு லிங்கப்பிள்ளையார்" எனப்பூஜிக்கப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது.

**களுதாவளை திருநீற்றுக்கேணி முருகன் கோயில்**

களுதாவளை பிள்ளையார் கோயிலிலிருந்து புறப்படும் யாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிப்பது களுவாஞ்சிக்குடியிலுள்ள விஷ்ணு கோயிலையே. இக்கோயிலுக்கு சற்று தூரம் முன்னதாக உள்ள முருகன் கோயில் வீதியூடாக 500 மீற்றர் தூரம் சென்றதும் "திருநீற்றுக்கேணி" முருகன் கோயிலைக் காணலாம். இக்-கோயிலின் முன்பக்கம் சிறிய கேணியொன்று காணப்படுகிறது. சுமார் 80 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இக்கேணியிலும், கேணியைச் சுற்றியும் வெண்மை நிறமான மாக்கற்கள் காணப்படுகின்றன. **(படம் 7)** இவை திருநீற்றுக்கற்கள் எனப்பெயர் பெற்றுள்ளன. இக்கல்லை அரைத்து திருநீறு எடுக்கின்றனர். இதன் காரணமாக இக்கோயில் "திருநீற்றுக்கேணி முருகன் கோயில்" என அழைக்கப்படுகிறது.

**களுவாஞ்சிக்குடி மஹாவிஷ்ணு கோயில்**

களுதாவளைப் பிள்ளையார் கோயிலிலிருந்து 3 கி.மீ தூரத்தில் களுவாஞ்சிக்குடி மஹாவிஷ்ணு கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயம் சுமார் 200 வருட பாரம்பரியமிக்கதாகும். இக்-காலப்பகுதியில் இந்தியாவிலிருந்து வந்த சந்நியாசி ஒருவர் தான் கொண்டு வந்த விஷ்ணு சிலையை இவ்வாலயத்தில் கொடுத்துவிட்டு சென்றதாகவும், அச்சிலையே இன்றும் ஆலய-த்தில் காணப்படுவதாகவும் ஆலய வரலாறு கூறுகிறது.

### களுவாஞ்சிக்குடி விநாயகர் கோயில்

இவ்வாலயத்தை அடுத்து யாத்திரீகர்கள் தரிசிக்கும் கோயில் களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் கோயிலாகும். இக்கோயிலும் பழமை வாய்ந்த கோயிலே. இவ்வாலயத்தில் உள்ள புராதன கோமுகி, கல்கதவு நிலையின் பாகம், மற்றும் ஆசனக்கற்கள் ஆகியவை ஆலயத்தின் பழமையைப் பறைசாற்றுகின்றன. விநாயகர் ஆலயத்தின் பின்பக்கம் உள்ள வட்டிக்குளத்தின் அக்கரையில் கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது.


களுவாஞ்சிக்குடி விநாயகர் கோயில்

### கடற்கரை வீதி விஷ்ணு கோயில்

களுவாஞ்சிக்குடி விஷ்ணு கோயிலின் முன்பக்கமாக கடலை நோக்கிச் செல்லும் கடற்கரை வீதியில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் ஓர் சிறிய விஷ்ணு கோயில் காணப்படுகிறது. இக்கோயிலில் உள்ள விஷ்ணு சிலை கடற்கரையில் ஒதுங்கிய நிலையில் கண்டெடுக்கப்பட்டதாகும். பண்டைய காலத்தில் இப்பகுதியில் இருந்த ஓர் ஆலயம் ஐரோப்பியரால் அழிக்கப்பட்டு விக்கிரகங்கள் கடலில் வீசப்பட்டிருக்கலாம் எனவும், அச்சிலைகளில் ஒன்றே கரையொதுங்கிய நிலையில் எடுக்கப்பட்டு இவ்வாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் கூறுகின்றனர்.

### களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் கோயில்

களுவாஞ்சிக்குடி பிள்ளையார் கோயிலை அடுத்து 300 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியின் மேற்குப்பக்கத்தில் அமைந்திருக்கும் வீரபத்திரர் கோயிலை யாத்திரீகர்கள் தரிசித்து செல்கின்றனர். **(படம் 8)** களுவாஞ்சிக்குடியில் உள்ள ஆலயங்களில் இவ்வாலயமே பழமை வாய்ந்ததாகும். களுவாஞ்சிக்குடி எனும் ஊர் உருவாகிய காலத்தில் இவ்வீரபத்திரர் கோயிலும் ஸ்தாபிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. களுவாஞ்சிக்குடி எனும் ஊர் கி.பி. 364 - 398 வரை மட்டக்களப்பை ஆட்சி செய்த அமரசேனன் எனும் சிற்றரசரின் காலத்தில் இராமநாதபுரத்தியிருந்து வந்த "கலைவஞ்சி" எனும் வன்னிச்சியால் உருவாக்கம் பெற்றது எனத் தெரியவருகிறது.

களுவாஞ்சிக்குடியின் பண்டைய பெயர் "கலைவஞ்சி ஊர்" என்பதாகும். இதன்படி வீரபத்திரர் கோயில் கி.பி. 4ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறக்கூடியதாக உள்ளது. கலைவஞ்சி உட்பட ஏழு வன்னிச்சிமார் தமது கணவன்மார்களுடன் வவனியர் எனும் குலத்துக் குருக்கள் குடும்பத்தினருடன் வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ளது. களுவாஞ்சிக்குடி வீரபத்திரர் கோயிலின் சுவாமி வழிபாட்டு அகவல்பாவில் "வவுனியர் வகுத்த குருவே" எனக் கூறப்பட்டுள்ள குறிப்பை வைத்துப் பார்க்கும் பொழுது கலைவஞ்சி வன்னிச்சியுடன் வந்த வவனியர் குலக் குருக்கள்மார்களால் இவ்வாலயம் உருவாக்கப்பட்டிருக்கலாம் எனும் கூற்று வலுவாகிறது. எனவே இவ்வீரபத்திரர் கோயிலும், களுவாஞ்சிக்குடி கிராமமும் சுமார் 1600 வருடங்கள் பழமை வாய்ந்தவை என உறுதியாக கூறலாம்.

### களுவாஞ்சிக்குடி கண்ணகியம்மன் கோயில்

களுவாஞ்சிக்குடி விநாயகர் கோயிலின் பின்பக்கம் காணப்படும் வட்டிக்குளத்தின் அக்கரையில் கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. பழமை வாய்ந்த இக்கண்ணகி அம்மன் ஆலயம் சுமார் 300 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றை கொண்டதாக கூறப்படுகிறது. 300 வருடங்களுக்கு முன்பு சேரநாட்டிலிருந்து வந்த இருபெண்கள் கண்ணகி சிலைகள் வைக்கப்பட்ட பேழையுடன் படகில் மட்டக்களப்பு வாவியூடாக வந்தவேளை, தற்போது கண்ணகி அம்மன் ஆலயம் இருக்கும் இடத்தில் இருந்த மருதமரச்

சோலை அருகில் ஓய்வெடுத்து விட்டு சென்ற போது மரத்தின் கீழ் வைத்த சிலைப்பேழை இவ்விடத்திலிருந்து நகராமல் இருக்கவே இவ்விடத்திலேயே ஆலயம் அமைத்து கண்ணகி அம்மனை வழிபட்டதாக கர்ணபரம்பரையாகக் கூறப்படுகின்றது.

இப்பேழையில் இருந்த இன்னுமோர் சிலையை எருவில் பகுதியை பரிபாலித்து வந்த முக்குக வன்னிமை எடுத்துச் சென்று எருவிலில் கண்ணகியம்மனுக்கு ஆலயம் அமைத்ததாகவும் கூறப்படுகிறது. இப்பேழையில் இருந்த இன்னுமோர் கண்ணகி அம்மன் சிலையே ஆங்கிலேயர் காலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு லண்டனில் உள்ள பிரிட்டிஷ் அரும்பொருட்காட்சிச் சாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாக குறிப்புகள் கூறுகின்றன.

**எருவில் - எரக்காவில் சிவாலயம்**

களுவாஞ்சிக்குடியின் தெற்கில் சுமார் 3 கி.மீ சுற்றளவில் உள்ள பகுதியே எருவில் எனப்படும் பிரதேசமாகும். எரக்காவில் என்பது இப்பகுதியிலுள்ள ஓர் சிவத்தலமாக விளங்கியுள்ளது. இப்பகுதியிலுள்ள கிராமமொன்று பிராமணர் ஒருவரின் உடைமையாக இருந்துள்ளது என்பதும், அக்கிராமத்திலேயே இச்சிவாலயம் அமைந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

கி.பி 3ம் நூற்றாண்டிற்கு முன்பு இச்சிவாலயம் கட்டப்பட்டதாக தெரியவருகிறது. கி.பி 276 - 303 வரை அனுராதபுரியை ஆட்சி செய்த மகாசேனன் காலத்தில் கிழக்கிலங்கையில் சிறப்புடன் விளங்கியிருந்த மூன்று ஆலயங்களில் எரக்காவில் சிவாலயமும் ஒன்றாகும். இக்காலப் பகுதியில் கிழக்கிலங்கையில் உன்னத நிலையில் இருந்த இச்சிவாலயம் மகாசேனனால் இடிக்கப்பட்டதாக மகாவம்சம் போன்ற வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இதுவரை காலமும் எரக்காவில் சிவாலயம் அமைந்திருந்தது மட்டக்களப்பின் வடக்கில் அமைந்திருக்கும் ஏறாவூர் என்ற இடத்தில்தான் என கருதப்பட்டு வந்த போதும், அன்மைக்கால ஆய்வுகளின் படி எரக்காவில் என்பது எருவில் என்பதன் பாளிவடிவமாக இருக்கலாம் என பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இதன்படி கி.பி 3ம் நூற்றாண்டு மகாசேனனால் அழிக்கப்பட்ட எரக்காவில் சிவாலயம் எருவில் பகுதியில்

அமைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் இவ்வாலயம் சம்பந்தமான வேறு எதுவித தடயங்களோ, ஆலயச் சின்னங்களோ இப்பகுதியில் கிடைக்கப் பெறவில்லை. எரக்காவில் சிவாலயம் அன்று பிரசித்தி பெற்று விளங்கியுள்ளது. இச்சிவாலயத்தை அழித்த மகாசேனன் இங்கு பௌத்த விஹாரையொன்றையும் அமைத்தான் என மகாவம்சம் கூறுகிறது.

### 1800 வருடங்களுக்கு முன்பு சிவாலயம் இருந்த இடம்

எரக்காவில் சிவாலயம் எருவில் பகுதியில் எவ்விடத்தில் அமைந்திருந்தது என்பது பற்றிய குறிப்புகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் கள ஆய்வின் மூலம் இச்சிவாலயம் இருந்த இடத்தை ஓரளவு அறியக் கூடியதாக உள்ளது. எருவில் கிராமத்திலிருந்து குறுமண்வெளிக்குச் செல்லும் வீதியில் கிழக்குப் பக்கத்தில் உள்ள குறுமண்வெளிக் குளத்தின் வடக்கு எல்லையில் ஓர் மடு காணப்படுகிறது. ஓர் சிறிய குளம் போல் நீர் நிரம்பிக் காணப்படும் இம்மடுவின் முன்பக்கம் எருவில் சித்தி விநாயகர் கோயில் அமைந்துள்ளது. சுமார் 150 வருடம் பழமை மிக்க இவ்வாலயம் இருக்கும் இடத்தில் பண்டைய காலத்தில் ஓர் சிவன் கோயில் இருந்ததாக ஊர் மக்கள் கூறுகின்றனர். இவ்விடம் "சிவனார் மடு" என பண்டைய காலம் முதல் அழைக்கப்பட்டு வருகிறது. சிவன் கோயில் இருந்து அழிந்து போன இடமாகையால் சிவனார் மடு என பெயர் பெற்றுள்ளது.

எனவே இவ்விடத்திலேயே மகாசேனனால் அழிக்கப்பட்ட சிவாலயம் அமைந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. சிவாலயத்தின் தீர்த்தக் குளமாக அருகில் இருக்கும் குறுமண்வெளி குளம் விளங்கியிருக்கலாம். இதன் படி எருவில் கிராமம் சுமார் 1800 வருடங்கள் பழமை வாய்ந்ததாகும். மக்கள் குடியிருப்பு தொடர்பான ஆய்வுகளில் எருவில் கிராமத்தில் கி.மு 1ம் நூற்றாண்டில் கலிங்கர் குடியினரும், கி.பி 2ம் நூற்றாண்டில் பணிக்கர் குடியினரும் குடியமர்ந்ததாக குறிப்புகள் கூறுகின்றன. எனவே எருவில் கிராமம் 1800 வருடங்களுக்கு முற்பட்டது எனும் கூற்று இதன் மூலம் உறுதியாகிறது.

**மண்டூர், கோயில் போரதீவு, தாந்தா மலை.**

களுவாஞ்சிக்குடியின் தெற்கில் உள்ள குறுமண்வெளித் துறையின் மேற்கில் மண்டூர் அமைந்துள்ளது. இங்கு மிகப் பண்டைய முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் வேடர்களால் ஸ்தாபிக்கப்பட்டு வணங்கப்பட்டது. களுவாஞ்சிக் குடியின் மேற்கில் 4 கி.மீ தூரத்தில் கோயில் போரதீவு அமைந்துள்ளது. இங்கும் பழமை வாய்ந்த முருகனாலயம் உள்ளது. இங்கிருந்து வடமேற்கில் சுமார் 12 கி.மீ தொலைவில் தாந்தா மலை முருகன் கோயிலும், வடக்கில் 12 கி.மீ தொலைவில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமும் அமைந்துள்ளன.

பழமைவாய்ந்த இக்கோயில்களிலிருந்து யாத்திரீகர்கள் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்கின்றனர். இவர்கள் மண்டூர் முருகனாலயத்திற்கு வந்து அங்கிருந்து வீரமுனை காரைதீவு வழியாக கதிர்காமத்திற்கு செல்கிறார்கள்.

**ஓந்தாச்சி மடம்**




ஓந்தாச்சி மடம் மாரியம்மன் கோயில்

களுவாஞ்சிக்குடியைக் கடந்து செல்லும் யாத்திரீகர்கள் அடுத்தாக ஓர் அழகிய கிராமத்தை அடைகின்றனர். இக்கிராமம் ஓந்தாச்சி மடம் என அழைக்கப்படுகிறது. மட்டக்களப்பு வாவி இக்கிராமத்தை ஒட்டி இதன் கடற்கரை ஓரமாக தெற்கு நோக்கி கல்லாறு பகுதியில் கடலில் கலப்பதால் ஓந்தாச்சி மடத்தின் தென்பகுதியுடன் பெரு நிலப்பரப்பு முடிவடைகிறது. இவ்விடத்தில் வாவிக்கரை ஓரத்தில் மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. ஓந்தாச்சி மடத்தின் தென்பகுதியில் வாவி

நீரினால் நான்கு பக்கமும் துண்டிக்கப்பட்ட தீவாகக் காணப்படும் கோட்டைக் கல்லாறு என்னுமிடத்தை இணைக்கும் பாலம் காணப்படுகிறது. இப்பாலத்திலிருந்து கிழக்குப்பக்கம் உள்ள மாரியம்மன் கோயிலை இயற்கை அழகுடன் தரிசிக்கலாம். பாலத்தின் மேற்குப்பக்கம் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.

ஐந்து தள இராஜ கோபுரத்துடன் அன்மையில் புனரமைக்கப் பட்ட இவ்வாலயத்தின் புராதன சின்னமாக விளங்கும் தீர்த்தக் கிணறு ஆலய மகாமண்டபத்தின் மத்தியில் காணப்படுகிறது. ஓந்தாச்சி மடப் பாலம் 400 மீற்றர் நீளமானதாகும்.



ஓந்தாச்சி மடம் பாலம்

## கோட்டை கல்லாறு தீவு

ஓந்தாச்சி மடப் பாலத்தைக் கடந்தவுடன் யாத்திரீகர்கள் கோட்டைகல்லாறு எனும் தீவை அடைகின்றனர். இக்கோட்டைக் கல்லாறு தீவுக்கு தனிச்சிறப்பு உள்ளது. இலங்கையிலேயே நான்கு பக்கங்களும் இயற்கையாகவே நீரினால் சூழப்பட்டு முழுக்க முழுக்க மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்து காணப்படும் இரண்டு தீவுகள் மட்டுமே உள்ளன. இவை இரண்டும் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படுவது இம்மாவட்டத்திற்குரிய தனிச்சிறப்புகளில் ஒன்றாகும். இத்தீவுகள் இரண்டில் ஒன்று மட்டக்களப்பு நகரம் அமைந்துள்ள புளியந் தீவாகும். அடுத்தது கோட்டைக் கல்லாறு தீவாகும். இத்தீவு ஒன்றரை கி.மீ நீளமானதாகும். யாழ்ப்பாணத் தீவுகள், மன்னார் தீவு, தம்பட்டைத்தீவு

ஆகியவை இயற்கையாகவே நீரில் சூழப்பட்டிருந்தாலும் இத்-தீவுகளில் உள்ள நிலப்பரப்பில் அரைவாசிப்பகுதி மக்கள் குடியிருப்புக்கள் இல்லாத பிரதேசமாகும். அந்த வகையில் தீவு முழுவதும் மக்கள் குடியிருப்புகள் நிறைந்திருப்பது புளியந்-தீவிலும், கோட்டைக் கல்லாறு தீவிலுமேயாகும்.

கோட்டைக் கல்லாறு தீவுக்குள் நுழைந்து சிறிது தூரத்தில் யாத்திரீகர்கள் பாதை ஓரத்தில் பெரிய புற்றுடன் கூடிய நாக -தம்பிரான் கோயிலைத் தரிசிக்கின்றனர். இதை அடுத்து சிறிது தூரத்தில் அம்பாறைவில் பிள்ளையார் கோயிலைத் தரிசித்துச் செல்கின்றனர். இங்கிருந்து சற்று தூரத்தில் பாதையிலிருந்து உள் பக்கமாக தீவின் தென் மேற்குப் பக்கத்தில் கோட்டைக் கல்லாறு கண்ணகி அம்மன் கோயில் அமைந்துள்ளது. தீவின் தென் கிழக்கு மூலையில் கோட்டை வாசல் நாக தம்பிரான் கோயில் அமைந்துள்ளது. கோட்டைக் கல்லாறு தீவின் தென் பகுதியில் தீவை தென் பகுதி நிலப்பரப்புடன் இணைக்கும் கோட்டைக் கல்லாறு பாலம் அமைந்துள்ளது.



கோட்டைக்கல்லாறு
நாகதம்பிரான்
கோயில்

## கோட்டைக்கல்லாறு கோட்டை

நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட கோட்டைக் கல்லாறு தீவை மட்டக்களப்பை ஆண்ட சிற்றரசர்கள் கோடைவாசல் தலமாகப் பயன்படுத்தியுள்ளனர். இயற்கை வளமும், இதமான சூழலும் கொண்ட இவ்விடம் இம்மன்னர்களின் முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்கியுள்ளது.

கி.பி 16ம் நூற்றாண்டில் இத்தீவைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரும், கி.பி 17ம் நூற்றாண்டில் ஒல்லாந்தரும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் கடல் துறைக் கோட்டையை இத்தீவில் கட்டியுள்ளனர். ஒல்லாந்தர் கட்டிய கோட்டையின் சிதைவுகள் இங்கே இன்றும் காணப்படுகின்றன. கோட்டையின் அத்திவாரமும், அங்கிருந்த ஓர் கிணறும் இத்தீவில் உள்ளன. கோட்டைக்கல்லாறு தீவின் தென்கிழக்கு முனையிலேயே இக்கோட்டை அமைந்திருந்தது. இவ்விடம் இன்று கோட்டைவாசல் என்று அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் கோட்டைவாசல் நாகதம்பிரான் கோயில் அமைந்துள்ளது.

## கோட்டைக் கல்லாறு பாலம்

கோட்டைக் கல்லாறு தீவின் முடிவில் அமைக்கப்பட்டுள்ள கோட்டைக் கல்லாறு பாலம் 500 மீற்றர் நீளமானதாகும். இப்பாலத்தின் மீது நடந்து செல்லும் போது இப்பகுதியின் ரம்மியமான இயற்கை அழகை ரசித்துக்கொண்டே செல்லலாம். கிழக்குப் பக்கம் வாவியும், அதை அடுத்து வெண் மணல் கடற்கரையும், அதில் பச்சைப்பசேலென காணப்படும் சவுக்கு மரத்தோப்பும், அதை அடுத்து நீலப் பட்டு விரிப்பு போன்ற வங்கக்கடலும், அதிலிருந்து வரும் இதமான காற்றும், உடலுக்கும் மனதுக்கும் உற்சாகத்தைத் தருகின்றன. மேற்குப்பக்கம் பரந்து விரிந்த வாவியும், ஒருபக்கம் மகிலூர் எனும் ஊரும், அதன் மக்கள் குடியிருப்புக்களும், அடுத்த பக்கம் அண்ணமலை கிராமத்தின் சதுப்பு நில முனையும் அழகிய காட்சிகளாகத் தெரிகின்றன.

சவுக்கு மரத்தோப்பின் அருகில் மட்டக்களப்பு வாவி கடலுடன் சங்கமமாகும் முகத்துவாரம் அமைந்துள்ளது. 70 கி.மீ நீளமான மட்டக்களப்பு வாவி கடலில் சங்கமமாகும் இரண்டு

முகத்துவாரங்களில் ஒன்று கல்லாறு முகத்துவாரமாகும். அடுத்தது மட்டக்களப்பில் உள்ள முகத்துவாரமாகும்.



மட்டக்களப்பு வாவி – கோட்டைக்கல்லாறு

### பெரிய கல்லாறு

கோட்டைக் கல்லாறு பாலத்தை கடந்தவுடன் நாம் காண்பது பெரிய கல்லாறு எனும் கிராமமாகும். இக்கிராமத்திலுள்ள மத்திய கல்லூரிக்கருகில் முருகன் கோயில் அமைந்துள்ளது. கிராமத்தின் முடிவில் மேற்குப்பக்கம் வாவிக்கருகில் வதனமார் கோயிலும், கிழக்குப் பக்கத்தில் கடற்கரையில் காளி கோயிலும் அமைந்து-ள்ளன. பெரிய கல்லாறு கிராமத்தின் மத்தியில் சித்திவிநாயகர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் யாத்திரீகர்கள் சற்று ஓய்வெடுத்துச் செல்கின்றனர். இவ்வாலயமும் பண்டைய காலத்தில் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை சென்ற மக்களால் ஸ்தாபிக்கப்-பட்ட கோயிலாகும். கோட்டைக் கல்லாறு பாலத்திலிருந்து 600 மீற்றர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

### பெரிய கல்லாறு சித்தி விநாயகர் கோயில்

பெரிய கல்லாறு சித்தி விநாயகர் கோயில் இக்கிராமத்தில் உள்ள பெரிய ஆலயமாகும். மிகப்புராதன காலத்தில் கதிர்காம யாத்திரை செல்லும் மக்கள் தாம் கொண்டு வந்த பிள்ளையார் விக்கிரகத்தை காட்டின் மத்தியில் ஓர் மரத்தின் கீழ் வைத்து பூஜித்தனர். கால் நடையாக வந்த இம்மக்கள் இரண்டு நாட்கள் தங்கி பிள்ளையாரை வணங்கிவிட்டு மீண்டும் கதிர்காமம் செல்ல

ஆயத்தமாகி பிள்ளையாரைக் கொண்டு செல்ல முற்பட்ட போது சிலை நிலத்தை விட்டு வர மறுக்கவே அங்கேயே விட்டுச் சென்றனர்.

பின்பு இவ்விடம் புதர்கள் வளர்ந்து காடாகக் காணப்-பட்டது. கதிர்காம யாத்திரீகர்கள் வைத்து வணங்கிவிட்டுச் சென்ற பிள்ளையாரும் காடுகள், புதர்கள் மத்தியில் யார் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்து கிடந்தார்.



பெரியகல்லாறு சித்தி விநாயகர் கோயில்

கி.பி. 1650ம் ஆண்டளவில் இப்பகுதியில் குடியேறிய மக்கள் இக்காடுகளை துப்பரவாக்கும் பொழுது புராதன பிள்ளையாரைக் கண்டனர். இது தானாகவே தோன்றிய சுயம்பு லிங்கப் பிள்ளையார் என நினைத்து பச்சிலைக் கூடாரம் அமைத்து வழிபட்டனர்.

### பெரிய நீலாவணை

பெரிய கல்லாறு விநாயகர் கோயிலின் தெற்குப்பக்கத்தில் சுமார் 2 கி.மீ தூரத்தில் கிராமத்தின் எல்லை அமைந்துள்ளது. இவ்வெல்லையை அடுத்து பெரிய நீலாவணை கிராமம் காணப்படுகிறது. இவ்விடமே அம்பாறை மாவட்டத்தின் தொடக்க எல்லையாகும். அதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதயாத்திரை வந்த யாத்திரீகர்கள் இவ்விடத்தில் அம்பாறை மாவட்டத்திற்குள் நுழைகின்றனர். இங்கிருந்து ஒன்றரை கி.மீ

தூரத்தில் இருக்கும் பெரிய நீலாவணை விஷ்ணு கோயிலை யாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிக்கின்றனர்.

### பெரிய நீலாவணை விஷ்ணு கோயில்

நீலாவணை பழம்பெரும் சைவத்தமிழ்க் கிராமமாகும். இக்கிராமம் பெரிய நீலாவணை, துறை நீலாவணை என இரு பகுதிகளாக உள்ளது. பிரதான வீதியில் இரு மருங்கிலும் உள்ள பகுதி பெரிய நீலாவணை எனவும் பிரதான வீதியின் மேற்கு நோக்கி மட்டக்களப்பு வாவிக்கரையை ஒட்டிய பகுதி துறை நீலாவணை எனவும் அழைக்கப்படுகிறது.



பெரிய நீலாவணை விஷ்ணு கோயில்

கி.பி. 11ம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கிழக்கில் உருவான கிராமங்களில் ஒன்றே நீலா-வணையாகும். கி.பி 1025ம் ஆண்டு சோழர் இலங்கையையும், தென்னிந்தியாவையும் ஆட்சி செய்து வந்த காலத்தில் கஜனி முகம்மது வடஇந்தியாவிலிருந்து படையெடுத்து வந்து ஏராளமான செல்வங்களைக் கொள்ளையடித்துச் சென்றான். இந்தியா மீது மீண்டும் மீண்டும் இவனது படையெடுப்புக்கள் நிகழ்ந்த போது ஏராளமான இந்தியர்கள் அகதிகளாயினர். இவர்களில் சிலர் படகுகள் மூலம் இலங்கையின் தென் கிழக்குக் கரைக்கு வந்து சேர்ந்து கண்டு முனையில் இறங்கினர். இக்கண்டு முனையே இன்றைய கல்முனை ஆகும்.

அப்போதிருந்த சோழரின் கிழக்குப் பிரதிநிதியான கதிர்சுதன் எனும் சிற்றரசன் அம்மக்களை இப்பகுதியில் குடியேற்றினான் என வரலாறு கூறுகிறது. இக்காலப்பகுதியில் உருவானதே நீலாவணைக் கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது.

### 600 ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலயம்

பெரிய நீலாவணையில் புராதன விஷ்ணு ஆலயம் உள்ளது. சுமார் 600 ஆண்டுகள் தொன்மை வாய்ந்த இவ்வாலயம் கி.பி. 1414ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. கி.பி 1414ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கை வந்து கிழக்கிலங்கையின் துறைமுகமான “கந்தபாணந்துறை” எனும் திருக்கோயிலில் இறங்கிய தாதன், கவுத்தன் எனும் இரு முனிவர்களே இவ்வாலயத்திற்கு வித்திட்டவர்கள் ஆவர். தாதன் முனிவர் திரௌபதி, விஷ்ணு, பஞ்சபாண்டவர்கள் ஆகியோரின் விக்கிரகங்கள் அடங்கிய பேழையுடனும், கவுத்தன் முனிவர் மகாவிஷ்ணு, பேச்சியம்மன் ஆகிய விக்கிரகங்கள் அடங்கிய பேழையுடன் இப்பகுதிக்கு வந்து, தாதன் “பாண்டூர்” என்றழைக்கப்பட்ட பாண்டிருப்பிலும், கவுத்தன் நீலாவணை என்றழைக்கப்பட்ட பெரிய நீலாவணையிலும் தங்கினர்.

கவுத்தன் முனிவர் தான் கொண்டு வந்த மகாவிஷ்ணு, பேச்சியம்மன் விக்கிரகங்களை ஓர் மரத்தின் கீழ் பிரதிஷ்டை செய்து பூஜைகள் செய்து வந்தார். இதைக்கண்ணுற்ற இவ்வூர் மக்களும் விஷ்ணுவைப் பூஜித்ததோடு கொத்துப் பந்தலிட்டு இங்கோர் சிறிய ஆலயம் அமைக்க கவுத்தன் முனிவருக்கு உதவியாக இருந்தனர். பின்பு கவுத்தன் முனிவராலும், கிராம மக்களாலும், பராமரிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் சில காலங்களின் பின் கவுத்தன் இறந்து போகவே பராமரிப்பின்றிக் கிடந்தது. காலப்போக்கில் இச்சிறிய ஆலயம் சிதைந்து போய் விக்கிரகங்களும் மண்ணில் புதையுண்டு விட்டன.

### மீண்டும் புத்துயிர் பெற்ற ஆலயம்

சில காலத்தின் பின் இந்தியாவிலிருந்து இப்பகுதிக்கு வந்த காசிப்பிராமணர் எனும் பக்தர் சிதைந்து போயிருந்த இவ்வாலயத்தை கண்டதுடன், மண்ணுள் புதையுண்டு கிடந்த விக்கிரகங்களையும் கண்டெடுத்தார். இதே இடத்தில் மீண்டும் ஓர் ஆலயத்தை கட்டியெழுப்பி அங்கு தான் கண்டெடுத்த விக்கி-

ரகங்களை பிரதிஷ்டை செய்து நன்கு பராமரித்து வந்தார். இக்கிராம மக்களும் மீண்டும் கட்டப்பட்ட இவ்வாலய பராமரி-ப்புக்கு பேருதவியாக இருந்தனர். அன்மையில் 1990ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது இவ்வாலயம் பாதிப்பிற்குள்ளாகி தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகிறது.

பெரிய நீலாவணை கிராமத்தின் தெற்கில் 2 கி.மீ தொலைவில் பாண்டிருப்பு கிராமம் அமைந்துள்ளது. பெரிய நீலாவணை மகாவிஷ்ணு ஆலயத்தின் ஆரம்ப கர்த்தாவான கவுத்தன் முனிவருடன் வந்த தாதன் முனிவரால் ஆரம்பிக்கப்பட்ட திரௌ-பதி அம்மன் பஞ்சபாண்டவர் ஆலயம் இங்கு அமைக்கப்பட்டு-ள்ளது. அன்று இப்பகுதியை ஆட்சிசெய்த எதிர்மன்ன சிங்கனால் திரௌபதி அம்மன் ஆலயத்தின் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதே காலப்பகுதியில் பெரிய நீலாவணை மகாவிஷ்ணு ஆலயமும் இம்மன்னனின் போஷிப்பைப் பெற்றிருக்க வேண்டும் என கூறப்படுகிறது. மகாவிஷ்ணு ஆலயத்தின் தொன்மை பற்றி பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலய வரலாறும் உறுதிப்படுத்துகிறது.

**பாண்டிருப்பு**

பெரிய நீலாவணை விஷ்ணு கோயிலின் அருகில் உள்ள சந்தியிலிருந்து மேற்குப்பக்கமாகச் செல்லும் வீதி துறை நீலாவணை கிராமத்தை அடைகிறது. இச்சந்தியை அடுத்து சிறிது தூரத்தில் மருதமுனை எனும் இஸ்லாமிய கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தை அடுத்து பாண்டிருப்பு எனும் தமிழ் சைவக் கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள இந்து மகாவித்தியாலயத்தின் அருகில் அமைந்திருக்கும் மாணிக்கப்பிள்ளையார் கோயிலை யாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிக்கின்றனர். பெரிய நீலாவணை கோயிலிலிருந்து 2 கி.மீ தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

மாணிக்கப்பிள்ளையார் கோயிலிலிருந்து சற்று தூரத்தில் பாதையின் கிழக்குப்பக்கத்தில் திரௌபதி அம்மன் கோயில் அமைந்துள்ளது. இது கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் இடமாகும்.

## பாண்டிருப்பு மாணிக்கப்பிள்ளையார் கோயில்

பாண்டிருப்பில் பிரதான வீதியின் இடது பக்கம் இவ்வாலயம் அமைந்துள்ளது. பாண்டிருப்பு கிராமம் சுமார் ஒரு கி.மீ அகலமும் ஒன்றரை கி.மீ நீளமும் கொண்ட சிறிய கிராமமாகும். கல்முனை - மட்டக்களப்பு வீதியின் கிழக்குப்பக்கம் இக்கிராமம் அமைந்துள்ளது. வீதியின் மேற்குப்பக்கத்தில் மேட்டுவட்டைக்குளம், பெரிய குளம் ஆகியன அமைந்துள்ளன. இக்குளங்களுக்கும் பிரதான வீதிக்கும் இடைப்பட்ட ஒன்றரை கி.மீ நீளமான ஒடுங்கிய நிலப்பரப்பில் சில வீடுகளும், இரண்டு கோயில்களும், பாடசாலையும் அமைந்துள்ளன. குளங்களின் பின்பக்கம் நெற்காணிகள் காணப்படுகின்றன. கிராமத்தின் தெற்கு எல்லையில் தாளவட்டவான்குளம் எனும் சிறிய குளம் அமைந்துள்ளது. பாண்டிருப்பு கிராமத்தில் மொத்தமாக எட்டு இந்துக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1901ம் ஆண்டு குடிசன புள்ளி விபரங்களின் படி நூறு வீதம் இந்துக்களைக் கொண்ட சைவக்கிராமமாக பாண்டிருப்பு விளங்கியுள்ளது.

## 450 வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலயம்

பாண்டிருப்பு கிராமம் சுமார் 2200 வருடங்கள் பழைமை வாய்ந்தது என ஆய்வுகள் மூலம் தெரியவருகிறது. எனினும் இப் பிள்ளையார் கோயில் கி.பி. 1550ம் ஆண்டளவில் மன்னசிங்கன் எனும் கலிங்க தேசத்து சிற்றரசனால் பராமரிக்கப்பட்டு வந்ததாகவும் இம்மன்னன் ஆலயத்திற்கு காணிகளை நிவந்தமாக வழங்கியதாகவும் ஆலய வரலாறு கூறுகிறது. இதன்படி இவ்வாலயம் 450 வருடங்கள் பழைமை வாய்ந்ததாகும்.

மேலும் தாதன் கல்வெட்டில் இவ்வாலயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டைய காலம் முதல் 18 குடிவழியின் பெண் உரிமைப்படி இவ்வாலயம் பரிபாலனம் செய்யப்பட்டு வருகிறது. பாண்டிருப்பு கிராமத்தில் இன்று நாம் காணும் மூன்று பழைமை வாய்ந்த கோயில்களில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது.

**கதிர்காமம், மண்டூர் ஆகிய ஆலயங்களை ஒத்த கட்டிட அமைப்பு**

இவ்வாலயத்தின் கருவறை கதிர்காமம், மண்டூர் ஆகிய பண்டைய ஆலயங்களின் அமைப்பைப் போல கட்டப்பட்டுள்ளது. ஆலயத்தின் பின்பகுதி கதிர்காம முருகன் ஆலயத்தின் பின்பகுதியை ஒத்ததாக காணப்படுகிறது. மற்றும் இவ்வாலயத்தின் கருவறையின் மேற்பகுதியும் அதில் காணப்படும் பழமை வாய்ந்த கோபுர கலசங்களும் கதிர்காமம், மண்டூர் ஆகிய ஆலயங்களில் உள்ளது போன்றே காணப்படுகின்றன. இவ்வமைப்பானது ஆலயத்தின் தொன்மைக்கு மேலும் சான்றாக அமைகிறது.



பாண்டிருப்பு மாணிக்க பிள்ளையார் கோயில் கருவறை

**பாண்டிருப்பு சித்தி விநாயகர் அரசடி அம்பாள் கோயில்**

பாண்டிருப்பு மாணிக்கப் பிள்ளையார் கோயிலிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் அரசடி அம்பாள் கோயிலும், சித்தி விநாயகர் கோயிலும் அமைந்துள்ளன. இக்கோயில் சித்திவிநாயகர் அரசடி அம்பாள் கோயில் என அழைக்கப்படுகிறது. சுமார் 300 வருட பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் புராதன மரச்சிம்மம், கருங்கல் பலிபீடம், மூஷிகம் ஆகிய பண்டைய சின்னங்கள் காணப்படுகின்றன. கதிர்காம யாத்திரீகர்கள் அடுத்ததாக தரிசிக்கும் ஆலயமும் இதுவே. இவ்வாலயத்திலிருந்து ஒன்றரை கி.மீ தூரத்தில் கல்முனை நகரம் அமைந்துள்ளது.

*கல்முனை நகரிலுள்ள அம்பலத்தடிப் பிள்ளையார் கோயிலின் அருகிலுள்ள கதிர்காம யாத்திரீகர்கள் தொண்டர் மடத்தில் யாத்திரீகர்கள் பலர் தங்கிச் செல்கின்றனர். இங்கிருந்து ஒரு கி.மீ தூரத்தில் கல்முனை பஸ்தரிப்பு நிலையத்தின் முன்பக்கமாக அம்மன் கோயில் அமைந்துள்ளது. அதை அடுத்து சற்று தூரத்தில் கல்முனை முருகன் கோயிலும், அங்கிருந்து சுமார் ஒரு கி.மீ தூரத்தில் கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயமும் அமைந்துள்ளன.*

### பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில்

*இலங்கையில் திரௌபதி அம்மனுக்காக அமைக்கப்பட்ட ஒன்றிரண்டு கோயில்களில் பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயிலும் ஒன்றாகும். **(படம் 9)** இவ்வாலயத்தில் உள்ள பட்டயத்தின் படி வட இந்தியாவிலிருந்து வந்த தாதன், கவுத்தன் எனும் முனிவர்கள் கந்த பாணந்துறையில் இறங்கி இப்பகுதியில் அன்றிருந்த எதிர்மன்ன சிங்கன் எனும் சிற்றரசனின் உதவியுடன் இவ்வாலயத்தை கட்டியதாக வரலாறு கூறுகிறது.*

### கி.பி. 16 ம் நூற்றாண்டில் எதிர்மன்ன சிங்கனால் கட்டப்பட்ட ஆலயம்

*கி.பி. **1538-1578** காலப்பகுதியில் உன்னரசுகிரி, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளை ஆட்சி செய்த எதிர்மன்ன சிங்கனால் இவ்வாலயம் கட்டப்பட்டது. கி.பி. **1594 - 1604**ம் ஆண்டு காலப்பகுதியில் கண்டியை ஆட்சி செய்த விமலதர்ம சூரியன் இவ்வாலயத்திற்கு மானியங்கள் வழங்கியதாக தாதன் கல்வெட்டு கூறுகிறது. இவ்வாலயம் கி.பி. **1414**ல் தாதன், கவுத்தன் ஆகிய முனிவர்களால் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.*

*எதிர்மன்ன சிங்கன் (கி.பி **1538-1578**) வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு, மண்முனை, போர்முடை நாடு, கோறளை நாடு, உன்னரசுகிரி போன்ற பகுதிகளை ஆட்சி செய்து வந்தான். இக்காலப்பகுதியில் இலங்கை வந்த தாதன் எனும் துறவி திருக்கோயிலில் இருந்த சைவ மக்களுக்கு மகாபாரதக் கதையின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தான். தாதன் வந்திருப்பதையும், மகாபாரத அற்புதங்களையும் கேள்வியுற்ற எதிர்மன்ன சிங்கன் பாண்டவர் வரலாற்றை செய்து காட்டுமாறு தாதனிடம் வேண்டுகோள்*

விடுத்தான். தாதனும் கல்முனையருகில் கடற்கரையோரமாக ஓர் இடத்தை தேர்ந்தெடுத்து மரங்கள் அடர்ந்திருந்த அவ்விடத்தில் தீ வளர்த்து பாண்டவர் வேடம் தரித்து அத்தீயில் இறங்கி வெளிவந்தார். இவ்வதிசயத்தை கண்ட எதிர்மன்ன சிங்கன் அவ்விடத்திலேயே ஆலயம் ஒன்றை அமைத்து "பாண்டிறுப்பு முனை" என்று பெயரிட்டான்.

அன்று தாதனால் ஆரம்பிக்கப்பட்ட தீ மிதிப்பு வைபவம் இன்றும் "தீப்பள்ளயம்" என்ற பெயரில் இங்கு மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வாலயத்தில் உள்ள விக்கிரகங்கள் அனைத்தும் தாதனால் கொண்டு வரப்பட்டவையாகும். பஞ்ச பாண்டவர்கள் ஐவரும், திரௌபதி அம்மனும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டிருந்தாலும் சகாதேவன் விக்கிரகம் மட்டும் தற்போது இங்கு இல்லை. அச்சிலைக்கு பூஜை செய்ய இயலாது எனக்கூறி பூசகர்கள் சகாதேவன் சிலையை கடலில் போட்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

**ஜேம்ஸ் ஹாட்மனின் குறிப்பு**

இந்தியாவிலிருந்து வந்த பொற்கொல்லர் ஒருவர் பஞ்ச-பாண்டவர் சிலைகளையும், திரௌபதி அம்மன் சிலையொன்றை-யும் கொண்டு வந்து இங்கு திரௌபதி அம்மன் ஆலயத்தை அமைத்து வழிபட்டுவந்ததாக "Hinduism in Ceylon" எனும் நூலில் ஜேம்ஸ் ஹாட்மன் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் பாண்டிருப்பு பகுதியில் கம்மாளர் குடியமர்ந்ததாக ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. கம்மாளரை பொற்கொல்லர் என்றும் அழைப்பர். இவர்களில் ஒருவரே பஞ்சபாண்டவர் சிலைளையும், திரௌபதி அம்மன் சிலையையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து இங்கே ஆலயத்தை அமைத்ததாக ஜேம்ஸ் ஹாட்மன் கூறுவது உற்று நோக்கத்தக்கது.

**பாண்டிருப்பின் பழமை வாய்ந்த குடியினர்**

மேலும் பாண்டிருப்பின் பழமை வாய்ந்த குடியினராக மழுவார்கள் விளங்குகிறார்கள். இவர்கள் கி.மு. 2ம் நூற்றாண்டில் கூத்திக மன்னன் காலத்திலும், கி.பி. 11ம் நூற்றாண்டில் சோழர்

காலத்திலும் கி.பி. 13ம் நூற்றாண்டில் காலிங்க மாகோன் காலத்திலும் மட்டக்களப்புப் பகுதிக்கு வந்து பாண்டிருப்பில் குடியேறியதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதன்படி பாண்டிருப்பு சுமார் 2200 வருட பாரம்பரியமிக்க கிராமமாகும். அதே சமயம் இன்று பாண்டிருப்பில் பிரசித்தி பெற்று விளங்கும் திரௌபதி அம்மன் வழிபாடு 400 வருடங்களுக்கு முன்பே தோன்றியதாக வரலாறு கூறுகிறது.

## பாண்டிருப்பில் வீரபத்திரர் வழிபாடு

அப்படியானால் பாண்டிருப்பில் 2200 வருடங்களுக்கு முன்பு குடியமர்த்தப்பட்ட மக்கள் கைக்கொண்ட வழிபாடும், வணங்கிய தெய்வமும் எது என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கு விடை தருவது சாதித்தெய்வ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் செய்யுளே. இதில் "மழுவர்க்கு வீரபத்திரர்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பாண்டிருப்பின் பண்டைய மக்கள் வீரபத்திரருக்கு கோயில் அமைத்து வழிபட்டிருப்பர் என எண்ண இடமுண்டு. எனவே பாண்டிருப்பில் திரௌபதி அம்மன் வழிபாட்டுக்கு முன்பு வீரபத்திரர் வழிபாடு நிலவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

## கல்முனை

பாண்டிருப்பிலிருந்து தெற்கு நோக்கி வரும் யாத்திரீகர்கள் இங்கிருந்து 2 கி.மீ தூரத்தில் உள்ள கல்முனை நகரை அடைகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாக கல்முனை விளங்குகிறது. கல்முனையின் மேற்குப்பக்கத்தில் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்கள் உள்ளன. பாத யாத்திரீகர்கள் ஓய்வெடுத்துச் செல்லும் இடமாக கல்முனை விளங்குகிறது.

## 1000 வருடங்களுக்கு முன்பு தமிழர்கள் வாழ்ந்த கண்டுமுனை

கல்முனைப் பகுதியில் 1000 வருடங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் குடியமர்ந்து வாழ்ந்து வந்தமை பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. கி.பி. 998 - 1030 வரையான காலப்பகுதியில் வட இந்தியாவை கஜனி முகம்மது பல தடவைகள் படையெடுத்து பல கோயில்களில் இருந்த செல்வங்களை சூறை-

யாடியபோது வட இந்தியாவிலிருந்த இந்துக்கள் துன்புறுத்தலுக்காளானார்கள். இக்கால கட்டத்தில் வடமதுரையில் இருந்து பலர் படகுகள் மூலம் பல்வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தனர். இவர்களில் சிலர் மூன்று படகுகள் மூலம் இலங்கையின் தென்கிழக்குக் கரையில் உள்ள கண்டுமுனையில் வந்து சேர்ந்து அங்கு குடியமர்ந்ததாகவும், இவர்கள் குகவம்சத்தை சேர்ந்தவர்கள் எனவும் "மட்டக்களப்பு மான்மியம்" மற்றும் "மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி" போன்ற நூல்கள் விபரிக்கின்றன.

இக்கண்டுமுனை எனும் ஊர் படகுகள் வந்து தரித்துச் செல்லும் வகையில் ஓர் முனையும் அதை ஒட்டிய சிறிய குடாவாகவும் இருந்த படியால் இது ஓர் சிறிய படகுத்துறையாக உருவாக்கம் பெற்று வடமதுரை வர்த்தகர்களின் வணிகப்படகுகளும் போக்குவரத்து செய்யும் வண்ணம் மாற்றம் பெற்றது. கடலோரத்தில் கற்புட்டிகள் திரண்டு நிறைந்து காணப்பட்ட முனையாக இருந்தபடியால் "கண்டுமுனை" என இவ்விடம் பெயர் பெற்று விளங்கியது. காலப்போக்கில் இப்பகுதியில் ஏற்பட்ட கடலரிப்பின் காரணமாக இம்முனையும், குடாவும் கடல் நீரில் மூழ்கியதோடு, கற்புட்டிகளும், திடர்களும் அரிக்கப்பட்டு கடலில் மூழ்கி மறைந்து விட்டன. இருப்பினும் கடலின் அடியில் இப்பாறைத்திடர்கள் இன்றும் நிறைந்து காணப்படுகின்றன. பண்டைய காலம் முதல் அன்மைக்காலம் வரை இக்கரையோரத்திற்கு வரும் சிறிய கப்பல்களும், படகுகளும் இப்பாறைப்புட்டிகளுக்குள் இறுகி நகரமுடியாமல் கடலுள் மூழ்கியுள்ளன. சுமார் 20 வருடங்களுக்கு முன்பு இவ்வாறு மூழ்கிய ஓர் கப்பலின் உச்சிப்பகுதியை கரையிலிருந்து பார்க்கக்கூடியதாக இருந்தது.



படம் 9 - பாண்டிருப்பு திரௌபதி அம்மன் கோயில்



படம் 10 - கல்முனை கந்தசுவாமி கோயில் கருவறை கோபுரம்



படம் 11 - கல்முனை ஐயனார் கோயில்



படம் 12 - காரைதீவு கண்ணகி அம்மன் கோயில்



படம் 13 - காரைதீவு கந்தசுவாமி கோயில்



படம் 14 - காரைதீவு சித்தானைக் குட்டி சுவாமி சமாதி



படம் 15 - சம்மாந்துறை கோரக்கர் விநாயகர் கோயில்



படம் 16 - கோரக்கர் ஸ்தாபித்த சூலம் வரைந்த கல்

## சோழர் ஆட்சிக்காலத்தில் குடியமர்ந்த வடமதுரை மக்கள்

இந்தியாவின் வடமதுரையிலிருந்து மக்கள் தென்கிழக்கு கரையோரத்தில் குடிபெயர்ந்த காலப்பகுதியில் இலங்கையில் சோழர் ஆட்சி நிலவிவந்தது. சோழர்களின் அரசுப் பிரதிநிதியான கதிர்சுதன் உன்னரசுகிரியிலிருந்து தென்கிழக்கிலங்கைப் பகுதியை ஆட்சி செய்த காலமிது. இம்மன்னன் இந்தியாவிலிருந்து அகதிகளாக குடிபெயர்ந்த மக்களை கண்டுமுனையில் குடியமர்த்தியதாக வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரிய வருகிறது. அத்துடன் கண்டுமுனை துறைக்கும் சோழ நாட்டுக்குமிடையில் வர்த்தகத் தொடர்புகளும், போக்குவரத்தும் நடைபெற்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. இதன் மூலம் கண்டுமுனைப்பகுதியில் தமிழர்களின் குடியேற்றம் அதிகரித்ததாகவும் இங்கு சைவசமயம் சிறப்புற்று விளங்கியதாகவும் “ஈழத்தமிழர் வரலாற்றுச் சுவடுகள்” எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்லேறுமுனைத் துறையான கண்டுமுனை

தமிழும், சைவமும் செழிப்புற்று விளங்கிய இக்கண்டுமுனை காலப்போக்கில் “கல்லேறுமுனைத்துறை என அழைக்கப்பட்டு இன்று “கல்முனை” எனச்சுருக்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்த-க்கது. பண்டைய வரலாற்றுச் சிறப்பைக் கொண்ட இக்கண்டு முனையில் பல சைவக் கோயில்கள் சோழர் காலத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் இப்பகுதியை ஆட்சி செய்த சோழர் பிரதிநிதியான கதிர்சுதன் சைவ சமயத்தையும், பௌத்த சமயத்தையும் பேணிப் பாதுகாத்ததோடு பல சிவாலயங்களையும், பௌத்த ஆலயங்களையும் அமைத்ததாகவும், செப்பனிட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. எனவே இவனால் கண்டுமுனையில் சைவ மக்கள் குடியமர்த்தப்பட்ட காலத்தில் இங்கு சைவக் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என எண்ண இடமுண்டு. இவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் கிடைக்கக்கூடியதாக இல்லை. இருப்பினும் தென்கிழக்கிலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், போன்ற அந்நியர்களால் பானமை முதல் மட்டக்களப்பு வரையுள்ள இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்ட வேளை கண்டுமுனையில் இருந்த கோயில்களும் அழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**கல்முனை கந்தசுவாமி கோயில்**

கல்முனை நகரின் கிழக்குப்பக்கத்தில் அம்மன் கோயில் வீதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. **(படம் 10)** இவ்வாலயம் சுமார் 200 வருட பாரம்பரியம் மிக்கது எனக் கூறப்படுகின்ற போதிலும், இங்கு காணப்படும் விக்கிரகங்களும், தொல்பொருட் சின்னங்களும் இது சுமார் 500 வருடங்களுக்கு மேற்பட்ட பழமை வாய்ந்தது என்பதை உணர்த்துகின்றன.

**கதிர்காம பாதயாத்திரீகர்களால் உருவாக்கம் பெற்ற திறந்தவெளி வேல் கோயில்**

இங்கு கிழக்கு நோக்கியவாறு முருகன் கோயிலும், ஆலயத்தின் முன்பாக இடது பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு கண்ணகி அம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. கல்முனை நகரில் உள்ள மிகப்பழைமை வாய்ந்த கோயிலாக கந்தசுவாமி கோயில் விளங்குகிறது. மிகப்பண்டைய காலத்தில் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரீகர்கள் சிலர் இவ்விடத்தில் தங்கிய போது ஓர் வேலை வைத்து வழிபட்டு வந்ததாகவும், காலப்போக்கில் இது ஓர் திறந்தவெளி வேல் கோயிலாகவும் பின்பு இங்கிருந்த மக்களால் சிறிது சிறிதாக ஆலயமாக அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்த-தாகவும் கூறப்படுகின்றது. வருடா வருடம் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரீகர்கள் இவ்வாலயத்தை பயபக்தியுடன் பூஜித்து வந்ததாகவும் தெரிய வருகிறது.

**பண்டைய கருங்கல் விக்கிரகங்களும், சிவலிங்கமும்**

இங்கு காணப்படும் தொல்பொருட் சின்னங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று புராதன கல் விக்கிரகங்கள், அடுத்தது பண்டையச் சிலைகள், மூன்றாவது ஏனைய கருங்-கல்லினாலான கோயிலின் பாகங்கள் என்பனவாகும்.

இவற்றில் கல்லினால் ஆன புராதன நாகதம்பிரான் விக்கிரகம் முக்கியமானதாகும். வெள்ளைக்கல்லில் செதுக்கப்பட்ட கரடுமுரடான தோற்றமுடைய ஐந்து தலை நாகத்தின் சிலையாக இது காணப்படுகிறது. அடுத்ததாக வட்ட வடிவமான பீடத்துடன் காணப்படும் சிறிய சிவலிங்கமும் மிகத்தொன்மை வாய்ந்ததாகத் தென்படுகிறது. கல்லினால் கரடுமுரடாக செதுக்கப்பட்டிருக்கும்

இந்த லிங்கத்தின் ஆவுடையார் மட்டுமே தொன்மையானதாகத் தெரிகிறது. ஆவுடையாரின் மத்தியில் லிங்கம் இருக்கும் இடத்தில் அதே அளவிற்கேற்ப ஓர் கருப்பு பளிங்குக் கல்லினால் ஆன லிங்கம் பொருத்தப்பட்டுள்ளது. இந்த ஆவுடையாரும், நாகத்தம்பிரான் சிலையும் சுமார் 500 வருடங்களுக்கு மேற்பட்டவை எனக் கூறக்கூடியதாக உள்ளது.

மேலும் ஓர் பழமை வாய்ந்த கருங்கல் விநாயகர் சிலையும் இவ்வாலயத்தில் காணப்படுகிறது. நேர்த்தியற்ற முறையில் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிலையின் வடிவமே இதன் தொன்மையை பறைசாற்றுகிறது. இவ்விக்கிரகம் சுமார் 300 - 400 வருடங்களுக்கு மேல் பழமையானதாக தெரிகிறது. இதன் இடது கையில் கிளியொன்றும் உள்ளது. நீண்ட கூம்பு வடிவில் சடாமுடியும், காதுகளுக்குப்பின்னால் முடி நீளமாகத் தொங்கி தோள்கள் இரண்டையும் முட்டிய வண்ணமும் இது அமைக்கப்பட்டுள்ளது.

**கரவாகு**

கல்முனை பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 700 மீற்றர் தொலைவில் தரவை சித்திவிநாயகர் கோயில் அமைந்துள்ளது. இவ்விநாயகர் கோயிலை தரிசித்த யாத்திரீகர்கள் இங்கிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள கரவாகு என்னுமிடத்தை அடைகின்றனர். 50 வருடங்களுக்கு முன்பு பல கோயில்கள் இருந்த கரவாகு கிராமத்தில் இன்று ஒரு கோயில் கூட இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் முன்பு கதிரேசப்பிள்ளையார் கோயில், வெம்புத்தெரு சித்திவிநாயகர் கோயில், கரவாகு ஐயனார் கோயில், மருதடிப் பிள்ளையார் கோயில் ஆகிய நான்கு கோயில்கள் இருந்ததாகவும் 1960ம் ஆண்டளவில் ஏற்பட்ட கலவரத்தின் போது அவை அழிக்கப்பட்டதாகவும் இங்கு வாழும் மக்கள் கூறுகின்றனர். முன்பு கதிர்காம பாத யாத்திரை சென்ற யாத்திரீகர்கள் இவ்வாலயங்களில் தங்கிச் சென்றதாகவும் கூறுகின்றனர்.

**கரவாகு ஐயனார் கோயில்**

கல்முனை நகரிலிருந்து காரைதீவு செல்லும் நெடுஞ் சாலையில் சுமார் 2 கி.மீ தூரத்தில் இருந்த கரவாகு என்னுமிடத்தில் ஐயனார் கோயில் அமைந்திருந்தது. கிழக்கிலங்கையில் கி.பி. 2ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற கிராமங்களில் கரவாகும் ஒன்றாகும்.

### கி.பி. 15ம் நூற்றாண்டில் செட்டியார் குலத்தவர்களினால் அமைக்கப்பட்ட ஆலயம்

கி.பி. 1450-1505 காலப்பகுதியில் கரவாகு ஐயனார் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று இப்பகுதியில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்களின் உதவியுடன் தென்னிந்திய செட்டிமாரால் இவ்வாலயம் அமைக்கப்பட்டு சிறப்புடன் விளங்கியது.

அம்பாறை மாவட்டத்தின் பழந்தமிழ்க் கிராமங்களில் கரவாகும் ஒன்றாகும். தமிழும் சைவமும் செல்வாக்குப் பெற்றிருந்த ஊர் இதுவெனலாம். புராதன இராசதானியான காளி தேசம், மற்றும் காரேறு மூதூர் எனப்படும் காரைதீவு இங்கிருந்து தெற்கில் சுமார் 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இக்கிராமத்தின் வளர்ச்சிக்கு தென்னிந்தியாவிலிருந்து வந்து இப்பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த செட்டிமாரே காரணமாயிருந்தனர். இவர்களின் ஆதரவுடனே இங்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டதோடு சைவசமய வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டதாக அறியக்கூடியதாக உள்ளது. மட்டக்களப்பு வாவிக்கரையில் இருந்த நற்பிட்டிமுனை, கிட்டங்கி, சேனைக்குடியிருப்பு, சம்மாந்துறை, வீரமுனை போன்ற இடங்கள் முக்கிய வர்த்தக மையங்களாக விளங்கின. செட்டிமாரின் வர்த்தக சமய நடவடிக்கைகள் திருக்கோயில் வரை பரந்திருந்தது.

இச்செட்டிமாரால் பனங்காடு ஐயனார் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்கால கட்டத்தில் இலங்கையின் கரையோர துறைமுகங்களில் முஸ்லீம்கள் வர்த்தகம் புரிந்து வந்தனர். தமிழ் மொழி பேசும் இவர்களும் செட்டிமாருடன் சேர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் இவர்கள் சம்மாந்துறை, மருதூர், நற்பிட்டிமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ்ப்பெண்களை மணம்புரிந்து இப்பகுதியிலேயே குடியமர்ந்தனர்.

### சம்மாந்துறை வன்னிச் சிற்றரசர்களின் ஆதரவு பெற்ற ஆலயம்

இக்காலப்பகுதியில் சம்மாந்துறையில் ஆட்சி செய்து வந்த வன்னியச் சிற்றரசர்களாலும் கரவாகு ஐயனார் ஆலயம் நல்ல

முறையில் பாரிபாலிக்கப்பட்டு வந்ததோடு திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாலயத்துடன் தொடர்புடைய இடமே "சாத்தன் கேணி" யாகும். இது கரவாகு ஐயனார் ஆலயத்தின் தீர்த்தக்கேணி இருந்த இடமாகும். ஐயனாருக்கு சாத்தன் என்ற இன்னொரு பெயரும் உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இது கி.பி. 1623ல் கண்டியை ஆட்சிசெய்த சேனரதன் எனும் மன்னன் காலத்தில் இலங்கையின் மேற்குப் பகுதியில் போர்த்துக்கீசர் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. அங்கிருந்த முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். இவர்கள் கண்டி மன்னனிடம் தஞ்சம் புகுந்த வேளை இம்மன்னன் கி.பி.1626ல் சம்மாந்துறையில் ஆட்சி செய்த வன்னிச்சிற்றரசரின் உதவியுடன் கரவாகு, கல்முனை ஆகிய பிரதேசங்களில் முஸ்லீம் மக்களை குடியமர்த்தினான். இவர்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தனர்.

### நான்கு இந்துக் கோயில்கள் அமைந்திருந்த கிராமம்

இதன் பின்பும் கரவாகு கிராமத்தில் ஐயனார் ஆலயம் சிறப்புற்று விளங்கியது. ஐயனார் ஆலயத்திற்கு முன்பாக சிறிய வழிப்பிள்ளையார் ஆலயமும் தோன்றியது. இது மருதயடிப் பிள்ளையார் ஆலயம் என அழைக்கப்பட்டது. கரவாகு மக்களின் முயற்சியாலும் தென்னிந்திய செட்டிமாரின் உதவியாலும் மேலும் பல சைவ ஆலயங்கள் தோற்றம் பெற்றன. கி.பி. 1885ல் வேம்புத் தெரு சித்தி விநாயகர் கோயிலும் அதன்பின் கதிரேசப்பிள்ளையார் கோயில், விஷ்ணு கோயில் ஆகிய ஆலயங்களும் இக்கிராமத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

சுமார் 300 வருட காலம் தமிழ் மக்களுடன் முஸ்லீம் மக்களும் இணைந்து வாழ்ந்து வந்தனர். இங்கிருந்த ஆலயங்களும் சிறப்பாக பராமரிக்கப்பட்டு வந்தன. 1962ம் ஆண்டு இங்கு ஏற்பட்ட மதப்பூசல்கள் காரணமாக கலவரம் ஏற்பட்டது. இங்கிருந்த தமிழ் மக்கள் கரவாகு கிராமத்தை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இக்கிராமத்தின் பூர்வீக குடியினரான தமிழர்கள் தாம் இருந்த இடத்தை விட்டு வடக்கு நோக்கி பாண்டிருப்பு, சேனைக்குடியிருப்பு போன்ற இடங்களுக்கு சென்று குடியமர்ந்தனர்.

இம்மக்கள் தம்முடன் கரவாகு ஆலயங்களிலிருந்த விக்கிரகங்களையும் சாக்கில் கட்டி எடுத்துக்கொண்டு வந்தனர் என்றும், இதில் ஐயனார், பிள்ளையார், விஷ்ணு சிலைகளுடன் மூஷிகவாகனம், பலிபீடம் போன்றவையும் கொண்டுவரப்பட்டன என்றும் கரவாகு கிராமத்தில் வாழ்ந்து வந்த மூத்த குடிமக்களில் ஒருவரான இளையதம்பி கிருஸ்ணப்பிள்ளை (வயது 85) கூறினார். இவர் கூறிய தகவல்களின் படி ஐயனார் விக்கிரகம் கல்முனை நீதிமன்றத்தின் அருகிலும், பிள்ளையார், மூஷிகம், பலிபீடம் போன்றவை பாண்டிருப்பு கடற்கரை ஓரமாகவும், விஷ்ணு விக்கிரகம் கிட்டங்கித் துறையடியில் வாவிக்கரை ஓரத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

கரவாகு மக்கள் கிராமத்தை விட்டு வெளியேறிய பின் இவர்களது குடியிருப்புகளும் இங்கிருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டுள்ளன. பிரசித்தி பெற்ற ஐயனார் கோயில் தற்போதைய கல்முனை நகரமண்டபத்திலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள அரசடி வீதி சந்தியில் அமைக்கப்பட்டிருந்தது. விஷ்ணு கோயில் தற்போதைய சாய்ந்தமருது சாஹிரா கல்லூரி மற்றும் மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கிழக்குப் பக்கத்தில் பிரதான வீதியிலிருந்து ஒரு கி.மீ தூரம் கடற்கரைப் பக்கத்தில் இரண்டு ஏக்கர் பரப்பளவுடைய வளாகத்தில் அமைந்திருந்தது.

கதிரேசப் பிள்ளையார் கோவில் சாஹிரா கல்லூரியின் எதிரில் பிரதான வீதியின் மேற்குப்பக்கத்தில் வயல் பகுதியில் அமைந்திருந்தது. தற்போது இவ்விடத்தில் வேறு கட்டிடங்கள் காணப்படுகின்றன. முன்பு இவ்வாலயம் முக்குவ வன்னிமைகளால் பராமரிக்கப்பட்டு வந்ததாக கூறப்படுகிறது.

தற்போது முற்றாக அழிந்து போன தமிழர் குடியிருப்புகளும் ஆலயங்களும் அமைந்திருந்த கரவாகு கிராமம் சுமார் 6 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்திருந்தது. சுமார் 500 தமிழ் சைவ குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வந்ததாக கிராம வாசிகள் கூறுகின்றனர்.

1961ம் ஆண்டு அழிக்கப்பட்ட கரவாகு ஐயனார் ஆலயத்தின் தொடர்ச்சியாக கல்முனை கோட்டடி ஐயனார் கோயில் உருவானதாக தெரிய வருகிறது. கரவாகுப் பகுதியில் வாழ்ந்த சைவ மக்கள் அழிக்கப்பட்ட இவ்வாலய மூலமூர்த்தியுடன் வந்து,

கல்முனைக் கோட்டடியில் குடியமர்ந்ததோடு தாம் கொண்டு வந்த புராதன ஐயனார் சிலையை பிரதிஸ்டை செய்து கோட்டடி ஐயனார் ஆலயத்தை கட்டி வணங்கி வருகின்றனர். **(படம் 11)**

**காரைதீவு**

கரவாகிலிருந்து இரண்டரை கி.மீ தூரத்தில் காரைதீவு அமைந்துள்ளது. இதற்கிடையில் சாய்ந்தமருது எனும் முஸ்லீம் கிராமமும் அதை அடுத்து மாளிகைக்காடு என்னுமிடமும் அமைந்துள்ளன. இவ்விரு இடங்களுக்கு அடுத்ததாக காரைதீவு கிராமம் காணப்படுகிறது. இக்கிராமம் ஒரு பழந்தமிழ் சைவக் கிராமமாகும். கதிர்காம பாத யாத்திரீகர்கள் இங்குள்ள கண்ணகி அம்மன் ஆலயத்தை தரிசித்தும், இவ்வாலயத்தில் தங்கியிருந்தும் செல்கின்றனர்.

காரைதீவு கிராமத்தில் கண்ணகி அம்மன் ஆலயத்தை தவிர நந்தவனப் பிள்ளையார் கோயில், பாலையடி பிள்ளையார் கோயில், வீரபத்திரர் கோயில், கந்தசுவாமி கோயில், விஷ்ணு கோயில் உட்பட பல கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் அம்பாறைச் சந்திக்கருகில் உள்ள நந்தவனப்பிள்ளையார் ஆலயத்திலும், கந்த சுவாமிக் கோயிலிலும் கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்கின்றனர். **(படம் 13)** விபுலானந்த அடிகள் பிறந்த புனிதமான கிராமம் காரைதீவாகும். அத்துடன் சித்தானைகுட்டி சித்தரின் சமாதிக் கோயிலும் **(படம் 14)** காரைதீவு மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ளது. இங்கும் சிலர் தங்கிச் செல்வதுண்டு.

**காரைதீவு கண்ணகி அம்மன் கோயில்**

காரைதீவில் அம்பாறைக்குத் திரும்பும் சந்திக்கு சற்று முன்பாக பாதையின் கிழக்குப் பக்கத்தில் இக்கண்ணகியம்மன் கோயில் அமைந்துள்ளது. **(படம் 12).** கி.மு. 5ம் நூற்றாண்டில் விஜயன் இலங்கைக்கு வர முன்னதாக இப்பகுதி நாகர் செல்வாக்குப்பெற்று விளங்கியது. இக்காலப்பகுதியில் அயோத்தியின் இரகுவம்சத்தைச் சேர்ந்த காளிசேனன் என்பவன் படைதிரட்டி வந்து நாகர்களையும், இயக்கர்களையும் வென்று காளிதேசம் எனும் இராஜதானியை அமைத்து அரசாண்டு வந்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இக்காளிதேசம் இன்றைய காரைதீவு, மாளிகைக்காடு,

நிந்தவூர், அட்டப்பள்ளம் சிங்காரத்தோப்பு ஆகிய ஊர்களை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது. காரைதீவின் வடக்கில் ஒரு கி.மீ தூரத்தில் உள்ள "மாளிகைக்காடு" என்னுமிடத்தில் புராதன அரசமாளிகை கட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக இவ்விடம் மாளிகைக்காடு என்ற பெயர் பெற்றது.

காளிசேனனின் பின்பு இப்பகுதிக்கு நகர்வலம் வந்த கூத்திக மன்னனும் காளிதேசத்தை (கி.மு. 3இல்) தனது இராஜதானியாக வைத்திருந்தான் எனவும் இது முதல் ஒல்லாந்தர் காலம் வரை காளி-தேசத்தின் பெருமையும், பெயரும் நீடித்திருந்ததாகவும் மட்டக்-களப்பு மான்மியம் கூறுகிறது.

கி.பி. 1807ம் ஆண்டில் ஒல்லாந்தர் மட்டக்களப்பை நிர்வாகம் செய்த வேளை போர்த்துக்கேயர் பிரதிநிதி ஒருவன் காளிதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாக ஒல்லாந்தரின் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளனது.

**காரைதீவு எனும் பெயரை உருவாக்கிய கரைச்சிக்களப்பு**

இப்பகுதிக்கு காரைதீவு எனும் பெயர் வழங்கப்பட்டு வருவதற்கு இங்குள்ள கரைச்சி களப்பு காரணமாக உள்ளது. இக்-களப்பு தெற்குப் பகுதியில் காரைதீவையும், நிந்தவூரையும் பிரிக்கும் வெட்டு வாய்க்கால் அருகில் கடலுடன் இணைகிறது. வடக்குப்-பகுதி இன்றைய சாய்ந்தமருது பகுதியில் உள்ள மாவடி வீதிவரை நீண்டு சென்று கடலில் கலக்கிறது. இதன் மூலம் நான்கு பக்கங்-களும் நீரினால் சூழப்பட்டுள்ள இப்பகுதி ஓர் தீவாக உருவாகி இருந்தமையால் இது காரைதீவு என அழைக்கப்பட்டது.

வடக்கு தெற்காக சுமார் 4 கி.மீ நீளமும், கிழக்கு மேற்காக 800 மீற்றர் அகலமும் கொண்ட ஓர் ஒடுங்கிய நீண்ட நிலப்பரப்பே காரைதீவு எனும் பெயர்வரக் காரணமாக இருந்தது. இந்நிலப்பரப்பின் வடபகுதி மாளிகைக்காடு, சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களையும் தென்பகுதி காரைதீவையும் உள்ளடக்கியதாக இன்று காணப்படுகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் எழுதப்பட்ட ஓர் நூலில் மட்டக்-களப்பு வாவியின் தென் எல்லையாக காரைதீவை குறிப்-

பிட்டுள்ளதுடன் காரைதீவில் உள்ள கரைச்சி களப்பின் தேசப்படமும் குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கது.

### வெடியரசன் விஷ்ணு புத்திரன் காலத்தில் தோற்றம் பெற்ற வழிபாடு

கி.பி.2ம் நூற்றாண்டில் வெடியரசன் விஷ்ணு புத்திரன் காலத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு பரவியதாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியிலேயே கஜபாகு மன்னன் மூலம் இலங்கையின் வடபகுதியான நாகதீபத்திற்கு கண்ணகி வழிபாடு கொண்டு வரப்பட்டதாக ஐதீகம். அதே சமயம் இக்கோயிலில் இருக்கும் விக்கிரகங்கள் யாவும் கி.பி.16ம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்த தாதன் என்னும் பிரதானியால் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இவை தவிர இங்கிருக்கும் கண்ணகி சிலையின் ஆரம்ப காலம் பற்றி இன்னுமோர் வரலாறும் கூறப்படுகிறது. கதிர்காம யாத்திரைக்காக வந்த ஓர் தாயும் மகளும் தம்முடன் ஓர் கண்ணகியம்மன் சிலையையும் கொண்டு வந்ததாகவும், இவர்கள் காரைதீவில் ஒரு மரத்தின் கீழ் தம்முடைய பொருட்களை வைத்துவிட்டு தாம் கொண்டு வந்த சிலையை இவ்விடத்தில் வைத்து பூஜை செய்து வந்த வேளையில் அட்டப்பள்ளம் சிங்காரத் தோப்பிலிருந்து இப்பகுதியை ஆண்டு வந்த வன்னிய குல சிற்றரசன் இவ்வம்மனின் மகிமை கண்டு அங்கேயே கண்ணகி அம்மனுக்கு ஆலயம் அமைத்தாக ஆலய வரலாறு கூறுகிறது.

இதன்பின் இப்பகுதியை ஆண்ட கங்கன் எனும் வன்னிய சிற்றரசனின் நேர்த்திக் கடனாக இவ்வாலயத்திற்கு 101 ஏக்கர் காணியை மானியமாக கொடுத்ததாகவும் இக்காணிகள் உள்ள பகுதியே “கங்கன் வெளி” என அழைக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

### காரேறு மூதூர் எனும் காரைதீவு

சுமார் 600 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தை கொண்டுள்ள இக்கோயில் இப்பகுதி “காரேறு மூதூர்” என வழங்கப் பெற்று வந்த காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. காரேறு மூதூர் என்ற பெயரே திரிபடைந்து இன்று காரைதீவு

என அழைக்கப்படுகிறது. மிகவும் பழமை வாய்ந்த வேம்பு மரம் இவ்வாலயத்தின் தலவிருட்சமாகும்.

யாழ்ப்பாண இராச்சியம் உன்னத நிலையிலிருந்த கி.பி 1370 ஆண்டளவில் இவ்வாலயம் தோன்றியதாக ஆய்வுகள் மூலம் தெரிய வருகிறது. யாழ்ப்பாண இராச்சியத்தின் சிங்கை சேகரராச சேகரம் ஜெயவீரசிங்கம் எனும் (கி.பி. 1370 - 1417) மன்னனால் கண்ணகி வழக்குரை காவியம் இயற்றப்பட்டது. இக்காவியம் எழுதப்பட்ட ஏடு இவ்வாலயத்தில் இன்றும் உள்ளது.

**மாவடிப்பள்ளி - மாவடி முருகன் கோயில்**

காரைதீவு சந்தியிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் வீதியில் ஒன்றரை கி.மீ தூரத்தில் மாவடிப்பள்ளி என்னுமோர் இடம் அமைந்துள்ளது. இங்குள்ள மாவடிப்பள்ளி பாலத்தை அடுத்து பிரதான வீதியின் தெற்குப்பக்கம் ஆற்றின் அருகில் பண்டைய காலத்தில் ஓர் முருகன் கோயில் அமைந்திருந்ததாக கூறப்படுகிறது. கி.பி. 11ம் நூற்றாண்டளவில் இந்தியாவிலிருந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வந்த கோரக்கநாத் எனும் முனிவருடன் வந்த 5 சித்தர்களில் ஒருவர் இவ்விடத்தில் ஆற்றங்கரையில் இருந்த ஓர் மாமரத்தின் கீழ் தான் கொண்டுவந்த வேலை ஸ்தாபித்து முருகனை வணங்கிச் சென்றதாக தெரியவருகிறது. முருகனின் வேல் ஸ்தாபிக்கப்பட்ட மாமரம் இங்கு இருந்தபடியால் இவ்விடம் மாவடி என்று அழைக்கப்பட்டு பின்பு மாவடிப்பள்ளி என மருவியுள்ளது.

இவருடன் வந்த கோரக்கநாத் சித்தர் சம்மாந்துறையில் இருக்கும் கோரக்கர் கோயில் **(படம் 15)** இருக்கும் இடத்தில் தங்கி ஓர் லிங்கக் கல்லையும் சூலம் பொறித்த வட்டக் கல்லையும் **(படம் 16)** நட்டுச் சென்றுள்ளார். இச்சித்தர் லிங்கக்கல்லை ஸ்தாபித்த இடத்தில் தான் அவர் பெயரிலேயே கோரக்கர் பிள்ளையார் கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் மாவடிப்பள்ளியிலிருந்து இரண்டு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

# 6. காரை தீவு முதல் திருக்கோயில் வரை

### *நிந்தவூர்*

*காரைதீவுக் கோயில்களில் தங்கிச் செல்லும் பாத யாத்திரீகர்கள் இங்கிருந்து செல்லும் போது அடுத்ததாக காரை தீவு விஷ்ணு கோயிலையும் தரிசித்துச் செல்கின்றனர். இவ்வாலயத்தை அடுத்து காரைதீவு வெட்டுவாய்க்கால் அமைந்துள்ளது. இதை அடுத்து நிந்தவூர் எனும் இஸ்லாமிய ஊர் அமைந்துள்ளது. இவ்வூரின் மத்தியில் ஓர் சிறிய முருகன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் முன்பக்கமாகச் செல்லும் வீதியில் நிந்தவூர் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. காரை தீவு சந்தியிலிருந்து 4 கி.மீ தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.*

### *நிந்தவூர் - பிள்ளையார் கோயில்*

*நிந்தவூரில் பிரதான வீதியில் உள்ள முருகன் கோயிலின் முன்பாக கடற்கரையை நோக்கிச் செல்லும் வீதியில் சுமார் 300 மீற்றர் தொலைவில் இப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் மாரியம்மன் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது.*



நிந்தவூர் பிள்ளையார் கோயில்

### அம்பாறை மாவட்டக் கோயில்களில் அதிகளவில் தொல்பொருட் சின்னங்கள் உள்ள கோயில்

அம்பாறை மாவட்டத்தில் அதிகளவில் பழமை வாய்ந்த தொல்பொருட் சின்னங்கள் காணப்படும் ஓரிரு ஆலயங்களில் நிந்தவூர் பிள்ளையார் ஆலயம் முக்கியத்துவம் பெறுகிறது. முதலாவதாக திருக்கோயில் சுப்ரமணியர் கோயிலில் அதிகமான புராதன சின்னங்கள் உள்ளன. அடுத்ததாக அதிகளவிலான பண்டைய சின்னங்களை நிந்தவூர் பிள்ளையார் கோயிலில் காணக்கூடியதாக உள்ளது.

### கி.மு. 2ம் நூற்றாண்டில் கூத்திக மன்னன் அமைத்த கிராமம்

நிந்தவூர் மிகப் பழமை வாய்ந்த தமிழர் குடியிருப்பாகும். கி.மு 2ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த கூத்திகன் எனும் மன்னன் இப்பகுதியில் தனது கோடை வாசல் தலத்தையும், உப நகரையும் அமைத்திருந்தான்.

இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை வரவழைத்து தென்கிழக்கிலங்கையில் குடியமர்த்தினான். அவ்வாறு தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் நிந்தவூரும் ஒன்றாகும். கூத்திக மன்னனின் உப நகராக சம்மாந்துறையும், கோடை வாசல் தலமாக நிந்தவூரை அடுத்துள்ள அட்டப்பள்ளத்திலுள்ள சிங்காரபுரி என்னுமிடமும் விளங்கியுள்ளன. இக்காலப்பகுதியிலேயே முதன் முதலாக நிந்தவூரில் கோயில் கட்டப்பட்டு பூஜிக்கப்பட்டுள்ளது.

எனினும் அக்கோயில் எந்த தெய்வத்திற்காக நிந்தவூரில் எவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்தது என்பது தெரியவில்லை. இதன்படி நிந்தவூர் 2200 ஆண்டுகள் பழமை வாய்ந்த தமிழ்க் கிராமமாகும். இன்று நிந்தவூரில் நாம் காணும் பழமை வாய்ந்த பிள்ளையார் ஆலயத்திற்கு முன்னோடியாக அமைக்கப்பட்ட இந்துக் கோயில் கூத்திக மன்னனால் அமைக்கப்பட்டதாகும்.

### எல்லாளன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய நிந்தவூர் கோயில்

கி.மு 145 - 101 வரையான காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளன் மண்ணாலும், மரத்தாலும் அமைக்கப்பட்டிருந்த திருக்கோயில் முருகனாலயத்தை சிறிய கற்

கோயிலாக கட்டினான். இக்காலப்பகுதியிலும் நிந்தவூர் கோயில் சிறப்புற்று விளங்கியிருக்கும் என்பதில் ஐயமில்லை. கூத்திக மன்னனின் காலமான கி.மு 177 -155 வரையான காலப் பகுதியிலிருந்து சோழர் காலம் வரை 18 சிற்றரசர்கள் மட்டக்களப்பு எனும் சம்மாந்துறைப் பகுதியிலிருந்து தென் கிழக்கிலங்கையை ஆட்சி செய்து வந்துள்ளனர்.

இக்கால கட்டத்தில் நிந்தவூர் கோயில் மிக்க செழிப்புடன் விளங்கியதாகக் குறிப்புகள் கூறுகின்றன. நிந்தவூரின் தென் கிழக்கில் சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ள தீகவாப்பியில் எல்லாளனின் சிற்றரசர்கள் இருவர் ஆட்சி செய்ததாகவும், துட்டகாமினியின் படைகள் இவ்விருவரையும் வெற்றிகொண்டதாகவும் பாளி நூல்கள் கூறுகின்றன. இத்தமிழ் சிற்றரசர்களின் ஆட்சியின் கீழ் நிந்தவூர் பகுதியும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### கி.பி 10ம் நூற்றாண்டில் புனரமைக்கப்பட்ட ஆலயம்

மட்டக்களப்பு இராச்சியத்தை ஆட்சி செய்த 18 சிற்றரசர்களில் குணசிங்கனின் மகனான கதிர்சுதன் கி.பி. 1013ல் மட்டக்களப்பு, மண்முனை, உன்னரசுகிரி ஆகிய இராச்சியங்களில் ஆட்சி செலுத்திய காலத்தில் சிவாலயங்களையும் பௌத்த ஆலயங்களையும் புனரமைத்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. எனவே இவனது ஆட்சிக்குட்பட்ட மட்டக்களப்பு இராச்சியத்திலிருந்த நிந்தவூர் பிள்ளையார் கோயிலும் புனரமைக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பண்டைய காலம் முதல் இவ்வாலய சந்நிதியில் ஓர் அபூர்வ சம்பவம் நடந்து வந்ததாம். ஊரில் குற்றம் செய்தவர்களை விநாயகர் சந்நிதியின் முன் நிறுத்தி பிரம்படி கொடுத்து தோப்புக் கரணம் போடச் செய்வார்களாம். இவ்வழமை இன்றும் நடப்பதாக இங்கிருக்கும் முதியவர்கள் கூறுகிறார்கள்.

### சோழர் காலத்தில் கருங்கல்லினால் கட்டப்பட்ட ஆலயம்

மட்டக்களப்பு இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த மன்னர்களின் போஷிப்பை பெற்றிருந்த இவ்வாலயம் கி.பி. 11ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் அவர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் தான் இவ்வாலயம் கருங்கல்லினால் கட்டப்பட்டுள்ளது என்பதை ஆலயத்தில் காண-

ப்படும் பழமைவாய்ந்த கருங்கற் தூண்கள் உறுதி செய்கின்றன. கி.பி 13ம் நூற்றாண்டில் கிழக்கிலங்கையில் ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்ட காலிங்க மாகோன் காலத்திலும் இவ்வாலயம் செழிப்புற்று செல்வாக்குடன் விளங்கியுள்ளது. இக்கால கட்டத்தில் பிள்ளையார் ஆலயத்தின் அருகிலிருந்த பழம்பெரும் விருட்சத்தின் கீழ் மாரியம்மன் வழிபாடு, ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கி.பி 14ம் நூற்றாண்டு முதல் நிந்தவூர், அட்டப்பள்ளம் ஆகிய பகுதிகள் வன்னிய இராசப்பிரதானிகளின் ஆட்சியின் கீழ் இருந்ததாகத் தெரியவருகிறது. இக்காலப் பகுதியிலும் நிந்தவூர் ஆலயங்கள் வன்னிய அரசப் பிரதானிகளின் போஷிப்பைப் பெற்றிருந்தன. கி.பி 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் திருக்கோயில் முருகனாலயத்தை இடித்தழித்த காலத்தில் நிந்தவூர் ஆலயமும் அவர்களால் அழிக்கப்பட்டுள்ளது.

**வன்னிய அரச பிரதானிகள் கூடிய சிங்காரவத்தை**

கி.பி 1747 - 1781 காலப்பகுதியில் கண்டியை ஆட்சி செய்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் காலத்தில் மட்டக்களப்பு தமிழகத்தை ஏழு வன்னிய அரச பிரதானிகள் பரிபாலனம் செய்து வந்தனர். இவர்கள் கூடும் இடமாக சிங்காரவத்தை விளங்கியது. இது நிந்தவூரின் அருகில் உள்ளது. இக்கால கட்டத்தில் சிங்காரபுரியை இராஜதானியாகக் கொண்டு ஆட்சி புரிந்த அரசப் பிரதானியால் நிந்தவூர் பிள்ளையார் கோயில் மீண்டும் கட்டப்பட்டதாக தெரியவருகிறது.

கி.பி 1800ம் ஆண்டளவில் ஆங்கிலேயர் மட்டக்களப்புத் தமிழகத்தைக் கைப்பற்றிய காலப்பகுதியில் நிந்தவூர் பகுதியில் தமிழும், சைவமும் செழிப்புற்று காணப்பட்டன. இக்காலகட்டத்தில் நிந்தவூர் பிள்ளையார் கோயிலின் அருகில் மீண்டும் மாரியம்மன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டதாக குறிப்புகள் கூறுகின்றன. இக்காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றும் பிள்ளையார் கோயிலில் காணப்படுகிறது.

**ஆலயங்களில் சேமிக்கப்பட்ட ஏட்டுச் சுவடிகள்**

1900 ஆண்டளவில் நிந்தவூர் உட்பட அக்கரைப்பற்று பானமை ஆகிய பிரதேசங்களை சின்னத்தம்பி செட்டி வன்னியன்

பரிபாலனம் செய்து வந்ததாக தெரியவருகிறது. கி.பி 13ம் நூற்றாண்டிலிருந்து எழுதப்பட்ட இலக்கியங்கள் ஏட்டுச் சுவடிகளாய் நிந்தவூர், அட்டப்பள்ளம், மடத்தடி ஆகிய இடங்களிலிருந்த கோயில்களில் சேமித்து வைக்கப்பட்டன. இவற்றில் சிலவற்றை எடுத்த கணபதிப் பிள்ளை எனும் பெரியார் இவற்றை நூலாக வெளியிட்டார். இக்கால கட்டத்திலேயே நிந்தவூரில் முருகனாலயம் தோற்றம் பெற்றது.

கடந்த 1960ம் ஆண்டு இப்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது நிந்தவூர், அட்டப்பள்ளம் கோயில்களில் இருந்த பெறுமதி வாய்ந்த ஏட்டுச் சுவடிகள் திருடப்பட்டு காணாமல் போயின. 1975ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது நிந்தவூர் பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டது. அதன் விக்கிரகங்கள் அருகிலிருந்த கிணற்றில் போடப்பட்டன. 1983ம் ஆண்டு மாரியம்மன் கோயிலும், பிரதான வீதியினருகில் இருந்த முருகன் கோயிலும் அழிக்கப்பட்டன. இக்கலவரங்களின் போது நிந்தவூரில் இருந்த இந்துக்களில் பலர் இடம் பெயர்ந்தனர்.

**கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட புராதன விக்கிரகங்கள்**



சோழர் காலத்து புராதன பிள்ளையார் - நிந்தவூர்

கலவரத்தின் பின் பழமை வாய்ந்த பிள்ளையார் கோயிலின் கருங்கற் தூண்கள் இடிபாடுகளாய் சிதறிக் கிடந்தன. மக்கள் கிணற்றினுள் போடப்பட்டிருந்த விநாயகர் விக்கிரகத்தையும், ஏனைய சின்னங்களையும் தேடி எடுத்து கருங்கல் தூண்கள் இரண்டை நட்டு நடுவில் மேடை அமைத்து அதில் விநாயகரை வைத்து வணங்கி வந்தனர்.

1993ல் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில் ஆகியவை மீண்டும் புத்துயிர் பெற்றன. சோழர் காலத்து விநாயகர், மூஷிகம், பலிபீடம் ஆகியவற்றை பிரதிஸ்டை செய்து புதிய ஆலயம் உருவானது. மாரியம்மன் கோயிலின் அருகில் பரிவாரக் கோயில்கள் கட்டப்பட்டன. மணிக் கோபுரமும், சுற்று மதிலும் அமைக்கப்பட்டன. பிரதான வீதி அருகில் இருந்த கந்தசுவாமி கோயிலும் சிறிய கோயிலாக புத்துயிர் பெற்றது.

### ஆலயத்தில் காணப்படும் இரண்டு கல்வெட்டுக்கள்

இங்கு காணப்படும் தூண்களில் இரண்டில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. பழமை வாய்ந்த ஓர் தூணில் சில எழுத்துக்கள் சிதைந்த நிலையில் வாசிக்க முடியாதபடி காணப்படுகின்றன. அடுத்த கல்வெட்டு பிற்காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் 1890 எனப் பொறிக்கப்பட்டு ஆண்டின் அருகில் திரிசூலமும் இன்னுமோர் குறியீடும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன்படி இவ்வாலயம் 1890ல் புனரமைக்கப்பட்டுள்ளது.

### சோழர் காலக் கருங்கற் கோமுகி

இவற்றைத் தவிர மிகப்பழமை வாய்ந்த சோழர் காலத்தைச் சேர்ந்த கற்கோமுகி ஒன்றும் ஆலயத்தின் பின்புறம் காணப்படுகிறது. மேலும் ஆலயத்தின் புராதன கல் கதவு நிலையின் ஒரு பக்கத் துண்டு முன்பக்கம் காணப்படுகிறது. இதில் இரண்டு துளைகளும், தடுப்பு விழிம்பும் செதுக்கப்பட்டுள்ளன. இது சுமார் 5 அடி உயரமானதாகும். மேலும் 12 கற்தூண்களும், ஓர் புராதன பீடக்கல்லும், ஓர் வட்டமான சந்தனக் கல்லும், இரண்டு கற்துண்டுகளும் ஆங்காங்கே காணப்படுகின்றன. ஆலய மண்டபத்தில் புராதன பீடத்தின் மேல் பழமை வாய்ந்த மூஷிகமும், பலிபீடமும் காணப்படுகின்றன. கருவறையில் உயரமான கற்பீடத்தில் புராதன

பிள்ளையார் சிலை காணப்படுகிறது. இத்தனை ஏராளமான தொல்பொருட் சின்னங்கள் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் முருகனாலயத்தைத் தவிர வேறெங்கும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றை இதுவரை பாதுகாத்து வைத்திருப்பது பாராட்டத்தக்கது.

**அட்டப்பள்ளம்**

நிந்தவூர் நகரைக் கடந்த பாதயாத்திரீகர்கள் அடுத்ததாக கடக்கும் இடம் அரசடியாகும். இதை அடுத்து அட்டப்பள்ளம் எனும் கிராமம் உள்ளது. நிந்தவூர் பிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து இரண்டு கி.மீ தூரத்தில் அட்டப்பள்ளம் அமைந்துள்ளது. இங்கு பிரதான வீதியின் கிழக்குப் பக்கமாக ஒரு கி.மீ தூரத்தில் சிங்கார புரி மாரியம்மன் கோயிலும், விநாயகர் வித்தியாலயமும் இங்கிருந்து 800 மீற்றர் தூரத்தில் கடற்கரையின் அருகில் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. சிங்காரபுரி மாரியம்மன் கோயில் மிகத் தொன்மை வாய்ந்த கோயிலாகும். இவ்வாலயத்தின் வடக்கில் சிறிய வவ்வாலோடை ஆறு ஓடி கடலில் கலக்கிறது. கடற்கரை பிள்ளையார் கோயிலின் தெற்கில் ஒன்றரை கி.மீ தூரத்தில் பண்டைய "சிங்காரத் தோப்பு" அமைந்துள்ளது.

**அட்டப்பள்ளம் சிங்காரபுரி மாரியம்மன் கோயில்**

அட்டப்பள்ளம் எனும் பழந்தமிழ் கிராமத்தில் சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு ஸ்தாபிக்கப்பட்டதே சிங்காரபுரி மாரியம்மன் கோயிலாகும். வடக்கே காரைதீவையும், தெற்கே களியோடை ஆற்றையும் எல்லைகளாகக் கொண்டதே நிந்தவூர் பிரதேசமாகும். ஆதி காலத்தில் நாகர் குலத்தவர் இங்கு வாழ்ந்ததாக அறிய முடிகிறது. இவர்கள் வாழ்ந்த இடமான "நாகமேடு" என்னுமிடம் களியோடைக்கு அருகில் காணப்படுகிறது.

**கூத்திக மன்னன் காலத்து சிங்கார தோப்பு**

கி.மு 3ம் நூற்றாண்டில் இலங்கையை ஆண்ட தமிழ் மன்னன் கூத்திகன் நகர்வலம் வரும்போது பொழுதுபோக்கு வாசல் தலமாக, தென்கிழக்கின் காட்டுப்பகுதியில் ஓர் ரம்மியமான சூழலில் சிங்கார மண்டபம் ஒன்றையும், பூஞ்சோலையையும் அமைத்து அதற்கு "சிங்காரத் தோப்பு" எனப் பெயரிட்டான்.



அட்டப்பள்ளம் சிங்காரபுரி மாரியம்மன் கோயில்

இதனருகிலிருந்த காடுகளை அழித்து அபிவிருத்தி செய்து மக்களை குடியமர்த்தினான். சிங்காரத் தோப்பிற்கு மேற்கில் இருந்த மண், கல் புட்டியாக இருந்த இடத்தை வெட்டி எடுத்து மூடுவித்து அப்பரப்பில் தனது அரச மாளிகையை நிறுவினான். இவ்விடம் இன்று மல்கம்பிட்டி எனவும், சிங்காரத் தோப்பு அட்டப்பள்ளத்திலுள்ள சிங்காரவத்தை எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

### குறுநில வன்னிய மன்னர்கள் கூடும் இடம்

இத்தனை சிறப்புப் பெற்ற "சிங்காரத் தோப்பு" எனப்படும் சிங்காரப்புரியில் புராதன காலத்தில் இவ்வம்மன் ஆலயம் கட்டப்பட்டது. கூத்திக மன்னன் காலத்தில் இராஜதானி அந்தஸ்தைப் பெற்ற இச்சிங்காரபுரி பின்பு வந்த சிற்றரசர்களின் இராஜதானியாகவும் விளங்கியது. கி.பி 14ம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த ஏழு குறுநிய வன்னியர்கள் கூடும் இடமாக சிங்காரபுரி விளங்கி வந்துள்ளது. இவர்கள் ஆட்சிக் காலத்தில் இப்பகுதியில் தமிழும் சைவமும் தழைத்தோங்கி இருந்தன. இக்காலப்பகுதியில் இவ்வம்மன் கோயிலும் சிறப்புற்று விளங்கியது.

### *மடத்தடி மீனாட்சி அம்மன் கோயில்*

*அட்டப்பள்ளம் கிராமத்தை அடுத்து யாத்திரீகர்கள் நொச்சியடி ஆற்றையும், அதை அடுத்து அம்பலம் என்னுமிடத்தையும் கடக்கின்றனர். அம்பலம் சந்தியிலிருந்து கிழக்கு பக்கமாக "சிங்கார தோப்பு" பகுதிக்கு ஓர் பாதை செல்கிறது. இச்சந்தியை அடுத்து மடத்தடி என்னுமிடம் அமைந்துள்ளது. இது அட்டப்பள்ளத்திலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. இங்கிருந்து 1 கிலோமீற்றர் தூரத்தில் களியோடை ஆறும், ஆற்றின் அருகில் தென்கிழக்கு பல்கலைக்கழகமும் காணப்படுகின்றன.*

*இவ்விடத்தில் அட்டப்பள்ளத்திற்கும் திராய்க்கேணிக்கும் இடையில் பிரதான விதியின் மேற்குப்பக்கத்தில் பரந்த வயல்வெளி காணப்படுகின்றது. இவ்வயல்வெளியின் மத்தியில் பிரதான வீதியிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் ஓர் அழகிய தென்னஞ்சோலை உள்ளது. இச்சோலையின் மத்தியில் அகன்று விரிந்த ஓர் ஆலமரத்தின் கீழ் மீனாட்சியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலமரமே இக்கோயிலின் தலவிருட்சமாகும்.*

### *சிங்காரபுரி இராஜதானியின் எச்சங்கள்.*

*கிழக்கின் சரித்திர முக்கியத்தும் வாய்ந்த "சிங்காரபுரி" என அழைக்கப்பட்ட தமிழ் இராசதானியின் எச்சங்கள் இப்பகுதியில் தான் உள்ளன. இவ்வாலயத்தின் வடகிழக்கில் சுமார் 2 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள அட்டப்பள்ளம் என்னுமிடத்தில் சிங்காரபுரி மாளிகை அமைந்திருந்தது.*

*சுமார் 500 வருடங்களுக்கு முன்பு சிங்காரபுரியை இராஜதானியாகக் கொண்டு ஆட்சிசெய்து வந்த தமிழ் மன்னனான வன்னிய இராஜசிங்கன் இப்பகுதியில் பல கோயில்களை கட்டியெழுப்பியதோடு மானியங்களும் வழங்கினான். இவனால் ஸ்தாபிக்கப்பட்டதே மடத்தடி மீனாட்சியம்மன் ஆலயமாகும். வன்னிய இராஜசிங்கனின் மனைவியாகிய கோதையின் அரண்மனை இருந்த இடமே "அழகாபுரி" என அழைக்கப்பட்டது. அரசி உல்லாசமாக பவனி வந்த இடம் "கோதையார் மேடு" என அழைக்கப்படுகிறது.*



மடத்தடி மீனாட்சியம்மன் கோயில்

இப்பகுதியில் கிணறுகள், மடங்கள், சுமைதாங்கிகள் போன்றவற்றையும் மன்னன் எழுப்பியிருந்தான். இன்றும் "சுமைதாங்கியடி" எனும் இடம் இங்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது. அரசனுக்குரிய மாட்டுப்பட்டி கறவை மாடுகளும், ஆடுகளும் மேய்ந்த நிலப்பகுதி "மாட்டுப்பளை" என அழைக்கப்பட்டது. இன்றும் அவ்வாறே அழைக்கப்படுகின்றது.

மன்னனது பாசறை, படையணிகள் நிறுவப்பட்ட இடம் "செங்கண்படை" என அழைக்கப்பட்டது. தற்போது அது மருவி "செங்கட்படை" என அழைக்கப்படுகிறது. வழக்குகளை விசாரணை செய்வதற்கான நீதிமன்றம் அமைந்திருந்த இடம் தற்போது "சங்கிருந்தார் காடு" எனவும் அழைக்கப்படுகிறது.

**காளியோடையும், தட்டான்புட்டியும்**

இங்கிருந்த காளிகோயிலுக்கருகில் செல்லும் ஓடை "காளி-யோடை" என அழைக்கப்பட்டது. தற்போது அது "களியோடை" என அழைக்கப்படுகின்றது. கோயில்களுக்கான விக்கிரகங்கள், மற்றும் அரச குடும்பத்தினருக்காக ஆபரணங்களை செய்து கொடுத்த தட்டானுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பகுதி "தட்டான் புட்டி" என அழைக்கப்படுகின்றது.



களியோடை ஆறு

இங்கிருந்த பறையர் இனத்தவருக்கு வழங்கப்பட்ட பகுதி "பறையர் வெளி" என அழைக்கப்படுகிறது. இவைதவிர அரசியின் பார்வை மீளப்பெற்றமைக்காக காரைதீவில் கண்ணகியம்மன் ஆலயத்திற்கு வன்னிய இராஜசிங்கன் 135 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கினான். அப்பகுதி தற்போது "கண்ணகி வெளி", "கமை வெளி" என்றழைக்கப்பட்டு தற்போது "கங்கன் வெளி" என மருவி கண்ணகி அம்மன் ஆலயத்திற்கு சொந்தமாகவுள்ளது.

இன்னும் அட்டப்பள்ளத்தில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு சிங்காரபுரி மாரியம்ன் கோயில் என்ற பெயரே வழங்கப்படுகிறது. மீனாட்சியம்மன் ஆலயமும் அரசனால் பரிபாலிக்கப்பட்டது என்பதை அம்மன் பாடல்கள் உறுதி செய்கின்றன. இப்பாடல்கள் ஏட்டுச் சுவடிகளில் எழுதப்பட்டுள்ளன.

### களியோடை காளியம்மன் ஆலயம்

அட்டப்பள்ளத்தை அடுத்து யாத்திரீகர்கள் ஒலுவிலை அடைகின்றனர். ஒலுவில் கிராமம் அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 10 கி.மீ தூரத்தில் உள்ளது. இக்கிராமத்திலிருந்து மேற்கு நோக்கிச்

செல்லும் சிறிய பாதையூடாக சிறிது தூரம் சென்றதும் "களியோடை" கிராமத்தை அடையலாம். பண்டைய காலத்தில் இக்கிராமம் "காளியோடை" என்ற பெயரைக் கொண்டிருந்தது. கல்லோயா ஆற்றின் கிளையாறு ஒன்று இக் கிராமத்தின் ஊடாகப் பாய்ந்து ஒலுவில் கடலில் கலக்கிறது. இக்கிளையாறும் அருகிலிருந்த காளி கோயிலும் சேர்ந்ததன் காரணத்தினால் இக்கிராமம் "காளி யாடை" என்றழைக்கப்பட்டது. காலப்போக்கில் இதுவே மருவி இன்று "களியோடை" என அழைக்கப்படுகிறது. கல்ஓயா ஆற்றின் கிளை ஆறு களியோடை ஆறு என்ற பெயரில் குறுக்கறுத்துச் செல்லும் இப்பகுதியும், இதன் மேற்குப்பகுதிகளும் பண்டைய காலத்தில் பட்டிப்பளைப் பிரதேசம் என அழைக்கப்பட்டன.

கி.மு.5ம் நூற்றாண்டில் இப்பகுதியில் நிலவிய "இயக்கி அம்மன்" வழிபாடே காளியம்மன் வழிபாடாக மாறியுள்ளது. சம்மாந்துறையிலும், பெரிய போரதீவிலும் இவ்வழிபாடே நிலவி வந்ததாகத் தெரியவருகிறது. களியோடை காளிகோயில் ஸ்தாபிக்கப்பட்டதும் இதே காலப்பகுதியில் தான்.

**மாகோன் காலத்திலும், பாண்டியர் காலத்திலும் சிறப்புடன் விளங்கிய ஆலயம்**

இப்பகுதி தமிழ் சைவமக்கள் செறிந்து வாழ்ந்த பகுதியாக விளங்கியது. களியோடையின் மேற்கில் சில மைல்கள் தொலைவில் தீகவாபி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தீகவாபி பண்டைய காலத்தில் தமிழ் சைவ மக்கள் செல்வாக்கு பெற்றிருந்த பகுதியாக விளங்கியது. களியோடையிலும், தீகவாபியை அடுத்துள்ள குடுவிலிலும் உள்ள கி.மு 2ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இப்பகுதியிலுள்ள காடுகளில் பல சைவ ஆலயங்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

இக்காலப்பகுதியில் களியோடையிலும் அம்மன் வழிபாடு சிறப்புற்றிருந்தது. காலிங்க மாகன் ஆட்சியின் போது குளக்கோட்டு மன்னனால் திருப்பணி செய்யப்பட்ட திருக்கோயில், களியோடைக்கு தெற்கில் சுமார் 20 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மாகன் காலத்தில் களியோடைப் பகுதி சிறப்புப் பெற்று விளங்கியது. இதன் பின் கி.பி 1284 - 1314 வரையான பாண்டியர் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்திலும் களியோடை

காளியம்மன் கோயில் உன்னத நிலையில் இருந்ததாகத் தெரிய வருகிறது. பிற்காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் புலம் பெயர்ந்த பின் இப்பகுதி காடாக மாறியது. அப்போது இங்கிருந்த ஆலயமும் கைவிடப்பட்ட நிலையில் அழிந்து போயுள்ளது.

**பண்டைய நாகர் குடியிருப்பின் தென்பகுதியில் அமைந்திருந்த ஆலயம்**

களியோடை காளிகோயில் களியோடைப் பாலத்தின் கிழக்கில் ஆற்றின் வடகரையில் அமைந்திருந்ததாகவும், ஆலயம் இருந்த இடம் தற்போது மண்மேடாகக் காட்சி தருவதாகவும் கிராம வாசிகள் கூறுகின்றனர். இவ்வாற்றின் தென் கரையில் தற்போது ஒலுவில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் பகுதியே பண்டைய நாகர் குடியிருப்பான “நாகமேடு” எனும் இடத்தின் தென்பகுதியாகும். இப்பகுதி கி.மு 3 - 2ம் நூற்றாண்டு காலப்பகுதியில் நாகர் செல்வாக்குப் பெற்றிருந்த பிரதேசமாகும். கி.மு 5ம் நூற்றாண்டில் காளிசேனனால் ஆளப்பட்ட காளிதேசத்தின் தென்பகுதியே காளிஓடை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட புராதன வரலாற்றைக் கொண்ட களியோடை காளி கோயிலின் எந்தவித எச்சங்களும் இன்று கிடைக்கக் கூடியதாக இல்லை. இதே காலப்பகுதியில் உருவான சம்மாந்துறை காளிகோயிலையும், பெரிய போராதீவு காளிகோயிலையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

**திராய்க்கேணி, பாலமுனை**

களியோடை ஆற்றை அடுத்து ஒலுவில் கிராமம் காணப்படுகிறது. இங்கு ஒரு துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது. ஒலுவில் கிராமத்தை அடுத்து யாத்திரீகர்கள் திராய்க்கேணி எனும் கிராமத்தை அடைகின்றனர். இங்கு மூன்று கோயில்கள் அமைந்துள்ளன. அதை அடுத்து பாலமுனை எனும் கிராமம் உள்ளது. இங்கிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வீதியில் 3 கி.மீ தூரத்தில் முள்ளிக்குளம் மலை அமைந்துள்ளது. பாலமுனை கிராமத்தை நோக்கிச் செல்லும் பாதயாத்திரீகர்கள் பாதையின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள முள்ளிக்குளம் மலையைக் காணலாம்.

பாலமுனையின் மேற்குப்பக்கத்தில் இருக்கும் வயல்வெளியின் மத்தியில் அபூர்வமான இன்னுமோர் மலைக்கல் காணப்படுகின்றது. இது "தூக்கிவச்ச கல்மலை" என அழைக்கப்படுகிறது. கல்லடி வட்டை என அழைக்கப்படும் வயல் வெளியில் இம்மலைப் பாறை அமைந்துள்ளது. கிராம வாசிகள் இதை பூதம் தூக்கி வைத்த கல் எனக் கூறுகின்றனர். களி ஓடை பாலத்திலிருந்து 3 கி.மீ தூரத்தில் பாலமுனை அமைந்துள்ளது.



பாலமுனை தூக்கி வைத்த கல்மலை

### முள்ளிக்குளம் மலை சிவன் கோயில்

பாலமுனையிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் சிறிய பாதை வழியே சுமார் 3 கி.மீ தூரத்தில் முள்ளிக்குளம் மலை அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் புராதன காலத்தில் சிவாலயம் அமைந்திருந்தது.

ஜனசஞ்சாரமற்ற காட்டுப்பகுதியில் இரு சிறிய குன்றுகளுக்கு மத்தியில் உயர்ந்த குன்றாகக் காட்சியளிக்கும் முள்ளிக் குள மலையின் அடிவாரத்திலும் மலையிலும் ஆலயங்களின் இடிபாடுகள்

காணப்படுகின்றன. அருகிலிருக்கும் இரு சிறிய மலைகளிலும் கட்டிட இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இம் மலைகளின் சரிவுகளில் கற்புருவம் வெட்டப்பட்ட 37 இயற்கையான மலைக் குகைகள் உள்ளன. இயற்கையாக மலைச்சரிவில் செதுக்கப்பட்ட படிகளும், ஆங்காங்கே பல அளவுகளில் கற்றூண்களும், புராதன கட்டிடங்களுக்கு பயன்படுத்தப்பட்ட செங்கற்களும் ஆங்காங்கே குவியல்களாகவும், பரவியும் காணப்படுகின்றன.

### தமிழ்ச் சொல் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டு

பிரதான மலைக் குன்றிலிருந்து சிறிய மலைக்குன்றுக்குச் செல்லும் குறுகிய பாதையின் அருகில் கற்குகைகள் காணப்படு-கின்றன. இவற்றில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கல்-வெட்டுக்கள் காணப்படுகின்றன. இவை கி.மு. 2ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். இதில் "ஹஹபதி" எனும் தமிழ்ச் சொல் காணப்படுகிறது.

### கி.பி 13ம் நூற்றாண்டில் நாவிதர் குடியமர்த்தப்பட்ட பகுதி


இக்கல்வெட்டின் படி இப்பகுதியில் கி.மு 2ம் நூற்றாண்-டில் தமிழர்கள் வாழ்ந்துள்ளமை தெளிவாகத் தெரிகிறது. இவர்-களால் சிவ வழிபாடு ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. இதன் பின் கி.பி 13ம் நூற்றாண்டில் மாகனின் ஆட்சியின் போதும் மாகனால் நாவிதர் குடியினர் இப்பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இக்காலத்தில் இப்பகுதி தமிழ் மக்களின் செல்வாக்குப் பெற்றிருந்த பகுதியாக விளங்கியது.

இக்காலப்பகுதியில் முள்ளிக்குளம் மலையிலிருந்த சைவ ஆலயங்கள் மாகனால் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு செல்வாக்குப் பெற்று விளங்கிருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

பிற்காலத்தில் இங்கிருந்த மக்கள் கிழக்கு கரையோரத்தை நோக்கி குடிபெயர்ந்த பின்பு கைவிடப்பட்ட முள்ளிக்குளம் மலை ஆலயங்கள் கவனிப்பாரற்று அழிந்து போயுள்ளன. இன்றுவரை காடுகளால் மூடப்பட்ட இங்குள்ள சைவ ஆலய இடிபாடுகள் இப்பகுதியிலிருந்த தமிழர் நினைவுச் சின்னங்களாக உள்ளன.

## நந்திகோயில் தொடர்பான பிராமிக் கல்வெட்டு

முள்ளிக்குளம் மலைப் பகுதியில் பல கற்குகைகளில் கற்புருவம் வெட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்குகைகளில் மக்கள் வாழ்ந்துள்ளமை புலப்படுகிறது. இம் மலை மீதும் பாறையிலும் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றிடையே பல குறியீடுகளும் பொறிக்கப்பட்டுள்ளன. மலைக் குகைகளில் உள்ள கல்வெட்டொன்றில் "நதிகிரிய" எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இது "நந்திகிரி" எனப் பொருள்படுவதாக தொல்பொருளாய்வாளரான எல்லாவெல மேதானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி முள்ளிக்குளம் மலை நந்திகிரி என்ற பெயரைப் பெற்று விளங்கியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.


முள்ளிக்குளம் மலை

இம்மலையில் அல்லது மலைக் குகையில் நந்திதேவர் வழிபாடு அல்லது சிவ வழிபாடு நிலவிய ஆலயம் இருந்ததினாலேயே இம்மலை நந்திகிரி எனப் பெயர் பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எனவே இம்மலைப் பகுதியில் ஆதிதிராவிடர்கள் வாழ்ந்ததோடு கி.மு 3ம் நூற்றாண்டில் சிவ வழிபாடும் நிலவியுள்ளது எனக் கூறக்கூடியதாக உள்ளது.

## மீனோடைக்கட்டு

பாலமுனை கிராமத்தை அடுத்து யாத்திரீகர்கள் மீனோடைக்கட்டு என்னுமிடத்தை அடைகின்றனர். பாலமுனையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் மீனோடைக்கட்டு அமைந்துள்ளது. இக்கிராமத்தின் வடக்குப் பகுதியில் களியோடை ஆற்றிலிருந்து வரும் கிளை ஆறும், தெற்குப் பகுதியில் தில்லை ஆற்றிலிருந்து வரும் கிளை ஆறும் ஓடி கோனாவத்தை என்னுமிடத்தில் சங்கமமாகின்றன. இவ்விரு சிற்றாறுகளுக்கும் இடைப்பட்ட சிறிய கிராமமாக மீனோடைக்கட்டு விளங்குகிறது. பண்டைய காலத்தில் கதிர்காம பாத யாத்திரீகர்கள் இவ்விடத்தில் இருந்த விநாயகர் கோயிலில் ஓய்வெடுத்துச் செல்வர். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு வரை தமிழ் மக்கள் வாழ்ந்த இக்கிராமத்தில் பிள்ளையார் கோயிலும், மாரியம்மன் கோயிலும் அமைந்திருந்ததாகவும், 1985ம் ஆண்டளவில் ஏற்பட்ட கலவரத்தில் போது இவ்வாலயங்கள் அழிக்கப்பட்டதாகவும் 60 வருடங்களுக்கு முன்பு இங்கிருந்த மக்கள் இடம் பெயர்ந்து திராய்க்கேணி என்னுமிடத்திற்குச் சென்று குடியமர்ந்ததாகவும் கிராமவாசிகள் கூறுகின்றனர். கி.பி 1750ம் ஆண்டு காலப்பகுதியில் இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இக்கிராமத்தில் இருந்த பிள்ளையார் கோயில் நன்கு பராமரிக்கப்பட்டு உன்னத நிலையில் இருந்ததாகவும், இன்று இக்கிராமத்தில் இந்துக்கள் யாரும் இல்லை எனவும் கூறப்படுகிறது. 700 மீற்றர் நீளமான இச்சிறிய கிராமத்தின் இரு மருங்கிலும் மக்கள் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன.

## அக்கரைப்பற்று

மீனோடைக்கட்டு கிராமத்தை அடுத்து யாத்திரீகர்கள் அட்டாளைச்சேனை எனும் ஊரை அடைகின்றனர். இங்கு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைந்துள்ளது. இவ்வூரை அடுத்து அக்கரைப்பற்று நகரம் அமைந்துள்ளது. அக்கரைப் பற்று நகரின் தென் மேற்குப் பகுதியில் பல ஆலயங்கள் அமைந்துள்ளன. இவற்றின் சித்திவிநாயகர் கோயில், வீரமாகாளியம்ன் கோயில், காளி கோயில், மருதடி விநாயகர் கோயில், ஆலையடி வேம்பு முருகன் கோயில் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கதிர்காம பாத யாத்திரீகர்கள் சித்திவிநாயகர் கோயில், மருதடி விநாயகர் கோயில், முருகன் கோயில் ஆகியவற்றில் தங்கிச் செல்கின்றனர். அக்கரைப்பற்றிலிருந்து திருக்கோயிலுக்கு செல்வதற்கு பாதயாத்திரீகர்கள் தற்போது தம்பட்டை ஊடாகச் செல்லும் பாதையைப் பயன்படுத்துகின்றனர். பண்டைய காலத்தில் கோளாவில், பனங்காடு, பட்டிநகர் ஊடாக திருக்கோயிலை அடையும் பண்டைய பாதை பயன்படுத்தப்பட்டது.

**அக்கரைப்பற்று சித்தி விநாயகர் கோயில்**

அக்கரைப்பற்று நகரில் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 500 மீற்றர் தூரத்தில் அம்பாறை வீதியின் இடது பக்கத்தில் இப்பழமை வாய்ந்த விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.



அக்கரைப்பற்று சித்தி விநாயகர் கோயில்

### நான்கு பக்கங்களும் நீரினால் சூழப்பட்ட கருங்கொடித் தீவு

பண்டைய காலத்தில் அக்கரைப்பற்றுப் பிரதேசம் "கருங்கொடித்தீவு" என்று வழங்கப்பட்டுள்ளது. நான்கு பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட தீவாக இப்பகுதி விளங்கியுள்ளது. கிழக்குப்பகுதியில் வங்கக் கடலும், மேற்குப் பகுதியில் தில்லையாறு, சம்புக் களப்பு, மருத வெட்டுவான் போன்ற நீர் நிலைகளும் அமைந்திருந்தன.

கல்லோயா ஆற்றின் கிளை ஆறு ஒன்று அட்டாளைச் சேனைக்கருகில் இரண்டாகப் பிரிந்து ஒன்று அட்டாளைச் சேனையின் தெற்குப் பகுதியில் கடலில் கலந்து அக்கரைப்பற்றின் வடபகுதியை பிரிக்கும் அதே வேளை, அடுத்த கிளை ஆறு தில்லையாறு என்ற பெயரில் தெற்கு நோக்கி பாய்ந்து பனங்காடு வரை சென்று அங்கிருந்து கிழக்குப் பக்கமாகத் திரும்பி பெரிய களப்பு வாவியில் சங்கமித்து அக்கரைப்பற்றின் மேற்கு, தெற்குப் பகுதிகளையும் துண்டிக்கிறது. கிளை ஆறு வாவியில் சங்கமிக்கும் இடத்திற்கு நேர் கிழக்கில் உள்ள சின்ன முகத்துவாரம் என்னுமிடத்தில் பெரிய களப்பு வாவி கடலுடன் கலந்து அக்கரைப்பற்றின் தென் பகுதியை முற்றாகத் துண்டிக்கிறது. இதனால் நான்கு பக்கங்களிலும் நீரினால் சூழப்பட்ட இப்பிரதேசம் கருங் கொடித்தீவு என அழைக்கப்பட்டது.

இப்பிரதேசத்தைச் சுற்றியிருந்த நீர்ப்பரப்பெங்கும் "கருங்கொட்டி" எனும் ஒரு வகை நீர்த்தாவரம் பரவலாகக் காணப்பட்டதாகவும் இத்தாவரம் பூத்துக் குலுங்கி இத்தீவு முழுவதும் மிகவும் அழகாகக் காட்சியளித்த வேளை இதைக்கண்ட கலிங்க மன்னன் இத்தீவுக்கு "கருங்கொட்டித்தீவு" எனப் பெயரிட்டதாகவும் கூறப்படுகிறது. பண்டைய காலத்தில் இத்தீவில் காணப்பட்ட கருங்கொட்டிச் செடியின் கிழங்கும், காயும், பூவும் இப்பகுதி மக்களின் சுவையுணவாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. கருங்கொட்டித்தீவு என்பது மருவி "கருங்கொடித்தீவு" எனப்பட்டது.

கருங்கொட்டித் தீவின் நீர் நிலைகளைக் கடக்க அக்காலப்பகுதியில் தோணிகள் பயன்படுத்தப்பட்டன. வரட்சியான காலங்களில் கால் நடையாகவும் அவற்றைக் கடப்பதுண்டு.

### ஆங்கிலேயர் காலத்தில் அக்கரைப்பத்தூர்

கருங்கொடித்தீவு எனும் புராதன காலத்துப் பெயருடன் விளங்கிய இப்பகுதி ஆங்கிலேயர் காலத்தில் அக்கரைப்பற்று எனப் பெயர் பெற்றதாகத் தெரியவருகிறது. அப்போது களியோடை ஆற்றின் குறுக்கே பாலம் எதுவும் அமைக்கபட்டிருக்கவில்லை. மட்டக்களப்பு பகுதியிலிருந்து தெற்கு நோக்கி வரும் மக்கள் தோணி வழியாகவே களியோடை ஆற்றைக் கடந்து அக்கரைப் பற்று பகுதிக்கு வந்தனர். ஒரு தடவை ஆற்றின் இக்கரையில் நின்ற அரசப்பிரதானி அக்கரையில் எத்தனை ஊர் உள்ளது எனக் கேட்ட போது மக்கள் பத்து ஊர் எனப் பதிலளித்ததாகவும் அப்போது களியோடை ஆற்றின் தெற்கில் பத்து ஊர்கள் இருந்ததாகவும் அவை ஒலுவில், பாலமுனை, மீனோடைக்கட்டு, அட்டாளச் சேனை, கருங்கொடித் தீவு, கோளாவில், பனங்காடு, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோயில் எனும் பத்து ஊர்களெனவும் கூறப்படுகிறது.

இதனால் "அக்கரைபத்தூர்" என இப்பகுதி அழைக்கப்பட்டது. காலப்போக்கில் இப்பத்து ஊர்களுக்கும் நடுநாயகமாகவும், பட்டினமாகவும் உருப்பெற்ற கருங்கொடித்தீவிற்கே இப்பெயர் வழங்கப்பட்டு வந்து காலப்போக்கில் இதுவே மருவி அக்கரைப்பற்று எனத் திரிபடைந்துள்ளது.

### அக்கரைப் பற்று பிரதேசத்தின் அமைப்பு

அக்கரைப்பற்றின் மேற்குப்பக்கத்தின் பட்டியடிப்பிட்டி, பள்ளிக் குடியிருப்பு, இசங்கண்ணிச்சீமை, இலுக்குச்சேனை போன்ற கிராமங்களும், தெற்குப்பக்கத்தில் கோளாவில், பனங்காடு, அம்பலத்தாறு, புட்டம்பை, கண்ணகிபுரம், தேவபுரம் (அளிக்கம்பை), கவடாப்புட்டி போன்ற கிராமங்களும் அமைந்துள்ளன. அக்கறைப்பற்று வடக்குத் தெற்காக 3 மைல் நீளத்தையும், கிழக்கு மேற்காக 2 மைல் அகலத்தையும் கொண்ட 6 சதுர மைல் பரப்பளவுடைய பிரதேசமாகும்.

### அக்கரைப்பற்றின் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்று

இத்தனை சிறப்புகளையுடைய அக்கரைப்பற்றில் இவ்விநாயகர் கோயில் கி.மு 4ம் நூற்றாண்டில் மூத்த சிவன் எனும் தமிழ் மன்னன் இலங்கையை ஆட்சி செய்து வந்த காலத்தில்

இப்பகுதியை பரிபாலித்து வந்த ஸ்ரீ குலசேனன் எனும் சிற்றரசனால் ஸ்தாபிக்கப்பட்டதாக நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.மு 3ம் நூற்றாண்டில் சிங்காரபுரிக்கு வந்த கூத்திக மன்னன் இவ்வாலயத்தைத் திருத்தி கோபுரமும் அமைத்து கி.மு 262ல் குடமுழுக்கு விழாவை நடத்தியதாக குறிப்புகள் கூறுகின்றன. கி.மு. 161 - 137 காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த துட்டகைமுனுவின் காலத்தில் இங்கிருந்த சிற்றரசனால் இவ்வாலயத்திற்கு மானியங்கள் வழங்கப்பட்டு பரிபாலனம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் ஆலையடி வெளி, குருக்கள் குடா, சங்குவெளிப்பற்றை போன்ற இடங்களில் இருந்த நெற்காணிகளே மானியமாக வழங்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அதே சமயம் கி.பி 14ம் நூற்றாண்டில் கோணாவில் பகுதியில் குடியேறிய மக்கள் கருங்கொடித்தீவுப் பகுதியிலும் பரவி வாழத்தொடங்கிய காலகட்டத்தில் இவ்விநாயகர் ஆலயம் தோற்றுவிக்கப்பட்டதாகவும் சில வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. கருங்கொடித்தீவு எனும் இடம் தோற்றம் பெற்ற காலத்தை அடிப்படையாக வைத்து இவ்வாலயம் கி.மு 4ம் நூற்றாண்டு ஸ்தாபிக்கப்பட்டதா அல்லது கி.பி 14ம் நூற்றாண்டு உருவாக்கம் பெற்றதா என்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

### போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயம்

இவ்வாறு காலத்துக்குக் காலம் சிற்றரசர்களாலும், பின்பு சிங்காரபுரியை ஆட்சி செய்து வந்த வன்னியரசர்களாலும் பரிபாலிக்கப்பட்டு சீரும் சிறப்புடனும் விளங்கிய இவ்வாலயம் கி.பி 1622ல் போர்த்துக்கேய தளபதியான அசவிடோவினால் இடித்தழிக்கப்பட்டது. ஆலயத்தில் இருந்து விநாயகர் சிலையும் அருகிலிருந்த துரவுக்குள் வீசியெறியப்பட்டது.

கி.பி 1626ல் கண்டியை ஆண்ட 2ம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை வென்று மட்டக்களப்பு பிரதேசத்தை தன்னாட்சிக்குட்படுத்திய காலத்தில் இம்மன்னனின் ஆணைப்படி ஆலய சுற்றாடலில் தேடுதல் நடத்தி துரவு அகழப்பட்டு பிள்ளையார் விக்கிரகம் வெளியே எடுக்கப்பட்டது. இவ்விக்கிரகம் மரத்தால் அமைக்கப்பட்ட புதிய ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டு

வழிபடப்பட்டு வந்தது. சில காலத்தின் பின்பு சுற்றுமதில் ஐந்து மண்டபங்கள், மடாலயம் போன்றவை கட்டப்பட்டன.

**அக்கரைப்பற்று மருதயடி மாணிக்கப் பிள்ளையார் கோயில்**

பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். அக்கரைப்பற்றிலிருந்து திருக்கோயிலுக்கு செல்லும் வீதியில் இக்கோயில் அமைந்துள்ளது. கி.பி 17 நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் கதிர்காம யாத்திரைக்கு கால் நடையாக வந்த வடபகுதி பக்தர்களால் இங்கிருந்த மருத மரத்தின் கீழ் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டு வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பக்தர்களில் அனுமான் சாமி என்பவரால் சங்கமன் கண்டியில் ஓர் விளாமரத்தின் கீழ் சேற்றுக்குள் புதையுண்ட நிலையில் கண்டெடுக்கப்பட்ட பிள்ளையார் விக்கிரகமே இவ்வாலயத்தில் வைத்து பூஜிக்கப்படுகிறது.



அக்கரைப்பற்று மருதயடி விநாயகர் கோயில்

காரை தீவில் வாழ்ந்து வந்த நாச்சியாரின் பரம்பரையைச் சேர்ந்த பக்தர் ஒருவர் தனக்கு பிள்ளைப் பாக்கியம் வேண்டி தனது நேர்த்திக்கடனாக இவ்வாலயம் அமைந்திருந்த காணியை விலைக்குப் பெற்று ஆலயத்தையும் கட்டி முடித்ததாக ஆலய வரலாறு கூறுகிறது சுமார் 300 வருடம் பழமை வாய்ந்த இவ்வாலயம் 1990ல் ஏற்பட்ட கலவரத்தின் போது முற்றாக சேதமாக்கப்பட்டது.

**திருக்கோயிலுக்குச் செல்லும் பண்டைய பாதையும், நாக மலைக் குகையும்**

அக்கரைப்பற்றிலிருந்து செல்லும் கதிர்காம பாத யாத்திரீகர்களும், முனிவர்களும் பண்டைய திருக்கோயில் பாதையையே பயன்படுத்தினர். இன்று பயன்படுத்தும் தம்பட்டை, தம்பிலுவில் ஊடாகச் செல்லும் பாதையின் இடையில் இரு நீர்த் தடைகள் இருப்பதால் அப்பாதை பயன்படுத்தப்படவில்லை. அக்கரைப்பற்றிலிருந்து கோளாவில், பனங்காடு, பட்டிநகர், மொட்டைமலை ஊடாக தாலி போட்ட ஆற்றைக் கடந்து ஊரக்கை வெளி, ஆத்துக் கண்டம், முனைவெளி வழியாக பெரிய களப்பின் தென்கரை ஓரமாக வந்து வேலகாமம் குளம் வழியாக திருக்கோயில் முருகன் கோயிலை அடைந்தனர். மொட்டை மலையிலிருந்து வரும் இப்பாதை திருக்கோயில் முருகன் கோயிலடியில் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பாதை வழியில் முனைவெளியை அடுத்து பெரிய களப்பு வாவியின் தென்பக்கம் நாகமலைக்குகை அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் ஆதிதிராவிடர்கள் வாழ்ந்த தடயங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. படமெடுத்த நாகம் போன்ற வடிவில் உள்ளதால் இது நாகமலை என அழைக்கப்படுகிறது. இக்கல்மலை மண்டானை என்னுமிடத்தில் அமைந்துள்ளது.




மண்டானை நாகமலைக் குகை

### பண்டைய திருக்கோயில் பாதையிலுள்ள கோயில்கள்

இன்று சாகாமம் வீதி என்றழைக்கப்படும் பண்டைய திருக்கோயில் பாதையில் பல கோயில்கள் அமைந்துள்ளன. அக்கரைப்பற்றிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள கோளாவில் என்னுமிடத்தில் விநாயகர் கோயில், முத்துமாரியம்மன் கோயில் ஆகிய பண்டைய ஆலயங்களும், கோளாவில் கிராமத்தை அடுத்து தில்லை ஆறும், அதை அடுத்து பனங்காடு எனும் பழந்தமிழ் கிராமமும் அமைந்துள்ளன. பனங்காடு கிராமத்தில் பழமைவாய்ந்த ஐயனார், சிவன், கோயில்கள் அமைந்துள்ளன. கோளாவியிலிருந்து 2 கி.மீ தூரத்தில் பனங்காடு உள்ளது. இங்கிருந்து 3 கி.மீ தூரத்தில் கண்ணகிபுரம் முருகன் மலை சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியில் வடமேற்கில் ஒன்றரை கி.மீ தூரத்தில் முருகன் மலைக் கோயில் அமைந்துள்ளது. புராதன காலத்தில் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த முனிவர் ஒருவரால் மலையில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

முருகன் மலைச் சந்தியின் தெற்குப்பக்கத்தில் 800 மீற்றர் தூரத்தில் வயல் வெளியின் மத்தியில் “கூப்பிடுகல் மலை” என்றழைக்கப்படும் கற்பாறை காணப்படுகிறது. விறகு பொறுக்கச் சென்ற நான்கு சிறுவர்கள் மழைக்கு இப்பாறையில் ஒதுங்க பாறை-யின் கதவு மூடிவிட்டதாவும், பின்பு இக்கதவைத் திறக்க முடியாமல் போய்விட்டதாகவும் ஒரு வருடகாலம் வரை யாராவது வந்து பாறையருகில் நின்று அவர்கள் பெயரைச் சொல்லி கூப்பிட்டால் உள்ளேயிருந்த பிள்ளைகள் குரல் கேட்பதாவும் கூறப்படுகிறது.



கண்ணகிபுரம் கூப்பிடுகல்மலை

முருகன் மலை சந்தியிலிருந்து சிறிது தூரத்தில் பட்டிமேடு கண்ணகி அம்மன் கோயிலும், அதை அடுத்து கவடாப்பிட்டி புளியமரத்தடி பிள்ளையார் கோயிலும், கவடாப்பிட்டியிலிருந்து இரண்டரை கி.மீ தூரத்தில் மொட்டை மலையும் அமைந்துள்ளன. மொட்டை மலையின் கிழக்கில் 7 கி.மீ தொலைவில் திருக்கோயிலும், தெற்கில் 3 கி.மீ தூரத்தில் சாகாமம் பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன. மொட்டை மலையிலிருந்து திருக்கோயிலுக்கு செல்லும் வழியில் உள்ள ஊரக்கை வெளி என்னுமிடத்தில் பண்டைய காலத்தில் செண்பக நாச்சியம்மன் கோயில் அமைந்திருந்தது.

### கோளாவில் விநாயகர் கோயில்

பெரிய களப்பு வாவியின் வடகோடியில் கோளா-வில் அமைந்துள்ளது. அக்கரைப்பற்று பகுதியின் ஆதி குடியேற்றப் பகுதியாக கோளாவில் விளங்கியுள்ளது. தற்போதுள்ள அக்கரைப்பற்றின் தென் மேற்குப் பகுதியே மிகப் பண்டைய காலக் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகளுக்கு மத்தியில் இவ்வாலயம் அமைக்கப்பட்டிருந்தது. யாத்திரீகர்கள் இவ்வாலயத்தையும் தரிசிக்கின்றனர்.

### *கி.பி 11ம் நூற்றாண்டில் சிறைக்குடியினர் குடியமர்த்தப்பட்ட கிராமம்*

கி.மு 4ம் நூற்றாண்டில் மழுவரசன் எனும் சிற்றரசனின் கீழ் இப்பகுதிகள் ஆழப்பட்டு வந்தன. கி.மு 301ல் மட்டக்களப்பை வந்தடைந்த பரிதிகுல மகிபர்கள் எனும் குடியினர் பெரிய களப்பின் வடமுனையில் இலுப்பை மரங்கள் நிறைந்த சோலைவனமான கோளாவில் கிராமத்தில் தங்கினர். இவர்களின் பிரதானிகளில் சிலர் மழுவரசனுடன் நட்பு கொண்டு நாகர்முனை முருகன் ஆலயத்திற்கு சேவைகள் செய்வதில் ஈடுபட்டனர். இவர்களில் சிலர் தென்னிந்தியாவுக்குச் சென்று உறவினர்களையும், குருமார்களையும், சிறைக்குடிகளையும் அழைத்து வந்து கருங்கொடித்தீவில் குடியமர்த்தினர். கி.பி 11ம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் சிறைக்குடிகள் கோளாவில் குடியமர்த்தப்பட்டதாக தெரியவருகிறது.

இக்காலப்பகுதியில் நாகர் முனை கந்தனாலயம் சிறப்புற்று விளங்கிய போதிலும் தமது வழிபாட்டுத் தேவையின் நிமித்தம்

கோளாவில் கிராமத்தில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பண்டைய வரலாற்றைக் கொண்ட கோளாவில் பெரியகளப்பு, தில்லையாறு, பெரியகுளம், வண்ணன் கேணி ஆகிய நீர்ப்பரப்புகளை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

**வேடர்களால் ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்**

புராதன காலத்தில் இப்பகுதி "கோனாவில்" என்ற பெயருடன் விளங்கியது. அதுவே மருவி கோளாவில் ஆகிவிட்டது. இன்னுமோர் குறிப்பின் படி கி.பி 14ம் நூற்றாண்டில் பண்டைய நாகரீகம் நிலவியிருந்த பகுதிகளிலிருந்து புலம் பெயர்ந்த மக்கள் இப்பிதேசத்திலுள்ள தில்லை ஆற்றைக் கடந்து அங்கிருந்த காட்டுப் பிரதேசத்தை துப்புரவு செய்து குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இவர்கள் குடியேறிய பகுதியே "கோனாவில்"ஆகும்.



கோளாவில் விநாயகர் கோயில்

இப்பகுதிக்கு வந்த வேடர்கள் சிலர் இங்கிருந்த நாவல் மரத்தினடியில் இருந்த பொந்துகளில் பிராணிகளைத் தேடும் போது மரத்தை வெட்ட அதிலிருந்து இரத்தம் கசிந்ததும் ஊர் மக்களிடம் இதுபற்றிக் கூறினார்கள். மக்கள் இது தெய்வ அருள் விளையாட்டு என எண்ணி அவ்விடத்தில் ஓர் கல் பிள்ளையாரை வைத்து வழிபடத் தொடங்கினார்கள். இவ்வாறே இவ்வாலயம் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## பனங்காடு ஐயனார் கோயில்

கதிர்காம பாதயாத்திரீகர்கள் தரிசித்து செல்லும் ஆலயங்-களில் இதுவும் ஒன்றாகும். அக்கரைப்பற்று நகரின் தெற்கில் சாகாமம் செல்லும் வீதியில் 4 கி.மீ தொலைவில் பனங்காடு கிராமம் அமைந்துள்ளது. மிகப்பண்டைய வரலாற்றை கொண்ட இக்கிராமத்தின் அருகிலுள்ள பெரிய களப்பு வாவியின் மேற்குக் கரையில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

மட்டக்களப்பு தமிழகத்தில் சைவமும் தமிழும் செழிப்புடன் விளங்கியிருந்த ஊர்களில் பனங்காடும் ஒன்றாகும். இப்பழம் பெரும் கிராமத்தின் வடக்கில் தில்லையாறு எனும் வற்றாத நதியும், கிழக்கில் பெரியகளப்பு வாவியும், தெற்கில் வாவியும், நீத்தை ஆறும், மேற்கில் பட்டி நகர், கவடா ஆகிய கிராமங்களும் எல்லைகளாக அமைந்துள்ளன. இக்கிராமம் புளியம்பற்றை, சிப்பித்-திடல், கேணிக்கரை, வட்டைமடு, புட்டம்பை ஆகிய இடங்களை கொண்டுள்ளது. பனைமரங்கள் அதிகம் இருந்தபடியால் பனங்காடு என்ற பெயர் வந்ததாக கூறப்படுகின்றது. வரலாற்று நூல்களில் “பனோவா” என குறிப்பிடப்பட்டுள்ளது பனங்காடு கிராமமே என சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும் பனோவா என்றழைக்கப்பட்டது பானமை பகுதியையே என குறிப்புகள் கூறுகின்றன.

கி.மு. 137-119 வரை இலங்கையை ஆட்சி செய்த சத்தாதீசன் காலத்தில் பனங்காடு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது. கி.பி 2ம் நூற்றாண்டில் தாடகிரி எனும் குறுநில இராச்சியம் நிலவியது. பனங்காட்டின் தெற்கில் சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ள சாகாமமே தாடகிரி அரசாகும். அதே சமயம் பனங்காடு கிராமத்தின் தெற்கில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள மொட்டைமலையே தாடகிரி என ஆய்வாளர் நவநாயக மூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

## பனங்காட்டில் நடுகல் வழிபாடு

இத்தனை வரலாற்று சிறப்பு மிக்க பனங்காட்டில் மிகப்பண்டைய காலத்தில் நடுகல் வழிபாடு நிலவியிருந்தது. இவ்வழிபாடு சங்ககாலம் தொடக்கம் தமிழ் மக்களிடையே இருந்து

வந்த வீர வழிபாடாகும். பனங்காடு கிராமத்தில் நிலவிவந்த இவ்வீர வழிபாடே ஐயனார் வழிபாட்டுக்கு முன்னோடியாக இருந்தது. இலங்கைத்தீவில் நிலவிய பழமையான வழிபாடுகளில் ஐயனார் வழிபாடும் ஒன்றாகும். ஊரையும், நில புலங்களையும் காவல் காக்கும் தெய்வமாக பண்டைய காலத்தில் ஐயனார் விளங்கினார். குளக்கரைகளிலும், ஊர் எல்லைகளிலுமே ஐயனாருக்கு திறந்த வெளிக் கோயில்கள் அமைக்கும் வழக்கம் பழங்காலத் தமிழர்களிடையே நிலவியது. ஊரைக்காப்பவன் என்பதால் "தானவன்" என்ற பெயரும் ஐயனாருக்கு உண்டு. மற்றும் சாஸ்தா, கையனார், சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தன் போன்ற பெயர்களும் இக்காவல் தெய்வத்திற்குண்டு.

### கி.பி. 15ம் நூற்றாண்டுக்கு முன்பு உருவான ஆலயம்



பனங்காடு ஐயனார் பாசுபதேஸ்வரர் கோயில்

பனங்காடு ஐயனார் ஆலயத்தின் ஆரம்பகால வரலாற்றை நோக்குமிடத்து, கி.பி. 15ம் நூற்றாண்டளவில் வர்த்தகம் புரிய இப்பகுதிக்கு வந்த தென்னிந்திய செட்டிமார் இவ்வூரில் வாழ்ந்து வந்த வேடர்குல கன்னியரை மணம் புரிந்தனர். இவர்கள் குடியிருந்த பகுதி காடாக இருந்தது. இக்காட்டுப்பகுதியில் நடுகற்கள் சில காணப்பட்டன. பழமையான வழிபாடு நிலவியதை எண்ணிய,

செட்டிமார் இக்கற்களை ஒன்று சேர்த்து இங்கிருந்த மாவிலங்கை மரத்தின் கீழ் மேடையொன்றை அமைத்து அதில் ஐயனார் சிலையொன்றை வைத்து வழிபட்டு வந்தனர். இது ஓர் திறந்த வெளி கோயிலாகக் காணப்பட்டது.

**சிங்காரபுரி வன்னியராசா வழங்கிய மானியங்கள்**

இவ்வாறு தோற்றம் பெற்ற ஐயனார் வழிபாடு கி.பி. 16ம் நூற்றாண்டில் இப்பகுதியில் சிறப்புற்று விளங்க சிங்காரபுரி வன்னியராசா காரணமாக இருந்தான். திறந்தவெளி கோயிலாக இருந்த இவ்வாலயத்தை கட்டியெழுப்பும் பொருட்டு மானியங்களை வழங்கினான். இதன் பின் இவ்வாலயம் மிகவும் சிறப்புடன் விளங்கியது.

சிங்காரபுரி வன்னிய சிற்றரசனால் இவ்வாலயத்திற்கு மானியங்களாக நெற்களனிகளும், குளமும் வழங்கப்பட்டது. ஆலயத்தின் வடகிழக்கில் சுமார் 40 ஏக்கருக்கும் மேற்பட்ட வயற்காணிகள் உள்ள பகுதி இன்றும் "ஐயனார் வெளி" என அழைக்கப்படுகிறது. இது தவிர ஆலயத்தின் முன்பாக புராதன காலத்தில் அமைக்கப்பட்ட குளம் "ஐயனார் குளம்" எனவும் அழைக்கப்படுகிறது. இதுவே ஆலயத்தின் புராதன தீர்த்தக்குளமாக விளங்கியுள்ளது. ஐயனார் சிலைக்குப் பாதுகாப்பாக இருந்த "மாவிலங்கை" மரம் தலவிருட்சமாகவுள்ளது.

இத்தலவிருட்சத்தின் கீழ் ஐயனாருக்கு பெருமடை பரவி மஞ்சள் கலந்த அரிசியையும், கமுகம் பூ முதலான பூஜைப்பொருட்களையும் மாவிலங்கை மரத்தின் மேலே எறிந்தபோது அவை கீழே விழாதவண்ணம் ஐயனாரின் பரிகலங்கள் அவற்றைப் பற்றிக் கொண்ட அதிசயங்களும், வேறுபல அற்புதங்களும் இவ்வாலயத்தில் முற்காலத்தில் திகழ்ந்ததாக இங்குள்ள முதியோர்கள் கூறுகின்றனர்.

**தென்னிந்திய செட்டிமாரால் பரிபாலிக்கப்பட்ட ஆலயம்**

பல வருடங்களாக செட்டிகள் எனும் வணிகக்குடியினரால் பராமரிக்கப்பட்டுவந்த இவ்வையனார் ஆலயம் பண்டைய காலத்தில் சிறப்புற்று விளங்கியது.

தென்னிந்திய செட்டிமாரால் இவ்வாலயம் தோற்றுவிக்கப் பட்டதால் ஐயனாருக்கு பூஜைகள் நடைபெறும் போது "செட்டிகள் உள்ள நாளையத் தெய்வமே" என ஐயனாரைப் போற்றி வழிபடும் மரபு இங்கிருந்தது. ஐயனார் வழிபாட்டில் செட்டிமார்களுக்கிருந்த தொடர்பை இது உறுதிப்படுத்துகிறது. இவ்வாலயம் கி.பி 17, 18, 19ம் நூற்றாண்டுகளில் ஆலையடிவேம்பு பிரதேச மக்கள் மத்தியில் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியது.

### கி.பி. 17ம் நூற்றாண்டில் பாடப்பட்ட ஐயனார் அகவல்

இக்காலத்தில் மட்டக்களப்பு தமிழகமெங்கும் மிகப் பிரபல்யம் பெற்றுவிளங்கிய இவ்வாலயம் சம்பந்தமாக 17ம் நூற்றாண்டில் "ஐயனார் அகவல்" எனும் காவியம் எழுதப்பட்டது. கி.பி. 18ம் நூற்றாண்டில் "ஐயனார் காவியம்" பாடப்பட்டது. இதில் இவ்வூர் "பனங்காமைச் சோலை" என்ற சிறப்புப் பெயரில் புகழப்பட்டது. இவ்வாலத்தில் வீரபத்திரர், காத்தவராயன், வதனமார் ஆகிய காவல் தெய்வங்களுக்கும் வழிபாடு நடந்து வந்தது. பூசாரிமார்களே பூசைகள் நடத்தி வந்தனர். இப்பூசைகளில் பெண்களும், சிறுவர்களும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு 19ம் நூற்றாண்டின் இறுதிவரை இவ்வழிபாடு நிலவிவந்தது.

இதன்பின் ஐயனார் வழிபாடு குன்றி ஆலயமும் செழிப்பிழந்து காணப்பட்டது. ஆலயத்தைச் சுற்றி சூழவுள்ள பகுதிகள் காடாக மாறின. இக்காலப்பகுதியில் தான் இவ்வாலயம் மீண்டும் புத்துயிர் பெறும் வகையில் ஓர் சம்பவம் நிகழ்ந்தது.

### ஐயனாருடன் ஒன்றிணைந்த பாசுபதேஸ்வரர்

1942 இல் இவ்வாலயத்தின் சிறப்பையும், அற்புதங்களையும் கேள்வியுற்று இப்பகுதிக்கு வந்த முப்பெரும் சித்தர்களில் ஒருவரான சித்தானைக்குட்டி எனும் யோகி அவர்கள் பனக்காட்டில் குடிகொண்டிருந்த ஐயனாரை வழிபட்டு வந்தார். தான் இங்கிருந்து செல்லும் சமயம் தனது பிரம்பினால் மாவிலங்கை மரத்தை அடித்து, தனது காலினால் ஓர் கோடும் கீறி "இவ்விடத்தில் சிவாலயம் கட்டுங்கள்" என கூறிச்சென்றார்.

சித்தானைக்குட்டி சித்தர் கூறியதன்படி ஐயனார் ஆலயத்தின் அருகிலேயே ஓர் சிவாலயம் கட்டப்பட்டது. லிங்கவடிவில் சிவன் பிரதிஷ்டை செய்யப்பட்டு இவ்வூர் மக்களால் பூஜிக்கப்பட்டு வந்தார். இதன் பின் இவ்வாலயம் பாசுபதேஸ்வரம் எனவும் மூர்த்தி பாசுபதேஸ்வரர் எனவும் அழைக்கப்பட்டது.

துரியோதனனைக் கொல்ல பாசுபதம் என்னும் சர்வசக்தி வாய்ந்த ஆயுதத்தை பெறுவதற்காக சிவனை வேண்டிக் கடுந்தவம் புரிந்த அர்ச்சுனனுக்கு பாசுபதத்தை கொடுக்க சிவன் கொண்ட வடிவமே பாசுபதேஸ்வரராகும். இம்மூர்த்தியே தென்னிந்தியாவில் திருமுல்லைவாயிலிலும், திருவேட்களத்திலும் குடி கொண்டு பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருப்பவர். இதே வடிவம் கொண்ட ஈஸ்வரனே பனங்காடு பாசுபதேஸ்வரர் ஆலயத்திலும் வீற்றிருப்பவர். இன்று பாசுபதேஸ்வரர் ஐயனார் ஆலயம் என இக்கோயில் பெயர் பெற்று விளங்குகிறது.

**கண்ணகிபுரம் முருகன் மலை கந்தசுவாமி கோயில்**

அக்கரைப்பற்று நகரிலிருந்து தெற்கு நோக்கிச் சாகாமத்திற்குச் செல்லும் வீதியில் உள்ள கோளாவில், பனங்காடு ஆகிய கிராமங்களைக் கடந்து செல்லும் பொழுது, பாதையின் இடது பக்கம் பெரிய களப்பு வாவியும், வலது பக்கம் வயல்களுக்கு மத்தியில் சில மலைக்குன்றுகளும் காணப்படும். இங்கு மொத்தமாக உள்ள நான்கு மலைக்குன்றுகளின் மத்தியில் காணப்படும் மலைக்குன்றே முருகன் மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் மிகப்பண்டைய காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதே முருகன்மலை கந்தசுவாமி கோயிலாகும். அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 7 கி.மீ தூரத்தில் முருகன் மலை அமைந்துள்ளது. பாதயாத்திரீகர்கள் பண்டைய காலம் முதல் தரிசித்து செல்லும் இடமாக இம்முருகன் கோயில் விளங்குகிறது.

**இயற்கை அழகுடன் காணப்படும் கண்ணகி கிராமமும் அதன் அமைப்பும்**

முருகன் மலை கந்தசுவாமி கோயில் அமைந்திருக்கும் பகுதி மூன்று மலைகளைக் கொண்ட அழகிய இயற்கை வனப்பு மிக்க பிரதேசமாகும். முருகன் மலையை மையமாக வைத்து இங்கு அழகிய கிராமங்கள் ஆங்காங்கே உருவாகியுள்ளன. இப்பகுதி

கண்ணகி கிராமம் என அழைக்கப்படுகிறது. அக்கரைப்பற்று - சாகாமம் பிரதான வீதியின் வடமேற்குப் பக்கத்தில் பசுமையான வயல் வெளிகளும் அவற்றின் மத்தியில் மலைகளும், மலைகளைச் சுற்றி கிராமங்களும் அமையப்பெற்று ரம்மியமான அழகிய சூழலை இங்கு உருவாக்கியுள்ளன.

பிரதான வீதியிலிருந்து கண்ணகி கிராமத்திற்கு செல்லும் போது முதலாவதாகக் காணப்படும் மலை கரடி மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையின் பின்பக்கம் இரண்டாம் கிராமம் உள்ளது. அதை அடுத்து விநாயகர் கோயிலும், கோயிலின் வடபகுதியில் வயல்களின் மத்தியில் முதலாம் கிராமமும் அமைந்துள்ளன. இங்குதான் கண்ணகி கிராமத்திற்குரிய பாடசாலை மற்றும் முக்கிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கிராமத்தின் வடமேற்கில் ஆண்டிப்போடியார் குளம் அமைந்துள்ளது.



கண்ணகிபுரம் முருகன் மலை

விநாயகர் கோயிலின் மேற்குப் பக்கமாக செல்லும் போது பாதையின் இரு மருங்கிலும் பசுமையான வயல் நிலங்களும் அதனை அடுத்து மூன்றாம் கிராமமும் அமைந்துள்ளது. கிராமத்தின் வாசலில் பேச்சி அம்மன் ஆலயம் மரத்தின் கீழ் காணப்படுகிறது. இதனை அடுத்து முருகன் மலைக்குச் செல்லும் வழியில் இடதுபக்கம் சிறிய வள்ளிமலையும் வலது பக்கம் தீர்த்தக் கேணியும் அமைந்துள்ளன. இவற்றை அடுத்தே அழகிய முருகன்மலையும், மலையின் உச்சியில் நின்ற நிலையில் 21 அடி

உயரமான பொன்வண்ண முருகன் சிலையும் கம்பீரமாகக் காட்சி-யளிக்கின்றன. இம்மலை வடக்கு தெற்காக சுமார் 400 அடி நீளமும், கிழக்கு மேற்காக 350 அடி அகலமும் கொண்ட மாங்காய் வடிவில் அமைந்துள்ளது.

முருகன் மலையின் தெற்குப் பக்கத்தில் உள்ள மூன்றாம் கிராமத்தில் ஆங்காங்கே பெரியதும் சிறியதுமான 12 மலைப்-பாறைகள் இயற்கையாகவே அமைந்து இப்பகுதியை மனதை மயக்கும் வனப்பு மிக்க இடமாக உருவாக்கியுள்ளது. முருகன் மலையின் வடக்குப் பக்கத்தில் பத்து வீட்டுக்குடியிருப்பும், மேற்குப்பக்கம் பாக்குருட்டி மலை எனும் பெரிய மலைக்குன்றும் அமைந்துள்ளன.

முருகன் மலையின் தெற்குப் பக்கத்தில் ஒரு கி.மீ தூரத்தில் பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயிலும், அதன் தெற்குப்பக்கம் கவடாப்பிட்டி எனும் கிராமமும், கிராமத்தின் பின்பக்கம் உள்ள மலைப்பாறையின் அருகில் மரத்தடிப்பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன.

**கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வந்த முனிவர் ஸ்தாபித்த வேல்**

இத்தனை இயற்கை அழகும் சிறப்பும் கொண்ட இப்பகுதி-க்கு மிகப்பண்டைய காலத்தில் இந்தியாவிலிருந்து ஒரு முனிவர் வந்ததாகவும், கதிர்காமத்திற்கு பாத யாத்திரையாக வந்த இம்முனி-வர் தான் கொண்டு வந்த முருகப் பெருமானின் வேல் ஒன்றை இங்-கிருந்த ஓர் மலை உச்சியில் இயற்கையான நீர்ச்சுனையின் அருகில் ஸ்தாபித்து அதற்கு பூஜைகள் செய்து வணங்கியதாகவும், பின்பு சில நாட்கள் இங்கே தங்கியிருந்து பின்னர் கதிர்காமத்திற்கு தனது பயணத்தை தொடர்ந்ததாகவும் தெரிய வருகிறது.

அப்போது காடடர்ந்து காணப்பட்ட இம்மலைப் பகுதியில் முனிவர் ஒருவர் இருந்ததையும், இங்கிருக்கும் மலை உச்சியில் வேலை வைத்து பூஜித்ததையும் அறிந்த ஏனைய யாத்திரீகர்கள் மலைக்குச் சென்று தாமும் அவ்வேலை வணங்கி பூஜைகள் செய்து பின்பு கதிர்காமத்திற்கு சென்றனர். அதன் பின்பு ஒவ்வொரு வருடமும் கதிர்காம தீர்த்த யாத்திரை செல்பவர்கள் இம்மலையில் உள்ள வேலை பூஜித்து சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### ஆண்டுதோறும் கதிர்காமம் செல்லும் யாத்திரீகர்கள் தரிசித்துச் செல்லும் வேல்

மலையில் உள்ள முருகனின் வேல் எக்காலத்தில் வைக்கப்பட்டது என்ற விபரங்கள் யாருக்கும் தெரியாது. முருகப் பெருமானே முனிவர் வேடத்தில் வந்து மலையின் உச்சியில் வேலை ஸ்தாபித்து பூஜித்து சென்றதாக இப்பகுதி மக்கள் நம்புகின்றனர். எனவே இப்பகுதி மக்களால் மிக்க பயபக்தியுடன் இவ்வேல் பூஜிக்கப்பட்டு வருகிறது.

மிகப்பண்டைய காலம் முதல் வருடத்திற்கொருமுறை கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களும், சித்தர்களும், முனிவர்களும் இம்மலையில் இருக்கும் முருகனின் வேலைத் தரிசித்து இம்மலையிலும், அடிவாரத்திலும் தங்கிச் செல்வதாக இப்பகுதியிலுள்ள முதியவர்கள் கூறுகின்றனர். பண்டைய காலத்தில் கதிர்காம யாத்திரீகர்கள் கருங்கொடித் தீவுக்கு வந்து அங்கிருந்து முருகன் மலை, பட்டி நகர் ஊடாக திருக்கோயிலுக்கு சென்று முருகனைத் தரிசித்து அங்கிருந்து சங்கமன் கண்டி மலைக்கு செல்லும் வழக்கம் இருந்தது.

### பண்டைய போக்குவரத்துப் பாதையருகில் அமைந்திருந்த மலைக்கோயில்

இன்று மக்கள் பயன்படுத்தும் முக்கிய போக்குவரத்துப் பாதையான அக்கரைப்பற்றிலிருந்து தம்பட்டை ஊடாக திருக்-கோயிலுக்கு செல்லும் பாதை பண்டைய காலத்தில் பயன்-படுத்தப்படவில்லை. பெரிய களப்பு வாவியின் கழிமுகங்களான பெரிய முகத்துவாரம், சின்ன முகத்துவாரம் ஆகிய நீர்த்தடைகளி-னால் பாதயாத்திரை செல்பவர்களும், ஏனைய பயணிகளும் பனங்-காடு, பட்டி நகர் ஊடாகச் செல்லும் பாதையையே பயன்படுத்தி வந்தனர். தம்பட்டை கிராமத்திற்கு செல்பவர்கள் மட்டுமே படகின் மூலம் பெரிய முகத்துவாரத்தைக் கடந்து சென்று வந்தனர். எனவே தரை வழிப் பயணத்தின் முக்கிய பாதையாக பனங்காடு, பட்டிநகர் பாதை விளங்கியதால் முருகன் மலை கந்தசுவாமி கோயில் பண்டைய காலத்தில் சிறப்புற்று விளங்கியது.

### உன்னரசுகிரி சிற்றரசர்களால் திருப்பணி செய்யப்பட்ட ஆலயம்

உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சிசெய்த சிற்றரசர்களாலும் மலையிலிருக்கும் வேல் பூஜிக்கப்பட்டுள்ளது. திறந்த வெளி மலைக்கோயிலாக இருந்த இவ்விடத்திற்கு ஓர் கருவறையை அமைத்ததோடு இங்கு வந்து செல்லும் யாத்திரீகர்களுக்காக நீர்ச்சுனையின் அருகில் ஓர் ஓய்வெடுக்கும் மண்டபத்தையும் மன்னன் அமைத்துள்ளான். மேலும் இவ்வாலயத்தை பராமரிக்கும் பொருட்டு கருவறையின் பின்பக்கம் வைப்புத்திரவியங்களையும் சேமித்து அவற்றை பாதுகாத்து வந்துள்ளான்.

யாத்திரீகர்கள் வேலைத் தரிசிப்பதற்கு வசதியாக மலையடிவாரம் முதல் ஆலயம் வரை கற்பாறையில் படிகளை அமைத்துள்ளான். ஆலயத்தின் பின்பக்கம் உள்ள இன்னுமோர் நீர்ச்சுனைக்குச் செல்வதற்கும் கற்பாறையில் படிகளை வெட்டுவித்துள்ளான். இவற்றை உறுதி செய்யும் வகையில் மலையில் பல தடயங்கள் காணப்படுகின்றன. கி.பி. 1ம் நூற்றாண்டில் உன்னரசுகிரியை ஆட்சி செய்த பிரசின்னத்து அதன் உப நகரை முருகன் மலையில் அமைத்ததாக நூற்குறிப்புகள் கூறுகின்றன. இம்மன்னன் கவடா மலையில் ஓர் மாளிகையை அமைத்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. கவடா மலை என்பது முருகன் மலையையே குறிப்பிடுவதாகும்.

### 1960ல் மக்கள் குடியேறிய போது மலையில் கண்ட புராதன வேல்

முருகன் மலை அடிவாரத்தில் இன்று நாம் காணும் கண்ணகி கிராமம் 1960ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட குடியேற்றமாகும். இக்காலப்பகுதியில் மக்கள் இப்பகுதிக்கு வந்து காட்டை துப்புரவு செய்யும் பொழுது மலை உச்சியில் ஓர் பழமைவாய்ந்த வேலும் ஓர் சிறிய கோயிலின் எச்சங்களையும் கண்டதாகவும், பின்பு அவ்வேலுக்கு பாதுகாப்பாக ஓர் குடிலை அமைத்து பயபக்தியுடன் பூஜை செய்து வணங்கி வந்ததாகவும், அருகில் பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயில் அமைந்திருந்ததால் இப்புதிய கிராமத்திற்கு கண்ணகி கிராமம் எனப் பெயர் சூட்டியதாகவும் பிற்காலத்தில் இக்கிராமமும், கோயிலும் பல சவால்களையும், இன்னல்களையும் சந்தித்து படிப்படியாக முன்னேறி, பக்தி மிக்க இம்மக்களின் முயற்சியால் முருகன் மலைக்கோயில் இன்று நாம் காணும் நிலைக்கு உருவாகி கருவறை, மண்டபம் ஆகியவற்றுடன் காட்சி தருவதாகவும் இங்குள்ள முதியவர்கள் கூறுகின்றனர்.

**தங்கநிற முருகன் சிலை**

பிரதான வீதியிலிருந்து கண்ணகி கிராமத்திற்குள் நுழைந்தவுடன் எம்மை வரவேற்பது முருகன் மலையில் அமைக்கப்பட்டிருக்கும் பொன்வண்ண முருகன் சிலையாகும். முருகன் மலையில் இடது பக்கத்தில் மலைச்சாரலை ஒட்டி இச்சிலை அமைக்கப்பட்டுள்ளது.

அழகிய பீடத்தின் மேல் நின்ற நிலையில் அபயமுத்திரை காட்டியவண்ணம் வலது பக்கம் வேலுடனும், காலடியில் மயில், நாகம் ஆகியவற்றுடனும் இச்சிலை கச்சிதமாக அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வேறெங்கும் காணக்கிடைக்காத அரிய பொக்கிஷமாக காணப்படும் இச்சிலை சுதையினால் வடிவமைக்கப்பட்டு தங்கநிறம் பூசப்பட்டுள்ளது.



கண்ணகிபுரம் 21 அடி உயர தங்க முருகன் சிலை

முருகன் மலை நிலமட்டத்திலிருந்து சுமார் 60 அடி உயரமானதாகும். மலை உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் முருகன் சிலை 21 அடி உயரமுடையது. இச்சிலை கடந்த 2010ம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

## பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயில்

பெரிய களப்பு வாவியின் மேற்குப்பகுதியில் பனங்காடு எனும் பண்டைய கிராமம் அமைந்துள்ளது. இங்கிருந்து 2 கி.மீ தூரத்தில் பட்டிநகர் என்னுமிடத்தில் மிகப்பழமை வாய்ந்த கண்ணகியம்மன் கோயில் அமைந்துள்ளது. கி.பி. 11ம் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் இவ்வாலயம் மட்டக்களப்புத் தமிழகத்தில் கண்ணகியம்மன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட மிகப்பழமை வாய்ந்த நான்கு இடங்களில் ஒன்றாகும். ஏனையவை பானமை, தம்பிலுவில், வீரமுனை போன்ற இடங்களில் அமைந்துள்ளன. பழைய திருக்கோயில் வீதியில் யாத்திரை செல்லும் யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக இவ்வாலயம் விளங்குகிறது.

## கி.பி.11ம் நூற்றாண்டு ஸ்தாபிக்கப்பட்ட ஆலயம்

அக்கரைப்பற்றின் ஆரம்பக்குடியேற்றப் பகுதிகளான கோளாவில், கருங்கொடித்தீவு ஆகிய இடங்களை சேர்ந்த மக்களால் கி.பி 11ம் நூற்றாண்டு முதல் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்ததாக அறியப்படுகிறது.

பனங்காடு கிராமத்தைப் போல் பட்டிநகரும் பண்டைய தொன்மை வரலாற்றை கொண்ட பிரதேசமாகும். கி.பி. 1ம் நூற்றாண்டில் மட்டக்களப்புத் தமிழகத்தின் தென்பகுதியை ஆட்சி செய்தவன் பிரசின்னசித்து எனும் தமிழ் மன்னனாவான். நான்கு பற்றுகளை கொண்ட இவனது உன்னரசுகிரி இராச்சியத்தின் உப நகராக பட்டிநகர் கண்ணகியம்மன் ஆலயத்தின் அருகிலுள்ள கவடாப்பிட்டி முருகல் மலை விளங்கியதாக ஆய்வுகள் கூறுகின்றன.

புவனேகபாகுவும் அவனின் மகனான மேகவர்ணனும் இங்கிருந்து தான் ஆட்சிசெய்து வந்ததாக கூறப்படுகிறது. தாடகிரி எனும் சாகாமம் இராஜதானி இங்கிருந்து சில மைல் தூரத்தில் தான் அமைந்துள்ளது.

## பட்டிநகர் ஆலயம் பற்றிய இலக்கியங்கள்

பட்டிநகர் சிறப்புற்று விளங்கிய காலம் முதல் இன்றுவரையும் கண்ணகியம்மன் ஆலயம் சிறப்புடன் விளங்குகிறது. இவ்வம்மனின் பேரருளையும், ஆலயத்தின் பெருமையையும் விளக்கும் பல இலக்கியங்கள் இங்கு தோற்றம் பெற்றுள்ளன. கி.பி. 17ம்

நூற்றாண்டில் பாடப்பட்ட "பட்டிமேட்டுக் கண்ணகை அம்மன் காவியம்" கி.பி. 16ல் பாடப்பட்ட "பட்டிநகர் கண்ணகை அம்மன் மழைக்காவியம்" கி.பி 17ல் "பொற்புறா வந்த காவியம்" போன்ற இலக்கியங்கள் இவ்வாலய தொண்மைக்கு சான்றுகளாக உள்ளன.



பட்டிநகர் கண்ணகி அம்மன் கோயில்

### கீர்த்திஸ்ரீ இராஜசிங்கனின் திருப்பணி

கி.பி 1747-1780 வரை கண்டியை ஆட்சிசெய்த கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் இவ்வாலயத்திற்கு நெற்காணிகளை மானியமாக வழங்கினான். ஆங்கிலேயர் காலத்தில் இக்காணிகள் ஆலயத்திற்கு சட்டபூர்வமாக சாசனம் அமைத்து கையளிக்கப்பட்டன. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் இவ்வாலயத்தில் திருப்பணிகளையும் மேற்கொண்டான். இதே காலத்தில் "போரோடைக்கட்டு" என்னுமிடத்திலிருந்து அம்புத் தெய்வம், கொம்புத் தெய்வம், வில்லுத் தெய்வம், அம்மாமைத் தெய்வம் ஆகிய வழிபாடுகள் கொண்டு வரப்பட்டு பூஜையுடன் சேர்க்கப்பட்டன. "பரவணிக் கல்வெட்டு" மூலம் இதை அறியக்கூடியதாக உள்ளது.

குடியிருப்புகள் இல்லாத வயல்வெளியின் மத்தியில் உள்ள மேட்டு நிலத்தில் இவ்வாலயம் அமையப்பெற்றுள்ளது. பண்டைய காலத்தில் இப்பிரதேசம் மலையும், காடும், குளமும் உள்ள பகுதியாக இருந்துள்ளது. பின்பு காடுகள் அழிக்கப்பட்டு கழனிகள் உருவாகியுள்ளன. குழந்தை குரல் கேட்கக்கூடாது என்பதற்காக இவ்வனப்பிரதேசத்தில் இவ்வம்மன் குடிகொண்டதாகவும், ஒவ்வொரு வைகாசி பூரணையின் போதும் அம்மன் பொற்புறாவாக வந்து அருளாட்சி செய்யும் திருத்தலம் இதுவென்றும் ஆலய வரலாறு கூறுகிறது.

**அக்கரைப்பற்று - தம்பட்டை பாதை**

அக்கரைப்பற்றிலிருந்து தம்பட்டை, தம்பிலுவில் வழியாக செல்லும் யாத்திரீகர்களும் சில ஆலயங்களை தரிசித்துச் செல்கின்றனர். இவ்வழியில் அக்கரைப்பற்றிலிருந்து 4 கி.மீ தொலையில் சின்னமுகத்துவாரம் அமைந்துள்ளது. முள்ளிக்குளத்திலிருந்து வரும் தில்லையாறு பனங்காடு ஊடாக பெரிய களப்பு வாவியில் கலந்து இம்முகத்துவாரத்தின் வழியாகவே கடலில் சங்கமமாகிறது. இங்கிருந்து ஒன்றரை கி.மீ தூரத்தில் செம்மண்புலை விநாயகர் கோயில் அமைந்துள்ளது.

இவ்வாலயத்தை தரிசிக்கும் யாத்திரீகர்கள் அடுத்ததாக 700 மீற்றர் தூரத்தில் உள்ள தம்பட்டை மாணிக்க வைர விநாயகர் கோயிலைத் தரிசிக்கின்றனர். இவ்வாலயத்திலிருந்து ஒன்றரை கி.மீ தூரத்தில் பெரிய முகத்துவாரம் அமைந்துள்ளது. முகத்துவாரத்திலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள சிவலிங்கப் பிள்ளையார் கோயிலையும், அதன் முன்பக்கமுள்ள காயத்ரி அம்மன் பீடத்தையும் யாத்திரீகர்கள் தரிசித்துச் செல்கின்றனர். இங்கிருந்து 2 கி.மீ தூரத்தில் தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயிலும் 3 கி.மீ தூரத்தில் திருக்கோயில் முருகன் கோயிலும் அமைந்துள்ளன. பாத யாத்திரீகர்கள் தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயிலிலும், திருக்கோயில் முருகன் கோயிலிலும் தங்கிச் செல்கின்றனர்.

**தம்பட்டை மாணிக்கவைர விநாயகர் கோயில்**

அக்கரைப்பற்றுக்கும், திருக்கோயிலுக்கும் இடையில் தம்பட்டை எனும் பழம்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. அக்கரைப்பற்றின் தென் எல்லையிலிருந்து திருக்கோயில் வரை

13 கி.மீ நீளத்தில் பரந்து காணப்படும் பெரிய களப்பு வாவிக்கும், வங்கக் கடலுக்கும் இடைப்பட்ட மிகவும் ஒடுங்கிய நிலப்பரப்பில் இக்கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தில் மிகப்பண்டைய காலத்தில் மாணிக்கவைர விநாயகர் கோயில் அமைக்கப்பட்டது.

### 4 கி.மீ நீளமுள்ள ஒடுங்க மணல் தீவு

தம்பட்டை கிராமம் 4 கி.மீ நீளமுடைய ஓர் ஒடுங்கிய நிலப்பரப்பில் காணப்படுகிறது. இக்கிராமத்தின் மத்திய பகுதியே அதிக அகலமுடையதாகும். இது சுமார் 700 மீற்றர் அகலமுடையது. ஏனைய பகுதிகள் 200 முதல் 300 மீற்றர் அகலமுடையவையாகக் காணப்படுகின்றன. தம்பட்டை ஓர் நீளமான ஒடுங்கிய மணல் தீவாகும். பெரிய களப்பு வாவியின் நீர் தம்பட்டையின் வடக்கில் உள்ள சின்ன முகத்துவாரத்தின் ஊடாகவும், தம்பட்டையின் தெற்கில் உள்ள பெரிய முகத்துவாரத்தின் ஊடாகவும் வங்கக்கடலுடன் சங்கமித்து, இவ்விரு முகத்துவாரங்களுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பை ஓர் தீவாக உருவாக்கியுள்ளது. பிற்காலத்தில் இவ்விரு நீர்ப்பகுதிகளுக்கு மேல் பாலங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் தம்பட்டை கிராமம் பெருநிலப்பரப்புடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.



தம்பட்டை சின்ன முகத்துவாரம்

### மனுநேயகயபாகு அந்தணர்களை குடியமர்த்திய தீவு

தம்பட்டையின் வரலாறு கி.பி. 1ம் நூற்றாண்டில் தொடங்குகிறது. இக்காலப்பகுதியில் உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த மனுநேயகயபாகு எனும் மன்னன் நாகர்முனை எனும் திருக்கோயில் முருகன் ஆலயத்தை புனரமைத்து இவ்-வாலயத்தில் பணி செய்வதற்கென வந்த அந்தணர்களை மக்கள் குடியிருப்புக்கள் இல்லாத ஒரு தீவாக விளங்கிய ஓரிடத்தில் குடி-யமர்த்தி அத்தீவிற்கு தம்பட்டார் ஊர் எனப் பெயரிட்டதாகவும், மேலும் பட்டையும், வரிசைகளையும் கொடுத்து மாணிக்க வைரத்தி-னால் ஆன ஓர் விநாயகர் விக்கிரகத்தையும் அங்கே ஸ்தாபித்து அருகில் தனது தாயின் பெயரான தம்பதி நல்லாள் பெயரில் ஓர் வாவியும் வெட்டி அதற்கு தம்பதிவில் எனப்பெயரிட்டு பின்பு உன்னரசுகிரிக்குச் சென்றதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

### திருக்கோயில் பகுதியில் இருந்த அக்கிரகாரம்

மட்டக்களப்பு மான்மியத்தின் குறிப்புகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மக்கள் தொடர்பின்றி பெருநிலப்பரப்புடன் நீரினால் துண்டிக்கப்பட்டிருந்த ஓரிடத்தில் மன்னன் அந்தனர்களை குடியமர்த்தியமை அவர்களின் ஆச்சாரத்தை பேணும் வகையில் மன்னனால் செய்யப்பட்ட செயலாகும். அத்துடன் அவர்களுக்கென ஓர் விநாயகர் ஆலயத்தையும் ஸ்தாபித்து அந்தணர் குலத்தவர்-கள் மட்டும் தனியாக வழிபடும் வகையில் வழிசெய்தமையை ஆராய்ந்து பார்க்கும் போது தம்பட்டை கிராமம் இப்பகுதியில் ஓர் அக்கிரகாரமாக இருந்திருக்க வேண்டும் என நம்ப இடமுண்டு. இங்கிருந்து அயலிலுள்ள கோயில்கள் அனைத்தையும் பராமரித்து நித்திய பூஜைகளை செய்யும் பணியும் இவர்களுக்கு மன்னனால் வழங்கப்பட்டிருக்கும்.

நான்கு வேதங்களும் கற்ற பிராமணர்களுக்காக மன்னர்களால் சகல வசதிகளுடன் மானியமாக வழங்கப்பட்ட கிராமங்கள் பிரம்ம தேயங்கள் என அழைக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட பிரம்ம தேயங்கள் பல இலங்கையில் பண்டைய காலங்களில் இருந்தன. இவை போன்ற ஓர் பிரம்மதேயமாகக் கூட தம்பட்டை ஊர் விளங்கியிருக்கலாம்.

**பண்டைய காலத்தில் தனிச்சிறப்புடைய பெறுமதிமிக்க ஆலயம்**

தம்பட்டையில் மன்னனால் ஸ்தாபிக்கப்பட்ட விநாயகர் கோயில் அக்காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கியிருக்க வேண்டும். ஏனெனில் இவ்விக்கிரகம் மாணிக்கம், வைரம் போன்றவை பதிக்கப்பட்ட விநாயகர் விக்கிரகமாகும். எனவே பெறுமதிமிக்க இவ்விக்கிரகம் பாதுகாப்பான ஓர் இடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகவே இது தம்பட்டை ஊரில் ஸ்தாபிக்கப்-பட்டிருக்கலாம். இதன் காரணமாக இவ்வாலயம் தனிச்சிறப்புடன் விளங்கியிருக்கும் எனக் கூறக்கூடியதாக உள்ளது.



தம்பட்டை முருகன் கோயில்

இது போன்று மாணிக்கம், வைரம் பதிக்கப்பட்ட ஓர் சிவலிங்கம் பண்டைய காலத்தில் இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்த சோமநாதர் கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டு மிகப்பிரசித்தி பெற்று விளங்கியதாகவும், கஜனி முகம்மது இவ்-வாலயத்தை அழித்து இப்பெறுமதிமிக்க லிங்கத்தை எடுத்துச் சென்றதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மான்மியத்தின் படி தம்பட்டை ஊரில் இருந்த மாணிக்க வைர விநாயகர் கோயில் சுமார் 2000 வருடம் பழமைவாய்ந்ததாகும்.

### தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில்

திருக்கோயிலுக்கு வடக்கில் ஒரு கி.மீ தூரத்தில் தம்பிலுவில் எனும் பழம்பதி அமைந்துள்ளது. கிழக்கில் வங்கக்கடலும், மேற்கில் பெரியகளப்பு வாவியும் வடக்கில் தம்பட்டை கிராமமும் தெற்கில் திருக்கோயிலும் தம்பிலுவின் எல்லைகளாக உள்ளன. இக்கிராமத்தின் புராதன ஆலயமே கண்ணகியம்மன் ஆலயமாகும்.

கி.பி. 48ல் (கலி 3150) உன்னரசுகிரி இராஜதானியை ஆட்சி செய்த மனுநேயகயபாகு எனும் மன்னனின் தாயாரே தம்பதி நல்லாள் எனும் சோழ அரசியாவார். மனுநேயகயபாகு தான் திருத்தியமைத்த திருக்கோயில் ஆலயத்தின் அருகில் தன் தாயாரின் நினைவாக குளமொன்றை வெட்டினான் என்றும் இக்குளத்திற்கு தம்பதிவில் எனப்பெயரிட்டதாகவும் இக்குளத்தையண்டி உருவான ஊரும் தம்பதிவில் என அழைக்கப்பட்டு பின்பு தம்பிலுவில் எனத் திரிபடைந்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.



தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில்

மேலும் நாகர்முனை எனும் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்வதற்கு தம்பட்டார் எனும் அந்தணர்கள் வரவழைக்கப்பட்டு திருக்கோயிலின் வடக்கே குடியமர்த்தப்பட்டனர். திருக்கோயில் குடமுழுக்கு விழாவிற்கு சோழ நாட்டிலிருந்தும், கலிங்க நாடுகளிலிருந்தும் அழைப்பிக்கப்பட்ட அரசர்களையும், குடி-களையும் இவ்வந்தணர்களே வரவேற்றனர். தம்பட்டார் குடியமர்ந்த இவ்வூரே இன்று தம்பிலுவில்லின் வட எல்லையின் சுமார் 2 கி.மீ தூரத்திலுள்ள தம்பட்டை என்னும் கிராமமாகும். இவ்வாறு மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

திருக்கோயிலுக்கு மேற்கில் 6 கி.மீ தொலைவில் சாகாமம் என்னும் புராதன இராஜதானி அமைந்துள்ளது. கி.பி. 2ம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கையில் செல்வாக்குப் பெற்று விளங்கிய முக்கிய அரசுகளில் ஒன்றாக இருந்த சாகாமம் அரசின் பிரதானபகுதியாகதம்பிலுவில்அமைந்திருந்தது. இக்காலப்பகுதியில் மதுரையிலிருந்து கொண்டுவரப்பட்ட செண்பக நாச்சியம்மன் விக்கிரகம், சாகாமத்திலுள்ள ஊரக்கை என்னுமிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அவ்வம்மனை கண்ணகி எனவும் அழைத்தார்கள். இவ்வழிபாட்டுத் தலத்தின் தொடர்ச்சியே தம்பிலுவில் கண்ணகி-யம்மன் கோயிலாகும்.

### 600 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம்

கி.பி. 1330-1450 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்த மட்டக்களப்பு முக்குவ வன்னிச் சிற்றரசர்கள் காலத்தில் தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றைக்கு சுமார் 600 வருடங்களுக்கு முற்பட்ட பாரம்பரியத்தை கொண்ட இவ்வாலயம் மிகவும் சக்தி வாய்ந்த ஆலயமாகக் கருதப்படுகிறது. கி.பி 1629-1637 வரை கண்டியை ஆண்ட 2ம் இராஜசிங்க மன்னன் காலத்தில் இவ்வாலயத்தில் “ஊர்சுற்று காவியம்” பாடப்பட்டது. இப்பாடலில் மட்டக்களப்பு பிரதேசத்தில் கண்ணகி கோயில்கள் அமைந்திருந்த 30 கிராமங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயில்

பிரதான வீதியிலிருந்து கிழக்குப்பக்கமாக அரை கி.மீ தூரத்தில் கடற்கரையை ஒட்டி சித்திர வேலாயுத சுவாமி

கோயில் அமைந்துள்ளது. தென்னிந்தியாவுக்கு ஒரு திருச்செந்தூர் போல இலங்கைக்கு திருக்கோயில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது. இது ஈழத்துத் திருச்செந்தூர் எனவும் அழைக்கப்படுகிறது. மட்டக்களப்பில் பழமைவாய்ந்ததும், மன்னர்களாலும், வன்னிமைகளாலும் இத்திருப்பணிகள் செய்யப்பட்டதுமான ஆலயங்கள் திருப்படைக் கோயில்கள் எனவும் தேசத்துக் கோயில்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இவற்றில் முதல் திருப்படைக் கோயில் என்ற சிறப்பை திருக்கோயில் பெற்றுள்ளது.

**தில்லை சிதம்பரத்திற்கு அடுத்த படியாக திருக்கோயில் என்ற சிறப்புப்பெயர் பெற்ற ஒரே திருத்தலம்.**

இதன் பழைய பெயர் நாகர் முனையாகும். முதன் முதலில் வேடர்களால் கொத்துப் பந்தலிட்டு வழிப்படப்பட்ட போது வடக்கு முகமாக இருந்த வேல் பிற்பாலத்தில் கிழக்கு நோக்கித் திரும்பிய படியால் திருக்கோயில் என்ற பெயரைப் பெற்றது எனக் கூறப்படுகிறது. உலகிலேயே திருக்கோயில் எனும் சிறப்பு பெற்ற திருத்தலமாக விளங்குவது திருச்சிற்றம்பலம் எனப்படும் சிதம்பரமே. அதற்கு அடுத்தபடியாக இப்பெயர் இம்முருகன் கோயிலுக்கே வழங்கப்படுகிறது. திருக்கோயில் என்பது ஊருக்கும் கோயிலுக்கும் ஒரே பெயராக வழங்கப்படும் சிறப்பு தமிழ்நாட்டில் கூட எந்தக் கோயிலுக்கும் இல்லை. இத்திருத்தலத்திற்கு நாகர்முனை, கந்தபாணந்துறை, வேலூர், திருச்செந்தூர் என்ற பெயர்களும் உண்டு. புராதன காலத்தில் இவ்வாலயம் “சிவஞான சங்கரர் கோயில்” என்ற பெயரைப் பெற்றிருந்தது.

**கந்தன் படையெடுப்பு காலத்துடன் தொடர்புடைய மூன்று கோயில்களில் ஒன்று**

வரலாற்றுக்கு முற்பட்ட கந்தன் படையெடுப்புக் காலத்துடன் இக்கோயிலின் சரித்திரம் தொடங்குகிறது. கந்தன் படையெடுப்புக்காலம் கி.மு. 10,900 என வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்பட்டுள்ளது. கந்தன் படையெடுப்புக் காலமான கலியுக சகாப்தத்தில் அரக்கன் சூரபத்மனை அழிக்க படைதிரட்டி வந்த முருகப்பெருமான் சூரபத்மன் மீது எய்த வேலாயுதம் அவனை அழித்து உக்கிரவேகத்தில் கடலை நோக்கி வந்தபோது இடையிலிருந்த வகூர மலையை இரண்டாகப் பிளந்து கடலில் வீழ்ந்து

மூன்று கதிர்களாகப் பிரிந்து அவை நாகர்முனையெனும் திருக்கோவிலும், மண்டூரிலும், உகந்தை மலையிலும் விழுந்ததாகவும் ஐதீகம். முருகனின் வேல் கதிர்கள் விழுந்த இம்மூன்று இடங்களிலும், இலங்கையின் ஆதிக்குடிகளாக அன்று வாழ்ந்து வந்த நாகர் குலத்தவர்களால் முருகனாலயங்கள் அமைக்கப்பட்டன.

### இராவணனின் இராச்சியத்தின் ஒரு பகுதியில் நாகர்களால் அமைக்கப்பட்ட மிகப்புராதன ஆலயம்

இதே காலப்பகுதியில் நாகர்களால் ஆரம்பிக்கப்பட்ட புராதன ஆலயமே திருக்கோயில் கந்தசுவாமிக் கோயிலாகும். இலங்கையின் முதல் மன்னனாக புராணங்கள் கூறும் குபேரன் முருக வழிபாட்டைப் பேணிவந்தவனாவான். இவனுக்குப்பின் இலங்காபுரியை ஆட்சி செய்த இராவணன் சிவலிங்க வழிபாட்டை கைக்கொண்டு வந்தான். இவனது இலங்காபுரி நகரம் இலங்கையில் கிழக்கில் அமைந்திருந்ததாகவும், இலங்காபுரி அரசின் பெரும்பகுதி கடற்கோள்களினால் கடலில் மூழ்கிவிட்டதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

திருக்கோயிலின் தெற்கிலுள்ள கடற்பரப்பில் காணப்படும் மலைக்குன்றுகள் "இராவணன் கோட்டை" என அழைக்கப்படுகின்றன. யாள தேசிய வனவிலங்கு சரணாலயத்திற்கு தெற்கிலும், கிழக்கிலும் உள்ள கடற்பரப்பில் காணப்படும் மலைக்குன்றுகள் பெரிய இராவணன் கோட்டை, சிறிய இராவணன் கோட்டை என அழைக்கப்படுகின்றன. இதன்படி திருக்கோயில் அண்மித்த பகுதிகளே இராவணனின் இலங்காபுரி இராஜதானியாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

### இலங்கையில் வேறெந்த கோயில்களிலும் காணக்கிடைக்காத அரிய காட்சி

திருக்கோயில் முருகனாலயத்தில் கருவறையில் மயில் மீது அமர்ந்திருக்கும் முருகப்பெருமானின் பின்பக்கம் நிலைக்கண்ணாடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கிழக்கு நோக்கிய கருவறையில் பொருத்தப்பட்டுள்ள கண்ணாடியில் எதிரிலுள்ள கடலின் விம்பம் தெரிகிறது. காலை வேளையில் சூரிய உதயத்தின் போது கடலிலிருந்து எழும் சூரியனின் விம்பம் கந்தக்கடவுளின் சிரசிலிருந்து

எழுவது போன்ற அழகிய காட்சியை இங்கு காணலாம். இலங்கையில் வேறெந்தக்கோயிலிலும் காணக்கிடைக்காத இவ்வரிய காட்சியை இங்கு மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

## கி.மு 4ம் நூற்றாண்டில் காளிசேனனால் அழிக்கப்பட்ட ஆலயம்

கந்தன் எய்த பாணம் வேலுருக்கொண்டு இங்கிருந்த வெள்ளை நாவல் மரத்தில் தங்கியதால் இவ்விடம் கந்த பாணத்துறை என்ற பெயர் பெற்றது. மேலும் வெள்ளை நாவல்பதி, நாகர்முனை, உன்னரசுகிரி போன்ற பெயர்களும் ஆதியில் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டன. கி.பி. 150ல் இங்கு வந்த தொலமி தனது தேசப்படத்தில் திருக்கோயில் பகுதியை நனிகிரி எனக் குறிப்பிட்டுள்ளார். மகாவம்சத்தில் இது மணிநாகபவத்த என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கருவறை கோபுரம்

கி.மு 4ம் நூற்றாண்டில் அயோத்தியிலிருந்து வந்த இரகு-வம்சத்தைச் சேர்ந்த காளிசேனன் என்பவனால் இவ்வாலயம் அழிக்கப்பட்டதாகவும், பல காலமாக அழிந்து சிதைந்து கிடந்த இவ்வாலயத்தை கி.பி. 1ம் நூற்றாண்டில் மட்டக்களப்புப் பகுதியை ஆட்சிசெய்து வந்த பிரசின்னசித்து எனும் மன்னன் புவனேககயபாகு என்பவனின் உதவியுடன் திருத்தியமைத்ததாகவும், இக்காலத்தில் கோயிலும், இவ்வூரும் திருக்கோயில் எனப்பெயர் பெற்றதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இவனே உன்னரசுகிரியை தலைநகராகக் கொண்டு இப்பகுதியை ஆண்டு வந்தான்.

புவனேககயபாகுவின் பின் அவனது மகனான மனு நேயகயபாகு சோழ நாட்டிலிருந்து சிற்பிகளை அழைப்பித்து வந்து திருக்கோயில் ஆலயத்தில் ஏழுமாடத் தூபியை எழுப்பியதோடு மதில், மண்டபங்கள், மாதர்சாலை, வாகன சாலை, கோபுர வாசல் போன்றவற்றையும் கட்டி தங்கத்தகடு பூட்டிய கொடிக்கம்பத்தையும் அமைத்து, ஏழு தட்டுத் தூபியின் மீது ஏழு தங்கக் குடங்களையும் வைத்து, ஆலயத்திற்கு ஆறு வீதிகளையும் அமைத்து குடமுழுக்கு விழாவை சிறப்பாகக் கொண்டாடியதாக மட்டக்களப்பு மான்மியம் மேலும் விபரிக்கிறது. இவன் கோயில் திருப்பணிகளை நன்கு மேற்கொள்வதற்காக ஏரிகளை அமைத்ததோடு நெல்கழனிகளையும் அமைத்து, ஆறுகாலப் பூஜைகளுக்கும் ஊழியர்களையும் நிய-மித்தான் என அறியப்படுகிறது.

**மனுநேயகயபாகுவால் கற்கோயிலாக கட்டப்பட்ட ஆலயம்.**

இம்மனுநேயகயபாகு மனுமன்னன் என போற்றப்பட்டவன். மனுநீதிச் சோழனுக்கு நிகராக சிங்கள இலக்கியங்களில் போற்றப்-பட்ட எல்லாளனே மனுமன்னனாவான். கி.மு. 145-101 காலப்-பகுதியில் இலங்கை முழுவதையும் 44 வருடம் ஆண்ட எல்லாளனே "மனுமன்னன்" எனப்படுபவன். இதன்படி திருக்கோயில் முருகன் ஆலயத்தை முதன் முதலில் கற்கோயிலாக கட்டி குடமுழக்கு விழாவை சிறப்பாக கொண்டாடியவன் இவனே. பல நூற்றாண்டு காலமாக மண்கோயிலாகவும், மரக்கோயிலாகவும் இருந்த இக்-கோயிலை கி.மு. 2ம் நூற்றாண்டில் முதன் முதலாக சிறிய கற்கோயிலாக கட்டியவன் மனுநேயபாகு எனும் எல்லாள மன்னனே. மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மனுநேய பாகுவின் காலம் கலி 3150. இது கி.பி 48க்கு சமமானது.

எல்லாள மன்னனின் காலம் கி.மு 145 - 101 காலமாகும். இக்காலப் பகுதி கிட்டதட்ட பொருந்துகிறது. பாண்டிய இளவரசர்கள் ஐவர் அனுராதபுரத்தை வெற்றி கொண்டு கி.மு 44- 29 வரையான 15 வருட காலப்பகுதியில் ஒருவர் பின் ஒருவராக ஆட்சி செலுத்தினர். புலகத்தன், பாகியன், பனையமாறன், தத்திகன், பிலயமாறன் எனப்படும் இவ் ஐவரும் கி.மு முதலாம் நூற்றாண்டில் தெற்கில் உருகுனை வரை ஆட்சி செலுத்தினர். தமிழ், இந்து மன்னர்களான இவர்கள் திருக்கோயில் கந்தசுவாமிக் கோயிலுக்கு திருப்பணிகள் செய்து வழிப்பட்டனர். ஏற்கனவே கட்டப்பட்டு முடிக்கப்படாத பகுதிகளை இளவரசர்கள் கட்டி முடித்ததாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

**பிற்காலப் பாண்டியர் கட்டிடக்கலை அம்சங்கள் நிறைந்த ஆலய அமைப்பு.**

கி.பி 11ம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் கதிர்சுதனால் இவ்வாலயம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டதாகவும், அதன் பின்பு கி.பி 13ம் நூற்றாண்டில் காலிங்க மாகோன் காலத்திலும், குளக்கோட்டு மன்னனாலும், கி.பி 13ம் நூற்றாண்டில் பாண்டியன் செல்வாக்கு பெற்றிருந்த காலத்திலும் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. கி.பி 11ம் நூற்றாண்டில் இவ்வாலயம் ஏழு தட்டுத் தூபிகளுடனும், ஏழடுக்கு கோபுரங்களுடனும் ஏழு அடுக்கு வீதிகளுடனும் அமைந்திருந்ததாக அறியப்பட்டுள்ளது.

இவை யாவும் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுள்ளன. தற்போதைய ஆலய அமைப்பு பாண்டியர் பாணியில் காணப்படுகிறது. ஆலயம் அழிக்கப்பட்ட பின் சிதைவுற்றுக் காணப்பட்ட கருவறை விமானமும், அதன் தூண்களும், அரைத் தூண்களும், அவற்றில் காணப்படும் போதிகைகளும் பாண்டிய கட்டிடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. இப்பகுதி கூடியவரை பழுதடையாது பேணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது பொலநறுவையில் உள்ள முதலாம் சிவாலயத்தை பெரிதும் ஒத்துள்ளது. கற்பக்கிரகம், அந்தரானம், அர்த்த மண்டபம் போன்றவை சோழர் காலக் கோயில் அமைப்பை ஒத்துள்ளன. எனினும் தேவ கோஷ்டம், தாமரைப் போதிகை, கீர்த்தி முகம், யாளி வரிசை போன்றவை பாண்டியர் சாயலை ஒத்ததாகும். இவ்வமைப்புகளின் படி

இவ்வாலயம் கி.பி 13ம் நூற்றாண்டில் மகோன் ஆட்சியின் போது குளக்கோட்டு மன்னனாலும், அதற்கு பின் இப்பகுதியில் பாண்டியன் செல்வாக்குப் பெற்ற 1284- 1304 வரையான காலப்பகுதியிலும் புனரமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே சோழர் காலத்தில் அவர்களது பாணியில் அமைக்கப்பட்ட ஆலயத்தில் பாண்டிய கலை மரபுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

**குளக்கோட்டன், 6ம் விஜயபாகு, விமலதர்மசூரியன் ஆகியோரின் திருப்பணிகள்.**

இவ்வாலயத்திற்கு 16ம் நூற்றாண்டில் 6ம் விஜயபாகு திருப்பணிகள் செய்தான் என்பதை கல்வெட்டு ஒன்று கூறுகிறது. ஒரு தடவை கண்டி மன்னனான விமலதர்மசூரியனாலும் திருப்பணிகள் செய்யப்பட்டு, மானியங்கள் வழங்கப்பட்டும் உள்ளதாக தெரியவருகிறது. கி.பி 1603ல் மட்டக்களப்புக்கு வந்த வேளை விமலதர்மசூரியன் திருக்கோயிலைத் தரிசித்துள்ளான். இவ்வாலயத்திற்கு கி.மு 2ம் நூற்றாண்டு முதல் போர்த்துக்கேயர் காலம் வரை மன்னர்கள் தொடர்ச்சியாக திருப்பணிகள் செய்து வந்துள்ளனர்.

கி.பி 13ம் நூற்றாண்டில் காலிங்க மாகோன் இஸ்லாமிய பரிபாலனத்திற்கென வன்னிமைகள் வகுத்ததாகவும், தென்னிந்தியா-விலிருந்து வரவழைக்கப்பட்ட மக்களை இங்கு குடியமர்த்தி திருப்பணிகள் செய்வித்தான் எனவும் தெரியவருகிறது. திருக்கோயில் பணிகளுக்கென்றே கொண்டு வரப்பட்டு கோரைக்களப்பு என்னு-மிடத்தில் குடியேற்றப்பட்ட பூபால கோத்திரக் குடியினர் மாகோன் காலத்தில் ஏழு குடிகளாக வகுக்கப்பட்டு திருக்கோயில் ஆலயத்திற்கு திருப்பணிகள் செய்ய அமர்த்தப்பட்டதாக “குளிக்கல் வெட்டுமுறை” பாடல் கூறுகிறது.

**திருக்கோயில் முருகனாலயம் பற்றிய நான்கு கல்வெட்டுக்கள்**

திருக்கோயில் ஆலயத்தில் வேறெந்த ஆலயத்திலும் இல்லாத சரித்திர சான்றுகள் பல காணப்படுகின்றன. இலங்கையில் அதிகளவில் கல்வெட்டுக்களைக் கொண்ட ஒரு சில இந்து ஆலயங்களில் திருக்கோயிலும் ஒன்றாகும். இங்கு நான்கு தமிழ்க் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இதே போன்று அதிக கல்வெட்டுக்களைக் கொண்ட கோயில்களாக பெரியகுளம் நாதனார்

சிவன் கோயிலும் கந்தளாயில் அமைந்துள்ள இராஜராஜேஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் விளங்குகின்றன. இவை மூன்றும் திருகோணமலை மாவட்டத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.



திருக்கோயில் கல்வெட்டு

திருக்கோயில் கல்வெட்டுக்கள் நான்கில் ஒரு துண்டுக் கல்வெட்டும் தூண் கல்வெட்டும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. தூண் கல்வெட்டு 5 அடி உயரமானதும், மூன்று பக்கங்களிலும் தமிழ் எழுத்துக்களும், நான்காவது பக்கம் மயிலின் உருவமும், முச்சூலமும் செதுக்கப்பட்டுள்ளது. இதில் 38 வரிகளில் எழுத்துக்கள் காணப்படுகின்றன. தொடக்கத்தில் சூரியனும் சந்திரனும் பொறிக்கப்பட்டுள்ளன. கி.பி 12ம் நூற்றாண்டிற்குரிய இக்கல்வெட்டு மாகோன் காலத்தில் பொறிக்கப்பட்டதென சில ஆய்வாளர்களும் 6ம் விஜயபாகுவின் காலத்திற்குரியது என வேறுசில ஆய்வாளர்களும் கூறுகின்றனர். கி.பி 1513 - 1521 வரை கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த வேளை தனது மூன்று புதல்வர்களால் கொல்லப்பட்டவனே 6ம் விஜயபாகுவாகும். இக்கல்வெட்டில் விஜயபாகுவின் 10வது

ஆட்சியாண்டில் சங்கரன் கோயிலுக்கு வோவில் எனும் இடம் நன்கொடையாகக் கொடுக்கப்பட்டது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்டுள்ள வோவில் என்னுமிடம் இங்கிருந்து தெற்கில் 4 மைல் தொலைவில் இருப்பதாக ஆய்வாளர் எஸ். ஒ. கனகரட்னம் தெரிவித்துள்ளார். இக்கல்வெட்டு தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயிலிலிருந்து கிடைக்கப்பெற்றது.

திருக்கோயில் துண்டுக்கல் வெட்டு 2 அடி நீளமும், அகலமும் கொண்ட சற்சதுர வடிவம் கொண்ட கல்லாகும். இதில் 12 வடிவங்களில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில வரிகள் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. கி. பி. 12ம் நூற்றாண்டிற்குரிய எழுத்துக்களைக் கொண்ட இக்கல்வெட்டில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குரிய ஒரு எல்லை சம்பந்தமான திருப்பணி பற்றிய செய்தி எழுதப்பட்டுள்ளது. இதன் எழுத்துக்கள் அதிகளவில் சிதைந்து காணப்படுவதால் இக்கல்வெட்டு எழுதப்பட்டதன் நோக்கம் சரியாகத் தெரியவில்லை. இக்கல்வெட்டும் மாகோன் காலத்திற்குரியதென அறியப்பட்டுள்ளது. மேலும் 16ம் நூற்றாண்டிற்குரியதெனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இங்குள்ள இன்னுமோர் கல்வெட்டு 4 அடி உயரமும் 9 அங்குல அகலமும் கொண்டது. ஆறு வரிகளில் மட்டுமே எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் காலம் கி.பி. 18ம் நூற்றாண்டு என கண்டறியப்பட்டுள்ளது. இதிலும் எல்லை சம்பந்தமான ஓர் தகவல் சொல்லப்பட்டுள்ளதாக தெரிகிறது.

### போர்த்துக்கேய தளபதி அசவிடோ செய்த அக்கிரமமும், பாதிரியார் குவைரோசின் குறிப்பும்


இவ்வாலயம் கி.பி. 17ம் நூற்றாண்டில் அசவிடோ என்னும் போர்த்துக்கேய தளபதியால் இடித்தழிக்கப்பட்டது. இவ்வாலயம் அழிக்கப்படுவதற்கு முன்பு இதனைக் கண்ட குவைரோஸ் என்னும் போர்த்துக்கேய பாதிரியார் திருக்கோயில் முருகனைப் பற்றி தனது குறிப்பில் எழுதியுள்ளார். அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் மூன்று கோபுரங்கள் இங்கு காணப்பட்டதாகவும், இவர்கள் முக்கியமாக கடற்கரையை ஒட்டி அமைந்திருந்த கோயில்களையே அழித்ததாகவும், மட்டக்களப்பின் உட்பகுதியில் இருந்த கோயில்-

களை இவர்கள் எக்காரணத்திலோ அழிக்கவில்லை எனவும் அவரது குறிப்பு தெரிவிக்கிறது.

இவ்வாலயத்தின் பண்டைய அமைப்பு ஏனைய கோயில்களிலிருந்தும் வேறுபட்டிருந்தது. தில்லை சிதம்பரத்தின் கனகசபை அமைப்பைப்போல் இரண்டு பக்கங்களிலும் சந்திக்குள் புகுவதற்கு வழி அமைக்கப்பட்டிருந்தது. இவை இரண்டும் வேட முகப்பு, சாமி முகப்பு எனப்பெயர் பெற்றிருந்தது. சுவாமி வலம் வருவதற்கு மூன்று வீதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்வீதிகளின் அடித்தளங்களை இன்றும் காணக்கூடியதாக உள்ளது.

**திருக்கோயில் விஷக்கல்**

முருகன் கோயிலுக்கு செல்லும் வழியில் பாம்பு விஷத்தை முறிக்கும் பழமை வாய்ந்த கல்லொன்று காணப்படுகின்றது. இக்கல்லிலே பாம்பு கடித்த உடலின் பகுதியை வைத்தவுடன் உடலிலுள்ள விஷம் உறிஞ்சப்பட்டு குணமடைவதாக கூறுகின்றனர். பாம்புக்கடி விஷ முறிவுக்கு திருக்கோயில் பிரசித்தி பெற்ற இடமாகும்.



திருக்கோயில் விஷக்கல்

# 7. திருக்கோயில் முதல் பானமை வரை

**கோரைக்களப்பு**

*திருக்கோயில் முருகன் ஆலயத்திலிருந்து புறப்படும் யாத்திரீகர்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்க பல இடங்களினூடாக செல்கின்றனர். பாதையின் வலது பக்கம் வேல்காமம் குளமும், அதை அடுத்து பெரிய குளமும் அமைந்துள்ளன. இடது பக்கம் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. இவ்விடத்தை அடுத்து புதிய திருக்கோயில் எனும் இடமும் சமாதிப் பிள்ளையார்க் கோயிலும் அமைந்துள்ளன. ஓர் சந்நியாசி தங்கியிருந்து சமாதியான இடம் இது. இதன் வட மேற்குப் பக்கம் சாம்பிலான் குளமும், மேற்குப் பக்கம் கோரைக்களப்பு குளமும் அமைந்துள்ளன. கோரைக்களப்பு குளத்தின் இடது பக்கம் கோரைக்களப்பு அமைந்துள்ளது.*

*ரூபஸ் குளத்திலிருந்தும், கஞ்சிகுடிச்சாறு குளத்திலிருந்தும் வரும் சிற்றாறுகள் கோரைக்களப்பில் கலக்கின்றன. கோரைக்களப்பிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஆறு மரணகண்டி ஆறு எனும் பெயரில் அகலமாகவும், ஆழமாகவும் உருவாகி பீலி முகத்துவாரத்தில் கடலுடன் கலக்கிறது. மரணகண்டி ஆற்றின் ஒரு கிளை தெற்கு நோக்கி ஓடி உமிரிக்களப்பில் கலக்கிறது. உமிரிக்களப்பின் நீர் பண்டைய காலத்தில் அதன் கிழக்குப் பக்க கடலில் சங்கமமாகியுள்ளது. இதன் முகத்துவாரம் மணலினால் மூடப்பட்டு பற்றைகள் வளர்ந்து கடலுடன் இருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.*

*இவ்விரு களப்புகள் மூலம் பாலைக்குடா எனும் தீபகற்பமும், சல்லித்தீவு எனும் தீவும் உருவாகியுள்ளன. பாலைக்குடாவில் பால விநாயகர் கோயிலும், ஆலையடி முத்துமாரியம்மன் கோயிலும் அமைந்துள்ளன. பாலைக்குடாவின் தெற்கில் அமைந்துள்ள சல்லித்தீவில் மங்கை மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இப்புராதன ஆலயம் மக்கள் குடியிருப்புகள் இல்லாத சல்லித்தீவில் கடலோரத்தில் அமைந்துள்ளது.*



படம் 17 - கோரக்களப்பு பாவங்கை நாட்டுக்கல்



படம் 18 - சங்கமன்கண்டி மலை முருகன் கோயில்



படம் 19 - சங்கமன்கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில்



படம் 20 - சங்கமன்கண்டி ரோட்டுப் பிள்ளையார் கோயில்



படம் 21 - சங்கமன்கண்டி முனை சிதைவடைந்த வெளிச்ச வீடு



படம் 22 - சங்கமன்கண்டி படிக்கட்டு மலை



படம் 23 - கோமாரி கொடுப்பத்தை பிள்ளையார் கோயில்



படம் 24 - கோமாரி முகத்துவாரம்

**பாவங்கை நாட்டுக்கல்**

கோரைக்களப்பு குளத்தைக் கடந்து வரும் யாத்திரீகர்கள் ஓர் ஏத்தத்தை அடைகின்றனர். இவ்விடத்தில் ஓர் வழிப்பிள்ளையார் கோயில் காணப்படுகிறது. இக்கோயிலின் இடது பக்கம் மலைப்பாறைகள் நிறைந்த ஓர் மண்மேடு காணப்படுகிறது. இம்மண் மேட்டின் தெற்குப் பக்கம் களப்பின் ஓரமாக நட்டுவைத்தாற் போல ஓர் உருண்டையான பாறை காணப்படுகிறது. **(படம் 17)** ஓர் தட்டையான பாறை மீது இப்பாறை ஒட்டிக்கொண்டிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இதுவே பாவங்கை நாட்டுக்கல் என அழைக்கப்படுகிறது.

கதிர்காமத்திற்கு யாத்திரை சென்ற ஓர் சந்நியாசி இவ்விடத்தில் தங்கியிருந்ததாக கூறப்படுகிறது. இக்கற்பாறையில் இத்துறவி வேலை ஸ்தாபித்து பூஜை செய்து வணங்கியுள்ளார். தட்டையான பாறை மீது இவர் பொறித்த வேல் சின்னம் காணப்படுகிறது. நாட்டுக் கல்லிலிருந்து எப்பொழுதும் எண்ணெய் வழிந்து கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. அவ்விடம் ஈரமாகக் காணப்படுகிறது. களப்புக்கு மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் இப்பாறைக்கு வந்து முருகனை வணங்கிச் செல்கின்றனர். சுமார் 10 அடி உயரமான இப்பாறையை ஒட்டி ஒற்றைப் பனைமரம் ஒன்று காணப்படுகிறது.

**குறவந்தவாடி வள்ளியம்மன் கோயில்**

ஏத்தத்து வழிப்பிள்ளையார் கோயிலைக் கடந்து வரும் யாத்திரீகர்கள் ஒரு கி.மீ தூரத்தில் உள்ள காஞ்சிரங்குடா சந்தியை அடைகின்றனர். இங்கிருந்து வட மேற்குப் பக்கத்தில் 5 கி.மீ தொலைவில் சாகாமம் அமைந்துள்ளது. சந்தியில் காஞ்சிரங்குடா பாலத்தை அடுத்து 700 மீற்றர் தூரத்தில் ரூபஸ் குளம் சந்தி அமைந்துள்ளது. இச்சந்தியின் மேற்குப் பக்கம் ரூபஸ் குளம், கஞ்சிகுடிச்சாறு ஆகிய இடங்களுக்குச் செல்லும் வீதியில் ஒரு கி.மீ தூரத்தில் மிகப்பழமை வாய்ந்த குறவர் கிராமம் அமைந்துள்ளது. கஞ்சிகுடிச்சாறு ஆற்றின் கரையில் பண்டைய காலம் முதல் வாழ்ந்த இம்மக்களுக்கு அண்மையில் புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. பண்டைய வனக் குறவர்கள் வழிபட்ட அவர்களது குல தெய்வமான வள்ளியம்மன்

கோயில் இங்கு அமைந்துள்ளது. குறவந்தவாடி எனும் பழமை வாய்ந்த இக்கிராமம் ஸ்ரீ வள்ளிபுரம் என அழைக்கப்படுகிறது. பண்டைய காலம் முதல் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்லும் யாத்திரீகர்கள் இங்குள்ள வள்ளியம்மனை வணங்கிச் செல்வதுண்டு. வள்ளியம்மனுக்கு அபூர்வமாக அமைக்கப்பட்டிருக்கும் ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இது போன்று பண்டைய காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த குறவர் குலத்தவர்களால் அமைக்கப்பட்ட மிகப் பழமை வாய்ந்த கோயிலொன்று புத்தளம் மாவட்டத்தில் உள்ள வில்பத்து காட்டின் கடலோரத்தில் அமைந்துள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

**தாண்டியடி**

ரூபஸ் குளம் சந்தியை அடுத்து தாமரைக் குளம் அமைந்துள்ளது. இங்கிருந்து சிறிது தூரத்தில் பாதையின் கிழக்குப் பக்கத்தில் உமிரிக் களப்பு அமைந்துள்ளது. யாத்திரீகர்கள் இவ்விடத்தில் நடந்து வரும் பொழுது முன் பக்கத்தில் ஓர் மலையை காணலாம். இதுவே சங்கமன் கண்டி மலையாகும்.

இன்னும் சிறிது தூரம் வந்ததும் இம்மலை உச்சியில் அமைந்திருக்கும் முருகன் கோயிலைத் தரிசிக்கலாம். இங்கிருந்து சிறிது தூரத்தில் பாதையின் மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதி மலையைச் சுற்றி வேலமுனைக் குளத்தின் ஊடாக மலையின் தென் பகுதியிலுள்ள வயல் வெளிகளுக்குச் செல்கிறது. இப்பாதையின் இடையில் இன்னுமோர் பாதை பிரிந்து வடக்கு நோக்கி வயல்களுடாக கஞ்சிக் குடிச்சாறுக்குச் செல்கிறது. உமிரிக்களப்பின் முடிவில் மலையடிவாரத்தில் தாண்டியடி கிராமம் அமைந்துள்ளது. சாகாமம் சந்தியிலிருந்து ஏழரை கி.மீ தூரத்தில் தாண்டியடி உள்ளது.

**சங்கமன் கண்டி மலைகளும், பண்டைய இராஜதானியும்**

சங்கமன் கண்டி மலைத் தொடர் உமிரிக் களப்பிற்கும், கோமாரிக் களப்பிற்கும் இடையில் பாதையின் மேற்குப் பக்கத்தில் காணப்படுகிறது. இம்மலைத் தொடரில் வடக்குத் தெற்காக ஒன்பது

மலைக் குன்றுகள் காணப்படுகின்றன. காட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் பின்பக்கம் உள்ள மலைகள் தட்டையான மலைப் பாறைகளாகும்.

பண்டைய காலம் முதல் கண்டி இராச்சிய காலம் வரை இம்மலைப் பகுதி ஓர் சிற்றரசனின் இராஜதானியாக விளங்கியுள்ளது. உயரமான மலைக் குன்றுகளில் கோயில்களும், தட்டையான மலைப்பாறைகளில் அரச மாளிகை மற்றும் ஏனைய அரச கட்டிடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. பிரதான வீதியின் ஓரத்தில் முருகன் மலை, சிவன் மலை, கற்சுனை மலை, படிக்கட்டு மலை ஆகிய மலைக் குன்றுகள் காணப்படுகின்றன.

சுமார் 12 கி.மீ சுற்றளவில் 4 கி.மீ அகலமும், 4 கி.மீ நீளமும் கொண்டாகதாக இம்மலைத் தொடர் அமைந்துள்ளது. இவ்வட்ட வடிவமான மலைத் தொடரிலேயே பண்டைய இராஜதானி அமைந்திருந்தது. முற்றிலும் பாதுகாப்பான ஓர் அரனாக இம்மலைகள் காணப்பட்டதால் பண்டைய உன்னரசுகிரி மன்னர்கள் இவ்விடத்தில் தமது உப இராஜதானியை அமைத்திருந்தனர். இம்மலையைச் சுற்றி பல குளங்களையும், அவற்றை அடுத்து ஏராளமான பரப்பு நெற் களனிகளையும் உருவாக்கியிருந்தனர். சங்கமன் கண்டி மலையைச் சுற்றி இன்றும் தூர்ந்துபோன நிலையிலும், நல்ல நிலையிலும் பல குளங்கள் காணப்படுகின்றன.

மலையின் வடக்கில் மாண்டியாவளை குளமும், கொக்கலை குளமும், மேற்குப் பகுதியில் வேலமுனை குளமும், தெற்கில் ஆலடி குளமும், கிழக்கில் காரலையான் குளமும் இன்றும் காணப்படுகின்றன. சங்கமன் கண்டி மலைகளில் பண்டைய காலம் முதல் சிவன், முருகன், விநாயகர், நாகம் ஆகிய தெய்வ வழிபாடுகள் நிலவி வந்துள்ளன. திருக்கோயிலிலிருந்து 13 கி.மீ தூரத்திலும் சங்கமன் கண்டி அமைந்துள்ளது.

**புராதன நாகர் குல சிற்றரசனின் இராஜதானி**

மிகப் புராதன காலத்தில் தென்கிழக்கிலங்கையில் வாழ்ந்து வந்த பூர்வீகக் குடிகளான நாகர் குலத்தவர்களின் இராஜதானியாக சங்கமன் கண்டி விளங்கியுள்ளது. முன்பு "கண்டி" என்பது ஒரு

அரசின் தலைநகரைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் பல செப்பேடுகளில் கண்டி என்னும் சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போதைய கண்டி என்னும் நகரம் கி.பி 1540ல் உருவானது. அன்று சங்கமன் எனும் நாகர் குல சிற்றரசனால் ஆளப்பட்ட இராஜதானியின் தலைநகரமாதலால் "சங்க மன் கண்டி" என்ற பெயரைப் பெற்றது.

கி.மு. 3ம் நூற்றாண்டில் கலிங்கர் எனப்படும் திராவிடக் குடியினர் இப்பகுதியில் குடியேறினர். இவர்களின் செல்வாக்கு வலுப்பெற்றது. இதனால் பூர்வீகக் குடிகளான நாகர்களின் செல்வாக்கு குறைந்தது. கலிங்க குலத்தவரினால் நிரந்தரமாக ஒரு அரசியல் பிரிவு அமைக்கப்பட்டிருந்தது. கி.பி. 2ம் நூற்றாண்டளவில் சங்கமன் கண்டிப் பிரதேசம் வடக்கே தாடகிரி என்னும் சாகாமத்தின் வட பகுதிவரை பரந்திருந்தது. இக்காலப்பகுதியில் இப்பிரதேசம் சிறப்புற்று விளங்கியது. அப்போது இவ்விடத்திலுள்ள சங்கமன் கண்டி மலையில் சங்கமன் கண்டி சிவாலயம் அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அடர்ந்த காடாகக் காட்சியளிக்கும் இம்மலைப் பிரதேசமே அன்றைய இராஜதானியின் தலைநகராக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

### சங்கமன் கண்டி மலையும் சிவ வழிபாடும்

இன்று கதிர்காம யாத்திரை செல்வோரும் ஏனையோரும் வணங்கிச் செல்லும் சங்கமண் கண்டி பிள்ளையார் கோயில் பிரதான வீதியோரமாக அமைந்துள்ளது. இவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கி சுமார் 500 மீற்றர் தொலைவில் சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் முன்பக்கம் ஓர் மலைப்பகுதி உள்ளது. இம்மலையில் புராதன சிவாலயத்தினதும் இடிபாடுகள் காணப்படுகின்றன. கட்டிட இடிபாடுகள், கற்தூண்கள், செங்கற்கள், அத்திவாரங்கள், மட்பாண்டத் துண்டுகள் போன்றவற்றைக் காணக்கூடியதாக உள்ளன. அத்துடன் இங்கு சிவாலயச் சின்னங்களும் காணப்படுகின்றன.

இங்கு உள்ள வில்வமரத்தின் கீழ் இருக்கும் ஓர் பீடத்தில் ஆவுடையார் அற்ற லிங்கம் போன்ற உருவங்கள்

மூன்று காணப்படுகின்றன. இவை இங்கு அமைக்கப்பட்டிருந்த சிவாலயத்தின் எச்சங்களாகக் கருதப்படுகின்றன. கி.பி. 12ம் நூற்றாண்டின் குளக்கோட்டன் காலத்தில் கோணேஸ்வரப் பெருமானின் எல்லைப் பூமியாக மேற்கே முனீஸ்வரத்திலும், வடக்கே கரம்பகத்திலும், கிழக்கே வங்கக் கடலிலும், தெற்கே சங்கமண் கண்டியிலும் சூலங்கள் நாட்டப்பட்டிருந்ததாக கோணேசர் கல்வெட்டு கூறுகிறது. இதன்படி மேற்கிலும், வடக்கிலும் சூலம் நாட்டப்பட்டிருந்த இடங்களில் சிவாலயங்கள் அமைந்திருந்தது போல தெற்கிலும் சூலம் நாட்டப்பட்டிருந்த இடமான சங்கமன் கண்டியிலும் சிவாலயம் அமைந்திருக்கலாம் என உறுதியாக நம்ப இடமுண்டு. இவ்வாலயமும் குளக்கோட்டு மன்னன் காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

**புராதன லிங்கக் கற்கள்**

லிங்க வடிவமுள்ள இம்மூன்று விக்கிரகங்களும் இவ்வூர் மக்களால் பிள்ளையார் என நினைத்தே வழிபாடு நடத்தப்படுகின்றன. இது சங்கமன் கண்டிக் காட்டுப் பிள்ளையார் என தற்போது வழங்கப்படுகிறது. இப்புராதன சிவாலயம் இருந்த இடத்தைச் சுற்றி கொன்றை, திருவாத்தி, அத்தி, முதிரை, பாலை, வீரை, சமளை, விளா போன்ற மரங்கள் வளர்ந்து அடர்ந்த காடாகக் காட்சி தருகிறது. இக்காட்டில் வசிக்கும் காட்டு விலங்குகள் இப்பகுதிக்கு வந்து செல்வதாகவும் கூறப்படுகிறது.

சில சமயங்களில் இங்கு வரும் யானைகள் இந்த லிங்கங்களை புரட்டி உருட்டி பக்கத்திலுள்ள குளத்தில் போட்டுவிடுமாம். பின் அங்கு செல்லும் பக்தர்கள் லிங்கங்களைத் தேடிப்பிடித்து வில்வ மரத்தின் கீழ் வைத்து பூஜித்துச் செல்வார்களாம்.

இம்மலைக்குக் கிழக்கில் உள்ள மலையில் நீர்ச்சுனையொன்று உள்ளது. அல்லிப் பூக்கள் நிறைந்து காணப்படும் இது அன்று இங்கிருந்த கோயிலுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மேற்குப் புறத்தில் உள்ள மலையில் ஒரு குகை காணப்படுகிறது. இதுவே துவட்டா முனிவர் குகைக் கோயிலாக இருக்க வேண்டும் என நம்பப்படுகிறது.

சங்கமன் கண்டி மலையில் முருகன் கோயிலும் இருந்ததாக வரலாறுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இன்று வீதியோரத்தில் பிள்ளையார் கோயில் மட்டுமல்லாது, முருகன் கோயிலும், சல்லித்தீவு என்னுமிடத்தில் மங்கமாரியம்மன் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. அத்துடன் மலைமீதும் முருகன் கோயில் அமைக்கப்பட்டு பிரதான வீதியிலுள்ள பிள்ளையார் கோயிலிலிருந்து மலைக் கோயில் வரை பாதையும் போடப்பட்டுள்ளது. மலையைக் குடைந்து சுமார் 25 அடி ஆழத்தில் தீர்த்தக் கிணறும் வெட்டப்பட்டுள்ளது.

**சங்கமன் கண்டி அரண்மனை இடிபாடுகள்**

இங்கிருந்து சுமார் ஒரு மைல் தொலைவில் அழிந்துபோன நிலையில் ஓர் அரண்மனையின் இடிபாடுகள் காணப்படுகின்றன. மேலும் இப்பகுதியில் பல சிறிய குளங்களும், ஏரிகளும் அமைக்கப்பட்டதாகவும் திருக்கோயில் திருப்பணிக்காக சங்கமன் கண்டி முதல் தாடகிரி என்னும் சாகாமம் வரை 24 ஏரிகள் ஒன்றிணைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. மக்களால் கைவிடப்பட்ட இவ்வேரிகள் அடர்ந்த காட்டின் மத்தியில் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இவ்வரலாற்று ஆதாரங்கள் மூலம் தொடர்ச்சியான நாகரீகம் நிலவியிருந்த ஒரு புராதன நகர் சங்கமன் கண்டி என அறியக்கூடியதாக உள்ளது. கி.பி 9ம் நூற்றாண்டு முதல் 12ம் நூற்றாண்டு வரை இப்பகுதி உன்னத நிலையிலிருந்ததாகவும் இக்காலப்பகுதியில் சங்கமன் கண்டி மலை மீதிருந்த சிவாலயமும் சிறப்புற்று விளங்கியிருந்ததாகவும் கூறப்படுகிறது.

சோழர் காலத்தில் அவர்களின் பிரதிநிதிகளான கதிர்சுதன், மதிதன் ஆகியோரின் அரச மாளிகையே இதுவெனக் கூறப்படுகிறது. கி.பி 11ம் நூற்றாண்டில் சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் அவர்களது தெற்கெல்லையாக மாணிக்க கங்கை விளங்கியுள்ளது. ரோகனையில் இருந்த சிங்கள மன்னர்களின் எதிர்ப் பின் காரணமாக இவ்வெல்லை உகந்தை வரை மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் சோழரின் பிரதிநிதியாக கதிர்சுதன் எனும் சிற்றரசன் ஆட்சி செய்து வந்தான். கி.பி 1013ம்

ஆண்டளவில் மட்டக்களப்புத் தமிழகத்தை உன்னரசுகிரி, மட்டக்களப்பு, மண்முனை ஆகிய மூன்று ஆட்சிப் பிரிவுகளாக பிரித்து பரிபாலனம் செய்து வந்து கதிர்சுதன் காலத்தில் பல சைவ ஆலயங்கள் புனரமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. இவனுக்குப் பின் வந்த மதிசுதனும் சைவ ஆலயங்கள் பலவற்றைப் புனரமைத்தான். போரதீவு சித்திர வேலாயுத சுவாமி கோயில், மண்டூர் முருகன் கோயில் போன்றவை இவனது திருப்பணிகளுக்குட்பட்ட ஆலயங்களாகும்.

சோழர் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட சங்கமன் கண்டி அரச மாளிகை அவர்களுக்கெதிராக போர் தொடுத்த முதலாம் விஜயபாகுவினால் கைப்பற்றப்பட்டதாகவும், இம்மாளிகையை மேலும் பலப்படுத்திய விஜயபாகு சிலகாலம் இங்கு பாசறையமைத்து தங்கியிருந்தே சோழர்களின் பலம்வாய்ந்த சாகாமம் இராணுவ முகாமைக் கைப்பற்றியதாகவும் கூறப்படுகிறது.

### சங்கமன் கண்டி முருகன் மலை கந்தசுவாமி கோயில்

சங்கமன் கண்டி மலைகளில் முதலாவதாக நாம் காணும் மலை முருகன் மலையாகும். **(படம் 18)** இது நேர்த்திமலை எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வழியாக கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை சென்ற முனிவரொருவர் இம்மலையில் வேலை வைத்து பூஜை செய்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையில் பெரிய நீர்ச்சுனையொன்றும், சிறிய நீர்ச்சுனைகள் மூன்றும் காணப்படுகின்றன. இம்மலையிலேயே தற்போது முருகனுக்கு ஓர் ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. பெரிய நீர்ச்சுனையில் அல்லிக் கொடிகளும் பூக்களும் நிறைந்து காணப்படுகின்றன. சுமார் **2000** வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

முருகன் மலையை அடுத்து தெற்குப் பக்கத்தில் சிவன் மலை காணப்படுகிறது. இம்மலையின் கிழக்குப் பக்கத்தில் பாதை ஓரத்தில் புதிய ரோட்டுப் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இம்மலையிலும் ஓர் சிறிய நீர்ச்சுனை அமைந்துள்ளது. இம்மலையை அடுத்து இரண்டு நீர்ச்சுனைகள் உள்ள ஓர் மலை காணப்படுகிறது. இது கற்சுனை மலை என அழைக்கப்படுகிறது.

இம்மலையின் கிழக்குப் பக்கத்தில் பாதை ஓரத்தில் படிக்கட்டு மலை காணப்படுகிறது. இம்மலையில் நூற்றுக்கும் மேற்பட்ட படிகள் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன.

இம்மலைமீது ஓர் ஆலயம் அல்லது காப்பரண் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இம்மலைகளை அடுத்து தெற்குப் பக்கத்தில் சில சிறிய தனித்தனி மலைப் பாறைகள் காணப்படுகின்றன. இவற்றின் தெற்கில் கோமாரிக் களப்பின் வடகரையில் கொடுப்பத்தை மலைப்பாறை அமைந்துள்ளது.

**சங்கமன் கண்டி அரண்மனையும், கல்வெட்டுக்களும்**

சங்கமன் கண்டி மலையில் உள்ள ஓர் மலைப் பாறைக் குகையில் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் இரண்டு பொறிக்-கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுக்களில் ஒன்றில் "பருமக" எனும் தமிழ் பிராமிக்கே உரிய சொல் காணப்படுகிறது, இதில் "பருமக வரளி புதஹ உபசக உதிய லேன" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பெருமகன் வரளியின் மகன் பக்தன் உதியனின் குகை எனப் பொருள்படுகிறது. உதியன் என்பவன் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி செய்த 10 பாண்டிய சத்திரிய வம்சத்து மன்னர்களில் ஒருவனாவான். இரண்டாவது கல்வெட்டின் முற்பகுதி அழிந்த நிலையில் இறுதிப்பகுதியில் மட்டும் "குசலேன" அதாவது குசனின் குகை எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

குசன் என்பவனும் 10 கதிர்காம சத்திரிய சகோதரர்களில் ஒருவனாவான். எனவே சங்கமன் கண்டி கற்குறைகளிலுள்ள கல்வெட்டுக்கள் மூலம் இப்பகுதி கதிர்காம சத்திரியர்களால் கூட்டாக ஆட்சி செய்யப்பட்ட பிரதேசம் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயிலின் பின்பக்கத்தில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் ஓர் பண்டைய நகரத்தின் இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 4 மைல் பரப்பளவில் இவை உள்ளதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்நகரில் காவடி வடிவில் சுற்று மதில்களுடன் கிழக்கிலும், மேற்கிலும்

வாயில்கள் அமைக்கப்பட்டதற்கான எச்சங்கள் காணப்படுகின்றன. இங்கிருக்கும் ஓர் தட்டையான பாறையில் ஏராளமான கற்தூ-ண்களும், கைப்பிடிச் சுவர்களும், உரல் வடிவ குழிக்கற்களும், கழிவறைக் கற்களும் காணப்படுகின்றன. இவையாவும் இங்கு ஆட்சி செய்த மன்னனின் அரண்மனை இடிபாடுகளாகும். இதனருகில் 40 அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட ஓர் தடாகத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. இது அரண்மனைத் தடாகம் எனக் கூறப்படுகிறது.

இதன் அருகில் ஆசனக்கற்கள், அரைவட்டக்கல், சிறிய அறைகளின் இடிபாடுகள், கற்பலகைகள் ஆகியனவும் ஆங்காங்கே வெவ்வேறு இடங்களில் நாகக்கற்கள் சிலவும் வெவ்வேறு இடங்களில் சிறிய கோயில்கள் பலவும் இருந்தமைக்கான இடிபாடுகளும் பரந்து காணப்படுகின்றன. சில இடங்களில் புராதன காலத்து செங்கட்டிகள் சிதறிக் காணப்படுகின்றன. இவை அனைத்தும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியை ஆட்சி செய்த கதிர்காம சத்திரிய மன்னர்களின் அரண்மனையும், அதை ஒட்டிய நகரத்தினதும் இடிபாடுகள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கதிர்காம சத்திரியர்களின் பின் இவ்விடம் கோதாபயனின் ஆட்சியிலும் பின்பு சோழர் காலத்தில் கதிர்சுதன், மதிசுதன் ஆகிய சோழ சிற்றரசர்களின் ஆட்சியிலும் அதன்பின்பு விஜயபாகுவின் ஆட்சியிலும், இறுதியில் குளக்கோட்டன் ஆட்சியின் கீழும் இப்பகுதி விளங்கியது என்பது வரலாற்றுக் குறிப்புகள் மூலம் அறியப்படுகிறது.

கதிர்காம சத்திரியர்கள் இப்பகுதியை ஆட்சி செய்வதற்கு முன்பு பூர்வீக நாகர் குலத்தவர்களின் இராஜதானியாக சங்கமன் கண்டி விளங்கியமையும் பின்பு கலிங்கரின் செல்வாக்குடன் விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

**சங்கமன் கண்டி மலையில் வாழ்ந்த முனிவர்கள்**

கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற முனிவர்களும், சித்தர்களும் சங்கமன் கண்டி மலையிலும், மலைக்குகைகளிலும் தங்கிச் சென்றுள்ளனர். காட்டுப்பிள்ளையார் ஆலயத்தின் மேற்குப்

பகுதியில் திருக்கேதீஸ்வரத்திலிருந்து கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த துவட்டா முனிவர் தங்கிச் சென்ற மலைக்குகை உள்ளதாகக் கூறப்படுகிறது. இங்கு இவர் சிவனை வழிபட்டுச் சென்ற குகைக்கோயில் இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதுபற்றி ஓர் கர்ணபரம்பரைக் கதையையும் இப்பகுதியில் உள்ள மக்கள் கூறுகின்றனர்.

ஒரு தடவை காட்டிற்குச் சென்ற ஒருவர் வழிதடுமாறி நின்ற போது இக்கோயிலின் மணியோசையைக் கேட்டு சென்று பார்த்தபோது ஓர் குகைக் கோயில் காணப்பட்டதாகவும். அங்கிருந்து பிரசாதம் பெற்று உண்டபின் அவ்விடத்திலேயே உறங்கி விட்டதாகவும், காலையில் ஒருவர் அவரை எழுப்பி வழியை காட்டி விட்டு மறைந்ததாகவும், வீடு வந்து சேர்ந்த அவர் தனது மனைவி பிள்ளைகளுக்கும் பிரசாதம் கொடுத்து விட்டு, தான் கண்ட கோயிலைப் பற்றி மனைவியிடம் கூறி முடித்தபின் ஊமையாகி விட்டதாகவும் அதன் பின்பு ஊர் மக்கள் காட்டுக்குச் சென்று பல நாட்கள் தேடியும் அக்கோயிலைக் கண்டு பிடிக்க முடியாமல் போய்விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது.

சங்கமன் கண்டி மலைப்பகுதியில் சில காலம் தங்கியிருந்த மயில்வாகன சித்தரின் சமாதிக் கோயில் காட்டுப் பிள்ளையார் ஆலயத்தின் வடக்குப் பக்கம் உள்ள சிறிய குளத்தின் அருகில் காணப்படுகிறது. மயில்வாகன சுவாமிகள் என அழைக்கப்பட்ட இவர் திருக்கோயில் பிரதேசத்தில் வாழ்ந்தவராவார். இவர் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவராவார்.

1885ம் ஆண்டு காலப்பகுதியிலும் சில சந்நியாசிகள் சங்கமன் கண்டி மலைப்பகுதியில் வாழ்ந்து வந்ததோடு, இங்கு மான்கள் போன்றவற்றை வளர்த்து வந்ததாகவும் முதியவர்கள் கூறுகின்றனர். எனவே சங்கமன் கண்டி மலைப்பகுதி சித்தர்களுக்கும், முனிவர்களுக்கும் உகந்த இடமாக விளங்கியுள்ளது.

**சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயில்**

தாண்டியடி கிராமத்தின் மேற்கில் 1 கி.மீ தூரத்தில் சங்கமன் கண்டி மலையடிவாரத்தில் புராதன காட்டுப் பிள்ளை-

யார் கோயில் அமைந்துள்ளது. **(படம் 19)** கதிர்காம பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடங்களில் ஒன்றாக இது விளங்குகிறது. 2000 வருடங்களுக்கு முன்பு இப்பகுதி ஓர் இராஜதானியாக இருந்த காலத்தில் மலையில் சிவவழிபாடும், முருக வழிபாடும், மலையடிவாரத்தில் விநாயகர் வழிபாடும், கோயிலின் பின்பக்கம் உள்ள அரண்மனை இடிபாடுகள் இருக்கும் இடத்தில் நாகவழிபாடும் நிலவியதாக ஆய்வுகள் கூறுகின்றன. மலையிலும், அடிவாரத்திலும் இருந்த ஆலயங்கள் போர்த்துக் கேயரால் கி.பி 1623ல் அழிக்கப்பட்டுள்ளன.

சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஒல்லாந்தர் காலத்தில் மலையடிவாரத்தில் ஆவுடையாரற்ற மூன்று சிவலிங்கக் கற்களை கண்டெடுத்த விவசாயிகள் இவ்விடத்திலிருந்த வில்வ மரத்தின் கீழ் இக்கற்களை வைத்து பிள்ளையார் என வழிபட்டு வந்தனர். திறந்த வெளிக் கோயிலாக இருந்த இவ்விடத்தில் ஆங்கிலேயர் காலத்தில் சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு இப்பகுதியில் மீண்டும் குடியமர்ந்த மக்களால் வழிபடப்பட்டது. இந்த லிங்கக் கற்களே மலை மீதிருந்த சிவாலயத்தின் எச்சங்களாகும்.

மேலும் இங்கு காணப்படும் புராதன தொல்பொருட் சின்னங்களான பலீபிடக் கற்கள், புராதன கோமுகியின் பாகம், புராதன தூணின் உச்சிப் பாகம், லிங்கக் கற்கள் போன்றவை இங்கு பண்டைய காலத்தில் ஓர் ஆலயம் இருந்தமைக்கான சான்றுகளாக விளங்குகின்றன.

**சங்கமன் கண்டி ரோட்டுப் பிள்ளையார் கோயில்**

சங்கமன் கண்டி காட்டுப் பிள்ளையார் கோயிலிலிருந்து புறப்படும் யாத்திரீகர்கள் பிரதான வீதிக்கு வந்து தெற்குப் பக்கமாகச் செல்லும் போது பாதையருகே அமைந்திருக்கும் ரோட்டுப் பிள்ளையார் கோயிலைத் தரிசித்துச் செல்கின்றனர். **(படம் 20)** காட்டுக்குள் இருக்கும் பிள்ளையாரைத் தரிசிக்க முடியாதவர்கள் இவ்வழிப் பிள்ளயைாரை வணங்கிச் செல்கின்றனர். இவ்வழியில் செல்லும் அனைத்து வாகனங்களிலும், பேரூந்துகளிலும் செல்பவர்கள் இவ்விடத்தில் இறங்கி கற்பூரம் கொழுத்தி காணிக்கை செலுத்தி இப்பிள்ளையாரை வணங்கிச் செல்கின்றனர். போர்த்துக்கேயர் காலத்தில் மலைமீது இருந்து அழிக்கப்பட்ட ஆலயங்களின்

பழமை வாய்ந்த சின்னங்கள், தெய்வச் சிலைகள் ஆகியவை சிதைந்த நிலையில் இங்கு காணப்படுகிறது. 10 பட்டைகள் செதுக்கப்பட்ட மிகப் பண்டைய லிங்கக்கல் ஒன்றும் இவ்வழி-ப்பிள்ளையார் கோயிலில் காணப்படுகிறது. இது இவ்வாலயத்-தின் பின்பக்கம் இருந்த சிவன் கோயிலின் லிங்கம் எனக் கூறப்படுகிறது. இங்கிருந்து கிழக்கு நோக்கி ஓர் நேர்கோடு வரைந்தால் அது சங்கமன் கண்டி முனையில் முடிவடைகிறது. சிவன் கோயிலின் நேர்கிழக்கில் 4 கி.மீ தூரத்தில் இம்முனை உள்ளது. இதுவே இலங்கைத் தீவின் அதிகூடிய கிழக்கு முனை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் சிதைந்த நிலையில் வெளிச்ச வீடொன்று காணப்படுகிறது. **(படம் 21)**

### படிக்கட்டு மலையும் காடும்

சங்கமன் கண்டி ஆலயங்களைத் தரிசித்துச் செல்லும் பாத யாத்திரீகர்கள் வழிப்பிள்ளையார் கோயிலை அடுத்து சிறிது தூரத்தில் படிக்கட்டு மலையைக் காணலாம். **(படம் 22)** இம்மலைப் பகுதியைக் கடந்தவுடன் ஓர் காட்டுப்பகுதி காணப்படுகிறது. அதுவரை நகரங்கள், கிராமங்கள், குடியிருப்புகள், குளங்கள், வயல்வெளிகள் மற்றும் பொட்டல் தரைகள் வழியாக நடைப் பயணம் செய்த யாத்திரீகர்கள் ஓர் காட்டைக் கடக்கின்றனர். சங்கமன் கண்டி மலைப்பகுதியிலிருந்து 2 கி.மீ தூரம் வரை இக்காடு அமைந்துள்ளது. இக்காட்டின் முடிவில் பாதையின் மேற்குப் பக்கம் ஓர் மலையும் அதை அடுத்து கோமரிக் கிராமத்தின் வட எல்லையும், இவற்றை அடுத்து கோமரிக் களப்பும், களப்பின் கரையில் கொடுப்பத்தை மலை பிள்ளையார் கோயிலும் காணப்படுகின்றன. பாதையின் மேற்குப் பக்கத்தில் 600 மீற்றர் தொலைவில் கொடுப்பத்தை மலை அமைந்துள்ளது.

### கொடுப்பத்தை பிள்ளையார் கோயில் - கோமாரி

பொத்துவிலிலிருந்து அக்கரைப்பற்றுக்கு செல்லும் வீதியில் 16 கி.மீ தூரத்தில் கோமாரி எனும் கிராமம் அமைந்துள்ளது. இக்-கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ள கோமாரி களப்பின் வட கரையில் உள்ள சிறிய மலைப் பாறை மீது இப்புராதன ஆலயம் அமைந்துள்ளது. **(படம் 23)** கோமாரி கிராமத்தின் வட எல்லையின் மேற்குப் பக்கத்தில் இம்மலைப் பாறை காணப்படுகிறது.

### சங்கமன் கண்டி இராஜதானியின் தென் எல்லையில் இருந்த கிராமம்

கோமாரி கிராமம் சுமார் 3 கி.மீ நீளமும் 500 மீற்றர் அகலமும் கொண்ட ஒடுங்கிய பகுதியில் அமைந்துள்ளது. கிராமத்தின் மேற்குப் பகுதியில் கோமாரி களப்பும், கிழக்குப் பகுதியில் வங்கக் கடலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. உமிரிக் களப்பிற்கும், கோமாரிக் களப்பிற்கும் இடைப்பட்ட மலைப் பிரதேசத்திலேயே பண்டை காலத்தில் சங்குமன் எனும் தமிழ் சிற்றரசனின் சங்கமன் கண்டி இராஜதானி அமைந்திருந்தது. கேந்திர முக்கியவத்துவம் வாய்ந்த இந்த இராஜதானியின் தென் எல்லையில் சங்கமன் கண்டி மலைத் தொடரின் தென் கோடியில் கோமாரி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கிழக்குக் கரையிலிருந்த பண்டைய துறைமுகங்களில் ஒன்று

மிகப் பண்டைய காலம் முதல் கிழக்குக் கரையிலுள்ள முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக கோமாரியும் விளங்கியுள்ளது. அக்கரைப் பற்று எனும் கருங்கொடித் தீவிற்கு தெற்குப் பகுதியில் இருக்கும் 12 கழிமுகங்கள் பல்வேறு கால கட்டத்தில் சிறு துறைமுகங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்றாக பண்டைய காலத்தில் கோமாரி களப்பின் கழிமுகத்தில் கோமாரி துறைமுகம் அமைந்திருந்தது.

### தமிழ் இராஜகுமாரியின் கப்பல் கரை ஒதுங்கிய துறை

சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு தென்னிந்தியாவிலிருந்து யாத்திரை வந்த ஓர் தமிழ் இராஜகுமாரியின் கப்பல் உடைந்து இப்பகுதியில் கரை ஒதுங்கியதாகவும் இராஜகுமாரி தனது படை, பரிவாரங்களுடன் இங்கேயே தங்கி இப்பகுதியை ஆட்சி செய்ததாகவும் தெரிய வருகிறது. அவளின் தலைநகராக விளங்கியதால் இவ்விடம் "குமரி முனை" எனப் பெயர் பெற்றுள்ளதாகவும், இக்களப்பு குமரிமுனைக் களப்பு என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகவும், அதுவே பின்பு பேச்சு வழக்கில் கொமரி முனை என்றும், கொமரி எனவும், பின்பு கோமாரி எனவும் திரிபடைந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

## 2100 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் குடியேறிய குமரிமுனை

அரசகுமாரியோடு வந்த பரிவாரங்கள் களப்பின் கிழக்குப் பகுதியில் இருந்த நிலப்பரப்பில் குடியமர்ந்தனர். அரச படையினர் களப்பின் தெற்குப் பகுதியில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தனர். குமரிமுனைக் களப்பில் இருந்த துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்கும் வேலை நடைபெற்றது. அதைவிட இக்களப்பின் பூலோக அமைப்பின் படி பெரும்புயல் காற்றிலும் கப்பல்களுக்கு பாதுகாப்பான ஓர் ஒதுக்கிடமாகவும் இத்துறைமுகம் பயன்பட்டது. இதன்படி கோமாரியில் கி.மு 2ம், 1ம் நூற்றாண்டுகளில் முதன் முதலாக தமிழ் மக்கள் குடியேற்றம் நிகழ்ந்துள்ளது. எனவே கோமாரி கிராமத்தின் பாரம்பரியம் சுமார் 2100 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியுள்ளது எனக் கூறலாம்.

## ஐரோப்பிய கடற்பயணிகள் கண்ட குமரிமுனை

கி.பி 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த கடற் பயணிகள் இலங்கையின் கிழக்குக் கரையில் நீண்ட முனையில் அமைந்திருந்த "குமரி முனை" எனும் துறைமுகத்தை தாம் கடந்து சென்றதாக தமது பயணக்குறிப்பில் எழுதியுள்ளனர். இதன்படி கி.மு 2ம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர் காலம் வரையான சுமார் 1700 ஆண்டுகளாக குமரி முனை எனும் கோமாரி ஓர் துறைமுமாக விளங்கியுள்ளது. அதே சமயம் குமரி முனைக் களப்பின் வடபகுதி சங்குமன் எனும் சிற்றரசனால் ஆளப்பட்டு வந்துள்ளது.

## குமரி முனை கொடுப்பத்தை மலையில் தெய்வ வழிபாடுகள்

குமரிமுனைக் களப்பின் வடகரையில் உள்ள கொடுப்-பத்தை எனும் மலைப் பாறையில் மிகப் பண்டைய காலம் முதல் விநாயகர் வழிபாடும், அம்மன் வழிபாடும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் நடந்து செல்பவர்களைப் பற்றி இழுக்கும் "கொடு" எனும் முட்பற்றைகள் இம்மலைப் பாறைப் பகுதியில் நிறைந்து காணப்பட்டமையால் இவ்விடம் "கொடுப்பற்றை" எனவும், பேச்சுவழக்கில் கொடுப்பத்தை எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இப்பாறையில் வைத்து வணங்கப்பட்ட விநாயகர் கொடுப்பத்தைப் பிள்ளையார் எனவும் பெயர் சூட்டி அழைக்கப்பட்டார்.

அடுத்தடுத்து அமைந்துள்ள இரண்டு மலைப் பாறைகளில் விநாயகரையும் அம்மனையும் வழிப்பட்டு வருகின்றனர் பண்டைய காலத்தில் குமரி முனையில் வாழ்ந்த மக்கள் இம்மலைப் பாறையில் காணப்பட்ட விநாயகர் உருவமைப்பில் இருந்த ஓர் கல்லை பிள்ளையாராக உருவகப்படுத்தி மலைப் பாறையில் இருந்த இயற்கையான நீர்ச்சுனைக்கு அருகில் இருந்த ஓர் இத்தி மரத்தின் கீழ் ஸ்தாபித்து வழிபட்டு வந்தனர். அதுபோல அடுத்த மலைப்-பாறையில் உள்ள ஓர் கல்லில் அமர்ந்த நிலையில் புடைப்பு சிற்பம் போல் காணப்படும் ஓர் உருவத்தை அம்மனாக நினைத்து வழிபட்டு வந்துள்ளனர். பல்லாண்டு காலமாக இவ்வழிபாடுகள் திறந்தவெளி மலைக்கோயில் வழிபாடாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### போர்த்துக்கேயர் காலத்தில் தடைப்பட்டு மீண்டும் தழைத்த வழிபாடு

போர்த்துக்கேயர் காலத்தில் இவ்வழிபாடுகள் தடைப்-பட்டுள்ளன. அதன்பின்பு சுமார் 150 வருடங்களுக்கு முன்பு இம்மலைப் பாறைக்குப் பின்பக்கமாக இருந்த சமதரை நிலங்களில் விவசாயம் செய்யச் சென்றவர்கள் மலைப்பாறை மீது கல் பிள்ளை-யார் சிலை இருப்பதைக் கண்டு அவ்விடத்தில் இருந்த மரத்தின் கீழ் அச்சிலையை வைத்து பூஜைகள் செய்து வழிபடத் தொடங்கினர்.

பின்பு அருகிலிருந்த அடுத்த மலைப்பாறையில் இருந்த ஓர் கல்லில் அம்மனின் வடிவம் இருப்பது கண்டு அங்கும் பூஜைகள் செய்து வழிபட்டு வந்தனர். பிள்ளையாரை வைத்து வணங்கிய பாறைக்கு அருகில் இருந்த கள்ளி மரத்தின் கீழ் வளர்ந்திருந்த புற்றில் நாகம் இருப்பதைக் கண்டு அங்கும் பூஜைகள் செய்து அதை நாகதம்பிரானாக நினைத்து வழிபட்டு வந்தனர்.

இவ்வாறாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இப்பண்டைய வழிபாடுகளால் இன்று இவ்வாலயம் சிறப்புடன் விளங்கி வருகிறது. பிள்ளையாருக்கு கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றுடன் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. நாகதம்பிரான், வைரவர் ஆகிய தெய்வங்களுக்கு பரிவாரக் கோயில்கள் அமைக்கப்பட்டு வருவதோடு மணிக் கோபுரமும் அமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### இயற்கையாகவே தெய்வ வடிவங்கள் காணப்படும் மலைப்பாறை

கொடுப்பத்தை மலைப்பாறைகளில் இயற்கையாகவே தெய்வ வடிவங்களைக் காணக்கூடியதாக உள்ளது. அம்மன் கோயில் இருக்கும் ஓர் கல் பாறையில் அம்மனின் வடிவம் இருப்பது போல விநாயகர் கோயில் அமைந்திருக்கும் பாறையின் தெற்குப் பக்கத்தில் களப்பின் ஓரமாக இருக்கும் ஓர் பாறையில் பிள்ளையாரின் யானைமுகம் போன்ற வடிவம் அமைந்துள்ளமை வியக்கத்தக்கது. ஆலயத்தின் முன்பாக இயற்கையாகவே அமைந்துள்ள நீர்ச்சுனையில் நீர் நிரம்பிக் காணப்படுகிறது.

### கோமாரி

கொடுப்பத்து மலைப் பிள்ளையார் கோயிலுக்குச் செல்லும் சந்தியைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் யாத்திரீகர்கள் கோமாரி கிராமத்தில் உள்ள வம்மியடிப் பிள்ளையார் கோயிலைத் தரிசிக்கலாம். சங்கமன் கண்டி வழிப் பிள்ளையார் கோயிலிலிருந்து இருந்து 4 கி.மீ தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இவ்வாலயத்தை அடுத்து இங்கிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ள கோமாரி முருகன் கோயிலைத் தரிசிக்கும் யாத்திரீகர்கள் இவ்வாலயத்தில் ஓய்வெடுத்து தங்கிச் செல்கின்றனர்.

இங்கிருந்து 500 மீற்றர் தூரத்தில் கோமாரிப் பாலம் அமைந்துள்ளது. இப்பாலத்திலிருந்து கோமாரி களப்பு கடலில் சங்கமிக்கும் அழகிய முகத்துவாரத்தையும், **(படம் 24)** கடலையும், களப்பையும், இவற்றுடன் இணைந்த தென்னஞ் சோலைகளின் அழகையும் கண்டு ரசிக்கலாம்.

### ஊரணி

கோமாரி பாலத்திலிருந்து முன்நோக்கிச் செல்லும் யாத்திரீகர்கள் செல்வபுரம் என்ற புதிய கிராமத்தைக் கடந்து செல்லும் போது செல்வபுரம் பிள்ளையார் கோயிலைத் தரிசிக்கின்றனர். இக்கோயிலை அடுத்து சிறிது தூரத்தில் முருக்கன் தண்ணி களப்பு காணப்படுகிறது. இக்களப்பைக் கடந்து சிறிது தூரத்தில் மீண்டும் ஓர் அடர்ந்த காடு காணப்படுகிறது. 3 கி.மீ நீளமான இக்காட்டை 60ம் கட்டைக் காடு என அழைக்கின்றனர். இக்காட்டின் முடி-வில் ஊரணி எனும் கிராமம் அமைந்துள்ளது.

யாத்திரீகர்கள் இக்கிராமத்தில் இருக்கும் பிள்ளையார் கோயிலைத் தரிசிக்கின்றனர்.

இங்கு கடற்கரை ஓரமாக சிறிய கடற்கரை முருகன் கோயில் அமைந்துள்ளது. கிராமத்தின் மேற்குப் பக்கம் பாலடி களப்பு காணப்படுகிறது. இக்களப்பு நீர் தெற்கு நோக்கி ஓடி பொத்துவில் நகரின் வட எல்லையில் உள்ள பொத்துவில் களப்பில் கலந்து கொட்டுக்கல் முனையில் கடலில் சங்கமமாகிறது. கோமாரி பாலத்திலிருந்து 7 கி.மீ தூரத்தில் ஊரணி அமைந்துள்ளது.



ஊரணி பாலடிக் களப்பு

## றொட்டை குளம்

ஊரணியைக் கடந்து செல்லும் யாத்திரீகர்கள் இடது பக்கம் வயல் நிறைந்த வெளியையும் அதை ஒட்டி பெரிய ஒரு வளைவையும் கடக்கின்றனர். வளைவின் அருகில் சிறிய குளம் காணப்படுகின்றது. இங்கிருந்து சிறிது தூரத்தில் றொட்டை குளத்துக்கும், கிராமத்திற்கும் செல்லும் சந்தி காணப்படுகிறது. இப்பகுதியில் வயல் வெளிகள் நிறைந்துள்ளன. இச்சந்தியின் மேற்குப் பக்கம் ஒன்றரை கி.மீ தூரத்தில் றொட்டை குளமும், குளக்கரையில் வீரையடி பிள்ளையார் கோயிலும் அமைந்துள்ளன.

கரந்தை ஓயா ஆற்றின் மூலம் ரொட்டை குளத்திற்கு நீர் கிடைக்கிறது. இக்குளத்தின் மேற்குப் பக்கத்தில் உள்ள ஓர் மலைக் குகையில் பிராமிக் கல்வெட்டொன்றும் காணப்படுகிறது. இதில் "வில் வித்தை வீரன் காளுவின் குகை" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. ஊரணியிலிருந்து இரண்டரை கி.மீ தூரத்தில் ரொட்டை சந்தி அமைந்துள்ளது. ரொட்டை சந்தியிலிருந்து தெற்கு நோக்கி வரும் போது கிழக்குப் பக்கத்தில் மெந்தோடைக் குளமும், அதை அடுத்து மேலும் சிறிது தூரத்தில் பாளஞ்சி வெட்டிக் குளமும் அமைந்துள்ளது.

**ஏத்தம்**

ரொட்டை சந்தியிலிருந்து 3 கி.மீ தூரத்தில் ஓர் மேடு காணப்படுகிறது. இவ்விடம் "ஏத்தம்" என அழைக்கப்படுகிறது. யாத்திரீகர்கள் இவ்விடத்தில் ஓர் பெரிய வழிப் பிள்ளையாரைத் தரிசித்துவிட்டு உள்ளே இருக்கும் சாலம்பையடி பிள்ளையார் கோயிலைத் தரிசித்து சிறிது நேரம் ஓய்வெடுத்துச் செல்கின்றனர். இக்கிராமம் இன்ஸ்பெக்டர் ஏத்தம் என அழைக்கப்படுகிறது. சாலம்பையடி பிள்ளையார் கோயில் மிகப் பழமை வாய்ந்த கோயிலாகும். இக்கிராமத்தின் தென் மேற்குப் பக்கத்தில் தாமரைக் குளமும், வடக்கில் பாளஞ்சிவெட்டிக் குளமும் அமைந்துள்ளன.



ஏத்தம் சாலம்பையடி பிள்ளையார் கோயில்

### பொத்துவில்

ஏத்தம் பிள்ளையார் கோயிலிருந்து வரும் யாத்திரீகர்கள் ஒரு கி.மீ தூரத்தில் சியம்பலாண்டுவைக்குச் செல்லும் சந்தியை அடைகின்றனர். இச்சந்தியின் தெற்குப் பக்கத்தில் சரித்திர பெருமை வாய்ந்த பொத்துவில் நகரமும், அறுகம் குடாவும் அமைந்துள்ளன. தமிழகத்தில் மூன்று தமிழ் சங்கங்கள் நடந்தது போல இலங்காபுரியிலும் மூன்று தமிழ்ப் பேரவைகள் நடந்துள்ளதாகக் ஆய்வுகள் கூறுகின்றன. இவற்றில் முதலாவது தமிழ்ப் பேரவை மகேந்திர மலையிலும், இரண்டாவது தமிழ்ப் பேரவை மணிமலையிலும், மூன்றாவது தமிழ்ப் பேரவை பொதியிலிலும் நடந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். பொதியில் தமிழ்ப் பேரவையில் அகத்தியர் கலந்து கொண்டுள்ளார் எனவும் முருகப்பெருமான் இதற்கு தலைமை தாங்கியுள்ளார் எனவும், பொதியில் என்பதே பொதிவில் எனவும் பின்பு பொத்துவில் எனவும் திரிபடைந்ததாகவும் குறிப்புகள் கூறுகின்றன.

சூரபத்மனை வதம் செய்தபின் இரண்டாவது தடவையாக வீரபாகுத்தேவருடன் உகந்தையில் வந்திறங்கிய முருகப்பெருமான் பானமைக்கு வந்து சென்றதாக பானமை மக்கள் ஐதீகமாகக் கூறிவருகின்றனர். பானமைக்கு வந்த முருகன் பொதிவில் பேரவையில் அகத்தியரின் அழைப்பின் பேரில் கலந்து தலைமை தாங்கிச் சென்றுள்ளார் எனத் தெரியவருகிறது.

பொத்துவிலில் கொட்டுக்கல், குண்டுமடு, பொத்துவில் முனை, ஆமரப்புட்டி, வட்டி வெளி ஆகிய பழமை வாய்ந்த இடங்கள் அமைந்துள்ளன. இங்குள்ள குண்டுமடு என்னுமிடத்தில் ஆலையடி பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து சற்றுத் தூரத்தில் முருகன் கோயில் காணப்படுகிறது. கதிர்காம யாத்திரீகர்கள் ஆலையடிப் பிள்ளையார் கோயிலில் தங்கிச் செல்கின்றனர். அத்துடன் யாத்திரைக்கு தேவையான பொருட்கள் எல்லாவற்றையும் கொள்வனவு செய்வதும் பொத்துவிலில் தான்.

ஏனெனில் பொத்துவிலை அடுத்து கதிர்காமம் வரை நகரங்கள் எதுவும் கிடையாது. இடையில் “உள்ள”, “பானமை” ஆகிய சிறிய இரண்டு ஊர்கள் மட்டுமே அமைந்துள்ளன. எனவேதான் இங்கிருந்து கதிர்காமத்திற்கு போய்ச் சேரும் வரை இருக்கும் எட்டு

நாட்களுக்கும் தேவையான உணவு, மருந்து, ஏனைய அத்தியாவசிய பொருட்கள் அனைத்தையும் பொத்துவிலில் வாங்கிக் கொண்டு செல்கின்றனர்.

**ஆமரப்புட்டி - மண்மலை**

பொத்துவில் நகரின் கிழக்குப் பக்கத்தில் கடலோரமாக ஆமரப்புட்டி எனும் பிரமாண்டமான மண் மலைகள் காணப்படுகின்றன. 30 முதல் 40 அடி வரை உயரமாக இம்மண் மலைகள் காணப்படுகின்றன. பண்டைய காலத்தில் ஓர் கடற்கோள் ஏற்பட்ட வேளை கடலில் இருந்த மண் அடித்து வரப்பட்டு கரையில் தள்ளப்பட்டு இம்மண் மலைகள் உருவாகியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.



பொத்துவில் ஆமரப்புட்டி மண்மலை

இலங்கைத் திராவிட வேந்தன் இராவணன் இறந்த பின்பு ஓர் கடற்கோள் ஏற்பட்டதாகவும், இதில் இராவணனின் 25 மாளிகைகளும், 40,000 தெருக்களும் அழிந்ததாக குறிப்புகள் கூறுகின்றன.

## குண்டு மடு ஆலையடி பிள்ளையார் கோயில்

சியம்பலாண்டுவைக்குச் செல்லும் சந்தியிலிருந்து பொத்துவில் நகருக்குச் செல்லும் வீதியின் அருகில் பிரதான வீதியின் கிழக்குப் பக்கம் குண்டு மடு பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. கதிர்காமம் செல்லும் யாத்திரீகர்கள் இவ்வாலயத்தில் தங்கிச் செல்வார்கள். சுமார் 300 வருடங்களுக்கு முன்பு ஒல்லாந்தர் காலத்தில் இவ்வாலயம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் இவ்வாலயத்திற்கு முன்னோடியாக ஓர் புராதன ஆலயம் இருந்தமைக்கான எச்சங்கள் இங்கு காணப்படுகின்றன. புராதன பிள்ளையார், இரண்டு கல்விளக்குகள், நீளமான கற்தூண்கள், கற்தூண்களின் துண்டுகள் ஆகிய பண்டைய சின்னங்கள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன.




பொத்துவில் குண்டுமடு ஆலயடி பிள்ளையார் கோயில்

இதன் மூலம் இங்கிருந்த பண்டைய ஆலயம் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டுள்ளது என்பது தெரிகிறது. அழிக்கப்பட்ட ஆலயத்தின் புராதன சின்னங்களே இங்கு எஞ்சியுள்ளன. இவ்வாலயத்தில் இருக்கும் ஓர் சதுரக்கல்லில் நீள் வட்டக் குழியும், அதன் இரு பக்கங்களிலும் அதைவிடச் சிறிய வட்டமான குழிகளும் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல் பண்டைய ஆலயத்தில் விபூதி, சந்தனம், குங்குமம் ஆகியவை பக்தர்கள் தரித்துக் கொள்வதற்காக வைக்கப் பயன்படுத்தப்பட்ட கல் எனக் கூறப்படுகிறது. ஆலயத்தின் முன் பக்கம் பண்டைய ஆலயத்தின் தீர்த்தக்கேணி காணப்படுகிறது. பண்டைய காலத்தில் சதுர வடிவில் இருந்த இக்கேணி தூர்ந்து போய் வட்ட வடிவில் காணப்படுகிறது.

**அறுகம்பை குடாவும், களப்பும்.**

ஆலையடிப் பிள்ளையார் கோயிலிலிருந்து புறப்படும். யாத்திரீகர்கள் பொத்துவில் நகரைக் கடந்து இரண்டரை கி.மீ தூரத்தில் உள்ள அறுகம்பை குடா பாலத்தை அடைகின்றனர். பாலத்தின் மேற்குப் பக்கம் களப்பும், கிழக்குப் பக்கம் குடாவும் அமைந்துள்ளன. இப்பகுதிக்கு வளம் கொடுக்கும் கரந்தை ஓயா ஆற்றின் தென் கிளையும், ஹெட ஓயா ஆற்றின் வட கிளையும் அறுகம் களப்பிலே கலப்பதால் வருடம் முழுவதும் நீர் நிறைந்த ஏரியாக இது காணப்படுகின்றது. ஏனைய களப்புகளைப் போலல்லாது ஆழமான கரைகளைக் கொண்டதாக இக்களப்பு இருப்பதால் பண்டையகாலம் முதல் ஓர் துறைமுகமாக இக்களப்பு விளங்கியுள்ளது.


அறுகம் குடா

இது வடக்குத் தெற்காக 1900 மீற்றர் நீளமும், கிழக்கு மேற்காக 1700 மீற்றர் அகலமும், 6 கிலோ மீற்றர் சுற்றளவும் கொண்ட களப்பாகும். வட்ட வடிவான இக்களப்பு இராவணனின் முக்கிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்கியுள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. சேனன், கூத்திகன் ஆகிய மன்னர்களும், கதிர்காம

பாண்டிய சத்திரிய மன்னர்களும், உன்னரசுகிரி இராச்சியத்தின் சிற்றரசர்களும் இத்துறைமுகத்தைப் பயன்படுத்தியுள்ளனர். கூத்திக-னின் மகன் சேனன் தனது திக்கதிபர்களை சந்திக்கும் இடங்களில் ஒன்றாக "அறுகமனப்பூமனை" விளங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அறுகமணப்பூமனை என்பது அறுகம் குடாவையே என ஆய்வுகள் கூறுகின்றன.

போர்த்துக்கேயர் இலங்கைத் துறைமுகங்களைப் பற்றி குறிப்பிடும் பொழுது இங்கு 31 கடல் துறைகள் இருந்ததாக அவர்களின் குறிப்புகள் கூறுகின்றன. இத்துறைகளில் அறுகம் குடா துறையும் ஒன்றாகும். உறுகுனைப் பகுதியை காவல் செய்யும் கப்பல்கள் அறுகம்பை உட்பட திருக்கோயில், பானமை ஆகிய துறைகளுக்கு அடிக்கடி வந்து சென்றுள்ளன. இக்கப்பல்கள் அறுகம்பையை தங்குமிடமாகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இத்துறை வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஒரு வருடத்தில் 8 மாதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது. போர்த்துக்கேயர் கி.பி 1605ல் இத்துறை ஊடாக உட்புகுந்து ருகுணு காடுகளில் இருந்து பொதி எருதுகள் மூலம் கொண்டு வந்த பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

ஒல்லாந்தரும் அருகம்பை துறையை அதிகம் பயன்படுத்-தியுள்ளனர். ருகுணுப் பகுதியிலிருந்து கொண்டு வரும் உப்பு, தேன், மிளகு, யானைத் தந்தம், முதிரை, கருங்காளி மரங்கள் போன்றவற்றை இத்துறை வழியாக ஏற்றுமதி செய்துள்ளனர்.

பண்டைய காலம் முதல் இத்தனை சிறப்புகளுடன் விளங்கிய அறுகம் குடா இன்று உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் அழகிய கடற்கரையுடன் வெளி நாட்டவர்களுக்கு ஓர் சொர்க்கபுரியாகவும் விளங்குகிறது. இலங்கையில் "நீர்ச் சறுக்கு" விளையாட்டிற்காக மேலை நாட்டவர் வரும் பிரசித்தி பெற்ற இடங்களில் அறுகம்-பையும் ஒன்றாகும்.

**"உள்ள" விநாயகர் கோயில்**

அறுகம்பை பாலத்தைக் கடந்து யாத்திரீகர்கள் சிறிது தூரத்தில் "பெரிய உள்ள" எனும் உல்லாசப் பிரயாணிகள் தங்கும் ஊரை அடைகின்றனர். இவ்வூரின் கிழக்குப் பக்கம் வெள்ளை மணல் நிரம்பிய கடற்கரையும், அலைகள் அற்ற கடலையும்

கண்டு ரசிக்கலாம். இவ்வூரின் நடுவில் பாதையில் ஓர் வளைவு காணப்படுகிறது. இவ்விடம் அறுகம்பை பாலத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இங்கு கிழக்குப் பக்கத்தில் கடலை ஒட்டி ஓர் முனை காணப்படுகிறது. இம்முனையில் மணல் மலை-களும், காடுகளும் அமைந்துள்ளன. இம்மணல் மலைக்கருகில் "உள்ள" பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. இதன் அருகில் சமுத்திர கிரி விஹாரை காணப்படுகிறது. இக்கோயில், விஹாரை ஆகியவற்றோடு சேர்ந்த இடம் "சின்ன உள்ள" என அழைக்கப்படுகிறது.

**நாவலாறு**

"சின்ன உள்ள" பகுதியைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் யாத்திரீகர்கள் பசரிச்சேனை எனும் கிராமத்தை அடைகின்றனர். இக்கிராமத்தின் முடிவில் ஹெட ஓயா என்றழைக்கப்படும் நாவலாற்றின் கிளை நதி பாதையைக் குறுக்கறுத்துச் செல்கிறது. இது தூவை ஆறு என அழைக்கப்படுகிறது. "சின்ன உள்ள" இலிருந்து ஒன்றரை கி.மீ தூரத்தில் இது அமைந்துள்ளது. இவ்வாறு தெற்கு நோக்கி ஓடி ஒன்றரை கி.மீ தூரத்தில் கடலில் கலக்கிறது. தூவை ஆற்றுப் பாலத்தைக் கடந்து வரும் இரு பக்கங்களிலும் வயல் வெளிகளைக் காணலாம். இவற்றை அடுத்து நாவலாறு காணப்படுகிறது. தூவை பாலத்திலிருந்து இரண்டரை கி.மீ தூரத்தில் நாவலாற்றுப் பாலம் அமைந்துள்ளது.



தூவை ஆற்று முகத்துவாரம் – பானமை

மரங்களும், வெள்ளை மணலும் இவற்றின் நடுவில் நீருமாக அழகாகக் காட்சி தரும் நாவலாறு பாதயாத்திரீகர்கள் ஓய்வெடுக்கும் ஓர் முக்கிய இடமாகும். விசாலமான கரைகளை கொண்ட இவ்வாற்றில் யாத்திரீகர்கள் தமது உடைகளை கழுவி, குளித்து, உணவு சமைத்து உண்டு இளைப்பாறிச் செல்கின்றனர். ஆற்றங்கரையில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கும் மருத மரங்களும், நாவல் மரங்களும் குளிர்ச்சியான நிழலைத் தருவதோடு ஓர் சோலைப் போலவும் காட்சி தருகின்றன.

இந்நாவலாறு இவ்விடத்திலிருந்து கிழக்கு நோக்கி ஓடி சின்னடி ஆறு, குடாக்கள்ளி ஆறு எனும் பெயர்களில் இரண்டாகப் பிரிந்து சாத்திரவெளி மலைகளுக்கு வடக்கில் குடாக்கள்ளி முகத்துவாரத்தில் கடலில் கலக்கிறது. நாவலாறு பாலத்திலிருந்து 2 கி.மீ தூரத்தில் முகத்துவாரம் அமைந்துள்ளது. இம் முகத்து-வாரத்தையும் கடலையும் ஒட்டி ஓர் பாறை அமைந்துள்ளது. இது முதலைப் பாறை எனப் பெயர் பெற்றுள்ளது. தூரத்தில் இருந்து பார்க்கும் போது ஓர் முதலை போன்ற வடிவில் காணப்படுவதால் இப்பெயர் உண்டானது.



முதலைப் பாறை - பானமை

***சாத்திர வெளியும், ராகம் வெளியும்***

நாவலாறு பாலத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் யாத்திரீகர்கள் ஒன்றே முக்கால் கி.மீ தூரத்தில் உள்ள சாத்திரவெளி சந்தியை அடைகின்றனர். இப்பகுதியில் பாதையின் இரு

பக்கங்களிலும் மலைப்பாறைகள் காணப்படுகின்றன. சாத்திரவெளி சந்தியின் கிழக்குப் பக்கத்தில் ஒரு கி.மீ தூரத்தில் சாத்திரவெளி மலைகள் காணப்படும் இடத்தில் தான் மகாசேனன் காலத்தில் இருந்த கலந்தகாமம் சிவாலயம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

சாத்திர வெளி சந்தியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் யாத்திரீகர்கள் அடுத்ததாக ராகம் வெளி குளத்தைக் காண்கின்றனர். மழைக் காலம் தவிர ஏனைய நாட்களில் இக்குளத்தில் நீர்க் காணப்படுவதில்லை. இக்குளத்தை அடுத்து காடும் காட்டைக் கடந்தவுடன் உள்பஸ்ஸ குளத்தையும் காணலாம். இக்குளத்தை அடுத்து சிறிது தூரத்தில் யாத்திரீகர்கள் பானமை சந்தியை அடைகின்றனர். சாத்திரவெளி சந்தியிலிருந்து 6 கி.மீ தூரத்தில் பானமை அமைந்துள்ளது.

### பிராமணகாமம் ஈஸ்வரன் கோயில்

பொத்துவிலில் இருந்து பாணமை நோக்கி செல்லும் வீதியில் சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ள சாத்திரவெளி என்னுமிடத்திற்கருகிலேயே பிராமணகம ஈஸ்வரன் கோயில் அமைந்திருந்ததாக நம்பப்படுகிறது. இப்பகுதியே கி.பி. 3ம் நூற்றாண்டில் கலந்தன் எனும் பிராமணர் தலைவன் பரி-பாலித்து வந்த "பிராமணகமம்" அமைந்திருந்த பகுதியாகும். இக்காலப்பகுதியில் இலங்கையில் கிழக்குப் பகுதியில் பிரசித்தி பெற்று விளங்கிய மிகப்பெரிய சிவாலயங்களில் ஒன்று இங்கு தான் அமைக்கப்பட்டிருந்தது. பிராமணன் கலந்தனின் நிர்வாக-த்தின் கீழ் இவ்வாலயம் நன்கு பராமரிக்கப்பட்டு சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது எனலாம்.

### கி.பி. 3ம் நூற்றாண்டில் அழிக்கப்பட்ட மூன்று சிவாலயங்களில் ஒன்று

பண்டைய காலத்தில் கிழக்கு இலங்கைப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய சைவ ஆலயங்களில் ஒன்றுதான் பிராமணகம ஈஸ்வரன் ஆலயம். கி.பி. 275-301 வரை இலங்கையை ஆண்டு வந்த மன்னனான மகாசேனனால் கிழக்கில் மூன்று இந்துக் கோயில்கள் அழிக்கப்பட்டதாக மகாவம்சம் கூறுகிறது. இவை கோகர்ணத்து சிவாலயமும், எரகாவில சிவாலயமும், கலந்தன் எனும் பிராமணனின் ஊரிலிருந்த சிவாலயமும் ஆகும்.

## மஹாசேனன் கட்டிய பௌத்த விஹாரைகள்

இச்சிவாலயங்களை அழித்து கோகர்ண விஹாரையையும், எரக்காவில விஹாரையையும், கலந்த விஹாரையையும் மகாசேனன் கட்டினான் என அந்நூலில் கூறப்பட்டுள்ளது. கலந்தன் எனும் பிராமணனின் ஊர் பிராமணகம எனத் தெரிய வருகிறது. இக்கோயில்கள் புத்தசாசனத்திற்கு தடையாக இருப்பதால் இவை அழிக்கப்பட்டு விஹாரைகள் கட்டப்பட்டது என மகாவம்கம் கூறுகின்றது. இக்கூற்றின்படி பிராமணகம சிவாலயம் திருக்கோணேஸ்வரத்திற்கு இணையான பெரிய கோயிலாக இருந்திருக்க வேண்டும். கலந்தனின் சிவாலயம் யாரால் அமைக்கப்பட்டது என்பது பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

## புராதன காலத்தில் இலங்கையின் பிராமணக் கிராமங்கள்

மகாவம்சத்தில் பிராமணன் கலந்தனின் ஊர் என இது குறிப்பிடப்பட்டுள்ளது. "பிராமணகம" எனப்படும் இவ்வூர் பிராமணர்கள் மட்டும் தனியாக செறிந்து வாழ்ந்த பகுதியாக இருக்க வேண்டும். இத்தகைய கிராமங்கள் பற்றி பல சிங்கள இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. கி.மு. 4ம் நூற்றாண்டில் பண்டுகாபயன் காலத்தில் "பிராமணவந்த" அமைந்திருந்தது பற்றியும், கி.மு 3ம் நூற்றாண்டின் தேவநம்பியதீஸன் காலத்தில் "பிராமணன் திவக்கவின் கிராமம்" பற்றியும், கி.பி. 1ம் நூற்றாண்டில் அமைந்திருந்த "பமணகம" எனப்படும், பிராமணக்கிராமம் பற்றி சஸ்சேருவக் கல்வெட்டிலும் தெரிய வருகிறது. இப்பிராமணக் கிராமங்கள் கோயில்களும், குளங்களும் சூழ பிராமணர்களின் தனிக்குடியிருப்பாக விளங்கியிருக்க வேண்டும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

## சங்க இலக்கிய பார்ப்பன சேரிகளுக்கு நிகரானவை

கி.பி 3ம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆட்சி செய்த முதலாம் ஜெட்டதிஸ்ஸனால் (கி.பி 266-276) பிராமணக் கிராமத்தில் குளமொன்று கட்டப்பட்டது, பற்றி பூஜாவலிய கூறியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இதன்படி கோயில்கள் குளங்களுடன் கூடிய பிராமணக் கிராமங்கள் பல புராதன காலத்தில் இலங்கையின் பல பாகங்களிலும் செல்வாக்குப் பெற்று விளங்கியுள்ளன. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள

"பார்ப்பனச் சேரிகள்" எனப்படும் பிராமணர்கள் தனியாக வாழ்ந்த இடங்களுக்கு நிகராக இவை இருந்திருக்க வேண்டும். சிறுபாணாற்றுப்படை போன்ற நூல்களிலும் "பார்ப்பனச் சேரிகள்" பற்றிய குறிப்புகளுண்டு. "பிராமணச்சேரிகள் என்றழைக்கப்பட்ட இவையே பிற்காலத்தில் வளர்ச்சி பெற்ற "சதுர்வேதி மங்கலம்" எனப்படும் நான்கு வேதங்கள் கற்ற பிராமணர் வாழ்ந்த பிரம்மதேயங்களுக்கு முன்னோடியாக இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட பிராமணச் சேரிகளுக்கு நிகரான கிராமங்களில் ஒன்றாகவே பிராமணகமவும் மகாசேனன் காலத்தில் சிறப்புற்று விளங்கியிக்க வேண்டும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

**"கல்யாண கன்னிகா" - ஆடகசவுந்தரி கரை ஒதுங்கிய இடம்**

பிராமணகாமம் அமைந்திருந்த இந்தப்பிரதேசம் "கல்யாண கன்னிகா" என்ற பெயரைக் கொண்ட பிரதேசமாகும். இப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் நாவல் ஆற்றின் கரையில் ஆறு கடலுடன் சங்கமமாகும், கழிமுகத்திற்கருகில் உள்ள மலையடிவாரத்தில் கலந்தனின் சிவாலயம் அமைந்திருக்க வேண்டும் என நம்பக்கூடியதாக உள்ளது. இன்று "ஹெட ஓயா" என்ற பெயரில் அழைக்கப்படும் நாவல் ஆறு இரண்டாகப் பிரிந்து அதில் ஒரு கிளை வட கிழக்கு நோக்கிப் பாய்ந்து அறுகம் குடாவில் சங்கமமாகிறது. அடுத்த கிளை "குடாக்கள்ளி ஆறு, சின்னடி ஆறு எனும் பெயர்களில் மேலும் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து குடாக்கள்ளி எனும் இடத்தில் கடலுடன் சங்கமமாகின்றன.

"கல்யாண கன்னிகா" என்றழைக்கப்பட்ட இப்பகுதி ஆடக சவுந்தரி பேழையுடன் கரை ஒதுங்கிய இடமாகும். பின்பு இந்த ஆடக சவுந்தரி மகாசேனன் எனும் மன்னனை திருமணம் முடித்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆடக சவுந்தரி கரை ஒதுங்கிய இப்பகுதி உன்னரசு கிரி எனும் இராஜதானி அமைந்திருந்த இடமாகும். மனுநேயகயபாகு மன்னன் உன்னரசு கிரியை ஆடக சவுந்தரியிடம் ஒப்படைத்தான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் மேலும் கூறுகிறது.

ஆடக சவுந்தரி குழந்தையாக கரை ஒதுங்கி வளர்ந்து கன்னியான பின் இப்பகுதியை ஆட்சி செய்ததினாலும், மகாசேனனை கல்யாணம் செய்ததினாலும் "கல்யாண கன்னிகா" என்ற பெயர்

வந்திருக்கலாம் என எண்ணக்கூடியதாக உள்ளது. இருப்பினும் இப்பெயருக்கும், ஆடக சவுந்தரிக்கும் ஓர் தொடர்பு உள்ளது என்பது உறுதியாகத் தெரிகிறது.

**சிவாலயம் அமைந்திருந்த இடத்தில் "கலந்த விஹாரை".**

இப்பகுதிதான் பிராமணகாமம் அமைந்திருந்த இடமாகக் கருதக்கூடியதாக உள்ளது. கி.பி 3ம் நூற்றாண்டில் மகாசேனன் இவ்வாலயத்தை இடித்தழித்ததுடன் இங்கு "கலந்த விகாரை" எனும் பௌத்த விகாரையைக் கட்டினான். இந்த பௌத்த விகாரை கூட பிராமணகாமத்தின் தலைவனான கலந்தனின் பெயரில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கி.பி 772 - 777 வரை ஆட்சி செய்த 7ம் அக்ரபோதி இக்கலந்த விகாரையை புனரமைத்து கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.


**கல்வெட்டில் வேலமுகம்.**

மகாசேனனாலும், 7ம் அக்ரபோதியினாலும் கட்டப்பட்ட கலந்த விகாரை அமைந்திருந்த இடமே புராதன சிவாலயம் அமைந்திருந்த இடமாகும். இப்பிரதேசம் "கல்யாண கன்னிகா" என்றழைக்கப்பட்டது. இப்பகுதியில் கி.பி 7 முதல் 9ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் மகாதாதிக மகா நாக எனும் மன்னனால் "மணிநாகபப்பத்த" எனும் விகாரை கட்டப்பட்டது. இவ்விகாரையின் எச்சங்கள் உள்ள பகுதி "சாஸ்திரா வெல" என அழைக்கப்படும் இடம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது நாவலாறு கடலுடன் கலக்கும் கழிமுகத்தின் அருகில் காணப்படுகின்றது. மணிநாகபப்பத்த எனும் விகாரையிலுள்ள கல் வெட்டில் "வேலமுகம்" எனும் பெயர் காணப்படுகிறது. நாவல்ஆறு கடலுடன் கலக்கும் கழிமுகம் அமைந்திருந்த பகுதி "வேலமுகம்" எனும் பெயரில் அழைக்கப்பட்டுள்ளது.

ஆகவே இதே இடத்தில் தான் புராதன சிவாலயமும் அமைந்திருக்க வேண்டும் எனக் கூறக்கூடியதாக உள்ளது. சாஸ்திராவெல பகுதியில் பல புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ்விடிபாடுகள் மூன்று தொகுதிகளாக காணப்படுகின்றன. கடலின் அருகில் ஒரு தொகுதியும், மலையடிவாரத்தில் ஒரு தொகுதியும், மலைமீது ஒன்றுமாக இவை உள்ளன.

## புராதன கட்டிட இடிபாடுகள்

சாஸ்திராவெல பகுதியில் ஓர் சிறியமலை உள்ளது. இதன் அடிவாரத்திலேயே குடாக்கள்ளி ஆறு கடலில் சங்கமிக்கின்றது. இம்மலை முதலைப்பாறை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் குகைகள் காணப்படுகின்றன. இதனருகில் புராதன செங்கட்டிகள் பரவலாக வீசப்பட்டுக் கிடக்கின்றன. இக்குகையிலிருந்து மலைக்குச் செல்ல கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இக்கற்படிகள் கற்குகையினூடாக மலை உச்சிக்குச் செல்கின்றன. மலை உச்சியில் ஓர் கட்டிடம் அமைந்திருந்தமைக்கான செங்கற்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன.



சாஸ்திரவெளி மலைக் குகை

இங்கிருந்து வடக்குப் பக்கமாக மேலும் 300 மீற்றர் தூரத்தில் தூவை ஆறு கடலில் கலக்கும் இடம் உள்ளது. இவ்விடத்தில் தட்டையாக பாறை ஒன்று உள்ளது. இப்பாறையில் இரண்டு கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. கற்பாறையிலிருந்து ஆற்றுமுகத்திற்கு செல்வதற்கு சுமார் 50 கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன.

இவ்விடமே ஆடகசவுந்தரி எனும் இளவரசி பேழை-யொன்றில் கரை ஒதுங்கிய இடமாக கருதப்படுகின்றது.

உன்னரசுகிரி இராச்சியத்திற்கு உட்பட்ட இப்பகுதியை ஆண்ட மனுநேயகயபாகு எனும் சிற்றரசன் இப்பேழையை எடுத்து அதிலிருந்த குழந்தைக்கு ஆடகசவுந்தரி என பெயரிட்டு வளர்த்தான் எனவும், இக்குழந்தை கரை சேர்ந்த இடத்திற்கு "பாலர்நகை" என பெயரிட்டு அழைத்ததாகவும், இவ்விடமே பானகை என்றும் பின்பு பானமை என்றும் திரிபுபட்டு வழங்கப்பட்டு வருவதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

**பன்மலை அடிவாரத்தில் இந்து தெய்வச்சிலை**

இப்பகுதியில் உள்ள நீண்ட மலைத்தொடரான பன்மலை சுமார் ஒரு கி.மீ நீளமானதும் கடல் மட்டத்திலிருந்து சுமார் 200 அடி உயரமானதுமாகும். பன்மலையின் அடிவாரத்தில் சுமார் பத்திற்கும் மேற்பட்ட கற்குகைகள் உள்ளன. இவற்றில் அருகில் கற்தூண்கள் சிலவும். ஏராளமான கட்டிட இடிபாடுகளும், செங்கட்டிகளும் காணப்படுகின்றன. இவற்றிடையே இந்து தெய்வச்சிலையொன்றும் காணப்படுகின்றது. இது ஓர் பெண் தெய்வத்திற்குரிய சிலையாகும். இதனருகில் பீடக்கல்லொன்றும் காணப்படுகின்றது.

**பிராமிக் கல்வெட்டுகளில் நாகமலை**

மலைமீது பெரிய கற்குகையொன்று காணப்படுகிறது. இதில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டொன்றும் உள்ளது. மலையின் மேற்குப்பகுதியில் கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இங்கும் சில கட்டிட இடிபாடுகள் தென்படுகின்றன.

இப்பகுதியில் சில கட்டிட இடிபாடுகளும், தூண்களும் காணப்படும் அதேவேளை தெய்வத் திருவுருவங்கள் வைக்கப்படும் கற்பீடங்களும் காணப்படுகின்றன. எண்கோணக் கற்தூண்கள் இரண்டும் இங்கு உள்ளன. இங்கிருந்து கீழே செல்வதற்கு மேலும் சுமார் 50 கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மொத்தமாக மூன்று பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்று குகைக் கல்வெட்டாகும். ஏனைய இரண்டும் மலைப்பாறையில் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் இம்மலை "நாகமலை" (நாகபப்பத்த) எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் இப்பகுதி நாகவழிபாட்டுத்தலம் இருந்த இடம் என்றும் எண்ணக் கூடியதாக உள்ளது. கி.மு 3ம் நூற்றாண்டில் ரோகண பகுதியை ஆட்சி செய்த மகாநாகன் என்பவனால் இவ்வழிபாட்டுத்தலம் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இங்கிருந்து தெற்கு நோக்கி சுமார் 15 கி.மீ தொலைவில் யாள வனவிலங்கு சரணாலயத்தை ஒட்டி அமைந்துள்ள ஓர் மலையும் "நாகபர்வதமலை" என அழைக்கப்படுகிறது. இதுவும் ஓர் நாகவழிபாட்டுத் தலமாகும்.

**சிவ, முருக, நாக வழிபாட்டுத்தலம்**

சாஸ்திரவெளிப்பகுதியில் பரவலாகக் காணப்படும் கட்டிட இடிபாடுகள் பல பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்குரியவை எனக் கூறப்படுகிறது. எனினும் புராதன காலம் தொட்டு சிவ, முருக, நாக வழிபாடு நிலவி வந்த இப்பகுதியில் உள்ள இடிபாடுகளில் இந்து ஆலய இடிபாடுகளும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றே புராதன காலத்தில் அமைந்திருந்த கலந்தனின் சிவன் கோயில் இருந்த இடம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். இருப்பினும் மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பிராமண கிராமங்களை பற்றி இங்கே குறிப்பிடுதல் மூலம், கலந்தனின் சிவாலயத்தின் ஆரம்ப காலம் பற்றி ஓர் முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

கி.மு. 3ம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் காலத்தில் அனுராதபுரத்தின் வடக்கே திவக்கன் எனும் பிராமணனின் கோயில் அமைந்திருந்தது பற்றிய குறிப்பும், அனுராதபுரத்தில் பிராமணன் தியவசனின் கோயில் பற்றிய குறிப்பும் மகாவம்சத்தில் காணப்படுகின்றன. இக்காலப்பகுதியில் பிராமணர்கள் இலங்கையின் பல பாகங்களிலும் செல்வாக்கு பெற்று விளங்கியிருந்தமையை மகாவம்சக் குறிப்புகள் கூறுகின்றன. எனவே பிராமணன் கலந்தனின் கோயிலும் இதே காலப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கலாம் என பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் கூறுகிறார். இதன்படி பிராமணன் கலந்தனின் சிவாலயம் கி.மு 3ம் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும்.


# 8. புனித பூமியில் பாத யாத்திரை
# பானமை முதல் உகந்தை வரை




படம் 25 - பானமை பிள்ளையார் கோயில்



படம் 26 - பானமை பத்தினி அம்மன் கோயில்



படம் 27 - சன்னாசி மலை




படம் 28 - சன்னாசி மலை பிள்ளையார் கோயில்



படம் 29 - சன்னாசி மலை நீர்ச்சுனை



படம் 30 - சலவைக் களப்பு



படம் 31 - குடும்பி மலை



படம் 32 - உகந்தை தோணி மலை

## பானமை பிள்ளையார் கோயில்

பொத்துவிலிலிருந்து 18 கி.மீ தூரத்தில் பானமை அமைந்துள்ளது. கதிர்காமத்திற்கு செல்லும் பாதயாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடங்களில் பானமையும் ஒன்றாகும். பானமைச் சந்தியில் உள்ள பானமை பிள்ளையார் கோயிலிலேயே கதிர்காம பாதயாத்திரீகர்கள் தங்கிச் செல்கின்றனர். முல்லைத்தீவி-லிருந்து ஆரம்பாகும் கிழக்குக் கரையோர கற்பாதை பானமை-யிலேயே முடிவடைகிறது. இவ்விடம் வரை கற்பாதையில் நடந்து வந்த யாத்திரீகர்கள் இங்கிருந்து கதிர்காமம் வரை கிரவல் மண்-பாதையிலேயே நடந்து கதிர்காமத்திற்குச் செல்வர். கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும் இவ்விடத்திலிருந்து தான் ஆரம்பமா-கிறது. எனவே பானமை கிராமம் கதிர்காம பாதயாத்திரீகர்களுக்கு ஓர் முக்கிய தலமாக விளங்குகிறது.



பானமை பிள்ளையார் கோயிலிலிருந்து அகற்றப்பட்ட புராதன பிள்ளையார்

இன்று பானமை பிள்ளையார் கோயில் அமைந்திருக்கும் இடத்தில் பண்டைய காலம் முதல் ஓர் அரச மரத்தின் கீழ் புராதன பிள்ளையார் சிலை ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. இச்சிலையை கந்தக் கடவுளின் புனித வனத்தில் அமைந்துள்ள பம்பரகஸ்தலாவ என்னுமிடத்திலிருந்து கொண்டு வந்து இம்மரத்தின் கீழ் வைத்து

பண்டைய பானமை மக்கள் பூஜித்து வந்ததாகவும், புராதன காலம் முதல் இப்பிள்ளையார் ஆலயம் திறந்த வெளி மரக்கோயிலாகவே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

சுமார் 100 வருடங்களுக்கு முன்பு பானமையில் வாழ்ந்த வன்னிய சிங்கம் போடியாரும், வக்கீல் சுப்ரமணியம் என்பவரும் இணைந்து 1902ம் ஆண்டு இம்மரத்தடிப் பிள்ளையாருக்கு ஓர் ஆலயம் அமைத்ததாகவும், இவர்களது பொருட்களை களஞ்சி-யப்படுத்தும் கிட்டங்கி ஒன்றும் ஆலயத்தில் முன்பக்கம் அமைந்-திருந்ததாகவும், வருடா வருடம் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை வரும் பக்தர்கள் இக்கிட்டங்கியில் தங்கிச் செல்வதாகவும், அதன் பின்பு இவ்விடத்திலேயே யாத்திரீகர்களுக்கான மடம் ஒன்றையும் அவர்கள் அமைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. இம்மடம் மற்றும் கிட்டங்கி இருந்த இடத்தில் பிற்காலத்தில் பௌத்த ஆலயம் அமைக்கப்பட்டதாகவும், யாத்திரீகர் மடமும் பௌத்த ஆலயத்தின் உடமையாகி விட்டதாகவும் கூறப்படுகிறது.

பானமை பிள்ளையார் கோயில் அண்மையில் புனரமை-க்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. **(படம் 25)** அப்போது கருவறையில் புதிய விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு புராதன பிள்ளையார் சிலை மகா மண்டபத்தின் இடது பக்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. சில மாதங்களுக்கு முன்பு இப்புராதன விநாயகர் சிலை ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டு பத்தினியம்மன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஓர் மரத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. பானமையிலுள்ள பிள்ளையாரை இங்குள்ள சிங்கள மக்களும் பய பக்தியுடன் வணங்கி வருகின்றனர். தூர பயணங்கள் செல்லும் முன்பு விநாயகர் கோயிலுக்கு வந்து, கற்பூரம் கொழுத்தி, தேங்காய் உடைத்து, விநாயகரை வணங்கிச் செல்கின்றனர். தமது பயணங்களின் போது தமக்கு வழித்துணைக் கடவுளாக இருப்பவர் விநாயகர் என பானமை மக்கள் நம்புகின்றனர்.

**பாலர் நகை நகரம் - பானமை (வனஜநாடு)**

பானமை பண்டைய காலத்தில் "பாலர் நகை நகரம்" எனப் பெயர் பெற்று விளங்கியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆடக சௌந்தரி எனும் இளவரசி கரை ஒதுங்கிய இடம் இதுவெ-னவும் சிரித்த படி பெண் குழந்தையைக் கண்டெடுத்த இடமாகை-

யால் "பாலர் நகை" என இவ்விடம் பெயர் பெற்றதாகவும் அந்நூல் மேலும் விவரிக்கிறது. இப் பெயரே காலப்போக்கில் திரிபடைந்து பானகை எனவும், பின்பு பானமை எனவும் அழைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

பானமை மிகப்பண்டைய கிராமமாகும். இது இராவணனின் இலங்காபுரி பகுதியின் முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்கி-யுள்ளது. இக் காலப்பகுதியில் இப்பகுதி "வனஜநாடு" என அழை-க்கப்பட்டதாக ஓர் கல்வெட்டின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. பண்டைய பாளி நூல்களிலும் பானமை பற்றிக் குறிப்பிடப்ப-ட்டுள்ளது. பண்டைய காலம் முதல் உன்னரசுகிரி இராஜதானியின் ஓர் பகுதியாக விளங்கிய பானமைப் பிரதேசம் கி.பி. 16ம் நூற்றாண்டில் கண்டி இராச்சியம் தனி அரசாகப் பலம் பெறாத காலத்தில் தென் கிழக்கிலங்கையில் இருந்த மூன்று சிற்றரசுகளில் ஒன்றாக வன்னிச் சிற்றரசர்களால் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தது.

பானமை நீர் நிலைகள் மிக்க ஓர் வளமான பிரதேசமாகும். பானமையின் மேற்குப் பகுதியில் இருந்து ஓடிவரும் விலா ஓயா ஆறு பல கிளைகளாகப் பிரிந்து பானமையின் வடக்கில் உள்ள முகத்து-வாரத்தில் வங்கக் கடலுடன் சங்கமமாகிறது. பானமை கிராமத்தின் மேற்குப் பக்கத்தில் பானமைக் குளம் அமைந்துள்ளது. விலா ஓயா ஆற்றின் கிளை ஒன்றின் மூலம் இக்குளத்திற்கு நீர் கிடைக்கிறது. பண்டைய பாளி நூல்களில் "பாஷாண வாபி" எனக் குறிப்பிடப்பட்டுள்ள குளம் பானமைக் குளத்தையே குறிப்பதாகும் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவ்விரு நீர் நிலைகள் மூலம் பானமைப் பகுதி செழிப்பான வளம் மிக்க பிரதேசமாக பண்டைய காலம் முதல் விளங்கியுள்ளது.

பானமை கிராமத்தின் தெற்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் பானமை வில்லுக் குளமும் ஓர் நன்னீர் நிலையாகும். பானமையின் கிழக்குப் பக்கத்தில் கடற்கரைக்கு அருகில் அமைந்திருக்கும் உள்ளவட்டை களப்பு உப்பு நீர் கலந்த நீர் நிலையாகும். இக்-களப்பை அடுத்து வடக்குப் பக்கமாக செல்லும் வீதியூடாக 2 கி.மீ தூரம் சென்றால் அழகிய பானமைக் கடற்கரையை அடையலாம். இக்கடற்கரையில் முகத்துவார மலைப் பாறை காணப்படுகிறது. கடற்கரைக்குச் செல்லும் வழியில் ஆங்காங்கே சில மணல் மலைகளும் காணப்படுகின்றன.

பண்டைய காலம் முதல் வேடர்கள் குடியிருந்த பானமைப் பகுதியில் இன்று நாம் காணும் மக்கள் குடியிருப்பு கி.பி. 1818ம் ஆண்டில் உருவானதாகும். இக்காலப்பகுதியில் வெல்லஸ்ஸ கிளர்ச்சியின் போது ஊவா பகுதியிலிருந்து ஆங்கிலேயரின் கொடுமைகளுக்குத் தப்பி தெற்குப் பக்கம் வந்தவர்களே பானமையில் குடியமர்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் வந்த காலத்தில் பானமையில் முருகன், பத்தினியம்மன், பிள்ளையார் ஆகிய தெய்வ வழிபாடுகள் சிறப்புற்று விளங்கியதாகக் கூறப்படுகிறது.

### முருகன், வீரபாகு தேவர், பத்தினியம்மன் கோயில்கள்

பானமை நகரின் மேற்குப் பக்கத்தில் பானமைக் குளத்திற்குச் செல்லும் வழியில் 2 கி.மீ தூரத்தில் பண்டைய காலத்தில் முருகன், வீரபாகுத்தேவர், பத்தினியம்மன் ஆகியோருக்கு ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயங்கள் அமைந்திருக்கும் இடம் "அம்பிட்டியே தேவால" என அழைக்கப்படுகிறது. (படம் 26) இவ்வாலயத்தின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் பசுமையான வயல் வெளிகளாலும், மேற்கு தெற்கு பகுதிகள் பற்றைக் காடுகளாலும் சூழப்பட்டுள்ளன. பானமையில் மிகப் பண்டைய காலத்தில் முதன் முதலாக முருகன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட இடமும் இதுவே.

முருகன் இரண்டாவது தடவையாக வீரபாகுத்தேவருடன் உகந்தையில் வந்திறங்கி அங்கிருந்து பானமைக்கு வந்து தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலே தங்கியிருந்து பின்பு உகந்தை, கும்புக்கன் ஊடாக கபிலித்தைக்குச் சென்றதாகவும், அங்கிருந்து கதிரமலைக்குச் சென்று அங்கு குடிகொண்டதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். எனவேதான் கதிர்காமக் கந்தனின் புனித பூமியின் தொடக்கத்தில் பானமையிலும், மத்தியில் உகந்தை, கபிலித்தை ஆகிய இடங்களிலும், முடிவில் கதிர்காமத்திலும் முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கதிர்காமத் திருவிழா முடிந்தவுடன் உகந்தை திருவிழாவும், அதுவும் முடிந்தவுடன் பானமையில் திருவிழாவும் நடைபெறுகின்றன.

முருகனும், வீரபாகுதேவரும் பானமைக்கு வந்து சென்றுள்ளதால் ஆதி வேடர்களால் இவ்விடத்தில் இருவருக்கும் ஓர் கோயில் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்ததாகத் கூறப்படுகிறது. அதன் பின்பு கஜபாகு மன்னன் காலத்தில் கண்ணகி வழிபாடு

இலங்கையில் பரவியபோது முருகன் கோயிலுக்கு அருகில் பத்தினி அம்மனுக்கும் ஓர் கோயில் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதன்படி பானமை முருகன் கோயில் 7000 வருடங்களுக்கு முன்பும், பத்தினியம்மன் கோயில் கி.பி 2ம் நூற்றாண்டிலும் தோற்றம் பெற்றுள்ளன. திறந்தவெளிக் கோயில்களாக இருந்த இவ்விரு கோயில்களும் 200 வருடங்களுக்கு முன்பு கற்கோயில்களாகக் கட்டப்பட்டுள்ளன.

பானமை மக்கள் இன, மத பேதமின்றி முருகன், வீரபாகு தேவர், பத்தினியம்மன், பிள்ளையார் ஆகியோரை வழிபட்டு வருகின்றனர். இம் மக்களின் குல தெய்வங்களாக முருகப் பெருமா-னும், பத்தினியம்மனும் விளங்குகின்றனர். இன்று பானமை மக்கள் போற்றி வணங்கும் தெய்வமான "அளுத் தெவியோ" என்பது முரு-கனையும், வீரபாகுத்தேவரையும் குறிக்கும் பெயராகும். முருகனும், பத்தினியம்மனும் வந்து அமர்ந்ததாகக் கருதப்படும் இரண்டு புராதன புளியமரங்கள் இன்றும் ஆலய வளவில் காணப்படுகின்றன. இம்மரங்கள் பானமை மக்களால் போற்றி வணங்கப்படுகின்றன. இவற்றின் முன்பாகவே "அங்கெலிய" என்றழைக்கப்படும் பிரசித்தி பெற்ற கொம்பு முறிப்பு விளையாட்டு வருடா வருடம் திருவிழாவின் போது நடைபெறுகிறது. இக்கொம்பு முறிப்பு விளையாட்டிற்காக பண்டைய காலம் முதல் பானமை மக்கள் இரு குழுக்களாகப் பிரிந்துள்ளனர். முருகனுக்கான குழு மேல் பிரிவு (உடுபில) எனவும், பத்தினியம்மனுக்கான குழு கீழ்ப்பிரிவு (யட்டிபில) எனவும் பெயர் பெற்றுள்ளது.

### முதலைக் குழி (கிம்புளா மடு)

பானமை பிள்ளையார் கோயிலிலிருந்து புறப்படும் யாத்-திரீகர்கள் அடுத்து காண்பது முதலைக்குழி எனும் இடத்தையே. பானமை பிள்ளையார் கோயில் சந்தியிலிருந்து உகந்தைக்குச் செல்லும் கிரவல் பாதையில் சுமார் 400 மீற்றர் தூரத்தில் முதலைக் குழி என அழைக்கப்படும் சிறிய வில்லுக்குளம் காணப்படுகிறது. இது பானமை வில்லு எனவும் அழைக்கப்படுகிறது. பாதையின் இடது பக்கம் முதலைக் குழி குளமும், வலது பக்கம் வயல் வெளிகளும் அமைந்துள்ளன. இக்குளத்தில் அதிகளவில் முதலைகள் காணப்ப-டுவதால் இப்பெயர் உண்டானது. சிங்கள மொழியில் இக்குளம்

கிம்புளாமடு களப்பு என அழைக்கப்படுகிறது. இக்குளத்தைச் சுற்றியே உகந்தை வீதி அமைக்கப்பட்டுள்ளது. முதலைக் குழியைச் சுற்றி இருக்கும் தாழ்நிலத்தில் கோடை காலங்களில் நெல் பயிரிடப்படுகிறது.

சுமார் 200 மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் முச்சந்தியின் தெற்குப் பக்கம் உதந்தைக்குச் செல்லும் பாதையும், மேற்குப் பக்கம் பானமை முருகன், பத்தினி அம்மன் கோயில்களுக்கும், பானமை குளத்திற்கும் செல்லும் பாதையும் காணப்படுகிறது. இச்சந்தியின் மேற்குப் பக்கத்தில் சுனாமியின் பின்பு அமைக்கப்பட்ட புதிய குடியேற்ற கிராமம் காணப்படுகிறது.

### பானகல்லு களப்பு

முதலைக் குழியிலிருந்து உகந்தை நோக்கிச் செல்லும் வழியில் சுமார் 2 கி.மீ தொலைவில் பாதையின் கிழக்கில் பானகல்லு களப்பு அமைந்துள்ளது. நீர் நிறைந்து காணப்படும் இக்களப்பின் மேற்கில் காடும், வடக்கில் பொட்டல் தரையும் ஆங்காங்கே வயல் நிலங்களும் காணப்படுகின்றன. இக்களப்பின் தெற்கில் வேடர் குளம் அமைந்துள்ளது. இது "வெத்தனே வெவ" என அழைக்கப்படுகிறது. இக்குளம் வரண்டு நீர் வற்றிக் காணப்படுகிறது.

### உப்புக்கரச்சி களப்பு

பானகல்லு களப்பிலிருந்து தெற்கு நோக்கி சுமார் 4 கி.மீ தொலைவில் உப்புக்கரச்சி களப்பு அமைந்துள்ளது. இது குணுகல களப்பு எனவும் அழைக்கப்படுகிறது. உப்புக்கரச்சி என்பதே சிங்கள மொழியில் லுணுகல என அழைக்கப்பபட்டு பின்பு குணுகல எனத் திரிபடைந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

உப்புக்கரச்சி களப்பின் மேற்குப் பகுதியில் உள்ள புதுபாவ, ஹிம்பிட்டில்லன்னே ஆகிய மலைகளில் உற்பத்தியாகி இக்களப்பில் கலக்கும் ஓர் சிற்றாறு உப்புக்கரச்சி ஆறு என அழைக்கப்படுகிறது. இவ்வாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டதன் மூலம் ஓர் பெரிய குளம் உருவாகியுள்ளது. இது "பள்ளன் மல் திகன குளம்" என அழைக்கப்படுகிறது. இக்குளத்தின் மூலம் இப்பகுதியில் இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் வயல்களுக்கு பண்டைய காலத்தில் நீர் வழங்கப்பட்டுள்ளது.

உப்புக்கரச்சி களப்பு நீர் கடலில் கலக்கும் முகத்துவாரத்தின் அருகில் ஓர் ஆலயம் இருந்தமைக்கான எச்சங்கள் காணப்படுகின்றன. இவ்விடம் "சொலம்பை" என அழைக்கப்படுகிறது.

**சன்னாசி மலை முருகன், பிள்ளையார் கோயில்கள்**

பானமையை அடுத்து யாத்திரீகர்கள் சன்னாசி மலையை அடைகின்றனர். **(படம் 27)** யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக சன்னாசி மலை விளங்குகிறது. பானமை பத்தினி அம்மன் கோயில் சந்தியிலிருந்து கூமுனை வரை செல்லும் கிரவல் காட்டுப் பாதையில் சுமார் 12 கி.மீ தொலைவில் உகந்தை அமைந்துள்ளது. உப்புக்கரச்சி களப்பைக் கடந்ததும் சுமார் 1 கி.மீ தூரத்தில் பாதை-யின் வலது பக்கத்தில் ஓர் சிறிய குட்டையையும், (மிகச்சிறிய குளம்) அதை அடுத்து ஓர் சிறிய மலைக் குன்றையும் காணலாம். பானமையை அடுத்து இக்காட்டுப் பாதையில் பயணிக்கும் போது பாதையின் அருகில் நாம் காணும் முதலாவது பெரிய மலைக்குன்று இதுவாகும். இம்மலையே சன்னாசி மலை என அழைக்கப்படுகிறது. சிங்கள மொழியில் "வெஹெரகெம" என இம்மலைக்குன்றை அழைக்கிறார்கள். இம்மலையின் அடிவாரத்தில் புராதன காலத்தில் சந்நியாசிகளால் அமைக்கப்பட்ட பிள்ளையார் கோயில் காணப்படுகிறது.

**வேடர்கள் அமைத்த வேல் கோயில்**

மிகப் பண்டைய காலத்திலே சுமார் 3000 வருடங்களுக்கு முன்பு இலங்கையின் கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பகுதிகளில் உள்ள மலைக்குன்றுகளிலும், மலைக்குகைகளிலும் வேடர்களால் வேல் வழிபாடும், முருக வழிபாடும் மேற்கொள்ளப்பட்டமையை ஹென்றி பார்க்கரின் குறிப்புகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறான மலைக் கோயில்கள் குடும்பி மலை, உகந்தை மலை, கதிரமலை, போன்ற இடங்களில் வேடர்களால் அமைக்கப்பட்டன.

தம் குலத்தவர்களால் அமைக்கப்பட்ட கோயில்களைத் தரிசிக்க பிந்தென்ன மலைப் பகுதியிலுள்ள வேடர் நாட்டிலிருந்து வேடர்கள் தெற்கு நோக்கி நுவரகல, நில்கல, வட்டினாகல, கோவிந்த கல, லாகுகல ஊடாக குடும்பி மலை உகந்தை மலை, கதிரமலை போன்ற இடங்களுக்கு கால் நடையாக சென்று தமது குறிஞ்சி வெறியாட்டத்தை நிகழ்த்தி வேலாயுதத்திற்கும், கந்தனுக்கும்

பூஜைகள் நடத்துவது வழக்கமாக இருந்தது. இவ்வழியிலே இவர்கள் பல இடங்களில் தங்கிச் செல்வதுமுண்டு. தாம் தங்கிச் செல்லும் இடங்களில் உள்ள மலைக் குன்றுகளில் தமது குல தெய்வமான கந்தசுவாமிக் கடவுளின் வேலாயுதத்தை வைத்து வணங்கி வெறியாட்டம் நிகழ்த்தி பூஜை செய்வதுண்டு. அப்படி வேடர்கள் தங்கி செல்லும் ஓர் இடமாக சன்னாசி மலை இருந்த காலத்தில் இம்மலைக்குன்றில் முதன் முதலாக வேடர்களால் வேலாயுதம் வைத்து வேல் கோயில் ஸ்தாபிக்கப்பட்டது.

**பானமைப் பகுதியில் சித்தர் போகநாதர்**

அன்று முதல் இன்றுவரை சன்னாசி மலை கதிர்காமம் செல்லும் பாத யாத்திரீகர்கள் தங்கிச் செல்லும் ஓர் முக்கிய இடமாக விளங்குகிறது. அன்று வேடர்கள் ஆரம்பித்த பாதயாத்திரையை பிந்தென்ன காடுகளிலிருந்து இன்றும் வேடர்கள் மேற்கொள்வது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இலங்கையின் வரலாற்றுதய காலம் முதல் கதிர்காமத்தை தரிசிக்க பல யோகிகளும், ஞானிகளும், சித்தர்களும், சந்நியாசிகளும், பாதயாத்திரையாக கிழக்கு கரையோரமாக வந்துள்ளமை வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரியவருகிறது. இவர்களும் சன்னாசி மலையில் தங்கி இங்கிருந்த வேலாயுதத்தை வணங்கி பூஜை நடத்திச் சென்றுள்ளனர்.

பழனி மலையிலிலிருந்து வந்த சித்தர் போகநாதர் இவ்வழியாக கதிர்காமத்திற்கு சென்றுள்ளார். இவ்வழியில் உள்ள பானமையின் வடக்கில் சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள சாஸ்த்ராவெளி என்னுமிடத்தில் உள்ள ஓர் மலையில் போகர் தங்கிச் சென்றுள்ளார். இதன் காரணமாக இம்மலை “போககிரி” எனப் பெயர் பெற்றுள்ளது. கி.பி 2ம், 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இம்மலையில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டில் “போககிரி” என இம்மலை குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டாய்வாளர் நிக்கலஸ் 1934ல் இக்கல்வெட்டு பற்றிய தகவல்களை எழுதியுள்ளார் இலங்கை தொல்பொருள் திணைக்களத்தின் “Inscription of Ceylon – later Brahmi Inscription” எனும் பெயரில் டாக்டர் பரணவித்தான வெளியிட்ட நூலில் 23வது கல்வெட்டாக இது இடம் பெற்றுள்ளது.

எனவே இங்கு தங்கிச் சென்ற போகர் சன்னாசி மலையிலும் தங்கி இருந்து அங்கிருந்த வேலாயுதத்தை வழிபட்டுச் சென்றிருப்பார் என நம்பக் கூடியதாக உள்ளது. "போககிரி" என்ற பெயர் பொறிக்கப்பட்ட சாஸ்த்ராவெல பிராமிக் கல்வெட்டும் இதே காலப்பகுதியில் பொறிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

**சந்நியாசிகள் வாழ்ந்து வந்த மலை**

மிகப் பண்டைய காலம் முதல் சன்னாசி மலையில் இந்தியாவிலிருந்து வந்த துறவிகள் தங்கி வாழ்ந்து வந்துள்ளனர். சந்நியாசிகளில் சிலர் கதிர்காமத்திற்கு சென்று முருகனைத் தரிசித்து விட்டு இம்மலைக்கு வந்து இங்கு தவம் செய்துள்ளனர். சித்தர் போகநாதர் இம்மலைக்கு வந்து சென்றமையால் அவரின் சக்தி இங்கு இருப்பதாக அறிந்த சந்நியாசிகள் இம்மலைக்கு வந்து இங்கு தவம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையில் சில சந்நியாசிகள் வாழ்ந்து இங்கேயே சமாதி அடைந்ததாகவும், இதனால் இங்கு அபூர்வ சக்திகள் இருப்பதாகவும், இதன் காரணமாகவே இம்மலை "சந்நியாசி மலை" எனப் பெயர் பெற்றதாகவும் தெரியவருகிறது. இப்பெயர் மருவி இன்று "சன்னாசி மலை" என அழைக்கப்படுகிறது.

**தம்பதி நல்லாளின் திருப்பணி**

உன்னரசுகிரி இராஜதானியை ஆட்சி செய்து வந்த புவனேகபாகுவின் மனைவியான சோழ இளவரசி தம்பதி நல்லாள் தன் கணவனுடன் நாகர்முனை முருகன் கோயிலை திருத்தியமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்த சமயம் சன்னியாசி மலையிலிருந்த வேல் கோயிலையும் பராமரித்து வந்ததுடன் இங்கு வாழ்ந்து வந்த சந்நியாசிகளுக்கு தானமாக மாதாமாதம் நெல் மூடைகளை அனுப்பி வந்ததாகவும் வரலாற்றுக் குறிப்பொன்று கூறுகிறது. இதன்படி சோழ இளவரசி தம்பதி நல்லாளின் போஷிப்பையும் சன்னாசி மலைக் கோயில் பெற்றுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. புவனேக பாகுவின் காலம் கி.பி 28 ஆகும். எனவே இக்காலப்பகுதியில் இங்கு வேலாலயம் இருந்தமையும், சன்னியாசிகள் வாழ்ந்தமையும் உறுதியாகிறது.

### உன்னரசுகிரி இராஜதானியின் ஓர் பகுதி

சன்னாசி மலையே உன்னரசுகிரி என வி. சி. கந்தையா அடையாளம் கண்டுள்ளார். ஆனால் இதற்கு சற்று தென்மேற்கில் உள்ள குடும்பிமலை தான் உன்னரசுகிரி என சி. கணபதிப் பிள்ளை குறிப்பிட்டுள்ளார். சன்னாசி மலை குடும்பி மலை போன்றவ-ற்றை விட ஓர் இராஜதானியின் தலைநகருக்குரிய எல்லா அடை-யாளங்களையும் கொண்டதான சங்கமன் கண்டிமலையே உன்னரசு-கிரி எனவும் கூறப்படுகிறது.

அரண்மனை இடிபாடுகள், ஆலய எச்சங்கள், நீர்ச்சுனைகள், கல்வெட்டுக்கள், கட்டிட எச்சங்கள் போன்றவை இங்கு காணப்-படுகின்றன. உன்னரசுகிரி இராஜதானி நாகர் முனைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையில் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. இந்த இராஜதானியின் முக்கிய பகுதிகளாக குடும்பி மலை, நாகபர்வதமலை, சங்கமன் கண்டி மலை, சன்னாசி மலை போன்றவை அமைந்திருந்தன. தமிழ் அரசர்களால் ஆளப்பட்ட இப்பகுதியில் கோயில்களும், குளங்களும், குடியிருப்புகளும் அமைந்திருந்தன.

### சந்நியாசிகள் ஸ்தாபித்த விநாயகர் கோயில்

மிகப் பண்டைய காலத்தில் பாத யாத்திரையாக கதிர்காமம் செல்ல இலங்கை வந்த தென்னிந்திய துறவி ஒருவரால் சன்னியாசி மலையின் அடிவாரத்தில் ஓர் கல்லை வைத்து பிள்ளையாராக வழிபடப்பட்டதாகவும், பிற்காலத்தில் கதிர்காமம் செல்லும் பாத யாத்திரை பக்தர்களால் வழித்துணைக் கடவுளாக இப்பிள்ளையார் வணங்கப்பட்டு வந்ததாகவும் தெரியவருகிறது. அடர்ந்த காட்டின் மத்தியில் உகந்தை செல்லும் காட்டுப்பாதையின் அருகில் காணப்படும் இச் சிறிய ஆலயம் மிகவும் கீர்த்தி பெற்றதாகக் கருதப்படுகிறது. உகந்தை முருகனை தரிசிக்கச் செல்லும் பக்தர்கள் முதலில் இப்பிள்ளையாரைத் தரிசித்த பின்னரே முருகனைத் தரிசிப்பர்.

பழம்பெருமை வாய்ந்த இப்பிள்ளையார் ஆலயம் தோன்றிய காலம் சரியாகத் தெரியாவிட்டாலும் சுமார் 2000 வருடங்களுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட கோயிலாகவே இது கருதப்படுகிறது.

### மலையடிவாரப் பிள்ளையார் கோயிலும், அதன் புராதன சின்னங்களும்

சன்னாசி மலையின் அடிவாரத்தில் பாதையருகில் உள்ள ஓர் பழமை வாய்ந்த புளியமரத்தின் கீழ் பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது. **(படம் 28)** பண்டைய காலத்தில் முனிவர்களால் இம்மரத்தின் கீழ் ஓர் பிள்ளையார் கல் ஸ்தாபிக்கப்பட்டு திறந்த வெளி வழிப்பிள்ளையார் கோயிலாக வணங்கப்பட்ட இது வருடா வருடம் கதிர்காமம் செல்லும் யாத்திரீகர்களால் பூஜிக்கப்பட்டு வந்தது. பின்பு பிள்ளையார் விக்கிரகம் பிரதிஸ்டை செய்யப்பட்டு அதை பாதுகாக்கும் பொருட்டு சிறிய கோயில் கட்டப்பட்டது. அதன் பின்பு உகந்தை முருகனாலயத்தை தரிசிக்க வரும் பக்தர்களும், முக்கியஸ்தர்களும் ஒன்று சேர்ந்து இச்சிறிய ஆலயத்திற்கு ஓர் மண்டபத்தையும் கட்டியெழுப்பினர். இன்று கதிர்காமம், உகந்தை போன்ற ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்களின் முக்கிய வழிபாட்டுத் தலமாக சன்னாசி மலைக்கோயில் விளங்குகிறது.

ஆலயத்தின் கருவறையில் மிகப் பழமைவாய்ந்த உயரமான வேலாயுதம் ஒன்று உள்ளது. மேலும் பழமைவாய்ந்த திரிசூலங்கள் இரண்டும், முனிவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட புராதன பிள்ளையார் கல்லும், மரத்தினால் செதுக்கப்பட்ட புராதன விநாயகர் சிலை ஒன்றும், வலம்புரி பிள்ளையார் கற்சிலை ஒன்றும் காணப்படுகின்றன. இவையாவும் பண்டைய காலம் தொட்டு வருடா வருடம் வரும் சன்னியாசிகளால் இங்கு வைத்து பூஜிக்கப்பட்டவையாகும். ஆலயத்தின் முன்பு கற்பூரம் கொளுத்த பயன்படுத்தப்படும் ஓர் பழமை வாய்ந்த பீடக்கல் காணப்படுகிறது.

### மலைமீதுள்ள ஆலய இடிபாடுகளும், நீர்ச்சுனைகளும்

பிள்ளையார் ஆலயத்தின் இடது பக்கத்தில் சன்னாசி மலைக் குன்றுக்கு செல்லும் பாதை உள்ளது. மலைக்குச் செல்லும் அடிப்பாதையில் முதலாவதாக ஓர் நீர்ச்சுனை அமைந்துள்ளது. **(படம் 29)** இயற்கையான பாறை ஊற்றின் மூலம் பாறையில் அமைந்துள்ள இச்சுனையில் குளிர்ந்த சுத்தமான நீர் காணப்படுகிறது. பண்டைய காலம் முதல் இது மலை உச்சியில் இருந்த வேல் கோயிலின் தீர்த்தமாக விளங்கியுள்ளது. இன்றுவரை ஆலயத்தை தரிசித்தும், தங்கிச் செல்லும் பக்தர்களுக்கு இந் நன்னீர்ச்சுனை

மிகவும் பயனுள்ளதாக விளங்குகிறது. இதன் இடது பக்கத்தில் சற்று தூரத்தில் இன்னுமோர் இயற்கையான நீர்ச்சுனையும் காணப்படுகிறது.

இவற்றைக் கடந்து மலையின் உச்சிப் பகுதிக்கு சென்றதும் அங்கு ஓர் மரத்தின் கீழ் புராதன வேல் கோயில் அமைந்திருந்த இடம் உள்ளது. இச்சமதரையில் ஆலயத்தின் இடிபாடுகளான செங்கற்கள், கற்தூண்களின் பாகங்கள், துளைக் கற்கள் போன்றவை ஆங்காங்கே காணப்படுகின்றன. கற்சுவர் ஒன்று இருந்ததற்கான அடையாளங்கள் தெரிகின்றன. இவற்றின் மத்தியில் உள்ள இரு கள்ளி மரங்களுக்கிடையில் லிங்கம் போன்ற ஓர் கல்லும் அதைச்சுற்றி ஏராளமான சிறிய கற்களும் காணப்படுகின்றன. இச்சிறிய கற்கள் இங்கு வரும் பக்தர்கள் நேர்த்திக்காக வைத்த கற்களாகும்.

மலைக்குன்றின் உச்சியிலிருந்து வடக்குப் பக்கமாக சற்று உயரம் குறைவாக மலைப்பாறை நீண்டு காணப்படுகிறது. சிறிது தூரத்தில் இன்னுமோர் சமதரை அமைந்துள்ளது. இங்கும் ஓர் கட்டிட இடிபாடு உள்ளது. இதைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் இன்னுமோர் இயற்கையான நீர்ச்சுனையை பாறையில் காணக் கூடியதாக உள்ளது. இதனருகில் ஓர் பழமைவாய்ந்த வேலும் அதைச் சுற்றி சிறிய கற்களும் நூற்றுக் கணக்கில் காணப்படுகின்றன.

**இன்றும் மலையில் நிலவும் சன்னியாசிகளின் அபூர்வ சக்தி**

உகந்தை மலையில் உள்ளது போல் இம்மலைக் குன்றிலும் பல நீர்ச்சுனைகள் இயற்கையாக அமைந்துள்ளன. மலையின் முடிவில் வடகிழக்கு அடிவாரத்தில் ஓர் சிறிய குளம் காணப்படுகிறது. மலையின் மேற்குப் பக்கத்தில் உள்ள காட்டில் பல கற்குகைகளும் காணப்படுகின்றன. இவை இங்கு வாழ்ந்து வந்த சந்நியாசிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. சன்னாசி மலைக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் இக்காட்டுப் பகுதிக்கு செல்ல அஞ்சுவதாகக் கூறப்படுகிறது. இக்குகைகளில் சன்னியாசிகளினதும், சித்தர்களினதும் சக்தி இன்றும் உள்ளதாக நம்பப்படுகிறது.

பானமைப் பகுதியிலுள்ள பழங்குடி மக்கள் சன்னாசி மலைக் காட்டுப் பகுதிக்கு தேன் எடுக்கவும், காய்கனிகள் பறிப்பதற்கும், வேர், மூலிகை போன்றவற்றை எடுப்பதற்கும், மரங்கள் வெட்டுவதற்கும் வருவதுண்டு. இம்மலையிலுள்ள சக்தி மீது

மிகவும் பயபக்தி கொண்ட இவர்கள் முதலில் அடிவாரத்திலுள்ள பிள்ளையாருக்கு தேங்காய் உடைத்துவிட்டு, மலை உச்சிக்குச் சென்று வேலை வழிபட்டு, சிறிய கல்லை வேலின் முன்பாக வைத்து நேர்ந்து விட்டு, தம்மை காக்கும் படி வேண்டிக் கொண்ட பின்பே இக்காட்டுக்குள் செல்கிறார்கள். இந்த வழக்கம் இன்றும் நிகழ்வது குறிப்பிடத்தக்கது. இவ்வழியில் செல்லும் பல யோகிகளும், ஞானிகளும் சன்னாசி மலைக்கு அப்பால் செல்ல முடியாமல் ஏதோ ஓர் சக்தி தம்மைத் தடுப்பதாகவும், இம்மலையே முருகனின் சக்தி உள்ள இடம் எனவும் கூறுகின்றனர்.

**சாமியாரின் சமாதி**

சன்னாசி மலையின் வடக்குப் பக்கத்தில் உள்ள சிறிய குளத்தின் எதிர்ப்புறமாக பாதையின் அருகில் வேலுப்பிள்ளை சாமியாரின் சமாதி காணப்படுகிறது. வட்ட வடிவமாக அகில் மரங்களும் இவற்றின் மத்தியில் சாமியாரின் சமாதியும் காணப்படுகிறது. இத்தனை சிறப்புக்கள் நிறைந்ததும், பல அபூர்வ சக்தியைக் கொண்டதும், புராதன இந்து சமயச் சின்னங்கள் நிறைந்ததும், தொல்லியல் முக்கியத்துவம் பெற்றதுமான சன்னாசி மலையையும், அதன் இந்து பாரம்பரியத்தையும் போற்றிக் காக்க வேண்டியது இந்துக்களின் தலையாய கடமையாகும்.

**சலவைக் களப்பும், ஆறும், குளங்களும்**

சன்னாசி மலையிலிருந்து புறப்படும் யாத்திரீகர்கள் அடுத்ததாக சலவைக்களப்பை அடைகின்றனர். **(படம் 30)** சன்னாசி மலைக் குன்றிலிருந்து சுமார் 5 கி.மீ தொலைவில் சலவைக்களப்பு அமைந்துள்ளது. இதன் நீர் ஆடைகளை சலவை செய்த நீர் போல காணப்படுவதால் சலவைக் களப்பு எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இக்களப்பு ஹெலாவ, சலாவ என சிங்கள மொழியில் அழைக்கப்படுகிறது.

பானமையிலிருந்து உகந்தை வரை அமைந்துள்ள காட்டுப் பாதையில் உள்ள களப்புகளில் அளவில் பெரியது சலவைக் களப்பேயாகும். குடும்பிமலையின் மேற்குப் பகுதியில் உற்பத்தியாகும் ஓர் சிற்றாறு குடும்பிமலை ஊடாக சலவைக்-களப்பில் கலப்பதால் இது சலவை ஆறு என அழைக்கப்படுகிறது. இவ்வாற்றின் நீரின் மூலமாக சலவைக் களப்பின் மேற்கு மற்றும்

வடக்கு பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெற் காணிகளில் பண்டைய காலத்தில் நெல் விளைவிக்கப்பட்டதாகத் தெரிய-வருகிறது.

சலவை ஆற்றை மறித்து குறுக்கே அணை கட்டி ஓர் குளத்-தை பண்டைய காலத்தில் கட்டியுள்ளனர். இக்குளம் சலவை மேட்டுக் குளம் என அழைக்கப்படுகிறது. உடஹெலாவ வெவ என சிங்கள மொழியில் பெயர் பெற்றுள்ள இக்குளத்தின் அருகில் இன்னுமோர் சிறிய குளம் அமைக்கப்படுள்ளது. இச்சிறிய குளம் "சலவைப் பூட்டுக் குளம்" என அழைக்கப்படுகிறது. இவ்விரண்டு குளங்களிலும் இருந்தே சலவை வெளி என அழைக்கப்படும் வயல் நிலங்களுக்கு பண்டைய காலத்தில் நீர்ப்பாசனம் கிடைக்கப்-பெற்றது. இக்குளங்கள் இரண்டும் இன்று தூர்ந்து போய் காணப்-படுகின்றன.

சலவைக் களப்பின் ஓரமாக யாத்திரீகர்கள் நடந்து செல்லும் போது உகந்தைக் குடா கடலிலிருந்து வீசும் காற்று சலவைக் களப்பு நீரில் பட்டு எமது உடலுக்கு குளிர்ச்சியான காற்றை வழங்குகிறது.

**திஸ்னாவுல கேம**

சலவைக் களப்பின் வடமேற்கில் 3 கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் "திஸ்னாவுல கேம" மலைப்பகுதி அமைந்துள்ளது. திஸ்னாவுல மலைப் பாறையில் ஓர் நீர்ச்சுனை காணப்படுவதால் இவ்விடம் திஸ்னாவுல கேம என அழைக்கப்படுகிறது.

இங்குள்ள கற்பாறைக் குகையில் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. "கபதி நகுலிய லேன" என இச்சிறிய கல்வெட்டு காணப்படுகிறது. இது கிருகபதி நகுலியின் குகை எனப் பொருள்படும். இக்குகை சீதையுடன் தொடர்புபட்டது எனவும், நகுலி என்பது சீதையின் இயற்பெயர் எனவும், சீதை இராவணனால் சிறைவைக்கப்பட்ட இடங்களில் இதுவும் ஒன்று எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். திஸ்னாவுல கேம கல்வெட்டு இலக்கம் 421 ஆக பேராசிரியர் பரணவித்தாரணவினால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**குடும்பிமலை சிவன் கோயில்**

சலவைக் களப்பின் ஓரத்தில் நடந்து செல்லும் யாத்திரீகர்-

கள் மேற்குப் பக்கத்தில் ஓர் மலையையும் அதன் மீது லிங்கம் போன்ற ஓர் வடிவத்தையும் காண்கின்றனர். இம்மலையே குடும்பி மலையாகும். **(படம் 31)** சலவைக் களப்பின் மேற்குப் பக்கத்தில் 4 கி.மீ தொலைவில் குடும்பிமலை உள்ளது. கி.பி 1ம் நூற்றாண்டில் கிழக்கு இலங்கையின் தலைநகராக விளங்கிய உன்னரசுகிரி இராஜதானியே குடும்பிமலையாகும். குடும்பி மலைப்பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் உன்னரசுகிரி இராஜதானியின் இடிபாடுகளைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்விடிபாடுகளுக்கி-டையே புராதன சைவ ஆலய இடிபாடுகளும் காணப்படுகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலும் கி.பி 1ம் - 4ம் நூற்றா-ண்டு வரையான காலத்திலும் இங்கு சிவ வழிபாடு செல்வாக்கு பெற்றிருந்தமைக்கான கல்வெட்டு ஆதாரங்கள் கிடைக்கப்பெற்று-ள்ளன. குடும்பிமலையில் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் தமிழ் பிராமிச் சொற்களும், சிவன் சம்பந்தமான பெயர்களும் பொறி-க்கப்பட்டுள்ளன. “நதிக” என்ற சொல் பொறிக்கப்பட்ட கல்-வெட்டொன்றில் நந்தியின் பாதமும் காணப்படுகிறது. இதன் மூலம் இங்கு சிவவழிபாடு நிலவியுள்ளதாக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

நூற்றுக்கணக்கான மலைக்குகைகள் இங்கு காணப்படு-கின்றன. இக்குகைகளில் சிலவற்றில் கல்வெட்டுக்கள் எழுதப்பட்டு-ள்ளன. சில குகைகளில் மயில், நாகம் போன்றவற்றின் சித்திரங்களும் காணப்படுகின்றன. மலை அடிவாரத்தில் செங்கற்கள், கற்தூண்கள் போன்ற புராதனச் சின்னங்கள் காணப்படுகின்றன. தமிழ் மன்னர்-களும், பாண்டிய குல சிற்றரசர்களும் ஆட்சி செய்த இராஜதானி-யான குடும்பிமலையில் பிற்காலத்தில் பௌத்த குருமார்கள் வாழ்ந்துள்ளனர். அப்போது இம்மலை மீது பௌத்த தூபிகள் கட்டப்பட்டுள்ளன.

7000 ஆண்டுகளுக்கு முன் திராவிட வேந்தன் இராவணன் ஆட்சி நிலவிய இலங்காபுரியின் தலைநகரம் தென்கிழக்கிலங்கை-யில் அமைந்திருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். இராவணனின் தலைநகரையே உன்னரசுகிரி இராச்சியத்தின் தலைநகராகவும் கிழக்கிலங்கை மன்னர்கள் கொண்டிருந்தனர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உன்னரசுகிரி ஓர் மலைப் பகுதி என்பது அதன் பெயர் மூலம் தெளிவாகத் தெரிகிறது. தென்கிழக்-

கிலங்கையில் உள்ள மலைப் பகுதிகளில் ஓர் இராஜதானிக்குரிய அமைப்புகளுடன் மூன்று மலைப் பிரதேசங்கள் காணப்படுகின்றன. இவை சங்கமன் கண்டி மலை, குடும்பி மலை, நாகபர்வதமலை (பம்பரகஸ்தலாவ) ஆகிய மலைப் பிரதேசங்களாகும்.

இவற்றில் நாகபர்வத மலையில் இராவணன் பெயர் பொறிக்கப்பட்ட பிராமிக்கல்வெட்டொன்று காணப்படுகிறது. எனவே நாகபர்வதமலை எனும் பம்பரகஸ்தலாவ மலைப்பகுதியே இராவணனின் தலைநகராக இருக்க வேண்டும். நாகபர்வத மலையின் வடகிழக்கில் 4 கி.மீ தொலைவில் குடும்பிமலைப்பகுதி அமைந்துள்ளது. குடும்பி மலையில் சிவ வழிபாடு நிலவியிருந்தமைக்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன. எனவே நாகபர்வத மலை மற்றும், குடும்பி மலைப்பகுதியிலேயே இராவணனின் தலைநகரம் அமைந்திருக்கும் எனக் கருதப்படுகிறது.

இராவணன் சிறந்த சிவ பக்தனாவான். எனவே இவன் தனது இராச்சியத்தின் தலைநகரில் பெரிய சிவாலயமொன்றை அமைத்திருப்பான் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். மேலும் குடும்பிமலை உச்சியில் ஓர் சிவலிங்கக் கோயில் இருந்ததாக பானமைப் பகுதியில் உள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இப்பகுதியிலிருந்தே ஓர் புராதன விநாயகர் சிலை கிடைக்கப்பெற்றதாகவும் கூறப்படுகிறது. அத்துடன் இங்குள்ள மலைக்குகைகளில் ஒன்றில் ஆவுடையார் அற்ற மிகப் பழமைவாய்ந்த லிங்கம் ஒன்று காணப்படுவதாகவும் தெரியவருகிறது.

எனவே இவ்விடயங்களை வைத்துப் பார்க்கும் பொழுது குடும்பிமலையில் சிவாலயம் இருந்தது எனும் கூற்று உறுதியாகிறது. இங்கு அமைந்துள்ள உயரமான மலையான "பெலும் கல" எனும் மலையின் உச்சியில் சிவலிங்கத்தின் வடிவில் ஓர் செங்கல் தூபி காணப்படுகிறது. இது சிலிண்டர் வடிவமான பௌத்த தூபி எனக் கூறப்படுகிறது. இவ்வடிவத்தில் இலங்கையில் தூபி எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சுமார் 10 அடி உயரமும் 15 அடி விட்டமும் கொண்ட இத்தூபி சதுரவடிவமுடைய மேடை மீது அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மேலும் ஒரு சதுரமேடையில் ஓர் சிறிய தூபியும் காணப்படுகிறது. இவை தவிர மேலும் இரு கட்டிடங்கள் இருந்தமைக்கான எச்சங்கள் இம்மலையில் காணப்படுகின்றன. இங்கு சிவலிங்க வடிவில் உள்ள

தூபி இருக்கும் இடத்தில் தான் இராவணன் காலத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு சிவாலயம் அமைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதே காலப் பகுதியில் இராவணனால் உகந்தை மலையில் உகந்தகிரி சிவாலயமும் அமைக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மான்மியத்திலும் உகந்தைகிரியில் இராவணன் சிவாலயம் அமைத்தது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் குபேரன் முருகவழிபாட்டையும், இராவணன் சிவ வழிபாட்டையும் பேணி வந்ததோடு ஆலயங்களையும் அமைத்ததாக மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பாக நோக்கத்தக்கது.

சிவனின் பாதம் பதிந்த சிவனொளிபாதம், புத்தரின் பாதம் பதிந்த ஸ்ரீபாத, ஆதாமின் பாதம் பதிந்த ஆதம் மலை என இலங்கை மக்களால் அழைக்கப்படும் சுமணகூட பர்வதம் இன்றைய சிவனொளிபாதம் அல்ல என்றும் இது கிழக்கு மாகாணத்தில் உள்ள குடும்பிமலையே எனவும் அண்மைக்கால ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இலங்கையின் பௌத்த நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சிங்கள தூபவம்சம், சமந்த பாசாதிகா, சிங்கள போதி வங்சய, கடயிம் பொத் ஆகியவற்றிலும் தொலமியின் தேசப்படத்திலும் சுமண கூட பர்வதம் (சிவனொளிபாத மலை) இரத்தினபுரிக்கு அருகில் இருந்தது எனும் குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. மாறாக ருகுணு மாகமைக்கு அருகில் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மகாவம்சத்தில் புத்த பகவான் நாக மன்னன் மணியக்கிரனின் வேண்டுகோளை ஏற்று, கல்யாணி நாட்டுக்கு வந்து, மணியக்கிரனைச் சந்தித்த பின் அங்கிருந்து சுமண கூட பர்வதத்திற்கு சென்று, தனது பாதச் சுவட்டைப் பதித்து விட்டு, அங்குள்ள மலையடிவாரத்தில் தங்கியிருந்து அடுத்த நாள் தீகவாப்பிக்கு சென்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி கல்யாணி எனும் நாக இராச்சியத்திற்கு அருகில் சுமண கூட மலையும், தீகவாப்பியும் இருந்தன என்பது புலனாகிறது.

இலங்கையில் பண்டைய காலத்தில் வடக்கில் நாகதீபம் எனும் நாக இராச்சியமும், தெற்கில் கல்யாணி எனும் நாக

இராச்சியமுமாக இரண்டு நாக இராச்சியங்கள் இருந்தன. கல்யாணி மன்னன் மணியக்கிரனின் காலத்திற்கு பின்பு இலங்கைக்கு வந்த கிரேக்க அறிஞரான தொலமியின் இலங்கைத் தேசப்படத்தில் நாக இராச்சியம் மகாவலி கங்கையின் கீழ்ப்பக்கத்தில் ரோகன நாட்டிலுள்ள மாகமையின் கிழக்குத் திசையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. தொலமியின் தேசப்படத்தில் நகதுப (Nagaduba) நகெய்ரொய் (Nageiroi) என இரு நாக பிரதேசங்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மகாவம்சத்தில் "கல்யாண கன்னிகா" எனும் இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இது களனிதீசன் ஆட்சி செய்த கல்யாணி இராச்சியம் எனவும், இது பொத்துவிலுக்கு அருகில் உள்ள பானமை பகுதியில் உள்ளதாகவும் பேராசிரியர் அபய ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார். மேலும் சுமண கூட மலை பானமை, தீகவாபி ஆகிய இடங்களுக்கு அருகிலேயே உள்ளது எனவும் அது பானமை பற்றில் உள்ள குடும்பிமலை பிரதேசமே எனவும் அவர் கூறியுள்ளார்.

இக்கூற்றை உறுதி செய்யும் வகையில் குடும்பி மலைப் பகுதியில் சான்றுகள் உள்ளன. குடும்பி மலையில் இரண்டு மலைகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று பெலும்கல என அழைக்கப்படுகிறது. இம்மலை உச்சியில் லிங்க வடிவில் (சிலிண்டர் வடிவில்) ஒர் தூபி அமைந்துள்ளது. இம் மலையே இங்கு அளவில் பெரியதாகக் காட்சி தருகிறது. இம்மலையின் சற்று தூரத்தில் இன்னுமோர் மலை அமைந்துள்ளது. இம்மலையிலே மூன்று பிராமிக்கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இதில் ஒன்று "சுமன குட்டே லேன" எனவும் இரண்டாவது "பருமக அஸி சுமனஹ லேன சகஸ" எனவும் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக்களின் படி சுமன கூட மலை இதுவே என ஆரிய சிங்க குறிப்பிட்டுள்ளார். பௌத்த நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சுமண கூட பர்வதமும் இதுவே என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இம்மலையிலேயே சுமண சமன் எனும் பக்தன் வசித்து வந்துள்ளான். இலங்கையின் தென் கிழக்குப் பகுதியில் சுமணசமன் தொடர்பான பல பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. பியன்கல என்னுமிடத்தில் 3 கல்வெட்டுக்களும், மேலும் கிரலான, கிரிபொக்குன ஹெல, வெஹெரகல, ஹிமிதுராவ, இலுக் பிட்டி

கந்த, புலுக்குணாவி, முள்ளிக்குளம் மலை ஆகிய இடங்களிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

**குடும்பிமலையில் இந்து தெய்வ வழிபாடு பற்றிய கல்வெட்டுக்கள்.**

குடும்பிமலையில் மொத்தமாக 105 மலைக்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் சிலவற்றில் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 17 கல்வெட்டுக்கள் இங்கு காணப்படுகின்றன. இவற்றில் 5 "இலங்கையின் பிராமிக் கல்வெட்டுக்கள் - பகுதி ஒன்று" எனும் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவை 498, 499, 500, 501, 502 எனும் இலக்கங்களைக் கொண்டவையாகும். இவற்றில் 498ம் மற்றும் 500ம் இலக்க கல்வெட்டுக்கள் இந்து சமயம் தொடர்பானவையாகும்.

இதில் "பெருமகன் மித்தவின் மகள் பெருமகன் நதிக்கவின் மகா சுதர்சன குகை" எனப் பொறிக்கப்பட்டு நந்தியின் பாதமும் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழ் பிராமிக்கே உரிய "பருமக" எனும் சொல் இதில் காணப்படுகிறது. அத்துடன் "சுதர்சன குகை" எனவும் எழுதப்பட்டுள்ளது. சுதர்சன என்பது மகாவிஷ்ணுவின் சக்கரமாகும். சில ஆலயங்களில் இச்சக்கர வழிபாடே நிலவுகிறது. எனவே இங்கிருந்த குகையில் சுதர்சன சக்கர வழிபாடு நிலவியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதில் நந்தியின் பாதம் பொறிக்கப்பட்டிருப்பதால் இங்கு சிவவழிபாடும் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

500ம் இலக்க கல்வெட்டு "நாகம்" தொடர்பானதாகும். இதில் நாகவழிபாட்டை மேற்கொண்டவர்கள் பற்றி கூறப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் "கமிக நாகவின் மகனான கமிகதிச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. திச என்ற பெயரில் தமிழ் வணிகன் இருந்தது பற்றி குடிவில் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

குடும்பிமலையில் மேலும் 12 பிராமிக் கல்வெட்டுக்கள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் 5வது கல்வெட்டில் "உபாசக வேலுவின் குகை" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது பக்தன் வேலனின் குகை எனப் பொருள்படுகிறது. இதன்படி இக்குகையில் வேல் வழிபாடு நிலவியமை தெரியவருகிறது.

மேலும் இரு கல்வெட்டுக்களில் தமிழ் மொழிக்கே உரிய "பருமக", "கஹபதி" ஆகிய சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இக்குகைகளில் ஆதி திராவிடர்கள் வாழ்ந்திருந்தமை புலனாகிறது.

குடும்பிமலையில் உள்ள இந்து சமயம் தொடர்பான கல்வெட்டுக்கள் மூலம் இங்கு சிவவழிபாடு, நாகவழிபாடு, வேல் வழிபாடு, சுதர்சன சக்கர வழிபாடு போன்றவை இங்கிருக்கும் குகைகளில் வாழ்ந்த ஆதிதிராவிடர்கள் மூலம் மேற்கொள்ளப்-பட்டுள்ளமை உறுதியாகத் தெரிகிறது.

**உகந்தைக் களப்பும், உகந்தை ஆறும்**

சலவைக் களப்பை அடுத்து பாதையின் இடது பக்கம் ஓர் சிறிய நன்னீர் குளம் காணப்படுகிறது. இதிலிருந்து சலவைக் களப்பின் தெற்கில் உள்ள வயல் காணிகளுக்கு நீர் கிடைக்கிறது. இதைக் கடந்ததும் பாதையின் இரு பக்கங்களிலும் அடர்ந்த காடு காணப்படுகிறது. இவ்விடத்திலும் பாதையின் இடது பக்கம் ஓர் நன்னீர் குட்டை அமைந்துள்ளது. இதனை அடுத்து சிறிது தூரம் சென்றதும் பாதையின் வலது பக்கம் ஓர் சிறிய களப்பைக் காணலாம். இக்களப்பு நீர் பாதையை ஊடறுத்துக் கடலுடன் சங்கமமாகிறது.

இதனை அடுத்து சற்று தூரம் காடும், அதைக் கடந்ததும் பாதையின் வலது பக்கம் தொடங்கி இடது பக்கம் வரை பரந்த ஓர் களப்பு காணப்படுகிறது. இதுவே உகந்தைக் களப்பாகும். களப்பின் கிழக்குப் பக்கம் உகந்தைக் குடா அமைந்துள்ளது. உகந்தைக் களப்பின் மத்தியில் உகந்தை மலைக்குச் செல்லும் முச்சந்தி அமைந்துள்ளது. உகந்தை மலையின் மேற்குப் பக்கத்திலும், வடக்குப் பக்கத்திலும் இக்களப்பு காணப்படுகிறது. களப்பின் மேற்குப் பகுதியிலிருந்து ஓடிவரும் இரண்டு சிற்றாறுகள் ஒன்றாக இணைந்து இக்களப்பின் ஊடாக மலைக்குச் செல்லும் பாதையை ஊடறுத்து உகந்தைச் சந்தியின் வடகிழக்குப் பக்கத்தில் உகந்தைக் குடாவில் சங்கமமாகின்றன. இச்சிற்றாறு உகந்தை ஆறு என அழைக்கப்படுகிறது.

மழைக் காலங்களில் உகந்தை ஆற்றில் நீர் பெருகி வந்து உகந்தைக் களப்பை நிரம்பி இருக்கும் வேளை உகந்தை மலையின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் சில இடங்களும்

நீரில் மூழ்கிக் காணப்படும் காட்சியானது உகந்தை மலை ஓர் தீவில் அமைந்திருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்துவதாகும். இக்களப்புகளையும், சிற்றாறுகளையும் கடந்து வரும் யாத்திரீகர்கள் உகந்தை மலைக்கோயிலை அடைகின்றனர். கதிர்காமத்திற்கு செல்லும் பாதயாத்திரீகர்கள் அனைவரும் தங்கிச் செல்லும் முக்கிய இடமாக உகந்தை முருகனாலயம் விளங்குகிறது. கதிர்காம பாத யாத்திரை மேற்கொள்ளும் அதிகமான பக்தர்கள் இங்கிருந்தே தமது பாத யாத்திரையைத் தொடங்குகின்றனர்.

**பண்டைய உகந்தைகிரி சிவாலயம்**

சலவைக் களப்பில் இருந்து 6 கி.மீ தொலைவில் உகந்தை அமைந்துள்ளது. கிரவல் மண்ணினால் அமைக்கப்பட்ட காட்டுப் பாதையின் கிழக்கில் சுமார் 500 மீற்றர் தூரத்தில் ஆலயங்கள் நிறைந்த மலைப் பகுதி காணப்படுகிறது. இங்கிருந்து 100 மீற்றர் தொலைவில் வங்கக்கடல் அமைந்துள்ளது. இங்கிருக்கும் உயரமான மலைக்குன்றில் புராதன சிவாலயம் அமைக்கப்பட்டிருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

**கந்தன் படையெடுப்பு காலம்**

இலங்கையின் பூர்வீக வரலாறு கந்தன் படையெடுப்பு காலத்தில் ஆரம்பமாகி இராமாயண காலத்துடன் தொடர்வதாக ஐதீகம். கந்தன் படையெடுப்புடன் இலங்கையின் பூர்வீக வரலாறு தொடர்பு கொண்டுள்ளபடியால் இலங்கையில் இடம்பெற்ற முக்கிய வரலாற்று நிகழ்வாக கந்தன் படையெடுப்பைக் கொள்ளலாம்.

கந்தன் படையெடுப்பின் போது சூரபத்மனை அழிக்க முருகப் பெருமான் விட்ட வேலானது சூரன் மலையை அழித்த பின் வாகூர மலையைப் பிளந்து கடலில் வீழ்ந்து மூன்று வேலுருக்கொண்ட கதிர்களை வீசியதாகவும் அவை மூன்றும் நாகர் முனை, மண்டூர், உகந்தை ஆகிய இடங்களில் வீழ்ந்ததாகவும் ஐதீகம். கி.மு. 5ம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட கந்தபுராணத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலச் சோழ அரசர்களில் ஒருவனான முசுகுந்தனை கந்தன் படையெடுப்புக் காலத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளது. இதன்படி வரலாற்றுக்கு முற்பட்ட சோழ மன்னனான முசுகுந்தன் காலத்திலேதான் கந்தன் படையெடுப்பு நிகழ்ந்தது எனக் கூறப்படுகிறது.

## முருக வழிபாட்டை பேணி வந்த குபேரன்

இதன் படி இலங்கையின் முதல் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புள்ள இடங்களில் ஒன்றாக உகந்தை விளங்குகிறது. இதன் பின் புண்ணிய பூமியாகக் கருதப்பட்ட உகந்தை மலையில் ஆதிநாகர் இன மக்களால் முருகன் ஆலயம் எழுப்பப்பட்டு வழிபடப்பட்டது. முருகப் பெருமான் கதிர்காமத்தில் குடிகொள்ளும் முன்பு உகந்தையில் உவந்து அமர்ந்ததாகக் கூறப்படுகிறது.



உகந்தை முருகன் கோயில் கருவறை கோபுரம்

இக்காலப்பகுதியில் இலங்கையை ஆண்ட குபேரன் இராவணனின் சகோதரனாவான். நாகர் குடிகளை தன்னாட்சியின் கீழ் வைத்திருந்த குபேரன் முருக வழிபாட்டை பேணிய காலத்தில் உகந்தை மேலும் சிறப்புடன் விளங்கியது எனலாம்.

இலங்கையில் நிகழ்ந்த முக்கிய வரலாற்று நிகழ்வான இராமாயணப் போர் கி.மு 5000 ஆண்டளவில் நிகழ்ந்தது எனக் கருதப்படுகிறது. இக்காலத்தில் குபேரனை ஆட்சியிலிருந்து நீக்கி இலங்காபுரியைத் தலை நகராகக் கொண்டு இலங்கையை இராவணன் ஆட்சி செய்தான் என வால்மீகி இராமாயணம்

கூறுகிறது. இலங்கையின் முதல் தலை நகரான இலங்காபுரி தென்கிழக்கிலங்கையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**வரலாற்றுக்கு முற்பட்ட இலங்கையின் இரண்டாவது தலைநகரம்**

இக்காலத்திலே தான் உகந்தைகிரியில் இராவணன் சிவாலயம் அமைத்து வழிபட்டான் என்பது ஐதீகம். கி.மு 5000ம் ஆண்டளவில் இச்சிவாலயம் அமைக்கப்பட்டது. இராவணனின் மகன் இந்திரஜித்தினால் இலங்கையெங்கும் 1008 சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும். இராவணன் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் கையோடு சிவலிங்கங்களைக் கொண்டு செல்வதாகவும் அறியப்படுகிறது.

இராவணன் இராமாயணப் போரில் உயிர் துறந்த பின் இலங்கையில் ஏற்பட்ட கடற்கோளினால் இலங்காபுரி நகரம் அழிந்து போயுள்ளது. உகந்தையின் தெற்குக் கடற்பரப்பில் இன்றும் காணப்படும் மலைக்குன்றுகள் இராவணன் கோட்டை என அழைக்கப்படுகின்றன.

கடற்கோளின் அழிவினால் பல நூற்றாண்டுகளாக இலங்கை செழிப்பிழந்து காணப்பட்டது. இச்சமயத்தில் தான் வட இந்தியாவின் அஸ்தினா புரத்திலிருந்து குருகுல நாகர் எனும் வம்சத்தினர் இங்கு வந்தனர். இவர்கள் இலங்கையிலிருந்த இயக்கர்களோடு இணைந்து உகந்தையைத் தலைநகராக்கி ஆட்சி புரிந்தனர். இதன்படி இலங்கையின் இரண்டாவது தலைநகராக விளங்கியது உகந்தையாகும். இது நிகழ்ந்தது மகாபாரதப் போருக்கு பிற்பட்ட காலத்திலாகும். ஆய்வாளர்களின் கருத்துப்படி மகாபாரதப் போர் கி.மு. 900ம் ஆண்டளவில் நிகழ்ந்ததாகக் கருதப்படுகிறது. ஆகவே இலங்கையின் தலைநகராக கி.மு 900 - 800 ஆண்டளவில் உகந்தை விளங்கியுள்ளது. இக்காலப்பகுதி முதல் கி.மு 500ம் ஆண்டு வரை முற்கால நாகர், இயக்கர் ஆகியோர் உகந்தையைத் தலை நகராகக் கொண்டு இலங்கையை ஆண்டு வந்தனர்.

**இலங்கையின் பெருங்கற்கால மையங்களில் ஒன்று**

உகந்தையில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் இடுகாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் இருதலை, முத்தலைச் சூலங்கள் மற்றும் வேல் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

இவை இங்கிருந்த சிவ, முருக வழிபாட்டின் எச்சங்களாகும். இலங்கையில் பெருங்கற்கால பண்பாடு நிலவிய காலமானது கி.மு 1000 - 500 வரையான காலப்பகுதியாகும். உகந்தை தலைநகராக இருந்ததும் இதே காலப்பகுதியாகும். எனவே இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட தலைநகரமாக உகந்தை விளங்கியுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது.

**உன்னரசுகிரி மன்னனால் மீண்டும் அமைக்கப்பட்ட சிவாலயம்**

உகந்தையின் மேற்குப் பகுதியில் புராதன இராஜதானியான உன்னரசுகிரி அமைந்திருந்தது. இந்த உன்னரசுகிரியை ஆட்சி புரிந்த ஆடக சவுந்தரி எனும் இளவரசி மகாசேனன் எனும் மன்னனை மணந்து கொண்டாள் எனவும் இவர்களின் மகன் சிங்ககுமாரன் உன்னரசுகிரியின் மன்னனாக விளங்கிய காலத்தில் உகந்த கிரியில் மீண்டும் சிவாலயம் அமைக்க விரும்பி வட இந்தியாவிலிருந்து சிற்பிகளை வரவழைத்தான் எனவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

மேலும் மலையுச்சியில் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும், பிரம்மாவுக்கும் ஆலயங்கள் அமைத்ததோடு மலையடிவாரத்தில் எட்டுத் திசைகளிலும் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டு காவல் தெய்வங்களுக்கும் கோயில் அமைத்து செப்புக் கொடித் தம்பமும், மலையுச்சியில் தங்கத் கொடித் தம்பமும் நிறுவினான் எனவும் மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

இதன்படி உகந்த கிரியை ஆண்ட சிங்க குமாரன் ஆட்சிக்கு வந்தது கலி பிறந்து 3337 ஆகும். இக்காலம் கி.மு 268ல் என்பதாகும். ஆகவே சிங்ககுமாரனால் அமைக்கப்பட்ட சிவாலயம் சுமார் 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றைக் கொண்ட புராதன ஆலயமாகும். சிங்ககுமாரன் தான் கட்டிய இவ்வாலயங்களுக்கு பணி செய்யும் முக்மார்க 700 அவண நெல் விதைப்புத் தரையை திருத்தி அதில் வரும் வருவாயில் 500 அவண நெல்லை கோயில்களின் திருப்பணிக்காகவும், 200 அவண நெல்லை அந்தணர் முதலான ஊழியர்களுக்கு வழங்கவும் ஏற்பாடுகள் செய்தான்.

**இராவணனுக்கு தீபமேற்றி வழிபாடுகள் செய்யப்பட்ட ஆலயம்**

இராவணேஸ்வரன் சிவாலயம் அமைத்து வழிபட்ட தல-

மாகையால் இங்கு ஆடித் திங்களிலும், அமாவாசையிலும் இராவ-ணேசுவருக்கு தீபமேற்றி வழிபாடுகள் நடத்தப்பட்டன. இவ்வாறு காலத்தால் முற்பட்ட வைதீக சைவநெறி வழிபாடுகள் இங்கு பேணப்பட்டு வந்தன. சிங்ககுமாரன் காலத்தில் சீரோடும் சிறப்போடும் விளங்கிய இவ்வாலயம் பின்னர் இப்பகுதிக்கு வந்த சிங்கர் மரபு வழிவந்த தினசிங்கன் (கி.பி 1018) என்பவனால் அழிக்கப்பட்டு இதன் செல்வங்கள் சோழ நாட்டிற்கு அனுப்-பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அதன் பின் இம்மலையில் முருகனுக்கும் பிள்ளையாருக்கும் மீண்டும் ஆலயங்கள் அமைக்கப்பட்டு பூஜிக்கப்பட்டன.

### திறந்த வெளி மலைக்கோயில்

இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வழிபாடுகள் நிகழ்ந்த திறந்தவெளி மலைக் கோயில்களில் உகந்தைமலையும் ஒன்றாகும். இங்குள்ள மலைக்குன்றில் மித்திரன் வழிபாடு நிகழ்ந்ததாகத் தெரியவருகிறது. சூரியனின் உதய காலத் தோற்ற நிலைப்பாடுகளில் ஓர் நிலை மித்திரன் எனக் கருதப்ப-டுவதாக வரலாற்றாசிரியர் திருமதி. ஜி. தனபாக்கியம் குறிப்பிட்டு-ள்ளார். இதன்படி உகந்தை மலையில் சிவ வழிபாடு, வேல் வழிபாடு மட்டுல்லாது சூரிய வழிபாடும் பேணப்பட்டு வந்துள்ளமை தெரிய-வருகிறது. சிவன் குடிகொண்டிருந்த உகந்தகிரி மலையில் அவரின் புதல்வன் முருகனின் அருளாட்சி மேலோங்கிக் காணப்படுகிறது.

### உகந்த மலை முருகன் கோயில்

இலங்கையின் முதல் மன்னனான குபேரன் காலத்தில் ஆதி வேடர்களால் உகந்தை மலையில் வேல் ஸ்தாபிக்கப்பட்டு பூஜிக்கப்-பட்டதாகக் கூறப்படுகிறது. அதன் பின் இராவணன் ஆட்சிக் கால-த்தில் இங்கு சிவாலயம் அமைக்கப்பட்டதாகவும், பின்பு தினசிங்கன் என்பவனால் இச்சிவாலயம் அழிக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. அதன் பின்பு உகந்த மலையில் மீண்டும் முருக வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியது. கிழக்கிலங்கை-யில் உள்ள திருப்படைக் கோயில்களில் திருக்கோயிலுக்கு அடுத்த படியாக விளங்குவது உகந்தமலைக் கோயிலாகும். முருகப் பெரு-மானும், வீரபாகுத்தேவரும் சூரனை வதம் செய்வதற்காக தங்கத் தோனியில் வந்திறங்கிய இடமே உகந்தையாகும்.

பானமையிலிருந்து கூமுனைக்குச் செல்லும் வீதியிலிருந்து உகந்தை முருகன் கோயிலுக்குச் செல்லும் வழியில் ஓரிடத்தில் பாதையின் இரு மருங்கிலும் காணப்படும் உயரமான மலைப் பாறைகள் ஆலயத்திற்கு இயற்கையான வாயில்களாக அமைந்துள்ளன. இவ்வாயிலைக் கடந்து சென்று வலது பக்கத்தில் திரும்பி சிறிது தூரம் சென்றதும் மலையடிவாரத்தில் முருகனாலயம் காணப்படுகிறது.



உகந்தை மலை

ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இரு மலைக்குன்றுகள் அமைந்துள்ளன. இவற்றில் முதலாவது மலை வள்ளி மலை எனவும், அடுத்தது பிள்ளையார் மலை எனவும் அழைக்கப்படுகிறது. ஆலயத்திலிருந்து சிறிது தூரத்தில் கடற்கரைப் பக்கமாக மேலும் மூன்று மலைப் பாறைகள் அமைந்துள்ளன. அவை மஞ்சள்கிரி மலை, தோணி மலை, தோணி தட்டா மலை என அழைக்கப்படுகின்றன.

சூரசம்ஹாரத்தின் பின்பு முருகப் பெருமான் தனது படை வீடுகளில் ஒன்றாக உகந்த மலையைக் கொண்டு இங்கு வந்து களைப்பாறிச் சில காலம் தங்கி இருந்தாரென்றும் போருக்கு

முன்னரும் பின்னரும் முருகன் உவந்து வந்து இருந்தபடியால் உகந்தை மலை எனப் பெயர் பெற்றதென்பதும் ஐதீகம்.

இம்மலைக்குக் கிழக்கில் உகந்தைக் குடா அமைந்துள்ளது. இயற்கையாகவே அமைந்த ஓர் துறைமுகமாக இது காணப்படுகிறது. புராதன காலம் தொட்டு இத்துறைமுகம் தென்கிழக்கையாண்ட தமிழ் குறுநில மன்னர்களால் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதாகத் தெரிய வருகிறது. முருகப் பெருமான் தனது தங்கப் படகின் மூலம் இக்குடாவில் தரையிறங்கி வந்ததாகவும் இதனருகிலுள்ள மலைப்பாறை குன்று "தங்கத் தோணி மலை" என அழைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

உகந்தை மலைக் குன்றுகளில் முதலாவது மலையான வள்ளிமலையில் வள்ளியம்மன் கோயில் அமைந்துள்ளது. இம்மலைக்கு ஏறுவதற்கு மலையடிவாரத்திலிருந்து கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. மலை மீது ஏழு இயற்கை நீர்ச்சுனைகள் இருக்கின்றன. வள்ளி கோயிலின் முன்பாக இருப்பதே பெரிய நீர்ச்சுனையாகும். இதுவே இங்கு பக்தர்கள் நீராடும் தீர்த்தச்சுனையாக உள்ளது. இதை "சரவணப் பொய்கை" என அழைக்கிறார்கள். கடலில் நீராடி விட்டு வரும் அடியார்கள் இங்குள்ள சுனைகளிலெல்லாம் நீராடி இறுதியில் சரவணப் பொய்கையில் நீராடுவதை பெரிய புண்ணியமாகக் கருதுகிறார்கள். இதனருகிலுள்ள வள்ளியம்மன் ஆலயத்தில் வள்ளியம்மன் விக்கிரகமும், பிள்ளையார் விக்கிரகமும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளன. இம் மலை அடிவாரத்தில் கடற்கரைப்பக்கமாக ஒரு கோயிலும் கட்டப்பட்டுள்ளது. இது சன்னியாசிகள் மடாலயமாக உள்ளது.

இரண்டாவது மலையில் முருகன் ஆலயமும், மலையடிவாரத்தில் மலையுடன் இணைத்து பிள்ளையார் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக் கோயில் வாசலில் தான் இப்பழம் பதியின் தலவிருட்சமான வெள்ளை நாவல் விருட்சம் உயர்ந்து விரிந்து கம்பீரமாகக் காட்சி தருகிறது. முருகன் கோயிலுக்கு வட புறத்தில், பிள்ளையார் கோயிலுக்கு தென்புறத்தில், மிகப்பெரிய ஆலமரம் ஒன்றுள்ளது. இம்மரத்தின் கீழ் ஒரு வேலாயுதத்தை வைத்து அதற்கு மேடையமைத்து கட்டப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தான் ஆதிகாலத்தில் வேல் வைத்து பூஜிக்கப்பட்டது.

பிரதான வீதியிலுள்ள கோயில் சந்தியிலிருந்து கிழக்கு நோக்கி உகந்தை மலையடிவாரத்திற்குச் செல்லும் வீதியின் இரு மருங்கிலும் பெரிய ஆலமரங்களும், தேத்தா மரங்களும் அடர்ந்து பசுமையாகக் காட்சியளிப்பதோடு இப்பகுதியில் குளிர்ச்சியான நிழலையும் தருகின்றன. இவை இங்கு வரும் பக்தர்களுக்கு இயற்கை உறையுள்களாக அமைந்துள்ளன. கோயிலின் பின்புறமாக உள்ள பெரிய கேணியும் கோயிலுக்கும், பக்தர்களுக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இப்புராதன ஆலயத்திற்கு 100 ஏக்கர் நிலம் சொந்தமாக இருந்ததாகவும், இவற்றில் தற்போது 30 ஏக்கர் மட்டுமே எஞ்சி-யுள்ளதாகவும் தெரியவருகிறது. வடக்கே உகந்தை மலைக் காட்-டையும், கிழக்கே வங்கக் கடலையும் தெற்கே குமன சரணாலய வாயிலையும் மேற்கே பிரதான வீதியையும் எல்லைகளாகக் கொண்-டுள்ளதே இக்கோயிலுக்குரிய பூமியாகும்.

தற்போது இங்கிருக்கும் ஆலயங்கள் 1885ல் கட்டப்பட்ட-வையாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதல் போர்த்துக்கேயர் காலம் வரை இத்திருத்தலம் பல மன்னர்களால் பூஜிக்கப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முருகன் வள்ளி தெய்வானையுடன் விளையாடிய மஞ்சள் கிரிமலை

உகந்தை முருகனாலயத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் கடற்கரை அமைந்துள்ளது. இங்கிருந்து தெற்குப்பக்கத்-தில் சிறிது தூரத்தில் உகந்தைக் குளத்து நீர் கடலில் சங்கமமாகும் இடத்தின் அருகில் பெரிய இரு மலைப் பாறைகள் அடுத்தடுத்து காணப்படுகின்றன. இவற்றில் பெரிய மலைப்பாறை மஞ்சள் கிரி மலை என அழைக்கப்படுகிறது. இம்மலையில் முருகனும், வள்ளியும் மஞ்சள் பூசி விளையாடியதாகவும், இதன் காரணமாக இம் மலை மஞ்சள் கிரி என அழைக்கப்படுவதாகவும் ஐதீகம்.

இம் மலைப்பாறையின் உச்சியில் பித்தளை வேல் ஒன்று நாட்டப்பட்டு அதைச் சுற்றி 12 விளக்குகள் வைக்கப்பட்டுள்ளன. இவ்விளக்குகள் நேர்த்திக் கடனாக இங்கு வைக்கப்பட்டவை-யாகும். வேலைச் சுற்றி சின்னஞ்சிறிய கற்துண்டுகள் அடுக்கி வைக்-கப்பட்டுள்ளன. இவ்வேலை வணங்க வருபவர்கள் ஓர் கற்துண்டை

எடுத்து வேலின் அருகில் வைத்து வணங்கிச் செல்வதாகவும், இவ்வாறு வைக்கப்பட்ட கற்களே வேலைச் சுற்றி குவிந்து காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவ்வேல் உள்ள இடத்திலிருந்து சிறிது தூரத்தில் கறுப்பு நிறத்தில் இரண்டு அடையாளங்கள் தெரிகின்றன. இவை வள்ளியம்மனின் பாதச் சுவடுகள் எனக் கூறப்படுகின்றன. இங்கு வரும் பக்தர்கள் இப்பாதச் சுவட்டின் மீது கற்பூரம் கொழுத்தி வணங்கிச் செல்வதால் இவை கறுப்பு நிறத்தில் காணப்படுகின்றன.

மஞ்சள் கிரி மலையின் அடிவாரத்தில் மேற்குப் பக்கத்தில் உகந்தைக்குளம் அழகாகக் காட்சியளிக்கிறது. இவ்விடத்தில் ஓர் சிறிய மலைப்பாறைக் குகையும் காணப்படுகிறது. இங்கிருந்து கிழக்கு பக்கத்தில் குளத்தின் மேலதிக நீர் கடலில் கலக்கிறது.

**தோணி மலையும், தோணி தட்டா மலையும்**

உகந்தை குளத்து நீர் கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் தோணி மலையும், **(படம் 32)** தோணி தட்டா மலையும் காணப்படுகின்றன. சூரனை வதம் செய்ய வந்த முருகப் பெருமானும், வீரபாகுத்தேவரும், பரிவாரங்களுடன் வந்திறங்கிய இடமே இதுவெனவும் அவர்கள் வந்த தங்கத்தோணியே கல்லாக மாறி இவ்விடத்தில் காணப்படுவதாகவும் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.


இங்கு கடலோரத்தில் மூன்று நீளமான மலைப்பாறைகள் காணப்படுகின்றன. இரண்டு பாறைகள் சமாந்தரமாக கடற்கரையிலும், ஒருபாறை கடல் ஓரமாகவும் காணப்படுகின்றது. இப்பாறையே தங்கத்தோணி மலை என அழைக்கப்படுகிறது. சுமார் 80 அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட இப்பாறையின் நடுவில் நீள வாட்டில் பாறையை இரண்டாக வெட்டியது போல ஓர் பிளவு காணப்படுகிறது. அலை அடிக்கும் போது இப்பிளவின் ஊடாக நீர் ஓடி வருகிறது. பிளவில் மணலும் காணப்படுவதால் இது ஓர் வடிகான் போல நீர் வருவதும் போவதுமாக உள்ளது.

அடுத்ததாக உள்ள பாறைகள் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஒட்டியது போல் காணப்படுகின்றன. இதில் பெரிய பாறை "தோணி தட்டாமலை" என அழைக்கப்படுகிறது. இப்பாறை சுமார் 100 அடி

நீளமும் 30 அடி அகலமும் கொண்ட நீண்ட பாறையாகும். தோணி மலையின் தென்மேற்குப் பக்கத்தில் 50 அடி தூரத்தில் இம்மலை காணப்படுகிறது.



உகந்தை மலை வள்ளியம்மன் கோயில்



உகந்தை முருகன் மலையும் சுனையும்

# 9. உகந்தை முதல் வண்ணாத்தி ஓடை வரை

எமது பாதயாத்திரை உகந்தையிலிருந்தே ஆரம்பமானது. நானும் எனது தங்கையும் இப்பாத யாத்திரையில் கலந்து கொள்ளவுள்ளோம். மட்டக்களப்பு மாமங்கைப்பிள்ளையார் பாத யாத்திரை குழுவினருடனேயே நாம் இந்தப் புனித பாதயாத்திரையை மேற்கொள்கிறோம். மட்டக்களப்பைச் சேர்ந்த சகோதரி ராதா எமது பாத யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பாதயாத்திரையின் போது தேவைப்படும் பொருட்கள் பற்றியும் ஏனைய விபரங்களையும் அவர் ஏற்கனவே எமக்கு அறிவித்திருந்தார்.

இந்த யாத்திரைக் குழுவின் குரு சுவாமியான விஜயசிங்கம் அப்பா சுவாமியை தொலைபேசியூடாக ராதா அறிமுகம் செய்து வைத்தார். குருசுவாமியுடன் தொலைபேசியில் பேசி இப்புனித பாதயாத்திரை பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டோம். கடந்த 5 வருடங்களாக பாத யாத்திரை செல்ல வேண்டும் என முயற்சி செய்தும் முடியாமல் போய் விட்டது. இந்தத்தடவை அது கை கூடியுள்ளமையை நினைத்து பெருமிதம் கொண்டேன்.

பேருந்து மூலம் களுவாஞ்சிக்குடியிலிருந்து புறப்பட்டு பகல் 11.30 மணிக்கு உகந்தைக்கு வந்து சேர்ந்தோம். யாத்திரை செல்வதற்காக வந்திருந்த யாத்திரீகர்கள் பலர் உகந்தை முருகனாலய வளவில் இருந்த மண்டபத்திலும், மரங்களின் கீழும் அமர்ந்திருந்தனர். உகந்தை மலையடிவாரத்தில் இருந்த முருகன் கோயிலிலும், மலையிலும் யாத்திரீகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. எங்கு பார்த்தாலும் காவி மயம்.

மாமங்கப் பிள்ளையார் யாத்திரைக் குழுவினர் ஏற்கனவே உகந்தைக்கு வந்திருந்தனர். குருசுவாமியும், சகோதரி ராதாவும் தமது யாத்திரைக் குழுவில் புதிதாக இணையும் இரண்டு யாத்திரீகர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். உகந்தை யாத்திரீகர் மடத்தில் ராதாவை சந்தித்தோம். அவர் எம்மை குருசுவாமியிடம் கூட்டிக்கொண்டு சென்று நேரில் அறிமுகம் செய்து வைத்தார். குருசுவாமி கனிவாக எம்மை வரவேற்று ஆசீர்வதித்தார். அவரிடம் விடைபெற்று விட்டு யாத்திரை புறப்பட ஆயத்தமானோம். உகந்தை முருகனாலயத்திற்கு சென்று முருகப்பெருமானை வணங்கி, எமது பயணம் நல்லபடியாக பூர்த்தியடைய வேண்டிக்கொண்டோம்.

மதிய உணவு தயாராக இருந்தது. அதை அவசர அவசரமாக உண்டுவிட்டு உடைகளை மாற்றி விட்டு நாமும் பாத யாத்திரைக்கு ஆயத்தமானோம். மாமங்கப் பிள்ளையார் யாத்திரைக் குழுவில் பாத யாத்திரை செல்பவர்கள் காவி உடை அணிந்தே வரவேண்டும் என்பது கட்டாயம்.

அனைவரும் காவி உடையுடன் தமது பயணப் பொதிகளை எடுத்துக் கொண்டு ஆலயத்தின் பின்பக்கம் இருந்த வேப்பமரத்திற்கு வந்தனர். அங்குதான் எமது குருசுவாமியின் பாரம்பரிய முருகவேல் வைக்கப்பட்டிருந்தது. யாத்திரீகர்கள் பயபக்தியுடன் அவ்வேலைத் தொட்டு வணங்கி, குருசுவாமியின் பாதம் பணிந்து ஆசி பெற்று யாத்திரையை ஆரம்பித்தனர். நாமும் முருகவேலை தொட்டு வணங்கி குருசுவாமியின் ஆசியோடு எமது நடைப்பயணத்தை தொடங்கினோம். "அரோகரா" எனும் முருக கோஷம் வான்வரை ஒலித்துக் கொண்டே இருந்தது. பகல் 12.30 மணியளவில் எமது பாதயாத்திரை ஆரம்பமானது.

**கூமுனை பறவைகள் தேசிய பூங்காவின் நுழைவாயில்**



கூமுனை தேசிய பூங்கா நுழைவாயிலில் யாத்திரீகர்கள்

உகந்தை மலைக் கோயிலின் தென்பகுதியில் கூமுனைக்குச் செல்லும் காட்டுப்பாதையில் தேசிய பூங்காவின் வாயில் உள்ளது. கிழக்குக் கரையோர பாதை மூலம் பறவைகள் சரணாலயத்திற்குள் செல்வதற்கான ஒரே தரைவழிப்பாதையும் இதுவே. இங்கு வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கிளைக்காரியாலயம், நுழைவுச்சீட்டு வழங்கும் இடம், மற்றும் விருந்தினர் விடுதி, திணைக்கள அதிகாரிகள் தங்குமிடம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

பூங்காவைக் கண்டு களிக்க வரும் உல்லாசப்பயணிகள் தாம் வந்த வாகனங்களை இங்கே நிறுத்தி வைத்து விட்டு அனுமதிச் சீட்டைப் பெற்று தேசிய பூங்காவிற்குச் சொந்தமான பாதுகாப்பான ஜீப் வண்டிகளில் ஏறி பூங்காவைப் பார்வையிடச் செல்கின்றனர். இவர்களுக்கு வழிகாட்டியாக திணைக்கள அலுவலகர் ஒருவரும், சாரதியும் செல்கின்றனர்.

உகந்தை முருகன் கோயிலிலிருந்து பாதயாத்திரையை ஆரம்பிக்கும் பக்தர்கள் அடுத்த ஓரிரு நிமிடங்களில் பூங்கா வாயிலை அடைந்தவுடன் அவர்களை வரவேற்பது "குமன தேசிய பூங்கா" எனும் பெயர்ப்பலகையே. வாயிலினுள் நுழைந்ததும் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளும், காவல் படையினரும் பாதயாத்திரீகர்களின் மூட்டை முடிச்சுகளையும், பயணப்பைகளையும் தீவிரமாக சோதனையிட்டனர். வடக்கு கிழக்கில் யுத்தம் முடிவுற்று சில ஆண்டுகள் கடந்த நிலையில் ஏன் இந்த தீவிர சோதனை என ஒருகணம் எண்ணி முடிப்பதற்குள் அதன் காரணம் தெரிந்து விடுகிறது. வனவிலங்குகள் வாழும் இக்காட்டுக்கு உட்புகும் போது கொண்டு செல்லக்கூடாத சில பொருட்கள் உள்ளன. இவற்றில் கண்டிப்பாக தடைசெய்யப்பட்ட பொருள் பொலித்தீன் பைகளே. யாத்திரீகர்களின் பயணப்பொதிகளில் இவை இருக்கின்றனவா என்றே சோதனையிடப்படுகின்றது. அவை இருக்கும் பட்சத்தில் அகற்றப்பட்டு அதில் இருந்த பொருட்கள் ஓர் துணிப்பையில் போடப்பட்டு யாத்திரீகர்களிடம் கொடுக்கப்படுகிறது. கதிர்காம பாதயாத்திரீகர்களுக்காகவே விசேடமாக தயாரிக்கப்பட்ட இத்துணிப்பைகள் ஒன்றரை அடி அகலமும், இரண்டடி உயரமும் கொண்டவையாகும். நிறைய பொருட்களை கொள்ளக்-

கூடியதும், தோளில் தொங்கவிட்டுக் கொண்டு செல்லக் கூடியதுமாக இப்பை தயாரிக்கப்பட்டுள்ளது.

மேலும் சரணாலயத்திற்குள் செல்பவர்கள் தாம் கொண்டு செல்லும் உணவுப் பொருட்களை வனஜீவராசிகளுக்குக் கொடுக்க வேண்டாம் எனவும், தாம் கொண்டு செல்லும் பிஸ்கட் மற்றும் உணவுப் பொருட்களை பொதி செய்யப்பட்ட பொலிதீன் பைகள், கடதாசிப்பைகள், வெற்றுப் போத்தல்கள் போன்றவற்றை காட்டில் வீசியெறிய வேண்டாம் எனவும் வலியுறுத்தப்படுகிறது. பொலித்தீன் பைகள் போன்றவற்றை உண்ணும் மான்கள் போன்ற வனவிலங்குகள் பரிதாபமாக உயிரிழப்பதை தவிர்ப்பதற்காகவே பொலிதீன் பைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

**உகந்தைக் குளம்**


தேசிய பூங்கா நுழைவாயிலின் இடதுபக்கம் ஓர் அழகிய குளம் காணப்படுகிறது. இது உகந்தைக்குளம் என அழைக்கப்படுகிறது. மழைகாலங்களில் பாதையின் கிழக்குப்பக்கத்தில் சுமார் ஒன்றரை கி.மீ நீளத்திற்கு உகந்தைக் குளத்தில் நீர் நிரம்பிக் காணப்படும். ஏனைய காலங்களில் சொற்ப நீரைமட்டுமே குளத்தில் காணலாம். தேசிய பூங்காவின் நுழைவாயில் பகுதியிலிருந்து தெற்குப்பக்கமாக ஓர் ஆறு போன்று நீண்டு, பின் கிழக்குப் பக்கமாக உகந்தை கடற்கரை அருகில் உள்ள மஞ்சள்கிரி மலைப்பாறை அடிவாரம் வரை இக்குளம் அமைந்துள்ளது.

உகந்தை ஆற்றின் கிளை ஆறொன்றின் மூலமாகவும், மேற்குப் பகுதியிலிருந்து வரும் இன்னுமோர் ஓடை மூலமாகவும் உகந்தைக் குளத்திற்கு நீர் கிடைக்கப்பெறுகிறது. குளத்தின் மேற்குப் பக்கத்தில் சுமார் ஒன்றரை கி.மீ தொலைவில் ஓர் மலைப் பாறைத்தொகுதி காணப்படுகிறது. இது தோணி போன்ற அமைப்பில் காணப்படுவதால் தோணிப்பாறை என பெயர் பெற்றுள்ளது. இப்பறையில் ஓர் நீர்ச்சுனையும் அமைந்துள்ளது. இவ்விடத்தை சிங்கள மொழியில் "ஒரு கெம" என அழைக்கின்றனர். ஒரு கெம என்பது "தோணிச்சுனை" எனப் பொருள்படுகிறது.

**நாகபர்வத மலை (பம்பரகஸ்தலாவ) நாக கோயில்**

உகந்தை மலையின் மேற்கில் சுமார் 8 கி.மீ தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் நாகமலை காணப்படுகிறது. இது நாகபர்வத மலை எனவும் பெயர் பெற்று விளங்கியுள்ளது. யாள வனவிலங்கு சரணாலயத்திற்குற்பட்ட வட கிழக்கு பகுதியில் நாகபர்வத மலை அமைந்துள்ளது. தற்போது இம்மலை பம்பரகஸ்தலாவ என அழைக்கப்படுகிறது. இம்மலையில் தான் மிகப் பண்டைய காலத்தில் நாகவழிபாடு நிலவிய நாக கோயில் அமைந்திருந்தது. நாகமலையின் மேற்குப்பகுதி முன்பு விசித்திரம் நிறைந்த இடமாகக் காணப்பட்டுள்ளது.

**நாகத்தின் தலைபோன்ற அமைப்புடன் காணும் நாகமலை**



பம்பரகஸ்தலாவ நாகபர்வத மலை

நாககோயில் அமைந்திருந்த நாகபர்வதமலை மிகவும் வித்தி-யாசமான முறையில் காணப்படுகிறது. ஓர் இராட்சத நாகபாம்பு படமெடுத்த வண்ணம் இருப்பது போன்ற வடிவத்தில் இம்மலை அமைந்துள்ளது. இம்மலைப் பகுதிக்குச் செல்வதற்கு அடர்ந்த காட்டின் மத்தியில் உள்ள காட்டுப் பாதையைத் தவிர வேறு

சீரான வழிகள் எதுவும் கிடையாது. மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது கிழக்கில் உகந்தமலைக் கோயிலும், வடக்கில் குடும்பிமலையும் இவைகளுக்கு இடையில் சலவைக் களப்பும் அதை அடுத்து வங்கக் கடலும் அழகிய காட்சிகளாகத் தெரிகின்றன.

## பெருந்தொகையான தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள்

அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான பிராமிக் கல்வெட்டுக்களை உடைய இடம் ரஜகல எனும் இராசமலையாகும். இங்கு 48 கல்வெட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக அதிக பிராமிக்கல்வெட்டுக்களைக் கொண்ட இடமாக நாகமலை (பம்பரகஸ்தலாவ) காணப்படுகிறது. இங்கு மொத்தமாக 38 தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 21 கல்வெட்டுக்கள் ஆரம்பத்தில் கண்டறியப்பட்டு 1970ம் ஆண்டு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டன. ஏனைய 17 கல்வெட்டுக்கள் பிற்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டன.

இவற்றில் இந்து சமயம் சம்பந்தமான கல்வெட்டுக்கள் பல உள்ளன. நாகம் சம்பந்தமான 3 கல்வெட்டுக்களும், சிவன் சம்பந்தமான 3 கல்வெட்டுக்களும், "சுதர்சன" எனும் சொல்லுடன் 3 கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. சுதர்சன என்பது மகா விஷ்ணுவின் சக்கரமாகும். இலங்கையில் சுதர்சன சக்கரத்தை மூல மூர்த்தியாகக் கொண்ட இரு கோயில்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று யாழ் மாவட்டத்தில் உள்ள வல்லிபுரம் என்னுமிடத்தில் உள்ளது. இரண்டாவது ஆலயம் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணந்துறையில் அமைந்திருந்தது. இவை போன்ற சுதர்சன சக்கர வழிபாடு நாகமலையிலும் நிலவியிருக்க வேண்டும் என்பது இக்கல்வெட்டுக்கள் மூலம் உறுதியாகிறது.

## நாகமலையில் இராவணன் பற்றிய கல்வெட்டு

நாகபர்வத மலைப் பகுதி இராவணனின் இராஜதானி அமைந்திருந்த இடத்தின் அருகில் காணப்படுகிறது. இராவண இராஜதானியின் தலைநகராக உகந்தை, குடும்பி மலை ஆகிய இடங்கள் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. மட்டக்களப்பு மான்மியமும் இவ்விரு இடங்களுக்கும்

இராவணனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி விபரிக்கிறது. இதன்படி இவ்விரு இடங்களுக்கு மிகவும் அருகில் உள்ள நாகபர்வத மலையும் இராவணனுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. நாகமலைப் பகுதியில் காணப்படும் தமிழ் பிராமிக் கல்வெட்டொன்றில் இராவணன் சம்பந்தமான செய்தி பொறிக்கப்பட்டிருக்கிறது. "பெருமகன் இராவணனின் மகள் சொஹிலி யின் குகை" என்ற வாசகம் இங்கு காணப்படுகிறது. இக்கல்வெட்டு மூலம் இராவணன் நாகமலையுடன் தொடர்புபட்டிருந்தமை தெளிவாகத் தெரிகிறது.

**இராவணனின் மகள் வாழ்ந்த குகை**

இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் இராவணனின் மகள் "சொகிலி" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் இராவணனின் ஆட்சி நிலவியமையும், அவனது பரம்பரையினர் வாழ்ந்திருந்தமையும் உறுதியாகிறது. இராமாயணம் என்பது ஓர் காவியம் எனவும், கற்பனைக் கதை எனவும், இதற்கு சரித்திரப் பிண்ணனி கிடையாது எனவும், இதன் கதாபாத்திரங்கள் கவிஞர்களினால் படைக்கப்பட்டவை என்பதும் பலரின் கருத்தாக உள்ளது. ஆனால் இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரங்களில் ஒன்றான இராவணன், மேலும் சில கதாபாத்திரங்களான இந்திரஜித், விபீஷனன், கும்பகர்ணன் ஆகியோரின் பல கல்வெட்டுக்கள் இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இராவணன் இலங்கை வேந்தன் என்பதும், இராமாயணத்தின் கதாபாத்திரங்கள் உண்மையானவை என்பதும் உறுதியாகிறது.

இக்கல்வெட்டுக்களின் காலம் கி.மு 6000 - 8000 வரையானது என கலாநிதி ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார். எனினும் இக்காலக்கணிப்பை ஏற்றுக் கொள்வதற்கில்லை. இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களின் தொடக்க காலம் கி.மு 3ம் நூற்றாண்டு (கி.மு 201 -300) எனக் கண்டறியப்பட்டுள்ளது. பிராமிக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பல ஆய்வாளர்கள் இக்காலத்தையே கல்வெட்டுக்களின் தொடக்க காலம் எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே நாகமலைக் கல்வெட்டும் இதே காலப்பகுதியில் பொறிக்கபட்டதென்பதே சரியான கூற்றாகும்.

இராவணனின் காலத்தை பல ஆய்வாளர்கள் பல்வேறு விதமாகக் கணித்துள்ளனர். இவை கி.மு 900 முதல் கி.மு 5200 வரையாகும். பல அறிஞர்கள் இராவணன் காலத்தில் இலங்கையில் நிகழ்ந்த ஓர் கடற்கோளை மேற்கோள் காட்டி காலத்தைக் கணித்துள்ளனர். இதன்படி இராவணனின் ஆட்சி கி.மு 1800 முதல் 2400 வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் நிலவியது என்பதே பல அறிஞர்களின் முடிவாக உள்ளது.

எனவே பிராமிக் கல்வெட்டுக்களின் காலத்திற்கும் இராவணனின் காலத்திற்கும் குறைந்தபட்சம் 1500 ஆண்டுகால வேறுபாடு உள்ளது. இராவணன் இறந்த பின்பு அவனது பரம்பரையினர் அல்லது அரச பிரதானிகள், அல்லது விசுவாசிகள் பேணிப் பாதுகாத்து வந்த குகைகளாக இவை இருக்க வேண்டும். அல்லது இராவணனின் மற்றும் அவனது சகோதரர்கள், பிள்ளைகள் ஆகியோர் பயன்படுத்திய இக்குகைகளில் ஏனையோர் இவர்களை தெய்வங்களாக போற்றி பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்திருக்க வேண்டும். அல்லது இராவணன் மற்றும் அவனது குடும்பப் பெயர்களை அவனின் பரம்பரையினர், அரசப் பிரதானிகள் விசுவாசிகள் போன்றோர் தங்களுக்கு சூடிக்கொண்டிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஓர் குகைபற்றிய கல்வெட்டே நாகமலையில் காணப்படுகிறது.

**சிவன், நாகம் பற்றிய கல்டெட்டுக்கள்**

நாகமலையில் சிவன் பற்றிய மூன்று கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிவ, சிவாலய போன்ற பெயர்கள் காணப்படுகின்றன. இதன் மூலம் இங்கு சிவ வழிபாடு நிலவியுள்ளது எனக் கூறக் கூடியதாக உள்ளது. இராவணன் ஆட்சிக்காலத்தின் போது இலங்கையெங்கும் சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புக்கள் கூறுகின்றன. இராவணனின் ஆட்சிப்பகுதியின் முக்கிய இடமாக விளங்கிய நாகபர்வத மலையிலும் சிவலிங்கங்களில் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு நடைபெற்றிருக்க வேண்டும் என யூகிக்க கூடியதாக உள்ளது.

மேலும் இங்கு நாகம் சம்பந்தமான மூன்று கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றிலேதான் "நாகபர்வதம்" எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இதை தவிர தமிழ் பிரா-

மிக்கே உரிய "பருமகன்" எனும் சொல் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுக்கள் நாகமலையில் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மூலம் பம்பரகஸ்தலாவை மலைப்பகுதியில் நாகவழிபாடு, சிவவழிபாடு மற்றும் விஷ்ணுவின் சுதர்சன சக்கர வழிபாடு போன்றவை காணப்பட்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம். அத்துடன் இப்பகுதியில் ஆதிதிராவிடர்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதும் நிரூபனமாகிறது.

இக்கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இங்குள்ள 200 அடி நீளமான ஓர் மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில கி.பி 7ம் நூற்றாண்டுக்குரியவை எனக் கண்டறியப்பட்டுள்ளது. பெருமகன் எனும் பட்டத்தையுடைய நாகர் தலைவன் இங்குள்ள குகைகளுக்கு சொந்தக்காரனாக இருந்தமையும் கல்வெட்டுக்கள் மூலம் தெரியவருகிறது.

**பண்டைய நாகர் குடியிருப்பு**

நாகமலை பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காட்டின் நடுவில் புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. மலைமீதும், அடிவாரத்திலும், மலையைச் சுற்றிய பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. கற்றூண்களும், புராதன செங்கற்களும் ஆங்காங்கே தெரிகின்றன. மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்கு செல்வதற்கான கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை இடையிடையே மறைந்தும் உள்ளன. மலையடிவாரத்தில் கற்தூண்களை மட்டும் கொண்ட கட்டிட அத்திவாரங்கள் சிலவும் காணப்படுகின்றன. இப்பகுதியில் மலையாறு எனும் சிற்றாறு ஒன்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட புராதன அணைக்கட்டின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவையாவும் பண்டைய காலத்தில் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்த நாகர் குடியிருப்பின் அடையாளங்களாகும்.

**நாகமலையின் குகைகளும் இடிபாடுகளும்**

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியில் வாழ்ந்த திராவிட ஆதிக்குடிகளான நாகர்களால் இங்கு அமைக்கப்பட்டிருந்த நாகவழிபாட்டுத் தலம் பற்றிய கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. நாகமலையிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் அமைந்துள்ள சிறிய பாறைத் தொடரின் மத்தியில் வடக்கு தெற்காக

ஒரு குகை அமைந்துள்ளது. சுமார் 225 அடி சுற்றளவைக் கொண்ட இக்குகையில் ஆதி திராவிட மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன.

இவர்கள் வரைந்த ஓவியங்கள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. குகையின் மூன்று பக்கங்களிலும் சுவர்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. செங்கட்டிகளைக் கொண்டு இச்சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுவர்களின் பின்னால் செதுக்கப்பட்ட செங்கற்களைக் கொண்டு அன்னப்பறவை சிற்பங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. குகையின் முன்பக்கம் சுமார் 15 அடி அகலமும், 50 அடி நீளமும் கொண்ட மண்டபம் ஒன்றிருந்ததற்கான அடித்தளமும் காணப்படுகின்றது. கற்தூண்கள் சிலவும், வாசல் படிக்கல்லும் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் புறத்தில் தாழ்வாரம் இருந்ததற்கான அடையாளமும் உள்ளது. கிழக்கு நோக்கிய வாசலையுடைய இக்குகை மண்டபமே புராதன நாக வழிபாட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. கிழக்கு நோக்கிய பிரதான வாசலும், மண்டபத்தின் வடக்கில் தாழ்வாரத்தின் பக்கம் இன்னுமொரு வாசலும் அமைக்கப்பட்டுள்ளது.

### கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சி நிலவிய இடம்

கி.மு 3ம், 4ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கதிர்காம பாண்டிய சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகா நாகனின் ஆட்சி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரந்திருந்தது எனலாம். பௌத்த மதம் இங்கு அறிமுகமாகியிருந்த போதும் கதிர்காமத்தை ஆட்சி செய்த இந்துக்களாகிய கதிர்காம சத்திரியர்களின் பரம்பரையில் சிலர் நாகவழிபாட்டைப் பேணி வந்துள்ளனர். கதிர்காமம், திஸ்ஸமகராமை ஆகிய பகுதிகளில் நாகவழிபாடு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தமை பற்றி தொலமியின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்தோடு கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும் இதை உறுதிப்படுத்துகின்றன. எனவே இக்காலப் பகுதியில் நாக வணக்கத்தைப் பேணி வந்த கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களால் நாகமலை பகுதியிலும் நாகவழிபாடு பேணப்பட்டிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.

## உன்னரசுகிரி இராஜதானியின் முக்கிய பகுதி

அம்பாறை மாவட்டத்தில் புராதன காலத்தில் அமைந்திருந்த உன்னரசுகிரி இராஜதானி பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தலைநகரம் சன்னாசி மலையே என வி.சி. கந்தையாவும், குடும்பிமலையே என சி. கணபதிப்பிள்ளையும் குறிப்பிட்டுள்ளனர். ஆய்வாளர்களின் குறிப்புக்களின் படி பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையிலுள்ள ஓர் மலையே உன்னரசு கிரி இராஜதானி எனத் தெரியவருகிறது கி.பி 1ம் நூற்றாண்டு முதல் கி.பி 3ம் நூற்றாண்டு வரை இவ்வாட்சிப் பிரிவு இருந்துள்ளது.

பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையில் மொத்தமாக 18 மலைகள் புராதன வரலாற்றுடன் தொடர்பு பட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் ஓர் இராஜதானிக்குரிய புராதன இடிபாடுகளையும், அதிகமான கல்வெட்டாதாரங்களையும் கொண்ட மூன்று மலைகள் உள்ளன. ஒன்று குடும்பிமலை ஏனையவை நாகபர்வதமலை, சிதுல்பவ்வ மலை ஆகியனவாகும். இவற்றில் குடும்பி மலை பற்றி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அதே வேளை நாகபர்வத மலை, சிதுல்பவ்வ மலை போன்றவற்றுடன் உன்னரசுகிரி இராஜதானிக்குரிய தொடர்பை யாரும் குறிப்பிடவில்லை. ஓர் இராஜதானிக்குரிய அமைப்புடன் காணப்படும் நாகமலை, உன்னரசுகிரி ஆட்சிப் பிரிவின் ஓர் முக்கிய பகுதியாக விளங்கியிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

## குள்ள மனிதர்கள்

நாகபர்வத மலையின் மேற்குப்பகுதியில் விசித்திரமான குள்ள மனிதர்கள் உலவியதாகத் தெரிய வருகிறது. கந்தக்கடவுளின் புனித பூமியில் பண்டைய காலத்தில் இக்குள்ள மனிதர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்கள் பற்றிய பல தகவல்களை பானமை பகுதியிலுள்ள மக்கள் கூறுகின்றனர். சுமார் 3 அடி உயரமும் நீண்ட மூக்கும் கொண்ட இக்குள்ள மனிதர்கள் குடும்பிகல, லேனம, பம்பரகஸ்தலாவை, வெஹெரகல, கபிலத்தை போன்ற பகுதியில் முன்பு உலவியதாகக் கூறப்படுகிறது. தென் கிழக்கு மலைப் பகுதிகளில் அபூர்வமாக வாழ்ந்து வந்த இக்குள்ள மனிதர்கள் குடும்பிகல பகுதியின் வடக்கு, மேற்கு பகுதிகளில் வாழ்ந்த வேடர்களுடன் பல வகையிலும் தொடர்பு கொண்டிருந்ததாகவும்,

இறுதியில் வேடர்களுக்கும் குள்ள மனிதர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சண்டையின் போது இவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இக்குள்ள மனிதர்கள் 200 வருடங்களுக்கு முன்பு பதுளை மலைப் பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களை "நிட்டேவோ" என அழைக்கின்றனர். நிட்டேஹெல, நிட்டேகந்த, மெட்டிகஹதென்ன போன்ற இடங்களில் இவர்கள் வாழ்ந்ததாகத் தெரிய வருகிறது. "நிட்டேவோ" குள்ள மனிதர்களை விடக் குள்ள-மான மனித இனமும் இப்பகுதியில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இவர்களின் காதுகள் இரண்டும் நீளமானவை எனவும் கூறப்படுகி-றது. இவர்கள் "கம்பொத்தோ" என அழைக்கப்படுகின்றனர்.

**விஹாரேகல**

உகந்தை மலையின் மேற்குப் பக்கத்தில் 12 கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் விஹாரேகல மலை அமைந்துள்ளது. இம்மலையில் உள்ள கற்குகைகளில் மொத்தமாக 7 பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 4 கல்-வெட்டுக்கள் இந்து சமயம் தொடர்பானவையாகும்.

முதலாவது கல்வெட்டில் "அச சிரிகுதஹ பருமக சுமக வேலுஹ திசஹ லேன" எனப் பொறிக்கபட்டுள்ளது. இதில் பருமக எனும் தமிழ்ச் சொல்லும் வேலு என முருகனைக் குறிக்கும் சொல்லும் காணப்படுகிறது. இதன் மூலம் இங்கு முருக வழிபாடு நிலவியமை புலனாகிறது. அடுத்த கல்வெட்டில் "மகா சுதர்சன" குகை எனப் பொறிக்கப்பட்டுள்ளது. சுதர்சன என்பது மஹாவிஷ்ணுவின் சக்கரத்தைக் குறிப்பதாகும். எனவே இங்கு விஷ்ணு சக்கர வழிபாடும் நிலவியுள்ளது.

அடுத்த இரண்டு கல்வெட்டுக்களிலும் "பருமக கணதத்த ஜகய உபசிகய லேன" எனவும் அடுத்ததில் "பருமக கணதத்த புதன லேன" எனவும் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்விரு கல்வெட்டுக்களி-லும் "பருமக" எனும் தமிழ்ச் சொல்லும் "கணதத்த" எனும் சொல்லும் காணப்படுகிறது. "கண" என்னும் பதம் மாயோனின் அம்சமாகிய, பழந்தமிழரின் கடவுளான கண்ணனையே குறிப்பதாகும் என பேராசிரியர் சி. க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். இது வட

மொழிக் கிருஸ்ணன் என்பதன் திரிபே என பேராசிரியர் பரணவித்தாரண கூறியுள்ளார். கணதத்த என்பது கண்ணனால் அளிக்கப்பட்டவன் எனப் பொருள் படுகிறது. எனவே விஹாரேகல மலைக் குகைகளில் கண்ணன் எனப்படும் கிருஸ்ணர் வழிபாடும், முருக வழிபாடும் விஷ்ணு சக்கர வழிபாடும் நிலவியுள்ளமை உறுதியாகிறது.

## வெஹெர கல்கந்த

உகந்தையின் மேற்குப் பக்கமாக சுமார் 16 கி.மீ தொலைவில் அடர்ந்த காட்டின் மத்தியில் வெஹெரகல்கந்த அமைந்துள்ளது. விஹாரரே கல மலையிலிருந்து 4 கி.மீ தூரத்தில் இவ்விடம் உள்ளது.

இம்மலையிலுள்ள இரு கற்குகைளில் இரண்டு தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கி.மு 1ம் நூற்றாண்டுக்கும், கி.பி 2ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டுக்களில் ஒன்று "சிவனின் பாதுகாவலனின் குகை" எனும் பொருளில் சிவ ரக்தித்த-னின் குகை என பொறிக்கப்பட்டுள்ளது. இக்குகையின் அருகில் சிவ வழிபாடு நிலவிய குகை அல்லது கோயில் அமைந்திருக்கலாம் எனவும், இதைப் பாதுகாத்தவனின் குகையிலேயே கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளமையும் உறுதியாகத் தெரிகிறது.

இம்மலையிலுள்ள இரண்டாவது கல்வெட்டு குடும்பத் தலைவனான சூளவின் குகை எனும் பொருளில் "கஹபதி சூளவின் குகை" எனக் கூறுகிறது. கிருஹபதி எனும் சமஸ்கிருத சொல்லின் பிராகிருத வடிவமே கஹபதி என்பதாகும்.

எனவே வெஹெரகல்கந்த மலைப் பகுதியில் சிவ வழிபாடு நிலவியதோடு தமிழ் குடும்பத் தலைவன் வாழ்ந்திருந்தமையும் இக்கல்வெட்டுக்கள் மூலம் நிரூபனமாகிறது. பேராசிரியர் பரண-வித்தான இக்கல்வெட்டுக்களை பதிவு செய்துள்ளார். இவை இலங்கை தொல்பொருட் திணைக்கள நூலில் 536, 537 ஆகிய இலக்க கல்வெட்டுக்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## முனிவர்கள் தங்கியிருந்த மலையாறு கற்குகைகள்

நாகபர்வத மலையின் வடக்கில் மலையாறு எனும் இடம் அமைந்துள்ளது. இங்கு மலையாறு எனும் சிற்றாறு ஓடுகிறது. இதன்

குறுக்கே பண்டைய காலத்தில் ஓர் கல்லணை கட்டப்பட்டுள்ளது. சுமார் 100 அடி நீளத்தில் கட்டப்பட்டுள்ள இவ்வணை பழுதடைந்து ஆங்காங்கே உடைந்து காணப்படுகிறது. இவ்வணையின் வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும் புராதன கட்டிட இடிபாடுகளும், மலைப் பாறைகளும் பரவிக் காணப்படுகின்றன.

மலையாற்றில் மழைக் காலங்களில் நீர் பெருகி ஓடுவதும், கோடை காலங்களில் ஒரு சொட்டு நீர் கூட இல்லாமல் ஆறு வெறும் மணல் தரையாகத் தோற்றமளிப்பதும் அடிக்கடி காணக்கூடிய காட்சியாகும். மலையாற்றிலிருந்து சற்று தூரத்தில் பண்டைய வழிபாட்டிடம் ஒன்று அமைந்திருந்தமைக்கான ஆதாரங்களாக சில கருங்கற் தூண்கள் காணப்படுகின்றன. இவற்றிடையே 15 அடி நீளமும் 6 அடி அகலமும் கொண்ட ஓர் கருங்கற் பீடமும் காணப்படுகிறது.

இங்கு 4 அடி உயரமான லிங்கக்கல் ஒன்றும் காணப்படுகிறது. மேலும் இரு காவற்கற்களும், சுமார் 6 அடி நீளத்தில் சில கற்படிகளும் இவ்விடத்தில் உள்ளன. மலையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கல் அணையின் அருகில் இன்னுமோர் கட்டிடம் இருந்தமைக்கான இடிபாடுகள் காணப்படுகின்றன.

மலையாற்றிலிருந்து சற்று தூரத்தில் வடமேல் பக்கமாக சுமார் 50 அடி உயரமான ஓர் கற்பாறை அமைந்துள்ளது. இம்மலைப் பாறையில் ஏறுவதற்கு இரண்டு பக்கங்களில் கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. பாறையின் உச்சியில் இரண்டு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அருகில் ஓர் கட்டிடம் இருந்தமைக்கான இடிபாடுகள் காணப்படுகின்றன.

இம்மலைப் பாறையின் அருகில் இன்னுமோர் பாறை அமைந்துள்ளது. இதில் இரண்டு கற்குகைகள் உள்ளன. இக்குகைகளின் மேல் பகுதியில் கற்புருவங்கள் செதுக்கப்பட்டு, பிராமிக் கல்வெட்டுக்கள் இரண்டு பொறிக்கப்பட்டுள்ளன. இக்குகைகளில் முனிவர்கள் தங்கியிருந்தமை பற்றி கல்வெட்டுகளில் எழுதப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் "பத்த தினக லேன சகச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது "சுவாமி தினகரின் குகை" எனப் பொருள்படுகிறது.

அடுத்த கல்வெட்டில் "சகரகித்தஹ லேன சுதசனே" எனப்

பொறிக்கப்பட்டுள்ளது. இது "சங்க ரக்ஹித்தனின் சுதர்சன குகை" எனப் பொருள் படுகிறது. இக்கல்வெட்டுக்களின் படி இங்கு தினகர் எனும் ஓர் முனிவர் இங்கிருந்த குகையொன்றில் இருந்தமையும், விஷ்ணுவின் சுதர்சன சக்கர வழிபாடு நிலவிய ஓர் குகையொன்று இருந்தமையும் தெரிய வருகிறது.

இக்கற்பாறைக்கு சுமார் 50 மீற்றர் தூரத்தில் மேலும் மூன்று கற்பாறைகள் கற்குகைகளுடன் காணப்படுகின்றன. இவற்றிலும் ஒவ்வொன்றாக மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று குகைகளும் மூன்று முனிவர்களுக்கு சொந்தமாக இருந்தமை பற்றி கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன. முதலாவதில் "பத்த சோமகுத்தச லேன" எனவும், இரண்டாவதில் "பத்த திசகுத்தஹ லேன" எனவும், மூன்றாவதில் "பத்த மேருதத்தச லேன" எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இது முறையே சுவாமி சோமகுத்தரின் குகை, சுவாமி திசகுத்தரின் குகை, சுவாமி மேருதத்தரின் குகை எனப் பொருள்படுகின்றது.

மலையாற்றின் வடமேற்கு பக்கத்தில் சிறிது தூரத்தில் மேலும் பல கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் சில குகைகளில் மட்டுமே பிராமி கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கு காணப்படும் மேலும் இரு கல்வெட்டுக்களில் தேரர்கள் இருந்தமை பற்றி கூறப்பட்டுள்ளது. ஒன்றில் "உத்திதேரஹ பத்திக திசதேரஹ லேன" எனவும் அடுத்ததில் "வினயதர புசதேரஹ மதய உபசிக்க சிவலய லேன சகஸ நியத்தே தேவரமனே லேன" என பொறிக்கப்பட்டுள்ளது.

### கிரிகல களப்பும், வெளியும்

தேசிய பூங்கா நுழைவாயிலிலிருந்து புறப்பட்டு 35 நிமிடத்தின் பின்னர் பாதயாத்திரீகர்கள் ஒரு சமதரையினை அடைகின்றனர். உகந்தை குளத்திலிருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் பாதையின் கிழக்குப் பக்கத்தில் இச்சமதரைப் புல்வெளியும், களப்பும் காணப்படுகின்றன. இக்களப்பின் வடக்குப்பக்கத்தில் இருந்தும், மேற்குப்பக்கத்திலிருந்தும் ஓடிவரும் இரு சிற்றோடைகள் கலக்கின்றன. இக்களப்பு கிரிகல களப்பு எனவும், புல்வெளி கிரிகல வெளி எனவும் அழைக்கப்படுகிறது. களப்பு நீரில் கலக்கும் சிற்றாறுகள் இரண்டும் கிழக்குப்பகுதியிலுள்ள

கடலில் கலக்கின்றன. வடக்கு பக்கத்தில் இருந்து வரும் சிற்றாறு உகந்தைக் குளத்தில் இருந்து நீரைக்கொண்டு வருகிறது. களப்பு நீர் கடலில் கலக்கும் சங்கமத்தின் தெற்குப்பகுதியில் கடல்மணல் சுமார் 800 மீற்றர் அகலத்திலும், சுமார் 4 கிலோமீற்றர் தெற்கு நோக்கியும் பரந்து காணப்படுகிறது. இம்மணல் வெளியினை ஒட்டி அமைந்திருக்கும் குடா "கிரிகல குடா" என்று அழைக்கப்படுகிறது. கிரிகல களப்பின் மேற்கிலிருந்து சங்கமமாகும் ஆறு கிரிகல ஆறு என அழைக்கப்படுகிறது. கிரிகல களப்பின் மேற்கில் சுமார் இரண்டரை கிலோமீற்றர் தொலைவில் ஆற்றின் வட கரையில் ஒரு புல்வெளி காணப்படுகின்றது. இது "தித்திமாவ சமவெளி" என அழைக்கப்படுகிறது.

கிரிகலவெளியில் யாத்திரீகர்கள் பலர் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தனர். இவ்விடத்தில் நாமும் அமர்ந்து சிறிது ஓய்வெடுத்தோம். வெளியிலிருந்து வந்த காற்று நடந்து வந்த களைப்பை சற்று தீர்த்து வைத்தது. உடலுக்கு குளிர்ச்சியைத் தந்தது. சில நிமிட ஓய்வுக்குப் பின் மீண்டும் நடக்க ஆரம்பித்தோம். சற்று தூரத்தில் பாதையின் இடதுபக்கம் ஓர் நீண்ட மலைப்பாறை காணப்பட்டது. மலைப்பாறையைக் கடந்ததும் ஒரு சிறிய பொட்டல் வெளியைக் கண்டோம். இங்கு சுமார் 20 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட ஓர் தொட்டி கட்டப்பட்டிருந்தது. தரைமட்டத்திலேயே அமைக்கப்பட்டிருந்த இத்தொட்டியில் நீர் நிரம்பிக் காணப்பட்டது. இது கோடைக் காலங்களில் நீர்நிலைகள் வற்றிப்போயிருக்கும் போது காட்டு விலங்குகள் நீர் குடிப்பதற்காக அமைக்கப்பட்ட நீர் தொட்டியாகும். மான்களும் காட்டெருமைகளும் அடிக்கடி இவ்விடத்தை தேடி வந்து நீர் பருகிச் செல்லுமாம். நாம் இவ்விடத்தை கடந்து செல்லும் போது இங்கு எந்த விலங்குகளையும் காணவில்லை.

### இராட்சத கல் அடுப்பு

கிரிகல களப்பைக் கடந்து 20 நிமிடங்களில் பாத யாத்திரீகர்கள் ஓர் முக்கிய இடத்தை வந்தடைகின்றனர். கதிர மலைப் பாத யாத்திரையில் உள்ள முக்கிய இடங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்விடம் இராட்சத கல் அடுப்பு எனவும் இராட்சத கல் எனவும் அழைக்கப்படுகிறது. இது கிரிகல களப்பிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.



இராட்சத கல் அடுப்பு

காட்டுப் பாதையில் உள்ள ஓர் வளைவில் இவ்விடம் காணப்படுகிறது. இங்கு ஒரே அளவிலான மூன்று வட்டக் கற்பாறைகள் காணப்படுகின்றன. சுமார் 10 அடி உயரமும் 10 அடி அகலமும் கொண்ட இப்பாறைகளின் நடுவில் பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாதையின் இடது பக்கம் ஒரு பாறையும், வலது பக்கம் இரண்டு பாறைகளும் இயற்கையாகவே அமைந்து ஓர் இராட்சத கல் அடுப்பை உருவாக்கியுள்ளன.

இவ்விடத்திற்கு தமிழில் இராட்சத அடுப்பு எனவும், சிங்கள மொழியில் "யோத லிப்ப" எனவும் பெயரிடப்பட்டுள்ளது. இவ்விடம் பற்றிய பல கதைகள் கூறப்படுகின்றன. முருகன் வள்ளியை மணம் முடித்த போது இப்பகுதியில் உள்ள தமது வேடர் குலத்தவர்களுக்கு இந்த இராட்சத அடுப்பிலே தான் கஞ்சி காய்ச்சி விருந்து கொடுத்ததாகவும், இவ்விடத்தில் வள்ளி தனது கையாலேயே தமது குலத்தவர்களுக்கு கஞ்சியை பரிமாறியதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக பாத யாத்திரை வருபவர்கள் இவ்விடத்தில் கஞ்சி காய்ச்சி முதலில் வள்ளி அம்மனுக்குப் படைத்து விட்டு, பின்பு அனைவருக்கும் கொடுத்து தாமும் கஞ்சி அருந்திச் செல்வதாகவும் முதியவர்கள் கூறுகின்றனர். இங்குள்ள மலைப் பாறையின் கீழ் வள்ளி அம்மனுக்கு ஓர் சிறிய கோயில்

இருந்ததாகவும், அங்கு கற்பூரம் கொழுத்தி, தீபம் காட்டி, சமைத்த கஞ்சியைப் படைத்து யாத்திரீகர்கள் வள்ளி அம்மனை வணங்கிச் செல்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்நடைமுறை பண்டைய காலம் முதல் இருந்து வந்ததாகவும் இன்று இது கைவிடப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. பாத யாத்திரை வரும் பெண் பக்தர்களே தங்கள் கையால் கஞ்சி சமைத்து வள்ளி அம்மனுக்குப் படைத்து பூஜை செய்து ஏனையவர்களுக்கும் வழங்குவதாகவும் தெரியவருகிறது.

இராட்சத அடுப்பு பற்றிய இன்னுமோர் ஐதீகமும் உள்ளது. இலங்கையின் தென் கிழக்குப் பகுதியை இராவணன் ஆட்சி செய்த காலகட்டத்தில் இராவணனின் அசுரப்படைகளுக்கு உணவு சமைத்துக்கொடுத்த இடமே இதுவெனவும் கூறப்படுகிறது. இராவணனின் நிகும்பலை யாகத்திலிருந்து வந்த பூதங்கள் குகைகளில் இருப்பதாக கேள்வியுற்ற ஆடகசவுந்தரி அப்பூதங்களிருந்த குகைகளுக்குச் சென்று பார்த்து ஆச்சரியப்பட்டு இவ்விடத்திற்கு "இராட்சதக்கல்" எனப் பெயரிட்டதுடன் பூதங்களுக்கு கஞ்சி காய்ச்சிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்து கொடுத்ததாகவும் மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் துட்டகாமினி மன்னன் அனுராதபுரத்திற்குப் படை எடுத்து வரும் போது அவனின் பத்து இராட்சத தளபதிகளும் படைகளுக்கு உணவு சமைத்துக் கொடுத்தது இவ்விடத்திலேயே எனவும் கூறப்படுகிறது.

**யானைக்குழி (அளியாவல)**

இராட்சத கல் அடுப்பிலிருந்து சுமார் ஒரு கி.மீ தூரத்தில் நாகபர்வத மலைக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை காணப்படுகிறது. இச்சந்தியின் மேற்குப் பக்கத்தில் சில மலைப் பாறைகள் காணப்படுகின்றன. இச்சந்தியில் இரண்டு ஒற்றையடிப் பாதைகள் பிரிந்து செல்கின்றன. வலது பக்கம் செல்லும் பாதை நாகபர்வத மலையையும், இடது பக்கம் செல்லும் பாதை சுமார் ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ள கடற்கரையையும் சென்றடைகிறது. நாக பர்வத மலைக்குச் செல்லும் பாதையில் சுமார் ஒன்றரை கி.மீ தூரம் சென்று தெற்குப் பக்கமாக செல்லும் ஒற்றையடிப் பாதையில் சென்றால் பால்ச்சுனை, யாழ்ச்சுனை ஆகிய இடங்களுக்குச் செல்லலாம். இப்பாதை சுமார் 12 கி.மீ மேற்குப் பக்கமாகச் சென்று நாகபர்வத மலையை அடைகிறது.

நாகபர்வத மலைக்குச் செல்லும் ஒற்றையடிப் பாதை சந்தியிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் பாதையின் இடது பக்கம் ஓர் நீர்க்குட்டை காணப்படுகிறது. மேற்குப் பக்கத்திலிருந்து வரும் ஓர் சிற்றோடை மூலம் இச் சிறிய குளத்திற்கு நீர் கிடைக்கிறது. கோடை காலங்களிலும் நீர் வற்றாமல் காணப்படும் இக்குட்டையை நோக்கி யானைகள் அடிக்கடி வந்து நீர் பருகிச் செல்கின்றன. இதன் காரணமாக இக்குளம் "யானைக்குழி" என அழைக்கப்படுகிறது.

சுமார் 4 கி.மீ சுற்றளவில் உள்ள பகுதியில் கோடை காலத்தில் நன்னீர் கிடைக்கும் ஒரே இடமாக இச்சிறிய குளம் விளங்குகிறது. சுமார் 150 மீற்றர் விட்டமுள்ள வட்டவடிவான இச்சிறிய குளம் காட்டு விலங்குகளுக்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். இது சிங்கள மொழியில் "அளியாவல" என அழைக்கப்படுகிறது.



யாத்திரீகர்கள் தேநீர் அருந்தும் காட்சி (அளியாவல)

இவ்விடத்தைக் கடந்து வரும்போது யாத்திரீகர்கள் சிலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. ஒரு அம்மையார் இவ்விடத்தில் கிடைத்த காய்ந்த சுள்ளிகளைப் பொறுக்கி மூன்று கற்களையும் தேடி ஓர் தற்காலிய அடுப்பைத் தயார் செய்து, தான் கொண்டு வந்திருந்த சிறிய அலுமினிய முட்டியில் நீரை ஊற்றி தேனீர் தயாரித்துக் கொண்டிருந்தார். இங்கிருந்த சில சிறுமிகள் அவருக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். மற்றும் சிலர் தாம் கொண்டு வந்திருந்த பிஸ்கட் பக்கெட்டுகளைப் பிரித்து

பகிர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அமர்ந்திருந்தவர்கள் எம்மையும் பிஸ்கட் சாப்பிட்டு தேனீர் அருந்திச் செல்லுமாறு அழைத்தனர். அவர்களின் அன்பு வேண்டுகோளை ஏற்று நாமும் அவ்விடத்தில் அமர்ந்தோம்.

அதுவரை நாம் கொண்டு வந்திருந்த நீரை மட்டுமே இடையிடையே தாகமும், களைப்பும் ஏற்படும் போது பருகி வந்தோம். இப்பொழுது சக யாத்திரீகர்கள் கொடுத்த பிஸ்கட்டும், தேனீரும் உடலுக்கு புத்துணர்ச்சியைத் தந்தது. அந்த நடுக்காட்டில் சக்கரைக் கட்டியைக் கடித்துக் கொண்டு பருகிய தேயிலைச் சாறு தேவாமிர்தம் போல் சுவையாக இருந்தது. எந்தப் பொருளும் இலகுவாகவும், அதிகமாகவும் கிடைக்கும் பொழுது அதன் அருமை எமக்குத் தெரிவதில்லை. அது இல்லாத இடத்திலே மிக அபூர்வமாகக் கிடைக்கும் பொழுது தான் அதன் அருமையும், பெறுமதியும் எமக்குத் தெரிகிறது.


### பலி இட்ட குழி (பலி போட்ட குழி, பலிஹ தமு வல)

யானைக்குழி குளத்திலிருந்து சுமார் இரண்டரை கி.மீ தூரத்தில் பாதையின் வலது பக்கத்தில் உள்ள ஓர் சிறிய குட்டை பலிஇட்ட குழி எனப் பெயர் பெற்றுள்ளது. உகந்தையிலிருந்து கதிர்காமத்திற்கு வீரபாகுத்தேவருடன் முருகன் சென்று கொண்டிருந்த போது எதிர்ப்பட்ட அசுரனை வீரபாகுத்தேவர் கொன்று பலியிட்ட இடமே இதுவென முதியவர்கள் கூறுகின்றனர். எனவே இது பலிபோட்ட குழி எனப் பெயர் பெற்றுள்ளது. சுமார் 100 அடி விட்டமுள்ள வட்டமான ஓர் சிறிய குளமாக இது காட்சியளிக்கிறது.

இவ்விடம் பற்றி இன்னுமோர் கதையும் கூறப்படுகிறது. துட்டகாமினி அனுராதபுரத்தை நோக்கி படை எடுத்து வரும் போது அவனின் இராட்சத படைத் தளபதிகளில் ஒருவனுக்கு மன்னனால் கொடுக்கப்பட்ட தங்கக் கேடயத்தை இக்குட்டையில் போட்டுச் சென்றதாகவும், அதனால் இது “பலிஹ தமு வள” என சிங்கள மொழியில் பெயரிடப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இத்தங்கக் கேடயம் இன்றும் இச்சிறிய குளத்தின் அடியில் புதைந்து கிடப்பதாகவும் கூறப்படுகிறது. சிங்கள மொழியில் பலிஹ என்பது கேடயம் எனப் பொருள்படுகிறது.

இங்கிருந்து சிறிது தூரம் சென்றபோது பாதையின் ஓரத்தில்

ஓர் அம்மையார் அமர்ந்து நீர் குடித்துக் கொண்டிருந்தார். அவரை அணுகிய போது தான் அவருக்கு சுமார் 80 வயதிருக்கும் எனத் தெரிந்தது. மெலிந்த உருவமுள்ள அந்த வயதான பாட்டியின் உடலில் தான் என்ன கம்பீரம். முருகப் பெருமான் மீது இருந்த அதீத பக்தியால் அந்தத் தள்ளாத வயதிலும் 90 கி.மீ தூரத்தை நடந்து கடக்க முடியும் எனும் அவரது மனதில் தான் எத்தனை வலிமை. இவ்வலிமை அவருக்கு எப்படி வந்தது? இதுதான் இப்புனித பூமியின் மகிமைகளில் ஒன்று என யூகித்துக் கொண்டேன்.



நீர் அருந்திக்கொண்டிருக்கும் வயதான பாட்டி (பலி இட்ட குழி)

**வாகூர வெட்டை**

பலிஇட்ட குழியிலிருந்து மேலும் ஒரு கி.மீ சென்றதும் மிகப்பெரிய வெட்டவெளி யாத்திரீகர்களை வரவேற்கிறது. அது வரை அடர்ந்த காட்டையும், பற்றைகள் நிறைந்த இடங்களையும் சுமார் இரண்டரை மணித்தியாலங்களாக கால் நடையாகக் கடந்து வந்த பாதயாத்திரீகர்களுக்கு இவ்வெட்டவெளி புத்துணர்ச்சியை கொடுத்தது. வெட்ட வெளியிலிருந்து வீசிய இதமான தென்றல் காற்று மனதுக்கு ஆறுதலைக் கொடுத்தது. எங்கோ அருகிலிருக்கும் நீர் நிலையை இக்காற்று தழுவி வருகிறது எனும் உணர்வை அதன் இலேசான குளிர்ச்சி எமக்கு உணர்த்தியது.




காய்ந்து வரண்டு காணப்பட்ட இவ்வெட்ட வெளியின் இடது பக்கம் ஓர் பெரிய விருட்சம் ஓங்கி வளர்ந்து காணப்படுகி-றது. சற்று முன்னதாக வந்திருந்த யாத்திரீகர்கள் இம் மரத்தின் கீழ் அமர்ந்திருந்தனர். இம்மரத்தில் ஓர் பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டிருந்தது. அதில் "பாகூர களப்பு" என சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளால் எழுதப்பட்டிருந்தது. ஆம் இதுதான் "வாகூர வெட்டை" என அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற இடமாகும். வாகூர வெட்டையும், அதனை அடுத்து வாகூர களப்பும் இங்குதான் அமைந்துள்ளது.

வாகூர களப்பினதும், வாகூர வெளியினதும் ரம்மியமான அழகைக் கண்டு ரசிக்க வேண்டுமானால் இலையுதிர் காலத்தில் இங்கு வரவேண்டும். ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்ய ஆரம்பிக்கும் காலத்தில், மழை பெய்த பின்பு வாகூர வெளியெங்கும் பச்சைப் பசேலென புதிய புற்கள் துளிர் விட்டு வரும். இக்காலத்தில் பச்சைப் பஞ்சு மெத்தை விரித்தாற் போல் புல்வெளி பரந்து விரிந்து இயற்கையழகை அள்ளி வீசிக் கொண்டிருக்கும்.

புதிதாகத் துளிர்ந்த இப்புற்களை உண்பதற்காக கூட்டம் கூட்டமாக புள்ளி மான்கள் வாகூர வெளிக்குப் படையெடுக்கும். ஒரே தடவையில் சுமார் 200 மான்கள் வரை புல் மேய்ந்து கொண்டிருக்கும் அழகிய காட்சியை இங்கு காணலாம். மான்கள்

மட்டுமல்லாது யானைகளும், காட்டெருமைகளும் கூட இப்புதிய பசும் புற்களை உண்பதற்காக வாகூர வெட்டைக்கு கூட்டம் கூட்டமாக வருகின்றன.

வாகூர வெளியில் காணப்படும் மரங்கள் பல நோய்களை தீர்க்கவல்ல மூலிகைகளாகும். வாகூர வெளியைச் சுற்றி விளா, ஆத்தி, உகாய் போன்ற மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. விளாம்பழம் இங்குள்ள மரங்களில் அதிகமாக காய்த்துக் குலுங்கும் காலங்களில் இவற்றை பறித்து உண்பதற்காக யானைகள் கூட்டங் கூட்டமாக வரும். யானைகளுக்கு பிடித்த உணவு விளாம்பழமாகும். விளாமரம் சிங்கள மொழியில் "திவுள்" என அழைக்கப்படுகிறது.

வாகூர வெளியில் அதிகளவில் காணப்படும் இன்னுமோர் மரம் ஆத்தி என்பதாகும். பண்டைய காலத்தில் ஆத்தி மரத்தை "ஆர்" எனக் குறிப்பிட்டனர். ஆத்தி மாலை அணிந்த சோழ மன்னனை ஆரங்கண்ணிச் சோழன் என சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. ஆத்தி மரங்கள் நிறைந்த காடு இருந்தமையால் தான் "ஆர்காடு" என ஓர் பிரதேசத்திற்கு பெயர் வந்தது. தமிழ் நாட்டில் வேலூருக்கு அருகில் ஆர்காடு அமைந்துள்ளது. ஆத்தி மரம் சூரிய வெப்பத்தை உறிஞ்சி குளிர்ச்சியாக மாற்றி காற்றில் கலக்க விடுகிறது. ஆத்தித் தண்டு ஆஸ்மா, அல்சர் ஆகிய நோய்களைக் குணப்படுத்த வல்லது. ஆத்தி மரத்தின் வேர் பாம்பின் விஷத்தை முறிக்க வல்லது. இதை சிங்கள மொழியில் "மயில" என அழைப்பார்கள்.

வாகூர வெளியில் அதிகளவில் வளர்ந்து காணப்படும் இன்னுமோர் மரம் "உகாய்" என்பதாகும். சிங்கள மொழியில் "மலித்தன்" என இம்மரத்தை அழைக்கின்றனர். மகாபாரதத்தில் பிலு என்ற பெயரில் இம்மரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்ககால நூல்களான நற்றினை, குறுந்தொகை ஆகியவற்றில் இம்மரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சங்ககால ஊர்களில் ஒன்று உகாய் குடி எனவும், இங்கு வாழ்ந்த புலவர் உகாய் குடி கிழார் எனவும் குறிப்புகள் கூறுகின்றன.

இன்று உகாய் மரத்தை "அம்மாம் பச்சரிச் செடி" என அழை-க்கின்றனர். இதன் குச்சி பண்டைய காலம் முதல் பற்தூரிகையாகப் பயன்படுத்தப்படுகிறது. உகாய் குச்சியில் பல் தேய்த்து வந்தால் பல் சம்பந்தமான எந்த நோயும் வராது எனக் கூறப்படுகிறது. இதன்

காரணமாக இது ஆங்கிலத்தில் "டூத் பிரஸ் ட்ரீ" என அழைக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் வாய்ச் சுகாதாரத்திற்கான சிறந்த மருந்து உகாய் மரம் எனக் கூறியுள்ளது. மேலும் சிறுநீரகத்தில் கல் ஏற்படா வண்ணம் தடுக்கும் மருந்து உகாய் மரத்தில் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். உகாய் காயிலுள்ள விதைகள் மிளகு போன்று காரம் மிக்கவை. இத்தனை மருத்துவ குணம் மிக்க முலிகை மரங்களை தன்னகத்தே கொண்டுள்ளது வாகூரவெட்டை.

**வாகூர மலைப் பாறைக் கோயில்**

வாகூர வெளிக்குள் நுழைந்தவுடன் ஒற்றையடிப் பாதையின் வலது பக்கம் சில கற்பாறைகள் காணப்படுகின்றன. இப்பாறைகளுக்கிடையில் சிறிய அளவிலான மரங்கள் வளர்ந்துள்ளன. பாறை மற்றும் மரங்களின் நிழலில் சிலர் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். இவ்விடத்தில் சுமார் **15** அடி உயரமானதும், **25** அடி நீளமானதும், தட்டையானதும், உருண்டையானதுமான சில பாறைகள் காணப்படுகின்றன. இவை வாகூர மலை இரண்டாகப் பிளந்து சிதறுண்ட போது விழுந்த சில பாகங்கள் என்று கூறப்படுகிறது.



வாகூர வெட்டை மலைப்பாறை கோயில்

முருகப் பெருமானின் வேல் பட்ட இம்மலைப் பாறை புனிதமானதெனக் கருதி பண்டைய காலம் முதல் பாதயாத்திரை செய்யும் பக்தர்கள் இம்மலைப் பாறையில் முருகனின் வேலைப்-பதித்து வணங்கி வந்ததாக முதிய யாத்திரீகர்கள் கூறுகின்றனர். வாகூர வெட்டையில் உள்ள ஓர் மரத்தின் கீழ் பண்டைய காலம் முதல் யாத்திரீகர்கள் விநாயகர் சிலையொன்றை வைத்து பூஜித்து வருவதாக குமன பற்றிய ஓர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



வாகூர வெட்டை விநாயகர் சிலை

வாகூர வெட்டையில் இருந்த மலைப்பாறையில் முருகனின் வேல் பதிக்கப்பட்ட தடயம் ஏதும் இருக்கிறதா எனத் தேடிப் பார்த்தோம். மலைப் பாறை மீது ஏறிப்பார்த்தோம். அப்போது தான் வாகூர வெட்டையின் பிரமாண்டத்தைப் பார்க்க முடிந்தது. தூரத்தில் ஓர் நீரோடை வளைந்து வளைந்து ஓடுவதையும் அவதா-னிக்கக் கூடியதாக இருந்தது. காவி உடை தரித்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக எமது யாத்திரைக் குழுவினர் வெட்டையில் நடந்து சென்று கொண்டிருந்தனர்.

நாம் ஏறிப்பார்த்த மலைப் பாறைகளில் வேல் பதித்த தடயமொன்று இருப்பதாகத் தெரிகிறது. பாறைகளுக்கு மத்தியில் கள்ளி மரம் ஒன்று உயரமாக வளர்ந்து காணப்பட்டது. பாறையின் உச்சிப் பகுதியின் ஒரு பக்கம் உடைக்கப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. உடைக்கப்பட்டிருந்த இடத்தில் ஏதோ ஒரு உலோகக் கம்பியொன்றை நாட்டி இருந்தமைக்கான அடையாளம் தெரிந்தது. இதுதான் வேல் நாட்டப்பட்டிருந்த இடமாக இருக்க வேண்டும். வாகூர வெட்டைக்கு வரும் பாதயாத்திரீகர்கள் இவ்வேலுக்கு கற்பூரம் கொழுத்தி வணங்கிச் சென்றுள்ளனர். போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் காலத்திலே சுமார் 200 வருடங்களாக இப் புனித பாதயாத்திரை தடைப்பட்டிருந்த காலத்தில் இவ்வழிபாட்டிடங்கள் யாவும் அழிந்து போயுள்ளன. இரு நூற்றாண்டுகளின் பின் மீண்டும் பாத யாத்திரை வந்த பக்தர்களுக்கு இவ்விடங்கள் எங்கிருந்தன என்பது தெரியாமல் போய்விட்டது.

**வாகூர களப்பு**

வாகூர வெட்டையின் அருகில் கிழக்குப் பக்கமாக வாகூர களப்பு அமைந்துள்ளது, கோடைகாலங்களில் இது வெட்டை வெளியாகக் காணப்படும். குமன பறவைகள் பூங்காவில் அமைந்துள்ள நான்கு களப்புகளில் வாகூர களப்பே அளவில் பெரியதாகும். சுமார் 700 மீற்றர் அகலமும் 800 மீற்றர் நீளமும் கொண்டது வாகூரக் களப்பு. மழை காலத்தில் ஓர் குளம் போல் நீர் நிறைந்து காணப்படும் வாகூரக் களப்பில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் வெட்டவெளியை மட்டுமே காணலாம். எனவே மழை காலத்தில் நீர் நிறைந்து வாகூர களப்பாகவும், கோடை காலத்தில் வரண்டு போய் வாகூர வெட்டையாகவும் இரண்டு முகங்களை காட்டிக் கொண்டிருக்கிறது இப்பிரதேசம்.

நாம் பாத யாத்திரை சென்ற ஜூன் மாதத்தில் இப்பிரதேசம் எமக்கு வெட்டையாகவே காட்சி தந்தது. வெட்டை வெளியின் கிழக்குப் பக்கம் மட்டுமே சிறிதளவு களப்பு நீரையும், அதைச் சுற்றி சிறிது பசுமையான புல்வெளியையும் காணக்கூடியதாக இருந்தது. வாகூர களப்பில் நீர் நிறைந்து காணப்படும் காலங்களில் ஏராளமான நீர்ப்பறவைகள் களப்பில் நிறைந்து காணப்படும். கருங்கழுத்துக் கொக்கு, கரண்டிவாயன், மேவா கொக்கு ஆகிய பறவைகளை

இங்கு எப்பொழுதும் காணலாம். உள்ளான், நீர் ஆந்தை, குருட்டுக் கொக்கு, வெண் கொக்கு, நீர்க்காகம், முக்குளிப்பான், உப்புக் கொத்தி, நீர்க் கோழி ஆகிய நீர்ப்பறவைகள் வாகூர களப்பிற்கு வந்து செல்லும் பறவைகளாகும்.

குளிர்காலம் முடிந்து இளவேனிற் காலம் தொடங்கும் போது வாகூர களப்பிலிருந்த நீர் வற்ற ஆரம்பிக்கும். கடல் நீரும், மழை நீரும், ஆற்று நீரும் சேர்ந்து பெருங்குளமாக காட்சியளித்த இப்பிரதேசத்தில் நீர் மட்டம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டு வரும். இறுதியில் களப்பின் இருந்த நீர் முழுவதும் வற்றிய நிலையில் மண் மீது உப்பு படிந்து காணப்படும். இவ்வுப்பை ருசித்து உண்பதற்காக யானைகள் வாகூரக் களப்பிற்கு படையெடுக்கும். இளவேனில் காலத்தில் வாகூரக் களப்பில் யானைகள் திரளாக நின்று தமது தும்பிக்கையால் நிலத்தில் உறைந்திருக்கும் உப்பை சுரண்டிச் சாப்பிடும் அழகு நிறைந்த காட்சியை இங்கு காணலாம்.

வாகூரக் களப்பின் நீர் கிழக்கு நோக்கி இரு பக்கங்களிலு முள்ள காடுகளை ஊடறுத்து ஓர் ஆறு போன்று ஒடுங்கிய வடிவில் ஓடி சுமார் 800 மீற்றர் தூரத்தில் உள்ள கடலில் கலக்கிறது.

### நெலும்பத் பொக்குண - (தாமரைச் சோற்றுச்சுனை)

வாகூர களப்பின் தெற்குப் பக்கமாக 5 கி.மீ தூரத்தில் நெலும்பத் பொக்குண அமைந்துள்ளது. அடர்ந்த காட்டின் நடுவில் இப்பகுதி உள்ளது. இங்கு சுமார் 280 அடி உயரமான மலை ஒன்று உள்ளது. இம் மலை மீதுள்ள குன்றில் இரு பெரிய நீர்ச் சுனைகள் காணப்படுகின்றன. இவற்றின் அருகில் ஓர் புராதன வழிபாட்டுக் குரிய கட்டிடங்கள் இருந்தமைக்கான சான்றுகளாக கற்றூண்களும், செங்கற்களும், கட்டிட இடிபாடுகளும் காணப்படுகின்றன. மலை மீது கல்வெட்டொன்றும் பொறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்-கது.

நெலும்பத் பொக்குன எனும் தாமரைச் சோற்றுச்சுனை (கற்சுனை) அமைந்துள்ள மலைப் பாறையில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டு இரண்டு வரிகளில் நீளமாகக் காணப்படுகிறது. இதில் "நாகமகாராஜனின் மகனான மளுதீச மகாராஜன் மகாநகரம்" எனும் இடத்தில் அறவிடப்பட்ட நீர்வரியை இங்கிருந்த கொசகல எனும் வழிபாட்டுத் தலத்தில் இடம் பெற்ற ஆரியவாச எனும்

திருவிழாவிற்காகக் கொடுத்தமை பற்றிய செய்தி கல்வெட்டாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் நாகமகாராஜா எனக் குறிப்பிட்டுள்ள மன்னன் கதிர்காம பாண்டிய வம்ச சத்ரிய மன்னர்கள் 10 பேரில் ஒருவனாவான். இவன் நாக வழிபாடு மேற்கொண்டவன் என்பதோடு முருக வழிபாட்டையும் இம்மன்னர்கள் பேணி வந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**கோணă கல்லு (கோன் கல)**

வாகூரக் களப்பிலிருந்து சிறிது தூரத்தில் உள்ள நெலும்பத் பொக்குன என்னுமிடத்திலிருந்து தெற்கு நோக்கி சுமார் 1 மைல் தொலைவில் கோண்கல் மலை அமைந்துள்ளது.

இங்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் சைவ ஆலயங்கள் இருந்ததற்கான இடிபாடுகள் காணப்படுகின்றன. சுமார் 275 அடி உயரமான மலை மீது புராதன ஆலயங்கள் இருந்தமைக்கான ஆதாரங்களாக தூண்களும், செங்கற்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன.

இங்கு சைவ ஆலயம் இருந்திருக்கலாம் எனக் கொள்வதற்கான முக்கிய ஆதாரமாக உள்ளது இங்குள்ள குகையில் காணப்படும் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் படி இங்குள்ள குகைகளில் இந்து தமிழ்ப் பிராமணர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்கள் பௌத்த சங்கத்திற்கு அளித்த குகைத் தானங்கள் பற்றி இச்சாசனம் குறிப்பிடுகிறது. இதில் "பமண அதிமதகஹ லேன" என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது. இது "பிராமணன் அதி மதகனின் குகை" எனப் பொருள்படுகிறது.

பிராமணர்கள் தாம் வாழ்ந்த இடங்களில் கோயில்கள் அழைத்து வழிபட்டார்கள் என்பது இங்கு குறிபபிடத்தக்கது. இலங்கைத் தொல்பொருட் திணைக்களத்தின் சாசனப்பதிவிலக்கம் 545ல் கோண்கல கல்வெட்டு பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராமணர்கள் இங்கிருந்த குகைகளில் வாழ்ந்திருந்த காலத்தில் அவர்களால் இம்மலை மீது சைவ ஆலயங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இக்குகைகள் பௌத்த சங்கத்திற்கு தானம் செய்யப்பட்டுள்ளன. அதன் பின் இங்கிருந்த பிராமணர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். இங்கிருந்த ஆலயங்களும் அழிக்கப்பட்டு பௌத்த

வணக்கஸ்தலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் நாட்டின் எல்லா பகுதிகளிலும் இந்து மத வழிபாடு பரவலாக காணப்பட்டுள்ளது. பிராமணர்கள் பரந்து வாழ்ந்துள்ளார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

கோன்கல மலையில் உள்ள குகைகளில் மொத்தமாக 11 கல்வெட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 5 கல்வெட்டுக்கள் தமிழ், இந்து சமயம் தொடர்பானவையாகும். இதில் தமிழ் பிராமிக்குரிய பருமக, கிருகபதி ஆகிய சொற்கள் காணப்படுகின்றன. இன்னுமோர் கல்வெட்டு "கபதி மணிகர திசஹ லேன சகச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது குடும்பஸ்தனான தீசன் எனும் மாணிக்கக் கல் வியாபாரியின் குகை எனப் பொருள்படுகிறது. தீசன் எனும் பெயரில் தமிழ் வணிகன் இருந்ததாக குடிவில் கல்வெட்டு கூறுகிறது. எனவே மாணிக்கக் கல் வியாபாரியான தீசன் என்பவனும் ஓர் தமிழ் வணிகனே என்பது உறுதியாகிறது. இக்கல்வெட்டு இலக்கம் 546ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலக்கம் 538ல் பதிவு செய்யப்பட்டுள்ள கல்வெட்டு மிக முக்கியமானதாகும். இதில் "உதி நகரியன அடகுலஹ லேன சகச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது "உதிநகர பிரஜையான சூளனின் அஸ்டகுலிக குகை" எனப் பொருள்படுகிறது.

இக்கல்வெட்டின் மூலம் கோன்கல பகுதி "உதிநகரம்" என்ற பெயரைப் பெற்றுள்ளது எனத் தெரிகிறது. அத்துடன் கதிர்காம பாண்டிய சத்திரிய வம்சத்தினரின் ஒருவனான உத்தியனின் ஆட்சியிலிருந்த ஓர் முக்கிய நகரமாக இது விளங்கியுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

**வாகூர மலை**

உகந்தையில் இருந்து வாகூர களப்பு வரை நாம் நடந்து வந்த பாதை கூமுனை வரை செல்லும் பிரதான கிரவல் மண் பாதையாகும். வாகூர வெட்டை தொடங்கும் இடத்தில் கிரவள் பாதையிலிருந்து விலகி யாத்திரீகர்கள் இடது பக்கமாக வாகூர வெட்டை வழியாகக் காணப்படும் ஒற்றையடிப் பாதைவழியே செல்கின்றனர்.


வாகூர மலை

வாகூர வெளியின் வடமேற்கில் தட்டையான, நீளமான மலைப் பாறையொன்றைக் காணக் கூடியதாக உள்ளது. சுமார் 60 அடி உயரமும் 150 அடி நீளமும் கொண்ட இம்மலைப் பாறையே சரித்திரப் பிரசித்த பெற்ற வாகூர மலையாகும். இது சிங்கள மொழியில் "பாகுரகல" என அழைக்கப்படுகிறது. இம்மலைக்கும் கந்தன் படையெடுப்புக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. கலியுக சகாப்தத்தில் சூரனை அழிப்பதற்காக முருகப் பெருமான் வீசிய வேல் உக்கிரம் தாங்க முடியாது சமுத்திரத்தை நோக்கி வரும் வழியில் மூன்று தடாகங்களை ஏற்படுத்தி, பின் எதிர்ப்பட்ட வாகூர மலையை இரண்டாகப் பிளந்து, கடலில் மூழ்கி பின் வெள்ளை நாவலில் உறைந்ததென்று மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. கடலில் மூழ்கிக் கிளம்பிய வேல் மூன்று கதிர்களாக பிரிந்து உகந்தை, திருக்கோயில், மண்டூர் ஆகிய இடங்களில் வீழ்ந்ததாகவும் இவ்விடங்களில் ஆதி நாகர்களால் முருகனுக்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி உட்பட பல நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி முருகப் பெருமானின் வேலினால் இரண்டாகப் பிளக்கபட்டு சுக்கு நூறான மலை வாகூரக் களப்பின் அருகில் நாம் காணும் மலையே எனவும், வேல் மூழ்கிய கடல் வாகூரக் களப்பின் கிழக்கில் காணப்படும் வங்கக் கடலே எனவும் தெரியவருகிறது.

வாகூர மலை மிகப் பெரிதாகக் காணப்பட்டதாகவும், இரண்டாகப் பிளக்கப்பட்ட இதன் பாகங்களே எல்லா இடங்களிலும் சிதறி துண்டு துண்டாகக் கிடப்பதாகவும் கூறப்படுகிறது. இன்று நாம் காணும் தட்டையான வாகூர மலை கந்தன் படையெடுப்பு காலத்திற்கு முன்பு மிகப் பெரியதாகக் காணப்பட்டதாகவும், வாகூர மலையின் வடமேற்கிலும், மேற்குப் பக்கத்திலும் காணப்படும் மலைப் பாறைகள் அனைத்தும் வாகூர மலையிலிருந்து சிதறிய துண்டுகளே எனவும் கூறப்படுகிறது. வாகூர மலையின் அருகில் காணப்படும் பால்சுனைக் கற்பாறை, யாழ்ச்சுனைக் கற்பாறை போன்றவையும் இம்மலையின் துண்டுகளே.

வாகூர மலையின் சிதறிய பாறைத்துண்டுகளைப் பார்க்கும் பொழுது வட இந்தியாவில் மதுரா நகருக்கு அருகில் உள்ள கோவர்த்தனம் எனும் இடமே நினைவுக்கு வருகிறது. இங்குதான் கிருஸ்ண பகவான் தனது ஒற்றை விரலால் கோவர்த்தன மலையைத் தூக்கி பின் கீழே போட்டதாகவும், கீழே விழுந்த மலையின் துண்டுகள் சிதறியதாகவும் கூறப்படுகிறது. கோவர்த்தனம், கிருஸ்ணர் கோயிலில் இப்படிப்பட்ட ஓர் துண்டுக் கல் பாறையே புனிதப் பொருளாக வைத்துப் பூஜிக்கப்படுகிறது. கோவர்த்தனம் என்னும் இடத்தில் சுமார் 10 கி.மீ நீளத்திற்கு கீற்றுக் கீற்றாக கோவர்த்தன மலைப் பாறைகள் இன்றும் காணப்படுகின்றன. இதுபோலவே வாகூர மலையின் துண்டுகளும் கீற்றுக் கீற்றாக மலையின் வடமேல் பகுதியில் காணப்படுகின்றன. வாகூர வெட்டையின் வடக்குப் பக்கத்திலும் வாகூர மலையின் சில துண்டுகள் காணப்படுகின்றன.

வாகூர மலையில் அடிவாரத்தில் ஆதி திராவிடர்கள் வாழ்ந்த சில கற்குகைகளும் இவற்றில் ஆதிவாசிகள் வரைந்த சித்திரங்கள் சிலவும் காணப்படுகின்றன. வாகூர வெட்டையிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் ஒற்றையடிப் பாதை மூலமாக சென்றால் இரண்டு கி.மீ தூரத்தில் வாகூர மலையை அடையலாம். அங்கிருந்து 500 மீற்றர் தொலைவில் பால்ச்சுனையும் அதை அடுத்து யாழ்ச்சுனையும் அமைந்துள்ளன.

**வாகூர ஆறு (வண்ணத்தி ஓடை)**

வாகூர வெட்டையில் வேல் பதிக்கப்பட்டிருந்த மலைப் பாறையைக் கடந்து சுமார் 200 மீற்றர் தூரம் சென்றதும் ஓர் சிறிய

ஆற்றைக் காணக்கூடியதாக இருந்தது. மலைப் பாறையிலிருந்து பார்த்த போது வாகூர வெளியெங்கும் வளைந்து நெளிந்து ஓடி வாகூரக் களப்பில் சங்கமமாவது இந்த ஆறுதான். இது வாகூர ஆறு எனப் பெயர் பெற்றுள்ளது. பானமைக் கருகில் ஓடும் விளா ஓயாவை அடுத்து நாம் காணும் பெரிய ஆறு வாகூர ஆறாகும். இடையில் உள்ள சலவை ஆறு சிறிய ஆறாகும். எனவே பானமையிலிருந்து சுமார் 19 கி.மீ தூரம் வரை வாகூர ஆற்றைத் தவிர வேறு எந்தப் பெரிய ஆறுகளும் அமைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



வண்ணாத்தி ஓடை (வாகூர ஆறு)

எனவே இப்பகுதியில் வாகூர ஆறு முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. பம்பரகஸ்தலாவ மலையின் மேற்குப்பகுதியில் 10 கி.மீ தொலைவில் உள்ள மலைகளில் உற்பத்தியாகி வரும் சிற்றருவிகள் இரண்டும் ஒன்று சேர்ந்து வாகூர என்ற பெயரில் ஓடி இப்பகுதிக்கு பசுமையைக் கொடுக்கின்றன.

வாகூர ஆற்றை "வண்ணாத்தி ஓடை" என்றே எல்லோரும் குறிப்பிட்டார்கள். இப்பெயர் உண்டானதற்கு ஒரு காரணமும் கூறப்படுகிறது. சலவைத் தொழில் புரியும் பெண்ணொருவர் கதிர்காமத்திற்கு பாத யாத்திரை வரும் போது இங்கிருந்த வாகூர ஆற்றில் உப்பு சுவையான நீர் இருந்ததாகவும், இதைக் குடித்த

அப்பெண் மயக்கமுற்று விழுந்ததாகவும், பின்பு தன்னை நல்ல படியாக கதிர்காமத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என முருகப்பெருமானை வேண்டி நேர்த்தி வைத்ததாகவும், பின்பு யாத்திரை சென்று திரும்பியபின் தனது நேர்த்தியை நிறைவு செய்யும் முகமாக இவ்விடத்தில் ஓர் கிணற்றைக் கட்டி வைத்ததாகவும், இதன் காரணமாக இக்கிணறு வண்ணாத்திக் கிணறு எனவும், ஆறு வண்ணாத்தி ஓடை எனவும், வெளி வண்ணாத்தி வெட்டை எனவும் அழைக்கப்படுவதாகத் தெரிய வருகிறது.

வாகூர ஆற்றின் நீர் சுத்தமானதாக இருந்தது. சுமார் 30 முதல் 40 அடி வரை அகலமுள்ள இவ்வாற்றை பார்த்த மாத்திரத்தில் அதுவரை நடந்து வந்த களைப்புத் தீர ஆற்றில் பாய்ந்து குளிக்க வேண்டும் போல் இருந்தது. ஆற்றின் அடுத்த கரையில் எம்முடன் வந்த யாத்திரீகர்களில் பலர் மரங்களின் கீழ் தாம் கொண்டு வந்திருந்த பொலித்தீன் விரிப்புகளை விரித்து அதில் உட்கார்ந்திருந்தனர். சிறுவர்கள் சிலர் ஆற்றில் இறங்கி குளிக்க ஆயத்தமானார்கள். ஓர் தந்தை தனது நான்கு வயது செல்ல மகனை ஆற்றில் குளிக்க வைத்துக் கொண்டிருந்தார். இச்சூழ்நிலையை கண்டவுடன் இன்றைய இரவுப் பொழுதை நாம் கழிக்கும் இடம் இதுதான் என்பதை யூகித்துக் கொண்டேன்.

அப்பொழுது நேரம் மாலை 4.10. மத்தியானம் 12.45க்கு உகந்தை முருகன் கோயிலிலிருந்து புறப்பட்ட நாம் மூன்றரை மணித்தியாலங்களின் பின் வாகூர வெட்டையில் இன்றைய தங்குமிடத்திற்கு வந்து சேர்ந்துள்ளோம். வாகூர வெளி இரவுப் பொழுதைக் கழிப்பதற்கு உகந்த இடம் என எமது குருசுவாமி அவர்கள் முன்பே கூறியிருந்தார். பல்லாண்டு காலமாக தாம் இவ்விடத்தில் ஓர் இரவைக் கழிப்பதாகவும், அவர் கூறியிருந்தார். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாதயாத்திரை செய்யும் பக்தர்கள் வாகூர வெளியில் ஓர் இரவைக் கழிப்பது வழக்கமாக இருந்தது.

ஆங்கிலேயர் காலத்தில் இலங்கையில் இருந்த வனங்-களையும், வேடர்களின் வாழ்க்கையையும் ஆராய்ந்த R.L. ஸ்பிட்டல் எனும் ஆங்கிலேய ஆய்வாளர் 1933ம் ஆண்டு வாகூர களப்பில்

ஓர் இரவை தாம் கழித்த விதத்தையும், அனுபவங்களையும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். பன்னெடுங்காலமாக பக்தர்கள் இங்கு தங்கி இரவுப் பொழுதைக் கழிப்பதற்கு முக்கிய காரணமாக விளங்குவது வாகூர ஆறாகும். யாத்திரீகர்களுக்குத் தேவையான நீரைப் பெறுவதற்கும், உணவு சமைப்பதற்கும், குளிப்பதற்கும், ஆடைகளைக் கழுவி உலர்த்துவதற்கும் காலையில் ஏனைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வாகூர ஆற்று நீர் பயன்பட்டது. எனவே தான் இவ்விடம் முக்கிய தங்குமிடமாக விளங்குகிறது.

வாகூர வட்டையில் புதிய நண்பர்கள் பலர் எனக்கு அறிமுக-மானார்கள். இவர்களில் கல்லடியைச் சேர்ந்த ஜெகநாதன், அவரது மகன் ஜனகன், மற்றும் அவுஸ்திரேலிய நாட்டின் வெள்ளைக்காரப் பிரஜை சத்சுவாமி (இவர் இந்து சமய ஆன்மீகவாதியான பின் இந்தப் பெயரைப் பெற்றவர்.) மட்டக்களப்பைச் சோந்த ஜதீஸ், டிசாந்த், ஆகியோார் குறிப்பிடத்தக்கவர்கள். மேலும் குருசுவாமிக்கு உதவியாக இருந்த குமரன் சுவாமி, லோகநாதன், கருணைநாதன் இவர்களுடன் பெயர் குறிப்பிடாவிட்டாலும் மேலும் பல நண்பர்கள் அறிமுகமானார்கள். இவர்களின் அன்பான பேச்சு, கலந்துரையாடல், ஒருவருக்கொருவர் உதவுதல், ஒன்று சேர்ந்து உணவு உண்ணுதல் போன்றவை இக்கடினமான பாதயாத்திரையை சுலபமாக மேற்கொள்வதற்கு ஏதுவாக இருந்தது.

ஆற்றின் அடுத்த கரைக்குச் செல்வதற்காக நாமும் ஆற்றில் இறங்கினோம். மூன்றரை மணித்தியாலங்கள் 8 கி. மீ தூரம் நடந்து வந்த கால்களிலே குளிர்ச்சியான ஆற்று நீர் பட்டதும் உடல் புத்துணர்ச்சி பெற்றது. கால்களுக்கு இதமாக இருந்தது. இருகைகளிலும் ஆவலாக நீரை அள்ளி முகத்தைக் கழுவிக் கொண்டேன். என்ன உற்சாகம், எத்தனை ஆனந்தம், ஆற்றிலே நீர் முழங்கால் அளவிற்கே இருந்தது. அக்கரைக்குச் சென்று ஓர் மரத்தின் கீழ் எமது பயணப் பைகளைக் வைத்து நாமும் இடம் பிடித்துக் கொண்டோம்.

அடுத்த சில நிமிடங்கள் நாம் இரவுப் பொழுதைக் கழிக்கப் போகும் இவ்விடத்தை சுற்றிப் பார்த்தோம். அவ்விடத்திலே ஓர் கிணறும், மலசல கூடமும் காணப்பட்டது. வருடாவருடம்



படம் 33 - வாகூரவெட்டை ஒற்றைப்பனை மரம்



படம் 34 - தும்முல்ல குளம்



படம் 35 - கொட்டலிந்த வள குளம்



படம் 36 - கந்தசஷ்டி கவசம் படிக்கும் யாத்திரீகர்கள் (கொட்டலிந்த வள குளம்)



படம் 37 - பாத யாத்திரை வந்த 3 வயதுப் பாலகன் (அந்தரிகல் களப்பு அருகில்)



படம் 38 - அந்தரிகல் களப்பு



படம் 39 - அந்தரிகல் மலைப்பாறை



படம் 40 - ஓய்வெடுக்கும் யாத்திரீகர்கள் (இத்திக்கல் களப்பு அருகில்)

இங்கு வந்து தங்கும் பாதயாத்திரீகர்களுக்காகவே இவை கட்டப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். இக்கிணறு வண்ணாத்திக் கிணறு என அழைக்கப்படுகிறது. உயரமற்ற மரங்களும், செடிகளும் இவ்விடத்தில் வளர்ந்திருந்தன. ஆத்தி, உகாய், இலந்தை, விளா, கொன்றை, வேம்பு, கள்ளி, நாவல் போன்ற மரங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இம்மரங்களுக்கும் செடிகளுக்கும் மத்தியில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த ஓர் ஒற்றைப் பனை மரத்தைக் கண்டவுடன் ஆச்சரியமாக இருந்தது. இந்தக் காட்டில் நடுவில், இச்சூழ்நிலைக்கு சற்றும் ஒவ்வாத பனைமரம் எப்படி முளைத்தது?

பனைமரத்தின் கீழே வளர்ந்திருந்த ஓர் குட்டையான மரத்தின் அருகில் ஓர் கறுப்பு நிற பிளாஸ்டிக் நீர்த் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. சற்று தூரத்தில் ஓர் தண்ணீர் பவுசர் வண்டியும், அதனருகில் இரண்டு படைவீரர்களும் காணப்பட்டனர். கடந்த ஓரிரு வருடங்களாக இவ்விடத்தில் தங்கும் பாத யாத்திரீகர்களின் தேவைக்காக குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்பதை அறிந்தோம். இவ்வருடமும் அவ்வேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீர்த் தொட்டியிலிருந்த குடிநீரை யாத்திரீகர்கள் தமது பிளாஸ்டிக் போத்தல்களில் நிரப்பிக் கொண்டிருந்தனர். உலக சுகாதார அமைப்பான யுனிசெப் மூலமாக இந் நீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டிருந்தன என்பதை அதில் எழுதப்பட்டிருந்த பெயரைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன்.

கிணற்றின் அடுத்த பக்கத்தில் சமையல் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. எமது யாத்திரைக் குழுவில் சமையலுக்கென்று நியமிக்கப்பட்ட குழுவினர் எம்முடன் வந்த 400 பேருக்கும் இரவு உணவு தயாரிக்கும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். ஒரு பக்கம் பெண் யாத்திரீகர்கள் சிலர் மரக்கறிகளை துப்பரவு செய்து கொண்டும் மற்றும் சிலர் அவற்றை துண்டுகளாக நறுக்கும் வேலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். பலர் ஆற்றில் இறங்கிக் குளித்துக் கொண்டிருந்தனர். அடுத்த சில நிமிடங்களில் நாமும் உடைகளை மாற்றிக் கொண்டு ஆற்றின் கரையில் சற்று முன் நோக்கி நடந்து சென்று நீராடினோம்.

சற்று தூரத்தில் வாகூர ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருந்த பாலத்தைக் காணக்கூடியதாக இருந்தது. உகந்தையில் இருந்து கூமுனைக்குச் செல்லும் ஜீப் வண்டிப் பாதையில் வாகூர ஆற்றைக்

கடப்பதற்காகக் கட்டப்பட்ட சிறிய மரப்பாலம் அது. இப்பாலத்தின் அருகில் மேற்குப் பக்கமாக ஓர் ஒற்றையடிப் பாதை காட்டினுள் செல்கிறது. இப்பாதை வழியே சுமார் 7 கி.மீ பயணம் செய்தால் போவத்த கல மலையை அடையலாம்.

## காவல் தெய்வம் கருப்பண்ணசாமி குடியிருக்கும் ஒற்றைப் பனைமரம்

வாகூர வெட்டையில் இரவைக் கழிக்க நாம் தங்கியிருந்த இடத்தில் கம்பீரமாகக் காட்சியளித்த ஒற்றைப் பனைமரத்தைப் பார்த்து யோசித்துக் கொண்டிருந்தேன். இந்தக் காட்டின் மத்தியில் இந்த ஒற்றைப்பனைமரம் மட்டும் எப்படி வந்தது என்பது தான் என் யோசனை. சட்டென்று ஓர் அனுபவம் ஞாபகத்திற்கு வந்தது. சில வருடங்கள் பின்னோக்கிச் சென்றேன்.

எட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு சமயம் நான் சபரி மலைக்குச் சென்றிருந்த போது ஓர் இந்திய சுவாமியைச் சந்தித்தேன். அவரோடு பேசிக் கொண்டிருந்தபோது காவல் தெய்வம் கருப்பண்ண சாமி பற்றிக் கூறினார். ஒற்றையாக தனிவழியில் செல்லும் பொழுது கருப்பண்ண சாமியை நினைத்துக் கொண்டு சென்றால் எதற்கும் அஞ்சத் தேவையில்லை என்று அவர் கூறினார். காட்டுப் பாதைகளில் இருக்கும் ஒற்றைப் பனைமரமே அவர் குடிகொண்டிருக்கும் இடம் எனவும் அவர் கூறினார். **(படம் - 33)** கருப்பண்ணசாமியின் பாடல்களிலே ஒற்றைப் பனைமரத்து சாலை முழுவதும் ஆளுபவர் கருப்பண்ண சாமி எனக் குறிப்பிட்டுள்ளமை அப்போது நினைவுக்கு வந்தது.

உண்மைதான் ஒற்றைப் பனைமரம் எங்கிருக்கிறதோ அங்கு கருப்பண்ண சாமி குடிகொண்டிருப்பார் எனத் தெரிந்து கொண்டேன். வாகூர வெட்டையில் நாம் தங்கியிருந்த இடத்திலும் கருப்பண்ண சாமி குடிகொண்டுள்ளார் என்பது புரிந்தது. ஆண்டு தோறும் இங்கு வந்து தங்கும் யாத்திரீகர்களுக்கு கருப்பண்ண சாமி காவலாக இருந்து காத்து வருகிறார். பண்டைய காலத்தில் இவ்வழியாக பாதயாத்திரை வந்த முனிவர்கள் இவ்விடத்தில் கருப்பண்ண சாமியை ஸ்தாபித்து வணங்கிச் சென்றுள்ளனர்.

என் மனதுக்குத் தோன்றிய இவ்விடயத்தை குருசுவாமியிடம் கூறினேன். அப்பொழுதுதான் அவர் ஓர் அபூர்வமான விடயத்தை

என்னிடம் கூறினார். கடந்த 49 வருடங்களாக தான் பாத யாத்திரை வருவதாகவும், அன்று முதல் இந்த ஒற்றைப் பனை இவ்விடத்தி-லேயே இருப்பதாகவும், இங்குள்ள ஏனைய மரங்களில் சில அழிந்து போயும் சில மரங்கள் வருடாவருடம் மாற்றங்களுக்குள்ளான போதும் இப்பனைமரம் மட்டும் அன்று பார்த்தது போலவே ஒவ்வொரு வருடமும் காட்சியளிப்பதாகவும் இப்புதுமையைக் கண்டு இதில் ஏதோ ஓர் சக்தி இருப்பதாக தான் நம்பியதாகவும் அவர் கூறினார். இதனால் ஒவ்வொரு வருடமும் பாதயாத்திரை வரும் போது இம்மரத்தை வலம் வந்து வணங்கிச் செல்வதாகவும் கூறினார். ஆம் அவர் உணர்ந்த அந்த சக்தி காவல் தெய்வம் கருப்பண்ண சாமியே என்பதை நானும் புரிந்து கொண்டேன்.

இன்று நாம் 8 கி.மீ தூரத்தை நடந்து கடந்திருக்கிறோம். இத்தூரத்தைக் கடக்க எமக்கு மூன்றரை மணித்தியாலங்கள் சென்றன. இன்று மாலை மேலும் சில நண்பர்கள் எனக்கு அறிமுகமானார்கள். இவர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது இரவு எம்மைச் சூழ்ந்து கொண்டது. சிறிது நேரத்தில் எல்லோருக்கும் இராப்போசனம் வழங்கப்பட்டது. அதன் பின் தெய்வீக பஜனை ஆரம்பமானது.

இங்கிருந்த ஓர் மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் ஏந்தி வந்த முருகனின் வேலாயுதங்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. இவற்றை சுற்றி யாத்திரீகர்கள் அனைவரும் அமர்ந்து கொண்டனர். பஜனை ஆரம்பமானது. சுமார் 30 நிமிடங்களில் பஜனை நிறைவு பெற்றது. பின் வேலாயுதங்களுக்கு குருசுவாமி பூஜை நடத்தினார். பக்தர்கள் வேலையும், குருசாவமியையும் வணங்கி பின் நித்திரைக்குச் சென்றனர். நாமும் நித்திரைக்குச் சென்றோம். முதன் முதலாக ஓர் நடுக்காட்டிலே அதுவும் வெட்டை வெளியிலே உறங்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் சபரி மலைக்கு பாத யாத்திரை செல்லும் போது அடர்ந்த காட்டின் மத்தியில் 3 நாட்கள் இரவைக் கழிக்க வேண்டியிருக்கும். அங்கு தங்கும் இடங்களில் தாவளங்கள் என்று சொல்லப்படும் நீளமான குடில்களை அமைத்திருப்பார்கள். ஒரு தாவளத்திலே நூறு பேர் வரை தங்குவார்கள். அதுபோல நூற்றுக் கணக்கில் தாவளங்கள் நடுக்காட்டிலே அமைக்கப்பட்டிருக்கும் இரவுப் பொழுதை தாவளத்தின் உள்ளேதான் கழிப்போம். அடர்ந்த காட்டின் மத்தியில் நாம் உறங்குகிறோம் எனும் உணர்வு அப்போது ஏற்படாது.

ஆனால் கதிரமலை பாத யாத்திரையின் போது நாம் இரவில் தங்கிச் செல்லும் இடங்கள் வெட்ட வெளிகளே. முதல் தடவையாக வெட்டைவெளியிலே உறங்குவது வாழ்க்கையில் மறக்க முடியாத புதிய அனுபவம் தான். வானத்திற்கு எல்லை இல்லை என்று கூறுவதில் தான் எத்தனை அர்த்தம் உள்ளது என்பது நன்றாகப் புரிகிறது. பரந்து விரிந்த பிரமாண்டமான அளவிட முடியாத வானம். அதிலே ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருக்கின்றன. காவல் தெய்வமான கருப்பண்ண சாமியின் சந்திதானத்தில் தங்கியிருக்கிறோம் என்ற எண்ணம் மனதிற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இந்த எண்ணங்களோடு உறக்கம் மெல்ல மெல்ல கண்களை ஆக்கிரமித்தது.



தும்முல்ல குளம் – தவளை வடிவமுள்ள பாறை

## 10. வண்ணாத்தி ஓடை முதல் கும்புக்கன் ஆறு வரை

***சின்ன வில்லு (குடா வில)***

*காலை 5.45 மணிக்கு எமது இரண்டாம் நாள் பாத யாத்திரை ஆரம்பமானது. வாகூர வெட்டையிலிருந்து கிளம்பிய நாம் இன்று அடைய வேண்டிய இடம் கும்புக்கன் ஆற்றங்கரையாகும். வாகூர வெட்டையிலிருந்து புறப்பட்ட பின் பாதையின் இருபக்கங்களிலும் காடுகள் நிறைந்த இடத்தைக் கடக்க சுமார் 15 நிமிடங்கள் நடக்க வேண்டியிருந்தது. அதன்பின் பாதையின் வலதுபக்கம் ஓர் குளத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இது ஓர் காட்டுக்குளம். காட்டுக் குளங்களை வில்லு என அழைப்பதுண்டு. இக்காட்டுக்குளத்தின் பெயர் சின்னவில்லு. இதற்கு சிங்கள மொழியில் குடா வில்லு எனப் பெயருண்டு.*

*வில்லுக்குளத்தின் பெரும்பகுதி வரண்டு காணப்பட்டது. இதன் நடுவில் மட்டும் சிறிதளவு நீரைக் காணக்கூடியதாக இருந்தது. மழைக்காலங்களில் சின்னவில்லுக்குளம் நிரம்பும் பொழுது இதன் மேலதிக நீர் வெளியேறும் வகையில் மதகொன்று கட்டப்பட்டுள்ளது. இம்மதகின் வழியாக வெளியேறும் நீர் வாகூரக் களப்பில் சங்கமமாகிறது.*

***தும்முல்ல குளம் (நடுக்குளம்)***

*சின்னவில்லு குளத்தை அடுத்து அதன் அருகிலேயே இன்னுமோர் காட்டுக்குளம் அமைந்துள்ளது. இது தும்முல்ல குளம் என அழைக்கப்படுகிறது. **(படம் - 34)** யாத்திரீகர்கள் இதை நடுக்குளம் என அழைக்கின்றனர். இரண்டு குளங்களுக்கு நடுவில் இக்குளம் அமைந்துள்ளதால் இப்பெயர் உண்டானது. குளத்தின் கிழக்குக் கரையில் உள்ள நாவல் மரங்கள் நிறைந்த சோலையில் சேதமடைந்த நிலையில் விருந்தினர் விடுதியொன்றும், நீர்த்தொட்டி கோபுரமும் காணப்பட்டன. இவை சுனாமியின் போது இராட்சத அலைகளினால் சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது. இது வாகூர வெளியிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.*

*தும்முல்ல குளத்தில் ஓரளவு நீர் காணப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கில் வெண்தாமரைப் பூக்கள் மலர்ந்தும், மொட்டுக்-களாகவும் காட்சியளித்தன. குளத்தின் தெற்குப்பக்கத்தில் பிரம்-*

மாண்டமான ஓர் தவளை நீரிலிருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி வாயைத் திறந்து கொண்டு இருப்பது போன்ற கற்பாறை-யொன்று காணப்படுகிறது. இயற்கையின் வடிவமைப்புக்கு தனிச்-சிறப்புண்டு என்பதை அப்பாறையின் வடிவம் கோடிட்டுக் காட்டு-கின்றது.

தும்முல்ல குளம் யானைகளின் இராஜதானிகளில் ஒன்-றாகும். அத்துடன் பறவைகள் தங்கிச் செல்லும் இடங்களிலும் ஒன்றாகும். காட்டெருமைகளும் அதிகளவில் வந்து செல்லும் இடமாகும். இக்குளத்தில் இராட்சத முதலைகள் அதிகளவில் வாழ்கின்றன. குளத்தில் நீர் நிரம்பிக் காணப்படும் காலங்களில் யானைகள் கூட்டங்கூட்டமாக அக்கரையில் நின்று நீர் பருகி துதிக்கையால் நீரை மொண்டு தம்மைத்தாமே குளிப்பாட்டிக்-கொள்ளும் காட்சி மிகவும் ரசிக்கத்தக்கது. மற்றும் நீர்-ப்பறவைகள் ஏராளமாக வந்து இங்கிருக்கும் தாமரை இலைகள் மீது நடந்து சென்று அடியில் உள்ள மீன்களைக் கொத்தித் தின்று கொண்டிருக்கும் காட்சியும் அருமையானது.

தும்முல்ல குளத்தின் நீர் மிகவும் சுத்தமானதாகும். வனத்துறை அதிகாரிகளும், ஊழியர்களும் இந்நீரை குடிப்பதற்கும் பயன்படுத்தகின்றனர். தும்முல்ல குளத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள பாதைக்கு அருகில் வடிகால் வெட்டிய போது ஊழியர் ஒருவர் சில தங்க ஆபரணங்களை நிலத்திலிருந்து எடுத்ததாகவும், யாருக்கும் இது பற்றி கூறாமல் இவர் ஆபரணங்களுடன் சென்று விட்டதாகவும் இதை அறிந்த ஏனைய ஊழியர்கள் மூலம் விடயம் வெளியே தெரிந்து பின்பு அவர் பொலிசாரால் பிடிக்கப்பட்டு ஆபரணங்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

இச்சம்பவம் மூலம் இப்பகுதியில் ஓர் ஆலயம் இருந்துள்ள-மையும் இப்பகுதியை ஆண்ட மன்னர்களால் ஆலயத்திற்கு இந்த ஆபரணங்கள் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மகாசேன மன்னன் கந்தக் கடவுளின் புனித பூமியில் இருந்த பௌத்த ஆலயங்களுக்கருகில் ஒவ்வோர் கந்தசுவாமி கோயிலை கட்டியதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. எனவே தும்முல்ல குளக்கரையிலும் இவனால் முருகனுக்கு ஆலயம் அமைக்கப்பட்டு தங்கத்திருவாபரணங்கள் மானியமாக வழங்கப்பட்டிருக்கலாம் எனக்கூறலாம்.

**கொட்டலிந்தவள (குட்டைக்குளம்)**

தும்முல்ல குளத்தை அடுத்து காணப்படும் ஓர் சிறிய வில்லுக்குளம் கொட்டலிந்தவள என அழைக்கப்படுகிறது. இது குட்டைக்குளம் என தமிழில் பெயர் பெற்றுள்ளது. **(படம் - 35)** இப்பகுதியில் அடுத்தடுத்து அமைந்துள்ள மூன்று வில்லுக் குளங்களில் இதுவே மிகச் சிறியதாகும். இக்குளங்கள் மூன்றும் சுமார் ஒரு கி.மீ தூரத்திற்குள் அமைந்துள்ளன. குட்டைக்குளத்தின் கரையில் காணப்பட்ட மரக்கட்டையில் இரு யாத்திரீகர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். 75 வயது மதிக்கத்தக்க பாட்டி ஒருவர் கந்தசஸ்டிக் கவசம் படித்துக் கொண்டிருந்தார். குட்டைக்-குளத்தின் வடக்குப்பக்கம் அக்கரையில் சில கற்பாறைகள் காணப்-படுகின்றன. அவற்றின் அருகில் குளக்கரையில் சீழ்க்கை வாத்துக்கள் சிலவும் வேறு சில பறவைகளும் மீன்களைக் கொத்திப்பிடிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தன. குளத்தின் முடிவில் பாதையில் அமைக்கப்பட்டிருந்த சீமேந்துக் கட்டுகளில் யாத்திரீகர்கள் சிலர் உட்கார்ந்து கொண்டு கந்தசஷ்டிக் கவசம் படித்துக் கொண்டிருந்தனர். **(படம் - 36)**

காட்டு விலங்குகள் நிறைந்த இந்த அடர்ந்த காட்டினிலே கந்தக் கடவுளின் மீது அதீத நம்பிக்கை வைத்து பாதயாத்திரை செல்லும் பக்தர்களின் உடலுக்கு பலத்தை தரும் உடல் கவசமாகவும், மனதிற்கு உறுதியைத் தரும் மனக்கவசமாகவும் இத்தருணத்தில் இருப்பது கந்தசஸ்டிக் கவசமே.

**அந்தரிகல் களப்பு**

குட்டைக்குளத்தை கடந்தவுடன் பாதையின் இரு பக்கங்-களிலும் காடு நிறைந்து காணப்பட்டது. சுமார் 10 நிமிட நடையின் பின் தூரத்தில் ஒரு வெட்டைவெளி தெரிந்தது. இவ்விடத்தில் பாதையின் ஓரத்தில் மணல் பாங்கான இடத்தில் ஒரு குடும்பத்தினர் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். குடும்பத் தலைவன், அவர் மனைவி, அம்மா, தங்கை, மூன்று குழந்தைகள் என யூகித்துக் கொண்டேன். அதிலும் கடைக்குட்டிப் பையனுக்கு மூன்று வயதே இருக்கும். கழுத்திலே உருத்திராட்ச மாலை, தலையிலே காவி வேட்டி தலைப்பாகை, இடுப்பிலே வேட்டி. தந்தையின் அருகே உட்கார்ந்த வண்ணம் பாதையில் நடந்து செல்வோரை வைத்த

கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். **(படம் - 37)** அந்தப் பிஞ்சுப் பார்வையிலும் கம்பீரம் தெரிந்தது. அந்தக் குட்டிப்பையனை பார்க்கும் பொழுது பால முருகனே நேரில் வந்து காட்சி கொடுப்பது போன்று இருந்தது. இந்தச் சிறு வயதிலேயே கதிரமலைக்கு பாத யாத்திரை செல்லும் பாக்கியம் அந்தக் குட்டிப்பாலகனுக்கு கிடைத்துள்ளமை கந்தனின் சித்தம் தான்.

சரியாக காலை 6.35க்கு பரந்த வெட்டை வெளியை அடைந்தோம். சுமார் 400 மீற்றர் அகலமும் 500 மீற்றர் நீளமும் கொண்ட இவ்வெட்ட வெளியே அந்தரகல் களப்பு என அழைக்கப்படுகிறது. **(படம் - 38)** கோடை காலமென்பதால் இக்களப்பில் நீர் மிக மிக குறைவாகவே காணப்படுகிறது. களப்பில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வரண்ட வெட்டை வெளியையே காணக்கூடியதாக இருந்தது. வட்டவடிவமான இக்களப்பின் வடகிழக்குக் கரையோரத்தில் மலைப்பாறைக் குன்றுகள் சில காணப்பட்டன. இப்பாறைகளின் அருகில் சிறிதளவு களப்பு நீரையும் அதனை அடுத்து கடல் மணல் மேட்டையும் காணக்கூடியதாக இருந்தது. அந்தரகல் களப்பு தும்முல்ல குளத்திலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது.

ஒரு காலத்தில் இம்மலைப்பாறைப்பகுதி சிறுத்தைப் புலிகளின் கோட்டையாக விளங்கியது. சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியை பலம் மிக்க ஓர் சிறுத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததாகவும், இங்கிருந்த பெரிய மலைப்பாறை மீது தினமும் படுத்துக் கொண்டு ஏனைய மிருகங்கள் எதற்கும் பாறை மீது ஏறுவதற்கு அனுமதி கொடுக்காமல் இப்பகுதியை தனது கட்டுப்பாட்டின் கீழ் சிலகாலம் அந்த சிறுத்தை வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது. கூமுனை சரணாலயத்தை பார்வையிட வரும் உல்லாசப்பிரயாணிகள் அந்தரகல் களப்பின் இக்கரையில் தமது வாகனத்தை நிறுத்தி வைத்து விட்டு இந்த சிறுத்தை ராஜாவை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார்களாம். தன்னை சிலர் கவனிப்பதை அறிந்த சிறிது நேரத்தில் அது எழுந்து காட்டுக்குள் சென்றுவிட்டு, பயணிகளின் வாகனம் அவ்விடத்தை விட்டு சென்றவுடன் மீண்டும் வந்து பாறைமீது படுத்துக் கொள்ளுமாம்.

இக்காட்சியை தினமும் இப்பகுதியில் காணக்கூடியதாக இருக்குமாம். பின்பு சில நாட்கள் அச்சிறுத்தை பாறை மீது காணப்-

படவில்லையாம். இரண்டொரு நாட்களின் பின் அப்பாறையில் சற்று பெரிய வேறொரு சிறுத்தை படுத்துக் கிடந்ததாம். வனத்துறை அதிகாரிகள் முன்பு இருந்த அந்தச் சிறுத்தைக்கு என்ன நடந்தது என தேடிப்பார்க்கும் பொழுது உடலில் பலத்த காயங்களுடன் இறந்து கிடப்பதை கண்டார்களாம். ஆம், அதுவரை இப்பகுதியை தனது அதிகாரத்தின் கீழ் வைத்திருந்த சிறுத்தையை அதைவிட பலம் மிக்க சிறுத்தையொன்று வந்து தாக்கி கொன்று விட்டு இவ்விடத்திற்கு தானே தலைவனாகி விட்டது. காட்டிலே அன்று தொட்டு இன்றுவரை நடைமுறையில் இருக்கும் எழுதப்படாத சட்டம் இதுதான். இங்கு யார் பலசாலியோ அவனுக்குத்தான் ஆட்சியும், அதிகாரமும், தலைமைப் பதவியும்.

இப்படி ஒருகாலத்தில் சிறுத்தைகளின் இராஜதானியாக விளங்கிய அந்தரகல் களப்பில் இன்று ஆசைக்குக் கூட ஒரு சிறுத்தைப்புலியையும் காணக்கிடைப்பதில்லையாம். இப்பகுதியில் அதிகமாக மனிதர்களின் நடமாட்டமும், வாகனங்களின் இரைச்சல்களும் இருப்பதால் இவையெல்லாம் மேற்குப்பகுதி நோக்கி சென்று விட்டனவாம்.

**அந்தரிகல் மலைப்பாறைக் கோயில்**

அந்தரகல் களப்பின் மேற்குக் கரையோரமாக களப்பை கடந்து செல்வதற்கான பாதை அமைந்துள்ளது. இப்பாதையின் அருகில் களப்பின் மேற்குப் பக்கத்தில் கற்பாறைகள் சில காணப்படுகின்றன. இப்பாறையின் அமைப்பானது இவ்வழியே செல்லும் யாத்திரீகர்களின் ஓர் வழிபாட்டிடம் போலத் தெரிந்தது. **(படம் - 39)** இது பற்றிய தகவல்களை தேடிய போது நமது யூகம் சரியாகவே இருந்தது.

பண்டைய காலம் முதல் கதிரமலைக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் அந்தரகல் களப்பு பகுதிக்கு வரும்போது இப்பகுதியில் சிறுத்தைப்புலிகளின் நடமாட்டம் உள்ளதென்பதை தெரிந்து வைத்திருந்தனர். இவைகளினால் தமக்கு எந்த இடையூறும் ஏற்படாது காக்க வேண்டும் என இவ்விடத்தில் துர்க்கை அம்மனை நினைத்து சூலம் ஒன்றை நட்டு வழிபட்டுச் சென்றதாக முதியவர் ஒருவர் கூறினார். துர்க்கையம்மனின் வாகனங்களில் ஒன்று புலி என்பது குறிப்பிடத்தக்கது. பன்னெடுங்காலமாக இவ்விடத்தில்

துர்க்கையம்மன் வழிபாடு நடைபெற்று வந்ததாகவும், இன்றும் இவ்வழியே செல்லும் முதிய பாத யாத்திரீகர்கள் இங்கு துர்க்கை அம்மனை நினைத்து வணங்கிச் செல்வதாகவும் அம்முதியவர் கூறினார்.


துர்க்கையின் இன்னுமொரு பெயர் "அந்தரி" என்பதாகும். எனவே இவ்விடத்தின் பெயர் கூட இவ்வம்மனின் பெயரிலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது. புலிகள் நிறைந்த இவ்விடத்திலிருந்து தம்மைக் காக்க வேண்டும் என அந்தரத்துடன் வருபவர்களுக்கு அபயமளிக்கும் அம்மனாக இவர் விளங்கியதால் அந்தரி அம்மன் என்ற பெயரில் இவ்வம்மனை அழைத்து வந்துள்ளனர். எனவே இவ்விடமும் "அந்தரிகல்" எனவும் அருகிலிருந்த களப்பு "அந்தரிகல் களப்பு" எனவும் பெயர் பெற்றுள்ளது. அதுவே தற்போது அந்தரகல களப்பு என சிங்கள மொழியில் அழைக்கப்படுகிறது.

இம்மலைப்பாறைகளில் பெரிய பாறையொன்றின் மேல் பகுதி உடைக்கப்பட்டிருந்தது. உடைக்கப்பட்டிருந்த அவ்விடத்தில் கூட சூலம் நடப்பட்டிருக்கலாம். இக்கற்பாறைகளுக்கிடையேயும், வேளியேயும் சிலர் அமர்ந்திருந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த-னர். அப்போது எம்மை கடந்து ஓர் அம்புலன்ஸ் வண்டி சென்று கொண்டிருந்தது. காட்டிலே நடந்து செல்லும் பாத யாத்திரீகர்களுக்கு தேவையான அவசர வைத்திய உதவிகளை செய்வதற்காக இவ்வண்டிச் சேவையை ஏற்பாடு செய்துள்ளனர் போலும் என நினைத்த வண்ணம் முன்னோக்கி நடந்து சென்றோம். ஆனால் அம்புலன்ஸ் வண்டி வந்த காரணம் அதுவல்ல.

### இத்திக்கல் மலை (இச்சி கல)

அந்திரிகல் களப்பிலிருந்து பார்க்கும் பொழுது நாம் நடந்து செல்லும் பாதைக்கு முன்பக்கம் காட்டின் மத்தியில் டொல்பின் மீனின் தலை போன்ற அமைப்புடன் உயரமான ஓர் மலைக்குன்று காணப்படுகின்றது. இது இச்சிகல என அழைக்கப்படுகிறது. இச்சி கல என்பது "இத்திக்கல்" என்பதன் திரிபாகும். இம்மலையைச் சுற்றி இத்திமரங்கள் அதிகளவில் காணப்படுவதால் இப்பெயர் உண்டாகி இருக்கலாம் எனக் கூறப்படுகிறது. இத்தி மரத்தை இச்சி எனவும் அழைப்பர்.

இம்மலை அடிவாரத்திலும், மேல் பகுதியிலும் பல கற்குகைகள் அமைந்திருப்பதாகவும், கதிரைமலை யாத்திரைக்கு வந்த சித்தர்கள் இக்குகைகளில் தங்கி இருந்ததாகவும் கூறப்படுகிறது. இத்திக்கல் மலை அந்தரிகல் களப்பிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் உள்ளது.



இத்திக்கல் மலை


**இத்திக்கல் களப்பு (இட்டிகல களப்பு)**

அந்தரகல் களப்பின் முடிவில் பாதையின் இரு பக்கங்களிலும் காடு வளர்ந்து காணப்பட்ட இடத்தில் பலர் உட்கார்ந்து தாம் கொண்டு வந்திருந்த காலை உணவை எந்த அவசரமுமின்றி ஆறுதலாக சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். **(படம் - 40)** காலைச் சூரியனின் இளம் சூட்டு வெயில் நிலத்தை ஆக்கிரமித்திருந்த போதும் காட்டு மரங்களின் நிழலும், அதிலிருந்து கிடைக்கும் குளிர்ச்சியும், களப்பின் வெட்ட வெளியிலிருந்து வீசும் தென்றல் காற்றும் எமது உடலுக்கு புது சுகத்தை கொடுத்தன.

இந்த புத்துணர்ச்சியுடன் ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்திருந்த உணவுப் பண்டங்களை பைகளில் இருந்து வெளியே எடுத்தனர். பலகாரங்கள், பிஸ்கட்டுகள், இனிப்புப் பண்டங்கள், கடலைப் பருப்பு, முருக்கு, மிக்சர் என பலவகைத் தின்பண்டங்களும்

அங்குமிங்கும் பரிமாரப்பட்டு பண்டமாற்றம் நடந்து கொண்டிருந்தது. நாமும் அப்பண்ட மாற்றத்திலே பங்கு கொண்டோம். நாம் அமர்ந்திருந்த இடத்தின் இடது பக்கம் (கிழக்குப்பக்கம்) மலைப்பாறைகளும், சிறிய குன்றுகள் பலவும் காணப்பட்டன. சுமார் 100 மீற்றர் தூரத்தில் சித்தர்கள் தங்கியிருந்த இச்சிக்கல் மலை அமைந்திருந்தது.

இங்கு 10 நிமிட ஓய்வின் பின்பு 15 நிமிட நடைப்பயணம். அடுத்ததாக இருந்த களப்பிற்கு வந்து விட்டோம். அது இத்திக்கல் களப்பு என்ற பெயரைக் கொண்டதாகும். அந்தரகல் களப்பில் இருந்து சுமார் ஒரு கி.மீ தூரத்தில் இத்திக்கல் களப்பு அமைந்திருந்தது. இதுவும் அந்தரகல் களப்பும் ஒரே அளவுடையதாகக் காணப்பட்டன. வடமேற்கிலிருந்து வரும் இரு சிற்றாறுகள் இக்களப்பில் சங்கமமாயின. இக்களப்பு சிங்கள மொழியில் இட்டிகல களப்பு என அழைக்கப்பட்டுகிறது.



இத்திக்கல் களப்பு

இத்திக்கல் களப்பின் ஓரத்திலேயே ஓர் சிறிய குளம் காணப்படுகிறது. இது "தம்பகொலவள" என அழைக்கப்படுகிறது. தமிழில் "புன்னை இலைக்குளம்" என்றழைக்கப்பட்டது. இச்சிறிய

குளத்தில் காட்டெருமைகளின் நடமாட்டம் அதிகளவில் இருந்தமைக்கான தடயங்கள் காணப்பட்டன. இத்திக்கல் களப்பு அந்தரிகல் களப்பிற்கும், யாக்கல களப்பிற்கும் இடையில் அமைந்துள்ளமையால் இது நடுக்களப்பு என யாத்திரீகர்களால் அழைக்கப்படுகிறது.

இத்திக்கல் களப்பும் வெட்டவெளியாக நீரின்றி வரண்டு போய் காணப்பட்டது. கிழக்குப்பக்கம் எங்கோ ஓர் மூலையில் சிறிது நீரைக் காணக் கூடியதாக இருந்தது. இக்களப்பில் நடந்து கொண்டு பின்நோக்கித் திரும்பிப் பார்த்ததும் இத்திக்கல் மலை மிக அண்மையில் தெரிந்தது. இத்திக்கல் மலை அருகில் இருப்பதால் இக்களப்பிற்கும் இத்திக்கல் களப்பு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**யாகக்கல் களப்பு மரத்தடிக் கோயில்**



யாக்கல களப்புக்கு அருகில் அமைந்துள்ள தோரண வளைவு

இத்திக்கல் களப்பை கடந்து சிறிது தூரம் சென்ற போது வழியில் பாதையின் இருபக்கத்திலும் கட்டப்பட்ட தோரண வளைவு போல் இரண்டு பாலை மரங்கள் சுமார் 20 அடி உயரம் வரை வளர்ந்து வலதுபக்கம் இருந்த மரத்தின் கிளை இடதுபக்க மரத்தை தொட்டவண்ணமும், இடதுபக்கம் இருந்த மரத்தின்

கிளை வலதுபக்க மரத்தை தொட்டவண்ணமும் இருந்தது. மனிதன் கைபடாமல் எங்களாலும் அழகாக தோரணை வாயில் அமைக்க முடியும் என அவை கூறுவது போல இருந்தது. அந்த இயற்கை தோரண வாயில் ஊடாக நடந்து சென்றோம்.

சிறிது தூரத்தில் எமது குழுவில் இல்லாத நான்கு இளைஞர்கள் பாதையருகில் அமர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருந்தனர். என்னை தங்களுடன் சற்று இளைப்பாறிச் செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தனர். அவர்களின் அன்புக் கட்டளைக்கு செவிசாய்த்து அவ்விடத்தில் அமர்ந்து அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தேன். என்னுடன் வந்த நண்பர் எனது புகைப்படக் கருவிக்குள் அக்காட்சியை பதிவு செய்து கொண்டார்.

இங்கிருந்து சிறிது தூரம் சென்றதும் பாதையில் ஓர் வளைவு காணப்பட்டது. இவ்விடத்தில் ஒரு உயரமான மலைப்பாறை தென்பட்டது. இங்கு பாறையின் கீழே இருந்த மரத்தடியில் ஓர் புற்று வளர்ந்திருந்தது. இவ்விடம் நாகதம்பிரான் குடியிருந்த இடம் போன்று காணப்பட்டது. பண்டைய காலத்தில் இப்பாதையில் நடந்து சென்ற பாதயாத்திரீகர்கள் காட்டிலுள்ள விஷ ஜந்துக்களின் மூலம் தீங்கு ஏற்படக்கூடாது என வேண்டி இவ்விடத்தில் நாகதம்பிரானை வணங்கிச் சென்றுள்ளனர் என்பது இச்சூழலை பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது.

**யாகக்கல் களப்பு (யாக்கல களப்பு)**

நாகதம்பிரான் மரத்தடிக் கோயிலிலிருந்து 15 நிமிட நடையின் பின் மீண்டும் ஓர் வெட்டவெளி காணப்பட்டது. இது யாக்கல களப்பு என அழைக்கப்பட்டது. இத்திக்கல் களப்பிலிருந்து ஒன்றரை கி.மீ தொலைவில் இக்களப்பு அமைந்துள்ளது.

குமன பறவைகள் சரணாலயத்தில் வாகூர களப்பிற்கு அடுத்த படியாக அளவில் பெரியது யாகக்கல் களப்பேயாகும். இக்களப்பு சுமார் 600 மீற்றர் அகலமும் 700 மீற்றர் நீளமும் கொண்டதாகும். ஏனைய களப்புகள், குளங்கள் ஆகியவற்றை விட அதிகளவு நீர் இக்களப்பில் காணப்படுகிறது. களப்பு நீர் கடலில் சங்கமிக்கும் முகத்துவாரம் தூரத்தில் தெரிந்தது.

கூமுனை சரணாலயத்தில் அதிகளவான பறவைகளை காணக்கூடிய இடங்களில் இதுவும் ஒன்று. தூரத்தில் தெரிந்த களப்பு நீரில் சுமார் 200 க்கும் அதிகமான பெலிகன் என்றழைக்கப்படும் கூழைக்கடா பறவைகள் வரிசையாக நீந்திக் கொண்டிருந்தன. அவை நீந்தும் அழகிய காட்சி எனது புகைப்படக் கருவிக்குள் சட்டென்று பதிவானது.



யாகக்கல் களப்பு

யாக்கல களப்பிற்கு யாகக்கல் களப்பு என்ற பெயரும் உள்ளதாக முதிய யாத்திரீகர்கள் கூறினர். மிகப்பண்டைய காலத்தில் இப்பகுதியில் தங்கியிருந்த முனிவர்கள் இங்கிருந்த மலைப்பாறையில் யாகம் செய்ததாகவும் இதனால் அக்கற்பாறை யாகக்கல் என அழைக்கப்பட்டதாகவும், அதனருகில் இருந்த களப்பு யாகக்கல் களப்பு எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

இவ்விடத்திற்கு யாக்கல என்ற பெயர் வருவதற்கு முக்கிய வேறு காரணமொன்றும் உள்ளது. இராம இராவண யுத்தத்தின் பின் இலங்கையை விபீஷனன் ஆட்சி செய்த காலத்தில் யாக்கயவற்கியன் எனும் முனிவர் கோசல நாட்டிலிருந்து கதிர்காமத்திற்கு தலயாத்திரை வந்ததாகவும், அம்முனிவர் இக்களப்பை அண்மித்த பகுதியில் தங்கியிருந்ததாகவும், அவரின் பெயரில் அவர் தங்கியிருந்த மலை யாக்கய மலை என அழைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

அம்மலையின் அருகில் இருந்த களப்பு யாக்கய மலை களப்பு எனவும், காலப்போக்கில் யாக்கல களப்பு எனவும் திரிபடைந்ததாக தெரிய வருகிறது. யாக்கய முனிவர் தங்கியிருந்த மலைக்குன்று இக்களப்பின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ளதாக கூறப்படுகின்றது. இங்கும் சித்தர்களும், முனிவர்களும் தங்கியிருந்த சில குகைகைள் காணப்படுகின்றன. யாக்கய முனிவர் சீதையின் தந்தையான ஜனகமகாராஜாவிற்கு உபதேசம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாகக்கல் களப்பு அழகாகக் காட்சியளிக்கும் காலம் ஒக்டோபர் மாதமாகும். இக்காலத்தில் இங்கு நிரம்பியிருக்கும் நீரின் மீது பறவைகள் புரியும் ஜாலம் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்காலத்தில் உள்ளான், பெருஞ்சொண்டு ஆலா, உப்புக்கொத்தி, வெண்கொக்கு ஆகிய பறவைகள் களப்பு நீரில் மீன் பிடித்துக் கொண்டும், நீரில் நீந்தி விளையாடிக் கொண்டும், நீரின் மேலே பறந்து கொண்டும், கரையில் வந்து இரைதேடிக் கொண்டும் இருக்கும் காட்சி இக்களப்பிற்கு மிகுந்த அழகைக் கொடுக்கிறது. அச்சமயம் திடீரென்று எங்கிருந்தோ ஆயிரக்கணக்கில் பறந்து வந்து களப்பு நீரையெல்லாம் ஆக்கிரமித்துக் கொள்ளும் பூநாரைக் கூட்டத்தை பார்த்து ரசிக்க கண்கோடி வேண்டும். மேலே வானமும், கீழே களப்பு நீரும் நீலநிறமாகவும்,இரண்டுக்கும் இடையில் காடு பச்சை நிறமாகவும், அதற்கும் கீழே பூநாரைகள் கூட்டம் இளஞ்சிவப்பு நிறமாகவும் தோன்றும் காட்சி அழகோ அழகு.

ஆனால் நாம் யாத்திரை செல்லும் ஆகஸ்ட் மாதத்தில் இக்களப்பில் வெண்கொக்குகளும், கூழைக்கடாக்களுமே அதிகளவில் காணப்படும். யாகக்கல் களப்பில் ஏனைய களப்புகளை விட எப்பொழுதும் அதிகளவில் நீர் காணப்படும். இதற்குக் காரணம் இக்களப்பு கடலுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதினாலேயே ஆகும். கடலில் அலை வேகமாக அடிக்கும் நேரம் கடல் நீர் களப்புக்கும், கடலுக்கும் இடையில் உள்ள சிறிய மணல் தடையையும் தாண்டி களப்பில் கலந்து விடுகிறது. இதன் காரணமாக எப்பொழுதும் யாக்கல களப்பில் நீர் அதிகளவில் காணப்படும். மேலும் யாக்கல களப்பு ஏனைய நீர் நிலைகளை விட சற்று பள்ளமான இடத்தில் அமைந்திருப்பதும் இங்கு அதிகளவில் நீர் நிரம்பியிருப்பதற்கு காரணமாகும். இக்களப்பின் வடக்கிலுள்ள

இத்திக்கல் களப்பின் மேலதிக நீரும் யாக்கல களப்பிற்கு வருகிறது. மற்றும் களப்பின் வடமேற்கிலும், மேற்குப்பகுதியிலும் இருந்து ஓடிவரும் இரு சிற்றாறுகள் யாக்கல களப்பில் சங்கமமாகின்றன.

**பறவைக்குளம் (குமண வில்லு)**

யாகக்கல் களப்பை அடுத்து தெற்கு நோக்கி கும்புக்கன் ஆற்றுக்கு செல்லும் வழியில் இருபக்கங்களிலும் சுமார் 2 கி.மீ. தூரத்திற்கு அடர்ந்த காடு காணப்படுகின்றது. இவ்வழியே சிறிது தூரம் சென்றதும் எம்முடன் வந்த அவுஸ்திரேலிய சுவாமி பாயை விரித்து அதில் உட்கார்ந்திருந்த வண்ணம் தனியாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவரின் புன்முருவல் முகத்தில் எந்தவித சோர்வோ, களைப்போ தெரியவில்லை. சற்று தூரம் சென்றதும் பாதையின் இரு பக்கங்களிலும் மரங்களின் கீழ் ஆங்காங்கே பலர் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் மத்தியில் ஓர் இளைஞன் 6 அடி உயரமான பித்தளை வேல் ஒன்றை கையில் பிடித்த வண்ணம் அமர்ந்திருந்தான். நேர்த்திக்கடன் செலுத்துமுகமாக அந்த வேலை அவ்விளைஞன் கொண்டு வருகிறான்.

சுமார் 30 நிமிட நடைப்பயணத்தின் பின் பாதையின் இருபக்கங்களிலும் சிறிய வெட்டவெளி தெரிந்தது. அதை அடுத்து நீல நிறத்தில் ஓர் நீர்ப்பரப்பை காணக்கூடியதாக இருந்தது. நாம் பறவைக் குளத்தை நெருங்கி விட்டோம் என யாத்திரீகர்கள் கூறினர். ஓரிரு நிமிடத்தில் பச்சை நீர்த்தாவரங்களும், சிறிய மரங்களும், கடும் நீல நிற நீரும் நிறைந்த ஓர் காட்டுக் குளத்தைக் கண்டோம். இது தான் நாம் ஆவலுடன் எதிர்பார்த்து வந்த பறவைக் குளமாகும். இது குமண வில்லுக்குளம் என அழைக்கப்படுகிறது. காலை 8.15க்கு நாம் இக்குளத்தை அடைந்தோம். யாக்கல களப்பிலிருந்து 2 கி.மீ தூரத்தில் இக்குளம் அமைந்துள்ளது.

கி.பி. 1ம் நூற்றாண்டு முதல் தென்கிழக்கிலங்கையில் உன்னரசுகிரி எனும் இராச்சியம் அமைந்திருந்தது பற்றி மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இந்த இராச்சியம் கந்தக் கடவுளின் புனித பூமியிலேயே அமைந்திருந்தது. கி.பி. 3ம் நூற்றாண்டில் உன்னரசு கிரி இராச்சியத்தை சிங்க குமாரன் எனும் மன்னன் ஆட்சி செய்து வந்ததாகவும், இம்மன்னன் உகந்தை மலையில் ஆலயம் அமைக்கும் பொருட்டு நெற்காணிகளை திருத்தி குமுக்கலை ஆற்றில்

இருந்து வாய்க்கால் வெட்டி மூன்று குளங்களைக் கட்டி உகந்தை ஆலயத் திருப்பணிகளுக்கு கொடுத்தான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.



பறவைக் குளம்

பறவைக்குளம் எனும் கூமுனை வில்லுக்குளத்திற்கு கும்புக்கன் ஆற்றிலிருந்து ஒரு வாய்க்கால் மூலமே நீர் கிடைக்கிறது. எனவே கி.பி 3ம் நூற்றாண்டில் சிங்க குமாரன் கட்டிய குளங்களில் ஒன்று இந்த பறவைக்குளம் என்பதில் ஐயமில்லை. பண்டைய காலத்தில் இப்பகுதியிலிருந்த நெல் வயல்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கிய முக்கிய குளங்களில் இதுவும் ஒன்றாகும். சுமார் 150 வருடங்களுக்கு முன்பும் கூட கூமுனை கிராமத்திலிருந்த மக்கள் இக்குளத்தின் தென்பகுதியில் வயல் காணிகளை அமைத்து குளத்தின் மூலம் நீர்ப்பாய்ச்சி விவசாயம் செய்தனர்.

இத்தனை பண்டைய சிறப்பைக் கொண்ட பறவைக்குளம் எனும் கூமுனை வில்லுக் குளம் இன்று புற்களும், மரங்களும், வளர்ந்து பறவைகளின் உறைவிடமாகக் காட்சிதருகிறது. இலங்கையில் பறவைகள் வாழும் இடங்களில் பெயர் போன இடமாக இது விளங்குகிறது. இங்கு வருடம் முழுவதும் பல்வேறு வகையான பறவைகள் வந்து செல்வதாலும், எந்நேரமும் பறவைகளை இக்குளத்தில் காணக்கூடியதாக இருப்பதாலும் இது பறவைக்குளம்

என அழைக்கப்படுகிறது. இக்குளத்திற்கு சுமார் 250 பறவையி-னங்கள் வந்து செல்வதாகவும், ஆண்டுதோறும் சுமார் 10,000 பறவைகள் இங்கு வருவதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

ஒவ்வாரு வருடமும் ஏப்ரல் முதல் ஜூலை வரையான காலப்பகுதியில் அதிகமான பறவைகள் பறவைக்குளத்திற்கு வந்து செல்கின்றன. மிக அரிதாக காணக்கூடிய பறவைகளான கருங்கழுத்துக் கொக்கு, மேவா கொக்கு, கரண்டி வாயான், முசல் கொழுந்து ஆகியவை பறவைக் குளத்தில் அடிக்கடி காணக்கூடிய பறவைகளாகும். நீர் ஆந்தை, உள்ளான், உப்புக் கொத்தி ஆகிய பறவைகளும் இங்கு வந்து செல்கின்றன. இவற்றை தவிர நத்தைகுத்தி நாரை, பெருங்கொக்கு, அரிவால் மூக்கன், குருட்டுக் கொக்கு, இராக் கொக்கு, செந்நாரை, வெண்கொக்கு, கொண்டை நீர்க்காகம், சின்ன நீர்க்காகம், தாழைக்கோழி, நீர்க்கோழி, கம்புள் கோழி, நீளவால் தாழைக் கோழி, முக்குளிப்பான், சீழ்க்கை வாத்து, நெடுங்கால் உள்ளான், நீல தாழைக் கோழி ஆகிய நீர்ப்பறவைகள் இப்பறவைக் குளத்திற்கு பெருங்கூட்டமாக வந்து செல்கின்றன. இவற்றில் கருங்கழுத்துக் கொக்கு மிகவும் அருகி வரும் பறவை இனமாகும்.

மேலும் பச்சைப்புறா, துடுப்பு வால் கரிச்சன், தீக்காகம், செவ்வாயன், கற்பொறுக்கி, கல்திருப்பி உள்ளான், பட்டாணி உப்புக் கொத்தி, சின்ன பச்சைக்காலி, பவளக்காலி, கொசு உள்ளான், பாம்புத்தாரா, மஞ்சல் மூக்கு நாரை, வெள்ளை அரிவாள் மூக்கன், பருத்த அலகு ஆலா ஆகிய பறவைகளும் இங்கு வந்து செல்கின்றன. பறவைக்குளத்திற்கு வந்து செல்லும் முக்கிய மூன்று பறவையினங்கள் உள்ளன. நீண்ட பெரிய அலகும், பருத்த உடலும் கொண்ட புள்ளியலகு கூழைக்கிடா பறவைகள் இப்பறவைக்குளத்தை அழகுபடுத்தும் பறவை இனமாகும். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கூட்டமாக வரும் இவை குளத்திலுள்ள கிண்ணை மரங்களிலே கூடு கட்டி முட்டையிடுகின்றன. மேலும் செந்நாரை, மஞ்சல் மூக்கு நாரை, சின்ன நீர்க்காகம், சாம்பல் நாரை, கரண்டிவாயான், அரிவாள் மூக்கன், இராக் கொக்கு ஆகிய பறவைகளும் குளத்திலுள்ள மரங்களிலும் பற்றைகளிலும் கூடு கட்டி முட்டையிடுகின்றன. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலேயே அதிகமான குஞ்சுகள் வெளிவருகின்றன. கதிர்காம பாத யாத்திரை செல்லும் காலமும் இதுவே. இக்காலங்களில் பறவைக் குளத்தில் அதிகமான குஞ்சுக-

ளின் சத்தத்தைக் கேட்கலாம். பறவைக் குளத்திற்கு மிகமிக அரிதாக வந்து செல்லும் ஓர் பறவையினம் உள்ளது. அது சிவப்பு முக குயில் எனும் அழகிய பறவையாகும்.

பறவைக்குளத்தை அழகுபடுத்தும் மேலும் ஒரு பறவையினம் உள்ளது. அவை இளஞ்சிவப்பு நிறத்தில் கூட்டமாக வந்து குளத்தை அலங்கரிக்கும் பூநாரைகளாகும். இங்கு வரும் அரிதான பறவை ஊசி வால் குருவிகளாகும். அவை சோவியத் ரஷ்யாவில் உள்ள சைபீரியா பகுதியிலிருந்து வருடந்தோறும் சுமார் 11,000 கி.மீ தூரம் பறந்து பறவைக்குளத்தை வந்தடைகின்றன. இப்பறவைகளுக்கெல்லாம் புகலிடமாக விளங்குவது குளத்தில் அதிகளவில் வளர்ந்து காணப்படும் கிண்ணை மரங்களும், சாப்பைப் புல் பற்றைகளுமாகும். இவை தவிர கொட்டி, முயல்கதிலை, நீர்த்தொட்டா சிங்கி, சூரல் செடிகள், பன்னம், சல்வீனியா ஆகிய நீர்த் தாவரங்கள் இக்குளத்தில் நிறைந்து காணப்படுகின்றன. பறவைக்குளத்தை மிக்க அழகுபடுத்தும் வெண்தாமரை பூக்களும், சிவப்பு அல்லிப் பூக்களும் குளம் முழுவதும் நிறைந்து தோற்றமளிப்பது கண்ணைக் கவரும் காட்சியாகும். பண்டைய காலத்தில் நெல் வயல்களுக்கு நீர்ப்பாசனம் வழங்கிய கூமுனை வில்லுக் குளம் இன்று பறவைக் குளமாக மாறி ஏராளமான பறவைகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் சரணாலயமாக விளங்குகிறது.



சைபீரியாவிலிருந்து பறவைக்குளத்திற்கு வரும் ஊசி வால் குருவி

"குமன வில்லு" என அழைக்கப்படும் பறவைக்குளம் வெப்பமண்டல சதுப்பு நில படர் தாவரங்கள் நிறைந்த உலகப் பிரசித்தி பெற்ற வில்லுக்குளமாகும். சுமார் 450 ஏக்கர் பரப்பளவை கொண்ட இக்குளத்திற்கு கும்புக்கன் ஆற்றிலிருந்து வெட்டப்பட்ட 600 மீற்றர் நீளமான கால்வாய் மூலம் நீர் கிடைக்கிறது. பறவைக் குளத்தில் பறவைகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் கிண்ணை மரங்கள் பற்றிய அறிவித்தல் பலகையொன்றையும் குளக்கரையில் பாதையின் ஓரத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இத்தனை சிறப்பும் அழகும் கொண்ட பறவைக்குளத்தை நாம் அடைந்த போது அங்குள்ள மரங்களின் கீழ் யாத்திரீகர்கள் பலர் அமர்ந்திருந்தனர். குளத்தின் ஓரமாக இருந்த மரங்களின் கீழ் சிலர் படுத்துக் கொண்டு காற்று வாங்கிக் கொண்டிருந்தனர். பாதையில் இருந்து குளத்தின் இடது பக்கமாக ஓர் ஒற்றையடிப்பாதை பிரிந்து செல்கிறது. அப்பாதை வழியே யாத்திரீகர்கள் சிலர் சென்று சற்று தூரத்தில் குளக்கரையில் உள்ள ஓர் மரத்தின் கீழ் அமர்ந்து காற்று வாங்கிக் கொண்டிருந்தனர். இந்த ஒற்றையடிப்பாதை கடற்கரை வரை செல்கிறது. பறவைக் குளத்தின் கிழக்குப் பக்கமாக குளத்திலிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் கடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பாதயாத்திரிகர்களுக்கு அன்னதானமாக காலை உணவு வழங்கப்படுகிறது

காலையில் நாம் நடந்து வந்து கொண்டிருந்த போது அந்தரி கல் களப்பில் எம்மைக் கடந்து சென்ற அம்புலன்ஸ் வண்டி பறவைக் குளக்கரையில் நின்று கொண்டிருந்தது. அவ்வண்டியிலிருந்து பாத யாத்திரீகர்களுக்கு காலை உணவு பரிமாறிக் கொண்டிருந்தனர். நாங்களும் அவ்விடத்திற்குச் சென்று காலை உணவைப் பெற்றுக் கொண்டோம். ஒவ்வொருவருக்கும் மரக்கறி பாணும், ஆனைவாழைப்பழமும் வழங்கப்பட்டது. அம்புலன்ஸ் வண்டியில் "ஆதார வைத்திய சாலை - தமன" என எழுதப்பட்டிருந்தது. தமனைப்பகுதியில் உள்ள மக்கள் வழங்கிய அன்னதானம் இது. காலை முதல் பசியோடு வந்த எமக்கு இந்த உணவு நல்ல உற்சாகத்-தைக் கொடுத்தது. இந்தக் காட்டின் மத்தியிலே அவர்கள் வழங்கிய இச்சிற்றூண்டி தானம் மிகப்பெரிய புண்ணிய காரியமாகும்.

குளக்கரை ஓரத்தில் அமர்ந்து உணவை உண்டவண்ணமே பறவைக்குளத்தின் அழகை ரசித்துக் கொண்டிருந்தோம். குளம் முழுவதும் ஆயிரக் கணக்கில் வெண்தாமரை மொட்டுகளும், பூக்களுமாக நிறைந்து காணப்பட்டன. கரையோரத்திலே சல்வீ-னியா கொடிகளும், குளத்தின் மத்தியில் சாப்பைப் புற்களும் அவற்றை அடுத்து கிண்ணை மரங்களும் நிறைந்து காணப்பட்டன. இம்மரங்களிலே ஏராளமான பறவைக் கூடுகளும், அவற்றிடையே கூழைக்கடா, மஞ்சள் மூக்கு நாரை, நீர்க்காகம், வெண்கொக்கு, ஆகிய பறவைகளும் நிறைந்து காணப்பட்டன. அவை அங்குமிங்கும் பறந்த வண்ணமும், குஞ்சுகளுக்கு இரை கொடுத்த வண்ணமும் இருந்தன. பறவைகளினதும், அவற்றின் குஞ்சுகளினதும் இரை-ச்சலும், சத்தங்களும் கேட்டுக்கொண்டிருந்தன. குளத்தில் பச்சை நீர்த்தாவரங்களுக்கு இடையிடையே நீல நிறத்தில் நீர் பரவிக் காணப்பட்டது. தூரத்திலே தென்னை மரத்தோப்பொன்று காணப்-படுகிறது. அதுவே முன்பு இங்கிருந்த கூமுனைக் கிராமமாகும்.


பறவைகளின் கீச்சொலிகளோடு, கிண்ணை மரங்களையும், சாப்பை புற்களையும், வெண்தாமரைப் பூக்களையும், நீல நிற நீர்ப்பரப்பையும் தழுவிக் கொண்டு வந்த தென்றல் காற்று எமது உடலையும் இலேசாக தடவிச் சென்ற போது நாம் அனுபவிக்கும் இன்பம் எங்குமே கிடைக்காத புதுசுகமாகும். இந்த இன்பத்தை விட்டுப்பிரிய மனமில்லாமல் அனைவரும் குளக்கரையில் அமர்ந்தும், படுத்தும் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக

இருந்தது. கடினமான புனித பாதயாத்திரையில் நாம் அவ்வப்போது அனுபவிக்கும் சுகங்களில் இதுவும் ஒன்றாகும்.

**பறவைக்குளம் - புளியமரத்தடிக் கோயில்**

பறவைக்குளத்தின் வடக்கு கரையோரத்தில் பாதையின் வலது பக்கத்தில் யாத்திரீகர்கள் அமர்ந்திருந்த இடத்தில் பெரிய புளியமரமொன்று காணப்படுகிறது. எமது யாத்திரைக் குழுவினர் கொண்டு வந்த முருகனின் வேலாயுதங்கள் எல்லாம் இப்புளிய மரத்தின் அடியிலேயே வைக்கப்பட்டிருந்தன. பறவைக் குளத்தின் கரையில் காணப்படும் மரங்களில் இப்புளிய மரமே ஓங்கி வளர்ந்து பெரியதாகக் காணப்பட்டது.

இக்குளக்கரையும், மரத்தின் அமைப்பும் பண்டைய காலத்தில் இவ்விடத்தில் ஓர் மரத்தடிக்கோயில் அமைந்திருந்த சூழலாகத் தெரிந்தன. முதிய யாத்திரீகர்கள் பலரும் இம்மரத்தடியில் பண்டைய காலம் முதல் தாம் கொண்டு வரும் முருக வேலை வைத்து வணங்கிச் செல்வதாகக் கூறினர்.



பறவைக் குளம் புளிய மரத்தடி கோயில்

பண்டைய அரசர்கள் குளங்களை அமைத்த பின்பு அக்குளத்திற்கு காவலாக ஐயனார், வைரவர், விநாயகர் போன்ற தெய்வங்களை குளக்கரையில் ஸ்தாபித்து அவற்றைப் பூஜித்து வருவது வழக்கமாக இருந்தது. அதுபோல் கும்புக்கன் ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்டி இக்குளத்தில் நீரை நிரப்பி விவசாயத்தை மேற்கொண்ட உன்னரசுகிரி மன்னனான சிங்ககுமாரன் குளக்கரையில் ஓர் தெய்வத்தை ஸ்தாபித்திருப்பான். அதன்படி கூமுனைக் குளத்தின் கரையில் இம்மரத்தடியின் கீழ் ஐயனாரை ஸ்தாபித்து வழிபட்டிருப்பான் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் இப்பகுதியில் அதிகமாக யானைகள் நடமாடுவதால் ஐயனார் அல்லது விநாயகர் ஆகிய தெய்வங்களின் கோயில் இருந்திருக்கும் என நம்பப்படுகிறது. அன்றுமுதல் ஆண்டு தோறும் பாத யாத்திரை வரும் பக்தர்களால் அக்கோயில் வழிபடப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை. இங்கிருந்து வடமேற்குப் பக்கமாக சுமார் 2 கி.மீ தூரத்தில் அமைந்திருக்கும் போக சித்தர் மலையில் ஓர் பண்டைய ஆலயம் இருந்தமைக்கான எச்சங்கள் காணப்படுகின்றன. அங்கு கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்கள் பயன்படுத்திய கற்குகைகள் காணப்படுகின்றன. எனவே அங்கிருந்த ஆலயத்திற்கும் பறவைக் குளத்தினருகிலிருந்த மரத்தடிக் கோயிலுக்கும் தொடர்பிருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

**கூமுனைக் குளம்**

பறவைக் குளத்தின் வடமேற்கில் 2 கி.மீ தூரத்தில் கூமுனைக் குளம் அமைந்துள்ளது. மகாசேனனின் மகனான சிங்ககுமாரன் எனும் இளவரசன் ஆடகசவுந்தரிக்குப்பின் உன்னரசுகிரி இராச்சியத்தை ஆண்டபோது உகந்தைக் கோயிலை கட்டி முடிப்பதற்காக கட்டிய மூன்று குளங்களில் கூமுனைக்குளமும் ஒன்றாகும். பறவைக்குளமும், வம்மிக்குளமும் ஏனைய இரு குளங்களாகும். கூமுனைக் குளத்திற்கும் வம்மிக் குளத்திற்கும் இடையில் எரமினியன் குளமும், அளுத்கம வெவ எனும் புதுக்குளமும் அமைந்துள்ளன. இவை பிற்காலத்தில் கட்டப்பட்ட குளங்களாகும். இக்குளங்களில் வம்மிக்குளத்தை தவிர ஏனைய 4 குளங்களுக்கும் கும்புக்கன் ஆற்றிலிருந்தே நீர் கிடைக்கப் பெறுகிறது.

கூமுனைக் குளத்திலிருந்து 1 கி.மீ வடமேற்கில் எரமினியன் குளமும், இங்கிருந்து 1 கி.மீ வடமேற்கில் புதுக்குளமும் இதிலிருந்து

3 கி.மீ வடமேற்கில் வம்மிக் குளமும் அமைந்துள்ளன. இக்குளங்கள் யாவும் கும்புக்கன் ஆற்றின் கிழக்குப்பக்கத்தில் அமைந்துள்ளன. மொத்தமாக பறவைக்குளம் அடங்கலாக 5 குளங்கள் கும்புக்கன் ஆற்றின் கிழக்குப்பக்கத்தில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. வம்மிக்குளத்தின் வடமேற்கில் சுமார் 2 கி.மீ தூரத்தில் கும்புக்கன் ஆற்றுடன் கடைசியாக இணையும் அலகொல ஆற்றிலிருந்து ஓர் கால்வாய் மூலம் வம்மிக்குளத்திற்கு நீர் கிடைக்கிறது. கூமுனைக்குளம் சுமார் 300 ஏக்கர் பரப்பளவை உடையதாகும். இக்குளத்தின் வடக்கில் சுமார் 50 மீற்றர் தூரத்தில் போவத்தகல எனும் போக சித்தர் மலை அமைந்துள்ளது. குளத்தின் கிழக்குப் பக்கத்தில் "சிங்கன் கல்கே" என்னுமிடம் உள்ளது. இங்கு புராதன ஆலயம் ஒன்றின் எச்சங்கள் காணப்படுகின்றன.



கூமுனைக் குளம்

கூமுனைக் குளத்திற்கு "மஹாகல் அமுன" என்றழைக்கப்படும் பெரிய கல் அணையிலிருந்து கால்வாய் மூலம் நீர் கிடைக்கப் பெறுகிறது. கும்புக்கன் ஆற்றின் குறுக்கே பாராங்கற்கள் வரிசையாகப் போடப்பட்டு அதன் மூலம் ஆற்று நீரைத் தேக்கி கிழக்குப் பக்கமாக ஓர் கால்வாயை வெட்டி ஆற்று நீர் திசை திருப்பப்பட்டு குளத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. கூமுனை மடத்துறை அம்மன் கோயிலின் வடமேற்குப் பக்கமாக கும்புக்கன் ஆற்றங்கரையில் சுமார் 4 கி.மீ தூரம் சென்றதும் மஹாகல் அமுன எனும் பெரிய கல்

அணையைக் காணலாம். சிதைந்த நிலையில் உடைந்து காணப்படும் இவ்வணையின் கிழக்குப்பக்கம் ஓடும் கால்வாய் ஓரமாக சுமார் 2 கி. மீ தூரம் சென்றால் கூமுனைக் குளத்தை அடையலாம். மஹாகல் அமுன அணையின் வடமேற்கில் சிறிது தூரத்தில் குடாகல் அமுன எனும் சிறிய கல் அணை காணப்படுகிறது.

கூமுனைக் குளத்தின் மேற்குப்பகுதி முழுவதும் வெண்தாமரைக் கொடிகளும், பூக்களும் நிறைந்து காணப்படுகின்றன. குளத்தின் மத்தியில் அழகிய நீண்ட கற்பாறையும், அதன் அருகில் ஓர் சிறிய பாறையின் மேல் உருண்டையான கற்பாறையும் வெண்மை நிறத்தில் காணப்படுகின்றன. இப்பாறைகள் கருங்கற்பாறையாக இருந்த போதும் பறவைகளின் எச்சங்களின் மூலம் வெள்ளை நிறமாகக் காணப்படுகின்றன. இவ்வழகிய பாறைகள் மீது பறவைகளும், முதலைகளும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் காட்சியை எப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது.

முன்பு கூமுனைக் கிராமத்தில் மக்கள் வசித்த காலத்தில் அவர்கள் குளிப்பதற்கு இக்குளத்தையே பயன்படுத்தியதாக தெரிய வருகிறது. ஏனெனில் இக்குளத்தின் நீர் மிகவும் தெளிந்த சுத்தமான நீராகக் காணப்படுகிறது. கூமுனைக் கிராம மக்கள் இக்குளத்தில் மீன் பிடிப்பதோடு தாமரை கொடித் தண்டுகளையும் பறித்து உணவுக்கு பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறு மக்கள் பயன்படுத்திய கூமுனைக்குளம் இன்று வன விலங்குகளினதும், பறவைகள் மற்றும் முதலைகளினதும் பிரதேசமாக காணப்படுகிறது.

### போவத்த கல் (போக சித்தர் மலை) - குமன

பறவைக் குளத்தில் வடமேற்கில் குமன குளத்தின் வடக்குத் திசையில் ஒரு கி.மீ தூரத்தில் போவத்த கல் மலை காணப்படுகிறது. போவத்தகல் மலைக்கு செல்ல இன்னுமோர் வழியும் உள்ளது. குமன கிராமத்தின் தெற்குப்பக்கம் ஒரு கி.மீ தூரத்தில் ஓடும் கும்புக்கன் ஆற்றங்கரையில் உள்ள சின்னக்கபிலித்தை காளி கோயிலில் இருந்து கும்புக்கன் ஓயா ஆற்றின் வலது கரையோரமாக சென்றதும் “மஹாகல் அமுன” என்றழைக்கப்படும் கல் அணைக்கட்டு காணப்படுகிறது. இங்கிருந்து 2 கி.மீ தூரம் சென்றால் குமன குளத்தை அடையலாம். அங்கிருந்து சிறிது தூரத்தில் போவத்தகல் மலை காணப்படுகிறது.

கும்புக்கன் ஆற்றின் மூலம் புராதன காலத்தில் அமைக்கப்பட்ட பல குளங்களுக்கு நீர் கிடைக்கப்பெற்றது. இதுபோன்ற 81 குளங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் ஒன்றே கூமுனைக் குளமாகும். புராதன காலத்தில் இப்பகுதியில் பெருமளவில் திராவிட மக்கள் வாழ்ந்திருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ள போவத்தகல் மலைக்குன்றில் பல குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் தெரிகின்றன. இவற்றில் தமிழ் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மலைப்பாறை மீதும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இம் மலைக் குன்றில் வழிபாட்டிற்குரிய கட்டிடங்கள் அமைந்திருந்தமைக்கான இடிபாட்டு எச்சங்கள் சில காணப்படுகின்றன.

போவத்தகல் மலையின் பழைய பெயர் போகசித்தர் மலை என்பதாகும். கி.பி 2 ம் நூற்றாண்டில் உகந்தை வழியாக கதிர்காமத்திற்கு பாத யாத்திரையாக வந்த போக சித்தர் இம்மலையில் தங்கிச் சென்றதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக இம்மலை போகசித்தர் மலை என பெயர் பெற்றது. இதுவே காலப்போக்கில் மருவி போசித்த மலை எனவும், பின்பு போவத்த மலை என்றும் அழைக்கப்பட்டு தற்போது போவத்தகல என பெயர் பெற்றுள்ளது. இங்கு அரச மரங்கள் பல இருந்ததாகவும் எனவே இது போவத்தகல என சிங்கள மொழியில் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கதிர்காம சத்திரிய மன்னர்கள் இப்பகுதியில் ஆட்சி செய்த காலத்தில் அனுராதபுரத்திலிருந்து தேவநம்பிய தீசனால் கொடுக்கப்பட்ட வெள்ளரசு மரக்கிளை இங்குதான் நடப்பட்டதாகவும், அதனால் இவ்விடம் போவத்தகல என பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆனால் கதிர்காம சத்திரியர்கள் அனுராதபுரத்தில் இருந்து கொண்டு வந்து நட்ட வெள்ளரசு மரம் கதிர்காமத்தில் முருகன் கோயிலின் பின்பக்கம் காணப்படும் மரமாகும். “அஸ்ட போதி” என அழைக்கப்படும் 8 போதிமர கிளைகள் 8 இடங்களில் நடப்பட்டன. அவற்றில் ஓர் இடம் கஜரகம எனும் இன்றைய கதிர்காமமாகும். எனவே போதி மரம் நடப்பட்டதால் போவத்தகல எனும் பெயர் உருவானது எனும் கருத்தை ஏற்க முடியாதுள்ளது. மேலும் போவத்தகல மலைப்பகுதியில் போதிமரம் இருந்ததற்கான

அடையாளங்கள் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே போவத்தகல என்பது “போகசித்தர் மலை” என்பதன் திரிபே ஆகும். போகசித்தர் இவ்வழியாக வந்தமையை பாணமையிலுள்ள சாஸ்திராவெளி பிராமிக் கல்வெட்டும் உறுதி செய்கிறது. போக சித்தரால் கி.பி. 2ம் நூற்றாண்டில் இம்மலையில் முருகனுக்கோர் ஆலயம் அமைக்கப்பட்டு இங்கு முருக வழிபாடு சிறப்புற்று விளங்கியிருக்கும் என நம்பப்படுகிறது.

கி.மு. 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் கதிர்காம இராச்சியத்தை ஆட்சி செய்த 10 பாண்டிய சத்திரிய மன்னர்களின் முக்கிய இடமாக போவத்தகல மலை விளங்குகின்றது. இச் சத்திரிய மன்னர்கள் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள் இம்மலையில் காணப்படுகின்றன. அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள கிரிந்த முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் குசலான மலை வரையும் மற்றும் மொனராகலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய-வையும் இக்கதிர்காம சத்திரியர்களின் ஆட்சியின் கீழ் “கஜரகம இராச்சியம்” என அழைக்கப்பட்டது.

கஜரகம இராச்சியத்தின் சத்திரிய மன்னர்களை தேவநம்பிய தீசன் வெள்ளரசு மரக்கிளை நடும் விழாவிற்கு அழைத்திருந்தமை பற்றிய தகவல்கள் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளன. இவர்கள் அனுராதபுரத்தில் நிகழ்ந்த இவ்விழாவில் பங்கு கொண்டு திரும்பிய போது வெள்ளரசு மரக்கிளை ஒன்றையும் கொண்டு வந்து தமது இராச்சியத்தில் நட்டனர் என வரலாற்று குறிப்புக்கள் கூறுகின்றன.

இதன்படி பாண்டிய இந்து தமிழ் மன்னர்களான கதிர்காம சத்திரியர்கள் இந்து சமயத்தை வளர்த்ததோடு பௌத்த சமயத்-திற்கும் ஆதரவாக இருந்துள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இதன் காரணமாகவே இச்சத்திரிய மன்னர்களின் தந்தையான கமணி தீசன் தேவநம்பிய கமணிதீசன் எனப்பெயர் பெற்றுள்ளான். இராசமலைக் கல்வெட்டுக்கள் (ரஜகல) இதை உறுதி செய்கின்றன. இவர்கள் தொடர்பான மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் போவத்த-கல் மலையில் பொறிக்கப்பட்டுள்ளன.

போவத்தகல மலையில் உள்ள கற்குகைகளில் காணப்படும் ஏழு கல் வெட்டுக்களில் 3 கல்வெட்டுக்கள் இப்பகுதியை ஆட்சி செய்த கதிர்காம சத்திரியர்கள் தொடர்பானவையாகும். இக்கல்

வெட்டுக்கள் மூன்றிலும் சுவஸ்திகா சின்னங்களும், இரண்டில் மீன் சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

இவை தவிர போவத்தகல் மலையில் பிராமி எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள 4 பாறைக்கல் வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவை நான்கும் நன்றாக சேதமடைந்துள்ளன. இவற்றில் சில எழுத்துக்களே வாசிக்கக் கூடியதாக உள்ளன. இதில் ஒரு கல்வெட்டில் "நக அமெதி" எனக் காணப்படுகிறது. இது நாக அமைச்சர் எனப் பொருள்படும். இதன் மூலம் இங்கு நாக வழிபாடு செய்த அமைச்சர் இருந்தமை புலப்படுகிறது. இன்னுமோர் கல்வெட்டில் "ஜெடதிச மஹரஜ" எனவும் அடுத்ததில் "மஹசென மஹரஜ அபய" எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இது மகாசேன மகாராஜன் அபயன் எனப் பொருள்படுகிறது. மகாசேனன் என்பது முருகனைக் குறிக்கும் பெயராகும். எனவே மகாசேனன் எனும் முருகனை வழிபட்ட அபயன் எனும் மகாராஜன் இங்கு இருந்துள்ளான் எனும் செய்தி இக்கல்வெட்டில் உள்ளதாகவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

போவத்தகல் மலையிலுள்ள நான்கு பாறைக்கல்வெட்டுகளில் இரண்டில் "ஜெட்டதிச மகாராஜ" எனப் பொறிக்கப்பட்டுள்ளமையும் உற்று நோக்கத்தக்கது. இவன் மகாசேனனின் இரண்டாவது புதல்வனாவான். இலங்கையை ஆட்சிசெய்த மன்னர்கள் வரிசையில் மகாசேனனுக்குப் பின் அவனது மூத்த மகனான ஸ்ரீ மேகவர்ணனும், இவனுக்குப்பின் இரண்டாவது புதல்வனான ஜெட்டதீசனும் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாசேனனுக்கும் ஆடகசவுந்தரிக்கும் மகனாகப் பிறந்து ஆடகசவுந்தரிக்குப் பின் உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்ததாக மட்டக்களப்பு மான்மியமும், கோணேசர் கல்வெட்டும் குறிப்பிடும் சிங்ககுமாரனின் அரசு விருதுப் பெயரே ஜெட்டதீசனாக இருக்க வேண்டும் என நம்பக்கூடியதாக உள்ளது.

ஏனெனில் மகாசேனனின் தந்தையின் பெயரே ஜெட்டதீசன் என்பதாகும். அப்பெயரே 2ம் ஜெட்டதீசன் என மகாசேனனின் இரண்டாவது மகனுக்கும் சூட்டப்பட்டுள்ளமையும், இவனது இயற்பெயர் குறிப்பிடப்படாமையும் அவதானிக்கத்தக்கது. உன்னரசுகிரி இராச்சியத்தை ஆட்சி செய்த தந்தையினதும், மகனினதும் பெயர்கள் போவத்தகல மலையில் பொறிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

போவத்தகல மலையில் ஜெட்டதீசன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள இரண்டாவது கல்வெட்டு இவனது 8ம் ஆட்சி ஆண்டில் அதாவது கி.பி. 336ல் பொறிக்கப்பட்டதாகும். போவத்தகல் மலையில் ஓர் பூஜை இம்மன்னனால் நடத்தப்பட்டது பற்றியும், இதில் ஆரியவம்சம் பற்றிய சொற்பொழிவு இடம்பெற்றது பற்றியும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. பூஜை எதற்காக, எந்தக் கடவுளுக்காக என்பதைத் தெரிந்து கொள்ள முடியாதபடி கல்வெட்டின் சில பகுதிகள் சேதமடைந்துள்ளன. ஆடகசவுந்தரி ஆரியவம்சத்து இராம கோத்திரத்தை சேர்ந்தவள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் தன் தாயாருக்காக இப்பூஜையை மகன் செய்துள்ளான் என்றே நம்பக்கூடியதாக உள்ளது. இதன் மூலம் ஜெட்டதீசன் என்ற பெயரில் இலங்கையை ஆட்சி செய்த மன்னன் தமிழரசி ஆடகசவுந்தரியின் மகனான சிங்ககுமாரனே எனும் முடிவுக்கு வரக்கூடியதாக உள்ளது.

**கூமுனை கிராமம் (குமன)**

பறவைக் குளத்திலிருந்து குளக்கரையோரமாக கும்புக்கன் ஆற்றை நோக்கிச் செல்லும் போது குளத்தின் முடிவில் அதன் தென் கரையோரமாக ஓர் ஒற்றையடிப்பாதை செல்கிறது. சுமார் 500 மீற்றர் தூரத்தில் அப்பாதையின் முடிவில் ஒரு தென்னந்தோப்பு காணப்படுகிறது. இத்தென்னந்தோப்பு இருக்கும் இடத்தில் தான் ஒரு காலத்தில் ஓர் கிராமமே அமைந்திருந்தது. அதுதான் குமன என்றழைக்கப்படும் கூமுனைக் கிராமம். இவ்விடம் புதுவெளி எனவும் அழைக்கப்படுகிறது.

பண்டைய காலத்தில் கும்புக்கன் ஆறு கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் ஆற்று நீர் கடலுக்கருகில் தெற்கு நோக்கி வளைந்து ஓடி கடலில் சங்கமமாகியதால் ஓர் கூரான முனை இயற்கையாகவே அமைந்திருந்தது. இதன் காரணமாக இவ்விடம் "கூர்முனை" என அழைக்கப்பட்டது. இப்பெயரே காலப்போக்கில் மருவி கூமுனை எனவும், பின்பு குமுன என்றும் மாறி விட்டதாகத் தெரிய வருகிறது. மேலும் இம்முனையை பூமுனை என அழைத்ததாகவும் கூறப்படுகிறது. கும்புக்கன் ஆற்று கழிமுகத்திற்கு வைக்கப்பட்ட இப்பெயர் இதன் வடக்குப் பக்கத்தில் இருந்த வில்லுக்குளம்,

கிராமம், குளம், காடு போன்றவற்றிற்கும் வழங்கப்பட்டு தற்போது சுமார் 70 சதுர கி.மீ பரப்பளவுள்ள பிரதேசம் முழுவதற்கும் வழங்கப்படுகிறது.

இராவணன் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலும், கதிர்காம சத்திரிய மன்னர்கள் கி.மு. 3ம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கைப் பகுதியை ஆட்சி செய்த காலத்திலும், உன்னரசுகிரி இராச்சியத்தை தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த கி.பி.1ம், 2ம், 3ம், நூற்றாண்டு காலப்பகுதியிலும் கூமுனைப் பகுதியில் மக்கள் வசித்துள்ளமையும் சில கிராமங்கள் இருந்துள்ளமையும் வரலாற்றுக் குறிப்புகள் மூலம் தெரியவருகிறது. அதன் பின்பு பல நூற்றாண்டு காலம் மக்கள் குடியிருப்புகள் இல்லாமல் இருந்த கூமுனை பகுதியில் சுமார் 200 வருடங்களுக்கு முன்பே கூமுனைக் கிராமம் தோற்றம் பெற்றுள்ளது.

இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சிசெய்த காலத்தில் ஊவா பகுதியில் இருந்த கிளர்ச்சியாளர்களால் ஆங்கிலேயருக்கெதிராக வெல்லஸ்ஸ கலகம் உருவானது. “வெல் லக்ச” எனும் ஒரு லட்சம் வயல்களை கொண்ட பிரதேசத்தை காக்கும் பொருட்டு ஏற்பட்ட கலகத்தில் இவ்வயல்களுக்கு தீ வைத்து அழித்த ஆங்கிலேயர்கள் இங்கிருந்த மக்களை சுட்டுக் கொன்ற வேளை அங்கிருந்து தப்பிய சிலர் கும்புக்கன் நதிக்கரை வழியாக நெடுந்தூரம் பயணம் செய்து ஆற்றின் இறுதிப்பகுதியில் குடியமர்ந்த இடமே கூமுனையாகும். கி.பி. 1818ம் ஆண்டு கூமுனை கிராமம் உருவானது. இங்கு யாருக்கும் தெரியாமல் நடுக்காட்டில் இரகசியமாக இம்மக்கள் வாழ்ந்து வந்தனர்.

இவ்வாறு உருவான கூமுனை கிராமத்தில் மொத்தமாக 142 பேர் மட்டுமே குடியிருந்தனர். 25 ஓலைக்குடிசைகள் இருந்தன. இரண்டு வீடுகளே ஓட்டு வீடுகளாகும். இக்கிராமத்திற்கென ஒரே ஒரு வாகனமாக இருந்தது ஒரு மாடு பூட்டிய மாட்டு வண்டியே. இது தவிர எட்டுப்பேரிடம் மிதிவண்டிகள் இருந்தன. கிராமத்தில் ஒரே ஒரு கடையே இருந்தது. மொத்தமாக 40 தென்னைமரங்கள், 5 பனை மரங்கள், 50 பசுமாடுகள், 50 எருமை மாடுகள், ஒரே ஒரு ஆசிரியரை கொண்ட சிறிய பாடசாலை இவைதான் இக்கிராமத்தின் மொத்த சொத்துக்கள்.




இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் மிகவும் சுறுசுறுப்பானவர்கள். பெண்கள் கூட மிகவும் தைரியசாலிகளாக இருந்தனர். மீன்பிடித்தல், விவசாயம், பழங்கள், தேன் ஆகியவை சேகரித்தல், வேட்டையாடுதல் போன்றவையே இவர்களின் முக்கிய தொழில்களாக விளங்கின. சிலர் வனத்துறையில் அரசாங்க தொழில் புரிந்தனர். ஆண்கள் மீன்பிடித்தல், விவசாயம், வேட்டையாடுதல் போன்ற தொழில்களில் ஈடுபடும் அதேசமயம் பெண்கள் காட்டிற்குச் சென்று பழங்கள், தேன் போன்றவற்றை சேகரிக்கும் தொழிலில் ஈடுபட்டனர். பெண்கள் தனியாக காட்டுக்குள் சென்று விளாம்பழம், கிண்ணம் பழம், தேன் ஆகியவற்றை சேகரித்துக்கொண்டு வருவர். இவற்றை சரணாலயத்திற்கு வரும் உல்லாச பயணிகளிடம் விற்று பணம் பெறுவர். மிகுதியை பானமைக்கு கொண்டு சென்று விற்று விட்டு தமக்குத் தேவையான பொருட்களை வாங்கி வருவர்.

கூமுனைக் கிராமத்தில் வசித்த மக்களுக்கு உணவுக்குப் பஞ்சமே இல்லை. தினமும் மீன், இறைச்சியுடன் உணவு உண்டு வந்தனர். அருகிலிருக்கும் கடலிலும், கும்புக்கன் ஆற்றிலும், வடக்கில் இருக்கும் யாக்கல களப்பிலும், மேற்கிலிருக்கும் குமன குளத்திலும் தேவையான மீன்களை பிடித்துக்கொண்டு வந்து உணவுக்குப் பயன்படுத்துவர். மேலதிகமானவற்றை கருவாடாக்கி

உணவுக்கும், விற்பனைக்கும் வைத்திருப்பர். காடுகளுக்குச் சென்று மான், மரை, பன்றி ஆகியவற்றை வேட்டையாடிக் கொண்டு வந்து உணவுக்குப் பயன்படுத்துவர். மிச்சமானவற்றை காயவைத்து காய்ந்த இறைச்சியை விற்பனை செய்வர். பெரும் போகத்திலே நெல் பயிர் செய்தும், சிறு போகத்திலே சேனைப்பயிர் செய்தும் தமக்குத் தேவையான அரிசி, காய்கறி, தானிய வகைகளைப் பெற்றுக் கொள்வர். குமன குளத்திற்கு அருகில் இம்மக்களுக்கென சில ஏக்கர் வயல் நிலங்கள் இருந்தன.

கூமுனை மக்களுக்கிருந்த ஒரே பிரச்சினை காட்டு விலங்குகளிடமிருந்தும், விஷ ஜந்துக்களிடமிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதே. விளாம்பழம் பறிக்கச் சென்ற பெண்கள் யானையின் தாக்குதலிலும், தேன் எடுக்கச் சென்றவர்கள் கரடியின் தாக்குதலிலும், வேட்டையாடச் சென்றவர்கள் பாம்புக் கடியினாலும் இறந்துள்ளனர். பலத்த தாக்குதலுக்குள்ளானவர்களை மிகக் கிட்டிய இடமான பானமை, அல்லது பொத்துவிலுக்குக் கொண்டு சென்று வைத்திய சிகிச்சை அளிக்க வேண்டும். சுமார் 29 கி.மீ தூரத்திலுள்ள பானமைக்கு செல்வதற்கு உரிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால் பலர் போகும் வழியிலேயே இறந்துள்ளனர். இம்மக்களின் பாதுகாப்பு ஏனைய வசதிகள் நிமித்தம் கிராமத்தின் அருகிலேயே வனத்துறை அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. மழைக்காலங்களில் சிலசமயம் 8 - 10 நாட்கள் வரை போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டு விடும். பானமைக்கு செல்லும் வழியில் உள்ள பல களப்புகளில் நீர் நிரம்பி வாகனங்கள் எதுவும் செல்ல முடியாத நிலையேற்படும்.

இப்படியான காலங்களில் விபத்துக்குள்ளானவர்கள் கிராமத்திலேயே உயிரிழந்துள்ளனர். ஏனைய காலங்களில் ஆபத்துக்குப் பயன்படுவது கிராமத்தில் இருக்கும் ஒரே ஒரு மாட்டுவண்டியே. சமயத்தில் மிதிவண்டிகளும் அவசர தேவைகளுக்கு பயன்படும் வாகனமாகும். ஒவ்வொரு மிதிவண்டியிலும் காத்தடிக்கும் பொம்ப், பெட்ச் ஒட்டத் தேவையான பொருட்கள் கட்டாயமாக இருக்கும். மிதிவண்டி வைத்திருப்பவர்கள் வண்டியிலேயே பானமைக்குச் சென்று தமக்கு தேவையான பொருட்களை வாங்கி வருவர். மிதிவண்டி இல்லாதவர்கள் 29 கி.மீ தூரம் நடந்து சென்று இரண்டு நாட்களின் பின் தமக்கு தேவையான பொருட்களுடன் கிராமத்திற்கு

வருவர். கிராமத்தில் இருக்கும் ஒரே ஒரு கடை உரிமையாளரும், ஒரே ஒரு மாட்டுவண்டிக்குச் சொந்தக்காரரும், கிராமத்தின் பெரியவருமான பியதாச எனும் முதலாளி கிராம மக்களுக்கு கஸ்டமான சமயங்களில் மிக்க உதவியாக இருந்தவர் என கூறப்படுகின்றது. கூமுனை கிராமத்திற்கு செல்லும் வழியில் நாம் முதன் முதலாகக் காணும் சுடுகாட்டில் இருக்கும் சமாதி இவருடையதே.



குமன கிராமத்திலுள்ள சமாதி

1933ம் ஆண்டு கூமுனைக் காட்டிற்கு வேட்டையாடச் சென்ற ஆங்கிலேய அதிகாரியான R.L. ஸ்பிட்டிலுக்கு கூமுனைக் கிராம மக்களே வழிகாட்டியாக இருந்துள்ளனர். அப்போது கிராமத்தின் தலைவனாக இருந்த பந்துவா ஏக்கல அவருக்கு உதவியாகச் சென்ற குழுவின் தலைவனாகவும் இருந்துள்ளமை பற்றி ஸ்பிட்டில் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். களிமண்ணினால் கட்டப்பட்டு ஓலை வேயப்பட்ட இம்மக்களின் வீடுகளைப் பாதுகாக்கும் பொருட்டு முள் குச்சிகள், கம்புகள் கொண்டு காணிகள் பிரிக்கப்பட்டு வேலி அடைத்திருந்ததாகவும், ஒவ்வோர் வீட்டிலும் ஒரு மாட்டுப்பட்டி இருந்ததாகவும் அவர் மேலும் எழுதியுள்ளார்.


இவ்வாறு வாழ்ந்து வந்த கூமுனை மக்கள் வனவிளங்குகளின் தாக்குதலுக்குள்ளாகி இறப்பதினாலும், இங்கு மக்கள் வாழ்வதன் மூலம் வனவிலங்குகளின் சுயாதீனமான நடமாட்டம் பாதிக்கப்படுவதாலும் கூமுனை கிராமத்திலிருந்த மக்களை இங்கிருந்து வேறு இடங்களுக்குச் சென்று குடியேறும் படி வனத்துறை திணைக்கள அதிகாரிகள் பலதடவை முயன்றும் முடியாமல் போய் விட்டது. இறுதியில் கிழக்கில் பயங்கரவாதப் பிரச்சினை உச்சத்தை அடைந்திருந்த காலத்தில் குமன தேசிய பூங்கா மூடப்பட்ட சமயம் கூமுனை கிராமத்திலிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டு மகாவலி கங்கைத் திட்டத்தின் கீழ் மாதுரு ஓயா பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். இருப்பினும் கிராமத்தில் வாழ்ந்த சிலர் தமது சொந்தக் கிராமத்தை விட்டுப்போக மனமில்லாமல் உள்நாட்டுப் பிரச்சினைகள் முடிந்தபின் சொந்தக் கிராமத்திற்கே சென்று வாழ வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இலவு காத்த கிளி போல பானமையில் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்றனர்.

ஒரு காலத்தில் ஆடு, மாட்டுப் பட்டியுடன் நிம்மதியான நல்ல உணவுண்டு மக்கள் வாழ்ந்து வந்த கூமுனை கிராமம் இன்று வெறிச்சோடிக் காணப்படுகிறது. தற்போது இங்கு எஞ்சியிருப்பது வனத்துறை அலுவலகமும், சில தென்னை மரங்களும், ஊர்ப்பெரியவரின் சமாதியுமே. இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே கூமுனைக் கிராமத்தை கடந்து கும்புக்கன் ஆற்றங்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்.

### மடத்துறை அம்மன் கோயில் (சின்ன கபிலித்தை கோயில்)

கூமுனைக் கிராமத்தை பார்த்த பின்பு கும்புக்கன் ஆற்றங்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது வெட்டவெளியினூடாக சென்று கொண்டிருந்த நாம் மரங்கள் அடர்ந்து காணப்பட்ட குளிர்ச்சியான பகுதிக்குள் நுழைந்தோம். பாரிய விருட்சங்கள் நிறைந்த காட்டை ஊடறுத்துக் கொண்டு சென்ற பாதை வழியாக சுமார் 800 மீற்றர் தூரம் வரை சென்றதும் ஓர் சிறிய ஆலயத்தை அடைந்தோம். இதுவே சின்னக் கபிலித்தை அம்மன் கோயிலாகும். இது சிங்கள மொழியில் “மடம்தொட்ட தேவாலய” எனவும் தமிழில் “மடத்துறை அம்மன் கோயில்” எனவும் அழைக்கப்படுகிறது.

கோயிலின் இடது பக்கத்தில் கும்புக்கன் ஆறு கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆலயத்தை சுற்றி மிகப் பிரமாண்டமான மருதமரங்கள் நிறைந்து காணப்பட்டன. இம்மரங்களின் கீழே யாத்திரீகர்கள் பலர் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தனர். ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் பக்தர்கள் நிறைந்திருந்தனர். சிலர் கோயிலை வணங்கியபடியே வலம் வந்து கொண்டிருந்தனர். சிலர் ஆலயத்தின் முன்பக்கம் ஆங்காங்கே பொங்கல் பொங்கிக் கொண்டிருந்தனர். சிலர் தாம் கொண்டு வந்திருந்த பூஜை பொருட்கள், பழங்கள் போன்றவற்றை ஆலயத்திற்கு கொண்டு செல்வதற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தனர். சிலர் தாம் கொண்டு வந்திருந்த அவல், பொறி ஆகியவற்றை அம்மனுக்கு படைக்க பிசைந்து கொண்டிருந்தனர். சிலர் அம்மனுக்கு படைத்த பிரசாதங்களை பக்தர்களுக்கு வழங்கிக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் தமது மதிய உணவை சமைப்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சிலர் ஆற்றைக் கடந்து கொண்டிருந்தனர். இப்படியாக மடத்துறை அம்மன் ஆலய வளாகம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.



கும்புக்கன் ஆற்றங்கரை மடத்துறை அம்மன் கோயில்

சின்னக்கபிலித்தை எனும் மடத்துறையில் கோயில் உருவானது பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது. இன்று காளியம்மன் குடிகொண்டிருக்கும் இவ்விடத்தில் முதன்முதலில்

முருகப் பெருமானே குடி கொண்டிருந்ததாகவும் உகந்தைக் கடற்கரையில் வந்திறங்கிய முருகப்பெருமான் அவருக்குத் துணையாக வந்த வீரபாகுத் தேவருடன் கதிரமலைக்குச் செல்லும் வழியில் முதன் முதலாக கும்புக்கன் ஆற்றங்கரையிலேயே தங்கி விட்டதாகவும் கூறப்படுகிறது. அவ்வாறு முருகப்பெருமான் முதலில் குடிகொண்ட இடமே இன்று அம்மன் கோயில் அமைந்திருக்கும் இடமாகும். சிலகாலத்தின் பின்பு இங்கு மக்கள் நடமாட்டம் அதிகமாகவே முருகன் இங்கிருந்து வடமேற்கு பக்கமாக நடுக்காட்டின் மத்தியில் இருந்த கபிலித்தை என்னுமிடத்திற்குச் சென்று அங்கேயே தங்கிவிட்டதாகவும், முருகன் இவ்விடத்தை விட்டுச் சென்றவுடன் இங்கு வீரபாகுத் தேவரும், காளி அம்மனும் குடிகொண்டதாகவும், பின்பு பத்தினி அம்மனும் இங்கு வந்து குடிகொண்டதாகவும் கூறப்படுகின்றது. இந்துக்கள் இங்குள்ள அம்மனை காளி அம்மன் எனவும், சிலர் கெவுளி அம்மன் எனவும் அழைக்கின்றனர். சிங்கள மக்கள் பத்தினி அம்மன் என நினைத்து வழிபடுகின்றனர். இதன் காரணமாக ஆலயத்தின் அருகில் ஆற்றை கடக்கும் இடம் பத்தினி அம்மன் துறை (பத்தினி ஹாமினி தொட்ட) என அழைக்கப்படுகிறது.

மிகப்பண்டைய காலத்தில் கதிரமலை, கபிலித்தை ஆகிய இடங்களில் இருக்கும் முருகப்பெருமானின் திருத்தலங்களின் மகிமைகளைக் கேட்டறிந்த பிராமணர்கள் பலர் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கையின் தென்பகுதிக்கு வந்து கிரிந்தி ஓயா ஆறு, மாணிக்க கங்கை, கும்புக்கன் ஆறு ஆகியவற்றின் கழிமுகங்களில் இறங்கி அங்கிருந்து கதிரமலைக்கும், கபிலித்தை ஆலயத்திற்கும் சென்றுள்ளனர். மாணிக்க கங்கையின் கழிமுகத்திற்கருகில் அவ்வாறு பிராமணர்கள் வந்திறங்கிய இடம் இன்றும் "பிராமணத் தொட்ட" என அழைக்கப்படுகிறது. இது பிராமணர் துறை என பொருள்படும். அதுபோல் கும்புக்கன் ஆற்றின் கழிமுகத்திற்கருகில் அவர்கள் இறங்கியதோடு அவ்விடத்தின் அருகில் திறந்த வெளியில் முருகன் இருப்பதைக் கண்டு அங்கு ஓர் மடத்தை அமைத்து முருகப் பெருமானை பூஜித்து வணங்கி பின் அங்கிருந்து கபிலித்தைக்கு சென்றுள்ளனர். இந்தியாவிலிருந்து வரும் சந்நியாசிகளும், சித்தர்களும், பக்தர்களும் இங்கிருந்த துறையடியில் இறங்கி இம்மடத்தில் தங்கியிருந்து முருகனை தரிசித்து சென்றுள்ளனர். எனவே இவ்விடம்

"மடத்துறை" என அழைக்கப்பட்டது. இதுவே சிங்கள மொழியில் மடமே தொட்ட எனத் திரிபடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இங்கு அமைந்துள்ள ஆலயம் "மடமே தொட்ட தேவால" (மடத்துறை கோயில்) என அழைக்கப்படுகிறது.

மடத்துறையில் குடிகொண்டிருக்கும் காளி அம்மன் மிகவும் சக்தி வாய்ந்ததாகவும், இதனால் இங்கு வருபவர்கள் மிகவும் பயபக்தியுடன் அம்மனை தரிசித்து செல்வதாகவும் கூறப்படுகிறது. இவ்வம்மனின் கிருபையால் பல அற்புத சம்பவங்கள் இப்பகுதி-யில் நிகழ்ந்துள்ளதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். தமது வீடுகளில் திருட்டு மற்றும் வேறு தகாத சம்பவங்கள் நடந்தால் பயபக்தியுடன் விரதமிருந்து கால் நடையாக மடத்துறைக்கு வந்து அம்மனை வேண்டி காசை இரண்டாக வெட்டி முடிந்து வைத்தால் மூன்று நாட்களுக்குள் அப்பிரச்சினைக்கு ஒரு முடிவு கிட்டி விடுமாம்.

ஒரு தடவை ஓர் செல்வந்தர் காணிக்கையாக இவ்வாலயத்-தின் அம்மனுக்கு தங்க மாலை ஒன்றை அணிவித்து விட்டுச் சென்று விட்டதாகவும், கொஞ்ச நாட்களின் பின் ஓர் திருடன் மாலையைத் திருடிச் சென்று விட்டு காலையில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற-தாகவும், அவனது படகு கவிழ்ந்து கடலிலேயே இறந்து, 4 நாட்களின் பின்னேயே சடலமாகக் கரை ஒதுங்கியதாகவும் பானமையிலுள்ள முதியவர்கள் கூறுகின்றனர்.

இன்னுமோர் சமயம் பானமையிலுள்ள ஓர் வயது முதிர்ந்த பாட்டி ஓர் செம்பிலே சில்லறைப் பணத்தை போட்டு சேமித்து வைத்திருந்தாராம். ஒருநாள் ஒரு திருடன் அச்செம்பை களவாடிச் சென்று விட்டானாம். மனமுடைந்த பாட்டி மடத்துறை அம்மனை நினைத்து விரதமிருந்து கால் நடையாக ஆலயத்திற்கு வந்து காசு வெட்டி முடிந்து விட்டுச் சென்றாராம். அவர் வீட்டுக்கு வரும் போது, செம்பை திருடியதாக சந்தேகித்த ஒருவன் வீட்டு வளவில் உள்ள மரத்தடியில் இறந்து கிடந்தானாம்.

இதுபோல இன்னுமோர் சம்பவமும் இப்பகுதியில் நடந்ததாம். பொத்துவில் பகுதியில் இருந்த ஒருவர் மடத்துறை அம்மன் மீது பக்தி கொண்டவராய் பல வேண்டுதல்களை கேட்டு, அவை நிறைவேறிய பின் ஓர் முதலாளியாக வளர்ந்து விட்டாராம்.

அவர் நல்ல நிலைக்கு வந்த பின் அவருடைய மேலதிகமான வேண்டுதல்கள் எதுவும் பலிக்கவில்லையாம். உடனே அம்முதலாளி மடத்துறைக்கு வந்து தான் செய்தவற்றை சத்தம் போட்டு கூறி அம்மனைத் திட்டி விட்டுச் சென்று விட்டாராம். பேசிவிட்டு அங்கிருந்து சென்றவர் இடைவழியில் பக்கவாதம் ஏற்பட்டு நடக்க முடியாமல் கஷ்டப்படுவதாகவும், இருந்த சொத்துக்கள் எல்லாம் அழிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறான பல அற்புதச் சம்பவங்கள் இப்புனித பூமியில் நடப்பதாகவும் பானமை மக்கள் கூறுகின்றனர். மேலும் மடத்-துறை அம்மன் ஆலயத்திற்கு நேர்த்திக்கடன் செலுத்த இங்கு வரும் பக்தர்கள் பொங்கல் வைத்து நேர்த்திக்கடன் நிறைவேறிய பின்பு தாம் கொண்டு வந்த பானை, அகப்பை, விளக்கு போன்றவற்றை மீண்டும் எடுத்திச் செல்வதில்லையாம். அப்படிக் கொண்டு சென்றால் செல்லும் வழியில் பல இடைஞ்சல்களும், துன்பங்களும் ஏற்படுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் பக்தர்கள் தாம் கொண்டு வந்த பானை, விளக்குகள் போன்றவற்றை ஆலயத்திலேயே விட்டுச் செல்கின்றனர். இவ்வாறு விட்டுச் சென்ற நூற்றுக்கணக்கான அலுமினியப் பானைகள் ஆலய கருவறையின் மேலுள்ள தட்டையான கூரையின் மீது அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஏராளமான விளக்குகள் கருவரையின் பின்பக்கம் உள்ள மருத மரத்தின் அடியில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. இவை யாவும் ஜனநடமாட்டம் அற்ற சின்னக்கபிலித்தையில் உள்ள அம்மனின் அற்புதங்களாகும்.

**கபிலித்தை முருகன் கோயில்**

சின்ன கபிலத்தை அம்மன் கோயிலிலிருந்து வடமேற்குப் பக்கத்தில் 25 கி.மீ தொலைவில் கும்புக்கன் ஆற்றின் இடது கரையில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

உகந்தையில் வீரபாகுத்தேவருடன் கரையிறங்கிய முருகப் பெருமான் உகந்தையிலிருந்து சின்னக் கபிலித்தைக்கு வந்து தங்கி-யிருந்து அங்கிருந்து, கபிலித்தைக்குச் சென்று குடியிருந்ததாகவும், அதன் பின்பே இவ்விடத்திலிருந்து கதிரமலைக்குச் சென்றதாகவும். கூறப்படுகிறது. சூரனை வதம் செய்த பின்பு இந்தியாவுக்குச் சென்று மீண்டும் இரண்டாவது தடவையாக இலங்கைக்குத் திரும்பிய போது கபிலித்தைக்கு வந்து இங்கிருந்த புளியமரத்தின் கீழ் நிஷ்-

டையில் அமர்ந்ததாகவும். இப்புளியமரத்தின் அருகில் தான் வள்ளி அம்மனை முருகன் முதன் முதல் சந்தித்ததாகவும் கர்ணபரம்பரை-யாகக் கூறப்படுகிறது. எனவே கதிர்காமத்தைப் போன்று கபிலித்-தையும் ஓர் புனித தலமாகக் கருதப்படுகிறது.

கபிலித்தை எனும் பெயர் இவ்விடத்திற்கு வருவதற்கு சில காரணங்கள் உள்ளன. கதிரமலைக்குத் தீர்த்த யாத்திரை வந்த கபில முனிவர் இங்கிருந்த இத்திமரக் காட்டில் தங்கிச் சென்றதால் இவ்-விடம் கபிலர் இத்திக்காடு எனப் பெயர் பெற்று பின்பு கபிலித்தை என மருவியதாகக் கூறப்படுகிறது. மேலும் "கபிலை" என்பது தென்கீழ்-த்திசை யானைக்குப் பெண் யானை என்பதைக் குறிப்பதாகும். இப்பிரதேசம் தென்கீழ்த்திசையில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எனவே கபிலை எனும் பெண்யானைகள் அதிகமாகக் காணப்-படும் இங்கிருக்கும் இத்திக்காடு "கபிலை இத்திக்காடு" என அழை-க்கப்பட்டுள்ளது. மேலும் கபிலச் சிலந்தி எனும் சிலந்திகள் காணப்-படும் இத்திக்காடு என்பதாலும் "கபிலித்தை" எனப் பெயர் பெற்றது.

கபிலித்தை முருகன் கோயிலுக்கு செல்லும் முன்பு 21 நாட்கள் பூரண விரதமிருக்க வேண்டும். இவ்விரதத்தில் புலால் உண்ணாமை, துர்வார்த்தை பிரயோகிப்பதை தவிர்த்தல், தீய செயல்கள் செய்யாமை, பிரம்மச்சரியம், எளிமையான வாழ்க்கை முறை, பிறருக்கு தீங்கு நினையாமை, தீட்டு, தொடக்கு ஆகியவ-ற்றை தவிர்த்தல், தூய்மை, சுத்தம், கோபம் கொள்ளாமை, அமைதி, தெய்வத்தின் மீது பூரண நம்பிக்கை போன்றவற்றை கட்டாயமாகக் கடைப்பிடித்தல் வேண்டும்.

குடியிருப்புகள் எதுவும் இல்லாத அடர்ந்த காடு, கரை-புரண்டோடும் காட்டாறுகள், சேற்றுப்புதைகுழிகள், திடீரெனப் பெய்யும் அடைமழை, போன்ற இயற்கையான ஆபத்துக்கள் இக்-காட்டில் உள்ளன. இவை தவிர கொடிய காட்டு விலங்குகள், விஷப்பூச்சிகள் மூலம் ஏற்படும் ஆபத்துக்களும் உள்ளன. மேலும் இரவில் கடுங்குளிர், காரிருள் போன்றவையும் எமக்கு சவாலாக அமைகின்றன. எனவே இத்தனை ஆபத்துக்கள், சவால்களுக்கு மத்தியில் மேற்சொன்ன விரதக்கட்டுப்பாடுகளும், தெய்வத்தின் மீதான அதீத பக்தியுமே இக்கோயிலை நாம் சென்றடைவதற்கு அனுகூலமாகவும், சாத்தியமானதுமாக அமைகின்றன. இவ்விடயங்-களை சட்டைசெய்யாமல் பொழுது போக்கிற்காக கபிலித்தைக்குச்

சென்றவர்கள் பல ஆபத்துக்களைச் சந்தித்து வழிதவறி ஆலயத்திற்குச் செல்ல முடியாமல் திரும்பி வந்த சம்பவங்கள் பல உண்டு.

சின்னக்கபிலித்தை அம்மன் கோயிலிலிருந்து வடமேற்கு பக்கத்தில் கும்புக்கன் ஆற்றின் வலது கரை வழியாக கபிலித்தை முருகன் கோயிலுக்கு செல்லும் பாதை அமைந்துள்ளது. எனினும் இது சீரான பாதை அல்ல. கோயிலுக்குச் செல்லும் வழியில் மூன்று ஆறுகளைக் கடக்க வேண்டியுள்ளது. இவ்வாறுகளைக் கடக்க பாலங்கள் இங்கு இல்லை. சின்னக்கபிலித்தை அம்மன் கோயிலிலிருந்து போகும் வழியில் ஒன்றரை கி.மீ தொலைவில் "எதகும்புக்க" என்னுமிடத்தில் வனத்துறை விடுதி அமைந்துள்ளது.

இவ்விடத்திலிருந்து 3 கி.மீ தூரத்தில் "மஹா கல் அமுன" எனும் பெரிய கல்லணை அமைந்துள்ளது. பாரிய கற்பாலங்களை ஆற்றின் குறுக்காகப் போட்டு நீரைத் தேக்கி இங்கிருந்து கால்வாய் மூலம் குமன குளத்திற்கு நீர் அனுப்பப்பட்டுள்ளது. இவ்வணை இராவணன் காலத்தில் அசுரர்களால் அமைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதை அடுத்து "குடாகல் அமுன" எனும் சிறிய கல்லணையும், அதைத் தொடர்ந்து பதங்கிகஸ்தொட்ட, மண்டாகஸ் தொட்ட, பக்மீதொட்ட ஆகிய இடங்களும் அமைந்துள்ளன. பக்மீதொட்ட மஹாகல் அமுனையில் இருந்து 6 கி.மீ தூரத்தில் உள்ளது. இதை அடுத்து கல் குறிஞ்சான் ஆறு ஓடுகிறது. இவ்வாற்றை வாகனத்தில் கடக்கலாம்.



கும்புக்கன் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பெரிய கல்லணை (மஹா கல் அமுன)

இங்கிருந்து 5 கி.மீ தூரத்தில் கல்வங்கெடி பொல என்னுமிடம் உள்ளது. இவ்விடத்தை அடுத்து அலகொல ஆறு ஓடுகிறது. எப்பொழுதும் நீர் அதிகளவில் காணப்படும் இவ்வாற்றை கோடை காலங்களில் கூட ஒரு சில மாதங்களில் மட்டுமே வாகனங்களில் கடந்து செல்ல முடியும். அநேகமாக இவ்விடம் வரையுமே வாகனத்தில் சென்று இங்கிருந்து ஆற்றைக் கடந்து நடந்தே கபிலித்தைக்கு செல்ல வேண்டும். அலகொல ஆற்றிலிருந்து 9 கி.மீ தூரத்தில் கபிலித்தை உள்ளது. அலகொல ஆற்றை அடுத்து மஹா வெலதொட்ட அமைந்துள்ளது. இவ்விடம் அலகொல ஆற்றிலிருந்து 3 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கிருந்து 6 கி.மீ தூரத்தில் கபிலித்தை அமைந்துள்ளது. கபிலித்தையில் கும்புக்கன் ஆற்றைக் கடக்கு முன்பு அவ்விடத்திலேயே தங்குவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்த பின்பே ஆற்றைக் கடந்து முருகன் கோயிலுக்கு செல்கின்றனர். ஏனெனில் கோயில் அமைந்திருக்கும் இடத்தில் யாரும் தங்குவதில்லை.

இக்கோயிலுக்கு செல்வதற்கு முன் கும்புக்கன் ஆற்று மணலில் 7 கிணறுகள் தோண்டி, ஒவ்வொன்றிலும் ஏழு தடவை குளித்து விட்டு, ஏழு தானியங்கள், ஏழு பழங்கள், ஏழு பூக்களுடன் ஈரத்துணியுடன் சென்று வணங்க வேண்டும். ஆலயத்திற்குக் கொண்டு செல்லும் பாத்திரங்கள், விளக்குகள், பழங்கள், பூக்கள் எல்லாவற்றையும் மணலில் தோண்டிய கிணற்றில் மஞ்சள்தூள் இட்டுக் கலக்கி அந்நீரில் கழுவிய பின்பே கொண்டு செல்ல வேண்டும்.

இப்பழமையான வேடர்களின் வழமை தற்போது சற்று மாற்றமடைந்து விட்டது. தற்போது கும்புக்கன் ஆற்றில் குளித்து விட்டு வெள்ளை உடுப்பு உடுத்தி இக்கரையில் இருக்கும் அரச மரத்தையும், அதனருகில் உள்ள பத்தினி அம்மனையும் வணங்கிவிட்டே ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் சென்று முருகனை வணங்குகின்றனர்.

கபிலித்தை முருகன் கோயிலில் கட்டிடங்கள் எதுவும் இல்லை. பழமை வாய்ந்த ஓர் புளிய மரமும் அதன் கீழே ஓர் சிறிய மேடையுமே உள்ளன. இம்மேடையில் வேல், சூலம், சிறிய முருகன் சிலை போன்றவையே காணப்படுகின்றன. இப்புளிய மரமும் வேல், சூலம், சிலை ஆகியவையுமே இவ்வாலயத்தின் அபார சக்திமிக்க சின்னங்களாகும். இப்புளிய மரத்தின் கீழேயே

முருகப் பெருமான் என்றும் தியானத்தில் உறைந்திருப்பதாக நம்பப்படுகிறது. எனவே இவ்விடத்தை சிங்கள மொழியில் "சியம்பலா தேவாலய" என அழைக்கின்றனர். புனித புளியமரத்தைச் சுற்றி 30 அடி சுற்றளவுக்கு ஒரு புல் பூண்டு கூட வளராமல் சுத்தமாகக் காணப்படுகிறது. அடர்ந்த காட்டின் மத்தியில் இருக்கும் இவ்விடத்தில் மட்டும் புல் பூண்டு செடிகள் முளைக்காமல் இருப்பது ஆச்சரியமாக உள்ளது. மரத்திலிருந்து விழும் இலைகுலைகள் கூட இவ்விடத்தில் காணப்படுவதில்லையாம். எப்பொழுது பார்த்தாலும் இவ்விடம் கூட்டித் துப்புரவு செய்யப்பட்டது போல இருக்குமாம். இங்கு சென்று வந்தவர்கள் எல்லோரும் இவ்விடம் சுத்தமாக இருப்பதாகவே கூறுகின்றனர். மனித சஞ்சாரம் இல்லாத இக்காட்டில் மரங்கள் அடர்ந்து வளர்ந்து காணப்படும் வனத்தில் ஆலய வளவு மட்டும் இலைகுலைகள் கூட இல்லாமல் புல்பூண்டு வளராமல் இருப்பது எப்படி?



கபிலித்தை முருகன் கோயில் புராதன புளியமரம்

கந்தக் கடவுளின் அற்புதங்கள் நிறைந்த இப்புனித வனத்திலே முருகப் பெருமானைத் தரிசிக்க வந்து கபிலித்தைப் பகுதியிலேயே தங்கியிருந்து சமாதியான சித்தர்களும், முனிவர்களுமே

இங்கு சூட்சுமமாக உலாவுவதாகவும், அவர்களே காட்டின் மத்தியில் உள்ள இத்திறந்த வெளி மரக்கோயிலைப் பராமரித்து வருவதாகவும், இவ்வாலயத்திற்கு வரும் பக்தர்களுக்கும் பாதுகாப்பாகவும், துணை-யாகவும் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

மிகப்பண்டைய காலத்திலே ருகுணு காட்டில் வாழ்ந்த வேடர்களாலேயே கபிலித்தை கோயில் அமைக்கப்பட்டது. வேடர்-களால் வழிபாடு செய்யப்பட்டதோடு, தவறு செய்பவர்களுக்கு தண்டனை கொடுக்கும் இடமாகவும், ஒருவருக்கொருவர் ஏற்படும் பிரச்சினைகளின் போது சத்தியம் செய்யும் இடமாகவும், பரிகாரம் தேடும் இடமாகவும் மிகவும் பயபக்தியுடன் வேடர்களால் வண-ங்கப்பட்ட புனித தலமாக இது விளங்கியது. இருவருக்கிடையில் பிரச்சினைகள் உண்டாகும் போது எல்லோரும் ஒன்று சேர்ந்து அவர்கள் இருவரையும் முருகன் சந்நிதிக்கு கூட்டிக்கொண்டு வருகின்றனர். பிரச்சினையுள்ள இருவரும் முருகப் பெருமானுக்கு பிரசாதங்கள் படைத்து மண்ணில் மண்டியிட்டு தத்தமது மனக்-குறைகளையும், பிரச்சினைகளையும், நியாயங்களையும் கூறி இங்கி-ருக்கும் இரண்டு பாறைகள் மீது அவற்றை இறக்கி வைத்து விட்டுச் செல்கின்றனர். இவ்வாறு செய்த பின்பு அன்றிரவு இருவரில் தவறு செய்தவருக்கு அம்மனின் சிறுத்தை வந்து தண்டனை வழங்குவதாக வேடர்கள் நம்பினார்கள்.

கபிலித்தை கோயிலின் வடமேற்கு, வடக்கு, கிழக்குப்பகுதி-களில் உள்ள ஒக்கப்பிட்டி, மொனராகலை, கொட்டியாகல, சியம்ப-லாண்டுவ, பானமை ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் இவ்வாலயத்தை பயபக்தியுடன் போற்றி வணங்குகின்றனர். இவர்களே இன்றும் இவ்வாலயத்திற்கு வருவதோடு, தங்கள் மனக்குறைகள், பிரச்சினை-கள், வேண்டுதல்கள் போன்றவற்றை இச்சந்நிதியில் இருக்கும் கந்தக்-கடவுளின் முன் வைக்கின்றனர். பூசாரிகளுடன் வந்து தமது விளை நிலங்களில் அறுவடை செய்யும் நெல், தானியங்களை முதன்முதலில் இம்முருகன் சந்நிதியில் படைத்து பூஜை மற்றும் விழாக்களை நடத்துகின்றனர்.

கபிலித்தையின் வடக்குப்பக்கத்தில் 21 கி.மீ தூரத்தில் உள்ள கொட்டியாகல என்னுமிடத்தில் கபிலித்தை கோயிலுக்கு பூஜை செய்வதற்கென்றே "கப்புமாத்தையா" என்றழைக்கப்படும் பூசாரிகள் பலர் இருக்கின்றனர். பூஜை செய்ய இங்கு வருபவர்களை

ஏற்றிக் கொண்டு வருவதற்கு சில ட்ரக்டர் வண்டிகள் இங்கு உள்ளன. ட்ரக்டர் வண்டி அல்லது ஜீப் வண்டி அல்லது "ட்ரேல்" மோட்டார் சைக்கிள் ஆகியவற்றைத் தவிர வேறு வாகனங்களில் கபிலித்தைக்குச் செல்ல முடியாது. எனவே இவ்வாகனங்கள் கூட கொட்டியாக-லையில் வாடகைக்கு விடப்படுகின்றன. கொட்டியாகல மொனரா-கலைக்கும், சியம்பலாண்டுவைக்கும் இடையில் உள்ள கொடயான சந்நியிலிருந்து தெற்குப்பக்கத்தில் 19 கி.மீ தூரத்தில் அமைந்-துள்ளது.

கபிலித்தை கோயிலுக்கு வருவதற்கு சின்னக் கபிலித்தை அம்மன் கோயிலிலிருந்து மஹாகல் அமுன ஊடாக செல்லும் பாதையைத் தவிர மேலும் மூன்று வழிகள் உள்ளன. மொனராகல - சியம்பலாண்டுவ வீதியில் கொடயான சந்தியை அடைந்து அங்கிருந்து தெற்கு நோக்கி 5ம் கட்டை, வத்தேகம, கொட்டியாகல, போகஸ் சந்தி ஆகிய இடங்களின் ஊடாக தெற்கு நோக்கி வந்து கும்புக்கன் ஆற்றைக் கடந்து முருகன் கோயிலை அடையலாம். அதிகமான யாத்திரீகர்கள் இப்பாதையையே பயன்படுத்துகின்றனர். இப்பாதை வழியாக பயணிப்பதற்கு வன இலாகாவின் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. ஏனைய மூன்று வழிகளிலும் வருவதற்கு அனுமதி அவசியம் பெற வேண்டும். அடுத்த வழி மொனராகலை - புத்தல வழியாக தெற்கு நோக்கி கதிர்காமத்திற்கு செல்லும் வழியில் உள்ள கல்கே என்னுமிடத்திலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் காட்டுப் பாதையில் 30 கி.மீ பயணம் செய்தும் கபிலித்தையை அடையலாம். அடுத்த வழி திஸ்ஸமஹாராம வழி-யாக யாள, நாவலடி, கும்புக்கன் ஆறு ஊடாக சின்னக் கபிலித்தை அம்மன் கோயிலை அடைந்து அங்கிருந்து வடமேற்கு நோக்கிச் செல்லும் பாதையில் கபிலித்தைக்குச் செல்லலாம்.

**கும்பகர்ணன் ஆறு (கும்புக்கன் ஓயா)**

கும்புக்கன் ஆற்றங்கரையில் இருந்த அம்மனைத் தரிசித்த பின் யாத்திரீகர்கள் ஆற்றைக் கடப்பதற்கு ஆயத்தமானார்கள். ஏனெனில் நாம் இன்றைய இரவுப் பொழுதை கழிப்பதற்கு தேர்ந்-தெடுத்துள்ள இடம் ஆற்றின் அக்கரையாகும். பல யாத்திரீகர்கள் அம்மன் கோயிலின் அருகில் இக்கரையிலேயே தங்கிவிடுவார்கள். அதே சமயம் எமது குழுவினர் அக்கரையில் தங்குவதற்கு முக்கிய காரணங்களும் உள்ளன.

சாதாரணமாக கும்புக்கன் ஆற்றில் பகலில் நீர்மட்டம் குறைவாக இருக்குமாம். இரவிலும் காலையிலும் சற்று அதிகமாக காணப்படுமாம். எனவே காலையில் ஆற்றைக் கடப்பது உசித-மல்ல. மேலும் விடியற்காலை 5.45 மணியளவில் எமது நடைப்-பயணம் ஆரம்பமாகும். அந்த நேரம் சூரிய வெளிச்சம் குறைவாக இருப்பதோடு, ஆற்று நீரும் மிகக் குளிராக இருக்கும். எனவே ஆற்றைக் கடப்பதில் சில சிரமங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதால் பகலிலே ஆற்றைக் கடக்கின்றனர்.

இக்கும்புக்கன் ஆறுதான் கிழக்கு மாகாணத்தையும், தென் மாகாணத்தையும் பிரிக்கும் எல்லையாக விளங்குகிறது. இவ்வா-ற்றை கும்புக்கன் ஓயா என அழைக்கின்றனர். இதன் இரு பக்கங்-களிலும் கும்புக் என சிங்கள மொழியில் அழைக்கப்படும் மருத மரங்கள் அதிகமாக காணப்படுவதால் இப்பெயர் உண்டானதாகக் கூறப்படுகிறது. பொதுவாக எல்லா ஆறுகளின் இருபக்கங்களிலும் இந்த கும்புக் மரங்கள் தான் அதிகளவில் வளர்ந்து காணப்படுகின்றன. எனவே கும்புக்கன் ஓயா எனும் பெயர் வருவதற்கு மரங்கள் காணப்-படுவது காரணமல்ல. இப்பெயர் வருவதற்கு முக்கிய காரணம் ஒன்று உள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் இராவணன் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில் இவ்வனப்பகுதி இராவணனின் தம்பியான கும்பகர்ணனின் அதிகாரத்தின் கீழ் இருந்தது. இவ்வனப்பகுதியின் மத்தியில் ஓடுவதும், பெரிய ஆறாகவும் காணப்படும் இதற்கு இப்-பகுதியை ஆட்சி செய்த கும்பகர்ணனின் பெயரிலேயே “கும்ப-கர்ணன் ஆறு” என்ற பெயரே வழங்கப்பட்டிருந்தது. இப்பெயரே காலப்போக்கில் மாறி சிங்கள மொழியில் கும்பகன ஓயா, என்றும் பின்பு கும்புக்கன் ஓயா எனவும் அழைக்கப்பட்டது. எனவே இவ்-வாற்றின் பழைய பெயர் கும்பகர்ணன் ஆறு என்பதாகும்.

இப்பகுதி கும்பகர்ணனின் அதிகாரத்தின் கீழ் இருந்தது என்பதற்கு ஓர் முக்கிய ஆதாரமும் உள்ளது. கந்தப்பெருமானின் புனித பூமியின் வட எல்லைப் பகுதியில் உள்ள லாகுகலை என்னுமிடத்தின் அருகில் உள்ள கரந்தஹெல எனும் மலையில் உள்ள ஓர் கற்குகை கும்பகர்ணன் பயன்படுத்திய குகையாகும். இக்குகையில் கி.மு.3ம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட பிராமிக்-கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதில் “கும்பகர திசஹ-

லென ஸகஸ" என எழுதப்பட்டுள்ளது. இது "கும்பகர்ண தீசனின் குகை" எனப் பொருள்படும். கும்பகர்ணன் பயன்படுத்திய இக்கு-கையை அவனது விசுவாசிகள், அல்லது உறவினர்கள் பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தி வந்திருக்க வேண்டும். அவர்களின் வழிவந்த தீசன் என்பவனின் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்க-ப்பட்டிருக்க வேண்டும். எனவே இக்கல்வெட்டு இப்பகுதியில் கும்பகர்ணனின் செல்வாக்கு நிலவியமையை உறுதி செய்கிறது.

இராவணன் காலத்தில் கும்பகர்ணன் நீர்ப்பாசனம், விவசா-யம் போன்றவற்றிற்கு பொறுப்பாக இருந்ததாகவும், கும்புக்கன் ஆற்றை மறித்து பல கல் அனைகளைக் கட்டி அதன் மூலம் நீரைத்-தேக்கி, அங்கிருந்து கால்வாய்களை வெட்டி பல குளங்களை அமை-த்து இப்பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் காணிகளில் விவசாயத்தை மேற்கொண்டதாகவும் குறிப்புகள் கூறுகின்றன. கும்பகர்ணனின் முக்கிய நகராக கும்புக்கன் என்னுமிடம் இருந்ததாகவும் கூறப்-படுகிறது. இவ்விடம் புனித வனத்தின் வட எல்லையில் அமைந்து-ள்ளது.

கும்பகர்ணனின் பெயரில் வழங்கப்பட்ட கும்புக்கன் ஆறு ஊவா பகுதியில் உள்ள மடுல்சீமை மலைத்தொடரில் உற்பத்தியாகி பல கிளை ஆறுகளையும் இணைத்துக்கொண்டு 116 கி.மீ தூரம் தெற்கு நோக்கிப் பாய்ந்து கூமுனையில் கடலுடன் கலக்கிறது. கும்புக்கன் ஆற்றுடன் இணையும் பிரதான ஆறு ஹசலந்தாவ ஓயா என அழைக்கப்படுகிறது. வருடம் முழுவதும் நீர் பெருகி ஓடும் வற்றாத ஜீவ நதிகளில் கும்புக்கன் ஆறும் ஒன்றாகும். பண்டைய மன்னர்கள் இவ்வாற்று நீரை மறித்து அணைகள் கட்டி பல குளங்களை அமைத்து விவசாயப் பயணிகளை மேற்கொண்டுள்ளனர்.

இராவணனின் தம்பி கும்பகர்ணன் உணவு சாப்பிடுவதற்கும், தூங்குவதற்கும் பெயர் போனவன் என்பது அனைவரும் அறிந்ததே. கும்புக்கன் ஆற்றில் குளித்த பின்பு நன்றாகத் தூக்கம் வருவதாக யாத்திரீகர்கள் பலர் பேசிக்கொண்டு செல்வது என் காதில் விழுந்தது. கும்பகர்ணன் ஆறு எனும் பெயருக்கேற்ப அதன் குளிர்ச்சியான, இதமான நீர் உடல் சோர்வை அகற்றி நல்ல தூக்கத்தைத் தருவது உண்மைதான்.

சரியாக நேரம் காலை 10.30 மணி எம்மோடு வந்த யாத்திரீகர்கள் எல்லோரும் கும்புக்கன் ஆற்றைக்கடப்பதற்காக ஆற்றின் கரைக்குச் சென்றனர். ஆற்றின் நீர் நடுப்பகுதியில் கழுத்தளவிற்கு இருந்தது. யாத்திரீகர்கள் ஆற்றைக் கடப்பதற்கு எம்மோடு வந்திருந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பல உதவிகளைச் செய்து கொண்டிருந்தனர். யாத்திரீகர்கள் பயணப்பொதிகளை வாங்கி அவற்றை தலையில் வைத்து சுமந்து கொண்டு அக்கரைக்குக் கொண்டு போய் சேர்த்தனர். சிறுவர்களையும், முதியவர்களையும் உயரம் குறைந்தவர்களையும் இருவர் இரு பக்கங்களிலும் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வந்து அக்கரையில் சேர்ந்தனர். சுமார் ஒரு மணித்தியால நேரத்தில் அனைவரும் அக்கரைக்குச் சென்று விட்டனர். அக்கரையில் ஆற்றின் கரையோரம் ஆழம் மிக்கதாக இருந்ததால் யாத்திரீகர்கள் இலகுவாக கரை ஏறுவதற்காக மரத்தடிகளைக் கொண்டு நீரிலிருந்து கரைவரை சிறிய ஏணியொன்றை அமைத்திருந்தனர். அக்கரைக்குச் சென்றவர்கள் தமக்கென்று ஓர் இடத்தைப் பிடித்து தமது உடமைகளை அங்கே வைத்துவிட்டு ஓய்வெடுத்தனர்.



கும்புக்கன் ஆற்றைக் கடக்கும் பாதயாத்திரீகர்கள்

**அக்கரை புளிய மரமும், மரத்தடி கோயிலும்**

மடத்துறையின் அக்கரையில் ஓர் பாரிய பழமை வாய்ந்த புளியமரம் ஓங்கி உயர்ந்து வளர்ந்து காணப்பட்டது. அம்மரத்தின்

கீழ் எமது குழுவினர் கொண்டு வந்த வேலாயுதங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இப்பாரிய விருட்சத்தை சுற்றி பல சிறியதும் பெரியதுமான மரங்கள் வளர்ந்து ஓர் சோலையாகக் காட்சி கொடுத்தது. அம்மரங்களின் கீழே யாத்திரீகர்கள் தமது பொலிதீன் விரிப்புகளை விரித்து குடும்பம் குடும்பமாக தங்கி இருந்தனர். மதிய உணவுக்கான சமையல் வேலைகள் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன.

யாத்திரீகர்களில் சிலர் ஆற்றில் இறங்கி குளித்துக் கொண்டி-ருந்தனர். சிலர் அவர்களிடம் தமது வெற்றுப் போத்தல்களை கொடுத்து சுத்தமான நீரை நிரப்பிப் பெற்றுக்கொண்டிருந்தனர். இவ்விடத்திலிருந்து தெற்குப் பக்கமாக ஓர் பாதை காணப்பட்டது. அதில் சுமார் 30 மீற்றர் தூரத்தில் இராணுவத்தினரின் பாதுகாப்பு முகாம் அமைந்திருந்தது. பாத யாத்திரை செல்லும் யாத்திரீகர்க-ளுக்காக இவ்வாறான தற்காலிக பாதுகாப்பு முகாம்கள் பல இக்காட்டுப் பாதையில் இடையிடையே அமைக்கப்பட்டிருந்தன.

எமக்கு அருகில் காணப்பட்ட முகாமில் யாத்திரீகர்களின் வசதிக்காக தற்காலிக கடை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அங்கு சுடச்சுட ரொட்டியும், மிளகாய் சம்பலும் விற்றுக் கொண்டிருந்-தனர். சிலர் அங்கு சென்று ரொட்டி வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இக்கடையில் சவர்க்காரம், பற்தூரிகை, பற்பசை, பிஸ்கட் பக்கெட்டுகள், தண்ணீர் போத்தல், சோடா, டொபி, சிப்ஸ் பக்கெட்டுக்கள் என அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருட்கள் பல விற்பனை செய்யப்பட்டன. சிலர் தமக்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர்.

நாம் தங்கி இருக்கும் இவ்விடத்தில் உள்ள பாரிய புளியமரம் ஓர் திறந்த வெளி மரக் கோயிலாகக் காணப்பட்டது. இம் மரத்தை பார்க்கும் பொழுது, முருகன் முதன் முதல் குடியேறிய இடமான கபிலித்தை என்னுமிடத்தில் உள்ள புளியமரத்தைப் போல அடி-யிலிருந்து மேல் நோக்கி முறுகிய வடிவத்தில் இம்மரமும் காணப்-பட்டது. இம்மரத்தின் கீழும் பண்டைய காலத்தில் யாத்திரை சென்றவர்கள் முருகனின் வேலை வைத்து வணங்கிச் சென்றதாக கூறப்படுகிறது. அக்கரையில் அம்மனையும் இக்கரையில் முருகனை-யும் யாத்திரீகர்கள் வணங்கிச் செல்வார்களாம்.

சரியாக பின்னேரம் 3.00 மணிக்கு மதிய உணவு தயாரானது. ஓய்வெடுத்துக் கொண்டிருந்தவர்களும், பேசிக்கொண்டிருந்தவர்களும் எழுந்து வரிசையாக நின்று தத்தமது உணவுத் தட்டுக்களில் உணவைப் பெற்று உண்டனர். உணவு உண்ட சிறிது நேரத்தில் உண்ட களைப்பும், நடந்து வந்த களைப்பும் ஒன்று சேர அனைவரும் கண்ணயர்ந்தனர். ஒன்றரை மணி நேர நித்திரையின் பின் எழுந்த சிலர் குளிப்பதிலும், சிலர் கால்முகம் கழுவுவதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

மாலை 6.30 மணிக்கு வழமைபோல் வேல் வைக்கப்பட்டிருந்த மரத்தடியில் எல்லோரும் கூடினர். பஜனை ஆரம்பமானது. சுமார் அரை மணி நேரத்தின் பின் பஜனை மற்றும் பூசை ஆகியவை நிறைவடைந்தன. இரவு 8.00 மணியளவில் இராப்போசனம் தயாராக இருந்தது. இரவு உணவின் பின் எல்லோரும் உறக்கத்திற்கு சென்றனர். நாமும் எமது இடத்தில் படுத்துக் கொண்டோம். நேற்றைய இரவு வெட்ட வெளியில் உறங்கினோம். வானத்தில் நட்சத்திரங்கள் தெரிந்தன. இன்று வானில் நட்சத்திரங்களை பார்க்க முடியவில்லை. நாம் தங்கி இருந்த இடத்தில் மரங்கள் அடர்ந்து காணப்பட்டதால் வானம் எம் கண்களுக்கு தெரியவில்லை. இன்றைய தினம் மொத்தமாக 11 கி.மீ தூரம் நடந்து வந்துள்ளோம். இத்தூரத்தை கடப்பதற்கு எமக்கு சுமார் 5 மணித்தியாலங்கள் சென்றன. இன்றைய பாத யாத்திரை எந்தத் தடங்கலுமின்றி நிறைவு பெற்றமைக்கு இறைவனுக்கு நன்றி கூறிக்கொண்டிருந்த படியே, வரும் வழியில் நாம் கண்ட, கதைத்த, ரசித்த, சுவைத்த விடயங்கள் அனைத்தையும் மனம் அசைபோட்டுக் கொண்டிருந்த போது கண்கள் உறக்கத்தை தழுவின.


கும்புக்கன் ஆற்றின் முகத்துவாரம்

# 11. கும்புக்கன் முதல் நாவலடி வரை

## கெவுளிவட்டை வெளி (கெவுளிவெல எலிய)

மூன்றாவது நாள் காலை 4.30 மணியளவில் நாம் நித்திரை விட்டெழுந்தோம். எமது காலை கடன்களை முடித்து விட்டு பாதயாத்திரை ஆரம்பித்தபோது நேரம் காலை ஆறு மணி. "அரோகரா" என்ற கோஷம் போட்டவாறு யாத்திரீகர்கள் நடக்க ஆரம்பித்தனர். தெற்கு நோக்கி செல்லும் பாதையில் நாம் சென்ற போது சுமார் 50 மீற்றர் தூரத்தில் பாதையின் குறுக்கே தடை போடப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடி இருந்தது. அதைக் கடந்து செல்லும் பாதை மாணிக்க கங்கை வரை செல்கிறது. நாம் கூமுனை சரணாலயத்திலிருந்து யாள பூங்காவிற்குள் நுழைகிறோம். அத்துடன் கிழக்கு மாகாணத்திலிருந்து தென் மாகாணத்திற்குள் நுழைகிறோம். இன்று நாம் சென்றடைய வேண்டிய இடம் நாவலடி.

பாதையின் இரு பக்கங்களிலும் பற்றைகளும் மரங்களும் காணப்பட்டன. சுமார் 15 நிமிட நடையின் பின் ஓர் வெட்ட-வெளியைக் காணக் கூடியதாக இருந்தது. கெவுளிவெல எலிய என அழைக்கப்படும் இவ்விடம் ஆற்றங்கரையிலிருந்து ஒரு கி.மீ தூரத்தில் உள்ளது. கும்புக்கன் ஆற்றங்கரையிலுள்ள மடத்துறை அம்மனை கெவுளி அம்மன் என அழைக்கின்றனர். இது காளிய-ம்மனைக் குறிக்கும் பெயராகும். இதை அடுத்து ஆற்றின் அடுத்தப் பக்கம் காணப்படும் வெட்டைவெளி "காளிவெளி" எனப் பெயர் பெற்றது. அதுவே மருவி இன்று கெவுளி வெளி என அழைக்கப்-படுகிறது. கெவுளிவெளியில் அங்கும் இங்குமாக காட்டிலந்தை மரங்கள் அதிகளவில் காணப்பட்டன. வலது பக்கம் மரங்கள் நிறைந்த காடும், வெளியின் இடது பக்கம் சேறும், குழியுமாக ஆங்காங்கே நீர் நிரம்பிக் காணப்பட்டது. சிறிது தூரத்தில் இவ்வெளியைக் கடந்தவுடன் சிறிய மரங்கள் நிரம்பிய காட்டினூடாக யாத்திரை தொடர்ந்தது.

## ஹலாங்கொட வெளி

சுமார் 200 மீற்றர் நீளமான காட்டைக் கடந்தவுடன் ஓர் பொட்டல் தரைவெளியைக் காணக் கூடியதாக இருந்தது. வெளியின் இரு பக்கங்களிலும் சற்று தூரத்திலே மரங்களும்,

பற்றைகளும் காணப்பட்டன. சுமார் 500 மீற்றர் தூரம் வரை இப்பொட்டல் தரைவெளி நீண்டு காணப்பட்டது. இவ்வெளியில் அங்கொன்றும், இங்கொன்றுமாக காட்டிலந்தை மரங்கள் வளர்ந்து காணப்பட்டன. இவ்வெளியின் இறுதிப்பகுதியில் சற்று தூரத்தில் இடதுபக்கமாக நீர் நிரம்பிக் காணப்பட்டது. நீர்ப்பரப்பை அடுத்து அடர்ந்த காடு தென்பட்டது. இவ்வெளி ஹலங்கொட வெளி என அழைக்கப்படுகிறது. கெவுளிவட்டையிலிருந்து இங்கு வருவதற்கு 10 நிமிடங்கள் சென்றன. இப்பொட்டல் தரை வெளியின் முடிவில் இராணுவத்தினரின் குடிநீர்த்தாங்கி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. யாத்திரீகர்கள் வரிசையாக நின்று தமது வெற்றுப் போத்தல்களில் நீரை நிரப்பிக் கொணடிருந்தனர். இவ்விடத்தில் இராணுவ சிப்பா-ய்கள் இருவர் யாத்திரீகர்களுக்கு நீரை நிரப்பிக் கொடுத்துக்-கொண்டிருந்தனர்.

**எத்தரக்கை வெளி**

ஹலங்கொட வெளியை அடுத்து ஓர் சிறிய பற்றைக்காடு காணப்படுகிறது. இக்காட்டைக் கடந்தவுடன் மீண்டும் ஓர் வெட்-டைவெளி தென்பட்டது. இவ்வெளியிலே ஆங்காங்கே காணப்-பட்ட காட்டிலந்தை மரங்களின் கீழ் யாத்திரீகர்கள் பலர் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். நாமும் சிறிது நேரம் ஓய்வெ-டுத்தோம். எனது கைக்கடிகாரம் நேரம் காலை 7.00 மணி எனக் காட்டியது.



எத்தரக்கை வெளி

சுமார் 5 நிமிட நேரத்தில் மீண்டும் ஓர் வெட்டவெளியை அடைந்தோம். இது எத்தரக்கே எலிய என அழைக்கப்படும் எத்-தரக்கை வெளியாகும். காட்டிலந்தை மரங்களே இங்கு அதிகளவில் காணப்பட்டன. இவ்வெளியில் வடமேற்குப்பக்கத்தில் தூரத்திலே ஓர் உயர்ந்த மலையைக் காணக்கூடியதாக இருந்தது. இம்மலையின் பெயர் மண்டகல மலை என்பதாகும்.

### பெரிய வாகுவூர்வெளியும், களப்பும் (மஹா கஜபா எலிய)

எத்தரக்கை வெளியைக் கடந்தவுடன் மீண்டும் ஓர் சிறிய காட்டை கடந்து சென்றோம். காட்டின் முடிவில் மீண்டும் ஓர் பரந்த வெளி காணப்பட்டது. இவ்வெளியே மஹா கஜபா எலிய எனும் பெரிய வாகுவூர் வெளியாகும். இவ்வெளியின் மத்தியில் சுமார் 400 மீற்றர் நீளமுள்ள பரந்த களப்பு அமைந்துள்ளது. ஆனால் பாத யாத்திரை செல்லும் காலங்களில் இக்களப்பில் சிறிதளவு நீரையே காணலாம். இருப்பினும் இக்களப்பில் வருடம் முழுவதும் சிறிதளவு நீராவது காணப்படுவதற்கு காரணமாக அமைவது இக்களப்பில் கலக்கும் இரு சிற்றாறுகளேயாகும். பெரிய வாகுவூர் களப்பிற்கு அதிகளவு நீரைக் கொடுப்பது கரம்பை ஆறாகும். களப்பின் வடக்குப் பக்கத்தில் கரம்பை ஆறு கலக்கிறது. தெற்குப்பக்கத்தில் ஓர் சிற்றாறும் இக்களப்பில் கலக்கிறது. களப்பு நீர் தெற்கு நோக்கி சுமார் ஒன்றரை கி.மீ தூரத்தில் கடலில் சங்கமமாகிறது.




பெரிய வாகுவூர் வெளி (மஹா கஜபா எலிய)

பெரிய வாகுவூர் வெளி எனும் இப்பிரதேசம் உட்பட்ட மண்டாகல குளத்தின் தெற்குப்பகுதியில் இருந்த நெல்வயல் வெளிகளின் எஞ்சிய இடங்களே இன்று நாம் காணும் வெட்டவெளியாகும். கி.பி. 2ம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த கஜபாகு மன்னன் காலத்தில் நன்கு அபிவிருத்தி செய்யப்பட்டு நெல் பயிரிடப்பட்ட இவ்விடங்களில் சில அம்மன்னன் பெயரிலேயே பெரிய வாகுவூர் வெளி, சின்ன வாகுவூர் வெளி என இன்றும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கஜபாகு காலத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இப்பகுதிகள் யாவும் இராவணனின் தம்பி கும்பகர்ணனால் அபிவிருத்தி செய்யப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டமை பற்றி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

பெரிய வாகுவூர் வெளியின் வடமேற்குப்பக்கத்தில் ஓர் உயரமான மலையைக் காணக்கூடியதாக இருந்தது. இது மண்டாகல் மலைத்தொடரில் அமைந்துள்ள கிரிபத்தென மலையாகும்.

**மண்டாகல் மலை**



மண்டாகல் மலை

மண்டாகல் குளத்தின் மேற்குப்பக்கத்தில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் மண்டாகல் மலைத்தொடர் அமைந்துள்ளது. இம்மலைத் தொடரின் உச்சிப்பகுதியே “கிரிபத்தன ஹெல” எனப் பெயர் பெற்றுள்ளது. இது 160 மீற்றர் உயரமான சிகரமாகும்.

இம்மலைப்பகுதியில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்துள்ளமை தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்-கப்பட்டுள்ளன. இம்மலைத்தொடரில் காணப்படும் இயற்கையாக அமைந்துள்ள கற்குகைகளில் இவை பொறிக்கப்பட்டுள்ளன.

மண்டகல் மலைப்பகுதியில் மொத்தமாக 25 பிராமிக்கல் வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் முருகன் தொடர்பாக ஒரு கல்வெட்டும், பிராமணர் தொடர்பான 2 கல்வெட்டுக்களும், முனிவர்கள் தொடர்பான 5 கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன. இவற்றில் முருகன் தொடர்பான கல்வெட்டில் "குடும்பத்தலைவன் குமரதீசனின் புதல்வன் சூள குமரனினதும் வணக்கத்திற்குரிய தேவனினதும் குகை" என எழுதப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள குமரன் எனும் சொல் முருகனைக் குறிப்பதாக பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். மேலும் கல்வெட்டில் "வணக்கத்திற்குரிய தேவனின் குகை" என குறிப்பிடப்பட்டுள்ளமை கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த தேவன் எனும் சந்நியாசி அல்லது முனிவர் தங்கிச் சென்றமை பற்றிய குறிப்பாக இருக்க வேண்டும். தேவன் என்பவர் முனிவர் என்ற படியால் தான் வணக்கத்திற்குரிய எனும் அடைமொழியுடன் குறிப்பிடப்பட்டுள்ளார்.

பிராமணர் தொடர்பான கல்வெட்டுக்களில் ஒன்றில் "பிரா-மணனின் மகன் பூதி" எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்ததில் "பிராமணன் சுமனின் குகை" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. முனிவர்கள் பற்றிய ஏனைய 4 கல்வெட்டுக்களில் இரண்டில் "சுவாமி சுமனின் குகை" எனவும் அடுத்ததில் "சுவாமி தீசனின் குகை" எனவும் அடுத்ததில் வணக்கத்திற்குரிய தத்தன், ஜோதி எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு தரும் செய்திகளிலிருந்து மண்டாகல் மலைப்பகுதியில் இருந்த குகைகளில் முருக வழிபாடு நிலவியதோடு பிராமணர்களும், சந்நியாசிகளும் இங்கு வாழ்ந்துள்ள-மையும் உறுதியாகிறது.

இக்கல்வெட்டுக்கள் யாவும் பேராசிரியர் பரணவித்தாரண-வின் "Inscription of Ceylon - Volume-1" எனும் நூலில் 582,577, 589,594,595,600,592 ஆகிய இலக்கங்களில் பதிவு செய்யப்பட்டு-ள்ளமை குறிப்பிடத்தக்கது.

### கொட்டதாமுஹெல மலை

மண்டாகல் மலையின் வடமேற்கில் ஒரு கி.மீ தூரத்தில் கொட்டதாமுஹெல எனும் மலை அமைந்துள்ளது. மண்டாகல் குளத்திற்கும் அத்துரு மித்துரு குளத்திற்கும் இடையில் இம்மலை காணப்படுகிறது. கி.மு. 3ம் நூற்றாண்டில் தென்கிழக்கிலங்கையை ஆட்சி செய்த பாண்டிய வம்சத்தை சேர்ந்த கதிர்காம சத்திரிய மன்னர்களின் கேத்திர முக்கியத்துவம் வாய்ந்த கோட்டை இம்மலையில் அமைக்கப்பட்டிருந்தமையால் இதன் பெயர் கோட்டைமலை என அழைக்கப்பட்டு பின்பு இதுவே காலப்போக்கில் திரிபடைந்து கோட்டஹெல எனவும், பின்பு கொட்டதாமு ஹெல எனவும் மருவியுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சிங்கள மொழியில் "ஹெல" என்பது மலை எனப் பொருள்படுகிறது.

கதிர்காம சத்திரியர்கள் பாண்டிய வம்சத்து இந்துக்கள் என்பதற்கும், அவர்களின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமே இந்த கோட்டைமலை எனும் கொட்டதாமுஹெல என்பதற்கும் ஆதாரமாக இம்மலையில் உள்ள குகைகளில் பொறிக்கப்பட்டுள்ள பிராமிக்கல்வெட்டுக்கள் விளங்குகின்றன. மொத்தமாக இங்கு காணப்படும் 20 கல்வெட்டுக்களில் 14 கல்வெட்டுக்களில் பாண்டியனின் சின்னமான மீனும், இந்துக்களின் சின்னங்களில் ஒன்றான சுவாஸ்திகாவும் பொறிக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கல்வெட்டுக்களில் இப்பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த 10 சகோதரர்களில் சிலரின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் தொடர்பான இன்னுமோர் இடமும் இப்பகுதியில் உள்ளது. கோட்டைமலையின் வடகிழக்குப்பக்கத்தில் சுமார் 10 கி.மீ தூரத்தில் கூமுனை குளத்தின் அருகில் அமைந்துள்ள போவத்தகல மலையிலும் மீன் சின்னமும், சுவாஸ்திகாவும் இவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்ட 3 பிராமிக்கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இருப்பினும் கொட்டதாமுஹெல மலையே இப்பாண்டியர்களின் முக்கிய இடம் என்பது அங்கு அதிகளவில் காணப்படும் இவர்களின் கல்வெட்டுக்கள் மூலம் உறுதியாகிறது.

கும்புக்கன் ஆற்றின் இருமருங்கிலும் கோயில்களும், குளங்களும், குடியிருப்புகளும் கும்பகர்ணன் காலத்தில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்ட பின்பு கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களாலும் இப்பணிகள் இப்பகுதியில் பேணப்பட்டு வந்துள்ளமை

கல்வெட்டுக்கள் மூலம் தெரிய வருகிறது. இங்குள்ள குகைகளில் ஒன்றில் "குமரன்" எனும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளமை இப்பகுதியில் முருகவழிபாடு நிலவியமையை கூறுகிறது. அத்துடன் இன்னுமோர் கல்வெட்டில் "வணக்கத்துக்குரிய திஸ்ஸகுத்தன்" எனப் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கதிரமலைக்கு வந்த முனிவர் ஒருவர் இங்கு தங்கியிருந்தமையும் தெரிய வருகிறது.

**கரம்பை ஆறு**

பெரிய கஜபாகு வெளியில் சற்று தூரம் நடந்த பின் நாம் கரம்பை ஆற்றை அடைந்தோம். எங்களுக்கு முன்பு வந்த யாத்திரீகர்களில் சிலர் தமது துணிகளை கழுவி காற்றிலே உலர்த்திக் கொண்டிருந்தனர். கரம்பை ஆற்றிலே நல்ல சுத்தமான நீர் ஓடிக்கொண்டிருந்தது. நாம் ஆற்றை கடக்கும் போது ஆற்றிலே ஒன்றரை அடி ஆழத்திலேயே நீர் காணப்பட்டது. ஒன்றரை மணித்தியால நடையின் பின்பு உடலிலே சுத்தமான நீர் பட்டது உற்சாகமாக இருந்தது.



கரம்பை ஆறு

கும்புக்கன் ஆற்றங்கரையிலிருந்து நாவலடியை நோக்கி செல்லும் போது நான்கு வெட்டவெளியைக் கடந்த பின்பே கரம்பை ஆற்றைக் காண்கிறோம். நாம் கடந்த 4 கி.மீ தூரத்திற்குள் வேறு எந்த நன்னீர் நிலைகளும் வழியில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து வடமேற்குப் பக்கத்தில் 7 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள மண்டாகல் மலைப்பகுதியிலிருந்து மண்டாகல குளத்தை அடைந்து அங்கிருந்து நீரேந்தி வந்தே கரம்பை ஆறு பெரிய கஜபாகு களப்பில் கலக்கிறது.

**மண்டாகல் குளம்**

பெரிய கஜபாகு வெளியின் வடமேற்கில் சுமார் 6 கி.மீ தூரத்தில் மண்டாகல் குளம் அமைந்துள்ளது. இன்று தூர்ந்து போய் காணப்படும் இக்குளம் ஒரு காலத்தில் இப்பகுதியின் பயிர்ச்செய்கைக்கு மிக்க பயனுள்ளதாக இருந்தது. மிக நீண்ட தூரத்தில் உள்ள மஹாவெல தொட்ட என்னுமிடத்தில் கும்புக்கன் ஆற்றின் குறுக்கே ஓர் தடுப்பணை அமைத்து அங்கிருந்து ஓர் கால்வாயை சுமார் 12 கி.மீ நீளத்திற்கு வெட்டி மண்டாகல் குளத்திற்கு நீரை அனுப்பியுள்ளனர். மஹாவெல தொட்ட மண்டாகல் குளத்தின் வடக்கில் உள்ளது.

கந்தக் கடவுளின் புனித பூமியில் அமைந்துள்ள இரு பெரிய குளங்களில் மண்டாகல் குளமும் ஒன்றாகும். 1200 ஏக்கர் பரப்பளவுடைய இக்குளத்தின் பழமை வாய்ந்த அணை இரண்டரை கி.மீ நீளமும் 20 அடி உயரமும் கொண்டதாகும். இக் குளத்தின் கலிங்குகல்லின் அருகில் நகரி எழுத்துக்களில் எழுதப்பட்ட இரண்டு வரிக்கல்வெட்டொன்று உள்ளது.

கந்தக்கடவுளின் புனித வனத்தில் கும்புக்கன் ஆற்றின் கிழக்கு மற்றும் மேற்குப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலும் தூர்ந்து போய் கவனிப்பாரற்றுக் கிடக்கும் இக்குளங்கள் யாவுமே பண்டைய காலத்தில், கும்பகர்ணன் இப்பகுதியை ஆட்சி செய்த காலத்தில், அவனால் கட்டப்பட்டவையாகும். கும்பகர்ணன் காலத்தில் கும்புக்கன் ஆறு, அத்துரு மித்துரு ஆறு, அலகொல ஆறு ஆகியவற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டி நீரை சேமித்து அங்கிருந்து கால்வாய்களை வெட்டி ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு

நெல் பயிரிடப்பட்டது. இவ்வாறு கும்பகர்ணனால் கட்டப்பட்ட குளங்களில் மண்டாகல் குளமே மிகப்பெரியதாகும். இக்குளத்தின் கிழக்குப் பகுதியிலும், தென் பகுதியிலுமே ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல்வயல் வெளிகள் அமைந்திருந்தன. மண்டாகல் குளத்தின் தெற்குப்பகுதியில் இன்று நாம் காணும் வெட்டவெளிகள் அனைத்தும் இவ்வயல் காணிகளின் எஞ்சிய பகுதிகளே.

***சின்ன வாகுவூர் - வெளியும், ஆறும், களப்பும் (உட கஜபா எலிய)***


பெரிய வாகுவூர் வெளியைக் கடந்தவுடன் மீண்டும் ஓர் சிறிய காட்டைக் கடந்தோம். இக்காட்டுப் பகுதிகளிலெல்லாம் பொதுவாகவே ஓர் முள்ளுப்பற்றை வளர்ந்து காணப்படுகிறது. இலைகள் குறைவாகவும், முட்கள் அதிகமாகவும் இச்செடியில் காணப்படுகிறது. இம்முள் கோழி முள் எனவும், வெள்ளி முள் எனவும் அழைக்கப்படுகிறது. வெள்ளை நிறத்தில் கோழிக்கால்களைப் போல் இவை காணப்படுவதால் இப்பெயர் பெற்றுள்ளது. மிகவும் கடினமான, இலகுவில் உடையாத வண்ணம் உறுதியாக இம்முட்கள் காணப்படுகின்றன. ஒன்று முதல் இரண்டு அங்குலம் வரை நீளமாகக் காணப்படும் இம்முட்கள் நாம் நடந்து செல்லும் பாதையில் இருபக்கங்களிலும் வளர்ந்து காணப்படுகின்றன. சிங்கள மொழியில் இவை “குக்குள் கட்டுவ” என அழைக்கப்படுகின்றன.



கோழி முள் (குக்குள் கட்டுவ) – சின்ன வாகுவூர்

காட்டைக் கடந்தவுடன் மீண்டும் ஓர் பெரிய வெளியை அடைந்தோம். இதுவே உட கஜபாஎலிய என அழைக்கப்படும் சின்ன வாகுவூர் வெளியாகும். இவ்வெளியில் நீர் நிரம்பிக் காணப்பட்டதன் அடையாளங்கள் தென்பட்டன. இந்நீர்ப்பரப்பு உட கஜபாகு களப்பு என அழைக்கப்படுகிறது. இதன் வடமேற்குப் பக்கத்தில் இருந்து ஓடி வரும் ஒரு சிற்றாறு இக்களப்பில் கலக்கிறது. இச்சிற்றாறு உட கஜபாகு வெளி ஆறு என அழைக்கப்படுகிறது.


மழைக்காலங்களில் இக்களப்பில் நீர் பெருகி அருகில் உள்ள மஹா கஜபாகு வெளி களப்பு நீருடன் கலந்து கடலில் சங்கமாகிறது. ஆனால் நாம் பாதயாத்திரை செய்த காலத்தில் இக்களப்பில் நீரைக் காண முடியவில்லை. கோடை காலமாகையால் நீர் வற்றி வரண்டு போய், சேறு காய்ந்து வெடித்துக் காணப்பட்டது. களப்பில் நீர் இருந்த காலத்தில் நீரின் மேற்பரப்பில் நீர்ப்பாசி படர்ந்து இருந்திருக்க வேண்டும். ஏனெனில் சேற்று வெடிப்பின் மீது வெள்ளை நிறத்தில் பாசி காய்ந்து பஞ்சு போல் பரவலாகக் காணப்பட்டது.



சின்ன வாகுவூர் களப்பு (உட கஜபா வெளி)

### வலஸ்கேம காடு

உட கஜபாகு வெளியைக் கடந்தவுடன் ஓர் பெரிய காட்டை ஊடறுத்துச் செல்ல வேண்டியுள்ளது. சுமார் 3 கி.மீ நீளமுள்ள இக்காட்டை வலஸ்கேம காடு என அழைக்கின்றனர். இப்பகுதியில் வலஸ்கேம என்றழைக்கப்படும் "கரடிச்சுனை" அமைந்திருப்பதால் இப்பெயர் உண்டானது. இக்காட்டில் நாம் நடந்து செல்லும் பாதையின் இருபக்கங்களிலும் சில இடங்களில் சிறிய பற்றைக்காடும், சில இடங்களில் பெரிய மரங்கள் உள்ள காடும் காணப்படுகிறது. பாதையில் சில இடங்களில் ஆற்று மணல் நிரம்பிக் காணப்பட்டது. மழை காலங்களில் வனப்பகுதியில் உள்ள சிறிய ஆறும், ஓடைகளும் நீர் நிரம்பி அவை போக வழியில்லாமல் பாதை வழியாக ஓடி களப்புகளில் கலக்கின்றன. இவ்வாறு வேகமாக ஓடும் நீரினால் பாதையிலுள்ள மண், சேறு போன்றவை கழுவப்பட்டு மணல் மாத்திரம் மிச்சமாகிறது. 3 கி.மீ நீளமான இக்காட்டுப்பாதையில் சுமார் 500 மீற்றர் தூரம் மணல் பாதையே காணப்படுகிறது.



வலஸ்கேம காடு - மணல் பாதை

பாதை முழுவதும் மணல் நிரம்பி காணப்படும் இவ்விடத்தின் இரு பக்கங்களிலும் மரங்கள் வளர்ந்திருந்ததால் அவற்றின் நிழலில் மணல் குளிர்ச்சியாகக் காணப்பட்டது. இக்குளிர்ந்த மணலிலே

யாத்திரீகர்கள் பலர் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். சிலர் படுத்திருந்தனர். வலஸ்கேம காட்டுப்பகுதியை கால்நடையாக கடப்பதற்கு சுமார் ஒன்றரை மணிநேரம் தேவைப்படுகிறது. வெட்டவெளிகள் இல்லாத இப்பகுதியிலேயே அதிகமான யாத்திரீகர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். இக்காட்டுப் பகுதியை கடப்பதற்கு குறைந்தது மூன்று தடவைகளாவது ஓய்வெடுக்க வேண்டும்.

### எத்திலி வெளி நாகநாதர் கோயில்

வலஸ்கேம எனும் கரடிச் சுனைக் காட்டை கடந்தவுடன் ஓர் வெட்டை வெளி தென்படுகிறது. இது எத்திலி வெல வெளி என அழைக்கப்படுகிறது. வலஸ்கேம காட்டின் முடிவில், எத்திலி வெளியின் தொடக்கத்தில் பாதையின் இடதுபக்கம் ஓர் பாரிய விருட்சம் ஓங்கி வளர்ந்து காணப்பட்டது. இம்மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் பலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர்.

இம்மரம் நாகநாதர் குடிகொண்டிருக்கும் புனித மரம் எனத் தெரிய வருகிறது. சுமார் 4 கி.மீ நீளமான வலஸ்கேம காடு விஷ ஜந்துக்கள் அதிகளவில் வாழும் இடமாகும். உட கஜபாகு வெளியைக் கடந்தவுடன் இக்காடு ஆரம்பமாகிறது. இப்பெருங்காட்டில் நுழையும் பொழுது தமக்கு விஷ ஜந்துக்கள் மூலம் எந்தவித ஆபத்தும் ஏற்படக் கூடாது என பாத யாத்திரீகர்கள் நாகநாதரை வேண்டிக் கேட்ட வண்ணம் தமது நடைப்பயணத்தை மேறகொண்டு, இறுதியில் காட்டைக் கடந்து வெட்டவெளியைக் கண்டவுடன், தம்மை இதுவரை பாதுகாத்து பத்திரமாக கொண்டு வந்து சேர்த்த நாகநாதரை இம்மரத்தின் கீழ் வைத்து பூஜித்து சென்றுள்ளனர். பண்டைய காலம் முதல் இம்மரத்தின் கீழ் பாத யாத்திரீகர்கள் நாகநாதரை வழிபட்டு பின்பு யாத்திரையை மேற்கொள்வதாக முதியவர்கள் கூறுகின்றனர்.

### எத்திலி வெல வெளியும், களப்பும், ஆறும் (பெருவெட்டை)

சுமார் இரண்டு மணித்தியால நடைப்பயணத்தின் பின் நாம் ஓர் வெட்டவெளியை அடைந்தோம். மரமோ, செடியோ இல்லாமல் பாலைவனம் போல் இது காணப்பட்டது. இது எத்திலிவெல வெளி என அழைக்கப்படுகிறது. இவ்வெளியை "பெருவெட்டை" எனவும் அழைக்கின்றனர். இவ்விடத்தை நாம்

அடையும் பொழுது நேரம் காலை 10 மணி. இவ்வெளியில் மரங்களோ, பற்றைகளோ இல்லாமல் இருப்பதால் மத்தியானம் போல் வெயில் சுட்டுப் பொசுக்கியது. இப்பெரு வெட்டையில் நடக்கத் தொடங்கி 15 நிமிடங்களில் வெட்டையின் வலது பக்கத்தில் இருந்த மரங்களின் கீழ் பலர் ஓய்வெடுத்தனர். நாமும் சில நிமிட ஓய்வுக்குப்பின் மீண்டும் நடக்கத் தொடங்கினோம். பாலைவனம் போல் காட்சி தந்த இவ்வெட்டையைக் கடப்பதற்கு மேலும் 30 நிமிடங்கள் சென்றன. இவ்வெளியின் இடது பக்கம் எத்திலிவெல களப்பு காணப்பட்டது. களப்பிலே சிறிதளவு நீரையே காணக்கூடியதாக இருந்தது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட வெள்ளை நிற நீர்ப்பறவைகள் மிகத்தூரத்தில் தெரிந்தன. களப்பை அடுத்து காடும் அதை அடுத்து வெள்ளை நிற மணல் மேடும் காணப்பட்டது. சற்று உயரமான இம்மணல் மேட்டை அடுத்து கடல் அமைந்துள்ளது. எத்திலிவெல களப்பில் இரண்டு சிற்றாறுகள் கலக்கின்றன. களப்பின் கிழக்குப்பக்கத்தில் ஒன்றும், அடுத்தது மேற்குப்பக்கத்திலும் கலக்கின்றன.

**எத்திலிக் குளமும், நாபடகஸ் குளமும்**

எத்திலிவெல களப்பின் வடக்குப் பக்கத்தில் சுமார் ஒரு கி.மீ தொலைவில் எத்திலிக்குளம் எனும் ஓர் சிறிய குளம் அமைந்துள்ளது. இக்குளத்திலிருந்து இரு சிற்றோடைகளில் நீர் வெளியேறுகிறது. இதில் ஒன்று தெற்குப் பக்கத்தில் உள்ள எத்திலிவெல களப்பிலும் அடுத்த ஓடை தென்மேற்குப்பக்கமாக ஓடி உப்பாற்றுக் களப்பிலும் கலக்கின்றன. எத்திலிக்குளத்தின் மேற்குப் பக்கத்தில் சுமார் ஒன்றரை கி.மீ தூரத்தில் நாபடகஸ் குளம் அமைந்துள்ளது. இக்குளம் எத்திலி குளத்தை விட நான்கு மடங்கு பெரியதாகும். இக்குளத்தின் தெற்குப்பக்கத்தில் ஒரு கி.மீ தூரத்தில் உப்பாற்றுக் களப்பு அமைந்துள்ளது.

**உப்பாற்று வெளியும், களப்பும் (பஹல பொத்தானை எலிய)**

எத்திலிவெல வெளியைக் கடந்தவுடன் ஒரு சிறிய காடு உள்ளது. சுமார் 15 நிமிடங்களில் இக்காட்டை கடக்கக் கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் ஒரு பெண் யாத்திரீகர் இரும்புக் கைத்தடியின் துணையுடன் நடந்து வந்து கொண்டிருந்தார். தனது பருத்த உடலுடன் ஒவ்வோர் அடியாக எடுத்து வைத்து அவர்


நடந்து வந்தது அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் கொடுத்தது. 1990ம் ஆண்டு கலவரத்தின் போது தாக்குதலுக்குள்ளாகி அவரது கால் முறிந்ததாகவும் தெரிய வந்தது. இரண்டு கால்களும் திடகாத்திரமாக இருப்பவர்கள் கூட கடினமாக மேற்கொள்ளும் இப்பாதயாத்திரையில் ஒரு காலுடனும், ஊன்று கோலுடனும் இவர் நடந்து வந்தார். முருகப் பெருமான் மீது அவர் கொண்டுள்ள அதீத பக்தியும், தனது திடமான நம்பிக்கையும், இந்த புனித வனத்தில் நிலவும் கந்தனின் அருளாட்சியுமே இவரைக் கொண்டு செல்கிறது என்பதை நினைத்து ஆச்சரியமடைந்தேன்.

காட்டைக் கடந்தவுடன் மீண்டும் ஓர் அழகிய வெட்டை-வெளி எம்மை வரவேற்றது. அதுதான் நாம் ஆவலுடன் எதிர்-பார்த்து வந்த உப்பாற்று வெளியாகும். இவ்வெளியை சிங்கள மொழியில் "பஹல பொத்தானை எலிய" என அழைக்கின்றனர். ஏனைய வெட்டவெளிகளை விட உப்பாற்று வெளி அழகாகக் காட்சியளித்தது. இவ்வழகிற்கு காரணமாக இருப்பது வெளியின் மத்தியில் ஓடும் உப்பாறாகும். உப்பாற்று வெளியின் தெற்குப்-பக்கத்தில் உப்பாற்று களப்பு அமைந்துள்ளது. உப்பாற்று களப்பு நீரும், எத்திலிவெல களப்பு நீரும் 2 கி.மீ கிழக்குப்பக்கத்தில் உள்ள பொத்தானை என்னுமிடத்தில் ஒன்று சேர்ந்து மேலும் 2 கி.மீ தூரம் தெற்கில் உள்ள மிஹிராவ என்னுமிடத்தின் அருகில் பொத்தானைக் குடாவில் கடலுடன் கலக்கின்றன.

உப்பாற்று வெளி சுமார் 400 மீற்றர் அகலம் கொண்ட பெரிய வெளியாகும். மழை காலங்களில் இவ்வெளி முழுவதும் களப்பு நீர் நிரம்பி இது ஓர் குளம் போல் காட்சியளிக்கும். இக்காலப்பகுதியில் காட்டுயானைகள் நூற்றுக்கணக்கில் கூட்டம் கூட்டமாக வந்து நீர் பருகிச் செல்லும். பின்பு கோடை காலம் தொடங்கும் பொழுது நீர் கொஞ்சம் கொஞ்சமாக வற்றி சேறும் சகதியுமாக காணப்படும். இக்காலங்களிலும் யானைகள் கூட்டமாக சேற்றில் இறங்கி சென்று தூரத்தில் உள்ள நீரை பருகிச் செல்லும். கோடை காலத்திலே மேலும் நீர்வற்றி சேறும் காய்ந்து வெட்ட வெளியும் வரண்டு காணப்படும் யானைகள் உப்பாற்றுக்கு நீர்குடிக்க படையெடுத்தமைக்கு அடையாளமாக உப்பாற்றின் அக்கரைப்பக்கம் காய்ந்து வரண்டு போயுள்ள சேற்றில் ஆயிரக் கணக்கில் யானைகளின் பாதச்சுவடுகளின் அடையாளங்களை காணக்கூடியதாக இருந்தது.




படம் 41 - உப்பாறு



படம் 42 - தெமட்டகல் மலை



படம் 43 - நாவலடி கிணறுகள்



படம் 44 - நாவலடி முருகன் கோயில்



படம் 45 - நாவலடியில் தெய்வீக பஜனை



படம் 46 - மேல் பொத்தானை வெளி



படம் 47 - பெரிய இராவணன் கோட்டை வெளிச்ச வீடு



படம் 48 - குருந்தி ஆறு

### உப்பாறு (பொத்தானை லேவய)

உப்பாற்று வெளியின் மத்தியில் ஓடும் உப்பாறு பாத-யாத்திரீகர்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். எமக்கு முன்பே வந்த யாத்திரீகர்கள் எல்லோரும் ஆற்றில் இறங்கி குளித்துக் கொண்டிருந்தனர். பலர் தமது அழுக்குத் துணிகளை கழுவிக் கொண்டிருந்தனர். உப்பாற்றை நாம் கடந்து செல்லும் இடத்தில் ஆற்று நீர் சுமார் 50 அடி அகலத்தில் முழங்கால் உயரத்திற்கு காணப்பட்டது. கடல்நீர் உப்பாற்று களப்பு நீருடன் கலந்து இருப்பதால் களப்பில் கலக்கும் ஆற்று நீரும் சற்று உப்பு சுவையுடன் காணப்படுகிறது. இதனால் இவ்வாறு உப்பாறு எனப் பெயர் பெற்றுள்ளது. **(படம் 41)** இவ்வாற்றை சிங்கள மொழியில் "பொத்தான லேவய" என அழைக்கின்றனர்.

உப்பாற்று நீர் சற்று கலங்கிய நிலையில் சாம்பல் நிறத்தில் காணப்பட்டது. இருப்பினும் இப்பகுதியில் குளிப்பதற்கு இதைவிட நல்ல நீர்நிலை எதுவும் இல்லை. அதுமட்டுமல்லாமல் இன்று நாம் தங்கும் இடமான நாவலடி இங்கிருந்து 400 மீற்றர் தூரத்திலேயே அமைந்துள்ளது.

இங்கிருந்து வடமேற்கில் சுமார் 17 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள தலகுருஹெல மலைப்பகுதியே உப்பாற்றின் பிறப்பிடமாகும். இம்மலையின் வடக்கு, தெற்கு பகுதிகளிலிருந்து இரண்டு நதிகள் உற்பத்தியாகி தென்கிழக்குப் பக்கம் ஓடி வந்து ஒன்றிணைகின்றன. இது அத்துரு மித்துரு ஆறு என அழைக்கப்படுகிறது. அங்கிருந்து தென்கிழக்கு நோக்கி வரும் வழியில் ஓர் சிறிய குளத்திற்கும், ரத்பலிய குளத்திற்கும் நீர் வழங்கி மேலும் தென்கிழக்கு நோக்கி ஓடிவருகிறது. கொடவெலி பொக்-குன எனும் மலையிலிருந்து வரும் ஓர் சிற்றாறு கொடவெலி குளத்திற்கு நீர் வழங்கி அத்துரு மித்துரு ஆற்றுடன் இணைந்து ஓடும் வழியில் ஆற்றின் குறுக்கே ஓர் அணையைக் கட்டி ஓர் குளத்-தை பண்டைய மன்னர்கள் அமைத்துள்ளனர். இக்குளம் "அத்துரு மித்துரு குளம்" என அழைக்கப்படுகிறது.

இன்று தூர்ந்து போய் காணப்படும் இக்குளத்தின் தென்-பகுதியில் அணை கட்டப்பட்டுள்ளது. அணையிலிருந்து இரண்டு ஆறுகள் பிரிந்து உப்பாற்று களப்பில் கலக்கின்றன. இரண்டில்

ஒன்று உப்பாறு எனவும், அடுத்தது நாபடகஸ் ஆறு எனவும் அழைக்கப்படுகின்றன. கும்பகர்ணன் காலத்தில் கட்டப்பட்ட இக்குளங்களின் மூலமும், ஆறுகளின் மூலமும் இப்பகுதியில் பெரும் நெற்காணிகள் உருவாக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டதாக தெரிய வருகிறது. உப்பாற்றின் வடக்கில் ஓர் மலையும், வடமேற்கில் ஓர் மலையும் காணப்படுகிறது. வடக்கிலுள்ளது "அத்துரு மித்துரு கல மலை" எனவும், அடுத்தது "தெமட்டகல மலை" எனவும் அழைக்கப்படுகிறது.

## தெமட்டகல மலை

உப்பாற்று வெளியின் வடமேற்கில் தூரத்திலே உயரமான மலையொன்றைக் காணக்கூடியதாக இருந்தது. இரண்டு உச்சிகளுடன் காணப்படும் இம்மலை தெமட்டகல மலை என அழைக்கப்படுகிறது. **(படம் 42)** கந்த பெருமானின் புனித வனத்தில் பண்டைய காலத்தில் முனிவர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் உள்ள இன்னுமோர் இடமே தெமட்டகல மலையாகும். இம்மலையில் உள்ள இயற்கையான கற்குகையில் 2000 வருடங்களுக்கு முன்பு பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டொன்று காணப்படுகிறது. இக்கல்வெட்டில் "பத்த திசஹ சகச" என எழுதப்பட்டுள்ளது. இது சுவாமி தீசனின் குகை எனப் பொருள்படுகிறது. இம்மலைக் குகையில் தீசன் எனும் சந்நியாசி வாழ்ந்துள்ளார் என்பதை கல்வெட்டு கூறுகிறது. தீசன் என்ற பெயரில் இலங்கையில் பல பிராமணர்கள் இருந்தமை பற்றி பிராமிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. தெமட்டகல கல்வெட்டு பேராசிரியர் பரணவித்தாரனவின் பிராமிக் கல்வெட்டுக்கள் எனும் நூலில் 600 வது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தெமட்டகல மலை உப்பாற்று வெளியின் வடமேற்குத் திசையில் சுமார் 11 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. 1000 அடி உயரமான இம்மலையிலிருந்து வரும் சிற்றாறு தென்கிழக்கு நோக்கி ஓடி குருந்தி ஆற்றுடன் இணைகிறது. இது தம்பற ஆறு என அழைக்கப்படுகிறது. 1921ம் ஆண்டு ஆங்கிலேய நில அளவை நிபுணர்கள் இம்மலை உச்சிக்கு ஏறியுள்ளதாக அவர்களின் குறிப்புகள் கூறுகின்றன. இம்மலையின் ஓர் உச்சி 1000 அடி உயரமும் அடுத்த உச்சி 950 அடி உயரமும் கொண்டதாகவும்

இவ்வுச்சியிலிருந்து பார்க்கும் பொழுது வடமேற்குப் பக்கம் அப்புத்தளை மலைத்தொடரும், வடக்குப்பக்கம் மொனராகலை மலைத்தொடரும், தெற்குப்பக்கம் கடலும், தூரத்திலே சிறிய இராவணன் கோட்டையும் தெரிவதாகவும் தமது குறிப்பிலே எழுதியுள்ளனர்.

### அத்துரு மித்துரு மலையும், குளமும்

மண்டாகல் மலையின் தெற்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் அத்துரு மித்துரு மலையும், 2 கி.மீ மேற்கில் அத்துரு மித்துரு குளமும் அமைந்துள்ளன. கந்தக் கடவுளின் புனித வனத்தில் உள்ள குளங்களில் மண்டாகல் குளத்திற்கு அடுத்தபடியாக பெரிய குளமாகக் காணப்படுவது அத்துரு மித்துரு குளமே. இன்று தூர்ந்து போய் காணப்படும் இக்குளம் இப்பகுதியை ஆட்சி செய்த மன்னர்களால் கட்டப்பட்டு இப்பகுதியில் நெல் பயிரிடப்பட்டது. தலகுரு மலையில் உற்பத்தியாகி தெற்கு நோக்கி ஓடி வரும் அத்துரு மித்துரு ஆற்றின் மூலம் இக்குளத்திற்கு நீர் கிடைக்கின்றது. இக்குளத்தின் தென்கிழக்கில் அமைந்துள்ள அத்துரு மித்துருகல மலை 100 மீற்றர் உயரமானதாகும். அத்துரு மித்துரு குளத்திற்கும் மண்டாகல் குளத்திற்கும் இடையில் அமைந்துள்ள 3 மலைக்-குன்றுகளில் அத்துரு மித்துரு மலைக் குன்றும் ஒன்றாகும்.

### உப்பாற்று வெளி மரத்தடிக் கோயில்

உப்பாற்று வெளியைக் கடந்தவுடன் நாவலடிக்குச் செல்லும் பாதை ஆரம்பமாகிறது. உப்பாற்று வெளியின் முடிவில் வலது பக்கத்தில் உள்ள ஓர் மேட்டு நிலத்தில் மிகப்பழமை வாய்ந்த காட்டிலந்தை மரம் ஒன்று காணப்படுகிறது. இம்மரத்தைச் சுற்றி மேலும் மூன்று பெரிய மரங்கள் வளர்ந்துள்ளன. காட்டிலந்தை மரத்தின் அடிப்பாகத்தில் புற்று வளர்ந்து காணப்படுகிறது. இம்மரத்தடியில் பண்டைய காலம் முதல் பாத யாத்திரீகர்கள் விநாயகரை வழிபட்டுச் செல்வதாகக் கூறப்படுகிறது. காட்டு யானைகள் உப்பாறு, நாவலடிக்காடு ஆகிய பகுதிகளில் அதிகளவில் வந்து செல்வதால் இவைகளிடமிருந்து தமக்கு எந்தவித தொல்லையும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியே இவ்விடத்தில் யாத்திரீகர்கள் பிள்ளையாரை வணங்கிச் செல்கின்றனர். பண்டைய காலத்தில் இவ்விடத்தில் மரத்தடிக் கோயில் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

**நாவலடி புதிய கிணற்றடியும், முருகன் கோயிலும்**

உப்பாற்று வெளியிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்தில் நாவலடி அமைந்துள்ளது. நாவலடி கிணற்றடிக்குச் செல்லும் வழியில் பாதையின் வலது பக்கத்தில் ஓர் சிறிய குட்டை காணப்படுகிறது. இது நாவலடிக் குளம் என தமிழிலும் "பத்தேதிரவ்வல" என சிங்கள மொழியிலும் அழைக்கப்படுகின்றது. இக்குளத்தை கடந்தவுடன் நாவல் மரங்கள் நிறைந்த சோலைகளுக்கு மத்தியில் ஓர் பள்ளமான இடத்தில் மூன்று கிணறுகள் காணப்படுகின்றன. **(படம் 43)** இதனருகில் உள்ள பாரிய நாவல் விருட்சத்தின் கீழ் வேல் ஸ்தாபிக்கப்பட்டு கொத்துப்பந்தல் கட்டப்பட்ட மரத்தடிக்கோயில் அமைந்துள்ளது. **(படம் 44)** இவ்விடமே நாவலடி என அழைக்கப்படுகிறது. எமது பாத யாத்திரையில் நாம் மூன்றாவது நாளை இங்குதான் கழிக்கவுள்ளோம்.

இங்கு கிணறுகள் அமைந்துள்ள இடம் சுமார் 150 அடி நீளமும் 50 அடி அகலமும் கொண்ட வெட்டவெளியாகும். இவ்வெளியைச் சுற்றி நாவல் மரங்கள் பல காணப்பட்டன. இம்மரங்களின் கீழே யாத்திரீகர்கள் அமர்ந்திருந்தனர். யாத்திரீகர்களின் வசதிக்காக இராணுவத்தினரால் தற்காலிக கடையொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. இக்கடையிலும் சுடச்சுட ரொட்டியும், பிஸ்கட் பக்கெட் போன்றவையும் கிடைக்கக்கூடியதாக இருந்தது. கடையின் அருகில் பிளாஸ்டிக் குடிநீர்த் தொட்டியும் வைக்கப்பட்டிருந்தது.

நாவலடி கிணற்றடியை நாம் சென்றடையும் போது நேரம் சரியாக பகல் 11.35 மணியாகும். நாவலடியில் நன்னீர் கிடைப்பது மிக அரிது. எனவேதான் வருடாவருடம் இங்கு தங்கிச்செல்லும் பாத யாத்திரீகர்களின் வசதிக்காக இவ்விடத்தில் கிணறுகள் கட்டப்பட்டுள்ளன. இங்கு மொத்தமாக நான்கு கிணறுகள் கட்டப்பட்டிருந்ததாகவும், மத்தியில் இருந்த கிணற்றை காட்டு யானைகள் நீர் குடிக்க வந்த வேளை, கிணற்றில் நீர் இல்லாதபொழுது துதிக்கையில் அடியிலிருந்து கிணற்றை தூக்கி உடைத்து சேதப்படுத்தி விட்டதாகவும் அங்கிருந்தவர்கள் கூறினர். கிணறு இருந்த இடத்தில் பெரிய பள்ளமொன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

ஏனைய மூன்று கிணற்றிலும் இருந்த நீர் கூட மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. அருகிலுள்ள நாவலடிக்குட்டையில் அழுக்குநீரும், உப்பாற்றில் உப்பு நீரும் காணப்படுவதால் கிணற்றி-

லுள்ள நீரையே உணவு சமைப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றனர்.

எமக்கு முன்பே இங்கு வந்திருந்த சமையல் குழுவினர் உணவு சமைப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். நாவலடி கிணற்றடி வெட்டவெளியானபடியால் இப்பகுதியில் சுட்டெரிக்கும் வெயில் உடலைத்தாக்கியது. இந்த சுட்டெரிக்கும் சூரியவெயில் வெப்பத்திற்கும், அடுப்பிலிருந்து வரும் நெருப்பின் வெப்பத்திற்கும் ஈடுகொடுத்து போராடியபடி எமக்கு உணவு சமைப்பதில் சமையல் குழுவினர் மும்முரமாக பணியாற்றிக் கொண்டிருந்தனர். இந்த நடுக்காட்டிலே அனைவருக்கும் உணவு கொடுக்க அவர்கள் புரியும் பணி உண்மையிலேயே சிவத்தொண்டுக்கு ஒப்பானது.

இதற்கிடையில் பசி தாங்க முடியாதவர்கள் அருகிலுள்ள கடைக்குச் சென்று ரொட்டி வாங்கி சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சிலர் நீர்தொட்டியில் தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தனர். சிலர் மரநிழலில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தனர். சரியாக 1.25 மணிக்கு உணவு தயாரானது. அனைவரும் வரிசையாக நின்று தமது தட்டுக்களில் உணவை பெற்று உண்டனர். நடுக்காட்டிலே சுட்டெரிக்கும் வெயிலிலே பல மைல் தூர நடைக்குப்பின், களைப்புடனும், பசியுடனும் இருக்கும் எமக்குக் கிடைத்த இவ்வுணவு தேவாமிர்தத்தை விட சுவையாக இருந்தது.

**நாவலடி பழைய கிணற்றடியும், வைரவர் கோயிலும்**

நாவலடியில் நாம் தங்கியிருந்த இடத்திலிருந்து 300 மீற்றர் கிழக்குப் பக்கத்தில் பழைய கிணற்றடி உள்ளது. இக்கிணற்றில் யானைகள் நீர் குடிக்கும் போது கிணற்றின் மேல் பக்கம் சற்று உடைந்துள்ளது. இக்கிணற்றின் நீர் ஓரளவு துப்புரவாக உள்ளது. யாத்திரீகர்களில் சிலர் இக்கிணற்றடிக்கு வந்து நீராடினர். நாமும் உப்பாற்றில் குளித்து விட்டு வந்து இக்கிணற்றிலே குளித்தோம். கிணற்றின் அருகில் உள்ள பாரிய நாவல் மரத்தின் கீழ் வைரவருக்கு கொத்துப்பந்தலிட்டு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. வைரவர் சூலத்தின் கீழ் 30க்கும் மேற்பட்ட மான் கொம்புகள் வைக்கப்பட்டிருந்தன. ஆங்காங்கே கிடக்கும் மான்கொம்புகளை பொறுக்கிக் கொண்டு வரும் யாத்திரீகர்கள் இவ்வைரவர் சந்நிதியில் அவற்றை வைத்து பூஜித்துச் செல்கின்றனர். பல யாத்திரீகர்கள் இக்கோயிலுக்கு வந்து கற்பூரம் கொழுத்தி சூலத்திற்கு பட்டுக் கட்டிச்

செல்வதைக் காணக் கூடியதாக இருந்தது.

கிணற்றின் அருகில் 50 மீற்றர் தூரத்தில் ஓர் சிறிய குளம் காணப்படுகிறது. நாம் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது இக்குளத்தில் நீர் குடிக்க இரண்டு மயில்கள் வந்தன. இவை நீர் குடித்துவிட்டுச் சென்றவுடன் ஓர் கொம்பன் யானை வந்து நீர் குடித்து விட்டுச் சென்றது. சிறிது நேரத்தில் இன்னுமோர் யானை நீர் குடிக்க வந்தது. இந்த மூன்று நாட்கள் பாத யாத்திரையின் போது முதன் முதலாக ஓர் வன விலங்கைக் கண்டோம். இவ்வரிய காட்சியை பார்த்துவிட்டு வைரவரை வணங்கி விட்டு எமது இருப்பிடத்திற்குச் சென்றோம்.

இன்று கும்புக்கன் ஆறு முதல் நாவலடி வரையான 13 கி. மீ தூரத்தை கால்நடையாகக் கடக்க ஐந்தரை மணி நேரம் சென்று-ள்ளது. இன்றும் நாவலடி முருகன் சந்நிதிக்கு முன்பாக தெய்வீக பஜனை ஆரம்பமானது. இராணுவத்தினர் பஜனை நடக்கும் இடத்தில் மின் விளக்குகளை பொருத்தி ஒளியூட்டினர். ஜெனரே-ட்டர் மூலம் விளக்குகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டது. இன்றைய பஜனையில் அவுஸ்திரேலிய சத் சுவாமி ஓர் சிவன் பாடலைப்பாடி எல்லோரையும் அசர வைத்தார். **(படம் 45)** பஜனையின் பின்பு தயா-ராக இருந்த இரவு உணவை யாத்திரீகர்கள் உண்டபின் உறங்கினர். யாத்திரீகர்களுக்கு பாதுகாப்பாக நான்கு பக்கங்களிலும் மரக்குற்றி-களை போட்டு தீ மூட்டி எரித்து வெளிச்சத்தை உண்டாக்கினர். இரவுக்குளிரை தீயின் சூடு சமப்படுத்தியது. உறங்குவதற்கு நாமும் ஆயத்தமானோம். நண்பர்களோடு பேசிக் கொண்டே இருக்கும் போது கண்கள் அயர்ந்தன.



நாவலடி பழைய கிணற்றடி குளத்தில் நீர் குடிக்கும் யானை

# 12. நாவலடி முதல் மாணிக்ககங்கை வரை

**மடமே வெவ குளமும், பலுகந்தலாவ குளமும்.**

வழமை போல 4.30 மணிக்கு துயிலெழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு நாவலடி முருகனைத் தரிசித்து விட்டு, குருநாதரிடமும் ஆசி பெற்று, "அரோகரா" எனும் கோஷம் வானைப்பிளக்க 6.30 மணியளவில் நாவலடியிலிருந்து எமது நான்காம் நாள் யாத்திரையை ஆரம்பித்தோம். இன்று நாம் செல்ல வேண்டிய இடம் மாணிக்க கங்கை கரையாகும். நாவலடி கிணற்றடியின் மேற்குப்பக்கமாக மரங்களும் பற்றைகளும் நிறைந்த காட்டுக்குள் புகுந்து ஒற்றையடிப்பாதை வழியாக பயணம் செய்து மூன்று நிமிடங்களில் ஒரு வெட்டவெளியை அடைந்தோம். இது உப்பாற்று வெளியின் மேற்குப் பக்கமாகும். இங்கிருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உப்பாற்று வெளி முடிவடைகிறது. நாவலடியின் மேற்கிலும், வடக்கிலும், கிழக்கிலும் உப்பாற்று வெளி அமைந்துள்ளது.

மீண்டும் காட்டுக்குள் நடந்து சென்று கொண்டிருந்தோம். பாதையின் இடதுபக்கம் ஓர் சிறிய நீர்க்குட்டை காணப்படுகிறது. இதை "கட்ட காவல" என அழைக்கின்றனர். கட்டகாவல குட்டையைக் கடந்து வரும் போது பாதையின் வலது பக்கம் இன்னுமோர் நீர்க்குட்டை காணப்பட்டது. அதைக் கடந்து வரும் போது மேலும் இரண்டு குட்டைகள் வலது பக்கத்தில் காணப்பட்டன. இங்கிருந்து மேற்குப்பக்கத்தில் சுமார் ஒரு கி.மீ தூரத்தில் "மடமே வெவ" குளமும் இக்குளத்தின் வடமேற்குப் பக்கத்தில் மேலும் ஒரு கி.மீ தூரத்தில் "பலுகந்தலாவ" குளமும் அமைந்துள்ளன. குருந்தி ஆற்றிலிருந்து இக்குளங்களுக்கு நீர் கிடைக்கிறது. இவ்விரண்டு குளங்களும் பண்டைய காலத்து மன்னர்களால் அமைக்கப்பட்டவையாகும். பலுகந்தலாவ குளத்தின் கிழக்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் உப்பாற்று வெளியின் மேற்கில் ஹபரகஸ்வெவ குளம் அமைந்துள்ளது. இதுவும் புராதன குளமாகும்.

**உடப்பொத்தானை வெளியும், களப்பும். (மேல் பொத்தானை வெளி)**

சுமார் 25 நிமிட நடையின் பின்பு மீண்டும் ஒரு வெட்டவெளி தென்பட்டது. இது உடப்பொத்தானை வெளியாகும். **(படம் 46)** உடப்பொத்தானை வெளியின் மத்தியில் ஓர் ஆறு ஓடுகிறது. இது

குருந்தி ஆறு என அழைக்கப்படுகிறது. ஆற்றில் சுத்தமான நீர் காணப்படுகிறது. முழங்கால் வரை நீர் ஓடுகிறது. இவ்வாற்று நீர் உடப்பொத்தானை களப்பில் கலக்கிறது, களப்பு நீர் இங்கிருந்து கிழக்கு நோக்கி ஓடி பொத்தானை குடாவில் சங்கமமாகிறது.

உடப்பொத்தானை வெளி ஓர் பெரிய வெளியாகும். இது சுமார் ஒன்றறை கி.மீ நீளமானது. இவ்வெளியைக் கடப்பதற்கு சுமார் **30** நிமிடங்கள் தேவைப்படுகிறது. இவ்வெளியை கடக்கும் பொழுது குருந்தி ஆற்றுக்கு அருகிலும், வெட்டையை கடந்த பின்பும் இருதடவைகள் பலர் ஓய்வெடுத்துக்கொண்டிருந்தனர். தந்தையின் தோளில் உட்கார்ந்திருந்த படி யாத்திரை செல்லும் நான்கு வயது சிறுவனை இவ்விடத்தில் கண்டேன்.

### மேல் முனை (உட பொயின்ட்)

உடபொத்தானை களப்பு கடலில் சங்கமமாகும் பொத்தா-னைக் குடாவின் தென்பகுதியில் ஓர் முனை அமைந்துள்ளது. இது மேல் முனை எனப் பெயர் பெற்றுள்ளது. இம்முனையை "உட பொயின்ட்" என அழைகின்றனர். இம்முனையிலிருந்து தொலை-நோக்கியில் கிழக்குப் பக்கமாக கடலை நோக்கிப் பார்க்கும் பொழுது சிறிய இராவணன் கோட்டையில் உள்ள வெளிச்ச வீட்டைக்காணக் கூடியதாக உள்ளது.

### இராவணன் கோட்டைகள்

யாள வனத்தின் தென்கிழக்குக் கடலில் இரண்டு வெளிச்ச வீடுகள் காணப்படுகின்றன. இவை சிறிய இராவண கோட்டை பெரிய இராவணன் கோட்டை என அழைக்கப்படுகின்றன.**(படம் 47)** பண்டைய காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த திராவிட வேந்தன் இராவணின் இலங்காபுரி இராச்சியம் இலங்கையின் தென்கிழக்கிலேயே அமைந்திருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. இராவணனின் இலங்காபுரியின் மூன்றில் இரண்டு பகுதி இராவணன் இறந்த பின்பு ஏற்பட்ட கடற்கோளில் அழிந்து போனதாக இராஜாவலிய பொன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன. இக்கடற்கோளின் போது இலங்காபுரியிலிருந்த இராவணனின் 25 மாளிகைகள் கடலில் மூழ்கியதாக ராஜாவலிய மேலும் குறிப்பிடுகின்றது.

இதன்படி கடற்கோளினால் கடலில் மூழ்கிய இராவணனின் இராச்சியத்தின் உயரமான இடங்களே கடலின் நடுவில் தெரியும் இரு பாறைகளாகும். இப்பாறைகள் மீதே வெளிச்ச வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பவளப்பாறைப்பகுதியில் சென்ற பல கப்பல்கள் பாறையில் மோதுண்டு மூழ்கியுள்ளன. இதன் பின்பே 1873ல் பெரிய இராவணன் கோட்டையிலும், 1878ல் சிறிய இராவணன் கோட்டையிலும் வெளிச்ச வீடுகள் கட்டப்பட்டன.

சிறிய இராவணன் கோட்டை நாவலடிக்கு தெற்கில் உள்ள மேல்முனை (உட பொயின்ட்) யிலிருந்து கிழக்குப் பக்கத்தில் 13 கி.மீ தூரத்தில் கடலின் நடுவில் அமைந்துள்ளது. இங்கிருந்து தென்மேற்கில் 35 கி.மீ தூரத்தில் இது போன்று கடலின் நடுவில் பெரிய இராவணன் கோட்டை அமைந்துள்ளது. இது கிரிந்தையின் கிழக்கில் 16 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. யாளயிலிருந்து கிழக்குப் பக்கத்தில் 24 கி.மீ தூரத்தில் சிறிய இராவணன் கோட்டையும், தெற்குப் பக்கத்தில் 21 கி. மீ தூரத்தில் பெரிய இராவணன் கோட்டையும் அமைந்துள்ளன.

## குருந்தி ஆறு

கும்புக்கன் ஆற்றுக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையில் ஓடும் ஐந்து ஆறுகளில் முக்கிய ஆறாக குருந்தி ஆறு விளங்குகிறது. **(படம் 48)** உடப்பொத்தானை வெளியின் வடமேற்கில் சுமார் 17 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள தலகுருஹெல மலைப் பகுதியிலே-யே குருந்தி ஆறு உற்பத்தியாகிறது. இங்கிருந்து தெற்கு நோக்கிப் பாய்ந்து மாயக்கல் மலையின் மேற்குப் பக்கமாக ஓடி கொட்ட-வெஹெரகல் மலை வழியாக தென் கிழக்குப் பக்கம் திரும்பி உடப்பொத்தானை களப்பில் கலந்து கடலில் சங்கமிக்கிறது. சுமார் 25 கி.மீ நீளமான இவ்வாற்று நீரைத் தடுத்து அணைகள் கட்டி 12 குளங்கள் வரை புராதன காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இக்குளங்களில் நாபட குளம், மஹா பொக்குன குளம், பலுகந்தலாவ குளம், மடமே குளம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

கதிர்காமக் கடவுளின் புனித பூமியை ஒரு காலத்தில் வளப்படுத்திய இக்குளங்கள் யாவும் இன்று தூர்ந்து போய்க் காணப்படுகின்றன. தெமட்டகல மலைப் பகுதியிலிருந்து வரும் ஓர் சிற்றாறு குருந்தி ஆற்றுடன் இணைந்து இப்பகுதிக்கு மேலும் நீரை வழங்குகிறது.

**தலைக்குரு மலை (தலகுருஹெல)**

உடப்பொத்தானை வெளியின் வட மேற்கில் சுமார் **16**கி.மீ. தொலைவில் ஓர் மலை அமைந்துள்ளது. இது கபிலித்தை முருகன் கோயிலின் தென்மேற்கில் **6** கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இது "தலகுருஹெல" என அழைக்கப்படுகிறது. இது தலைக்குருமலை எனப்பொருள்படுகிறது. இம்மலையில் அகத்திய மாமுனிவர் தங்கி-யிருந்ததாக நம்பப்படுகிறது. கதிரமலையில் முருகப் பெருமானைத் தரிசித்து விட்டு கபிலித்தை முருகனைக் காண வந்த அகத்திய முனிவர் இம்மலையில் தங்கிச் சென்றதாகக் கூறப்படுகிறது. குருவிற்-கெல்லாம் தலைமைக் குருவான அகத்திய மாமுனிவர் தங்கியிருந்த மலையென்பதால் இது "தலைகுருமலை" என பெயர் பெற்றது. இப்பெயரே காலப் போக்கில் மருவி "தலகுருஹெல" என அழைக்-கப்படுகிறது. ஹெல என்பது மலை எனப் பொருள்படும்.

இத்தலைகுருமலையின் உச்சியில் அகத்திய முனிவர் சிவனைப் பூஜித்து வழிபட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. ஏனெனில் இம்மலையின் உச்சியில் உள்ள சிகரம் சிவலிங்கம் போன்ற வடிவமைப்பை உடையதாகும். தலகுருமலைத் தொடரிலிருந்து குருந்தி ஆறு, அத்துரு மித்துரு ஆறு ஆகிய சிற்றாறுகள் உற்பத்தி-யாகி தென்கிழக்கு நோக்கி ஓடுகின்றன. கபில முனிவர் தங்கிச் சென்ற கபிலித்தை அம்மலையின் வடகிழக்கில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**உடப்பொத்தானை வெளி கோயில்**

உடப்பொத்தானை வெளியின் முடிவில் இருந்த காட்டிலந்தை மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். சுமார் **15** நிமிட ஓய்வுக்குப் பின் மீண்டும் யாத்-திரையை தொடர ஆரம்பித்தனர். இவ்விடத்தில் உள்ள மரத்தடியில் பண்டைய காலம் முதல் விநாயகரை வணங்கிச் செல்லும் மரத்தடிக் கோயில் இருந்ததாகக் கூறுகின்றனர். இவ்விடத்திலிருந்து ஆரம்ப-மாகும் மிகப் பெரிய காடான தொலையா காட்டினை எந்த வித இடையூறும் இன்றி கடக்க எமக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என விநாயகப்பெருமானை வணங்கிச் செல்லும் இடம் இதுவென கூறப்படுகிறது.

**தொலையா காடும், முருங்கைமரக் காடும்.**

உடப்பொத்தானை வெளியின் முடிவில் தொலையா காடு ஆரம்பமாகிறது. இது பெரிய ஆறுகளோ, குளம் குட்டைகளோ, வெட்டைவெளிகளோ இல்லாத நீண்ட தொலைவான காடு. அல்லது தொலைகாடு என்பதே இதன் பெயராகும். காலப்போக்கில் இப்பெயர் மருவி "தொலையா காடு" என இன்று அழைக்கப்படுகிறது. காட்டின் தொடக்கத்திலே ஓர் மரத்தின் கீழ் தண்ணீர் போத்தல்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அருகில் ஓர் இராணுவ சிப்பாயும் நின்றுக்கொண்டிருந்தார். இங்கு பிளாஸ்டிக் நீர்த்தொட்டி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது. தொலையா காடு நீண்ட தூரத்திற்கு அடர்ந்த மரங்கள் நிறைந்து காணப்படும் இடமாகும். இதனால் இவ்விடத்தில் இருந்த மரத்தில் ஓர் அறிவிப்புப் பலகையும் காணப்பட்டது. இதில் "வன விலங்குகள் நடமாடுவதால் வழியை விட்டு விலகிச்செல்ல வேண்டாம்" என தமிழிலும் மற்றும் சிங்கள மொழியிலும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.



தொலையாக் காட்டில் யாத்திரை செல்லும் சிறுவன்

தொலையா காடு பயணத்தை நாம் ஆரம்பிக்கும் பொழுது நேரம் காலை 8.10 மணியாகும். பாதையில் இரு மருங்கிலும் உயரமில்லாத பற்றைகள் அடர்ந்து காணப்பட்டன. சுமார் 30

நிமிட நேர நடையின் பின் ஓரிடத்தில் பிளாஸ்டிக் நீர்த் தொட்டி வைக்கப்பட்டிருந்தது. நாம் எமது போத்தல்களில் நீரை நிரப்பிக் கொண்டோம். இவ்விடத்தில் தற்செயலாக உற்று நேக்கிய போது ஓர் அதிசயத்தைக் கண்டோம். எமது வீட்டு வேலிகளில் அதிகளவில் காணப்படும் முருங்கை மரமொன்று முருங்கைக் காய்களோடு காய்த்துக் குலுங்கியது. இந்த அடர்ந்த காட்டில் முருங்கை மரம் எப்படி முளைத்தது என அதிசயித்த வண்ணம் அருகில் நின்று கொண்டிருந்த இராணுவ சிப்பாயிடம் இது பற்றி விசாரித்தோம். உடனே அவர் இம்மரம் மட்டுமல்ல இப்பகுதி முழுவதும் முருங்கை மரங்கள் நிறைந்த காடுதான் உள்ளது எனக் கூறி கையைக் காட்டி-னார். என்ன ஆச்சரியம் அவர் காட்டிய திசையில் ஏராளமான முருங்கை மரங்கள் காணப்பட்டன.

சில காலத்திற்கு முன்பு யாத்திரை வந்த பக்தர்கள் சிலர் உணவு சமைக்க கொண்டு வந்த முருங்கைக்காய் கழிவுகளை இவ்விடத்தில் வீசிவிட்டுச் சென்றதாகவும், அதிலிருந்து முளைத்த முருங்கை மர-மொன்றின் மூலம் இக்காடு முழுவதும் முருங்கை மரங்கள் முளைத்-துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இதன் காரணமாக இவ்விடம் முருங்கைக் காடு எனவும் சிங்கள மொழியில் “முருங்க கஸ் யாய” எனவும் அழைக்கப்படுகிறது. முருங்கை மரக் காட்டைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் பாதையின் குறுக்கே வற்றிய ஓடை மணல் நிறைந்து காணப்பட்டது. இது அகர ஆறு ஓடிய இடமாகும்.

தெலையாகாடு பாதையிலும் பல இடங்களில் மணல் தரையே காணப்பட்டது. இம்மணல் தரையில் யாத்திரீகர்கள் பலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். இன்னும் சிலர் சற்று தூரத்திலே அடுப்பு மூட்டி தேனீர் தயாரித்து குடித்துக் கொண்டிருந்தனர். மேலும் நடந்து சென்று கொண்டிருந்தபோது இன்னுமோர் நீர்த் தொட்டியைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் 5 வயது சிறுவனும், 10 வயது சிறுமியும் நடந்து வந்துக்கொண்டிருந்தனர். இங்கிருந்து சிறிது தூரம் சென்றதும் முன்பு தந்தையின் தோளில் சவாரி செய்த நான்கு வயது சிறுவன் ஓர் தடியையும் கையில் பிடித்த வண்ணம் தந்தையைப் பின்பற்றி நடந்து சென்று கொண்டிருந்தமை வியப்பாக இருந்தது. சரியாக காலை 10.20 மணிக்கு தொலையா காட்டின் முடிவைக் கண்டோம். இத்தொலைவான காட்டைக் கடப்பதற்கு இரண்டு மணித்தியாலங்கள் சென்றுள்ளன.

### தொலையா காட்டில் காணப்படும் குளங்கள்

தொலையா காடு சுமார் 4 கி.மீ நீளமான பரந்த காடாகும். இக்காட்டில் பல சிறிய குளங்கள் காணப்படுகின்றன. இக்காட்டின் மத்தியில் ஓடும் ஓர் சிற்றாறு "அகர ஆறு" என அழைக்கப்டுகிறது. இவ்வாறு உடலோல குளத்திலிருந்து நீரேந்தி தெற்கு நோக்கி ஓடுகிறது. இவ்வாற்று நீரின் மூலம் மண்டகாடு குளமும், கொட்டய வெளி குளமும், அகரகடன குளமும் இதன் தெற்கில் அகர குளமும் அமைந்துள்ளன. இக்குளங்களுக்கு நீர் வழங்கிய அகர ஆறு மேலும் தெற்கு நோக்கி ஓடி பிலின்னை குடாவில் கடலில் சங்கமமாகிறது. பிலின்னை குடாவின் தெற்கில் உள்ள முனை பிலின்னா முனை என அழைக்கப்படுகிறது. அகர குளத்தின் அருகில் காணப்படும் வெட்டைவெளி அகர வெளி எனப் பெயர் பெற்றுள்ளது. அகர குளத்தின் கிழக்குப்பக்கத்தில் மினிஹாகல்கந்த மலையும், இதை அடுத்து அகரகந்த மலையும் கடலை ஒட்டி அமைந்துள்ளன.

தொலையாகாடு பகுதியில் மேலும் பல குளங்கள் காணப்படுகின்றன. கொட்டமெத்த இகல குளம், கொட்டமெத்த பகல குளம், உருளன் முழுவ குளம், இகல மஹா பிலின்னா குளம். இகல குடா பிலின்னா குளம், பகல குடா பிலின்னா குளம் ஆகிய குளங்கள் இக்காட்டில் அமைந்துள்ளன. இன்று தூர்ந்து போய்க் காணப்படும் இக்குளங்கள் யாவும் பண்டைய காலத்தில் இப்பகுதியை ஆட்சி செய்த சிற்றரசர்களால் அமைக்கப்பட்டு கந்தக்கடவுளின் புனிதபூமியை வளமாக்கிய நீர் நிலைகளாக விளங்கியுள்ளன.

### மினிஹாகல் கந்த



மினிஹா கல் கந்த (மனித கல் மலை)

அகரவெவ குளத்தின் கிழக்குப்பக்கத்தில் கடலோரமாக மண்மேடும் கற்பாறைகளும் கலந்து உயரமாகக் காணப்படும் ஓர் இடம் உள்ளது. இதுவே "மினிஹாகல் கந்த" என அழைக்கப்படுகிறது. இது "மனிதக்கல் மலை" எனப் பொருள்படுகிறது. இவ்விடம் கி.மு. 10ம் நூற்றாண்டுக்கு முன்பு ஆதி மனிதர்கள் வாழ்ந்த பெருங்கற்காலப் பண்பாடு நிலவிய பிரதேசமாகும். இங்கு புராதன மனிதனின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் இப்பகுதியில் உள்ள மலைப்பாறைகள் மனிதனின் வடிவில் அமைந்துள்ளமையாலும் இவ்விடம் மனிதக்கல் மலை என அழைக்கப்படுகிறது.

**தொலையா காடு முடிவு - இலந்தை மரக் கோயில்**

தொலையா காட்டில் சுமார் இரண்டு மணித்தியால நடையின் பின்பு ஓர் வெட்டவெளியைக் கண்டோம். பாலை வனத்தில் பசுந்தரையை கண்டது போல் ஆனந்தமாக இருந்தது. இவ்விடத்தின் தொடக்கத்தில் ஓர் மேடான இடத்தில் காட்டிலந்தை மரம் ஒன்று காணப்பட்டது. தொலையா காட்டை கடந்தவர்கள் அனைவரும் இம்மரத்தின் கீழ் அமர்ந்து ஓய்வெடுத்த பின்னரே தமது பாத யாத்திரையை தொடர்கின்றனர். இம்மரத்தின் கீழ் ஒரு கோயில் இருந்தமைக்கான எச்சங்கள் தெரிகின்றன. தொலையா காட்டில் எவ்வித இடையூறும் ஏற்படாமல் பாதுகாத்து கொண்டுவந்து சேர்த்த விநாயகப் பெருமானுக்கு நன்றி செலுத்தி வணங்கும் முகமாக இவ்விடத்தில் பிள்ளையார் மரத்தடிக் கோயில் ஒன்று இருந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வெட்டவெளி பிலின்னா வெளி என அழைக்கப்படுகிறது.



தொலையாக் காடு முடிவிலுள்ள மரத்தடி கோயில்

## *பிலின்னா வெளியும், பிலின்னா ஆறும் (கள்ளவியாளை)*

*பிலின்னா வெளி கடற்கரைக்கு மிகக்கிட்டிய தூரத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து கிழக்கு நோக்கி பார்க்கும் போது கடற்கரையில் உள்ள வெள்ளை மணல் மேடு உயரமாகத் தெரிகிறது. இம்மணல் மேட்டை "சுதுவெலி கந்த" என அழைக்கின்றனர். இது வெள்ளை மணல் மலை எனப் பொருள்படுகிறது. இங்கிருந்து கடல் சுமார் 400 மீற்றர் தூரத்திலேயே உள்ளது. பிலின்னா வெளியின் குறுக்கே பிலின்னாவே ஆறு ஓடி பிலின்னா களப்பில் கலந்து மாணிக்க கங்கையிலிருந்து வரும் கிளை ஆற்றுடன் இணைந்து பிலின்னா முனையில் கடலுடன் கலக்கிறது. மாணிக்க கங்கை கடலுடன் கலக்கும் முகத்துவாரத்தில் மணல் மேடுகளால் கழிமுகம் மூடப்பட்டிருப்பதால் மாணிக்க கங்கை திசை மாறி கடலோரமாக கிழக்கு நோக்கி இரண்டு கி.மீ வரை ஓடி பிலின்னா முனையில் கடலுடன் சங்கமமாகிறது.*



பிலின்னா வெளியும் வெள்ளை மணல் மலையும் (சுதுவெலி கந்த)

*பிலின்னா வெளியின் மத்தியில் ஓர் சிறிய இலந்தை மரக் காடு அமைந்துள்ளது. இக்காட்டைக் கடந்ததும் பாதையின் வலது பக்கத்தில் ஓர் மேடான பகுதி காணப்படுகிறது. இம்மேட்டில் சில மரங்களும், அவற்றின் பின் பக்கம் ஓர் சிறிய குட்டையும் காணப்படுகிறது. இம்மேட்டுப் பகுதிக்கு அருகில் வந்த போது சுமார் 200 மீற்றர் தூரத்தில் வெளியின் அருகிலுள்ள காட்டிலிருந்து*

ஓர் யானை வருவதைக் கண்டோம். உடனே நாம் அனைவரும் அவ்விடத்திலேயே நின்று விட்டோம். நீர் குடிப்பதற்காக காட்டிலிருந்து பிலின்னா வெளிக்கு இந்த யானை வந்துள்ளது. எம்மை பார்த்த மாத்திரத்தில் அது காட்டுக்குள் திரும்பி சென்று விட்டது. அவை சுதந்திரமாக நடமாடித் திரியும் இடங்களுக்கு நாம் வந்து இந்த ஜீவராசிகளின் சுதந்திரத்தைக் கெடுத்து விட்டோம். எனினும் இக்கோடை காலத்திலே நீர்த் தேடி அலைந்து வெகு தூரம் வந்த அந்த ஜீவன் எம்மைக் கண்டதும் எமக்கு எந்தவித இடையூறும் ஏற்படுத்தாது திரும்பிச் சென்று விட்டதால் யாத்திரீகர்கள் அனைவரும் “பிள்ளையாரப்பனுக்கு அரோகரா” எனக் கூறியப்படியே யாத்திரையை தொடர்ந்தனர்.

இந்த நான்கு நாட்கள் நடைபயணத்திலே இரண்டாவது தடவையாக இப்பொழுது ஓர் வன விலங்கைக் கண்டோம். இத்தனை ஆயிரம் மக்கள் நடந்து வரும் இக்காட்டிலே காட்டு விலங்குகளின் தொந்தரவு எதுவும் யாத்திரீகர்களுக்கு ஏற்படாமல் இருப்பதை நினைத்துப் பார்க்கும் போது இப்புனித வனத்தில் கந்தசுவாமிக் கடவுளின் அபூர்வ சக்கி பரந்திருப்பதை உணரக்கூடியதாக இருந்தது. இந்த சக்கிதான் குழந்தைகள் முதல் தள்ளாத வயது முதிர்ந்தவர்கள் வரை அனைவரையும் தன்னம்பிக்கையுடனும், தைரியத்துடனும் ஐந்து நாட்கள் இக்காட்டிலேயே நடக்க வைக்கிறது.

பிலின்னா வெளியை தமிழில் “கள்ளவியாளை” என அழைக்கின்றனர். இவ்விடத்தைப் பற்றிய வேடிக்கையான கதை ஒன்றும் கூறப்படுகிறது. பல நாட்களாக ஒற்றுமையாக நடந்து வரும் யாத்திரீகர்கள் இவ்விடத்தில் ஒருவர் மற்றவருடன் சண்டை போட்டுக் கொள்வார்களாம். அப்படிப்பட்ட ஓர் மனநிலை இவ்விடத்தில் உருவாகுமாம். குறிப்பாக கணவன், மனைவி இருவருக்குமிடையில் சண்டை ஏற்படுமாம். இதன் காரணமாக இவ்விடத்தில் வரும்போது சக யாத்திரீகர்களுடன் கதைக்க வேண்டாம் எனக் கூறினார்கள். இருப்பினும் ஒருவருடன் மற்றவர் சண்டை போட்டுக்கொண்டால் அடுத்து வரும் கள்ளவியாளை ஓடையில் சண்டை போட்டவர்கள் குளித்தவுடன் மீண்டும் நட்பாகி விடுவார்கள் ளாம். இப்படி ஒரு விசித்திரமான ஐதீகம் இவ்விடத்திற்குள்ளது.

**கள்ளவியாளை புளியமரத்தடிக் கோயில்**

பிலின்னா வெளியைக் கடந்தவுடன் மீண்டும் ஒரு காடு காணப்படுகிறது. மொத்தமாக பிலின்னா வெளியையும் காட்டையும் கடப்பதற்கு சுமார் 50 நிமிடங்கள் சென்றன. காட்டைக் கடந்தவுடன் தூரத்தில் ஓர் வெட்டைவெளி தெரிந்தது. இவ்வெளியை அடைவதற்கு முன்பு பாதையின் இடது பக்கம் ஓர் பெரிய புளியமரமும், அதன் பின்பக்கம் ஓர் நீர்க்குட்டையும் காணப்பட்டன. யாத்திரீகர்கள் இப்புளிய மரத்தின் கீழ் ஐயனாரை வணங்கிச் செல்வதாகக் கூறப்படுகிறது. காட்டு வழியில் யாத்திரீகர்களுக்கு துணையாக இருப்பவர் ஐயனார் தெய்வமே.

அத்துடன் பண்டைய காலத்தில் முக்கிய வயல் நிலங்கள் இவ்விடத்தில் இருந்ததால் அவ்விளைச்சல் நிலங்களுக்கு காவலாக பண்டைய காலத்தில் மக்கள் இங்கு ஐயனாரை ஸ்தாபித்து வணங்கி வந்தனராம்.

**தொலையாவட்டை (வள்ளியம்மன் வயல்) (யாள வெல)**

புளியமரத்டிக் கோயிலை அடுத்து காணப்படும் வெட்டவெளி தொலையாவட்டை என அழைக்கப்படுகிறது. இதை சிங்கள மொழியில் “யாள வெல” என அழைக்கின்றனர். மிகப்பண்டைய காலத்தில் இங்குதான் வள்ளியம்மனின் வயல்வெளி அமைந்திருந்தது. இருபது அமுணம் நெல் விளையும் வயல் காணிகள் இவ்விடத்தில் அமைந்திருந்ததால் இவ்விடம் “வியளவெளி” எனப் பெயர் பெற்று விளங்கியது. விய என்பது இருபதை குறிப்பதாகும். வியள வெளி என்பதே சிங்கள மொழியில் யாள வெல என மருவி இன்று இப்பிரதேசம் முழுவதும் “யாள” என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

தொலையாவட்டை வெளியின் தொடக்கத்தில் ஓர் சிற்றாறு ஓடுகிறது. இவ்வாறு கள்ளவியாளை ஓடை எனவும் கட்டுபில ஆறு எனவும் அழைக்கப்படுகிறது. கட்டுபில ஆற்றுக்கும் மாணிக்க கங்கைக்கும் இடைப்பட்ட பகுதியிலேயே இப்பரந்த புராதன வயல் பூமி அமைந்துள்ளது. இவ்விரு ஆற்றுக்கும் இடைப்பட்ட இப்பிரதேசம் சுமார் 2 கி.மீ அகலம் கொண்டதாகும். இறுக்கமான சேற்று மண் நிறைந்து காணப்படும் இவ்வெட்ட வெளியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காட்டிலந்தை மரங்களும், கோழி-

க்கால் முட்செடிகளும் வளர்ந்துள்ளன. இயற்கையாகவே நீர்-குட்டைகள் பல இப்பகுதியில் அமைந்துள்ளன. ஒரு காலத்தில் பெரிய வயல் பூமியாக நல்ல விளைச்சலைக் கொடுத்த இப்பகுதி இன்று பொட்டல் தரையாகக் காணப்படுகிறது. மாணிக்ககங்கை, கட்டுபில ஆறு, கிரல ஓடை ஆகியவற்றின் மூலம் நல்ல நீர்ப்பாச-ணம் பெற்று போஷிப்புடன் விளங்கிய இப்பூமி இன்று காட்டு எருமைகளினதும், மான்களினதும் உறைவிடமாகக் காணப்படு-கிறது. இப்பகுதியில் எருமைமாட்டுக் கூட்டமொன்றும் அடிக்கடி வந்து செல்கின்றது. இவை "என்கல் பிரேக் எருமை மாடுகள்" என விஷேட பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. ஆங்கிலேயர் காலத்திலே யாள வனப்பகுதி வேட்டையாடும் பிரதேசமாக இருந்த காலத்தில் இவ்வனத்தில் பிரதான பொறுப்பாளராக 1909-1915ம் ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய என்கல் பிரேக் எனும் ஆங்கிலேய அதிகாரி இப்பகுதியில் எருமை மாட்டுப் பட்டியொ-ன்றை அமைத்து எருமைகளை வளர்த்து வந்துள்ளார். பின்பு அவர் ஒரு குற்றத்தின் காரணமாக கைது செய்யப்பட்ட பின் இம்மாடுகள் பராமரிப்பாரின்றி காட்டுக்குள் சென்று காட்டெருமைகளுடன் வாழ்ந்து வந்த போதும் தனியாகவே கூட்டமாக உலவித் திரிவ-தாகவும், இவ்வெருமைகளின் பரம்பரையே இன்றும் இப்பகுதியில் தனிக்கூட்டமாக வந்து செல்வதாகவும் தெரிய வருகிறது.

### கட்டுபில ஆறு (கள்ளவியாளை ஓடை)

தொலையாவட்டை வயல் பூமியின் கிழக்கெல்லையாக கட்டுப்பில ஆறு விளங்குகிறது. யாள வெலயின் வடக்குப்பக்கத்தில் சுமார் 20 கி.மீ தூரத்தில் உள்ள மாயக்கல் மலைப்பகுதியிலிருந்து வரும் கட்டுபில ஆற்றின் மூலம் உரலகுளம், கொயம்கொல குளம், ருகம் குளம், திக்கனே குளம், போகஹ குளம், ரதவள குளம், வந்துரன் புதும குளம், தளங்கொட குளம் ஆகிய குளங்களுக்கு நீர் கிடைக்கிறது. தலங்கொட குளத்தை அடுத்து மாணிக்க கங்கையிலிருந்து ஓர் கால்வாய் மூலம் கட்டுபில ஆற்றுக்கு மேலும் நீர் கிடைக்கிறது. இறுதியாக கட்டுபில குளத்திற்கும் இவ்வாற்று நீர் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாற்று நீரின் மூலமே இப்பகுதியில் இருபது அமுணம் விளையும் நெற்காணிகளுக்கு நீர்ப்பாசணம் கிடைத்தது. இன்று இவ்வாற்று நீர் யாள வெல ஊடாக தெற்கு நோக்கிச் சென்று மாணிக்ககங்கைக் கிளை ஆற்றுடன் இணைகிறது.

இவ்வாறு "கள்ளவியாள ஓடை" எனவும் அழைக்கப்படுகிறது.

கட்டுபில ஆறு சேறும் சகதியும் நிறைந்த சற்று ஆழமுள்ள ஆறாகும். இதனால் இவ்வாற்றை யாத்திரீகர்கள் கடக்க இலகுவாக ஆற்றின் குறுக்கே ஓர் தற்காலிக பாலம் அமைக்கப்பட்டிருந்தது. ஆற்றின் ஒடுங்கிய ஓரிடத்தில் இரண்டு மரத்தடிகளை குறுக்கு வாட்டில் போட்டிருந்தனர். இம்மரத்தில் கால் வைத்து நடக்கும் யாத்திரீகர்களுக்கு வசதியாக பிடித்துக் கொண்டு நடப்பதற்கு மார்பளவு உயரத்தில் ஓர் நீண்ட தடியும் பொருத்தப்பட்டிருந்தது. இத்தடியைப் பிடித்த வண்ணம் யாத்திரீகர்கள் பாலத்தை இலகுவாக கடந்தனர். ஆற்றின் அடுத்த கரையில் இராணுவத்தினரின் தங்காலிக கடையும், நீர்த்தொட்டியும் காணப்பட்டன. கடையில் சுடச்சுட ரொட்டியும், கட்டசம்பலும், மெகா போத்தலில் குளிர்பாணமும், தண்ணீர் போத்தலும், பிஸ்கட் பக்கெட்டுகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.



கட்டுப்பில ஆறு (கள்ள வியாளை ஓடை)

எம்மோடு வந்தவர்களும், ஏற்கனவே வந்தவர்களும் ஆற்றில் இறங்கிக் குளித்துக்கொண்டிருந்தனர். சிலர் மரநிழலில் ஓய்வெடுத் துக் கொண்டிருந்தனர். வேறு சிலர் கடையில் சாமான்கள் வாங்கிக்

கொண்டிருந்தனர். நாமும் ஆற்றில் இறங்கி நீராடினோம். ஆற்றில் நீர் இடுப்பளவு காணப்பட்டது. சற்று சேற்று நிறத்தில் காணப்பட்ட இந்நீர் குளிர்ச்சியாக இருந்தது. ஆற்றிலே கிண்ணை மரங்கள் சில வளர்ந்திருந்தன.

குளித்துவிட்டு வந்த நாம் கடையில் சுடச்சுட ரொட்டியை வாங்கி உண்டோம். ரொட்டியும், கட்டசம்பலும் மிக்க சுவையாக இருந்தன. மரத்தடியில் சற்று ஓய்வெடுத்தோம். இவ்விடத்தில் 45 நிமிடங்கள் கழிந்தன.

### தொலையாவட்டை மாய வெளி (அந்தொருவ வெல்யாய)

சரியாக நண்பகல் 12 மணிக்கு கட்டுபில ஆற்றங்கரை-யிலிருந்து மாணிக்க கங்கையை நோக்கி மேற்குப் பக்கமாக நடக்க ஆரம்பித்தோம். இங்கிருந்து மாணிக்ககங்கை சுமார் 2 கி.மீ தூரத்தில் ஓடுகிறது. தொலையாவட்டை என அழைக்கப்படும் யாளவெல வெளியில் சுமார் 500 மீற்றர் தூரம் வரை மரம் செடி கொடிகளற்ற வெட்டவெளியே காணப்பட்டது. இவ்வெட்ட வெளியில் 500 மீற்றர் தூரத்தை கடந்த பின் குட்டையான காட்டிலந்தை மரங்கள் பரவலாக காணப்பட்டன. 10 முதல் 15 அடிவரை மட்டுமே வளர்ந்து காணப்படும் காட்டிலந்தை மரங்கள் நிறைந்த இப்பகுதியில் எங்கு பார்த்தாலும் ஒற்றையடிப் பாதைகளே காணப்பட்டன.



தொலையாவட்டை மாய வெளி

எந்தப் பாதை எங்கே செல்கிறது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை. யாத்திரீகர்கள் பலர் வழிமாறி, திசைமாறி செல்லும் இடமாக இப்பகுதி காணப்படுவதால் இதை "மாயவெளி" என அழைக்கின்றனர். சுமார் 3 சதுர கி.மீ பரப்பளவுடைய இம்மாய வெளியை கடப்பது சற்று கடினமான காரியமாகும். மிகவும் அவதானமாக கூட்டம் கூட்டமாகவே இப்பிரதேசத்தை யாத்திரீகர்கள் கடந்து செல்கின்றனர். கொஞ்சம் நிதானம் தவறி அவதானக்குறைவாக இருந்தால் திசைமாறி எங்கோ சென்று விடுவோம். சிறிய பற்றைகளும், மரங்களும், நெருக்கமாக காணப்படுவதாலும் ஒற்றையடிப் பாதை வளைந்து வளைந்து செல்வதாலும் 50 அடி தூரத்தில் வருபவர்களையோ, போகின்றவர்களையோ பார்க்க முடிவதில்லை. எனவே மாயவெளியில் நாம் மட்டும் தனியாகவே செல்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

இம்மாயவெளியை யாத்திரீகர்கள் இலகுவாக கடப்பதற்கு ஓர் யுக்தி கையாளப்படுகிறது. இவ்வெளியிலுள்ள ஒற்றையடிப் பாதைகளில் சரியான பாதை தெரிந்த ஓர் குழுவினர் முதலில் இவ்வழியே செல்கின்றனர். அவர்கள் செல்லும் வழியில் மரக்கிளைகளை ஒடித்து சரியான பாதை வழியாக போட்டுக்கொண்டு போகின்றனர். பின்பு இம்மாயவெளியில் நுழைபவர்கள் மரக்கிளைகள் கிடக்கும் பாதையை அடையாளம் கண்டு அவ்வழியிலே சென்று மாணிக்க கங்கை கரையை அடைகின்றனர். இம்மாய வெளியின் மர்மம் தெரியாத பலர் தனிக்குழுவாக சென்று தடுமாறி வந்து சேர்கின்றனர். குழுவாக ஒன்று சேர்ந்து வருபவர்களில் சிலர் கூட சில சமயம் சற்று தாமதமாக நடந்து வந்து முன்னே சென்றவர்களைக் காணாது தடுமாறுகின்றனர். இதன் காரணமாக நடந்து செல்பவர்கள் தம்மோடு வருபவர்களின் பெயர்களை கூப்பிட்ட வண்ணம் செல்கின்றனர்.

இம்மாயவெளியிலே வழிமாறிச் சென்றவர்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் அற்புதங்களையும் கண்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இவ்வெளி சிங்கள மொழியில் "அந்தொருவ வெல்யாய" என அழைக்கப்படுகிறது. இவ்வெளியின் குறுக்கே ஓர் சிற்றோடையும் அமைந்துள்ளது. நீர் வற்றிப் போய் பள்ளமாகக் காணப்படும் அச்சிற்றோடையைக் கடந்து சிறிது நேரத்தில் ஒற்றையடிப்பாதை இன்னுமோர் பாதையுடன் இணைகிறது. ஆம். இப்-

பொழுது நாம் மாய வெளியைக் கடந்து விட்டோம். இம்மர்மமாய வெளியை கடப்பதற்கு 20 நிமிட நேரம் செல்கிறது.

**பழைய துறையடி விநாயகர் கோயில்**

ஒற்றையடிப்பாதை இணையும் சந்தியில் இருக்கும் பாரிய மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் விநாயகரை வணங்கிச் செல்லும் மரத்தடிக் கோயில் உள்ளது. தம்மை இதுவரை பாதுகாத்து வழிதவறாமல் கொண்டு வந்து சேர்த்ததற்கு நன்றி செலுத்தும் வகையில் இம்மரத்தின் கீழ் மரக்கிளைகளை ஒடித்துப் போட்டு வணங்கிச் செல்கின்றனர். இப்பயங்கர வனாந்தரக் காட்டில் எமக்கு தன்னம்பிக்கையுடன், உற்சாகத்தையும், பாதுகாப்பையும் கொடுப்பது இந்த தெய்வ நம்பிக்கையும், பக்தியும் தான்.

இவ்விடம் பரணதொட்டுபொல (பழைய துறையடி) என அழைக்கப்படுகிறது. இவ்விடத்தின் அருகில்தான் மாணிக்ககங்கையைக் கடக்கும் புராதன காலத்து துறையடி அமைந்துள்ளது. நாமும் நன்றியுடன் விநாயகரை வணங்கினோம். நாம் இப்பொழுது மாணிக்ககங்கை கரையை அடைந்து விட்டோம். இது மாணிக்க கங்கையின் வலது கரையாகும். இக்கரை வழியாக சுமார் 6 கி.மீ தூரத்தில் பிராமண தொட்ட என்றழைக்கப்படும் பிராமணர் துறை அமைந்துள்ளது. இன்னும் சிறிது தூரத்தில் நாம் இன்று தங்கும் இடத்தை அடைந்து விடுவோம். இப்போது சற்று இளைப்பாற வேண்டும் என எண்ணியபடியே சிறிது தூரம் நடந்து சென்றதும் எமது யாத்திரீகர்கள் பலர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்ததை கண்டோம். அவ்விடத்தில் இராணுவத்தினரின் தங்காலிக கடை ஒன்றும் காணப்பட்டது. அவ்விடத்தில் நாமும் அமர்ந்து ஓய்வெடுத்தோம்.

அப்போது ஓர் குடும்பத்தினர் பதட்டத்துடன் வந்து சேர்ந்தனர். மாய வெளியில் தாம் வழிதவறி விட்டதாகவும், தமக்கு நேர்ந்த அற்புதத்தையும் கூறினர். மாய வெளியில் தாம் வெகு தூரம் நடந்து சென்றும் மாணிக்க கங்கையை காணமுடியாமல் தடுமாறிய வண்ணம் யாராவது யாத்திரீகர்களைக் காணமாட்டோமா என செய்வதறியாது நடந்து கொண்டிருந்த போது தாடியுடன் ஓர் கிழவர் உட்கார்ந்து கொண்டிருந்ததாகவும், அவரிடம் மாணிக்க கங்கைக்கு போவது எப்படி எனக் கேட்டபோது

அவர் கங்கை ஓடும் திசையை நோக்கிக் கையைக் காட்டியதாகவும், இவர்களும் அத்திசைப்பக்கம் இருந்த ஒற்றையடிப்பாதை வழியே நடந்த வண்ணம் தனியாக நின்ற அவ்வயோதிபரையும் அழைத்துக் கொண்டு செல்லாம் என எண்ணித் திரும்பிப் பார்த்த போது அங்கு அவர் காணப்படவில்லை எனவும் தெரிவித்தனர். முருகப்பெருமானே வயோதிபர் வேடத்தில் வந்து தமக்கு வழிகாட்டியதாகக் கூறி பூரிப்படைந்தனர். வருடாவருடம் இது போன்ற பல சம்பவங்கள் இப்புனித வனத்தில் நடப்பதாகவும் அங்கிருந்த குருசாமி அவர்கள் கூறினார்.

**மருதமரத்தடி பெண் உருவம்**



மருதமரத்தடி பெண் உருவம் - மாணிக்க கங்கை

இன்று நாம் தங்கும் இடம் சொற்ப தூரத்திலேயே இருந்தது. மாணிக்க கங்கை ஓரமாக காணப்படும் பாதை வழியாக அவ்விடத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தோம். உயரமாக வளர்ந்த காட்டு மரங்களும் கங்கை ஓரமாக பாரிய மருதமரங்களும் அடர்த்தியாக வளர்ந்திருந்த பாதை வழியே பயணம் செய்து கொண்டிருந்தோம். மதிய நேரம் உச்சி வெயில் தலையை பிளக்கும் சமயம் அது. இருப்பினும் பாதையில் வெயில் விழாதபடி மரங்கள்

நெருக்கமாகக் காணப்பட்டன. எங்கு பார்த்தாலும் நிழல். மாணிக்க கங்கை மணலில் பல யாத்திரீகர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். குளு குளு நிழலிலே உற்சாகமாக நடந்து கொண்டிருந்த போது ஓர் அபூர்வ மரத்தைக் கண்டோம்.

பாதையின் இடது பக்கம் மாணிக்ககங்கை ஓரமாக ஓங்கி வளர்ந்திருந்த மருதமரம் அது. அதன் அடிப்பாகத்தை ஐந்து பேர் சேர்ந்தால் தான் கட்டிப்பிடிக்க முடியும். அத்தனை விசாலமான அடிமரத்தில் உருளை உருளையாக பல வடிவங்கள் செதுக்கி வைத்தாற் போல் காணப்பட்டன. இவற்றில் பக்கவாட்டில் பார்த்த வண்ணம் ஓர் பெண்ணின் உருவமும் அபூர்வமாகக் காணப்பட்டது. கண், நெற்றி, கொண்டை, முகம், மார்பகங்கள், இடுப்பு ஆகிய அத்தனை வடிவங்களும் இதிலே காணப்பட்டன. சற்று நேரம் வியப்போடு அவ்வுருவத்தைப் பார்த்து ரசித்த பின்பு அவ்வுருவத்தை எனது புகைப்படக் கருவிக்குள் பதிவு செய்து கொண்டேன்.

**மாணிக்க கங்கைக்கரை, விநாயகர், நாகநாதர் கோயில்கள்**



மாணிக்க கங்கைங்கரை நாகப்புற்று

அபூர்வ வடிவங்கள் நிறைந்த மருதமரத்தைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் ஓர் மரத்தடியில் யாத்திரீகர்கள் கற்பூரம் கொழு-

த்தி விநாயகரை வணங்கிக் கொண்டிருந்தனர். மரத்திலே பட்டு கட்டப்பட்டிருந்தது. இதிலே மயிலிறகு, மான் கொம்பு ஆகியவை செருகப்பட்டிருந்தன. மரத்தினடியில் விநாயகர் கல்லொன்று காணப்பட்டது. அருகில் ஓர் புற்றும் காணப்பட்டது. விபூதி, குங்குமம் ஆகியவையும் இங்கிருந்தன.

நாமும் விநாயகரை வணங்கிவிட்டு தங்குமிடம் நோக்கி நடந்து கொண்டிருந்தோம். சிறிது தூரத்தில் உயரமான புற்றொன்று காணப்பட்டது. பக்தர்கள் அவ்விடத்தில் கற்பூரம் கொழுத்தி புற்றை வலம் வந்து நாகநாதரை வழிபட்டனர். நாமும் கற்பூரத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு முன்னோக்கி நடந்தோம்.

**மாணிக்க கங்கை - கட்டுபில துறையடி**

முருகன், நாகநாதர் மரத்தடிக்கோயில்களைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் நாம் தங்கும் இடத்தை அடைந்தோம். அதுதான் மாணிக்க கங்கை கட்டுபில துறையடி. இன்று நாம் தங்கி இரவைக் கழிக்க இருப்பது மாணிக்க கங்கையில் தான். பாதையிலிருந்து மாணிக்க கங்கை சுமார் 8 அடி பள்ளத்தில் காணப்பட்டது. கங்கையில் நீர் சிறிதாகவே ஓடிக் கொண்டிருந்தது. முழங்கால் அளவுக்கு தெளிந்த சுத்தமான நீர் ஓடிக்கொண்டிருந்தது. சுமார் 70 அடி அகலம் கொண்ட கங்கையில் அரைவாசிப்பகுதிக்கு மேல் ஆற்று மணலே காணப்பட்டது. எனினும் மழை காலங்களில் கங்கையில் நீர் கரைபுரண்டு ஓடும். கங்கையில் இருபக்கங்களிலும் பாரிய மருத மரங்கள் வளர்ந்திருந்தன. கண்ணாடி போன்ற தெளிந்த நீரில் அடியில் உள்ள கற்கள், மணல் எல்லாமே அழகாகத் தெரிந்தன. நாம் தங்குமிடத்தை அடைந்த போது நேரம் பகல் 1.00 மணியாகும். இன்று நாவலடியிலிருந்து காலை 6.30 க்கு எமது பாத யாத்திரையை ஆரம்பித்தோம். இன்று மொத்தமாக நாம் நடந்து வந்த தூரம் 16 கி.மீற்றர்கள். நாவலடியிலிருந்து மாணிக்க கங்கை வரையான இத்தூரத்தை கடக்க ஐந்தரை மணித்தியாலங்கள் எடுத்தன.

இன்று நாம் தங்கியிருக்கும் இவ்விடத்தை கட்டுபில மங்கட என அழைக்கின்றனர். மங்கட என்பது ஆற்றைக் கடக்கும் இடம் எனப்பொருள்படுகிறது. இவ்விடத்தின் கிழக்குப்பக்கத்தில் கட்டுபில ஆறு ஓடுகிறது. இப்பகுதியில் ஒரு வகையான காட்டுப்-புற்கள் அதிகளவில் காணப்படுவதால் இவ்விடத்தில் ஓடும் ஆறு

காட்டுப்புல் ஆறு எனவும், துறையடி காட்டுப்புல் துறையடி எனவும் அழைக்கப்பட்டதாகவும், இதுவே சிங்கள் மொழியில் கட்டுபில ஆறு, கட்டுபில மங்கட என்ற பெயர்களில் அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.



மாணிக்க கங்கை

கதிர்காமக் கந்தனின் புனித பூமியை வளமாக்கும் இரண்டு முக்கிய நதிகளில் மாணிக்க கங்கையும் ஒன்றாகும். அடுத்தது கும்புக்கன் ஓயாவாகும். மாணிக்க கங்கைக்கு கதிர்காம கங்கை என்றோர் பெயரும் உள்ளது. ஊவா மலைத்தொடரின் தென் -பகுதியில் உள்ள மலைகளில் உற்பத்தியாகி தெற்கு நோக்கி குகுரம்பொல, நிதன்கல, தெமோதர, தியகிரின்ன கமேவெல, அலுப் பொத்த, அத்தலே, கடுகஹகல்கே, புத்தல, கொன்கெட்டிய, கரவில ஆகிய இடங்களினூடாக கதிர்காமத்தை வந்தடைந்து அங்கிருந்து கட்டகாமம் ருகம்தொட்ட ஊடாக யாள கடலில் மாணிக்க கங்கை சங்கமமாகிறது. இந்நதி தொட்டுச் செல்லும் இடங்களில் கதிர்காமம் முக்கியமான நகரமாகும். எனவேதான் இந்நதி “கதிர்காம கங்கை” என பண்டைய காலத்தில் அழைக்கப்பட்டது.

மாணிக்க கங்கையில் நிறைந்து காணப்பட்ட வெள்ளை மணலில் அங்குமிங்குமாக யாத்திரீகர்கள் தங்கி இருந்தனர். சிலர்

கங்கையில் குளித்துக் கொண்டிருந்தனர். மாணிக்க கங்கை மணலிலும், மரக்கிளைகளிலும், கொடிக்கயிறுகளிலும் யாத்திரீ-கர்களின் காவித்துணிகள் உலர்ந்து கொண்டிருந்தன. பகல் இரண்டு மணியளவில் மதிய உணவு கிடைத்தது. உணவை உண்ட பின்பு சிறிது ஓய்வெடுத்தோம். 5 மணியளவில் நண்பர்கள் குளிக்க ஆயத்தமானார்கள். நாமும் ஆற்றில் இறங்கிக் குளித்தோம். நீரை விட்டு வெளியே வர மனமில்லாமல் அதிக நேரம் தண்ணீரில் கிடந்தோம்.

யாத்திரீகர்கள் மணலிலே பள்ளம் தோண்டி சுத்தமான நீரை எடுத்து தமது போத்தல்களில் நிரப்பிக் கொண்டிருந்தனர். இன்றும் இரவு தெய்வீக பஜனை இடம்பெற்றது. அதன்பின் இரவு உணவு உண்டுவிட்டு ஆற்று மணலிலே உறங்கினோம். வழக்கமாக கங்கையில் நீர் குடிப்பதற்கு யானைகள் வருவதாக கூறினார்கள். யானைகள் இரவில் இவ்விடத்திற்கு வருவதை தடுப்பதற்காக பாரிய மரக்கட்டைகளைக் கொண்டு நான்கு பக்கங்களிலும் தீ மூட்டப்பட்டது. இரவு முழுவதும் தீ எரிந்து கொண்டிருந்தது. கட்டைகளைப் போட்டு தீ மூட்ட இரண்டு முழுவினர் மாறி மாறி பணியாற்றிக் கொண்டிருந்தனர். மணலிலே உறங்கினோம். மாணிக்க கங்கை சலசலப்பின்றி அமைதியாக ஓடிக்கொண்டிருந்தது.



மாணிக்க கங்கையில் யாத்திரீகர்கள் தங்கியிருக்கும் காட்சி

# 13. மாணிக்க கங்கை முதல் வீரச் சோலை வரை

***நாக காளியம்மன் துறை கோயில்***

*இன்று நாம் பாதயாத்திரை செய்யும் ஐந்தாவது நாள். வழமை போல இன்றும் அதிகாலை 5.00 மணியளவில் துயிலெழுந்தோம். காலைக்கடன்களை முடிந்து விட்டு பயணத்தை தொடர ஆயத்தமானோம். அப்போது இன்றைய யாத்திரையை மதிய உணவுக்குப் பின் ஆரம்பித்து மாலை ஆகும் பொழுது வீரச்சோலைக்குச் சென்றடையலாம் என குருசுவாமி கூறினார். ஏனெனில் சில யாத்திரீகர்களுக்கு இன்னும் சில மணி நேர ஓய்வு தேவைப்படுவதாகவும் அதனாலேயே இந்நேர மாற்றம் எனவும் கூறினார். ஆம். இன்று நாம் தங்குமிடம் வீரச்சோலையாகும்.*

*மதிய உணவை உண்டபின்பு சரியாக 1 மணியளவில் கட்டுபில துறையடியிலிருந்து வீரச் சோலை நோக்கிய எமது 5வது நாள் நடைபயணம் ஆரம்பமானது. மாணிக்க கங்கையில் "அரோகரா" கோஷத்துடன் யாத்திரீகர்கள் தமது உடைமைகளுடன் புறப்பட்டனர். 5 நிமிட நேரத்தில் பாதையின் வலது பக்கத்தில் ஓர் இராட்சத மரம் இருந்த இடத்தை அடைந்தோம். இவ்விடத்தில் சிலர் உட்கார்ந்து கொண்டிருந்தனர். இம்மரத்தின் கீழே பாதயாத்திரீகர்கள் அம்மனை நினைத்து கற்பூரம் கொழுத்திச் செல்வதுண்டாம்.*



நாகாளி தொட்ட நாககாளியம்மன் துறை மரக் கோயில்

இம்மரத்தின் கீழ் நாககாளியம்மனுக்கு ஓர் திறந்தவெளிக் கோயில் பண்டைய காலத்தில் இருந்ததாகவும் இவ்விடத்தில் மாணிக்க கங்கையைக் கடக்க ஓர் துறையடி இருந்ததாகவும் இத்துறையடி நாக காளியம்மன் துறை என அழைக்கப்பட்டதாகவும் முதியவர்கள் கூறினர். நாககாளியம்மன் துறை சிங்கள மொழியில் “நாகாளி தொட்ட” என அழைக்கப்பட்டது. இன்று இவ்விடம் நாகாளிகஸ் தொட்ட என திரிபடைந்துள்ளது. இன்றும் இவ்விடத்தை கடந்து செல்லும் போது தெய்வீகத் தன்மையை உணரக் கூடியதாக உள்ளது.

**பனையடித்துறை (தல்கஸ் மங்கட)**

நாகாளிகஸ் தொட்ட துறையைக் கடந்து மாணிக்க கங்கையின் வலது கரைப் பக்கமாக நடந்து சென்று கொண்டிருந்தவேளை மாணிக்க கங்கையை கடக்கப் பயன்படும் பல துறைகளை கடந்து சென்றோம். முதலில் கொமவாதொட்ட துறையும், அதை அடுத்து சிறிது தூரத்தில் பனையடித் துறையும் அமைந்துள்ளன. பனையடித் துறை “தல்கஸ் மங்கட” என அழைக்கப்படுகிறது. இத்துறையூடாக மாணிக்க கங்கையைக் கடந்தால் அங்கு வன இலாகா விடுதியைக் காணலாம். இங்கிருந்து தென்மேற்குப் பக்கத்தில் செல்லும் வீதியில் சிறிது தூரம் சென்றவுடன் கட்டகாமத்திலிருந்து யாள செல்லும் வீதி காணப்படுகிறது. இவ்வீதி தெற்குப் பக்கமாக யாள பழைய துறையடி வரை செல்கிறது. இவ்வீதியின் மேற்குப் பக்கமாக கட்டகாமம் செல்லும் வழியில் சிறிது தூரம் சென்று தெற்குப் பக்கம் செல்லும் சிறிய காட்டுப் பாதை வழியாக மேலும் 2 கி.மீ சென்றதும் மோதரகல திக்கன குளத்தை அடையலாம்.

**மோதரகல மலையும், குளமும்**

மோதரகல திக்கன குளம் ஓர் சிறிய குளமாகும். யாள வனவிலங்கு சரணாலயத்திற்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் முதலைகளைப் பார்க்க இக்குளத்திற்கு அழைத்து வரப்படுவார்கள். குளத்தின் முன்பாக காணப்படும் கற்பாறையில் முதலைகள் பல படுத்துக் கிடப்பதை இங்கே காணலாம். மோதரகல குளத்தின் தென்கிழக்குப் பக்கத்தில் மோதரகல மலை அமைந்துள்ளது. இம் மலையைச் சுற்றிக் காணப்படும் மலைகளில் பல நீர்ச்சுனைகள் அமைந்துள்ளன.

மோதரகல மலைப்பகுதியில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் ஆதி திராவிடர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள மலைக் குகைகளில் மூன்று பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு கல்வெட்டில் "பத்த கணகுத்தச மகா சுதஸ்ஸன லேன சகச" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது சுவாமி கண்ணகுத்தரின் மகாசுதர்சன குகை எனப் பொருள்படுகிறது. இதன்படி கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த சுவாமி கண்ணகுத்தர் இக்குகையில் தங்கியிருந்துள்ளார் எனக் கூறக் கூடியதாக உள்ளது. கண்ணகுத்த, கண, கண்ணஹுத்த, கணதசிக ஆகிய பெயர்களை உடையோர் கண்ணனை வழிபட்டவர்கள் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மோதர கல மலையில் வாழ்ந்த சுவாமி கண்ணகுத்தர் கண்ணனையும், கண்ணனின் அம்சமான விஷ்ணுவையும் வழிபட்டவர் என்பதற்கு இக்கல்வெட்டு மேலும் சான்றாக அமைகிறது. கல்வெட்டில் இது மகா சுதஸ்ஸன குகை எனக் கூறப்பட்டுள்ளது. சுதஸ்ஸன என்பது மகாவிஷ்ணுவின் சுதர்சன சக்கரத்தைக் குறிப்பதாகும். எனவே இக்குகையில் சுவாமி கண்ணகுத்தர் விஷ்ணு சக்கரத்தை வழிபட்டுள்ளார் எனவும் கொள்ளலாம்.

மோதரகல மலையில் உள்ள இன்னுமோா கல்வெட்டும் "கிராமத் தலைவன் கண்ணனின் மகன் கிராமத் தலைவன் சதனனின் குகை" எனக் குறிப்பிடுகிறது. இதன்படி கண்ணன் என்பவன் இப்பகுதியில் கிராமத் தலைவனாக இருந்ததோடு அவனின் மகனும் கிராமத் தலைவனாக இருந்துள்ளான் என்பதும் புலனாகிறது. இவர்களும் கண்ணனை வழிபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிராமணத் துறை (பிராமண தொட்ட)**

பனையடித் துறையை அடுத்து மேலும் முன்னோக்கி நடந்து சென்ற நாம் சுமார் 2 கி.மீ தூரத்தில் இருந்த கொட்டியா தொட்ட துறையை அடைந்தோம். இங்கிருந்து சிறிது தூரத்திலே தான் மாணிக்க கங்கையின் பிரசித்தி பெற்ற துறையான பிராமணத்துறை அமைந்துள்ளது. பகல் 1.40 மணியளவில் நாம் பிராமண தொட்ட வைத்திய பரிசோதனை நிலையத்தை அடைந்தோம். இங்கு இராணுவத்தில் உள்ள வைத்திய பிரிவின்

அதிகாரிகளும் வைத்தியர்களும் இருந்தனர். காட்டுப் பாதைவழி-யாககதிர்காமத்திற்கு பாதயாத்திரைவரும் யாத்திரீகர்கள் தமது உடல் உபாதைகளுக்கும், நோய்களுக்கும் இங்கு இலவசமாக பரிசோதனை செய்து மருந்துகள் பெற்றுக் கொள்ளலாம். பல மைல் தூரம் நடந்து வந்த யாத்திரீகர்களின் கால்களில் ஏற்பட்ட காயங்களுக்கு இங்கு உள்ள இராணுவ தாதிமார்கள் மருந்து கட்டுகின்றனர். எமக்கு உள்ள நோய்களை வைத்தியரிடம் கூறி இங்கே மருந்துகள் எடுத்துக் கொள்ளலாம்.

இவ்விடத்தில் சுமார் 85 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் தடியொன்றை ஊன்றியபடி பாதயாத்திரை வந்து கொண்டி-ருந்தார். பல வருடகாலமாக யாருடைய உதவியும் இன்றி தனியாகவே அவர் பாதயாத்திரை வருவதாக கூறினார்கள். இந்தத் தள்ளாத வயதில் அவர் முருகன் மீது வைத்திருந்த அதீத நம்பிக்கையை கண்டு வியந்தேன்.



பாதயாத்திரை வரும் முதியவர் (பிராமணர் துறை)

எம்மோடு வந்த குழுவினரில் பலர் தமது கால்களில் ஏற்-பட்ட காயங்களுக்கு இங்கு மருந்து கட்டிக் கொண்டனர். மேலும் தலைவலி, தடிமன், காய்ச்சல், இருமல் ஆகிய நோய்களுக்கே அதிகளவில் யாத்திரீகர்கள் மருந்து பெற்றுக் கொண்டனர். சுமார் முக்கால் மணி நேரம் இவ்விடத்தில் இருந்தோம். எல்லோரும்

தமக்குத் தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொண்ட பின் இங்கிருந்து சொற்ப தூரத்தில் உள்ள பிராமண தொட்ட வரா ஹன சந்தியை அடைந்த எமக்கு இராணுவத்தினரின் தற்காலிய கடையிலிருந்து தேனீர் வழங்கப்பட்டது. இத்தேனீர் பெலிமல் எனப்படும் மூலிகைப் பூவிலிருந்து தயாரிக்கப்பட்டிருந்தது. தேனீருடன் கித்துள் சக்கரைக் கட்டியும் சேர்த்து உண்ணும்பொழுது மிக்க சுவையுடன் இருந்தது. உடலுக்கு உற்சாகமும் ஏற்பட்டது.

வரஹன சந்தியிலிருந்து தெற்குப் பக்கமாக திரும்பிய போது மாணிக்க கங்கையைக் கடக்க ஓர் பாலம் அமைக்கப்பட்டிருந்தது. இது வரஹன பாலம் என அழைக்கப்படுகிறது. இவ்விடத்தில் தான் பண்டைய காலத்தில் கங்கையைக் கடக்க பயன்பட்ட பிரசித்தி பெற்ற துறை அமைந்துள்ளது. இது பிராமணர் துறை என அழைக்கப்படுகிறது. பண்டைய காலத்தில் இந்தியாவிலுள்ள கேரள நாட்டிலிருந்து கதிர்காமத் திருத்தலத்தைத் தரிசிக்க வரும் பிராமணக் குழுவினர் மாணிக்க கங்கை கழிமுகத்தின் ஊடாக உட்புகுந்து கங்கையின் வலது பக்கமாக நடந்து சென்று இவ்விடத்தில் உள்ள துறையூடாக அக்கரைக்குச் சென்று அங்கிருந்து கதிர்காமத்திற்கு சென்று முருகனை வழிபட்டு வந்துள்ளனர். இவர்கள் கடக்கும் துறையெனும் அர்த்தத்தில் இவ்விடம் பிராமணர் துறை என அழைக்கப்பட்டது. இதுவே சிங்கள மொழியில் பிராமண தொட்ட என அழைக்கப்பட்டது. இவ்விடத்தில் மாணிக்க கங்கைக் கரையில் பிராமணர்கள் முருகனை வழிபட்டுச் சென்ற திறந்தவெளி மரக்கோயில் அமைந்திருந்ததாகக் கூறப்படுகிறது.



வரஹன பாலம் – பிராமணர் துறை

இங்கிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் வீதி வரஹன மங்கட, ஹிரிகட்டியா தொட்ட ஊடாக மாயக்கல் மலைக்குச் செல்கிறது. வரஹன பாலத்தைக் கடந்தவுடன் யாத்திரீகர்கள் பலர் மரத்தின் கீழ் அமர்ந்திருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. இவ்விடத்தில் சீமெந்து கல் அறிவித்தல் பலகை ஒன்று காணப்பட்டது. அதில் "யாள தேசிய பூங்கா - பிரிவு 2, 3 வரஹன முகாம்" என சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்தது. இவ்விடத்திலிருந்து கிரவள் பாதை வாகனங்கள் செல்லக் கூடிய வகையில் சீராக அமைக்கப்பட்டிருந்தது.

**வேல் கண்ட மலைக் கோயில்**

பிராமணத் தொட்டவிலுள்ள வரஹன பாலத்திலிருந்து சுமார் இரண்டரை கி.மீ தூரத்தில் ஓர் சந்தியை அடைந்தோம். இச்சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக யாள பழைய துறையடிக்குச் செல்லலாம். நாம் செல்ல வேண்டியது மேற்குப் பக்கமாக உள்ள கட்டகாமத்திற்கு. இச்சந்தியிலிருந்து 20 நிமிட நடையின் பின் ஒன்றரை கி.மீ தூரத்தில் உள்ள ஓர் முக்கிய இடத்தை அடைந்தோம். இவ்விடம் "வேல்கண்ட மலை" என அழைக்கப்படுகிறது.



வேல் கண்ட மலை

இவ்விடத்தை அடைந்தவுடன் யாத்திரீகர்கள் பரவசமடைகின்றனர். அரோகரா, முருகா, ஓம் சரவணபவா போன்ற கோஷங்கள் ஒலிக்கின்றன. யாத்திரீகர்கள் கண்களிலே நீர் பெருகுகிறது.

சிலர் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுகின்றனர். இதற்குக் காரணம் அவர்களுக்கு கிடைத்த கதிரமலை தரிசனமே. உகந்தையிலிருந்து 5 நாட்களாக 55 கி.மீ தூரம் வரை நடந்து வந்து முருகனின் தரிசனம் கிடைக்காதா என ஏங்கித் தவித்துக் கால்கடுக்க பாதயாத்திரை வந்து கொண்டிருக்கும் யாத்திரீகர்களுக்கு முதன் முதலாக ஏழுமலையைக் கண்டவுடன் ஆனந்த பரவசத்தில் தம்மையறியாமலே கண்களில் நீர் வருகிறது. நாம் கதிரமலையை நெருங்கி விட்டோம் கூடிய சீக்கிரத்தில் நாம் காணவந்த கதிர்காமக் கந்தனின் திருமுகத்தைப் பார்த்து விடுவோம் என்ற மகிழ்ச்சியில் மனம் ஆனந்தமடைகிறது.

வேல்கண்ட மலை எனும் இவ்விடத்திலிருந்து கதிரமலைக்கு சுமார் 15 கி.மீ தூரம் உள்ளது. பல மைல் தூரம் முருகனின் புனித வேலை ஏந்திய வண்ணம் பாதயாத்திரை வரும் முனிவர்களின் கையிலிருந்த வேலானது முதன் முதலாக கதிரமலையைக் காணும் இடம் எனும் அர்த்தத்தில் இவ்விடத்திற்கு "வேல் கண்டமலை" எனப் பெயர் வந்தது. எனினும் இவ்விடத்தில் மலை கள் எதுவும் இல்லை. பண்டைய காலத்தில் கதிர மலைக்கு வந்த முனிவரொருவர் பற்றைகளுக்கருகில் வளர்ந்துள்ள ஓர் புற்றின் கீழே தான் கொண்டு வந்த வேலை நாட்டி தூரத்தில் தெரியும் கதிரமலையைப் பார்த்து அதற்கு தீபம் காட்டி முருகனை நினைத்து இவ்விடத்தில் தான் நாட்டிய வேலுக்குப் பூஜை செய்து பிரசாதம் படைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. அதுபோல் கதிரமலைக்கு வரும் பாத யாத்திரீகர்களும் கதிர மலை தரிசனத்தைக் கண்டவுடன் புற்றினடியில் இருக்கும் வேலை வணங்கி பிரசாதம் படைத்து பூஜை செய்து கதிரமலைக்கு கற்பூரதீபம் காட்டி கண்ணில் ஒற்றிக் கொண்டு பாதயாத்திரையைத் தொடர்கின்றனர்.

பாதையருகில் இருந்த பற்றை அருகில் காணப்பட்ட புற்றடியில் வேல் நாட்டப்பட்டிருந்தது. வேலின் முன்பாக இருந்த மேடையில் பொங்கல், அவல் ஆகிய பிரசாதங்கள் குவிந்து காணப்பட்டன. இரண்டு சிறிய குத்து விளக்குகளும், உடைக்கப்பட்ட தேங்காய்களும், கற்பூரம் கொழுத்தும் சட்டியும் ஒரு பாத்திரத்தில் விபூதியும் காணப்பட்டன. யாத்திரை வந்த பக்தர்கள் அனைவரும் இவ்விடத்தில் பூஜை செய்து வேலை வணங்கிச் சென்றுள்ளனர். நாமும் இங்கு வந்து கதிரமலை தரிசனம் கண்ட போது பரவசத்தில் உடல் சிலிர்த்தது. எம்மோடு வந்தவர்களின் பலர்

இவ்விடத்தில் ஒன்று கூடினர். அவல் பிரசாதம் தயாரித்து படைத்து விட்டு மலைக்கு கற்பூரம் காட்டி பிரசாரத்தை வழங்கினர். கற்பூர தீபத்தைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டு பிரசாதத்தையும் பெற்று உண்டோம்.

இவ்விடத்திலும் இராணுவத்தினரில் நீர்த் தொட்டியொன்று வைக்கப்பட்டிருந்தது. யாத்திரீகர்கள் தமது போத்தல்களில் நீரை நிரப்பிக் கொண்டனர். இவ்விடத்திலிருக்கும் வேல் கோயி-லின் பின்பக்கமாக வடக்கு நோக்கி ஓர் ஒற்றையடிப் பாதை செல்கிறது. இப்பாதை மாணிக்க கங்கை வரை செல்கிறது. இங்கு மாணிக்க கங்கையைக் கடக்கும் துறை "வரஹன மங்கட" என அழைக்கப்படுகிறது.

வேல்கண்டமலைக் கோயிலின் தெற்குப் பக்கத்தில் சிறிது தூரத்தில் ஓர்சிறிய தூர்ந்து போன குளம் காணப்படுகிறது. இது வரஹன குளம் என அழைக்கப்படுகிறது.

ஜெரிமிஸ் பொக்குன குளம்



ஜெரிமிஸ் பொக்குன குளம்

வேல்கண்ட மலையிலிருந்து முக்கால் மணி நேர நடைப்பயணத்தின் பின் பாதையின் இடது பக்கத்தில் ஓர் சிறிய

குளத்தைக் கண்டோம். இக்குளம் "ஜெரிமிஸ் பொக்குன குளம்" என அழைக்கப்படுகிறது. குளத்தின் நீர் வற்றி சிறிதளவே நீர் காணப்பட்டது. சித்துல்பவ்வ மலைப்பகுதியிலிருந்து வரும் சிற்றாறு மூலம் இக்குளத்திற்கு நீர் கிடைக்கிறது. இக்குளத்தின் அணையாக நாம் நடந்து செல்லும் பாதை அமைந்துள்ளது. வற்றிய குளத்தில் ஒரு காட்டெருமை மேய்ந்து கொண்டிருந்தது. இங்கிருந்து தென்கிழக்குப் பக்கமாகப் பார்க்கும் பொழுது சித்துள்பவ்வ மலை மீது அமைந்திருக்கும் தூபி தெரிகிறது. இங்கிருந்து 2 கி.மீ தென்கிழக்கில் சித்துள் பவ்வ மலை அமைந்துள்ளது.

### *சித்தர் மலை (சித்துள் பவ்வ)*

வேல்கண்ட மலை கந்தக்கடவுளின் புனித பூமியில் உள்ள மிக முக்கிய இடமாகும். இதனால் கதிரமலைக்கு யாத்திரை வரும் சித்தர்களும், முனிவர்களும் தாம் கண்ட கதிரமலையை நோக்கி இவ்விடத்தில் இருந்து தியானத்தில் ஈடுபடுவதுண்டு. எனவே வேல் கண்ட மலையை சுற்றியுள்ள இடங்களிலெல்லாம் சித்தர்கள் தங்கியிருந்துள்ளனர். இவற்றில் முக்கிய இடமாக விளங்குவது சித்தர் மலைப்பகுதியாகும்.



சித்தர் மலை (சித்துள் பவ்வ)

சித்தர்மலை வேல்கண்ட மலையின் தெற்கில் ஒன்றரை கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. இம்மலையில் நூற்றுக்கும் அதிகமான கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் 60க்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 16 குகைகளில் "சுவாமி" எனும் அடைமொழியுடன் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இக்குகைகளில் தங்கியிருந்த முனிவர்கள், சித்தர்கள் ஆகியோரின் பெயர்களாகும். இலங்கையில் உள்ள மலைக்குகைகளில் அதிகமாக முனிவர்கள் தங்கியிருந்தது சித்துல் பவ்வ மலைக்குகைகளிலேயாகும். அகத்திய முனிவர் தங்கியிருந்த ஓர் குகையும் இங்கு காணப்படுகிறது. இதில் அகத்தியரை "சுவாமி அக்கி தேவ" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இங்குள்ள குகைகளில் வாழ்ந்த முனிவர்களால் இப்பகுதியில் சிவன், நாகம், வேலன், கண்ணன் ஆகியோருக்கான வழிபாடுகள் நடத்தப்பட்டுள்ளது. இங்குள்ள குகைகளில் இத்தெய்வங்களுக்கான குகைக்கோயில் இருந்திருக்கலாம். இக்குகைகளில் சிவன் சம்பந்தமான 8 கல்வெட்டுக்களும், நாகம் சம்பந்தமான 4 கல்வெட்டுக்களும், வேலன், கண்ணன் ஆகியோர் பெயர் பொறிக்கப்பட்ட ஒவ்வோர் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. மேலும் பிராமணர் தொடர்பான 2 கல்வெட்டுக்கள் இங்கு காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்கள் மூலம் சித்துல் பவ்வ மலைப்பகுதியில் 2000 வருடங்களுக்கு முன்பு இந்து தெய்வ வழிபாடு நிலவியதோடு, பிராமணர்களும் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகிறது. அத்துடன் இங்குள்ள குகைகளில் வாழ்ந்தவர்கள் சிவவழிபாடையே அதிகளவில் மேற்கொண்டுள்ளனர் என்பதும் தெரிய வருகிறது. மேலும் சித்தர்கள் இம்மலைப்பகுதியில் அதிகளவில் தங்கியிருந்ததால் இது "சித்தர்மலை" எனப் பெயர் பெற்றுள்ளது. இப்பெயரே பின்பு சித்தல பப்பத்த எனவும் தற்போது சித்துள் பவ்வ எனவும் மாற்றமடைந்துள்ளன.

கி.மு 3ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சித்துல் பவ்வ பகுதி கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. இம்மன்னர்கள் பாண்டிய, தமிழ், இந்து மன்னர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்துள் பவ்வ பகுதியில் சிவவழிபாடு நிலவிய ஓர் நகரம் இருந்துள்ளமை பற்றி கல்வெட்டுக்கள் மூலம் அறியப்பட்டுள்ளது. இங்கு பாறை மீது கட்டப்பட்டிருக்கும் பௌத்த தூபிக்குச் செல்லும் படிக்கட்டுப் பாதையின் இடது பக்கத்தில் பாறைமீது ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 35-44 காலப்பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த ஈழநாகன் எனும் மன்னன் பொறித்த கல்வெட்டாகும். இக்கல்வெட்டு ஒரு பகுதியில் 13 வரிகளிலும் அடுத்த பகுதியில் 15 வரிகளிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. 2ம் பகுதியின் 12ம், 13ம் வரிகளில் "சிவநகர" எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தலத்திற்கு நிவந்தமாக அளிக்கப்பட்ட இடங்களில் சிவநகரமும் ஒன்றாகும் என்பது கல்வெட்டு கூறும் செய்தியாகும்.




சிவ நகரம் பற்றிக் குறிப்பிடும் சித்தர் மலை (சித்துள் பவ்வ) கல்வெட்டு

**வள்ளியம்மன் ஆறு**

வேல்கண்ட மலையின் வடக்குப்பக்கத்தில் ஒன்றரை கி.மீ தொலைவில் மாணிக்ககங்கை ஓடுகிறது. இவ்விடத்தை வள்ளிய-ம்மன் ஆறு என அழைக்கின்றனர். வள்ளியம்மன் தனது தோழிகளு-

டன் இவ்விடத்திற்கு வருவதாகவும், ஆற்றங்கரையில் செழித்து வளர்ந்து காணப்படும் மருதமலை கிளைகளில் ஊஞ்சல் கட்டி விளையாடுவதாகவும், மருத மரங்களில் காய்க்கும் மருதம் பழங்களைப் பறித்து உண்ணுவதாகவும் கூறப்படுகிறது. வள்ளியம்மன் இன்புற்று விளையாடிய இடம் என்பதால் இவ்விடம் வள்ளியம்மன் ஆறு எனப் பெயர் பெற்றுள்ளது.

**கோரக்கர் மலை**

வேல்கண்ட மலையிலிருந்து வடமேற்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் கொரவக்ககல எனும் மலையும் அங்கிருந்து சற்று தொலைவில் உள்ள மாணிக்க கங்கையின் கரையில் கொரவக்க தொட்ட எனும் துறையும் அமைந்துள்ளன. இவை கோரக்கர் மலை, கோரக்கர் துறை எனும் பெயர்களின் திரிபு எனக் கூறப்படுகிறது. கோரக்க முனிவர் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்தபோது அவர் தங்கியிருந்த மலையும், அவர் பயன்படுத்திய கங்கைத் துறையுமே அவரின் சீடர்களால் கோரக்கர் பெயர் கொண்டு அழைக்கப்பட்டுள்ளன. இப்பெயர்களே காலப்போக்கில் திரிபடைந்துள்ளன.

கோரக்கர் பெயரில் இன்னுமோர் இடமும் இப்பகுதியில் உள்ளது. வேல்கண்ட மலையிலிருந்து மேற்குப்பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் கொரவக்க வெவ எனும் பெயரில் ஓர் குளம் அமைந்துள்ளது. இக்குளமும் கோரக்க முனிவர் பயன்படுத்திய குளமென்பதால் கோரக்கர் குளம் எனவும் பின்பு கொரவக்க வெவ எனவும் திரிபடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதன்படி கோரக்க முனிவர் கதிரமலைக்குச் செல்லும் வழியில் இப்பகுதியில் தங்கியிருந்து சென்றுள்ளார் என்பதற்கு இம்மூன்று இடங்களும் சான்றுகளாக அமைகின்றன. கோரக்கநாத் முனிவர் ஸ்தாபித்த கோயிலே சம்மாந்துறை கோரக்கர் கோயில் என்பது குறிப்பிடத்தக்கது.

**பதஞ்சலி துறை**

வேல்கண்ட மலையின் வடமேற்கில் 3 கி.மீ தூரத்தில் உள்ள மாணிக்க கங்கையின் கரை “பதஞ்சலிகஸ் தொட்ட” என அழைக்கப்படுகிறது. இவ்விடம் பதஞ்சலி முனிவர் கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்தபோது அவர் பயன்படுத்திய கங்கைத்துறை எனக் கூறப்படுகிறது. இத்துறை பின்பு வந்த பதஞ்சலி முனிவரின்

சீடர்களால் பயன்படுத்தப்பட்டுள்ள போது தமது குருவின் பெயரையே இத்துறைக்கு வைத்துள்ளனர். பதஞ்சலிதுறை என்பதே மருவி பதஞ்சிதொட்ட எனவும் பின்பு பதங்கிகஸ் தொட்ட எனவும் மாற்றமடைந்துள்ளது.

## வந்திரி வெளி

பதஞ்சலி துறையடி ஆற்றைக் கடந்ததும் அக்கரையிலிருந்து ஒரு கி.மீ வடமேற்கில் ஓர் வெட்டவெளி காணப்படுகிறது. இவ்வெளி வேல் கண்ட மலையின் வடமேற்கில் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்வெளி "வந்திரிகே எலிய" என அழைக்கப்படுகிறது. கதிர்காமத்திற்கு தீர்த்த யாத்திரை வந்த தன்வந்திரி முனிவர் இவ்விடத்தில் தங்கிச் சென்றதாக கூறப்படுகிறது. எனவே இவ்விடம் தன்வந்திரி வெளி எனப்பெயர் பெற்றுள்ளது. இதுவெ மருவி வந்திரிவெளி எனவும் பின்பு "வந்திரிகே எலிய" எனவும் மாற்றமடைந்துள்ளது. தன்வந்திரி முனிவர் புலத்திய முனிவரால் சிவகிரி மலையில் நடந்த ஆயுர்வேத மருத்துவ மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு அழைக்கப்பட்ட போது கதிரமலைக்கு தீர்த்த யாத்திரை வந்து சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹல்மில்ல குளம் வேப்ப மரத்தடி பிள்ளையார் கோயில்



வேப்ப மரத்தடி பிள்ளையார் கோயில்

ஜெரிமிஸ் பொக்குன குளத்திலிருந்து சுமார் 35 நிமிட யாத்திரையின் பின் ஓர் சந்தியை அடைந்தோம். இச்சந்தியில் இருந்த வேப்பமரத்தின் கீழ் கற்களிலே மேடையமைத்து அதில் பிள்ளையார் கல் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. யாத்திரீகர்கள் இப்பிள்ளையாருக்கு கற்பூர தீபம் காட்டி வழிபட்டனர். விநாயகரை வழிபட்ட பின் சிறிது நேரம் அமர்ந்து ஓய்வெடுத்தனர். இங்கிருந்து வடக்குப் பக்கமாக ஓர் சிறிய பாதை செல்கிறது. இப்பாதை ஹல்மில்ல குளத்தின் ஊடாக மாணிக்க கங்கைக்கு செல்கிறது. நாமும் வேப்பமரத்தடி விநாயகரை வணங்கிவிட்டு சிறிது நேரம் ஓய்வெடுத்தோம்.



வேப்ப மரத்தடி பிள்ளையார் கோயில்

***கட்ட காமம் சித்தர்மலை சந்தி***

வேப்பமரத்தடி விநாயகர் கோயிலின் தெற்குப் பக்கமாக கட்டகாமத்திற்கு பாதை செல்கிறது. இடையில் பாதையின் இடது பக்கம் ஒரு குட்டை காணப்பட்டது. சுமார் 20 நிமிட நடைப் பயணத்தின் பின் இங்கிருந்து ஒன்றரை கி.மீ தூரத்தில் இருந்த கட்டகாமம் வனவிலங்கு பூங்கா நுழை வாயிலை அடைந்தோம். பச்சை நிற இரும்பு கதவுடன் நுழை வாயில் அமைக்கப்பட்டிருந்தது. வாயிலைக் கடந்தவுடன் கட்டகாமம் சந்தி காணப்பட்டது. கட்டகாமம் குளத்தின் கிழக்குக் கரைப்பக்கம் இச்சந்தி அமைந்துள்ளது.

இவ்விடத்தில் கட்டகாமம் வனவிலங்கு பூங்கா அலுவலகம், காவலரன், விடுதி, கடை ஆகியன அமைந்திருந்தன. இக்கடை இராணுவத்தினரால் பராமரிக்கப்படுகிறது. இவ்விடம் ஓர் முச்சந்தியாகும். இங்கிருந்து கிழக்குப் பக்கமாக செல்லும் பாதை சித்துல் பவ்வ மலைக்கும், தெற்குப் பக்கம் செல்லும் பாதை கதிர்காமத்திற்கும் வடகிழக்குப் பக்கமாக நாம் வந்த பாதை பிராமணர் துறை, யாள ஆகிய இடங்களுக்கும் செல்கின்றன.

இங்கிருந்த கடை நகர்புறத்தில் உள்ள கடைகளைப்போல எல்லாப் பொருட்களும் கொண்டதாகக் காணப்பட்டது. கடையில் பாத யாத்திரீகர்களுக்காக விஷேட ஏற்பாடுகள் செய்யப்பட்டி-ருந்தன. யாத்திரீகர்களின் கையடக்கத் தொலைபேசிகளின் மின்-கலங்களின் சக்தியை மீள் நிரப்பிக் கொள்ளுவதற்கான வசதிகள் இருந்தன. யாத்திரீகர்களில் பலர் மின்கலங்களின் சக்தியை மீள் நிரப்புவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இதன் மூலம் சிலர் தமது கையடக்கத் தொலைபேசியினை இயங்க வைத்து தமது வீட்டாருடன் தொலைபேசியில் பேசினர். கடைக்கு முன்பக்கமாக இருந்த மரத்தின் கீழ் பல யாத்திரீகர்கள் அமர்ந்திருந்தனர். சிலர் கடைக்குச் சென்று தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்தனர். இவ்விடத்தில் 15 நிமிடங்கள் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் யாத்திரையைத் தொடங்கினோம்.

### கட்டகாமம் குளமும், வேல் கோயிலும்

கட்டகாமம் சந்தியிலிருந்து கிளம்பிய ஐந்து நிமிட நேரத்-தில் நாம் கட்டகாமம் குளத்திற்கு செல்லும் ஒற்றையடிப் பாதை வழியாக பிரதான வீதியை விட்டு விலகிச் சென்றோம். பிரதான வீதி குளத்தைச் சுற்றிச் செல்வதால் குளத்திற்குள் செல்லும் குறுக்கு வழி மூலம் யாத்திரீகர்கள் சென்றனர். இது கோடை காலமாகையால் குளத்தில் நீர்வற்றி சேறு காய்ந்து காணப்பட்டது. இப்பகுதியிலே நீர் இருந்த காலத்தில் யானைகள் நீர் குடிக்க வந்து சென்றுள்ளன. அதன் பின் குளத்தின் நீர் வற்றி சேறும் காய்ந்து வரண்டு விட்டது. இங்கு வந்து சென்ற ஆயிரக்கணக்கான யானைகளின் பாதச் சுவடுகள் இத்தரையை குன்றும் குழியுமாக்கி நாம் நடந்து செல்வதற்கு கடினமான தரையாக இதை உருமாற்றியிருந்தன.



கட்டகாமம் குளம்

இத்தரையிலே கவனமாக ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்து நடக்க வேண்டும். இல்லையேல் கால் குறுகிய குழிகளுக்குள் மாட்டி பிசகி சுளுக்கை ஏற்படுத்திவிடும். சில சமயம் கால் விரல்களில் காயமும் ஏற்பட்டு விடும். இந்த ஆபத்தை உணர்ந்து கொண்ட யாத்திரீகர்கள் தமது ஒவ்வொரு அடியையும் கவனமாக எடுத்து வைத்தனர். இருப்பினும் யாத்திரீகர்கள் காலிலே அணிந்திருக்கும் செருப்புகள் அடி எடுத்து வைக்கும் போது வழுக்கி கால் குழிக்குள் விழுவதோடு செருப்புக்களும் அறுந்து விடுகின்றன. இவ்வாறு அறுந்த செருப்புக்கள் பல இப்பகுதியில் காணப்பட்டன. இவ்விடயம் தெரிந்த சிலர் தமது காலிலிருந்த செருப்புக்களைக் கழற்றி கையில் பிடித்தபடி நடந்து சென்றனர். இவ்வாறு மிகக் கவனமாக நடந்து குளத்தை கடந்து அடுத்த பக்கம் சென்றோம். அடுத்த பக்கத்தில் குளத்தைச் சுற்றி வரும் பாதை தென்பட்டது. குளத்தின் ஊடாக இக்குறுக்கு வழியில் நடந்து சென்றதன் மூலமாக சுமார் 2 கி.மீ தூரத்தை மீதப்படுத்தியுள்ளோம்.

கட்டகாமம் குளத்திற்கு மாணிக்க கங்கையிலிருந்து வரும் வாய்க்கால் மூலமாக நீர் கிடைக்கிறது. குளத்தின் வடக்குப் பக்கத்தில்

ஒரு கி.மீ தூரத்தில் மாணிக்க கங்கை ஓடுகிறது. கட்டகாமம் குளம் சிங்கள மொழியில் "கட்டகமுவ வெவ" என அழைக்கப்படுகிறது. இக்குளத்தை நாம் கடந்து சென்று கொண்டிருந்த போது "கட்டகாமக் கிழவி கதிர்காமம் சென்றது போல" என பலர் அடிக்கடி கூறிக்கொண்டிருந்தனர். இக்கூற்றின் பின்னணியில் பண்டைய காலத்தில் நிகழ்ந்த ஓர் கதையையும் ஓர் முதியவர் கூறினார்.

கட்டகாமம் குளத்தின் அருகிலே ஓர் வயது முதிர்ந்த ஏழைக் கிழவி வசித்து வந்ததாகவும், முருகப் பெருமான் மீது அதிபக்தி கொண்ட இக்கிழவி குளக்கரையில் இருந்த ஓர் மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் கொடுத்த முருகனின் வேல் ஒன்றை வைத்து வணங்கி வந்ததாகவும், கதிர்காமத் திருவிழாவிற்கு ஒரு தடவையாவது சென்று முருகப் பெருமானை தரிசித்து வரவேண்டும் என ஆவல் கொண்டு இருந்ததாகவும், கதிர்காமத்திற்குச் செல்ல அவரிடம் பணம் இல்லாததால் இவ்வழியாக வரும் யாத்திரீகர்களுக்கு அப்பம், புட்டு ஆகியவற்றை தயாரித்து விற்று பணம் சேர்த்து கதிர்காமம் செல்லலாம் என நினைத்து அதன்படி யாத்திரீகர்க-ளுக்கு கடையப்பம் செய்து விற்று வந்ததாகவும் கூறப்படுகிறது. தான் நினைத்தபடி கையில் பணம் சேர்ந்து கதிர்காமத்திற்கு புறப்பட ஆயத்தமாகும் போது திருவிழா முடிந்து விடுமாம். பின்பு மனவருத்தத்துடன் அடுத்த வருடம் திருவிழாவிற்கு செல்லலாம் என நினைத்து இருக்கும் வேளையில், இந்த ஒரு வருடத்திற்குள் சேமித்த பணமும் செலவாகி விடுமாம். மீண்டும் அடுத்த தடவை கடையப்பம் செய்து யாத்திரீகர்களுக்கு விற்று பணம் சேர்த்து கதிர்காமம் செல்ல ஆயத்தமாகும் பொழுது திருவிழா முடிந்து விடுமாம். இப்படியாக அடுத்த வருடம், அடுத்த வருடம் என ஏக்கத்துடன் இருந்தே வயோதிபக் கிழவி ஒரு நாள் இறந்து விட்டாராம்.

பல வருடங்கள் முயற்சி செய்தும் இறுதிவரை முருகப் பெருமானைத் தரிசிக்காமலேயே இறந்து விட்ட இக்கிழவிக்கு அவர் கடையப்பம் விற்று வந்த குளக்கரையிலேயே யாத்திரீகர்கள் ஒரு சமாதியைக் கட்டி வைத்தனராம். கட்டகாமக் கிழவியின் சமாதிக்கு அருகில் அவர் வணங்கிய முருகனின் வேல் கோயிலும் இருப்பதாக முதிய யாத்திரீகர்கள் கூறினர். அதன் பின்பு வருடா வருடம் இங்கு வரும் யாத்திரீகர்கள் கட்டகாமம் கிழவி வணங்கிய

வேலை வணங்கி விட்டு, கிழவிக்கும் அஞ்சலி செலுத்திவிட்டு செல்வது வழக்கமாக இருந்ததாம். கிழவியின் சமாதியும், வேல் கோயிலும் குளக்கரையில் சற்று தூரத்தில் அமைந்துள்ளன.

**கட்டகாமம் குளம் அக்கரை மரத்தடிக் கோயில்**

கட்டகாமக் குளத்தின் கரடுமுரடான சேற்றுப் பரப்பைக் கடந்தவுடன் களைப்பில் யாத்திரீகர்கள் அனைவரும் அமர்ந்து ஓய்வெடுத்தனர். அவ்விடத்தில் குளத்தின் மேற்குக் கரையில் ஓர் பாரிய விருட்சம் காணப்பட்டது. இம்மரத்தின் கீழ் ஓர் வழிபாட்டுத் தலம் இருந்திருக்கலாம் என அம்மரத்தைப் பார்த்த மாத்திரத்தில் யூகித்துக் கொள்ளலாம். யானைகள் நிறைந்த கடினமாக கட்டகாம குளத்தைக் கடந்து விட்ட மகிழ்ச்சியில் அம்மரத்தின் கீழ் யாத்திரீகர்கள் விநாயகரை நினைத்து வணங்கிவிட்டு சென்றுள்ளனர். இக்குளத்தைக் கடப்பதற்கு 20 நிமிடங்கள் சென்றன.

**கட்டகாம பிரதான நுழைவாயில்**

கட்டகாமம் குளத்தின் அக்கரையைக் கடந்து கிரவல் மண் பாதை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தோம். பாதையின் வடக்குப் பக்கம் அமைந்திருக்கும் காட்டில் இருந்து அதிகளவில் யானைகள் தெற்கு நோக்கி வருவதுண்டாம். இவ்வருகையைத் தடுப்பதற்காக மின்சாரக் கம்பி வேலிகள் பாதையின் வடக்குப் பக்கம் அமைக்கப்பட்டிருந்தன. அத்துடன் கதிர்காமத்திலிருந்து தினமும் பல வாகனங்கள் இப்பாதை வழியாக சித்துல் பவ்வ மலைக்குச் செல்வதினால் அவற்றின் பாதுகாப்பு கருதியும் இம்மின்சாரக் கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாதை சற்று அகலமாகவும் நன்கு சீர் செய்யப்பட்டும் காணப்பட்டது. மேலும் பாதை ஓரத்தில் மின்சாரக் கம்பித் தூண்களும் அமைக்கப்பட்டிருந்தன. இப்பாதையில் இடையிடையே வேன்களும், ஆட்டோக்களும் சென்று கொண்டிருந்தன. இவையாவும் மக்கள் வாழும் பகுதியை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்பது சொல்லாமல் சொல்லி வைத்தன.

நேரம் சென்று கொண்டிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக இருள் சூழத் தொடங்கியது. அப்போது நேரம் மாலை 6.15 மணி. இன்னும் சிறிது தூரம் சென்றதும் ஓர் முச்சந்தியை அடைந்தோம். அவ்விடத்தில் "கட்டகாமம் வனவிலங்கு சரணாலயம்" எனும்

பெயர் பலகை காணப்பட்டது. இதுதான் நகர்ப் பகுதியிலிலிருந்து காட்டுக்குள் நுழையும் முதலாவது நுழைவாயில். இச்சந்தியில் வன இலாகா அலுவலகம், தங்கும் விடுதி, ஆகியவை காணப்பட்டன. இச்சந்தியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பாதை தலுக்கேம குளம், பண்டு குளம், கல்கடுவ, மகுல் மஹா விஹாரை, மாரல குளம், பெம்பாவ ஆகிய இடங்களின் ஊடாக பலட்டுபானவை அடைகிறது. வட மேற்குப் பக்கமாக செல்லும் பாதை வீரச்சோலை ஊடாக கதிர்காமத்திற்கும், மேற்குப் பக்கமாகச் செல்லும் சிறிய பாதை கொச்சிப் பொத்தானை குளத்திற்கும் செல்கிறது. கிழக்குப் பக்கம் செல்லும் பாதை நாம் வந்த கட்டகாமம் குளத்திற்குச் செல்லும் பாதையாகும்.

**வீரச்சோலை காட்டுப் பிள்ளையார் கோயில் கொச்சிப் பொத்தானை**

கட்டகாமம் வனத்துக்குள் பிரவேசிக்கும் பிரதான நுழை-வாயிலைக் கடந்து வீரச்சோலை நோக்கிச் சென்று கொண்டிரு-க்கிறோம். கடந்த 5 நாட்களாகக் காட்டுக்குள் நடந்தும் உணவு உண்டும், படுத்தும் வந்த நாம் 5 நாட்களின் பின் மக்கள் குடியிருப்புக்கள் உள்ள கிராமத்தினுள் நுழைகிறோம். நேரம் மாலை 6.30 மணி எம்மை இருள் சூழ்ந்து கொண்டிருக்கிறது. பாதையின் இடது பக்கம் வயல் வெளிகளும் வலது பக்கம் காடும் காணப்படுகிறது. இடது பக்கம் பாதை ஓரத்தில் ஓரிரு கட்டிடங்கள் தென்படுகின்றன. மின்விளக்குகளின் வெளிச்சம் ஆங்காங்கே தெரிகின்றன.

இவற்றையெல்லாம் பார்த்த வண்ணம் 10 நிமிட நேரம் நடந்திருப்போம். மின் விளக்குகளின் வெளிச்சமும், கடைகளும் இருந்த ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தோம். அவ்விடத்தில் மக்கள் பேசிக் கொண்டிருக்கும் சத்தமும் சலசலப்பும் காணப்பட்டது. எமக்கு முன்னே வெள்ளை, சிவப்பு நிறச் சுவருடன், அஸ்பெஸ்-டெஸ் கூரையுடனும் நந்திக் கொடி பறந்த வண்ணமும் ஓர் கோயில் எம்மை வரவேற்றது. அது தான் வீரச்சோலை காட்டுப் பிள்ளையார் கோயில். இன்று நாம் தங்கும் இடத்திற்கு வந்து விட்டோம். இத்-தனை நாளும் கொடிய வனத்திற்குள் எமக்கு எந்தவித இடையூறும், துன்பங்களுமின்றி எம்மை கொண்டு வந்து சேர்த்த இறைவனுக்கு நன்றி கூறி விநாயகரை வணங்கினோம். மனம் நிம்மதியில் பெரு-மூச்சு விட்டது. கதிர்காமக் கந்தனுக்கு அரோகரா, பிள்ளையா-

ரப்பனுக்கு அரோகரா எனும் கோஷங்கள் கேட்ட வண்ணமிருந்தன.

விநாயகர் கோயிலைச் சுற்றி பார்க்கும் இடங்களிலெல்லாம் யாத்திரீகர்கள் அமர்ந்திருந்தனர். கோயிலின் பின் பக்கம் ஓர் பெரிய கிணறு கட்டப்பட்டிருக்கிறது. கிணற்றிலே நீர் இறைத்து யாத்திரீகர்கள் முகம், கால், கை கழுவிக் கொண்டிருந்தனர். களி மண்ணினால் சுவர் அமைக்கப்பட்டு ஒடு வேய்ந்த சிறிய கருவறையும், அதன் முன்பக்கம் 8 தூண்களுடன் அரைவாசி சுவர் எழுப்பப்பட்டு கூரை போடப்பட்ட பெரிய மண்டபமும், கொண்ட கோயில் இங்கு அமைக்கப்பட்டிருந்தது.



வீரச்சோலை காட்டுப் பிள்ளையார் கோயில்

கோயிலின் இடதுபக்கம் பாதையை நோக்கியவாறு வழிப்-பிள்ளையார் கோயிலும், அதனுள் கருங்கல்லினால் ஆன விநாயகர் விக்கிரகமும் காணப்பட்டன. வழிப் பிள்ளையார் கோயிலின் அருகில் "சத்ய ஸ்ரீ கானகத்துப் பிள்ளையார் கோவில்" என தமிழி-லும் மற்றும் சிங்கள, ஆங்கில மொழிகளிலும் எழுதப்பட்ட பெயர்ப் பலகை காணப்பட்டது. ஆலயத்தின் உள்ளே கருவறைக்கு முன்பாக ஓர் புற்று காணப்பட்டது. ஆலய கருவறை வாசல் விநாயகர் உருவம் வரையப்பட்ட திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருந்தது.

கோயிலின் முற்பக்கமும், பின்பக்கமும் கடைகள் இருந்தன. இக்கடைகளில் கையடக்கத் தொலைபேசியின் மின்கலங்களை மீள் சக்தியூட்டும் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொரு கடையிலும் பத்துக்கும் மேற்பட்ட மின்கலங்களுக்கு மீள் சக்தியூட்டிக் கொண்டிருந்தனர். இக்கடைகளின் முன்பாக யாத்திரீகர்கள் குழுமியிருந்தனர். இன்னும் எமது யாத்திரீகர் குழுவின் பக்தர்கள் வந்து கொண்டே இருந்தனர். பலர் தமது உறவினர்களுடன் கையடக்கத் தொலைபேசியில் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர். சிலர் கடைகளில் தமக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்கிக் கொண்டிருந்தனர். ஆலயத்தில் இரவு உணவுப் பொதிகள் இங்கு வந்து சேரும் யாத்-திரீகர்களுக்கு அன்னதானமாக வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. யாத்திரீகர்கள் உணவுப் பொதிகளை பெற்று சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். சிலர் கோயிலுக்குச் சென்று பூஜை, அர்ச்சனை செய்து விநாயகரை வழிபட்டுக் கொண்டிருந்தனர். மொத்தத்தில் வீரச்சோலை விநாயகர் கோயில் களைகட்டிக் கொண்டிருந்தது.

வீரச்சோலை கிராமம் அம்பாந்தோட்டை - மொனராகலை மாவட்ட எல்லையில் அமைந்துள்ளது. கிராமத்தின் வடக்கிலும், கிழக்கிலும், காடுகளும் மேற்கில் குடியிருப்புகளும், தெற்கில் வயல் நிலங்களும், தென்மேற்கில் கொச்சிப் பொத்தானை குளமும் அமைந்துள்ளன. காட்டு யானைகள் கிராமத்தினுள் புகாத வண்ணம் கிராமத்தின் வடக்கு, கிழக்கு, பகுதிகளில் மின்சார கம்பிவேலி போடப்பட்டுள்ளது. வீரச்சோலை கோயில் உள்ள இடம் மாணிக்க புர காமம், எனவும் இப்பகுதி கொச்சிப் பொத்தானை எனவும் அழைக்கப்படுகிறது. இன்று மாணிக்க கங்கை கட்டு பில துறையடியிலிருந்து வீரச்சோலை வரையான 20 கி.மீ தூரத்தை நாம் சுமார் ஆறரை மணித்தியாலங்களில் கடந்துள்ளோம்.

இன்றைய இரவுப்பொழுது மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. நாம் யாரைப் பார்க்க வந்தோமோ அந்த கந்தனை நாளை காலையில் தரிசிக்கப் போகிறோம் எனும் மனமகிழ்ச்சியோடு உறங்கினோம்.

# 14. வீரச் சோலை முதல் கதிர்காமம் வரை

### போதிராஜ புரத்தில் மாபெரும் அன்னதானம்

இன்றும் காலை 5.00 மணிக்கு நாம் நித்திரை விட்டெழுத்தோம். வீரச்சோலை கோயிலின் எதிர்ப்பக்கம் நிலத்தடி நீர்க்குழாய்கள் இரண்டு இருப்பதாக அறிந்து அங்கு சென்று முகம், கால் கைகளைக் கழுவிக் கொண்டோம். காலை 6.15 மணியளவில் எமது கதிரமலை பாதயாத்திரையின் 6ம் நாள் பயணம் தொடங்கியது. சுமார் 10 நிமிட நேரம் கடந்த பின்பு பாதையின் வலது பக்கத்தில் இருந்த ஓர் புதிய கட்டித்திற்குச் செல்லுமாறு அவ்விடத்திலிருந்த காவல் துறை அதிகாரிகள் கூறினர். யாத்திரீகர்கள் எல்லோரும் வரிசையாக அந்த அலுவலகத்திற்குச் சென்றனர். அங்கு வழமையான, ஆனால் விசித்திரமான ஓர் சம்பவம் நடந்து கொண்டிருந்தது.

இரண்டு காவல் துறை அதிகாரிகள் யாத்திரீகர்களின் அடையாள அட்டையைப் பெற்று அவர்களது பெயர், பிறந்த இடம் ஆகியவற்றைக் கேட்டு பதிவு செய்து கொண்டிருந்தனர். இந்த நடவடிக்கை உண்மையில் விசித்திரமாக இருந்தது. நாட்டில் யுத்தம் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்த நிலையில் பயபக்தியுடன் 5 நாட்கள் காட்டினுள் நடந்து பாதயாத்திரை வந்த பக்தர்களிடம் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்து பதிவு செய்வது ஏன் என்று புரியாமல் எமது பெயர்களைப் பதிவு செய்து விட்டு அங்கிருந்து முன்னோக்கி நடந்தோம்.

சிறிது நேரத்தில் நாம் போதிராஜபுரம் என்னுமிடத்தை அடைந்தோம். உகந்தையிலிருந்து காட்டு ஒற்றையடிப் பாதைகளிலும், கிரவல் மண் பாதைகளிலும் நடந்து வந்த நாம் ஆறு நாட்களின் பின் தார் போடப்பட்ட கற்பாதையில் கால் வைத்தோம். போதிராஜபுரம் ஓர் சிறிய கிராமம் இங்கு பாதையின் வலது பக்கத்தில் போதிராஜ புர விஹாரை அமைந்திருந்தது. விஹாரையின் முன்பக்கம் 30 அடி உயரத்தில் நின்ற நிலையில் புத்தபகவானின் உருவச் சிலை அமைக்கப்பட்டிருந்தது. விஹாரையின் உள்ளே வாசலுக்கு நேராக முருகன் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. கோயிலின் முன்பு "கதிர்காம முருகன் ஆலயம்" எனப் பெயர் எழுதப்பட்டிருந்தது.

போதிராஜ விஹாரையின் முன்பக்கமாக பாதையின் இடது பக்கத்தில் பெரிய தற்காலிய மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. இது நடந்து வரும் பாதயாத்திரீகர்களுக்காக விஷேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அன்னதான மண்டபமாகும். அன்னதான மண்டபத்தின் முன்பாக சுவரில் ஓர் அறிவித்தல் காணப்பட்டது. இதில் “மாபெரும் அன்னதானம் ஜூலை 22 முதல் ஆகஸ்ட் 01 வரை” என எழுதப்பட்டிருந்தது. கடந்த ஒன்பது நாட்களாக இம்மண்டபத்தில் கொழும்பைச் சேர்ந்த டேவிட் விக்ரமரத்ன எனும் வர்த்தக நிறுவனம் இவ்வன்னதானத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது.

நடந்து வந்து கொண்டிருக்கும் யாத்திரீகர்கள் அனைவரையும் இந்நிறுவனத்தின் ஊழியர்கள் அன்போடு அன்னம் உண்ண அழைத்தனர். உள்ளே ஏற்கனவே வந்த நூற்றுக் கணக்கான யாத்திரீகர்கள் நிறைந்திருந்தனர். மண்டபத்தின் உள்ளே காலை உணவாக சோறும், கறிகளும் பரிமாரப்பட்டு யாத்திரீகர்களுக்கு வழங்கப்பட்டன. தற்காலிகமாகப் மேசைகளும், கதிரைகளும் போடப்பட்டிருந்தன. ஆயிரக்கணக்கான யாத்திரீகர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தாலும் இவ்விடம் சுத்தமாக அழகாக இருந்தது. நிறுவனத்தின் பணியாளர்கள் துப்பரவாக, நேர்த்தியாக பணியாற்றிக் கொண்டிருந்தனர். மண்டபத்தின் வெளியே ஒருபக்கம் தேனீரும், அடுத்த பக்கம் ஐஸ்கிரீமும் வழங்கப்பட்டன. திருப்தியாக உணவும் உண்டு, ஐஸ்கிரீமும் சாப்பிட்டோம். உணவுகள் அனைத்தும் சுவையாகத் தயாரிக்கப்பட்டிருந்தன.

தானத்திலே சிறந்தது அன்னதானம் என்பார்கள். அப்படிப்பட்ட அன்னதானத்தை நேர்த்தியாக, துப்பரவாக, சுவையாக, அன்போடு உபசரித்து வழங்குவது என்பது மிகச் சிரமமான காரியமாகும். ஆனால் இந்த வர்த்தக நிறுவனத்தின் பணியாளர்களும், அதிகாரிகளும் கடந்த ஒன்பது நாட்களாக இந்தப் புண்ணிய பணியை கனகச்சிதமாகச் செய்து கொண்டிருந்தனர். இவர்களுக்கு கதிர்காமக் கந்தனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்தித்துக் கொண்டு இந்நிறுவனத்தின் தலைமை அதிகாரியை சந்தித்து அவருக்கு நன்றி கூறிவிட்டு மீண்டும் யாத்திரையைத் தொடர்ந்தோம்.

### புனித பாதயாத்திரையின் கடைசி நடை

கதிர்காமத்தை நெருங்கி விட்டோம் என்ற சந்தோசத்தில் யாத்திரீகர்கள் உற்சாகமாக நடந்து கொண்டிருந்தனர். எமது இடது பக்கத்திலே கதிரமலை அழகாகக் தெரிந்தது. பக்தர்கள் அரோகரா எனக் கோஷமிட்டனர். அன்னதான மண்டபத்திலிருந்து கிளம்பிய 20 நிமிடங்களில் நாம் வள்ளிமலை (வள்ளிக் கந்தராம) சந்தியை அடைந்தோம். இங்கிருந்து 30 நிமிட நடையின் பின் நாம் கதிர்காமம் நகர எல்லைக்கு வந்துவிட்டோம். இவ்விடத்தில் எமது யாத்திரைக் குழுவினர் எல்லோரையும் நிற்கும் படி அறிவித்தனர். குழுவின் ஏனைய யாத்திரீகர்கள் அனைவரும் வரும்வரை நின்று அவர்ளையும் அழைத்துக் கொண்டு வரிசையாக ஊர்வலம் செல்ல வேண்டும் என குருசுவாமி கூறினார்.



கதிர்மாக நகரில் ஊர்வலமாக வரும் யாத்திரீகர்கள்

இறுதி நாள் திருவிழா என்றபடியால் கதிர்காம நகரில் வாகனங்களும், அதில் மக்களும் அதிகளவில் நகருக்குள் வருவர். இந்த சூழ்நிலையில் நாம் வரிசையாக ஓர் ஒழுங்கில் ஊர்வலமாக சென்றால் நமக்கு மட்டுமல்லாது ஏனையவர்களுக்கும் இடைஞ்-சல்கள் இருக்காது. இதனால் இந்த நடைமுறை நமது குழுவினரால்

ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்படுகிறது. 20 நிமிடங்களில் எமது குழுவினர் அனைவரும் ஒன்று கூடிவிட்டனர். எமது யாத்திரீகர்களை இருவர், இருவராக அணிவகுத்து நிற்க வைத்தனர். எல்லோரும் வந்து விட்டார்களா என மீண்டும் ஒருமுறை பார்த்துவிட்டு நடக்க ஆயத்தமானோம்.

நேரம் காலை 8.45 மணி அரோகரா, அரோகரா எனும் முருகனின் கோஷம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்த இந்த வருட கதிர்காம புனித யாத்திரையின் கடைசி நடை ஊர்வலமாக ஆரம்பித்தது. பாதையின் வலது பக்கத்தில் நாம் அணிவகுத்து வந்து கொண்டிருந்தோம். கறுப்பு நிற பாதை ஓரத்திலே காவிக் கொடியை தோரணம் கட்டி விட்டது போல காவி நிற உடையணிந்த யாத்திரீகர்கள் அழகாக ஊர்ந்து வந்து கொண்டிருந்தனர்.

பாதை ஓரத்திலேயே சுமார் 200 மீற்றர் நீளத்திற்கு இந்த காவி ஊர்வலம் வந்து கொண்டிருந்தது. வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே காணக்கூடிய இந்த அபூர்வ காட்சியைத் கண்டுகளிக்க கதிர்காம நகர வீதியில் இருந்த கடைகளில் இருந்தோர் வெளியே வந்தனர். வாகனங்களில் சென்றவர்கள் வாகனத்தை ஓரமாக நிறுத்தி நின்று வேடிக்கை பார்த்தனர். சிலர் தமது கையடக்க தொலைபேசியில் உள்ள புகைப்படக் கருவி மூலம் இக்காட்சியைப் படம் பிடித்தனர். இவற்றை பற்றியெல்லாம் கண்டு கொள்ளாத யாத்திரீகர்கள் அரோகரா கோஷத்துடன் முருகனின் சந்நிதானத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். நடை ஆரம்பித்து 20 நிமிடங்களில் மாணிக்க கங்கை பாலத்தை அடைந்தோம்.

**கதிர்காமம் முருகன் சந்நிதானம்**

மாணிக்க கங்கையின் பிரதான பாலத்தைக் கடந்து யாத்திரீகர்களின் பாத யாத்திரை ஊர்வலம் ஆலய வீதியில் நுழைந்தது. பக்தர்கள் கூட்டங் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். யானையொன்று ஆலய வீதியில் நின்று பக்தர்களை ஆசீர்வதித்துக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் பக்தர்கள் தமது உடைமைகளுடன் அமர்ந்திருந்தனர். தூரத்திலே கதிர்காம முருகன் கோயில் வாசல் தெரிந்தது. அதன் உச்சியிலே வேல் கம்பீரமாகக் காட்சியளித்தது. கோயில் வாசலைப் பார்த்ததும் யாத்திரீகர்கள் ஆனந்தமடைந்தனர். அரோகரா, அரோகரா என்ற கோஷம் உரத்த சத்தத்தில்

ஒலிக்க ஆரம்பித்தது. கால்கள் வேகமாக நடந்தன. கோயில் வாயிலை நெருங்கி விட்டோம். வாயிலின் உள்ளே கோயில் தெரி-கிறது. கண்களிலே ஆனந்தக் கண்ணீர் வழிகிறது. மனம் பரவ-சமடைகிறது. உடல் முழுவதும் ஏதோ ஓர் இனம் புரியாத உணர்வு ஏற்படுகிறது. கோயில் வாயிலின் உள்ளே நுழைகிறோம். உயரமான வெள்ளி வேல் தெரிகிறது. அதை அடுத்து முருகன் சந்நிதானம் தெரிகிறது. இலை குலைகள் போட்டு வேயப்பட்ட கூரையுடன் சிறிய கோயில் அதனுள் வள்ளி தெய்வானையுடன் முருகன்.

ஆனந்தம், பேரானந்தம். பல நாட்களாக கானகத்தில் காட்டிலும், மேட்டிலும், சேற்றிலும், முள்ளிலும் நடந்து யாரைப் பார்க்க வேண்டும் என ஆவலுடன் வந்தோமோ. அந்தக் கடவுளைப் பார்த்து விட்டோம். அந்த கண் கண்ட தெய்வத்தைக் கண்டு விட்டோம். ஆறுமுகக் கடவுளின் தரிசனம் கிடைத்து விட்டது. பிறந்ததன் பயனை அடைந்து விட்டது போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டது. உள்ளம் ஆனந்தக் கூத்தாடியது. உடல் முழுவதும் நடுங்கியது. இப்படி ஒரு ஆனந்தத்தை இதுவரை அனுபவித்தே இல்லை என்று சொல்லுமளவிற்கு உள்ளத்தில் பரவசம் பொங்கி வழிந்தது. மனம் நிறைந்தது போல் இருந்தது. மனதில் உள்ள துன்பங்கள் எல்லாம் ஓடி ஒளிர்ந்தது போல இருந்தது. இதுவரை காணாத இறைவனை நேரிலே பார்த்தது போன்று உணர்வு ஏற்பட்டது. ஆம் இந்த ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமானால் வாழ்நாளில் ஒரு தடவையாவது கதிர்காமத்திற்கு பாத யாத்திரை செல்ல வேண்டும்.

சந்திதானத்தில் முருகப் பெருமானை வணங்கிய பின் அடு-த்து விநாயகரையும், பெருமாளையும் வணங்கிய படி ஆலயத்தைச் சுற்றி வந்தோம். அடுத்ததாக கண்ணகி அம்மன், வீரபாகுதேவர், காளியம்மன் ஆகியோரையும், புனித அரச மரத்தையும் வணங்கி-யபடி தெய்வானை அம்மன் ஆலயத்தில் நுழைந்தோம். அங்கே வைரவர், தெய்வானை அம்மன், பழனி ஆண்டவர் ஆகியோரையும் தெய்வானை அம்மன் கோயில் வாசல் அருகே இருந்த பாபாஜி சமாதியையும் வணங்கிய படி ஆலய வீதிக்கு வந்தோம். ஆலய வீதியில் இருந்த புதிய கோயில்களையும் வணங்கிய படி வள்ளி-யம்மன் கோயிலுக்கு வந்து வள்ளியம்மனையும், அதனை அடுத்து சிவனையும் வணங்கி விட்டு வள்ளி அம்மன் ஆலயத்தின் வடக்குப்

பக்கம் மரங்கள் நிறைந்த சோலைக்குச் சென்றோம். அங்கு ஓர் வேப்பமரத்தின் கீழ் எமது குழு யாத்திரீகர்கள் கொண்டு வந்த முருக வேல்களை குருசுவாமி அவர்கள் பயபக்தியோடு வாங்கி வைத்தார். பாத யாத்திரீகர்களின் அரோகரா சத்தம் வானைப் பிளந்து ஓங்கி ஒலித்தது.



கதிர்காம கோயில் வளாகத்தில் யாத்திரீகர்கள்

யாத்திரீகர்கள் மரத்தின் கீழே வைத்த வேலைத் தொட்டு தரையில் வீழ்ந்து வணங்கினர். தம்மை இத்தனை நாட்களும் பாதுகாத்து எந்த இடைசல்களும் ஏற்படாமல் பத்திரமாக கொண்டு வந்து சேர்த்த அத்தனை தெய்வங்களுக்கும் நன்றி கூறி அழுது புலம்பினர். குருசுவாமியின் காலில் வீழ்ந்து வணங்கினர். ஆனந்தக் கண்ணீர் ததும்ப ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து அழுது தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இதுவரை நாளும் மனதில் தேக்கி வைத்திருந்த ஆவலும், ஆனந்தமும் அழுகையாக வெளிவந்தது. ஆம். கதிர்காம புனித யாத்திரை இனிதாக நிறைவடைந்து விட்டது. ஆனால் தரிசிக்க இன்னும் இரண்டு இடங்கள் மிகுதியாக இருக்கின்றன. அவை ஏழுமலையும், செல்லக்கதிர்காமமும் இன்று வீரச்சோலை முதல் கதிர்காமம் வரையான 6 கி.மீ தூரத்தை 3 மணித்தியாலங்களில் கடந்து எமது புனித பாத யாத்திரையை நிறைவு செய்துள்ளோம்.

# 15.கதிர்காமக் கோயில்கள்

## கதிர்காமம்

கதிர்காமத்திருத்தலம் ஒர் கோயில் நகரம் எனக் கூறுவர். இங்கு புராதன காலம் முதல் பல கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஆனால் இக்கோயில்கள் இந்தியாவில் உள்ளது போலவோ அல்லது ஏனைய இந்துக் கோயில்கள் போலவோ உயர்ந்த கோபுரங்களும், பெரிய மண்டபங்களும் கொண்ட கோயில்கள் அல்ல. இக்கோயில்கள் அனைத்தும் மிகச்சிறிய கோயில்களே. மிகப்பண்டைய காலத்தில் கதிர்காம வனத்தில் வாழ்ந்த வேடர்களால் சிறிய கோயில்களாக கொத்துப்பந்தலிட்டே இவை அமைக்கப்பட்டிருந்தன. அதே பாரம்பரிய ஆலய அமைப்பு முறையே இன்றும் கதிர்காமத்தில் உள்ளது. இவ்வாலயங்களைப் புனரமைத்த மன்னர்களும், பராமரித்த சந்நியாசிகளும் வேடர்கால அமைப்பு முறையை சிதைக்காது இன்றுவரை பாதுகாத்து வருவது குறிப்பிடத்தக்கது.



கதிர்காமம் முருகன் கோயில்

கி.பி 16ம் நூற்றாண்டிலே முதலாம் இராஜசிங்க மன்னன் காலத்திலேயே இங்கிருக்கும் ஆலயங்கள் சற்று பெரிதாகக் கட்டப்பட்டன. இது கி.பி 1581 - 1593 வரையான காலப்பகுதியாகும். இம்மன்னன் தந்தையை கொன்ற பாவத்தை தீர்க்கும் பொருட்டு சிவபக்தனாக மாறி பல சிவாலயங்களை புனரமைத்தும், புதிதாகக் கட்டியும் வந்தான். இப்போது நாம் காணும் முருகனாலயம் இம்மன்னனின் ஆதரவுடனேயே மூன்றாம் கல்யாண கிரி சுவாமியால் புனரமைக்கப்பட்டதாகும்.

அத்துடன் முருகனாலயத்திற்கு அருகில் விநாயகர் கோயிலையும், அதை அடுத்து பெருமாள் கோயிலையும், இவற்றின் பின்புறம் கண்ணகி அம்மன், வீரபாகுத் தேவர், காளியம்மன் ஆகியோருக்கான பரிவாரக் கோயிலையும் பெரிதாகக் கட்டினான். அத்துடன் தெய்வானை அம்மன் ஆலயத்தையும் பெரிதாகக் கட்டியதோடு, அங்கு வைரவர், பழனி ஆண்டவர் ஆகியோருக்கும் பரிவாரக் கேயில்களை அமைத்தான். மேலும் மாணிக்க கங்கைக் கரையில் சமாதியடைந்த முதலாம் கல்யாண கிரி சுவாமியின் சமாதிக்கருகில் உருவான சுயம்பு லிங்கத்திற்கு ஓர் ஆலயம் அமைத்ததோடு, அருகிலிருந்த வள்ளி அம்மன் கோயிலையும் புனரமைத்தான். மேலும் செல்லக் கதிர்காமத்தில் விநாயகர் ஆலயத்தையும், வள்ளிக் குகையில் வள்ளியம்மன் கோயிலையும், கதிரமலை உச்சியில் முருகப்பெருமான் கோயிலையும், மலையில் முருகனால் வழிபடப்பட்ட சிவன் கோயிலையும் புனரமைத்தான். இதன்படி இன்று கதிர்காமத்தில் நாம் காணும் பழைய கோயில்கள் முதலாம் இராஜசிங்க மன்னனின் ஆதரவில் மூன்றாம் கல்யாண கிரி சுவாமி காலத்தில் புனரமைக்கப்பட்டவையாகும். மொத்தமாக மூன்று பிரதான ஆலயங்களையும், 12 பரிவாரக் கோயில்களையும் இராஜசிங்க மன்னன் புதுப்பித்துக் கட்டியுள்ளான்.


கதிர்காமத்திலுள்ள கோயில்கள் மூன்று வகையாகப் பரிபாலிக்கப்படுகின்றன. பிரதான முருகன் கோயில், வள்ளியம்மன் கோயில், பத்தினியம்மன் கோயில் ஆகிய மூன்று கோயில்களும் கப்புறாளை என்றழைக்கப்படும் வேடர் பரம்பரையினரின் பராமரிப்பின் கீழ் உள்ளன. மாணிக்கப் பிள்ளையார் கோயில், தெய்வானை அம்மன் கோயில், வைரவர் கோயில், பழனி ஆண்டவர் கோயில், வீரபாகுத் தேவர் கோயில், காளியம்மன் கோயில்,

முத்துலிங்க சிவன் கோயில், செல்லக் கதிர்காமம் பிள்ளையார் கோயில், கதிரமலை முருகன் கோயில், கதிரமலை சிவன் கோயில் ஆகிய கோயில்கள் வட இந்திய சந்நியாசிகள் பரம்பரையினரால் பராமரிக்கப்படுகின்றன. பிரதான கோயிலின் அருகில் அமைந்துள்ள பெருமாள் கோயிலும், கிரி விஹாரையும் பௌத்த பிக்குகளால் பரிபாலிக்கப்படுகின்றன. இஸ்லாமிய பெரியார் ஒருவரின் சமாதிக் கோயில் இஸ்லாமியர்களால் பராமரிக்கப்படுகின்றது.

மேற் குறிப்பிட்ட பழமை வாய்ந்த ஆலயங்களைத் தவிர பிற்காலத்தில் பல கோயில்கள் கதிர்காமப் புனித பூமியில் கட்டப்பட்டுள்ளன.

**கதிரமலை (ஏழுமலை)**

கதிரமலை பற்றி தக்ஷின கைலாய புராணத்தில் கதிர்காம கிரி மகிமை உரைத்த படலத்தில் கூறப்பட்டுள்ளது. கதிரமலைக்கு அருகில் இருந்த மலைகள் பற்றி இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இம்மலையில் வள்ளி தெய்வானையுடன் முருகப்பெருமானும், பிள்ளையார், ஐயனார், வீரபத்திரர், வைரவர், சாலக்கிணி ருத்திரர், வீரபாகுத் தேவர் ஆகியோர் வீற்றிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.



ஏழுமலையில் ஏறும் பக்தர்கள்

பண்டைய காலத்தில் ஜோதிஸ்காமகிரி என அழைக்கப்பட்ட கதிரமலை இன்று ஏழுமலை என அழைக்கப்படுகிறது. இம் மலைத் தொடரில் மொத்தமாக ஏழு மலைச்சிகரங்கள் அமைந்திருப்பதே இப்பெயர் வரக் காரணமாகும். இம்மலைத் தொடர் மூன்று தொகுதிகளாக அமைந்துள்ளது. இவ்வேழு சிகரங்களிலும் உயரமானதே முருகன் மலை என்றழைக்கப்படும், கதிரமலையாகும். இங்குதான் புராண காலத்திலே சிந்தாமணி ஆலயம் அமைந்திருந்ததாக நூல்கள் கூறுகின்றன. கதிரமலைச் சிகரம் 423 மீற்றர் உயரமானதாகும். கதிரமலை அமைந்திருக்கும் மலையிலே 3 சிகரங்களும், இதன் தென்மேற்குப் பக்கத்தில் காணப்படும் இரண்டு மலைகளிலும் தலா இரண்டு சிகரங்களுமாக ஏழு சிகரங்கள் அமைந்துள்ளன. இவற்றில் கதிரமலைச் சிகரத்தின் கிழக்கில் வள்ளிமலையும், மேற்கில் தெய்வானையம்மன் மலையும் அமைந்துள்ளன.



ஏழுமலையில் உள்ள முருக வேல்

மேற்கில் காணப்படும் அடுத்த மலைத் தொகுதியில் பிள்ளையார் மலையும், விபூதி மலையும் அமைந்துள்ளன. அதற்கும் மேற்கில் உள்ள மலைத் தொகுதியில் வீரபாகுத் தேவர் மலையும், வைரவர் மலையும் அமைந்துள்ளன. இவற்றில் விபூதிமலை என்பதே சிவன் மலையாகும். முன்பெல்லாம் கதிர்காமத்திற்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் விபூதி மலைக்குச் சென்று சிவனை வணங்கி அங்கிருந்து விபூதி கொண்டு வந்து சுற்றத்தாருக்கு கொடுப்பதாக முதியவர்கள் கூறுகின்றனர். தற்போது ஏழுமலை உச்சியில் உள்ள சிவன் கோயிலிலேயே விபூதி மலையிலிருந்து கொண்டுவரப்பட்ட விபூதி கிடைக்கக் கூடியதாக உள்ளது. இம்மலைக்குக் கிழக்குப் பக்கத்தில் பள்ளத்தில் தீர்த்தக் கேணியும் அதை அடுத்து வள்ளி-மலையும் அமைந்துள்ளன. வள்ளிமலை உச்சியில் வள்ளியம்மன் குகை காணப்படுகிறது.

ஏழுமலை அடிவாரத்தில் விநாயகர் கோயில் உள்ளது. இவ்விநாயகரை வணங்கி தேங்காய் உடைத்த பின்பே பக்தர்கள் மலை ஏறுகின்றனர். முன்பு மலையேறப்பயன்படுத்திய பாதை தற்போது சற்று மாற்றமடைந்துள்ளதாக முதியவர்கள் கூறினர். மலையேறும் போது வழியில் பல சிறிய வழித்துணைக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் பக்தர்கள் அமர்ந்து ஓய்வெடுத்-துச் செல்கின்றனர். அடிவாரப்பிள்ளையார் கோயிலை அடுத்து சிறிது தூரத்தில் சிவன் கோயில் காணப்படுகிறது. இக்கோயிலை அடுத்து வீரபத்திரர் கோயிலும், அதை அடுத்து மாடசாமி கோயிலும், அதை அடுத்து வைரவர் கோயிலும் மலை உச்சியில் முருகன் கோயிலும் அதற்கு சற்று உயரத்தில் அரசமரமும், அரச-மரத்தை அடுத்து சிவன் கோயிலும் அமைந்துள்ளன. மலை ஏறுவதற்கு கல்லிலே படிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**கதிர்காமம் - சூரன் கோட்டை**

கதிரமலையின் வடக்கில் 6 கி.மீ தூரத்தில் கந்தசுவாமிக் கோயிலின் பின்பக்கம் கிரிவிஹாரை அமைந்துள்ளது. இவ்விடமே சூரன் கோட்டை அமைந்திருந்த இடம் எனக் கூறப்படுகிறது. இங்கு சூரன் மலை இருந்ததாகவும் கதிரமலையில் பாடி வீடு அமைத்த முருகப் பெருமான் அங்கிருந்து போர் புரிந்து சூரனை அழித்ததாகவும், அப்போரில் சூரன் மலையும், சூரன் கோட்டையும்

அழிந்து தரைமட்டமாகியதாகவும் புராணங்கள் கூறுகின்றன.


சூரசம்ஹாரம் நிகழ்ந்து பல நூற்றாண்டுகளின் பின் கி.மு 3ம் நூற்றாண்டில் சூரன் கோட்டை இருந்த இடத்தில் கிரி விஹாரை கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள பௌத்த தூபியின் இடது பக்கம் "மகாசேனன் தேவ மந்திர்" அமைந்துள்ளது. இங்கு மகாசேனன் சிலை காணப்படுகிறது. ஏழு அடி உயரமான இக்கற்சிலையின் முகம் சிதைந்த நிலையில் காணப்படுகிறது. இது கி.மு 6ம் நூற்றாண்டில் புத்த பகவான் கதிர்காமத்திற்கு வந்த போது இப்பகுதியை ஆட்சி செய்த மகாசேனன் எனும் தேவ மன்னனின் சிலை எனக் கூறப்படுகின்றது. மகாசேனன் என்பது மாபெரும் சேனையை வைத்திருந்த கார்த்திகேயன் எனும் கந்த சுவாமியே என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். எனவே கிரிவிஹாரையில் உள்ள மகாசேனனின் சிலை கந்தசுவாமிக் கடவுளின் சிலை எனக் கூறப்படுகிறது. இது போன்ற ஓர் சிலை இந்தியாவில் உள்ள மத்திய பிரதேசத்தில் மிதாவலி என்னுமிடத்தில் காணப்படுகிறது. இச்சிலை ஸ்கந்த - மகாசேன சிலை என தொல்லியல் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**செல்லக் கதிர்காமம்**



செல்லக் கதிர்காமம் புராதன விநாயகர் கோயில்

கதிர்காம முருகன் கோயிலின் மேற்குப்பக்கத்தில் 5 கி.மீ தொலைவில் செல்லக் கதிர்காமம் அமைந்துள்ளது. இங்கு மாணிக்க கங்கையின் ஓரத்தில் இத்தலம் காணப்படுகிறது. இங்கு கங்கையின் மத்தியில் மாணிக்கப்பிள்ளையார் கோயிலும் அங்கிருந்து சிறிது தூரத்தில் வள்ளியம்மன் குகைக்கோயிலும் அமைந்துள்ளன. கதிர்காமத்திற்கு வரும் பக்தர்கள் முதலில் முருகன் கோயிலுக்குச் சென்று வழிபட்ட பின், செல்லக் கதிர்காமத்திற்கு சென்று கங்கையில் நீராடி மாணிக்கப்பிள்ளையாரை வணங்கி விட்டே கதிரமலைக்கு ஏறுகின்றனர்.



செல்லக் கதிர்காமம் புராதன வள்ளி குகைக் கோயில்

செல்லக்கதிர்காமத்தை பழைய கதிர்காமம் எனவும் கூறுகின்றனர். வள்ளியம்மன் இவ்விடத்திலேயே தினைப்புனம் காத்ததாகவும் இங்கிருக்கும் பாறை மீது தோழிகளுடன் ஓடி விளையாடியதாகவும், அருகில் இருந்த மலைக்குகையிலேயே தங்கியிருந்து மோர் கடைந்ததாகவும், மாணிக்க கங்கையில் தோழிகளுடன் நீராடியதாகவும் ஐதீகம். இங்கிருக்கும் மலைப்பாறையில் கால் பாதம் போன்ற ஓர் அடையாளம் காணப்படுகிறது. இதை வள்ளியம்மனின் பாதம் எனக் கூறுகின்றனர். இவற்றைத் தவிர இங்கு பல புதிய கோயில்கள் எழுந்துள்ளன.

## 16. கதிர்காம பாதயாத்திரை குழுக்கள்

### *மாமங்கப் பிள்ளையார் பாதயாத்திரீகர் சங்கம் - மட்டக்களப்பு*

*இப்பாதயாத்திரைச் சங்கம் **1963**ம் ஆண்டு **19** யாத்திரீகர்களுடன் ஆரம்பமானது. இக் குழுவில் இன்று **500** பக்தர்கள் பாதயாத்திரை மேற்கொள்கின்றனர். கதிர்காம பாதயாத்திரைக் குழுக்களில் அதிகமான யாத்திரீகர்கள் பாதயாத்திரை செல்வது இக்குழுவிலேயே. இப் புனித பாதயாத்திரைக்கு முன்னோடியாக விளங்கியவர் சடையப்ப சுவாமிகளாவார். இவரின் இயற்பெயர் நல்லதம்பி என்பதாகும்.*

*திருகோணமலையில் பிறந்த இவர் **1940**ம் ஆண்டளவில் பிரித்தானிய இராணுவ முகாமில் பணிபுரிந்தார். **1942**ம் ஆண்டு திருகோணமலையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பின் போது இவர் இறந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் இறைவன் கிருபையால் இவர் உயிர் தப்பியிருந்தார். 8 வருடங்களின் பின்பு ஊருக்குத் திரும்பியவர் உறவினர்களிடம் விடைப்பெற்று மட்டக்களப்பில் உள்ள திராய்மடு எனும் காட்டுப்பகுதிக்கு வந்து ஓர் குடிசையமைத்து மரத்தினாலான ஓர் முருக வேலை அங்கு வைத்து வழிபட்டு வந்தார். அதிகமான நேரத்தை தியானத்தில் கழித்தார். நீண்ட சடைமுடியோடு காணப்பட்டதால் மக்கள் இவரை சடையப்ப சுவாமிகள் என அழைத்தனர். சடையப்ப சுவாமிகள் **1955**ம் ஆண்டளவில் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்று முருகப்பெருமானை தரிசித்து வந்தார். சுமார் 8 வருடங்கள் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை சென்ற சடையப்ப சுவாமிகள் தன்னுடன் யாத்திரை வந்த விஜயசிங்கம் என்பவரிடம் தன்னிடம் இருந்த மரத்தினாலான வேலைக் கொடுத்து பாதயாத்திரை மேற்கொள்ளும் படி கூறினார்.*

*விஜயசிங்கம் **1963**ம் ஆண்டு **19** பேருடன் ஓர் யாத்திரைக் குழுவை அமைத்து மாமங்கேஸ்வரத்திலிருந்து கதிர்காம பாதயாத்திரையைத் தொடங்கினார். சடையப்ப சுவாமியின் சீடரான இவரை பக்தர்கள் அப்பாசாமி என அழைத்தனர். ஸ்ரீ மாமங்கப் பிள்ளையார் பாதயாத்திரீகர்கள் சங்கம், அன்னதான சபை ஆகியவற்றை அமைத்து முன்னெடுத்துச் செல்லும் அப்பா சுவாமியின் பாதயாத்திரைக் குழு மூலமாக தற்போது ஆண்டுதோறும் **300***

முதல் 500 யாத்திரீகர்கள் வரை கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்கின்றனர். இப்பாதயாத்திரைக் குழு இந்த வருடம் 50வது கதிர்காம பாதயாத்திரையை மேற்கொள்ளவிருக்கிறது. இக்குழுவின் மூலம் பாதயாத்திரை செல்லும் யாத்திரீகர்கள் அனைவரும் காவி உடை தரித்துச் செல்வது இக்குழுவின் சிறப்பம்சமாகும்.

**செல்வச்சந்நிதி வேல்சுவாமி பாதயாத்திரைக் குழு**

தற்போது கதிர்காமத்திற்கு வருடா வருடம் செல்லும் குழுக்களில் செல்வச்சந்நிதியிலிருந்து வரும் வேல்சாமி குழுவினரே அதிகமான தூரம் பாதயாத்திரை செல்பவர்களாவார். கடந்த நூற்றாண்டில் இக்குழுவை முத்துக்குமாரவேல் சுவாமி, கௌரிபாலா சுவாமி, சந்த சுவாமி, சிவகல்கி சுவாமி, பட்ரிக் ஹரிக்கன் சுவாமி, தற்போது மகேஸ்வரன் சுவாமி ஆகியோர் முன்னெடுத்துச் செல்கின்றனர். இக்குழுவில் 25 முதல் 50 பேர் வரை பாதயாத்திரை செல்கின்றனர்.

**ஏனைய பாதயாத்திரைக் குழுக்கள்**

மேலும் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய யாத்திரைக் குழு, வெருகல் முருகன் கோயில் மாணிக்கம் சுவாமி, சிவா சுவாமி குழுவினர், மண்டூர் கந்தசுவாமி கோயில் கந்தசாமி சுவாமி குழுவினர், தாந்தாமலை முருகன் கோயில் கோணாமலை சுவாமி, பிள்ளையான் சுவாமி குழுவினர், களுவாஞ்சிக்குடி கதிர்காம பக்தர் ஆச்சிரம குழுவினர், கல்லாறு விதானையார் குழு ஆகியவற்றிலிருந்து குழுக்களாக கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்கின்றனர். இவர்களைத் தவிர புத்தளம் மாவட்டம் முந்தலிலிருந்து ஓர் பாத யாத்திரைக் குழுவினர் கடந்த 100 வருடங்களுக்கு மேலாக உடப்பு, முன்னேஸ்வரம், கொழும்பு, பானந்துறை, காலி, அம்பாந்தோட்டை வழியாக கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செல்கின்றனர். இக்குழுக்களைத் தவிர தனியாக குடும்பம் குடும்பமாக பலர் பாத யாத்திரை செல்கின்றனர். பானமைப் பகுதியிலுள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் தத்தமது குடும்பங்களுடன் பாதயாத்திரையை மேற்கொள்வதாகக் கூறப்படுகிறது. ஆண்டு தோறும் சுமார் 30,000 முதல் 40,000 வரையான எண்ணிக்கையில் கதிர்காமத்திற்கு யாத்திரீகர்கள் பாதயாத்திரை மேற்கொள்வதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

# யாத்திரை செல்லும் பாதை வரைபடம்




செல்வச் சந்நிதி முதல் கதிர்காமம் வரையான
கதிரமலை கரை யாத்திரை பாதை

# உசாத்துணை நூல்கள்


## *1. கதிர்காமம் - ஓர் அறிமுகம்*

1. Rajavaliya – B.Gunasekara – Colombo – 1900 *(பக்.17)*
2. The Mahavamsa – Wilhelm Geigar – New Delhi - 1912 (pg. 132, 133 – XIX 54.62)
3. A Short history of Hinduism in Ceylon – C.S. Navarathnam Jaffna – 1964 – (pg.74)
4. *கதிரமலைப்பள்ளு - வி.குமாரசாமி - கொழும்பு - 1996 (1935) - (பக்.245, 247)*
5. Helankaa siv hela wangsaya – Denesh Kodipili Arachchi - M.A.R.P. Kolkata – pannipitiya – 2009 –*(பக்.118,130)*

## *2. கதிர்காம புனித பாதயாத்திரை - ஓர் அறிமுகம்*

1. *கதிர்காம மான்மியம் - அ.சின்னையா சிவம் - கொழும்பு - 1954 - (பக்.38, 47, 48)*
2. *மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 (பக்.94)*
3. *கதிர்காமம் - குல.சபாநாதன் - சுன்னாகம் - 1947 (பக் -15)*
4. *சபரிமலை அதன் அழிவில்லாத தத்துவம் - ஸ்ரீ காந்த்* C. V. *மனோஜ் - கேரளா - (பக்.63,81)*
5. *ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 (பக். 194)*

## *3. கந்தசுவாமிக் கடவுளின் புனிதபூமி*

1. *தக்ஷிண கைலாய புராணம் - சி.நாகலிங்கப்பிள்ளை - யாழ்ப்பாணம் - 1928 - (பக்.63,72,73,79,80,81,83)*
2. Kumana – Kurulu Paradesaya – Shantha Kumaravithana - Gampaha – 2011 *(பக்.12,14)*
3. A Short History of Hinduism in Ceylon - C.S.Navaratnam Jaffna - 1964 - *(பக். 16,17)*
4. Sri Lankave Jathika Vanodyana – P.M.Senarathna - Colombo – 2004 - *(பக்.23,124)*

## *4. சித்தர்களும் முனிவர்களும் நடமாடிய புனித வனம்*


*1.* Sidhas in Malaysia - *தவத்திரு ரெங்கராஜா தேசிகர் - மலேசியா - அகத்தியன் புரொடக்ஷன் ஹவுஸ் பப்ளிகேஷன்* - 2010 - *(பக். 15- 18)*

*2.* *தமிழ் இலக்கிய வரலாறு - எம். ஆர். அடைக்கலசாமி - ராசி பதிப்பகம் சென்னை - 1960 - (பக்.17)*

*3.* *கோணேஸ்வரம் - செ. குணசிங்கம் - பேராதனை - 1973 - (பக்.55)*

*4.* *இலங்கையில் இந்து கலாசாரம் - சி. பத்மநாதன் - இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் - கொழும்பு - 2000 - (பக். 31)*

*5.* Pancha Ishwaram of Lanka - Shri. S. Arumugam - Sruthilaya Sangam - London - 16.10.1999

*6.* Inscriptions Discovered in Ceylon - W.M.G.Colebrooke - London - 1833 - *(பக்.383)*

*7.* Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana Archaeological Survey of Ceylon - Colombo - 1970 - *(பக். 10, 49, 61, 712)*

*8.* *கதிர்காமக் கலம்பகம் - கந்தப்ப சுவாமிகள் - மதராஸ் ரிப்பன் அச்சியந்திர சாலை - சென்னை - 1897 - (பக். 03)*

*9.* Helankaa Sive Hela Wangsaya - Danesh Kodippili Arachchi, M.A.R.P. Kolkata - Pannipitiya - 2009 - *(பக்.45, 47, 48, 171, 172)*

*10.* Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medan anda Himi - Colombo - 2008 - *(பக். 89)*

*11.* Historic Matale - Dept of Cultural Affairs - Cyril Gamage, Pandit Paranagama Sumanajoti Nayaka Thero - Colombo - 1984 - *(பக்.287)*

*12.* Polonnaruwe Kapila Tapasveenge Prathimawa - A.M.Karunarathna - Dayavansa Jayakody Saha Samagama - Colombo - 2010 - *(பக்.82-85)*

*13.* *பல்லவராச்சியம் - பல்லவராச சேகரம் - திருகோணமலை - 2007 - (பக்.43)*

14. கதிர்காமம் - குல. சபாநாதன் - திருமகள் அழுத்தகம் - சுன்னாகம் - 1947 (பக்.22, 127, 128, 129)
15. இலங்கை காட்சிகள் - கி.வா. ஜெகந்நாதன் - 1956 - நாஷனல் ஆர்ட்ஸ் பிரஸ் - சென்னை
16. Sigiriye Boudda Urumaya - Poojya Deyakaduve So mananda Himi - Colombo - 2003 - (பக் 127)

## 5. பாதயாத்திரை - மட்டக்களப்பு முதல் காரைதீவு வரை

1. தமிழ் ஈழம் நாட்டு எல்லைகள் - ஜே.ஆர்.சின்னத்தம்பி, மறவன்புலா க. சச்சிதானந்தன் - கொழும்பு - 1977 -(பக்.11)
2. மட்டக்களப்பில் மக்கள் வளமும் வாழ்க்கையும் - F.X.C. நடராஜா - 1980 - (பக்.115-199)
3. இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திராவிட கலாசாரமும் - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - 1988 - (பக்.108,109)
4. மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் - வெல்லவூர் கோபால் -மட்டக்களப்பு - (பக்.52, 61, 132,133, 134, 149,150)
5. தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழர் பண்டைய கால மதமும் கலையும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம் - கொழும்பு - 2002 - (பக்.65)
6. மட்டக்களப்பு சைவ கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - (பக்.18, 115, 143, 145, 148, 269, 303)
7. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 - (பக். 97,98)
8. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராஜா - மட்டக்களப்பு 1998 (பக். 116)
9. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு (பக்.100, 101, 109)
10. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - (பக்.95, 96, 110, 122, 123)
11. Journal of Royal Asiatic Society of Ceylon - New Series volume - 1 - 1963 - (பக்.32)

12. ஆத்ம நாதம் - இந்து இளைஞர் மன்ற வெள்ளி மலர் - பெரிய கல்லாறு இந்து இளைஞர் மன்றம் - மட்டக்களப்பு - 1999 - (பக்.61)
13. இந்திய வரலாறு - R. சத்தியநாதய்யர் பாலசுப்ரமணியம் - 1958
14. வீரகேசரி வார மலர் - த.தங்கராஜா - 15.06.2003.
15. Hinduism in Ceylon - (பக்.119)
16. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் - வித்துவான் சா. இ. கமலநாதன் - கொழும்பு - 2005 (பக்.78)
17. இலங்கை திருநாட்டின் இந்து கோயில்கள் - இந்து சமயத் திணைக்களம் - கொழும்பு - 1984 - (பக்.363)
18. அம்பாறை மாவட்டத்தில் மறைக்கப்பட்ட வரலாற்று இந்து ஆலயங்கள் - நா.நவயாகமூர்த்தி.
19. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக்.123, 125, 126, 129, 131, 176,)

## 6. பாதயாத்திரை - காரைதீவு முதல் திருக்கோயில் வரை

1. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு - (பக்.40, 41, 47,56, 82,91, 95, 97, 100, 105, 107, 110)
2. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - (பக்.95, 96, 104, 105, 175)
3. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudha Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 - (பக்.185-187)
4. Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medan anda Himi - Colombo - 2008 - (பக். 47)
5. அக்கரைப்பற்று வரலாறு - A.R.M. சலீம் - அக்கரைப்பற்று (பக்.11-13, 20, 42, 59, 61, 141, 171)
6. ஏர்முனை 3 - ஆலயடிவேம்பு வணக்கஸ்தலங்களின் வரலாறு - க.செல்வரத்தினம்
7. ஏர்முனை 3 - கருங்கொடித்தீவு மான்மியத்துளிகள் - சி.சிவஞானமூர்த்தி

8. ஏர்முனை - ஆலயவேம்படி பிரதேச வரலாற்றுப் பிண்ணனி - நா.நவநாயக மூர்த்தி - (பக்.31)
9. மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் - வெல்லவூர் கோபால் -மட்டக்களப்பு - (பக்.172)
10. ஆண்டிக்கேணி ஐயனார் - (பக்.64)
11. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராஜா - மட்டக்களப்பு 1998 (பக். 29, 31, 185, 186)
12. பண்டைய ஈழத்தமிழர் வரலாறு - நா.நவநாயகமூர்த்தி - (பக்.55)
13. குளக்கோட்டன் தரிசனம் - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1993 (பக். 43, 49, 57, 58)
14. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 (பக். 53, 91, 92)
15. இலங்கையில் திராவிட கட்டிடக் கலை - கலாநிதி. கா.இந்திரபாலா - (பக்.54)
16. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி. கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 (பக்.425, 426)
17. மட்டக்களப்பு சைவ கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 (பக்.48,63)
18. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக்.236, 237, 238, 288)

## 7. பாதயாத்திரை - திருக்கோயில் முதல் பானமை வரை

1. பண்டைத் தமிழர் பண்பாட்டு கோலங்கள் - நா.நவநாயகமூர்த்தி - பனங்காடு (பக்.10)
2. மாகோன் வரலாறு - க.தங்கேஸ்வரி - ஆரையம்பதி - 1995 (பக். 92, 93)
3. மட்டக்களப்பு சைவ கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 - (பக்.41, 43, 46)
4. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - (பக்.105, 109, 110, 126)
5. Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana - Colombo - (பக். 38)

6. சங்கமன்கண்டி காட்டுப்பிள்ளையார் கோயில் - மகா கும்பாபிஷேக மலர் - சி.சிவஞானமூர்த்தி - திருக்கோயில் - 2009 - (பக்.20, 116, 117)
7. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி. கந்தையா - யாழ்ப்பாணம் - 1964 (பக்.398, 410, 424, 425, 426)
8. முத்தூர் அகத்தியர் - க.பாலசுப்ரமணியம் - திருகோண மலை (பக்.5, 6)
9. பல்லவராச்சியம் - பல்லவராச சேகரம் - திருகோணமலை - 2007 - (பக்.51)
10. A Short History of Hinduim in Ceylon - C.S.Navaratnam Jaffna - 1964 - (பக். 43)
11. The Mahavamsa – Wilhelm Geigar – New Delhi - 1912 - (பக்.270)
12. ஆய்வுக் கட்டுரைகள் - சி.க. சிற்றம்பலம் - (பக்.22, 24)
13. Journal of Royal Asiatic Society of Ceylon - Volume - VI - 1963 - (பக்.22, 23)
14. Journal of Royal Asiatic Society of Ceylon - New Series - VI - (பக் 22)
15. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudha Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 - (பக்.119, 123)
16. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 (பக்.151)
17. lakdiva Purathana varimarga (Sinhala Translation) - R.L. Brohier - Colombo - 2002 - (பக்.56)

## 8. புனித பூமியில் பாதயாத்திரை - பானமை முதல் உகந்தை வரை

1. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudha Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 - (பக்.93, 94, 110 - 114, 115, 116, 118)
2. ஈழத்தமிழர் வரலாற்று சுவடுகள் - நா.நவநாயக மூர்த்தி - பனங்காடு - (பக்.25, 81)

3. Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana - *(பக்.38, 33, 38, 39)*
4. கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு - க. தங்கேஸ்வரி - சென்னை - 2007 - (பக்.82,83, 121)
5. மட்டக்களப்பு மான்மியம் - F.X.C. நடராஜா - மட்டக்களப்பு 1998 - (பக்.31, 32, 57, 59)
6. Chethihasika Kudumbigala - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2005 - *(பக்.116)*
7. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - (பக்.67, 94, 95, 105)
8. ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக்.131, 174, 304, 341)
9. கைலாசநாதம் - சி.க.சிற்றம்பலம்
10. பண்டைய ஈழத்தில் சிவவழிபாடு - சி.க. சிற்றம்பலம் (பக். 208)
11. Divayina - 30.03.2005
12. Rivira - 06.11.2011 - sunday
13. Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medananda Himi- Colombo - 2008 - *(பக். 41, 42)*
14. இலங்கையில் தொல்லியல் ஆய்வுகளும், திராவிட கலாசாரமும் - ஜி.தனபாக்கியம் - மட்டக்களப்பு - 1988 - (பக்.80, 99)
15. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - வி.சி.கந்தையா - கொழும்பு - 1997 (பக்.30, 32-35)

## 9. புனித பூமியில் பாதயாத்திரை - உகந்தை முதல் வண்ணாத்தி ஓடை வரை

1. Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana - Colombo *(பக்.38, 39, 40, 41)*
2. Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - *(பக். 42, 44)*
3. Dakunu Budu Sripathula Pihitimakkama Sama Rawana Rajuge Sellipi - Jayarathna Pathira Arachchi - 2005 *(பக்.96, 98)*

4. *ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக். 300, 302, 304, 305, 342, 343)*
5. Nehenahira Palathe Saha Uthuru Palathe Sinhala Boudha Urumaya - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2003 *(பக்.83 - 90, 93, 98)*
6. *மட்டக்களப்பு மான்மியம்* - F.X.C. *நடராஜா - மட்டக்களப்பு 1998 (பக். 32-35, 102)*
7. *பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும் - கலாநிதி பரமு புஸ்பரட்ணம் - கொழும்பு - 2001 - (பக்.36)*
8. Kumana – Kurulu Paradesaya – Shantha Kumaravithana Gampaha – 2011 *(பக்.36, 37)*
9. Yala Negenahira Ahimi Vanamang - Gamini Vijitha Sa marakoon - Colombo - 2003 - *(பக்.31-33)*
10. Inscription of Ceylon - Volume - 2, Part - 2 - S.Paranavitharana - Colombo - *(பக்.148-150)*
11. Epigraphical Notes - No.1-18 - Malini Dias - Colombo - 1991 - *(பக். 23, 99)*
12. *வரலாற்றுத் திருகோணமலை - கனகசபாபதி சரவணபவன் - திருகோணமலை - 2003 - (பக். 89)*

## 10. புனித பூமியில் பாதயாத்திரை - வண்ணாத்தி ஓடை முதல் கும்புக்கன் ஆறு வரை

1. Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana - Colombo - *(பக்.42, 43)*
2. *ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக்.198)*
3. Sinhala Raja Vamsaya - 2 - Shamendra De Soysa - Colombo - 2004 - *(பக்.59)*
4. Splendours of Ruhuna's Haritage - Gamini de S.G.Punchihewa - Malwana - 2005 - *(பக்.147)*
5. Chethihasika Rawana - Suriya Gunasekara - Boralesgamuwa - 2012 - *(பக்.89)*
6. Navathama Seelalipi Gavesane - Poojya Ellawala Medananda Himi - Colombo - 2008 - *(பக். 45)*

7. Far Off things - R.L. Spittal - Colombo - (1957) - 2001 - *(பக்.269, 274)*
8. Sri Lanka Diya Eli Ganga Saha Vananthara - Sarath Ranaweera - Dankotuwa - 2003 - *(பக்.31, 32)*
9. Panampathuwe Jana Adahili ha Visvasa - Gunasekara Gunasoma - Colombo - 2001 - *(பக்.48-49)*
10. Kumana – Kurulu Paradesaya – Shantha Kumaravithana - Gampaha – 2011 *(பக்.36,37)*
11. Yala Negenahira Ahimi Vanamang - Gamini Vijitha Sa marakoon - Colombo - 2003 - *(பக்.31-33, 36,37)*

## 11. புனித பூமியில் பாதயாத்திரை - கும்புக்கன் ஆறு முதல் நாவலடி வரை

1. Seeing Ceylon - R.L. Brohier - Colombo - 2000 (1965) - *(பக். 254)*
2. கதிர்காம மான்மியம் - அ.சின்னையா சிவம் - கொழும்பு - *1954 (பக்.49, 51)*

## 12. புனித பூமியில் பாதயாத்திரை - நாவலடி முதல் மாணிக்க கங்கை வரை

1. Seeing Ceylon - R.L. Brohier - Colombo - 2000 (1965) *(பக்.255)*
2. Sithul Paw Viharaya - Malinga Amarasinghe - Ja-Ela - 2005 - *(பக். 67)*
3. Bintenne Aththo - Sandaruwan Lokuhewa - Colombo - 1996 - *(பக். 159)*
4. Sri Lankave Jathika Vanodyana – P.M.Senarathna Colombo – 2004 - *(பக்.46, 47)*

## *13.* புனித பூமியில் பாதயாத்திரை - மாணிக்க கங்கை முதல் வீரச்சோலை வரை


1. *ஈழத்து இந்து சமய வரலாறு - சி.க. சிற்றம்பலம் - யாழ்ப்பாணம் - 1996 - (பக்.238)*
2. Inscription of Ceylon - Volume - 1 - S.Paranavitharana - Colombo - *(பக்.52)*
3. Sithul Paw Viharaya - Malinga Amarasinghe - Ja-Ela - 2005 - *(பக். 38-40, 65, 66)*
4. Asirimath Sithul Pawwa - Acharya Senarath Dissanayeka - Colombo - 2006 - *(பக்.42, 43)*


## *14.* புனித பூமியில் பாதயாத்திரை - வீரச்சோலை முதல் கதிர்காமம் வரை


1. Katharagama Deviyo - Asoka Malinahe - Colombo - 2000 - *(பக்.129, 130)*


## *15.* கதிர்காமக் கோயில்கள்


1. Far Off things - R.L. Spittal - Colombo - 1957 - 2001 - *(பக்.234 - 240)*
2. *கதிர்காமம் - குல சபாநாதன் - (பக்.16)*
3. Kanda Kumara Siritha - S.J. Sumanasekara Banda - Padukka - 1993 - *(பக்.14, 15)*

## இந்நூல் வெளிவருவதற்கும், தகவல்கள் வழங்கி உதவிய

## இவ்வன்பு உள்ளங்களுக்கும்

# என் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்


★ முன்னாள் பிரதம நீதியரசர் திரு. சி.வி. விக்னேஸ்வரன் ஐயா

★ இந்துக் குருமார் அமைப்பின் தலைவர்
சிவஸ்ரீ கே. வி. கே. வைத்தீஸ்வர குருக்கள் ஐயா

★ இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர்
திருமதி. சாந்தி நாவுக்கரசன்

★ அகில இலங்கை இந்துக் கலாசாரப் பேரவையின் உறுப்பினர்கள்.

★ ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பாதயாத்திரை சங்கத்தின் தலைவர் திரு. விஜயசிங்கம் அப்பா சுவாமி, மற்றும் யாத்திரை சங்கத்தின் உறுப்பினர்கள்.

★ தம்பிலுவில் - திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தின் தலைவர் திரு. க. இராஜரத்தினம் (கண்ணன்)

★ அக்கரைப்பற்று- சுவாமி விபுலானந்தர் சிறுவர் இல்லத்தின் தலைவர் திரு. த. கைலாய பிள்ளை

★ என்னோடு பல இடங்களுக்கு வந்து ஆய்வு செய்ய உதவியவர்கள் திருமதி. அருந்ததி திருச்செல்வம், திரு. எஸ். கணேசலிங்கம், திரு. வி. கதிர்வேல், திரு. வி. ஜெயச்சந்திரன், திரு. எஸ். எம். செல்வமணி

★ தம்பிலுவில் - திரு. விஜிதரன்

★ இந்நூலில் பிழை திருத்தம் செய்ய உதவியவர்கள் -
திரு. என். கே. எஸ். தமிழ்ச்செல்வம், செல்வி. த. சரண்யா, திரு. தி. மனோஜ், செல்வி. தி. சனுஜா, செல்வி. அ. ரோபினி

★ இந்நூலுக்கு தேவையான பழைய புகைப்படமொன்றை கொடுத்து உதவியர் - திரு. எஸ். நடராஜா

★ இந்நூலை அழகாக அச்சடித்துத் தந்தவர்- திரு. எஸ். பிரதீபன்

★ தம்பிலுவில்- திரு. குமாரதாசன் (கண்ணண்), திரு. ஜெகதீஸ்வரன்

★ மட்டக்களப்பு- செல்வி. ராதா கோடீஸ்வரி, திரு. ஆர். ஜதீஸ், திரு. லோக நாயகம், திரு. கே. ஜெகநாதன், திரு. எஸ். மகாலிங்கம்

★ பானமை- திரு. கே. பாலச்சந்திரன், திரு. பி. ரஞ்சித்குமார்

★ பொத்துவில்- திரு. கந்தசாமி, திரு. க. திலகேஷ்

★ பனங்காடு- திரு. ந. நவநாயக மூர்த்தி, திரு. க. தம்பி அப்பா

★ கதிர்காமம்- திரு. தில்லைநாதன்

★ உகந்தை - திரு. முத்துபண்டா (வண்ணக்கர்)

★ திருகோணமலை- திரு. பொ. கந்தையா (காந்தி ஐயா),
திரு. வி. சிவலிங்கம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்),
திரு. கலியுகவரதன், திரு. தியாகராஜா ஸ்ரீதர் சர்மா,
திரு. ஆர். ராம மூர்த்தி,

★ முன்னேஸ்வரம்- சிவஸ்ரீ மோகன் சர்மா ஐயா

★ குருக்கள் மடம்- திரு. எஸ். எஸ். சுதர்சன், திரு. விமலேஸ்வரன், திரு. கே. சீனித்தம்பி

★ பழுகாமம்- திரு. நிஷாந்தன்

★ அக்கரைப்பற்று- திரு. சரவணபவா,
திரு. சிவஞான செல்லக்குருக்கள்

★ தேத்தாத்தீவு- திரு. ஜெயதீஸ்வரன்

★ நெல்லிக்காடு- திரு. அ. சிவப்பிரகாசம்

★ புத்தளம் - திரு. முருகேசம் பிள்ளை

★ முந்தல் - திரு. கனகரத்தினம்

★ தம்பட்டை - திரு. உமாசுதன் சர்மா

- ★ கோமாரி - திரு. சுபோகரன்
- ★ கண்ணகிபுரம்- திரு. கந்தசாமி, திரு. சந்திரகுமார், திரு. சுதேகரன்
- ★ கோளாவில் - திரு. எஸ் சேகர்
- ★ நிந்தவூர்- திரு. என். பிரபாகர்
- ★ வீரமுனை- திரு. ஆர். அரசரட்ணம்
- ★ காரைதீவு- திரு. தட்சணாமூர்த்தி
- ★ அட்டப்பள்ளம்- திரு. பி. செல்லப்பா
- ★ கல்முனை- திரு. சச்சிதானந்த சிவகுருக்கள்
- ★ சேனைக்குடியிருப்பு- திரு. நல்லதம்பி குருக்கள்
- ★ பாண்டிருப்பு- திரு. என். பரசுராமன், திரு. எஸ். அமரசிங்கம், திரு. இ. கிருஸ்ணபிள்ளை
- ★ பெரிய நிலாவாணை- திரு. கே. சரவணமுத்து
- ★ களுவாஞ்சிக்குடி- திரு. அங்குசன், திரு. ஸ்ரீஹர சர்மா, செல்வி. தயானி
- ★ செட்டிப்பாளையம்- திரு. மதன், திரு. எம். மாணிக்கம்பிள்ளை
- ★ புதுக்குடியிருப்பு- திரு. சதாசிவம்
- ★ கோயில் குளம்- திரு. சோமசுந்தரம்
- ★ மண்முனை - திரு. ஆ. சிவலிங்கம், திரு. எம். காசிப்பிள்ளை
- ★ ஆரையம்பதி- திரு. வீ. ரவிச்சந்திரன்
- ★ கல்லடி- திரு. மேகநாதன்
- ★ சம்மாந்துறை - திரு. நிரோஷ், திரு. பேச்சிமுத்து, திருமதி. தங்கம்மா
- ★ பொன்னாலை- திரு. பெருமாள் பிள்ளை ஐயா
- ★ மாவிட்டபுரம்- திரு. கே. கந்தப்பு ஐயா

- ★ செல்வச் சந்நிதி- திரு. சடை சுவாமி
- ★ நல்லூர்- திரு. செகநாதக் குருக்கள் ஐயா
- ★ கந்தரோடை- திரு. இ. சோமேஸ்வர சர்மா குருக்கள் ஐயா
- ★ இணுவில்- திரு. செ. சோதிப்பெருமாள்
- ★ கந்தளாய்- திரு. சக்திதாசக் குருக்கள்
- ★ வெல்லாவெளி- திரு. எம். பேரின்பராஜா
- ★ மல்லிகைத் தீவு- திரு. பி. மூர்த்தி
- ★ வாகரை- திரு. கே. விவேகானந்தன்



